
சோழ இளவரசன்
கனவு
கலைமாமணி
விக்கிரமன்

2780

❐
சோழ இளவரசன் கனவு
❐
பொருள்:
வரலாற்றுப் புதினம்
❐
ஆசிரியர்:
கலைமாமணி விக்கிரமன்©
❐
முதல் பதிப்பு 2008
❐
வெளியீடு:
ஆலயா
6/11, டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை,
வ.உ.சி. நகர், பம்மல்,
சென்னை-75
அலைபேசி: 98847 14603
❐
ஒளி அச்சு:
குகன் கம்ப்யூட்டர்ஸ், சென்னை-8
❐
அட்டை ஓவியம்:
ம.செ.
❐
அட்டை வடிவமைப்பு:
ஆர்.சி.மதிராஜ்,
சென்னை-5
❐
அச்சாக்கம்:
பதிப்பக நண்பன், சென்னை-14
❐
பக்கங்கள்:
360
❐
விலை:
ரூ.160/-
❐

0 1434823

## புன்னகை கை வீசி....

**ச**ரித்திரத்தின் இலக்கணம் - வேகவேகமாகக் கைவீசி நடப்பவரைச் சற்றே திரும்பிப்பார்க்க வைக்கும் முயற்சி. இன்று நம்முடைய 'நேற்று'-களை நாம் தெரிந்து கொள்வது நம்முடைய 'நாளை'களுக்கு உரமாகும் என்பதனால்தான். அந்த வகையில் 'வரலாற்றுக் கதை வான் சூரியன்' விக்கிரமன் அவர்களின் தமிழுக்கான சீர் வரிசைதான் இந்த 'சோழ இளவரசன் கனவு!'

'நேற்றைய நிஜம்தான் இன்றைய வரலாறு;
இன்றைய நிஜம் நாளைய வரலாறாகும்'

இந்த வித்தக விஷயத்தை தன் நக நுனியில் நட்டு வைத்துக்கொண்ட நூலாசிரியர் - தனது பளீர் எழுத்துகளால் வசீகர வரலாற்று நூலை வடிவமைத்து உள்ளார்.

ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பல்லவர்களுக்கும் - பாண்டியர்களுக்கும் நடைபெற்ற போரைக் காட்சி காட்சியாக ஆசிரியர் எழுதும் பாங்கு - நமது செவியின் நுழைவாயிலில் ஆயுதங்களின் சப்தங்களையும், நமது கண் கதவின் முன்னே போர் வீரர்களின் அழகுச் சித்திரத்தையும்.... தரிசிப்பது போன்றே இருக்கிறது.

காலம் காலமாக தமிழ் தன்னைப் பல வண்ண உடை உடுத்தி... தன்னைத் தானே அழகுபடுத்திக் கொள்கிறது. அவ்வாறு பல நூற்றாண்டுகளையும் கடந்து நமது அன்னைத் தமிழ் அழகு மிளிரப் பல காரணங்கள் இருப்பினும் அதில் தமது தங்கத் தமிழ் நடையால் புத்தாக்கப் படைப்புகளை தந்ததும் ஒரு காரணமாகும்.

விக்கிரமன் தனது வரலாற்று விழிகளை விரித்து வைத்துக் கண்ட 'சோழ இளவரசனின் கனவை' நாம் - நமது விழிகளால் காண்போம் வாருங்கள்!

எஸ்.இராஜேஸ்வரி

01 09 2012

## என்னுரை

வரலாறு - ஒரு பாற்கடல். பாற்கடல் நடுவே சிக்கிய பூனை ஒன்று பாற்கடலின் துளிகளைச் சுவைக்க முயல்வது போல், நான் சோழ வரலாறு எனும் பாற்கடலிலிருந்து சிறிது சுவைக்க அவ்வப்போது முனைகிறேன். நான் முனைவதோடு அந்த 'அமுத'த்தைத் தமிழ்ப் பெருமக்கள் பருகவும் அளிக்கிறேன்.

சோழர்கள் ஆட்சி மீண்டும் மலர வழி வகுத்தவர் விஜயாலய சோழர். பல்லவர்களுக்கு அடங்கிச் சிற்றரசர்களாக சோழர்கள் இருந்த காலம். விஜயாலயன் மகன் ஆதித்த கரிகாலன் சோழ சூர்யோதயத்தைக் காண இலட்சிய வெறி கொள்கிறான். இழந்த நாட்டின் பகுதிகளை மீண்டும் மீட்டுப் புலிக்கொடி பறக்கச் செய்யக் கனவு காண்கிறான். கனவு நனவான சரித்திரம் 'சோழ இளவரசன் கனவு'.

இந்த வரலாற்றுப் புதினத்திற்குத் தமிழ் நாட்டரசு முதல் பரிசு வழங்கி என்னைச் சிறப்பித்தது.

இந்தப் புதினத்தை மீண்டும் வெளியிட முன் வந்திருக்கும் ஆலயா பதிப்பகத்தாருக்கு என் நன்றி.

தமிழ் மக்கள் தொடர்ந்து ஆதரவு தருவார்கள் என நம்புகிறேன்.

**விக்கிரமன்**



# சோழ இளவரசன் கனவு

## 1. சத்திரத்தில் ஓர் இரவு

முருகபிரானது கொடியிலிருக்கும் சேவலே வந்து கூவியது போல் அந்தச் சேவல் சத்திரத்துக் கூரை மீது அமர்ந்து 'கொக்கரக்கோ' என்று கூவியது.

சேவலின் கூவல் கேட்டு இருள் பிரிந்து, மெல்ல மெல்ல இரவுப் போர்வை விலகியது. அந்தச் சிறிய கிராமம் மெல்ல விழித்துக் கொண்டது. மூன்று பக்கமும் குன்றுகளால் சூழப்பட்டிருந்த அந்தக் கிராமம் அந்தக் காலத்தே, திருவேங்கடத்திலிருந்து திருத்தணி செல்லும் வழியில் இருந்தது.

லேசான குளிரினின்று பாதுகாத்துக் கொள்வதுபோல் மேலே ஆடையைப் போர்த்தியவாறு உழவர்கள் மாடுகளை ஓட்டிக்கொண்டு வயல் நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள்.

சத்திரத்துத் திண்ணையில் தலை முதல் கால் வரையில் போர்த்திக் கொண்டு சுகமாக வழிப்போக்கர்கள் உறங்கிக் கொண்டிருந்தார்கள். இளங்காலையின் சுகமான நித்திரையைக் கலைத்து அவன் மெல்ல எழுந்து உட்கார்ந்தான்.

வாயிற்புறத் திண்ணையில் படுக்க இடம் கிடைக்காததால் முதல் நாள்இரவு அந்த வாலிபனும், அவன் நண்பனும் புழக்கடைத் தோட்டத்துக் கிணற்றருகே இருந்த தாழ்வாரத்தில் படுத்துக் கொண்டனர். முதல் நாள் உச்சிப் பொழுதிற்கு முன்பு புறப்பட்டவர்கள், காட்டுப்பாதை வழியாக நடந்து அந்தக் கிராமத்தை வந்தடையும்போது நன்றாக இருட்டிவிட்டது. வயிற்றிற்குச் சிறிது உணவும், படுக்க இடமும் கிடைத்தால் போதும் என்று அவர்கள் எண்ணினர்.

அவர்களுடைய பாதங்கள் கெஞ்சின. குதிரை மீதும், சிவிகையிலும், ரதத்திலும், யானையிலுமே சென்று பழக்கப்பட்ட அவர்களுக்கு நடை அனுபவம் புதிது. திருவேங்கடத்திலிருந்து, திருத்தணிகைக்குக் குறுக்கு வழியே செல்ல முயன்றதனால் பயணத்திற்குக் குதிரைகளை ஏற்பாடு செய்து கொள்ளவில்லை. வழியேயுள்ள கிராமத்தில் மாற்றுக் குதிரை கிடைத்தால் அமர்த்திக் கொள்ள எண்ணியிருந்தனர்.

01 09 2012

பின் நிலாக் காலமாதலால், வானத்தில் நட்சத்திரங்கள் மட்டுமே கண் சிமிட்டிக் கொண்டிருந்தன. தங்குவதற்கு இடங்கிடைக்காமல் அலைந்து கடைசியில் அவர்கள் விசாரித்துக் கொண்டே அந்தச் சத்திரத்தை வந்தடைந்தனர். அவர்கள் வருவதற்கு முன்பே ஊரடங்கிவிட்டது. சத்திரத்திற்குள்ளே முணுமுணுக்கென்று எரிந்து கொண்டிருந்த விளக்கு வெளிச்சத்தில் மடைப்பள்ளியில் பாத்திரங்களை யாரோ ஓசைப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

அந்த இரு வழிப்போக்கர்களில் சற்று வயதில் மூத்தவன் உள்ளே சென்று மடைப்பள்ளியில் எட்டிப் பார்த்தான். வயதான ஒருவர் பாத்திரங்களிலுள்ள மிச்சம் மீதியைத் திரட்டி மற்றொரு பாத்திரத்தில் போட்டுக் கொண்டிருந்தார்.

தொண்டையைக் கனைத்துக் கொண்ட அவன் குரல் கேட்டு அவர் திரும்பிப் பார்த்தார். அவரது விழிகளில் யாரது என்ற கேள்வி தெரிந்தது.

''தேசாந்திரிகள், திருவேங்கடத்திலிருந்து வருகிறோம். இன்று இரவு இளைப்பாறுவதற்கு இடம் கிடைத்தால் மிகவும் உதவியாயிருக்கும்'' என்றான்.

மிகவும் கம்பீரமாக பல ஆயிரம் வீரர்களை ஆணையிட்டு நடத்திச் செல்லும் சக்தி வாய்ந்த அவன் குரலில் இருந்த பணிவும், குழைவும், அருகேயிருந்த இளையவனுக்குச் சிரிப்பை வரவழைத்தன.

''நன்றாக நடிக்கிறாய்... என்ன குழைவு... என்ன பணிவு...?'' என்று அவன் மெல்லக் கூறினான்.

''உஸ்...காரியத்தைக் கெடுத்துவிடாதீர்கள். இந்த இடமும் இல்லாவிடில் மரத்தடிதான் புகலிடம்'' என்றான் மூத்தவன்.

அந்த முதியவர் கை விளக்கை எடுத்துக்கொண்டு மெல்ல நடந்து அவர்கள் அருகே வந்தார். காற்றில் விளக்கு அலை பாய்ந்தது.

''என்ன சொல்கிறீர்கள்?'' என்று அவர் கேட்டார்.

''நல்லவேளை காது மந்தமாகவே கேட்கும் போல் தோன்றுகிறது'' என்று முணுமுணுத்த மூத்தவன், முதலில் கேட்டதையே திருப்பிக் கேட்டான்.

அவர் மற்றொரு முறை அவர்களை உற்று நோக்கி, ''பாவம். ரொம்பவும் களைப்பாய் இருக்கிறீர்கள் போல் தோன்றுகிறது. இப்பொழுதுதான் மீதியிருந்த சோற்றையெல்லாம் திரட்டி, கழுநீர்த் தொட்டியில் போட அவளிடம் கொடுத்தேன். அவள்



போய்விட்டாளா என்பது தெரியாது. பார்க்கிறேன்'' என்று மெல்லப் பேசி, உட்புறம் திரும்பி, ''மீனம்மா'' என்று குரல் கொடுத்தார்.

முதியவர் கை விளக்கொளி வீழ்ந்த இடத்தில் ஒரு பெண் படுத்திருப்பதை இப்பொழுதுதான் அவர்கள் பார்த்தனர்.

மெல்லிய வெளிச்சம். அங்கே ஒரு பூங்கொடி படுத் துறங்குவதைப் புலப்படுத்தியது. ஒரு கரத்தைத் தலைக்கு அணை கொடுத்து அவள் படுத்திருந்தாள்.

அவள் உடுத்தியிருந்த செந்நிற ஆடை, அந்த விளக் கொளியில் மேலும் சிவந்து காணப்பட்டது. கூந்தல் அவிழ்ந்து, தோள் வழியே மார்பிலே சரிந்திருந்தது.

மெல்லிய குறட்டை ஒலி அவள் நாசிகளை லேசாக விரிவடையச் செய்தது. மேல் துகிலையும் மீறிப் புரட்சி செய்து கொண்டிருந்த கச்சைகள் அவள் விடும் மூச்சால் எழுந்துத் தணிந்து கொண்டிருந்தன.

''பசியென்றால் அந்த இளங்கொடியையே விழுங்கி விடுவாய் போலிருக்கிறதே'' என்றான் மூத்தவன். இளையவனின் விளாவில் மெல்ல சீண்டியவாறு.

''பசிக்கிறது, தெரிகிறது. சற்றுப் பொறுங்கள், பாவம் அவள் அயர்ந்து தூங்குகிறாள்'' என்றார் முதியவர்.

இருவரும் திடுக்கிட்டு ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். ''முதியவர் காதில் விழுந்துவிட்டதா?'' என்று இளையவன் கேட்டான்.

''பகலெல்லாம் உழைக்கிறாள், பாவம் களைப்பா யிருக்கிறதா?'' என்ற முதியவர், விளக்கைக் கையில் எடுத்துக் கொண்டு அந்த அறையின் வெளியே சென்றார்.

அந்த இடத்தில் இருள் சூழ்ந்தது. பூங்கொடி திரும்பிப் படுப்பது அவள் கை வளையல்களின் ஒலியிலிருந்துத் தெரிந்தது.

''நாம் வெளியே சென்று நிற்போம். உன்னைப் பாதுகாப்பது என் கடமை'' என்று கூறி மூத்தவன் மெல்லச் சிரித்தான்.

''இளவரசர் மட்டும் என்னவாம்? காளத்தியில் அந்த நாட்டியப் பெண்ணை விட்டு வரவே தங்களுக்கு மனமில்லை என்பது எனக்குத் தெரியாதா?'' என்றான் இளையவன். இருவரும் மெல்ல நகைத்தனர்.

வெளியே இருந்து குரல் கேட்டது. ''அரை வயிற்றுக்குத்தான் போதுமானது இருக்கிறது. கதம்பச் சோறுதான் மீதி'' என்று குரல் கொடுத்தார் முதியவர்.

அறுசுவை உணவுடன் பாலும் பழமும் உண்டு பஞ்சணையில் படுத்துறங்கும் பாக்கியசாலிகளான அவர்கள், இப்படிக் கவளம் சோற்றுக்குக் காய வேண்டியதில்லைதான். அந்த வேளையில் அந்தக் கூட்டாஞ்சோறு தேவ அமுதமாக இருந்தது. வயிற்றில் வீழ்ந்த சோறும், நடந்த களைப்பும் கிடைத்த இடத்திலேயே அவர்களுக்குச் சுக நித்திரையை வரவழைத்தன.

''விக்கியண்ணா, மடைப்பள்ளி மங்கையின் சயனத் திருக்கோலத்தை நினைத்துத் தூங்காமல் இருந்துவிடப் போகிறாய்! காலையில் வெள்ளி முளைக்கு முன்பே எழுந்து புறப்பட்டுவிட வேண்டும்'' என்றான் மூத்தவன்.

''இளவரசரால் இந்த நிலையிலும் எப்படி மகிழ்ச்சியுடனிருக்க முடிகிறது?'' என்றான் இளையவனான விக்கியண்ணன்.

''எல்லாம் என் தந்தையிடம் பயின்றதுதான். தஞ்சை நகரத்தை விட்டு வேறெங்கும் சென்றறியாத என்னை அனுபவம் என்னும் பள்ளியில் கல்வி கற்கச் செய்யத் தூண்டியவர் எனது தந்தைதான்'' என்றான் மூத்தவன். மேலும் பேசிக்கொண்டே செல்வதற்கு வழியின்றி விக்கியண்ணனின் குறட்டை ஒலி தடுத்தது.

மூத்தவன் ஆதித்தனுக்கு உறக்கம் வரவில்லை. அமைதியுடன் விளங்கிய இரவு வேளையில் எங்கோ சிறகடித்துக் கூட்டிற்குள் தன் பேடையுடன் பேசி மகிழும் பறவைகளின் மெல்லிய ஒலி மட்டும், ஆதித்தனின் நினைவில் பல எண்ணங்களைக் கிளர்ந்தெழச் செய்தன. இந்த வேளையில் தஞ்சை மாநகரில் இருந்தால் என்ன செய்து கொண்டிருப்போம் என்று எண்ணினான்.

விஜயாலய சோழ தேவர் தஞ்சை நகரைச் சுற்றி மதில் எழுப்பியவுடன், நிரந்தரமாகத் தஞ்சை நகரில் வாழ மாளிகை ஒன்றையும் கட்டினார். பழையாறை மாளிகையிலிருந்து தஞ்சை மாளிகைக்குப் பரிவாரங்களுடன் குடிபுகுந்து விட்டார். விஜயாலய சோழதேவரின் திட்டப்படி மாளிகை உருவாகியிருந்தது. இப்போதைக்கு சிறு மாளிகைதான். ஆதித்தன் திட்டமோ இன்னும் பெரிய மாளிகை அமைக்க வேண்டும் என்பது.

''மகனே ஆதித்தா! மாளிகையைப் பெரிதாகக் கட்டினால் போதுமா? நமது ஆட்சிப் பகுதியின் அளவு விரியவில்லையே' என்று விஜயாலயர் கேட்பார்.



''ஆதித்தா! நமது நாட்டின் எல்லை விரிவடைய வேண்டும். அதுதான் உன் இலட்சியமாக இருக்க வேண்டும். மாளிகைக்குள் எப்போதும் வீற்றிருந்து பஞ்சணை மெத்தையில் சுகபோக சவுகரியங்களை அனுபவிப்பது மட்டும் இலட்சியமாக இருக்கக் கூடாது'' என்று தந்தை அவ்வப்போது கூறுவது ஆதித்தன் உள்ளத்தில் உறுதியாகப் பதிந்தது.

''ஆம்! தந்தை சொல்வது மிகவும் சரி. பாண்டிய சக்கரவர்த்தி, பல்லவ சக்கரவர்த்தி, சேரப் பேரரசர் என்று மக்கள் புகழ்ந்து பேசுகிறார்கள். ஆனால் நம்மை சோழ சிற்றரசர் என்றுதானே அழைக்கிறார்கள். மலையமானைப் போலவும், கொடும்பாளூர் வேளிரைப் போலவும் நீங்களும் ஒரு குறுநில மன்னர்தானே என்று வல்லவரையர் என் திருமணத்தின்போது கூறியது இன்னும் என் இதயத்தில் உறுத்திக் கொண்டிருக்கிறது. அந்த நிலை என்று மாறுமோ? சோழ குலத்தின் பண்டையப் பெருமையை எப்போது நிலைநாட்டுவோம்'' என்று எண்ணிப் பெருமூச்சு விட்டான்.

வல்லவரையர் என்றவுடன், அவனுக்குத் தஞ்சை மாளிகையில், அந்தப்புரத்தில் வல்லவரையர் மகள் இளங்கோபிச்சி இப்போது என்ன செய்து கொண்டிருப்பாள் என்று நினைக்கத் தோன்றியது.

ஆதித்தன் மெல்லத் தனக்குள்ளே சிரித்துக் கொண்டான். என்ன செய்து கொண்டிருப்பாள்? இரவின் இரண்டாவது ஜாமத்தில் நித்திரையின் நடுவே இனிய கனவு கண்டு கொண்டிருப்பாள். தஞ்சையை விட்டுப் புறப்பட்டு ஒரு திங்கள் ஓடி மறைந்துவிட்டது. பிரிவின் துன்பத்தால் இளங்கோபிச்சி வாடுவாளே என்பதை நினைக்கும்போது ஆதித்தனின் உடல் புல்லரித்தது. அந்த நினைவாகவே உறங்கிவிட்ட ஆதித்தன் கண் விழித்தபோது பொழுது புலர்ந்து விட்டது. ஓரிருவர் இன்னும் விழித்தெழாமல் உறங்கிக் கொண்டிருந்தனர். விக்கியண்ணன் யாருடனோ பேசிக் கொண்டிருப்பது ஆதித்தன் காதில் விழுந்தது. படுத்தவாறு கேட்டுக் கொண்டிருந்தான்.

மீன்விழியாள் அருகேயுள்ள தொட்டியில் நீரை நிரப்பிக் கொண்டிருந்தாள். சளசளவென்று தொட்டியில் தண்ணீரைக் கொட்டும் ஓசை கேட்டது.

''இருள் பிரிவதற்கு முன்பே தண்ணீர் இழுக்க ஆரம்பித்து விட்டாயே, எதற்காக?'' என்று விக்கியண்ணன் அவளை நோக்கிக் கேட்பது காதில் விழுந்தது.

''தொட்டியில் நிரப்புகிறேன்'' எ[illegible] அவ[illegible]னாள். வீணையில் தந்திகளைச் சுண்டிவிட்டது போலிருந்தது குரல்.

''இவ்வளவு பெரிய தொட்டியில் எதற்கு வீணே நிரப்புகிறாய்? தேவைப்படும்போது இழுத்துக் கொள்ளலாம் அல்லவா?'' - விக்கியண்ணன் கேட்டான்.

மீன்விழிகள் மேலும் அகலமாய் விரிய, முல்லைப் பற்கள் தெரிய அவள் நகைத்து, ''உங்கள் நாட்டில் மாடுகள் கிணற்றில் இழுத்துத்தான் நீரைக் குடிக்குமோ?'' என்று கேட்டாள்.

விக்கியண்ணன் திடுக்கிட்டான். 'குறும்புத்தனம் மிக்கவளாகவும், துணிவு நிறைந்தவளாகவும் இவள் இருப்பாள் எனத் தோன்றுகிறதே' என எண்ணினான். மாடுகள் குடிப்பதற்கு இவ்வளவு பெரிய தொட்டியா? 'பாவம், இதுவரையில் நூறு குடம் இழுத்திருப்பாள் போலிருக்கிறதே! நாம் சற்று உதவுவோமா?' என்றஎண்ணத்தில் கேட்டான்.

''நான் உதவட்டுமா?'' என்று.

''பாவம், நேற்றைய களைப்பே உங்களுக்கு இன்னும் தீர்ந்திருக்காது. இரவு பசி வேறு'' என்று குறும்புத்தனமாக நோக்கியவாறு அவனைக் கேட்டாள்.

''ஏதோ, உன் புண்ணியத்தாலே நேற்றிரவு எங்கள் பாதி வயிறு நிறைந்தது'' என்றான் விக்கியண்ணன்.

''என் புண்ணியமா?''

''ஆமாம், மாட்டுத் தொட்டியில் போடாமல் வைத்திருந்த சோறு எங்களுக்கும் ஈயப்பட்டது.''

''ஓ! அதைச் சொல்கிறீர்களா? நீங்கள் வருவீர்கள் என்று எதிர்பார்த்துச் சிறிது சோறு எடுத்து வைத்திருந்தேன். திருத்தணிகைக்குச் செல்லும் யாத்திரிகர்கள் கூட்டம் நேற்று அதிகம்.''

''நாங்கள் வருவது உனக்கு எப்படித் தெரியும்?'' என்று விக்கியண்ணன் திடுக்கிட்டவாறு கேட்டான்.

சத்திரத்திலிருக்கும் ஒரு பெண், தாங்கள் வருவதை அறிந்து கொண்டுவிட்டாள் என்பது ஆச்சரியமாயிருக்கிறதே என்று அவள் பேச்சினின்று அறிந்துகொண்ட ஆதித்தனும் வியப்படைந்தான்.

''நேற்று திருக்காளத்தி கோயில் அருகே நீங்கள் சந்தித்தீர்களே, அந்தப் பெண் சொன்னாள்'' என்றாள் மீன் விழியாள். சொல்லிவிட்டுக் குடத்தை எடுத்துக் கொண்டு உள்ளே சென்றுவிட்டாள்.

ஆதித்தன் துள்ளி எழுந்து விக்கியண்ணன் அருகே வந்து, ''விக்கியண்ணா, நம்மை இவள் அடையாளங்கண்டு கொண்டிருப்பாளோ?'' என்று பரபரப்புடன் கேட்டான்.



''அறிந்திருக்க மாட்டாள். தங்களைச் சோழ இளவரசர் என்று அறிந்திருந்தால் அவளுடைய உபசாரம் வேறுவிதமாக இருந்திருக்கும். அதனால் இன்னும் அவள் நம்மை அடையாளம் தெரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன்'' என்றான்.

''இதோ பார்! இனி நீ என்னை இளவரசே என்றோ, ஆதித்தா என்றோ பெயரிட்டு அழைக்கக்கூடாது, தெரிந்ததா? உன் வாயாலேயே வேஷம் கலைந்துவிடும் போலிருக்கிறதே'' என்று ஆதித்தன் சற்றுக் கடுமையான குரலில் கூறினான்.

''தங்களை இதுவரையில் நான் பெயர் சொல்லி அழைத்ததில்லை. அதுசரி, தாங்களும் என்னை விக்கியண்ணன் என்று அழைக்காதீர்கள். அந்தப் பெயர் ஊர் உலகமெல்லாம் பிரபலமாகியிருக்கிறது'' என்றான்.

''பிறகு என்ன சொல்லி அழைப்பதாம்?''

''மறந்துவிட்டீர்களா? தஞ்சையிலிருந்து புறப்படும்போது என் பெயர் காலபைரவன் என்றும், தங்களைக் கோதண்டராமன் என்றும் அழைக்க வேண்டும் என்று தங்கள் தந்தை கூறியதை மறந்து விட்டீர்களா?''

''எனக்கு மற்றொரு மெய்யான பெயரே கோதண்டராமன் தானே? உலகம் அறிந்த பெயர்தானே?''

''ஆமாம், கோதண்டராமரே?''

''சரி, சரி காலபைரவரே!''

இருவரும் இப்படிப் பேசியவாறு கலகலவென்று நகைத்தனர்.

''எதை நினைத்து இப்படி ஆனந்தப்படுகிறீர்கள்? உச்சிப் பொழுதிற்குத்தான் இங்கே உலை வைப்பார்கள்'' என்று கூறியவாறு மீன் விழியாள் அங்கே வந்தாள். ஆதித்தனை ஒரு முறை கூச்சம் சிறிதுமின்றிப் பார்த்து, ''நன்றாக உறங்கினீர்களா? சுற்றிலும் மலைகள் இருப்பதால் சற்று குளிர் இருந்திருக்கும். உங்கள் ஊரில் மலையே இல்லாததால், இதுபோன்ற குளிரை உணர வழியில்லை'' என்றாள்.

ஆதித்தன் மீண்டும் அதிர்ச்சியடைந்தான். 'இவள் என்ன ஊர் உலகம் எல்லாம் அறிந்தவளா! சிறு கிராமத்திலிருந்தவாறு விவரங்கள் பலவும் தெரிந்து வைத்திருக்கிறாளே! நாம் சோழ நாட்டைச் சேர்ந்தவர்கள் என்றும், சோழ நாட்டில் மலைகளே இல்லை என்றும் இவளுக்கு எப்படித் தெரியும்?' - ஆதித்தன் நினைத்தான். அவளுக்கு என்ன மறுமொழி கூறுவதென்றே தோன்றவில்லை.

01 09 2012

தன் மேலாடையை மெல்லச் சரி செய்துகொண்டு, "இப்படியே இருவரும் மவுனமாக நின்று கொண்டிருந்தால், மேலே தொடர்ந்து பயணத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டாமா?" என்று கேட்டு அவர்களுடைய மவுனத்தைக் கலைத்தாள். மேலும் தொடர்ந்து, "நான் இன்னும் சிறிது நேரத்தில் இங்கிருந்து புறப்பட்டுவிடுவேன். பகல் உணவுக்குக் கட்டுச்சோறு கட்டித் தருகிறேன். இரவுக்குள் திருத்தணிகைக்குப் போய்ச் சேர்ந்து விடுங்கள். திருத்தணிகை விழாக்கோலம் பூண்டிருக்கிறதாம். மலையடிவாரத்தில் அன்னதானம் செய்கிறார்களாம். நேரத்திற்குப் போய்ச் சேர்ந்துவிடுங்கள்" என்றாள்.

விக்கியண்ணனுக்கும், ஆதித்தனுக்கும் ஏற்பட்ட வியப்பு சொல்லத் தரமன்று. "இவள் யார்? விசித்திரப் பெண்ணாக இருக்கிறாளே! கிராமப் பெண்ணாக இருக்க முடியாது. இவளிடம் ஏதோ மர்மம் இருக்க வேண்டும்" என்று ஆதித்தன் எண்ணினான். விக்கியண்ணன் கனைத்துக் கொண்டு, "எங்கள் பயணத்திற்குக் குதிரைகள் இங்கே கிடைக்குமா?" என்று கேட்டான்.

அவள் ஒருமுறை சுழலும் விழியால் ஆதித்தனைப் பார்த்தவாறு, "கிடைக்குமே! சத்திரத்திற்கு வெளியே ஆல மரத்தடியில் குதிரைக்காரனிருக்கிறான், போய்க் கேளுங்கள்" என்று கூறிவிட்டு உள்ளே போய்விட்டாள்.

"நான் மேலும் சில செய்திகளைக் கேட்க நினைத்தேன், உள்ளே போய்விட்டாள்..." என்றான் விக்கியண்ணன்.

"கேட்க வேண்டியவற்றை ஒன்றுவிடாமல் கேட்டுவிடு. பிறகு அவளைச் சந்திக்கப் போகிறாயோ இல்லையோ? நான் குதிரைகளை ஏற்பாடு செய்து வருகிறேன்" என்று கூறிவிட்டு ஆதித்தன் வெளியே சென்றான்.

வெயில் மெல்ல மெல்ல ஏறத் தொடங்கியது. ஆதித்தன் விக்கியண்ணனை வெளித் திண்ணையில் சந்தித்து மிக மெல்லிய குரலில் பேசினான்.

"ஒரு முக்கியமான செய்தி" என்றான் ஆதித்தன்.

"நானும் ஒரு முக்கியமான செய்தியைச் சொல்லப் போகிறேன்" என்றான் விக்கியண்ணன்.

"குதிரை கிடைக்கவில்லை. கோட்ட அதிகாரிகள் வரப் போகிறார்களாம். அவர்களுக்குக் குதிரைகள் தேவையாம். நாம் நடந்து செல்வதைத் தவிர வேறு வழியில்லை" என்றான் ஆதித்தன்.



"நாம் இங்கே ஒரு கணம்கூடத் தங்கியிருக்கக் கூடாது. சத்திரத்துப் பெண் மீன்விழி நாம் சோழநாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதைத் தெரிந்து கொண்டிருக்கிறாள். மிகவும் புத்திசாலியான அவள் நம்மைப்பற்றி மேலும் அறியத் துடிக்கிறாள். இன்னும் சிறிது நேரம் அவளிடம் பேசிக் கொண்டிருந்தால் நம்மைப் பற்றிய உண்மையைத் தெரிந்து கொண்டுவிடுவாள்" என்றான் விக்கியண்ணன் கவலைக்குரல் எதிரொலிக்க.

"நம்மைப் பற்றித் தெரிந்து கொண்டால் நமக்கு நல்லதுதானே? நமக்கு வேண்டிய உதவிகள் கிடைக்கும்" என்றான் ஆதித்தன் உற்சாகமாக.

"திருக்காளத்தியில் சந்தித்தோமே நடன மங்கை - அவளுடைய சகோதரி மீன்விழியாள். இவள் சிற்பியின் மகள்" என்றான் விக்கியண்ணன் கவலையுடன்.

"மிகவும் நல்லதாகப் போயிற்று. நடனக்காரியையும், சிற்பியின் மகளையும் சேர்த்தே சோழ நாட்டிற்கு அழைத்துச் சென்றுவிடுவோம். நமது நாட்டின் கலை வளர்ச்சிக்கு அவர்கள் பெரிதும் உதவுவார்கள்" என்றான் ஆதித்தன்.

"உஸ்... மெதுவாகப் பேசுங்கள். பல்லவ நாட்டு வீரர்கள் பலர் இந்தச் சத்திரத்தில் தங்கியிருக்கிறார்கள். அவர்களில் பலர் மீன்விழியாளை அறிந்தவர்களாக இருக்கிறார்கள். ஒருவேளை மீன்விழி அவர்களிடம் சொல்லிவிடலாம் அல்லவா?" விக்கியண்ணன் குரலில் அச்சம் தெரிந்தது.

ஆதித்தன் வாய்விட்டுச் சிரித்துவிட்டான். "விக்கியண்ணா, நமது நிலை எப்படியிருக்கிறது பார்த்தாயா? பல்லவ நாட்டுப் பெண்ணிற்குப் பயப்பட வேண்டியிருக்கிறது. நாம் பல்லவர்களிடமிருந்து சோழ நாட்டை எப்படி மீட்கப் போகிறோமோ?" என்ற சலிப்பு அவன் குரலில் தெரிந்தது.

"இளவரசே! அதற்காக இப்போதிருந்தே நமது திட்டங்களைப் பல்லவர்களுக்குத் தெரிவித்துவிடப் போகிறோமா? நாம் இப்போது நிராயுதபாணிகள் என்பதை மறந்து விடாதீர்கள். சிறிது காலத்திற்கு நாம் தந்திர முறைகளைக் கையாள்வது அவசியம்தான்" என்று விக்கியண்ணன் கூறிக் கொண்டிருக்கும் போது சத்திரத்தின் உள்ளேயிருந்து யாரோ வரும் காலடி ஓசை கேட்டது.

மீன் விழியாளும், அவளைத் தொடர்ந்து ரிஷப இலச்சினை அணிந்த பல்லவ வீரன் ஒருவனும் வந்து கொண்டிருந்தார்கள்.

01 09 2012

## 2. புலி பாய்ந்தது!

ஆதித்தன், ஒரு மரத்தடியில் கட்டப்பட்டிருந்த குதிரைகளை வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தபோது, மீன்விழியாள் அந்தப் பல்லவ வீரனுடன் செல்வதையே விக்கியண்ணன் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் நடந்து செல்லும்போது அவள் இடை நெளிவதையும், பின் தொடர்ந்து வரும் வீரனை அவள் திரும்பிப் பார்த்துப் பேசும்போது அவள் மேனியில் ஏற்படும் குலுங்கலையும், சரிந்து விழும் சேலையைச் சரி செய்துகொண்டே தன் விழிகளை நான்கு புறமும் சுழல விட்டு பார்வையாலேயே அனைவரையும் கவர்ந்து இழுத்து விடுவதையும் விக்கியண்ணனும் வைத்த விழி வாங்காது நோக்கியவாறிருந்தான்.

திடீரென ஆதித்தன் திரும்பி விக்கியண்ணனைப் பார்த்து, ''விக்கியண்ணா! அடுத்து ஆக வேண்டியதைச் சிந்திக்காமல் அவள் செல்வதையே பார்த்துப் பெருமூச்சு விடுவதால் என்ன பலன்?'' என்று கேட்டதனால், அவன் திடுக்கிடாமல் மிகவும் அமைதியாகத் திரும்பி, ''அவள் எங்கே செல்கிறாள் என்று யோசனை செய்து கொண்டிருக்கிறேன்'' என்றான்.

''அவள் எங்கே சென்றால் நமக்கென்ன? அவள் சிற்பியின் மகள் என்பது உண்மையானால், அவளையும், அவள் தந்தையையும் தஞ்சைக்கு அழைத்துச் செல்லத் திட்டமிடுவோம். அதுவும் இன்றே நடைபெறக்கூடிய காரியமன்று. நாம் உடனே திருத்தணிகை போயாக வேண்டும் என்பதை மறந்து விட்டாயா?'' என்று குரலில் சற்றுக் கடுமை நிலவக் கேட்டான் ஆதித்தன்.

விக்கியண்ணன் மெல்ல நகைத்தான். ''இளவரசே! அவள் சிற்பியின் மகளாக மட்டும் இருப்பாள் என்று எனக்குத் தோன்றவில்லை. பல்லவ ஆட்சியாளருக்கு மிகவும் நெருங்கிய முக்கியமானவளாக இருப்பாள் என்று தோன்றுகிறது'' என்றான் மீண்டும் அவள செல்லும் திசையை நோக்கியவாறு.

''எப்படித் தெரிந்து கொண்டாய்?'' என்று ஆதித்தன் கேட்டான்.



''அவள் நடந்து போகும் விதம், அவளைத் தொடர்ந்து செல்லும் வீரனின் பணிவு, அவள் திரும்பித் திரும்பி ஏதோ சொல்லும்போது வீரன் கேட்டுக் கொள்ளும் முறை ஆகியவற்றிலிருந்து அறிந்து கொண்டேன்'' என்றான்.

''இந்த நாட்டில் அவள் மிகவும் சக்தி வாய்ந்தவள் என்றால் அவளிடமே குதிரைகளைக் கேட்டு விடுவோமே... அவள் மனது வைத்தால் இரண்டு என்ன இருநூறு குதிரைகளைத் தர முடியுமே'' என்றான் ஆதித்தன்.

''இளவரசே! நம்மை அவள் சோழ நாட்டவர் என்று தெரிந்து கொண்டிருக்கிறாள். ஆனால் தங்களைச் சோழ இளவரசர் என்று தெரிந்து கொள்ளவில்லை. இன்னும் சிறிது நேரம் நாம் அவளுடன் பேசினோ‌ம் என்றால் அவள் புரிந்து கொண்டு விடுவாள். அதனால் பின் விளைவுகள் பயங்கரமாயிருக்கும். அவள் வருவதற்கு முன்பு நாம் இங்கிருந்து புறப்பட்டுப் போய்விட வேண்டும்'' என்று தன் கருத்தைத் தெரிவித்தான் விக்கியண்ணன்.

''நடந்தே எவ்வளவு தூரம் செல்ல முடியும்?'' ஆதித்தன் கேட்டான்.

''நடந்தா?'' என்று சிரித்த விக்கியண்ணன், ''குதிரையில் தான் செல்ல வேண்டும்'' என்றான்.

''குதிரையா? எங்கேயிருக்கிறது?'' என்று ஆதித்தன் கேட்டான்.

''அதோ'' என்று மரத்தடியைச் சுட்டிக் காட்டினான் விக்கியண்ணன்.

''அந்தக் குதிரைகள் - இங்கே வரப்போகும் கோட்டத் தலைவர்களுக்காக என்று மீன்விழியாள் சொன்னாளே'' என்று ஆதித்தன் கேட்டான்.

''குதிரைகளையே நீங்கள் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்ததிலிருந்து நான் புரிந்து கொண்டு விட்டேன். நீங்கள்தான் கோட்டத் தலைவர். நான் தங்களுடைய உதவியாள். வாருங்கள் சத்திரத்திற்குள்ளே செல்லலாம்'' என்றான் விக்கியண்ணன். ஆதித்தனுக்கு, விக்கியண்ணனின் திட்டம் முதலில் புரியவில்லை. என்றாலும் திறமையாகச் செயலாற்றக்கூடிய விக்கியண்ணன் ஏதோ ஒரு திட்டத்தை மனத்தில் கொண்டே சொல்கிறான் என்று புரிந்துகொண்டான். அவனுடன் சத்திரத்திற்குள் நுழைந்தான்.

சத்திரத்தின் அமைப்பு புதுவிதமாக இருந்தது. நுழை வாயிலில் திண்ணை. உள்ளே நுழைந்தவுடன் நடுவே முற்றம். சுற்றிலும் தாழ்வாரம். அதற்கு இருபுறமும் கூடம். பிறகு அடுத்த

01 09 2012

கட்டு, சிறு சிறு அறைகள். சமையல் நடக்கும் மடைப்பள்ளி, பண்டகசாலை.

சத்திரத்துக் கூடத்தில் ஒருவரையும் காணவில்லை. இரவில் அங்கே பலர் உறங்கிக் கொண்டிருந்தவர்கள் இப்போது ஒருவரையும் காணவில்லை.

ஆதித்தன் கூர்ந்து நோக்கினான். இன்னும் காலை வெளிச்சம் கூடத்துள் நுழையாததால் இருண்டிருந்த அங்கே வாள்களும், வேல்களும் நிறையக் கிடந்தன. வீரர்களுக்கான உடைகளும், தலைப்பாகையும் கிடந்தன.

"சத்திரத்தில் இரவு தூங்கிக் கொண்டிருந்தவர்கள் பல்லவ வீரர்கள்" என்றான் விக்கியண்ணன்.

"இப்பொழுது அவர்கள் எங்கே சென்றிருப்பார்கள்?" என்று ஆதித்தன் யோசித்தான். விக்கியண்ணன் இப்படியும் அப்படியுமாகச் சற்று நேரம் பார்த்துவிட்டு சத்திரத்தின் பின்கட்டிற்குச் சென்றான். சமையல் அறையிலிருந்து புகை வந்து கொண்டிருந்தது. பெரிய அகல் விளக்கொளியில் முதியவர் அங்கே சமையல் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

"பாட்டா" என்று அன்புடன் அழைத்தான் விக்கியண்ணன். முதியவர் திரும்பிப் பார்த்தார்.

"மீன் விழி எங்கே, தாத்தா?" என்று மிகவும் அறிமுகமானவன் போல் கேட்டான்.

அவனை உற்று நோக்கிய அவர், "பாட்டி வீட்டிற்குப் போயிருப்பாள்! உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

"சோறு கட்டித் தருவதாகக் கூறியிருந்தாள்" என்றான் விக்கியண்ணன்.

"ஓ! சோழநாட்டுப் பயணிகளா?" என்று கேட்ட அவர், "ஒரு வாழை இலையைத் தோட்டத்திலிருந்து நறுக்கி வாருங்கள். தயிர்ச் சோறு கலந்து தருகிறேன்." என்றார்.

"வாழை இலைக்கு நான் எங்கே போவேன்?" விக்கியண்ணன், முதியவரிடம் மிக நெருங்கிப் பழகியவன் போல் கேட்டான்.

"புழக்கடைக் கோடியில் குளம் இருக்கிறது. அங்கே குளித்துவிட்டு அப்படியே வாழை மரத்திலிருந்து இலையைக் கொண்டு வா" என்று கூறி, அண்டாவில் கொதிக்கும் குழம்பை அகப்பையில் கிளறிவிட்டார். குழம்பின் மணம் நாசியுள் புகுந்து மயக்கியது.



"கிணற்றடியில் குளிக்கக் கூடாதா?" விக்கியண்ணன் கேட்டான்.

"கூடாது. கிணற்றடியைச் சேறாக்கி விடாதீர்கள். வீரர்களையே குளிக்கக்கூடாது என்று மீன்விழி கண்டிப்பாகக் கூறியிருக்கும்போது உங்களுக்கு மட்டும் தனிச் சலுகையா?" என்று கூறிவிட்டு அவர் தன் வேலையைத்தொடரலானார்.

விக்கியண்ணன் சுற்றும் முற்றும் பார்த்தான். முன் கூடத்துக்கு ஒரே தாவில் ஓடி வந்தான்.

"இளவரசே! இங்கு தங்கியிருக்கும் பல்லவ வீரர்கள் குளிக்கப் போயிருக்கிறார்கள். அதற்குள் நம் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்" என்று பரபரப்புடன் கூறினான்.

"எனது திட்டத்தைப் பற்றி உனக்கு எப்படித் தெரியும் விக்கியண்ணா?" என்று இதழ்களில் மெல்லிய முறுவல் நெளியக் கேட்டான் ஆதித்தன்.

"நீங்கள் கூடத்தில் நின்று நோட்டம் விடுவதைக் கண்டவுடனேயே நான் புரிந்து கொண்டு விட்டேன்" என்றான் விக்கியண்ணன்.

விக்கியண்ணனின் அறிவுத் திறமையைக் கண்டு மனத்திற்குள்ளேயே மெச்சிக் கொண்ட ஆதித்தன், "விக்கியண்ணா, இந்தச் சத்திரத்துஅறைகளுக்குள்ளும் நுழைந்து பார்த்து விட்டேன்" என்றார்.

"நிறைய பருப்பு, உளுந்து, அரிசி மூட்டைகள் இருக்கும்" என்று சிரித்தவாறு கேட்டான் விக்கியண்ணன்.

"இல்லை, இல்லை. ஈட்டிகளும் வேல்களும் குவித்து வைத்திருக்கிறார்கள்" என்றான் ஆதித்தன்.

"இருளில் பளபளத்தனவோ அவை?"

"இல்லை. முனை மழுங்கியவைதான். கொல்லரிடம் கொடுக்கக் கொண்டு வந்திருக்கிறார்கள்!"

"இந்த ஊரில் உலைக்களம் இருக்க வேண்டும். அதைக் காண்பதற்காகத்தான் மீன் விழியாள் சென்றிருக்கிறாள் என்று தோன்றுகிறது."

இவ்வாறாக அவர்கள் பேசிக் கொண்டே கூடத்தில் கிடந்த வீரர்களின் அங்கிகளைப் புரட்டிப் பார்த்தார்கள். தள்ளிப் பார்த்தார்கள். உதறிப் பார்த்தார்கள். தலைப்பாகைகள் நான்கைந்து இருந்தன. அவற்றுள் தங்கள் தலைக்குப் பொருந்தும்படியான இரண்டை எடுத்து அணிந்து கொண்டு, திரும்பும்போது ஒரு

01 09 20

சிறிய மரப் பேழையைக் கண்டார்கள். அது அரசாங்கத்தில் முக்கியமானவர்கள் தங்கள் கைவசம் வைத்திருக்கும் பெட்டி. சித்திர வேலைப்பாடுகளுடன் திகழ்ந்தது. அதை ஆதித்தன் திறந்தான். சொல்லி வைத்தது போல் இரண்டு 'விடேல் விடுகு' அடையாளச் சின்னங்களிருந்தன. கையில் எடுத்துக்கொண்ட ஆதித்தன், "விக்கியண்ணா! நாம் இங்கிருந்து உடனே புறப்பட்டாக வேண்டும். குதிரைக்காரனிடம் சென்று இப்போது அதிகாரத்துடன் குதிரையைக் கேட்கலாம், வா. நொடி நேரம் கூட தாமதிக்கக்கூடாது. கூர்மையான வாட்களாக உடன் எடுத்துக் கொள்வோம்" என்று கூறி விக்கியண்ணனின் கையைப்பிடித்து தரதரவென்று இழுத்துக் கொண்டு சத்திரத்தின் வெளியே வந்தான்.

வாயிற்படியில் நின்றவாறு வீதியின் இருபுறமும் பார்த்துவிட்டு, மரத்தடியில் குதிரைகள் இருக்குமிடம் நோக்கி விரைந்தனர் இருவரும். அவர்கள் தலை முண்டாசில் விடேல் விடுகு சின்னம் பளபளத்தது.

விரைந்து வரும் இவர்கள் இருவரையும் பார்த்து குதிரைக்காரன் பரபரப்புடன் எழுந்து மாரை நிமிர்த்தி நின்றான்.

குதிரைகள் சேணம் பூட்டி ஆயத்தமாக இருந்தன. "ஏய், குதிரைக்குக் கொள்ளும் புல்லும் போட்டுவிட்டாயா?" என்று விக்கியண்ணன் அதிகாரம் நிறைந்த குரலில் கேட்டான்.

"எல்லாம் ஆச்சுங்க. நீங்க வருவீங்கன்னு சித்தமாய் அப்பவே வச்சுட்டேனுங்க" என்றான் குதிரைக்காரன்.

விக்கியண்ணன் ஆதித்தனை நோக்கிக் கண்களைச் சிமிட்டினான். 'சிறிது நேரத்திற்கு முன்பு கேட்டோம், குதிரைகள் கோட்டத்து அதிகாரிகளுக்காக இருக்கின்றன என்று கூறினான். இப்போது மிகவும் பணிவான குரலில் பேசுகின்றானே! உம், எல்லாம் பல்லவர்களின் அடையாளச் சின்னம் செய்யும் வேலை போலிருக்கிறது' என்று எண்ணிய விக்கியண்ணன், குதிரை அருகே சென்று குதிரையைத் தட்டிக் கொடுத்தான். குதிரைகளுடன் பேசும் பாஷை அவனுக்குத் தெரியும்.

குதிரை மெல்ல உடலைச் சிலிர்த்துக் கொண்டு தலையை அசைத்தது. கட்டப்பட்டிருந்த கயிற்றை அவிழ்த்துவிட்டவுடன், விக்கியண்ணனும், ஆதித்தனும் குதிரை மீது அமர்ந்தனர், குதிரை பறந்தது.

மீன்விழியாள் சத்திரத்திற்குத் திரும்பி வந்தபோது சத்திரத்து வாயிலில் பல்லவ வீரர்கள் கூட்டமாக நின்று பேசிக் கொண்டிருந்தனர். குளத்தில் நீராடிவிட்டு வாழை இலையுடன் அங்கே வந்து, காலை ஆகாரத்தை ஒரு பிடிபிடித்தனர். பிறகு



அங்கிருந்து புறப்படுவதற்கு உடையணியக் கூடத்திற்கு வந்தபோது, எல்லாம் தாறுமாறாகக் கிடப்பதைக் கண்டனர். ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். யாரோ மூன்றாவது மனிதர் உள்ளே நுழைந்திருப்பதாக அவர்கள் முடிவு செய்தனர்.

விடேல் விடுகு இருந்த அடையாள முத்திரையைக் காணவில்லை என்றவுடன் அவர்கள் அனைவருக்குமே ஒருவித அச்சம் பிறந்தது.

அப்பொழுதுதான் மீன்விழி அங்கே வந்தாள். அவள் பார்வை குதிரைகள் இருக்குமிடம் சென்றது. குதிரைகள் இல்லை. குதிரைக்காரனை அழைத்தாள். அவன் கூறியதனின்று, சத்திரத்தில் தங்கிய சோழ நாட்டவர்கள்தாம் சத்திரத்தில் நடந்த குழப்பத்திற்குக் காரணம் என்றறிந்தாள்.

அவள் மெல்லச் சிரித்துக் கொண்டாள். அந்த இருவருக்கும் பகல் சோற்றைக்கட்டிக் கொடுத்துத் திருத்தணிகைக்குக் கால்நடையாக நடக்க வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் அவளுக்கிருந்தது. திருக்காளத்திக் கோயிலில் நாட்டியமாடிக் கொண்டிருந்த தன் சகோதரியைச் சோழ நாட்டிற்கு வருமாறு அழைத்து ஆசை காட்டி அவளுடைய அமைதியான வாழ்க்கையைக் குலைத்துவிட்டதாக அவளுக்கு அவர்கள் மேல் கோபம்.

சாதாரண சோழ நாட்டுப் பிரஜை அழைத்ததற்கே சகோதரி அங்கிருந்து புறப்பட்டு வந்துவிட்டாளே என்ற வருத்தம். மீன் விழிக்குச் சிறிது சந்தேகமிருந்தது. அவர்களிருவரும் சோழநாட்டு அரசைச் சேர்ந்த முக்கியமானவர்களாக ஒருவேளை இருக்கலாமோ என்ற எண்ணம் ஏற்பட்டது. சோழ நாட்டவர்கள் பல்லவ நாட்டிற்கு விரோதிகளல்லர். ஆனால், சில நாள்களாக நிலைமை மாறியிருந்தது. பல்லவ நாட்டின் கோட்டத் தலைவர்களும், அதிகாரிகளும் கூடிப் பேசிக் கொண்டிருந்தனர். கங்க நாட்டினின்று பல்லவ நாட்டிற்குப் படையெடுப்பு அபாயம் இருப்பதாகப் பேசிக் கொண்டனர். அதனால் முன் எச்சரிக்கையாகப் படைகளைத் திரட்டத் திட்டமிட்டுக் கொண்டிருந்தனர்.

மீன் விழியாள் சிற்பி சிவநாதனின் மகள், அந்தக் கிராமத்துக் கொல்லரிடம் சிற்றுளி தயாரித்து, கூர்மையாக்கிப் பெற்றுக் கொள்ள வந்திருந்தாள். பல்லவ நாட்டுக் கோட்டத் தலைவர்கள், அதிகாரிகள் அனைவரையும் அவள் அறிவாள். சிற்பி சிவநாதனின் கலைத் திறமையைப் புகழாதவர்களே இல்லை எனலாம். பல்லவ சக்கரவர்த்தி அபராஜிதவர்ம[illegible] மதிப்பு, மரியாதை.

01 09 2012

திருவேங்கடத்திலிருந்து திருத்தணிக்குச் செல்லும் காட்டு வழியில் அந்தக் கிராமம் ஒன்றுதான் வழிப்போக்கர்கள் தங்கி இளைப்பாறிச் செல்வதற்கு ஏற்ற இடமாக இருந்தது. அருகேயுள்ள குன்றுகளும், சிறு சிறு பாறைகளும் சிற்பக் கோயில்களைப் படைக்க ஏற்றவையாக இருந்தன. அடிக்கடி அபராஜித வர்மன் அங்கே வருவார். அதனால் அந்தக் கிராமத்திற்கு மேலும் சிறப்பு ஏற்பட்டிருந்தது. மீன்விழியாள் தன் தந்தையுடன் வருவாள். அபராஜித வர்மனுடன் சமதையாக உரையாடும் துணிவும் பெற்றிருந்த மீன்விழியாளிடம் மற்றவர்களுக்கு மதிப்பு அதிகம் ஏற்பட்டதில் வியப்பில்லை.

சோழநாட்டு வழிப்போக்கர்கள்' அங்கே வருவார்கள் என்பதை முன்பே எதிர்பார்த்திருந்த மீன்விழி அவர்களுடன் பேச்சுக் கொடுத்து அவர்களது உண்மை நிலையை அறிய வேண்டும் என்று எண்ணியிருந்தாள். உலைக் கூடத்திற்குச் சென்று வருவதற்குள் இப்படி நேர்ந்துவிட்டதே என்று அவள் கவலையுற்றாள்.

''குதிரைகள் யாருக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன என்று உனக்குத்தெரியாதா?'' என்று மீன்விழி குரலில் அதிகாரம் பிரதிபலிக்கக் கேட்டாள்.

''யாரோ, முக்கிய அதிகாரிகளுக்கு என்றுதான் சொன்னார்கள்'' நடுங்கியவாறு கூறினான் குதிரைக்காரன்.

''அப்படியென்றால், புதிதாக வந்த அவர்கள் குதிரைகளை எடுத்துச் செல்ல எப்படி அனுமதித்தாய்?'' கோபமாகக் கேட்டாள் மீன்விழி. அருகிலிருந்த வீரர்கள் மீன்விழி பேசுவதையே பார்த்துக் கொண்டு நின்றனர்.

''அவர்கள் தலைப்பாகையில் அடையாளச் சின்னம் இருந்தது. நான் எப்படி மறுக்க முடியும்?'' என்று அவன் கூறியது நியாயமாகப்பட்டது. வீரர்களின் தலைவன் அதிர்ச்சியடைந்தார்.

''யாரோ, எதிரி நாட்டு ஒற்றர்களின் செய்கைதான் இது. நாம் ஏமாந்துவிட்டோம். அதிகத் தொலைவு அவர்கள் சென்றிருக்க முடியாது. உடனே பின் தொடர்ந்து சென்று பிடித்து வாருங்கள்'' என்று கர்ஜித்தான்.

''இப்படிக் கவனக் குறைவாயிருக்கும் நமது படைவீரர்கள் மாற்றார் படையெடுப்புக் காலத்தில் என்ன செய்யப் போகிறார்கள்?'' என்று மீன்விழி மெல்ல நகைத்தவாறு கூறியது தலைவனுக்குத் தன்னைக் குத்திக் காட்டுவதைப் போல் இருந்தது.

வீரர்கள் குதிரை மீதேறிப் புயலெனச் சீறிப் பாய்ந்து பின் தொடர்ந்தனர்.

○



## 3. கானகத்தில் ஒரு தேவதை

குதிரை மீதேறியமர்ந்து விரைந்த ஆதித்தனும், விக்கியண்ணனும் பாதைகள் இரண்டாகப் பிரியும் ஓரிடம் வரை சென்று வேகத்தைக் குறைத்துக் கொண்டு சற்று நின்றனர். ஒரு பாதை குன்றை ஒட்டிச் சென்றது. மற்றொன்று இரு குன்றுகளுக்கு நடுவே உள்ள வழியே சென்றது.

''திருத்தணிக்கு எந்தப் பாதை என்று தெரியவில்லையே'' என்றான் விக்கியண்ணன்.

''திருத்தணிகை மலையும், கோயிலும் தெரிகின்றனவா என்று பார்'' - ஆதித்தன் நெற்றி வியர்வையைத் துடைத்தவாறு குதிரையினின்றும் இறங்கினான்.

''இந்தப் பாறை மீது ஏறிப் பார்த்தால் ஒருவேளை தெரியலாம்'' என்றான் விக்கியண்ணன். எளிதாக ஏறுவதற்கு வசதியாயிருந்த பாறை மீது 'மளமள'வென்று ஏறினான்.

மறுகணமே, ''இளவரசே! இளவரசே!'' என்று கூறினான்.

''என்ன, என்ன? மலை தெரிகிறதா?'' என்று ஆதித்தன் குரல் கொடுத்தான்.

விக்கியண்ணன் மிக வேகமாக இறங்கி வந்து, ''குதிரைகள் மீது நம்மைப் பின்தொடர்ந்து பல்லவ வீரர்கள் வருகிறார்கள்'' என்றான் பரபரப்புடன்.

''நம்மை ஏன் அவர்கள் பின்தொடரப் போகிறார்கள்?'' என்றான் ஆதித்தன் அலட்சியமாக.

''நாம் சத்திரத்துக் குதிரைகளை அபகரித்து வந்துவிட்டோம். பல்லவ இலச்சினைகளையும் எடுத்து வந்துவிட்டோம். நம்மைத் தேடி வருவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால், உடனே வருவார்கள் என்று நினைக்கவில்லை'' என்றான் விக்கியண்ணன்.

''நமக்கு உரிமையான தொண்டை மண்டலத்தையே நூறு நூறு வருடங்களாக அவர்கள் அபகரித்து அனுபவிக்கும்போது,

01 09 201

ஒரு குதிரையும் இலச்சினையும் கொண்டு வந்துவிட்டது பெரிய தவறோ?'' என்று மிகவும் சாதாரணமாகக் கூறினான் ஆதித்தன்.

விக்கியண்ணன் பரபரப்புடன், ''இளவரசே! ஆராய்ச்சி செய்ய வேண்டிய சமயமா இது? அவர்களிடம் அகப்பட்டுக் கொள்வதால் நமது திட்டங்கள் குலைந்து போகாதா?'' என்றான்.

ஆதித்தன் நகைத்தான். ''விக்கியண்ணா! பாண்டிய வீரர்கள் நடுவே நாம் ஒரு சமயம் சிக்கிக் கொண்டதை மறந்து விட்டாயா? நமது கை வாள் எப்படி சுழன்றன என்பது மறந்துவிட்டதா?'' என்று ஆதித்தன் உறுதியுடன் கூறினான்.

''ஆகா! நான் மறப்பேனா தங்கள் வீரத்தை? ஆனால் அது போர்க்களம். இங்கே தங்களைச் சோழ இளவரசர் என்பதை ஒருவரும் அறிய மாட்டார்கள். இந்த வீரர்களிடம் நாம் சிக்கிக் கொள்வதால், பல்லவர்கள் மிகவும் ஜாக்கிரதை யாகிவிடுவார்கள். நமது திட்டத்திற்கு எடுத்தவுடனேயே தோல்வி ஏற்படவிடலாமா? தங்கள் கனவு என்னாவது?'' என்று படபடப்புடன் பேசிய விக்கியண்ணன், ''இப்படியே, இந்தச் சரிவில் இறங்கி மறைந்து கொள்வோம். பிறகு மற்றவற்றை யோசிப்போம்'' என்று குதிரைகளையும் இழுத்துக் கொண்டு பாறை மறைவிற்குச் சென்றான். ஆதித்தனும், விக்கியண்ணனைத் தொடர்ந்தான்.

அவர்கள் மறைந்துகொண்ட மறுகணம் பல்லவ வீரர்கள் குதிரை மீதேறி அந்தப் பக்கம் பாய்ந்து வந்தார்கள்.

''பார்த்தீர்களா? அவர்கள் செல்லும் வேகத்தைப் பார்த்தால் மிகவும் ஆக்ரோஷத்துடன் செல்கிறார்கள் என்பது தெரிகிறது. அவர்களிடம் சிக்கிக் கொண்டால்...'' என்று விக்கியண்ணன் மெல்லிய குரலில் கூறவும், ஆதித்தன் அவன் தோள்களைத் தட்டி, ''விக்கியண்ணா! சமயத்தில் உனக்குப் பயமும் வந்து விடுகிறது'' என்றான்.

''இதற்குப் பெயர் பயமா? திருப்புறம்பியம் போர்க்களத்தில் தன்னந்தனியனாக, பாண்டியர் படைகள் நடுவே சிக்கிக் கொண்ட போதே பயப்படவேயில்லையே. நாம் சூழ் நிலையைக் கவனிக்க வேண்டும்'' என்றான் விக்கியண்ணன்.

''அழகான சூழ்நிலை. நான்கு பக்கமும் மலை. அடர்ந்த மரங்கள். எங்காவது அருவியிருக்கும்....'' என்றான் ஆதித்தன் உதடுகளில் மெல்லிய நகை பூரிக்க.

''சமயத்தில் நீங்கள் நகைச்சுவையுடன் பேசுகிறீர்கள்'' என்று விக்கியண்ணன் கூறி நகைத்தபோது, ஆதித்தனும்



சிரித்தான். அந்தச் சிரிப்பின் ஒலி அங்கு எதிரொலித்தது. சிறிய அணில் ஒன்று அவர்களைப் பார்த்துவிட்டு குடுகுடு வென்று ஓடியது.

''இப்பொழுது நாம் என்ன செய்யலாம்?'' என்று விக்கியண்ணன் கேட்டான்.

''நாம் திட்டப்படி திருத்தணிகை நோக்கிச் செல்லலாம்'' என்றான் ஆதித்தன்.

விக்கியண்ணன் ஒரு கணம் யோசித்தான். ''வேண்டாம். சிறிது தூரம் சென்ற அவர்கள், நம்மைக் காணாமல் திரும்பி விடுவார்கள். அதனால், திரும்பவும் சத்திரத்திற்கே போய் விடுவோம்'' என்றான்.

ஆதித்தனுக்குக் கோபம் வந்தால் உடனே பேச மாட்டான். சிறிது மவுனம் சாதிப்பான். மூக்கு நுனி மட்டும் துடிப்பது போல் இருக்கும். பிறகு வார்த்தைகள் சீறி வரும்.

''சத்திரத்திற்குச் சென்றால் மட்டும் உன்னைத் தாம்பூலம் கொடுத்து வரவேற்பார்களா?'' என்றான் ஆதித்தன்.

''ஆமாம், மீன்விழியாள் மிக நல்லவள்...'' என்றான் விக்கியண்ணன்.

''அவளுடைய விழி வலையில் சிக்கிவிட்டாயா விக்கி யண்ணா? அவள் சாதாரணப் பெண்ணல்லள் என்று நீதான் சொன்னாய். பல்லவ நாட்டில் மிக செல்வாக்குப் பெற்றவளாக அவள் இருப்பாள் என்றாய்'' - ஆதித்தனின் சீற்றம் தணிய வில்லை.

''அதனால்தான் சொல்கிறேன். அவளை நாம் வசியப்படுத்திக் கொள்ள வேண்டும். அவளால் பல காரியங்கள் நமக்கு ஆக முடியும்'' என்று தீர்மானமாகக் கூறினான் விக்கியண்ணன்.

''அவள் நம்மை வசியப்படுத்திவிட்டால்...?'' ஆதித்தன் கேட்டான்.

விக்கியண்ணன் சிரித்தவாறு, ''நம்மில் யாரேனும் ஒருவரைத் தான் வசியப்படுத்த முயல்வாள். இப்பொழுதே முடிவு செய்து கொள்வோம். யார் மீது அவள் பார்வை விழுகிறதோ, அவர்கள் எப்படி நடந்து கொள்வது என்பதைத் திட்டப்படுத்திக் கொள்வோம்'' என்றான்.

ஆதித்தன் மவுனமாக இருந்தான். விக்கியண்ணன் ஏதோ வேடிக்கையாகப் பேசுகிறான் என்று நினைத்தான்.

''நாம் மீண்டும் சத்திரத்திற்குத் திரும்பி வந்துவிட்டதை அறிந்தால் அவள் மகிழ்ச்சியடைவாள்'' என்றான் விக்கியண்ணன்.

''அவள் ஏன் மகிழ வேண்டும்? அவ்வளவு எளிதில் மயங்கி மகிழக் கூடியவளாகத் தோன்றவில்லை. அவள் சிற்பியின் மகள்'' என்றான் ஆதித்தன் கடுமையாக.

''இருக்கலாம்! அந்தத் தகுதியை வைத்துக்கொண்டு பல்லவ நாட்டில் பெரும் செல்வாக்குப் பெற்றிருக்கிறாள்.''

''உனக்கு எப்படித் தெரியும்? இன்னும் நாம் பல்லவ நாட்டின் முழு விவரமும் தெரிந்து கொள்ளவில்லை. பல்லவ நாட்டில் நுழைந்தவுடனேயே ஏற்பட்ட முதல் அனுபவமே குதிரை மீதேறி தப்பி விடுமாறு நேர்ந்துவிட்டது.''

''இலச்சினையை எடுத்துக்கொண்டு ஓடாமல் நாம் இருந்திருக்க வேண்டும்.''

''நாம் என்ன கோழைகளா ஓடுவதற்கு? எதிர்த்து நிற்போம் என்றேன். நீ அதற்குச் சம்மதிக்கவில்லை. வீரத்தைப் புலப் படுத்துவதற்கு மாறாக தந்திரத்தைக் கையாளச் சொல்கிறாய். எனக்கென்னவோ உன் யோசனை சரியாகப்படவில்லை. தோள் வலிமையும், வாள் பலமும் இருக்கும்போது, தந்திரத்தைப் பயன்படுத்த ஏன் நினைக்கிறாய்?'' ஆதித்தன் கோபத்துடன் கேட்டான்.

''தாங்கள் மாவீரர் என்பதில் சந்தேகமேது? தங்களுடைய புஜபலத்தையும், திருமால் கை சக்கராயுதம் போல் தங்கள் கை வாள் போர்க்களத்தே சுழலும் அதிசயத்தையும் நான் கண்டவன். ஆனால், நாம் மாறுவேடத்தில் ஏன் பல்லவ நாட்டிற்குள் வந்தோம்?'' என்று விக்கியண்ணன் கேட்டுச் சற்று நிறுத்தினான்.

''நாம் ஒன்றும் இங்கு மாறுவேடத்தில் வரவில்லையே! சிவனடியாராகவோ, இமயமலை சந்நியாசியாகவோ காவியுடை அணிந்து வரவில்லையே...'' என்று குறுக்கிட்டான் ஆதித்தன்.

விக்கியண்ணன் சிரித்தான். ''மாறுவேடம் என்றால் தாடி, மீசை, சடைமுடி அணிந்தாக வேண்டுமா? இளவரசர்க்கான பட்டாடை எங்கே? தலையில் இளவரசு மகுடம் எங்கே? புலி இலச்சினை எங்கே? மார்பிலே முத்து மாலை எங்கே? கழல் எங்கே? காது குண்டலம் எங்கே? அரச விருதுகள் எங்கே? தாங்கள் வரப்போவதாக செய்தி அறிந்திருந்தால் அபராஜிதன் ஓடோடி வந்து [illegible] ம்பத்துடன்

வரவேற்றிருப்பானே... அப்படிச் செய்யாமல் நாம் புறப் பட்டோம். பல்லவ மன்னன் அறிந்து கொள்ளக்கூடாது என்று சாதாரணப் பிரஜை போல் உடை அணிந்தோம். பட்டாடை களைத் தவிர்த்தோம், பருத்தி ஆடைகளை உடுத்தினோம். ஏன் அவ்வாறு செய்தோம்?'' என்று விக்கியண்ணன் கேட்ட போது, ஆதித்தன், ''இதென்ன கேள்வி, விக்கியண்ணா? பல்லவ நாட்டின் முன்னேற்றம் அறிய ஆசைப்பட்டேன். அவர்கள் படை பலத்தை அறிய ஆர்வங்கொண்டேன். எனது கனவை நனவாக்கும் முயற்சியின் முதல்படி பல்லவ நாட்டில் காஞ்சியையும், மாமல்லபுரத்தையும் காண்பது'' என்று கூறினான்.

''காஞ்சியையும், மாமல்லபுரத்தையும் காண வேண்டும் என்ற தங்கள் ஆசையைத் தெரிந்துகொண்டு தூது அனுப்பி யிருந்தால், அபராஜிதன் ராஜ மரியாதையுடன், தானும் உடன் வந்து சுற்றிக் காட்டியிருப்பானே...'' என்ற குறுக்குக் கேள்வி கேட்டான் விக்கியண்ணன்.

''செய்திருப்பான். ஒரு சிற்றரசனுக்கு உள்ள மரியாதைதான் கிடைத்திருக்கும். நீ நினைப்பது போல் அபராஜிதன் நாட்டின் எல்லைக்கு வந்திருக்க மாட்டான், விக்கியண்ணா! சோழ நாட்டின் மீது அவனுக்கு மதிப்பு உண்டு. ஆனால் அது மரியாதை அன்று. சோழநாடு இன்னும் பல்லவர்களுக்கு அடங்கிய நாடென்பதை மறந்துவிடாதே'' என்றான் ஆதித்தன்.

''நான் அப்படி நினைக்கவில்லை. கொள்ளிடக் கரை வரையில் நாம் ஆளும் உரிமையை அளித்துவிட்டானே அபராஜிதன்! மேலும் உறையூரும், திருக்குடந்தையும், பழையாறையும் தங்களிடம். ஆரூரும், நாகையும், சீர்காழியும் தங்களிடம். பல்லவன் தங்கள் வலிமையை உணர்ந்துவிட்டான்'' ஆதித்தனைப் புகழ்ந்தான் விக்கியண்ணன்.

''தில்லைச் சிற்றம்பலம் இன்னும் பல்லவர்களிடம்தான். மலையமானும், காடவர்கோனும் பல்லவர்களுக்குத் திறைப் பணம் அனுப்புகிறார்கள்'' என்று ஆதித்தன் கூறும்போது அவன் குரலில் சோர்வு புலப்பட்டது.

விக்கியண்ணன் மவுனமாக இருந்தான். ஆதித்தனின் உள்ளத்தை அவன் நன்றாக அறிவான். என்றாலும், பல்லவ நாட்டின் முக்கியமான இடங்களைச் சுற்றிப் பார்க்க இவ்வாறு சாதாரண மக்கள் போல் வருவானேன் என்பது அவனுக்கு இன்னும் புரியவில்லை. ஆதித்தன் [illegible] உடன் புறப்பட்டு விட்டான்.

"இளவரசே! என்ன இருந்தாலும், தங்கள் செய்கை மிகத் துணிவுடையது. இங்கே தப்பிவிட்டாலும், திருத்தணிகையில் தெரிந்து கொண்டுவிட மாட்டார்களா? காஞ்சியில் புரிந்து கொண்டுவிட மாட்டார்களா? மாமல்லபுரம் சென்றால் மட்டும் நம்மை அடையாளம் கண்டுகொள்ள மாட்டார்களா?" என்று விக்கியண்ணன் கேட்டான்.

"நாம் இங்கே சத்திரத்தில் அவசரப்பட்டு விட்டோம் என்று நினைக்கிறேன்" என்றான் ஆதித்தன்.

"ஆமாம், குதிரையைக் கொண்டு வந்திருக்கக்கூடாது. சிற்பியின் மகளுடன் மேலும் நெருங்கிப் பழகியிருக்க வேண்டும்" என்றான் விக்கியண்ணன்.

ஆதித்தன், "ஆஹா!" என்று சற்றே வாய்விட்டுச் சிரித்து விட்டான். "விக்கியண்ணா! உன் நெஞ்சிலிருந்து சிற்பி மகள் இன்னும் மாறவில்லை என்று தெரிகிறது. அதனால்தான் சத்திரத்திற்கே திரும்ப விரும்புகிறாய். ஆனால், நான் சம்மதிக்கமாட்டேன். நான் ஒரு யோசனை சொல்கிறேன்" என்றான் ஆதித்தன்.

"சரி, நீங்கள் சொல்லுங்கள். ஆனால் திருத்தணிகை நோக்கிச் செல்வது என்ற யோசனை மட்டும் வேண்டாம்" என்றான்.

"திரும்பிச் செல்லும் யோசனை மிக நல்லதோ?" ஆதித்தன் கேட்டான்.

"சரி, சரி... நாம் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும்போதே அந்தக் குதிரை வீரர்கள் திரும்பிவிடுவார்கள் பாருங்கள்" என்றான் விக்கியண்ணன்.

"அதெப்படிச் சொல்கிறாய்?"

"நீங்கள் சொல்ல விரும்பிய யோசனை என்ன?"

"நாம் மீண்டும் பாறை மீது ஏறிப் பார்ப்போம், அவர்கள் வருகிறார்களா என்று."

விக்கியண்ணனும், ஆதித்தனும் மளமளவென்று பாறை மீது ஏறினார்கள். மலையேறிப் பழக்கமில்லாத ஆதித்தனுக்கு அது சிறிது கஷ்டமாகவே இருந்தது. விக்கியண்ணன் தன் கரத்தை நீட்டி அவனுக்கு உதவ நேர்ந்தது.

"இளவரசே, இளவரசே! அதோ பாருங்கள்!" என்று விக்கியண்ணன் சுட்டிக் காட்டினான். மலைச் சரிவில் வளைந்து வளைந்து சென்ற பாதை பாம்புபோல் நீண்டு நெளிந்து



தொலைதூரம் தெரிந்தது. தொலைவில் சிறு புள்ளிகள் நகர்ந்து வருவது போல் குதிரைகள் மீது வீரர்கள் வந்து கொண்டிருந்தனர்.

"பார்த்தீர்களா, பார்த்தீர்களா? நாம் இதே பாதையில் தொடர்ந்து சென்றிருந்தால் எதிரே வரும் அவர்களிடம் சிக்கியிருப்போம்" என்றான் விக்கியண்ணன்.

"திரும்பவும் இதே பாதையில் சத்திரத்தை நோக்கிச் சென்றிருந்தாலும், அவர்கள் நம்மைத் தொடர்ந்து வந்து பிடித்திருக்க மாட்டார்களா?" ஆதித்தன் மடக்கினான்.

"இப்போது என்ன செய்யலாம்?" விக்கியண்ணன் பரபரத்தான்.

"உடனே கீழே இறங்கலாம். நாம் உச்சியில் இருப்பதை அவர்கள் பார்த்துவிட்டால் தொல்லைதான்" என்று கூறிய ஆதித்தன் கீழே இறங்க முற்பட்டான்.

"இளவரசே, இளவரசே! இறங்கும்போதுதான் மிகுந்த கவனம் தேவை. ஜாக்கிரதை, நான் முதலில் இறங்குகிறேன்" என்றான் விக்கியண்ணன்.

"மலைகள் நிறைந்த நாட்டை ஆளும் உனக்கு மலை ஏறி, இறங்கிப் பழக்கம். சோழ நாட்டில் மலைக்கு எங்கே போவேன்?" என்றான் ஆதித்தன்.

"இந்த மலை உங்கள் மலை. திருவேங்கடம் உங்கள் மலை. காளத்தி உங்கள் மலை. கடிகாசலம் உங்கள் மலை. திருக்கழுக்குன்றம் உங்கள் மலை" என்றான் விக்கியண்ணன்.

"ஆமாம், ஆமாம், பல்லவ நாட்டுக் குன்றங்கள் யாவும் ஒரு காலத்தில் சோழர்களது மலைகள்தாம். அவை என்று சோழநாட்டிற்கு உரியவை ஆகப் போகின்றனவோ? நான் தினமும் கனவு காண்கிறேன். கனவு நனவாகுமா விக்கியண்ணா?" என்று ஆதித்தன் கீழே இறங்கியவாறு கேட்டான்.

"உங்கள் கனவை நனவாக்காமல் நான் கங்க நாட்டிற்குத் திரும்ப மாட்டேன்" என்றான் விக்கியண்ணன்.

மிகவும் வேகமாக அவர்கள் பாறையிலிருந்து இறங்கி, குதிரைகள் நின்ற இடத்திற்கு வந்தார்கள். குதிரைகளைக் காணவில்லை.

"விக்கியண்ணா! குதிரைகளை நாம் மரத்தில் கட்ட வில்லையா?" என்று ஆதித்தன் கேட்டான்.



01 09 20

விக்கியண்ணன் இங்குமங்கும் அலைந்தான். பிறகு, ''குதிரைகள் ஓடிவிட்டன. இது என்ன புதிய சங்கடம்?'' என்று விக்கியண்ணன் கவலையுடன் கேட்டான்.

''இங்கேயே நின்று விவாதிக்க நேரமில்லை'' என்ற ஆதித்தன், சுற்றுமுற்றும் பார்த்தான். திடீரென எதையோ கண்டவன்போல், ''விக்கியண்ணா! இதோ பார்! இங்கே ஒற்றையடிப் பாதை, இந்த வழி எங்காவது சென்று தானாக வேண்டும். இதன் வழியே செல்வோம். ஏதாவது சுனை இருக்கலாம். அமைதியாக நீராடிவிட்டுத் திரும்பி வருவோம். அதற்குள் அவர்கள் போயிருப்பார்கள். நாம் நிம்மதியாகத் திருத்தணிகை நோக்கிச் செல்வோம்'' என்றான்.

அவர்கள் ஏதோ எதிர்பார்த்து நடந்து சென்றார்கள். விக்கியண்ணன் திடீரென நின்று உற்றுக் கேட்டான்.

''இளவரசே, இளவரசே! கேளுங்கள்... கேளுங்கள்...'' என்று ஆச்சரியத்துடன் கூவினான்.

'இழும்...ம்...ம்...' என்ற ஓசை சுருதி மீட்டுவது போல் கேட்டது.

''அருவியின் ஓசை. அருவி ஒன்று மலை மீதிருந்து குதிக்கிறது'' என்று துள்ளினான் விக்கியண்ணன்.

சிறிது நடந்து, பெரும் பாறையொன்றின் மீது ஏறி இறங்கியவுடன், ஆதித்தனும் விக்கியண்ணனும் ''ஆ!'' என்று வாய்விட்டே வியப்பால் கூவிவிட்டார்கள்.

சுழன்று சுழன்று ஓடிய அருவி நீர், சற்று ஒதுங்கி நின்ற இடத்தில் தேவதையோ என்று எண்ணும் வண்ணம் ஓர் எழில் மங்கை குளித்துக் கொண்டிருந்தாள். மீன் போல் நீந்தினாள். ஒரு கணம் அவள் மின்னலெனத் துள்ளி, நீருக்குள் மூழ்கினாள். பிறகு பூத்த புதுத்தாமரை போல நீரின் மேல் தோன்றினாள்.

''விக்கியண்ணா! தேவதை யாராவது வானுலகில் இருந்து பூமிக்கு இறங்கி நீராடுகிறார்களா?'' என்றான் ஆதித்தன்.

''நான் தெரிந்து வருகிறேன்'' என்று கூறிய விக்கியண்ணன், தலைப்பாகையையும், உடை வாளையும் கழற்றிக் கரையில் வைத்துவிட்டு,சுனையில் 'தொப்'பென்று குதித்தான்.



## 4. குதிரைத் திருடன்

சிற்பி சிவநாதனும், அவரது சீடர்களான இளஞ்சிற்பிகளும் களைப்புடன் திரும்பிக் கொண்டிருந்தனர். அன்றைய உழைப்பின் கடுமையால் மிகுந்த களைப்பு ஏற்பட்டிருந்தாலும், அவர்கள் அடைந்த வெற்றி, முகத்தில் ஓர் ஒளியைக் காட்டியது. கடந்த சில நாள்களாக அவர்கள் திருத்தணிகையை அடுத்த குன்றுப் பகுதிகளில் சிற்பங்கள் அமைப்பதற்குகந்த பாறைகளைத் தேடி அலைந்தனர். ஒவ்வொரு பாறையாகத் தட்டிப் பார்ப்பதும், சிற்றுளியால் செதுக்கிப் பார்ப்பதுமாக மலைப் பகுதிகளில் அலைந்தனர்.

அன்றைய பொழுது நல்ல பொழுதாகப் புலர்ந்தது. உச்சி வேளை நெருங்கும்போது தக்க பாறையைக் கண்டுபிடித்து விட்டனர். அந்த வெற்றிக் களிப்போடுதான் அவர்கள் திரும்பிக் கொண்டிருந்தனர். சிவநாதனும், மற்ற சிற்பிகளும் தங்கியிருந்த இடத்தை அடைய அவர்கள் நடக்கும்போது களைப்பு இருந்தாலும் உற்சாக மிகுதியால் அவர்கள் பாடினர். சுலோகங்கள் கூறினர். 'பல்லவ சக்கரவர்த்தி அபராஜித வர்மன் வாழ்க' என்று அவ்வப்போது உற்சாகக் குரல் எழுப்பினர்.

அவர்கள் தங்கியிருந்த இடத்தை அடைந்தபோது சிவநாதனுக்கு வியப்பு காத்திருந்தது. அவருடைய மகள் மீன் விழியாள் அங்கு வந்து சேர்ந்திருந்தாள். இரவு உணவுக்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தாள்.

''எப்போது குழந்தாய் வந்தாய்?'' என்று சிவநாதனார் மகளின் கூந்தலை வருடியவாறு, சொல்லில் அன்பு ததும்பக் கேட்டார்.

''இப்போதுதானப்பா வந்தேன்'' என்று மீன்விழியாள் கூறிச் சற்று நிறுத்தி, சுற்றிலுமிருக்கும் சிற்பிகளை நோக்கினாள். மீன்விழியாள் வந்துவிட்டாள் என்றால் அவர்களுக்குப் பெரும் மகிழ்ச்சிதான். அவளுடைய பொலிவையும், சுவையான பேச்சையும், கலகலப்பாகப் பழகுவ[illegible] அ[illegible] பெ[illegible]

01 09 2012

ரசித்து அவனுடன் உரையாடுவதைப் பெரும் உற்சாகமாகக் கருதினர்.

சில நாள்கள் அவளைக் காண முடியாது. பிறகு அவள் வந்து விடுவாள். அவள்தான் அனைவருக்கும் சோறு படைப்பாள்.

"எந்தப் புண்ணியவான் இவளை அடையும் பேறு பெற்றிருக்கிறானோ?" என்று சிலர் பெருமூச்சு விடுவார்கள். அவள் விழிகள் அன்பைப் பொழியும். ஆனால் அதைத் தவறாக எடுத்துக் கொண்டால் வாளாக மாறும். அவள் சொற்களிலே தேன் சொட்டும். அதைத் தவறாகச் சுவைத்தால் விஷமாக மாறும்.

"சிற்றுளிகளைக் கூர்மையாக்கி விட்டாயா? புதிய உளிகள், சுத்திகள் செய்யச் சொன்னாயா?" என்று சிற்பி கேட்டார்.

மீன்விழியாள் அவ்வளவு உற்சாகமாகப் பேசவில்லை. மீண்டும் சுற்றிலும் நோக்கினாள். அவள் ஏதோ தந்தையிடம் சொல்ல விரும்புகிறாள் என்பது புரிந்தது. அங்கிருப்பவர்களைத் தத்தமது இடத்திற்குப் போகச் சொல்வதைவிடத் தன் மகளுடன் பேசியவாறு ஆற்றங்கரைக்கருகே செல்ல முற்பட்டார்.

"அப்பா! வேலை மெதுவாகத்தான் நடக்கிறது" என்று மீன்விழியாள் சொன்னாள்.

"என்னம்மா சொல்கிறாய்? இதுநாள் வரை தேடி வந்த பாறை கிடைத்துவிட்டது. கரிய நிறப்பாறை; அழகிய பாறை; சிற்பங்கள் அமைக்க ஏற்ற பாறை. அபராஜித வர்மர் மிகவும் அதிர்ஷ்டசாலிதான். அவருடைய திட்டப்படி பாலாற்றங்கரை ஓரமாகக் கோயில்களை அமைக்கலாம். ஆனால்... நீயோ, வேலை மெதுவாக நடக்கிறது என்று கூறுகிறாயே..." என்ற குரலில் ஏமாற்றம் மிளிரக் கேட்டார்.

"ஆமாம். நான் சத்திரத்தில் இரண்டு நாள்களுக்கு மேல் தங்கினேன். ஏனோ பல்லவ வீரர்களின் நடமாட்டம் அதிகமாக இருக்கிறது. கொல்லர் பட்டறையில் வேலும் வாளும் கூர் தீட்டப்படுகின்றன. பழுக்கக் காய்ச்சி ஈட்டி முனைகளைச் சீராக்குகிறார்கள்" என்று மீன்விழியாள் சொன்னாள். அதில் ஒருவித ஏமாற்றமும், அச்சமும் கலந்திருந்தன.

"நீ என்ன சொல்கிறாய், மகளே? யுத்தம் ஏதாவது வரப்போகிறதா? சக்கரவர்த்தி என்னிடம் எதும் சொல்லவில்லையே..." என்று சிற்பி கேட்டார், தன் மகளிடம்.



"என்னிடமும் அவர் ஒன்றும் சொல்லவில்லை. யாரும் சொல்லவில்லை. ஆனால், அது என் சொந்த யூகம். நடைபெறும் மற்ற சம்பவங்களைப் பார்த்தால்..." என்று கூறித் தன் தந்தையின் சோர்வுற்ற முகத்தை நோக்கினாள் மீன்விழியாள்.

அவர் வழக்கம்போல் வேறு ஏதோ சிந்தனையில் இருந்தார் என்பது தெரிந்தது.

"குழந்தாய்! அற்புதமான பாறைச் சரிவைக் கண்டுபிடித்து விட்டோம். மிக அடர்த்தியான பாறைகள். இந்த நற்செய்தியை நாம் உடனே சக்கரவர்த்திகளிடம் தெரிவிக்க வேண்டும்" என்று உற்சாகத்துடன் கூறினார். தொடர்ந்து, "மகளே! நீ அந்த இயற்கைச் சூழலைக் கண்டிருந்தாயானால் அதை விட்டு வரவே சம்மதித்திருக்க மாட்டாய். உயர்ந்த மரங்கள் நிறைந்த காட்டின் நடுவே அந்தக் குன்று இருக்கிறது. அருவியின் சலசலவென்ற ஓசை... கொடிய விலங்குகளும் அங்கே இருக்கும் என்று நினைக்கிறேன்... வெயிலின் கடுமையே தெரியவில்லை..." என்று வர்ணித்தவாறு நின்ற அவரை, மீன்விழியாளின் பேச்சு சுயநிலைக்குக் கொண்டு வந்தது.

"அப்பா, அப்பா! அதோ கேளுங்கள் முரசின் ஓசை. எக்காள சப்தம். வாழ்த்தொலிகள். சக்கரவர்த்தி வருகிறார் போலிருக்கிறதே!" என்று பரபரப்புடன் கூவி, ஒலி வந்த திக்கை நோக்கி ஓடினாள்.

புரவிகளின் மீது, ரிஷபக் கொடி பிடித்த வீரர்கள் கம்பீரமாக அமர்ந்து வந்தனர்.

அவர்களைத் தொடர்ந்து முரசு அறிவிப்போரும், எக்காளம் ஊதுவோரும் வந்தனர்.

அழகாக அலங்கரிக்கப்பட்டிருக்கும் ரிஷபக் கொடி பறக்கும் தேரில் பல்லவ சக்கரவர்த்தி அபராஜிதவர்மன் வந்து கொண்டிருந்தார்.

சிற்பிக்கு ஒரு கணநேரம் என்ன செய்வதென்று புரியவில்லை. திடீரென்று வருகை தரும் மாமன்னரை எவ்வாறு வரவேற்பது என்று தெரியாமல் இங்குமங்கும் சென்றார். அவர் உதடுகள் மந்திரங்களை உச்சரித்துக் கொண்டிருந்தன.

அபராஜித வர்மனை வரவேற்க, சிற்பி தலைவாசலுக்கு ஓடினார். மூங்கிலால் அமைக்கப்பட்டிருந்த கதவைத் திறந்தார்.

"வரவேண்டும், வரவேண்டும் [illegible] சக்கரவர்த்திகளே! வர வேண்டும். த[illegible] வருகை[illegible] இ[illegible]



01 09 2012

பூமி புனிதமடைகிறது. சாதாரணப் பாறைகளும் உயிர் கொண்டு பிரகாசிக்கப் போகின்றன!'' என்று பலபல கூறி வரவேற்றார்.

அபராஜிதனின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. இடக் கரத்தை இடையில் வைத்துக்கொண்டு, வலக்கரத்தை தன்னை வணங்குபவர்களுக்கு ஆசி கூறும் நிலையில் உயர்த்தி, ''சிவநாதரே! நலமாயிருக்கிறீர்களா?'' என்று கேட்டார்.

மீன்விழியாள் மெல்ல தந்தையின் அருகே வந்து அவருடைய தோள்களைப் பிடித்துக்கொண்டு நின்று அபராஜிதனைப் பாதாதி கேசம் தன் விழிகளால் பார்த்தும் பார்க்காதது போல் நோக்கினாள்.

கம்பீரமான தோற்றம். தோட்டத்தில் பழுத்துக் குலுங்கும் எலுமிச்சையைப் பார்த்திருக்கிறாள். அந்தக் கனியின் நிறம் அரசருடைய மேனி வண்ணத்துக்கு ஈடாகுமா? சிற்பிகள் பிளந்திருக்கும் பாறைகளைப் பார்த்திருக்கிறாள். அவற்றைப் பார்க்கும்போது, மாமன்னரின் பரந்த மார்பகம்தான் நினைவிற்கு வரும். இப்போது அவள் மிக அருகே நேருக்கு நேர் பார்க்கிறாள். அந்த மார்பின் திண்மைதான் என்ன?

தந்தையுடன் மாமல்லபுரம் சென்றிருக்கிறாள். பல நாள்கள் தங்கியிருக்கிறாள். ஐந்து கோயில் தொகுதியில் மாமல்லரது சிற்பத்தை அவருடைய தந்தை சுட்டிக் காட்டியிருக்கிறார்.

மாமல்லரது மறு பிறவியோ எனும்படி இதோ கம்பீரமாக நிற்கிறாரே, அபராஜிதவர்மர். ஆகா! அவரது வடிவழகின் நேர்த்திதான் என்ன, அகன்ற முகமும், கூர்மையான நாசியும், புதுத்தாமரை போன்ற விழிகளும், ஆகா, சவுந்தர்ய வடிவுடைய சக்கரவர்த்தி அபராஜிதனை மணந்திருக்கும் மாதேவி பாக்கியசாலிதான். மீன்விழியாளின் சிந்தனை பெருமூச்சாக வெளிவந்தது. அவளுடைய மார்பகங்கள் உயர்ந்து தணிந்தன. அபராஜிதன் தன்னை நோக்கி ஏதோ கேட்கிறார் என்பதை இப்போதுதான் உணர்ந்தாள் மீன்விழி. தனது எண்ணக் கொடியை எங்கோ படரவிட்டு விட்டோமே என்று நாணமுற்றாள்.

''குழந்தாய்! சக்கரவர்த்தி ஏதோ கேட்கிறாரே... ஏனம்மா மவுனமாகிவிட்டாய்? சற்று முன்புகூட சக்கரவர்த்தியிடம் சொல்ல வேண்டும் என்று ஏதேதோ என்னிடம் கூறிய வாறிருந்தாயே?'' என்ற தந்தையின் குரல் கேட்டுத் திடுக்கிட்டாள்.

அபராஜிதன் இதழ்களில் மெல்லிய புன்னகை இழை யோடியது.



''மீன்விழியாளுடைய விழிகள் குவிந்திருக்கும் நிலையை இன்றுதான் கண்டேன், சிற்பியாரே! நீண்ட நாட்களாகத் தங்களை ஒன்று கேட்க வேணடுமென்று நான் நினைத்ததுண்டு. தங்கள் மகளுடைய பெயரே மீன்விழியாள்தானா? அல்லது அவளுடைய விழிகளைப் பார்த்து நீங்கள் பெயரைச் சூட்டி விட்டீர்களா?'' என்று கேட்டு மீன்விழியாளை நோக்கியவாறு கலகலவென நகைத்தார்.

மீன்விழியாள் தன் கரங்களால் முகத்தைப் புதைத்துக் கொண்டு, விரல் இடுக்குகளின் வழியாக அரசரை நோக்கினாள். இன்று அரசர் தன்னைக் குறித்து வினவுவதன் காரணம் என்ன என்று யோசிக்கலானாள்.

சிற்பியாரும் மெல்ல நகைத்தவாறு, ''மீன்விழியாள் மதுரையில் பிறந்தாள். மதுரையைக் காத்து ரட்சிக்கும் அன்னை மீனாட்சியின் திருப்பெயரை இவளுக்குச் சூட்டியவள் இவள் அன்னை. விழிகளும் துள்ளும் மீனை நினைவுபடுத்துவதுடன், தேவலோகம் சென்றுவிட்ட இவளுடைய தாயையும் நினைவு படுத்துகின்றன'' என்றார், நகை முகத்தில் சிறிய சோகம்.

''ஓ! தாங்கள் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவரா?'' என்று அபராஜிதன் கேட்டார்.

''கலைக்குத் தனியே நாடு, ஊர் ஏது? எங்கே ஆதரவிருக்கிறதோ அங்கே வளர்கிறது. பாண்டியர்களும், சோழர்களும் சிற்பக் கலையை மறந்துவிட்டனர். மகேந்திர சக்கரவர்த்தி காலத்திலிருந்து பல்லவ நாட்டில் சிற்பிகள் மிக சௌக்கியமாக வாழ்கிறார்கள்...'' என்று சிற்பி கூறும்போது, அபராஜிதன் பெருமூச்சு விட்டார்.

''மகேந்திர சக்கரவர்த்தியைப் போலும் ராஜசிம்ம சக்கரவர்த்தியைப் போலும் சிற்பக் கலைத் திறமை நிறைந்த கோயில்களைக் கட்ட வேண்டும் என்று நான் கனவு கண்டு வருகிறேன். கனவு கனவாகத்தான் போய்விடுமோ என்ற அச்சம் சில நாள்களாக என் உள்ளத்தில் நிழலாடுகிறது சிவநாதரே...'' என்று அபராஜிதன் மெல்லிய குரலில் கூறினார்.

அபராஜிதனின் சோர்வு எண்ணங்களை மாற்ற விரும்பிய சிற்பி சிவநாதன், ''சக்கரவர்த்தி அவர்களே! திடீரென்று தங்களுக்கு ஏன் கவலை ஏற்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. பல்லவ நாடு முழுவதும் புதிய வடிவமைப்பில் கோயில்கள் கட்டத் திட்டமிட்டிருப்பதை மறந்துவிட்டீர்களா?'' என்றார்.

01 09 2012

''மறக்கவில்லை. அரிசிலாற்றங்கரையில் சோழ இளவரசர் ஆதித்தனுக்கு உதவியாகப் பாண்டியர்களை எதிர்த்துப் பெரும்போர் நடத்திய பிறகு என் மனமே மாறிவிட்டது...'' என்று அபராஜிதன் கூறும்போது சிற்பி குறுக்கிட்டார்.

''உங்கள் மனமாற்றத்தை நான் உணர்ந்தேன். காவிரிக் கரைப் பகுதிகளைச் சோழர்களுக்குத் திருப்பி அளித்துவிட்ட உங்கள் பெருந்தன்மையை நான் என்னவென்று சொல்வது?'' என்றார்.

''ஆமாம். காஞ்சியிலிருந்து தெற்கே வெகுதூரம் நாட்டை ஆள்வது கடினமான செயல் என்று புரிந்து கொண்டேன். விஜயாலய சோழர் மாவீரர். அவரது புதல்வன் ஆதித்தன் பல இலட்சியங்களைக் கொண்டிருப்பவன் என்பதைப் புரிந்து கொண்டுவிட்டேன். பாண்டியர்களின் தாக்குதல் ஏற்படும் என்ற கவலை சோழர்களுக்கு இனி இல்லை. நமக்கும் யுத்த பயமில்லை. இனி சிற்பக் கோயில்கள் அமைப்பதில் கவனம் செலுத்தலாம்'' என்றார் அபராஜிதன்.

சிற்பி தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''சக்கரவர்த்தி அவர்களே! அப்படியென்றால் நான் கேள்விப்பட்டது சரியில்லை போலிருக்கிறது...'' என்றார். மிகவும் மரியாதையும், அச்சமும் சேர்ந்த குரலில்.

அபராஜிதன் விழிகளைச் சுழலவிட்டு, ''சிற்பியாரே, என்ன கேள்விப்பட்டீர்கள்?'' என்று கேட்டார்.

''சிற்றுளிகள் கூர்மையாக்கப்படும் வேலை மிக மெதுவாக நடக்கின்றதாம். போர் வீரர்களின் நடமாட்டம் அதிகமாக இருக்கிறதாம். படைகளுக்குக் கிராமப் பகுதிகளிலிருந்து ஆட்களைச் சேர்க்கிறார்களாம். மீண்டும் யுத்தம் ஏதேனும் வரப் போகிறதா? பாண்டியர்கள் படுத்துவிட்டார்கள். சோழர்கள் நமது நண்பர்கள்...'' என்று சொல்லிக்கொண்டே போன சிற்பியின் பேச்சில் குறுக்கிட்ட அரசர், ''சோழர்கள் நமக்குக் கப்பம் கட்டும் சிற்றரசர்கள். நண்பர்களாயிருக்கும் வரை சிற்றரசர்கள். நட்பு மாறினால் நாடிழந்த அரசர்கள்!'' என்று கூறி நகைத்த அபராஜிதன், ''சிவநாதரே! அரசியல் விவகாரங்கள் கலைஞர்களுக்கு எதற்கு? கவலை தரும். கருத்தைச் சிதற அடிக்கும் ராஜீயப் பிரச்னைகளை எங்களிடம் விட்டு விடுங்கள்... உம்... இவ்வளவு விஷயங்களைத் தாங்கள் எப்படி அறிந்தீர்கள்?'' என்று கேட்டார்.

மீன்விழியாள் குறுக்கிட்டு, நாட்டு நடப்பை நான்தான் சொன்னேன்'' என்றாள்.



''நீ சத்திரத்திலிருந்து எப்போது வந்தாய் மீன்விழி'' என்று கேட்டார் அரசர்.

''இன்று காலையில்தான் வந்தேன். நேற்றுப் பகலே வந்திருக்க வேண்டும்...'' என்று கூறி சற்றே நிறுத்திய மீன்விழியாளைப் பார்த்து அபராஜிதன், ''சத்திரத்தில் சிறு குழப்பம் நேர்ந்து விட்டதாமே?'' என்று கேட்டார்.

''ஆமாம். இரண்டு குதிரைகள் களவாடப்பட்டன...'' என்றாள்.

''அது மட்டுமா?''

''விடேல் விடுகு இலச்சினையையும் அபகரித்துச் சென்று விட்டார்கள்.''

''எனக்குக் கிடைக்கும் செய்திகள் உண்மையானவை என்பதைச் சத்திரத்துச் சம்பவம் உறுதிப்படுத்துகின்றன. சோழ நாட்டிலிருந்தும், கங்க நாட்டிலிருந்தும் ஒற்றர்கள் பல்லவ நாட்டிற்குள் வந்திருக்கிறார்களாம்.''

''என் கணிப்பும் சரிதான்'' என்றாள் மீன்விழி.

''நீ என்ன நினைத்தாய்?''

''சத்திரத்தில் தங்கியவர்கள் சோழநாட்டைச் சேர்ந்தவர்கள் என்று முடிவு செய்துகொண்டேன்.''

''சந்தேகப்படவில்லையா?''

''சோழ நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதால்தான் சந்தேகப் படவில்லை. ஆனால்...''

''சொல்லு மீன்விழி...!''

''அவர்கள் சோழ நாட்டின் வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள முக்கியமானவர்கள். திருக்காளத்தி நகரிலிருந்த நாட்டியப் பெண்ணை சோழ நாட்டிற்கு வருமாறு அழைத்தார்கள். அவளும் நம்பிவிட்டாள்.''

''ஆம். சோழர்கள் கலை வளர்ச்சியில் கவனஞ் செலுத்து கிறார்கள். சோழ இளவரசர் ஆதித்தன் பல்லவ நாட்டிலிருந்து கலைக் குடும்பங்களைத் தஞ்சைக்கு வரவழைக்க ஏற்பாடு செய்கிறாராம்.''

''அவர்களும் கலை வளர்ப்பதால் கலைக்குத்தான் யோகம்.''

''நமது நாட்டுக் கலை முன்னேற்றம் அதனால் தடைப்பட்டுவிடக் கூடாதே... இ[illegible]

நடன மகளிரையும், சிற்பிகளையும் அவர்கள் அழைத்துச் சென்றுவிட்டால்...?'' என்று அபராஜிதன் கவலை நிறைந்த குரலுடன் கூறிச் சற்று நிறுத்தினான்.

''சக்கரவர்த்தி அவர்களே! சிற்பிகளை அவர்கள் அழைத்துச் சென்றுவிட முடியாது...'' என்று மீன்விழி மெல்ல நகைத்தவாறு கூறினாள்.

''அதெப்படி உறுதியாகக் கூறுகிறாய்?'' என்று அபராஜிதன் கேட்டான்.

''என் தந்தையைவிட்டு சிற்பிகள் வேறு எங்கும் சென்றுவிட மாட்டார்கள்!''

''ஏன்...?''

''ஒருநாள்கூட என்னைக் காணாமல் சிற்பிகளால் இருக்க முடியாது. என்னை முன்மாதிரியாக அவர்கள் கொண்டு வரி வடிவங்களைத் தீட்டுகிறார்கள்.''

''ஓ! எல்லாச் சிற்பங்களின் விழிகளும் மீன் போலிருக்கும்'' என்று அபராஜிதன் கூறி நகைத்தபோது, மீன்விழியாள் முகத்தில் செம்மை படர மெல்ல நகைத்தாள்.

அப்போது சிவநாதன் குறுக்கிட்டார். ''மகிழ்ச்சிகரமான செய்தியைத் தாங்கள் வந்தவுடனேயே சொல்ல வேண்டும் என்று நான் நினைத்தேன். நமது சிற்பப் பணி வெற்றியடைவது உறுதி'' என்றார்.

''நமது எண்ணப்படி கோயில்கள் கட்டுவதற்குப் பாறைகளைத் தேர்ந்தெடுத்து விட்டீர்களா?'' என்று கேட்டார் அபராஜிதன்.

''பாறைகள் கிடைத்துவிட்டன.''

''அப்படியா? பாறைகளை வெட்டும் வேலையை உடனே தொடங்குங்கள். போதுமான பணியாளர்களை நியமித்துக் கொள்ளுங்கள். உங்கள் உதவிக்கு வீரர்கள் சிலரையும் அனுப்பி வைக்கிறேன்'' என்று கூறிய அபராஜிதவர்மன், ''நான் சிற்பக் கூடத்தைச் சுற்றிப் பார்க்கலாமா?'' என்று கேட்டார்.

சக்கரவர்த்தி வந்திருக்கிறார் என்பதறிந்த சிற்பிகள், தத்தமது இடத்திற்குச் சென்று, பணிகளில் கவனமாய் ஈடுபட்டவாறிருந்தார்கள். சிற்பி சிவநாதன், மன்னர் அபராஜிதனை அழைத்துக்கொண்டு சிற்பப் பணிகள் நடக்கும் ஒவ்வோர் இடத்திற்கும் சென்று விளக்கினார்.



சிற்பிகள் இருக்குமிடத்தைச் சக்கரவர்த்தி காண வருகிறார் என்று மீன்விழியாள் முன்பாகவே அறிவித்துச் சென்றாள்.

அந்தச் சிற்பக்கூடம் மரங்கள் நிறைந்த இடத்தில் இருந்தது. நடுவே ஒரு குடில். பாறைகள் வெகு தூரத்திற்கு வெகு தூரம் பரவி இருந்தன. சிற்பிகள் அமைதியாகத் தங்கள் பணியில் ஈடுபட்டிருந்தார்கள். சிற்பிகள் ஒவ்வொருவரையும் மீன்விழியாள் நன்றாய் அறிவாள். இளைஞர்களும், முதியவர்களும் நிறைந்த சிற்பிகள் கூட்டத்தில் மீன்விழியாள் வந்துவிட்டாள் என்றால் அவர்களுக்கு உற்சாகம் தாங்காது.

மீன்விழி, பெரிய பாறையின் அருகே வரும்போது, சிற்பி ஒருவன் குனிந்த தலையுடன் ஏதோ செய்வது போன்ற பாவனையில் முகத்தைக் காட்டாது முதுகைப் புலப்படுத்திய வாறு உட்கார்ந்திருப்பதைக் கண்டாள்.

''யாரது, சுந்தரமூர்த்தியா? ஏன் சும்மா உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்? அதோ சக்கரவர்த்தி வந்து கொண்டிருக்கிறார்'' என்று கூறியவாறு அவன் அருகில் சென்றாள்.

பாறையின் அருகே ஒன்றுமே செய்யாது உட்கார்ந்து கொண்டிருந்த அந்தச் சிற்பி மெல்லத் திரும்பினான்.

''ஆ!'' என்று மீன்விழியாள் கூவிவிட்டாள்.

தலைப்பாகையில் விடேல் விடுகு சின்னம் பளிச்சிட, ஆதித்தன் அருகே உட்கார்ந்து கொண்டிருந்தான்.

அவன் உதடுகளில் குறும்புச் சிரிப்பு நெளிந்தது. தான் ஒரு தர்மசங்கடமான நிலையில் இருப்பதையும் உணர்ந்தான் ஆதித்தன்.

மீன்விழி அவனிடம் ஏதும் பேசவில்லை. அவனை அறிந்தவள்போல் காட்டிக் கொள்ளவுமில்லை.

உடனே சக்கரவர்த்தியிடம் தெரிவிக்க வேண்டும் என்று எண்ணினாள்.

குதிரையைத் திருடியவன் இதோ இங்கே இருக்கிறான் என்பதைச் சொல்ல வேண்டும் என்று எண்ணினாள்.

சற்றுத் தொலைவில், சிற்பம் ஒன்றைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த அபராஜிதனை நோக்கி மீன்விழியாள் விரைந்தாள்.

○



01 09 20

## 5. சிரிப்பும் சிந்தனையும்

பல்லவ சக்கரவர்த்தி அபராஜிதவர்மனிடம் ஓடோடிச் சென்று சோழநாட்டிலிருந்து வந்திருக்கும் வழிப்போக்கன் குதிரையைத் திருடிக்கொண்டு ஓடிச் சென்றவன், இங்கேதான் இருக்கிறான் என்று சொல்ல முற்பட்ட மீன்விழியாள், அவரருகே சென்றவுடன் சற்று நிதானித்தாள்.

அபராஜிதன், சிற்பியிடம் பேசிக் கொண்டிருந்தார். அவன் முகத்தில் புதிய உற்சாகம் மிளிர்ந்தது.

''தங்களுடைய மாணவர்கள் மிகவும் சுறுசுறுப்பாகப் பணியாற்றுகிறார்கள்'' என்றார் அபராஜிதன். சிற்பியின் முகத்தில் பாராட்டுரையால் ஏற்பட்ட பெருமை பொங்கி நின்றது.

''சிற்பிகளுக்குப் போதுமான உணவு வகைகள் இங்கே கிடைக்கின்றனவா?'' என்று கேட்டார். ''அவர்களுடைய குடும்பங்கள் எல்லாம் எங்கிருக்கின்றன? குடும்பங்கள் கவலைப்படாமல் வாழ்கின்றனவா?'' என்று கேட்டார் மன்னர்.

சிற்பிக்கு அரசரிடம் மதிப்பும் மரியாதையும் உயர்ந்தன. அவர் பேச முற்படுவதற்குள் அபராஜிதனே பேசினார்.

''சிவநாதரே! போர் வீரர்களுடைய நலன்களைவிட பல மடங்கு சிற்பிகளின் நலன்தான் எப்போதும் என் நினைவில் இருந்து கொண்டிருக்கிறது. மீண்டும் பொற்காலம் உதயமாக வேண்டும். பல்லவ நாடெங்கும் கோயில்கள் கட்டப்பட வேண்டும். கோயிலில் சிற்பக் கலைஞர்களின் திறமை ஒளி வீச வேண்டும்... அதுவே என் இலட்சியம், அதுவே என் கனவு...'' என்றார்.

சிற்பி உணர்ச்சி வயப்பட்டார். ''தங்கள் இலட்சியமே என் கனவு... என் மாணவர்கள் கலைக்காகவே வாழ்கிறார்கள். புதிய புதிய இளைஞர்கள் சிற்பம் பயில வருகிறார்கள். பலபல ஊர்களிலிருந்து வருகிறார்கள். புதிய விழிப்பு ஏற்பட்டு வருகிறது. சிற்பக் கோயில்கள் அமைப்பதற்கேற்ற பாறைகள் கிடைத்து விட்டன'' என்று பேசிக்கொண்டே போனார்.



அபராஜிதன் குறுக்கிட்டான். ''சிற்பி அவர்களே! பாறைகளை எப்படி பிளக்கப் போகிறீர்கள்? அவற்றை எப்படி கொண்டுவரப் போகிறீர்கள்? உதவிக்கு வீரர்களைப் பயன் படுத்திக் கொள்ளுங்கள்'' என்றார்.

சிற்பி ஏதோ கூற முற்பட்டார்.

''சொல்லுங்கள், சிற்பியாரே!''

''நான் கேள்விப்படுவது உண்மையா? மறுபடியும் போரொன்று வரப் போகிறதாமே?''

இதைக்கேட்ட அபராஜிதன் உடனே ஏதும் பேசவில்லை. பிறகு மெல்லிய குரலில், ''போரைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் யுத்தத்தை விரும்புபவன் அல்லன். மற்ற நாட்டின்மீது படையெடுத்துச் சென்று அந்த நாடுகளை நம்நாட்டுடன் சேர்க்க வேண்டும் என்ற ஆசை எனக்கில்லை. ஆனால், நமது பூமியைக் கவர வருபவர்களைத் தடுக்க வேண்டாமா? அதற்கு முன் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்'' என்றார்.

சிவநாதன், அதற்குப் பிறகு ஏதும் பேசவில்லை. மீன் விழியாள் செவியில் இந்த உரையாடல் விழவில்லை. அரசரும், தந்தையும் ஏதோ முக்கிய உரையாடலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று எண்ணி மீண்டும் திரும்பினாள். ஆனால் சக்கரவர்த்தி யிடம், சோழநாட்டவன் இதோ இங்கேயே இருக்கிறான் என்பதை உடனே சொல்ல வேண்டாம் என்றெண்ணினாள். அவனைச் சந்தித்துப் பேச வேண்டும் என்ற அவா அவள் உள்ளத்திலெழுந்தது. அந்த எண்ணம் திடீரென்று அவளிடம் பிறந்தது என்று சொல்ல முடியாது. முதல் நாள் பார்த்த வுடனேயே தோன்றிவிட்டது.

ஆதித்தன் இருக்குமிடம் நோக்கி அவள் விரைந்து வந்தாள்.

அங்கே ஆதித்தனைக் காணவில்லை. மீன்விழியாள் திடுக்கிட்டாள். ''இப்போதுதானே பார்த்தோம். இங்கேதானே இருந்தார்?'' என்று எண்ணியவாறு பரபரப்புடன் இங்குமங்கும் நோக்கினாள்.

''மீன்விழி, என்ன தேடுகிறாய்?'' என்று சற்று வயதான சிற்பி கேட்டார்.

அவள் என்னவென்று சொல்லுவாள்? தான் பார்த்தது உண்மையில் அவர்தானா? அவரேதான். அந்தக் கண்களை மறக்க முடியவில்லையே.

01 09 201

மற்றும் ஓர் இளம் சிற்பி அப்பொழுது அங்கு வந்தான். மீன்விழியாளுடன் பேசுவதற்கு அவனுக்கு நெடுநாள்களாக ஆசை.

''யாரைத் தேடுகிறீர்கள்?'' என்று கேட்டான்.

மீன்விழி அவனை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தாள். அவளுக்குச் சற்றே எரிச்சல் ஏற்பட்டது.

''நான் தேடுபவரை உன்னால் கண்டுபிடித்துத் தர முடியுமா?'' என்று கேட்கும்போது அவளுடைய குரலில் சற்றுக் கடுமை இருந்ததை அவன் கவனித்தான். அத்துடன் அவள் ஏக வசனத்தில் அழைக்கிறாள்.

''யாராவது காணாமல் போய்விட்டார்களா?'' என்று மெல்லக் கேட்டான்.

''இங்கு ஒரு சிற்பி இருந்தாரே? சிறிது நேரத்திற்கு முன்புவரை இருந்தார்... அவர் எங்கே?'' என்று அவள் கேட்டாள்.

''சிற்பியா? என்ன வயதிருக்கும்?'' என்று கேட்டான் இளஞ்சிற்பி.

''வயதா? உன் பாட்டனார் வயதிருக்கும்'' என்று கடிந்துகொண்ட மீன்விழியைப் பார்த்து, ''ஓ, என் பாட்டனாரா? இதோ அழைத்து வருகிறேன்'' என்று கூறி அவன் சென்றான்.

மீன்விழி மீண்டும் தேடினாள். யாரைக் கேட்பாள்? அவள் ஆதித்தனைப் பார்த்த இடமோ, மற்றவர் பணி செய்யுமிடத்திலிருந்து சற்றுத் தள்ளியிருந்தது.

'அவர் எங்கே சென்றிருப்பார்? நான் பார்த்துவிட்டது அவருக்குத் தெரிந்திருக்குமோ? ஏன் இப்படி ஓடி ஒளிய வேண்டும். அவர் மிகவும் தைரியமுடையவராய் இருக்க வேண்டும். இல்லாவிடில் குதிரைகளை அபகரித்து வந்ததுடன், விடேல் விடுகு சின்னத்தையும் மிகத் துணிவுடன் தலைப் பாகையில் அணிந்திருக்கிறாரே...'

ஒருவேளை பல்லவ சக்கரவர்த்திக்கு மிகவும் அறிமுகமானவராக இருக்கலாம். சக்கரவர்த்தியிடம் சோழநாட்டவரைக் குறித்துத் தெரிவிக்கச் சென்ற நாம், ஏன் சக்கரவர்த்தியிடம் ஒன்றுமே கூறாமல் திரும்பிவிட்டோம்? ஏன்? அவளுக்கே காரணம் புரியவில்லை.



மீன்விழி திகைத்தவாறு இங்குமங்கும் பார்த்தவாறு நின்றபோது, ஆதித்தன் அடர்ந்த புதரும் பாறையும் நிறைந்த இடத்தில் மறைந்து உட்கார்ந்து கொண்டிருந்தான். பசி அவனிடம் அப்போது பெரும் புரட்சியை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. அமைதியாகச் சிந்திக்க அவனுக்குச் சிறிது ஓய்விருந்தது என்று கூறலாம்.

சத்திரத்திலிருந்து குதிரையை அபகரித்துக் கொண்டு விரைந்ததும், குன்றின் உச்சிக்குச் சென்று இறங்கியவுடன் குதிரைகள் காணாமற் போனதும், ஒற்றையடிப் பாதை வழியே சென்றபோது அருவிக் கரையில் நீராடும் அழகியைக் கண்டதும், விக்கியண்ணன் மடுவில் குதித்ததும் ஏதோ கனவுபோல் தோன்றின.

தஞ்சையினின்றும் புறப்பட்டு வந்து, பல்லவ நாட்டில் இவ்வாறு ஒருவரும் அறியாது உலவுவது அவசியம்தானா என்று எண்ணினான்.

பல்லவ நாட்டின் முன்னேற்றத்தையும் அங்கு நடப்பனவற்றையும் தஞ்சையிலிருந்தவாறே அறிந்திருக்க முடியாதா என்றுகூட அவனுக்குத் தோன்றியது. சோழ நாட்டு ஒற்றர் படை, பலத்துடன் அமையாதது ஒரு காரணமாயிருந்தாலும், தானே நேரே காணும் அனுபவங்கள் அவனுக்கு வீர சாகசங்களாகத் தோன்றின. அவன் சற்று முன்பு நிகழ்ந்ததை எண்ணிச் சற்றுச் சிரித்துக் கொண்டான்.

சிற்பி மகள் தன்னைக் கண்டவுடன், ஓடோடிச் சென்று அபராஜிதனிடம் கூறியிருப்பாள்... மீண்டும் ஆதித்தன் மெல்லச் சிரித்துக் கொண்டான்.

அபராஜிதன் அங்கு வருவான் என்று ஆதித்தன் எதிர்பார்க்கவில்லை. இதுபோல் அங்கிருந்து ஓடிவந்து ஒளிந்து கொள்ளாமல் அபராஜிதனை நேருக்கு நேர் சந்தித்திருந்தால்... வேடிக்கையாகத்தான் இருந்திருக்கும். அபராஜிதன் ஒருகணம் என்னை அடையாளம் புரிந்து கொண்டிருந்தால்... இதை நினைக்கும்போது ஆதித்தனால் சிரித்துக் கொண்டிருக்க முடியவில்லை. சோழ நாட்டு இளவரசர் இப்படி மறைந்து மறைந்து பல்லவ நாட்டில் சுற்றுப்பயணம் செய்ய வேண்டிய காரணம் என்ன என்ற கேள்வி அபராஜிதனுக்குத் தோன்றும். விளைவுகள் எப்படியிருக்குமென்று சொல்ல முடியாது... ஆதித்தன் பெருமூச்சு விட்டான்.

அருவிக் கரையில் நடந்த சம்பவங்களை அவனால் மறக்க முடியவில்லை.

அருவிக்கரை மடுவில் விக்கியண்ணன் குதித்து நீந்தி அழகிய மங்கை நீராடும் இடம் வரை செல்வதை ஆதித்தன் பார்த்துக் கொண்டிருந்தான்.

மறுகணம் அவன் நிற்குமிடத்தின் அருகில் சலசலப்பு ஏற்பட்டதால் திரும்பிப் பார்த்தான். வீரர்கள் உருவிய வாளுடன் நின்று கொண்டிருந்தனர். ஒரு கணம் ஆதித்தன் அவர்களை நோக்கினான். நான்கு பக்கமும் அவர்கள் சூழ்ந்து கொண்டிருந்தனர்.

''யார் நீ?'' என்று வீரர்களுள் ஒருவன் அதிகாரத்துடன் கேட்டான்.

சோழ நாட்டின் வீர ரத்தம் பாயும் ஆதித்தனால் மரியாதைக் குறைவான வார்த்தையைச் சகித்துக் கொள்ள முடியவில்லை.

''நீங்கள் யார்?'' என்று கோபமாகக் கேட்டான்.

''அருவிக் கரையிலே யாரும் வரக்கூடாத இடத்தில் உனக்கு என்ன வேலை?'' என்றான் வீரன்.

''உங்களுக்கு என்ன வேலையோ, அதே வேலைதான் எனக்கும்'' என்று கூறிய ஆதித்தன் வாளை உருவினான். ''முதலில் சொல்லுங்கள், நீங்கள் யார்? உங்களை நான் பார்த்ததேயில்லையே?'' என்று சீறினான்.

''நாங்கள் மலைச்சாரல் மாளிகையில் தங்கியிருக்கும் இளவரசியின் படைவீரர்கள்'' என்றனர் வீரர்கள். ''பல்லவ வீரர்களல்லவா? அதனால்தான் என்னிடம் மரியாதையாகப் பேசத் தெரியவில்லை'' என்று ஆதித்தன் கூறினான்.

''பல்லவ வீரர்கள்தாம். காடவரையர்கள் பல்லவ நாட்டைச் சேர்ந்தவர்கள்தாம்'' என்றனர் அழுத்தந்திருத்தமாக வீரர்கள்.

ஆதித்தன் தன் தலைப்பாகையைச் சுட்டிக்காட்டி, ''தலைப்பாகையைப் பார்த்தீர்களா?'' என்று கேட்டான்.

''பார்த்தோம். புழுதி படிந்து அழுக்காக இருக்கிறது'' என்று ஒருவன் கூறியபோது மற்ற வீரர்கள் நகைத்தனர்.

ஆதித்தன் வாள் அவன் நெஞ்சுக்கு நேரே நீண்டது.



''நாளைக்கு நீங்கள் சுத்தப்படுத்தி வெளுத்துத் தரலாம். தலைப்பாகையில் உள்ள அடையாளத்தைப் பார்த்தீர்களா?'' என்று மிகவும் கோபமாகக் கேட்டான் ஆதித்தன்.

''அதைப் பார்த்த பிறகுதான் உங்கள் மீது சந்தேகம் வந்து நான் கேட்டேன்'' என்றான் ஒரு வீரன்.

''என்ன சந்தேகம்?''

''மறைவாக வைத்திருக்க வேண்டிய விடேல் விடுகு சின்னத்தை இப்படி பகிரங்கமாக அணிந்திருக்கிறீர்களே?''

வீரன் இப்படிக் கூறியவுடன் திடுக்கிட்டுத் தலைப் பாகையைத் தொட்டுப் பார்த்த ஆதித்தனை நோக்கி வீரர்களின் வாள்கள் நெருங்கின.

ஆதித்தன் ஒரு நொடியில் வாளைச் சுழற்றினான். 'கிணிங் கிணிங்' என்ற சப்தத்துடன் வீரர்களின் வாளுடன் வேகமாக மோதியதால் ஏற்பட்ட ஒலி அந்த மலைப்பகுதியில் எதிரொலித்தது.

சிலநொடிகள்தாம். ஒரு வீரனின் கையில் பலத்த காயம். ஒருவன் கீழே விழுந்தான். ஒருவன் உயிர் தப்பினோம், பிழைத்தோம் என்று மடுவில் குதித்தான். ஒருவன் கையெடுத்துக் கும்பிட்டு ஆதித்தனிடம் உயிருக்கு மன்றாடினான்.

''பிழைத்துப் போ! போகும்போது மலைச்சாரல் மாளிகைக்கு வழி சொல்லிவிட்டு ஓடு'' என்றான் கம்பீரமாக.

''மலைச்சாரல் மாளிகை அருவியின் மறு பக்கமிருக்கிறது. சுற்றிக் கொண்டு போக வேண்டும். இதோ இந்த ஒற்றையடிப் பாதை வழியாகவே செல்லுங்கள்'' என்று வழியைக் காட்டினான்.

மலைச்சாரல் மாளிகைக்குச் சென்றால், அங்கு எப்படியும் விக்கியண்ணனைச் சந்தித்துவிடலாம் என்ற எண்ணத்தில், ஒற்றையடிப் பாதை வழியாகச் சென்ற ஆதித்தன் சிறிது தொலைவு சென்றவுடன் சிற்பிகளைச் சிந்தித்தான். பாறைகளை வெட்டியும், தட்டியும் பார்த்துக் கொண்டிருந்த அவர்களில் ஒருவன் ஆதித்தனைப் பார்த்து, பல்லவ நாட்டவன் என்று எண்ணி, பாறை வெட்டும் கருவிகளை மூட்டையாகக் கட்டச் சொன்னான். சற்று முன்பு வந்திருந்தால் வயிறார உண்டிருக் கலாம். சிற்பிகளும் மற்ற பணியாளர்களும் உணவருந்திய அடையாளம் அங்கே தெரிந்தது.

சிற்பிகள் புறப்பட்டனர். மலைச்சாரல் மாளிகைக்குச் செல்ல முடியாமல் ஆதித்தன் தோள்களில் ஒரு மூட்டை ஏற்றப்பட்டது. சிற்பிகளோடு சிற்பிகளாகப் பணியாளன் போல் சுமந்து சிற்பக்கூடம் வந்தடைந்தான்.

அங்கேயோ மற்றோர் ஆபத்து சில கணங்களில் வந்து சேர்ந்தது. அபராஜிதன் சிற்பக்கூடத்துக்கு வந்திருப்பதை ஆதித்தன் கண்டான். சிற்பி மகள் தன்னைக் கண்டு விட்டதையும், இனி அங்கிருப்பது சரியில்லை என்பதை உணர்ந்து ஓடோடி வந்து பாறையின் மறைவில் உட்கார்ந்து கொண்டான். நடந்த சம்பவங்களை நினைத்தால் சிரிப்பு வராமல் என்ன செய்யும்?

பசியும், களைப்பும் அவனைச் சூழ்ந்தன. மெல்லிய காற்றும், பறவைகளின் கீதமும் அவன் விழிகளைச் சுழலச் செய்தன. விழிகளை மூடினான். துயில் அவனை ஆட் கொண்டது.

எவ்வளவு நேரம் அவன் தூங்கியிருப்பானோ தெரியாது. யாரோ அவன் எதிரே வந்து நிற்பதுபோல் தோன்றவே திடுக்கிட்டு விழித்துக் கொண்டான்.

சிற்பி மகள் மீன்விழி அவன் எதிரே நின்று கொண்டிருந்தாள்.

○



## 6. மலைச்சாரல் மாளிகை

அருவி பாயும் மடுவில் குதித்த விக்கியண்ணன் எதிர் நீச்சல் போட்டவாறு, அழகிய நங்கை நீராடும் இடம் நோக்கிச் சென்றான்.

கதிரொளியில், மீன் ஒன்று துள்ளிப் பாய்வது போல் அவள் நீந்தினாள். நீரில் அமிழ்ந்தாள். கடலிடை எழும் மதி போல் முகம் மட்டும் காட்டி வெளியே வந்தாள். அந்த மின்னல் கொடியாளை நோக்கியவாறு விக்கியண்ணன் நீந்தி அவள் நீராடும் இடத்தை அடைவதற்குள் அந்த எழில் நங்கையைக் காணவில்லை.

சுற்றுமுற்றும் பார்த்தான் விக்கியண்ணன். சற்றுத் தொலைவில், உயர்ந்திருந்த கரை மீது நின்றிருந்த ஆதித்தனைச் சில வீரர்கள் சூழ்ந்திருப்பதையும், ஆதித்தன் வாளெடுத்துச் சுழற்றுவதையும் மடுவிலிருந்தே நோக்கினான் விக்கியண்ணன்.

ஆதித்தனுக்கு ஆபத்து என்பதை ஒரு கணத்தில் உணர்ந்த விக்கியண்ணன், மீண்டும் திரும்பிச் சென்று ஆதித்தனுக்கு உதவலாமா என்று எண்ணினான். ஆனால், ஆதித்தன் நின்ற இடம் பெரும் பாறை. அதன் மீது ஏறச் சரியான வழியில்லை. என்ன செய்வது என்று திகைத்துக் கொண்டிருந்தபோதே, ஆதித்தன் தன்னை எதிர்த்த வீரர்களை முறியடித்து அவர்களைப் பின்தொடர்ந்து ஓடுவதையும் கண்டான்.

இந்தப் பக்கம் திரும்பி, அழகிய நங்கையையாவது காண்போம் என்றால் அந்த மின்னல் கொடியாள் கணத்தில் மறைந்துவிட்டாள். மடுக்கரையில் நீந்திக் கொண்டிருப்பதில் பயனில்லை என்று விக்கியண்ணன் கரை ஏறினான்.

அருவி நீரில் நீந்தியதால் உடலில் புதிய தெம்பு ஏற்பட்டிருந்தது. என்றாலும் ஆடை முழுவதும் நனைந்து விட்டதால் இலேசாக மேனி சிலிர்த்தது. இரு கைகளைக் கொண்டு மெய்யதைப் பொத்தி, சுற்றிலும் ஒருமுறை பார்த்து, 'கோதண்டராமா!' என்று குரல் கொடுத்தான்.



01 09 20

அந்த மலைச்சாரல் 'ராமா ராமா' என்று எதிரொலித்தது. திடீரென்று ஏற்பட்ட ஒலியால், புதருகே இருந்த முயலொன்று பரபரப்புடன் ஓடியது. இனிய குரல் கொடுத்துக் கொண்டிருந்த நாகணவாய்ப்புள் ஒன்று மௌனமாகியது. எங்கிருந்தோ மான் ஒன்று துள்ளி ஓடியது.

அடர்ந்த அக்கானகத்தின் அழகை ரசிக்கும் நிலையில் விக்கியண்ணன் இல்லை. ஈர ஆடையை உலர வைக்க வேண்டும். பிறகு அந்த அழகிய நங்கையைத் தேட வேண்டும். மிகவும் அவசரப்பட்டு, அருவியில் குதித்துவிட்டோமோ என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்.

சிறிது நேரம் முன்பு வரை நீந்திக்கொண்டிருந்த அவள் எங்கே சென்றிருப்பாள்? தண்ணீருக்குள் நீண்ட நேரம் மூச்சைப் பிடித்துக் கொண்டு இருக்க முடியாது. வெளியே வந்துதான் ஆக வேண்டும். அதற்குள் ஆதித்தனும் திரும்பி வந்துவிடலாம் என்று எண்ணியவனாக அருவிக் கரையிலேயே நின்று கொண்டிருந்தான்.

திடீரென ஓர் ஆடை அவன் முதுகின் மீது வந்து வீழ்ந்தது. புத்தம்புதிய துணி. விக்கியண்ணன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். அந்தத் துணியைக் கையில் ஏந்தித் திருப்பித் திருப்பிப் பார்த்தான். மரத்தை அண்ணாந்து நோக்கினான்.

''வானத்திலிருந்து அந்த வஸ்திரம் விழவில்லை. உடலைத் துவட்டிக் கொள்ளுங்கள். ஈர உடையுடன் எவ்வளவு நேரம் நிற்பீர்கள்?'' என்று ஒரு குரல் கேட்டது. குயில் பேசியதா? அல்லது வீணையின் ஸப்த ஸ்வரங்களும் சிலிர்த்து ஒலிக்கின்றனவா?

குரல் வந்த திசையை விக்கியண்ணன் பார்த்தான். பிறகு அந்தப் புத்தாடையை மெல்லப் பிரித்து, மேனியில் முத்துமுத்தாய் இருக்கும் நீரைத் துடைத்துக் கொண்டான். 'எங்கோ வந்தோம், ஏனோ அருவியில் குதித்தோம், யாரோ கொடுத்த புத்தாடையைப் பயன்படுத்துகிறோம். காலையிலிருந்தே விசித்திரமான அனுபவமாயிருக்கிறதே' என்று நினைத்தான்.

''தலையில் ஈரத்தைத் தங்க வைக்கக்கூடாது. இடுப்புத் துணியைப் பிழிந்து கொண்டு, இந்த உடையையும் உடுத்திக் கொள்ளுங்கள்'' என்று குரல் கேட்டது. குரலின் மதுரத்தை ரசிப்பதா, அல்லது அந்தக் குரலுக்குடையவளின் உதவியை, உபசரிப்பை ரசிப்பதா என்று புரியாமல் திகைத்தான்.



அவன் எதிரே அழகு தேவதைபோல் ஒயிலாக அவள் நடந்து வந்தாள். அவள் கூந்தல், தோளின்மேல் தவழ்ந்து இருந்தது. அவளுடைய முதுகுப் பகுதியை மறைத்துத் தொடை வரை தொங்கியது.

அவள் புதிய உடையைக் கையில் வைத்திருந்தாள். முழங்கால் வரை அவளுடைய பட்டாடை அசைந்தாடியது. அவனை நோக்கி அவள் உடையை வீசியதுதான் விக்கியண்ணனுக்குச் சம்மதமளிக்கவில்லை.

''நான் மறைவில் செல்கிறேன். உடையை உடுத்திக் கொள்ளுங்கள்'' என்று கூறிய அவளுடைய விழியின் கூர்மையை அவன் உற்று நோக்கியபோது, அவள் மேலாடையில்லாதிருப்பதைக் கண்டு திடுக்கிட்டான், திகைத்தான். விழிகளை மூடி திறப்பதற்குள் அவள் திரும்பி நடந்து மரத்தின் மறைவில் மறைந்தாள்.

விக்கியண்ணனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அவள் அங்கு நிற்பது உண்மை. எழில் மிகுந்த அணங்கைக் கண்டதும் உண்மை. அதோ அவள் இடை அசைய நடந்து செல்வதும் மிகமிக உண்மை.

''வரலாமா?'' அவளிடமிருந்து குரல் வந்தது. தன்னிலை உணர்ந்த விக்கியண்ணன் பரபரப்புடன் உடுத்திக் கொண்டான்.

இதோ அவள் வரப்போகிறாள். விக்கியண்ணன் எதிர்பார்த்து நின்றிருந்தான். என்னவென்று குரல் கொடுப்பது? அந்த மங்கை நல்லாளின் பெயர் தெரியவில்லை. பெண்ணே என்று அழைக்கலாமா? நன்றாக இருக்காது. நேரமாகிக் கொண்டிருக்கிறது. மடுக்கரையின் உச்சிப்பாறையை உற்று நோக்கினான். ஆதித்தன் வருகிறானா என்று பார்த்தான்.

அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. ஆதித்தனை அழைப்பது போல் உரத்த குரல் கொடுப்போம்.

''கோதண்டராமா, கோதண்டராமா'' என்று விக்கியண்ணன் குரலெழுப்பினான்.

'ராமா, ராமா' என்று மலைச்சாரல் எதிரொலித்தது. அவன் எதிர்பார்த்தது வீண் போகவில்லை.

எதிரொலிக்கு எதிரொலியாக சிரிப்பொலி மிக அருகே எழுந்தது.

''யாரது?'' - விக்கியண்ணன் சற்றுக் கடுமையான குரலில் கேட்டான்.

01 09 2

மரங்களின் மறைவிலிருந்து இரண்டு பெண்கள் வந்தார்கள். விக்கியண்ணனுக்கு ஒன்றும் புரியவில்லை. சற்று முன்பு வனராணி போல் தோன்றி மறைந்த பெண் எங்கே? இந்த வனத்திலே பெண்கள் கூட்டங் கூட்டமாக வாழ்கிறார்களா?

இரண்டு பெண்களும் அவன் அருகே வந்தனர். அவர்கள் முகத்தில் குறும்புச் சிரிப்பு இருந்தது. நடையிலே அலட்சியமிருந்தது. கரங்களில் பூங்கொத்தினை வைத்திருந்தார்கள்.

விக்கியண்ணனுக்குச் சீற்றம் பொங்கியது. அவனிடம் இப்போது உடைவாளும் இல்லை. மடுவில் குதிக்கும்போது வாளைக் கழற்றித் தரையில் எறிந்துவிட்டான். அவனையறியாமல் அவன் கரம் இடையருகே சென்றது.

''யார் நீங்கள்?'' என்று விக்கியண்ணன் பொங்கினான், அந்தப் பெண்கள் கோபங் கொள்ளவில்லை. மெல்லச் சிரித்தார்கள்.

''நாங்கள் கேட்கவேண்டிய கேள்வி'' என்றாள் வயதில் இளையவளாயிருந்தவள்.

''என்ன கேட்கப் போகிறீர்கள்?'' விக்கியண்ணன் குரலில் கடுமை இருந்தது.

''யார் நீங்கள்?'' என்று கேட்டாள் மற்றவள்.

''நான்தான் முதலில் கேட்டேன். திடீரென்று வந்த நீங்கள் யார்?'' விக்கியண்ணன் சளைக்கவில்லை. ஆதித்தன் உருவம் தெரிகிறதா என்று திரும்பிப் பார்த்தவாறு கேட்டான்.

''முதலில் கேட்டதால், நாங்கள் முதலில் மறுமொழி சொல்ல வேண்டியதில்லை. உத்தரவின்றி வந்துவிட்டு எங்களையே கேள்வி கேட்கும் நீங்கள் யார்?'' என்று இளையவள் கேட்டாள்.

''உத்தரவா, யார் உத்தரவு?''

''உங்களுக்குத் தெரியாதா? இந்தப் பகுதி எங்கள் இளவரசிக்குச் சொந்தமானது.''

''இளவரசிக்குச் சொந்தமானதா? அபராஜிதவர்மனுக்கு உரிய நாடென்று நினைத்தேன். நீங்கள் வேறுவிதமாகச் சொல்கிறீர்களே!'' என்று கேட்கும்போது விக்கியண்ணன் குரலில் கடுமை குறைந்தது.

''எங்கள் இளவரசியைத் தவிர எங்களுக்கு வேறு ஒருவரையும் தெரியாது. உங்களுக்குத் தெரிந்துகொள்ள



ஆவலிருந்தால் இளவரசியிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்'' என்றாள் இளையவள்.

''உங்கள் இளவரசி எங்கே இருக்கிறார்?''

''அருவிக்கரை மாளிகையில்.''

''அருவிக்கரை மாளிகை எங்கே இருக்கிறது?''

''உங்களை அழைத்துச் செல்லத்தானே நாங்கள் இங்கே வந்திருக்கிறோம்?''

''யார் அழைத்து வரச் சொன்னார்கள்?''

''மாளிகையின் அதிகாரி. இந்தப் பகுதியில் அந்நியர் யாரும் பிரவேசிக்கக்கூடாது. நீங்கள் உத்தரவின்றி நுழைந்ததால், உங்களுக்குத் தண்டனை தர அழைத்து வரச் சொன்னார்.''

இதைக்கேட்ட விக்கியண்ணன் அலட்சியமாகச் சிரித்தானே தவிர, அவனுள்ளத்தில் ஒருவிதச் சோர்வு ஏற்பட்டது. கங்க நாட்டு இளவரசரான விக்கியண்ணன் ஆதித்தனுக்கு நெருங்கிய நண்பனானதால், பல்லவ நாட்டைச் சுற்றிப் பார்க்க வரச் சம்மதித்தான். அவ்வாறு வந்ததனால் ஏற்படும் திடுக்கிடும் சம்பவங்களை வீரன் என்ற முறையில் சந்திக்கச் சித்தமாக இருந்தாலும் பெண்கள் அழைத்துச் செல்வது கௌரவக் குறைவாகத் தோன்றியது. அருவியில் நீந்திய அழகி, தனக்கு ஆடை அளித்துவிட்டு எங்கு சென்றுவிட்டாள் என்பதும் அவனுக்குப் புரியாத மர்மமாயிருந்தது. ஆதித்தனைக் காணவில்லை. அவனுக்கு என்ன நேர்ந்ததோ - எப்போது சந்திக்க முடியுமோ என்ற கவலைகளும் அவன் மனத்திலெழுந்தன.

மீண்டும் மடுவில் குதித்து நீந்தி மறுகரைக்குச் சென்றுவிட்டாலென்ன என்று எண்ணினான்.

''ஐயா! மீண்டும் இந்த அருவியில் குதித்து நீந்தி எதிர்க்கரைக்குச் சென்றுவிடலாம் என்று நீங்கள் நினைக்காதீர்கள்'' என்றாள் இளையவள்.

விக்கியண்ணனுக்கு ஏற்பட்ட கோபத்திற்கு அளவில்லை. ''என் வாளை அங்கே வைத்துவிட்டேன். இல்லாவிடில் இப்படிச் சொல்லிய உங்களிடம் நான் இலட்சுமணனாக மாறிவிடுவேன்'' என்று சீறினான்.

பெண்கள் கோபப்படவில்லை. நகைத்தார்கள். ''இலக்குமணன், நாக்கை அறுத்ததாகக் கேள்விப்படவில்லை நாங்கள்.



01 09 2

அத்துடன் நிராயுதபாணியாக உள்ளவர்களைத் தாக்கும் வழக்கமும் எங்களிடமில்லை. தப்பிச் செல்ல முயன்றால் தடுப்போம், அவ்வளவுதான்'' என்றாள் வயதில் மூத்தவள்.

விக்கியண்ணன் முகம் சிவந்தது. ''நீங்கள் யார்?'' என்று மீண்டும் கேட்டான்.

''நாங்கள் சொல்லிவிட்டோம். நீங்கள்தான் சொல்லவில்லை. இரண்டாவது குற்றமும் செய்கிறீர்கள்'' என்றாள் இளையவள்.

''இரண்டாவது குற்றமா? அப்படியென்றால் முதல் குற்றம்?'' விக்கியண்ணன் கேட்டான்.

''உத்தரவின்றி வந்தது. அடுத்த குற்றம், எங்களை எதிர்த்துப் பேசுவது. மூன்றாவது குற்றம் ஒன்றும் தங்கள் மீது சுமத்த முடியும். இங்கிருந்து தப்பி ஓடப் பார்ப்பது'' என்று இளையவள் கூறும்போது, அதிகாரமில்லை, ஆனால் குறும்புச் சிரிப்பு உதடுகளில் தவழ்ந்தது.

நாம் கங்க நாட்டு இளவரசன் என்பதைச் சொல்லி விடுவோமா என்று ஒருகணம் விக்கியண்ணன் சிந்தித்தான். அவசரப்படுவதால் ஏற்படும் விளைவுகள் அவனுக்குத் தோன்றாமலில்லை.

''உங்களிடம் சொல்ல வேண்டிய அவசியமில்லை. மாளிகை அதிகாரி என்று சொன்னீர்களே, அவரிடம் அழைத்துச் செல்லுங்கள்'' என்று கம்பீரமாகக் கூறினான் விக்கியண்ணன்.

இரு பெண்களும், தங்களுடன் வருமாறு சைகை செய்தார்கள்.

பிறகு அவர்கள் முன்னால் செல்ல விக்கியண்ணன் அவர்களைத் தொடர்ந்தான். போகும்போது கேட்டான், ''என்னைப் பின் தங்கவிட்டு முன் செல்கிறீர்களே, நான் இப்படி ஓடிவிட மாட்டேனா?''

திரும்பிப் பாராமலேயே அவர்கள் சொன்னார்கள், ''எங்களுக்கு நம்பிக்கையிருக்கிறது.''

செடி கொடிகளை விலக்கிக் கொண்டு மிக லாகவமாக அவர்கள் செல்வதைக் காண விக்கியண்ணனுக்கு வியப்பாக இருந்தது. இயற்கைக் கன்னி இன்ப நடம்புரியும் இந்தச் சூழலில் அழகிய மாளிகையை அமைத்து வாழும் இளவரசியை உடனே பார்க்க வேண்டும் என்று அவனுக்கு ஆவலேற்பட்டது.



''மாளிகை வெகு தூரத்திலிருக்கிறதா?'' என்று கேட்டான்.

''இல்லை, இல்லை. இதோ வந்துவிட்டது. களைப்பாய் இருக்கிறதா? தங்களுக்கு உணவளித்துவிட்டே மாளிகை அதிகாரியிடம் அழைத்துச் செல்வோம்'' என்று சொன்னதைக் கேட்ட விக்கியண்ணனுக்குச் சிரிப்பு வந்தது.

''ஏன் சிரிக்கிறீர்கள்?'' - திரும்பிப் பாராமல் நடந்தவாறே மூத்தவள் கேட்டாள்.

''குற்றவாளிக்கு இவ்வளவு மரியாதை என்று நினைக்கும் போது சிரிப்பு வந்தது'' என்றான் விக்கியண்ணன்.

''எங்கள் பண்பு'' என்றாள் இளையவள்.

''இப்போதாவது சொல்லலாமா, நீங்கள் யார்?'' என்று கேட்டான் விக்கியண்ணன்.

''இதற்குள் நீங்கள் தெரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நினைத்தேன்'' என்றாள் மூத்தவள்.

''இளவரசியின் தோழிகள் நாங்கள்'' என்று சிறிதுநேர மௌனத்திற்குப் பிறகு சொன்னாள்.

''எங்கள் இளவரசி அவ்வப்போது இந்த மலைச்சாரல் மாளிகைக்கு வந்து தங்குவார்கள். கொற்றவைக்கோயில் இங்கே இருக்கிறது. இளவரசி விரதம் அனுசரிக்கும் நாள்களில் வேற்று மனிதர்களைப் பார்க்க மாட்டார்கள். அப்படிப் பார்த்துவிட்டால் விரத பங்கம் ஏற்பட்டு மீண்டும் விரதம் அனுஷ்டிக்க வேண்டும். அதனால்தான் இங்கே மிகக்கடுமையான கட்டுப்பாடு'' என்று.

இளவரசியைக் குறித்த செய்தி அறிய விக்கியண்ணனுக்கு மிகுந்த ஆவல் ஏற்பட்டது. குற்றவாளிக் கூண்டில் நிறுத்தித் தண்டனை வாங்கித்தர அழைத்துச் செல்லும் தான் கேட்கும் கேள்விகளுக்கு இளவரசியின் பணிப்பெண்கள் தக்க மறுமொழி கூறுவார்களா என்பது தெரியவில்லை. என்றாலும் இளவரசி யார்? அபராஜிதவர்மனுக்கு உறவினளா? ஆதித்தன் அறிந்திருப்பாரா என்ற எண்ணங்கள் விக்கியண்ணன் மனத்தில் கேள்விகளாகப் புகுந்தன.

***

மரங்களடர்ந்த அந்தக் கானகப் பகுதியில் அந்தச் சிறிய மாளிகை கம்பீரமாகக் காட்சியளித்தது. பல ஆண்டுகளாக அந்த மாளிகை அங்கே திகழ்வதால் பழமையின் சின்னமாகத் தோன்றியது. கருங்கல் தூண்களுடன், செங்கற்களும் சேர்த்துக்

01 09 201

கட்டப்பட்ட மாளிகை வாயிலில் சிங்கத்தின் சிற்பம் கர்ஜிக்கும் நிலையில் விளங்கியது.

மாளிகையின் முன்கூடத்தில் உள்ள இருக்கையில் அமருமாறு, பணிப்பெண்கள் கூறிவிட்டு உள்ளே சென்றனர்.

இளையவள் ஒரு சிறு தட்டில் உணவும், ஒரு குவளையில் கேழ்வரகுக் கூழும் கொண்டு வந்தாள். ''பசியாறிய பிறகு அதிகாரியைப் பார்க்கலாம்'' என்றாள் அவள்.

விக்கியண்ணன் உணவுத் தட்டை வாங்கிக் கொள்ளவில்லை. ''இல்லை, இல்லை... முதலில் அதிகாரியைப் பார்க்க வேண்டும். நேரத்தை நான் இங்கே வீணே கழிக்க முடியாது. எனக்குப் பல முக்கியப் பணிகள் இருக்கின்றன. என் நண்பனைச் சந்தித்தாக வேண்டும். உடனே அதிகாரியைச் சந்திக்க ஏற்பாடு செய்யுங்கள்'' என்றான்.

அவனுடைய பேச்சில் இருந்த கண்டிப்பையும், அவன் விழிகள் அதையே பிரதிபலிப்பதையும் கண்ட இளையவள் உள்ளே சென்றாள்.

சிறிது நேரம் கழித்துத் திரும்பி வந்தாள். ''அதிகாரி அழைக்கிறார், வாருங்கள்'' என்று கூறி அழைத்துச் சென்றாள். நடுக்கூடம் ஒன்றைக் கடந்தவுடன் மேல் மாடத்திற்குச் செல்லும் படிக்கட்டுகள் இருந்தன. அதில் ஏறியவுடன் மேல் மாடத்தில் விசாலமான கூடமிருந்தது. ரத்தினக் கம்பளங்கள் விரிக்கப் பட்டிருந்தன. நறுமணப் புகை எங்கும் சூழ்ந்திருந்தது. கூடத்தின் வலப்புறம் ஓர் அறை இருந்தது. அறையில் மரக் கதவுகள் சித்திர வேலைப்பாடுகளுடன் திகழ்ந்தன. இளையவள் மெல்லக் கதவைத் தட்டினாள். பிறகு சிறுசிறு மணிகள் ஒலிக்கக் கதவைத் திறந்தாள்.

விக்கியண்ணன் அறைக்குள் கம்பீரமாக நுழைந்தான். மஞ்சத்தில் ஒயிலாகச் சாய்ந்து கொண்டிருந்த அழகியைக் கண்டவுடன் அவன் திடுக்கிட்டான்.

○



## 7. இளவரசி வேண்டும் வரம்

விக்கியண்ணன் கண்களைக் கசக்கிக் கொண்டான். ஒரு முறை அகல விரித்து நோக்கினான். நாம் காண்பது கனவுதானா? இதில் ஏதும் மாயமந்திரம் இல்லையே. காலையிலிருந்து நடந்து வருவதைப்போல் இந்தச் சம்பவமும் எதிர்பாராததுதானா? அல்லது திட்டமிட்டதா?

அந்த அறை சித்திர விசித்திரங்களுடன் விளங்கியது. சாளரங்களில் புதிய வண்ணத் திரைச் சீலைகள் தொங்கின. அவை காற்றில், மாளிகைக் கொடிபோல் படபடத்து ஆடின. மெல்லிய புகை எங்கிருந்தோ வந்தது. அது நறுமணத்தைச் சூழச் செய்தது.

சுவரின் நான்கு பக்கமும் புதுச் சுண்ணம் பூசப்பட்டிருந்தது. தேவி, மகிஷாசுரனை வெல்வது போன்ற சித்திரம் வரையப் பட்டிருந்தது. அந்தச் சித்திரம் சமீபத்தில்தான் தீட்டப்பட்டிருக்க வேண்டும். பாயும் சிங்கத்தின் மீது தேவி அமர்ந்திருக்கிறாள். இளமை ததும்பும் அந்த வடிவத்தில் சித்திரக்காரர் வீரத்தைக் காட்டி இருந்தார். மஞ்சத்தில் ஒயிலாகச் சாய்ந்து கொண்டிருக்கும் அந்தப் பெண்ணை மனத்தில் கொண்டு வரையப்பட்டது போல் தேவியின் வடிவம் காட்சியளித்தது. சிங்கம் பாய்கிறது. எருமைத்தலை அரக்கன் பயந்து சாகிறான்.

விக்கியண்ணன் வியப்பு நிறைந்த விழிகளுடன் அந்தச் சித்திரத்தைச் சிறிது நேரம் பார்த்தான். பிறகு மஞ்சத்தில் புதிய கோணத்தில் சாய்ந்துத் தோற்றம் தரும் அழகணங்கைப் பார்த்தான்.

தன்னை அழைத்து வந்த பணிப்பெண்ணை விசாரிக்கத் திரும்பிப் பார்த்தான். அவளைக் காணவில்லை.

மஞ்சத்துப் பஞ்சவர்ணக்கிளி மெல்லச் சிரித்தது.

விக்கியண்ணனுக்குக் கோபம் மெல்லத் தலை நீட்டியது. ''ஏன் சிரிக்கிறாய்?'' என்று ஒருமையில் கேட்டான்.



01 09 2

கட்டப்பட்ட மாளிகை வாயிலில் சிங்கத்தின் சிற்பம் கர்ஜிக்கும் நிலையில் விளங்கியது.

மாளிகையின் முன்கூடத்தில் உள்ள இருக்கையில் அமருமாறு, பணிப்பெண்கள் கூறிவிட்டு உள்ளே சென்றனர்.

இளையவள் ஒரு சிறு தட்டில் உணவும், ஒரு குவளையில் கேழ்வரகுக் கூழும் கொண்டு வந்தாள். ''பசியாறிய பிறகு அதிகாரியைப் பார்க்கலாம்'' என்றாள் அவள்.

விக்கியண்ணன் உணவுத் தட்டை வாங்கிக் கொள்ளவில்லை. ''இல்லை, இல்லை... முதலில் அதிகாரியைப் பார்க்க வேண்டும். நேரத்தை நான் இங்கே வீணே கழிக்க முடியாது. எனக்குப் பல முக்கியப் பணிகள் இருக்கின்றன. என் நண்பனைச் சந்தித்தாக வேண்டும். உடனே அதிகாரியைச் சந்திக்க ஏற்பாடு செய்யுங்கள்'' என்றான்.

அவனுடைய பேச்சில் இருந்த கண்டிப்பையும், அவன் விழிகள் அதையே பிரதிபலிப்பதையும் கண்ட இளையவள் உள்ளே சென்றாள்.

சிறிது நேரம் கழித்துத் திரும்பி வந்தாள். ''அதிகாரி அழைக்கிறார், வாருங்கள்'' என்று கூறி அழைத்துச் சென்றாள். நடுக்கூடம் ஒன்றைக் கடந்தவுடன் மேல் மாடத்திற்குச் செல்லும் படிக்கட்டுகள் இருந்தன. அதில் ஏறியவுடன் மேல் மாடத்தில் விசாலமான கூடமிருந்தது. ரத்தினக் கம்பளங்கள் விரிக்கப் பட்டிருந்தன. நறுமணப் புகை எங்கும் சூழ்ந்திருந்தது. கூடத்தின் வலப்புறம் ஓர் அறை இருந்தது. அறையில் மரக் கதவுகள் சித்திர வேலைப்பாடுகளுடன் திகழ்ந்தன. இளையவள் மெல்லக் கதவைத் தட்டினாள். பிறகு சிறுசிறு மணிகள் ஒலிக்கக் கதவைத் திறந்தாள்.

விக்கியண்ணன் அறைக்குள் கம்பீரமாக நுழைந்தான். மஞ்சத்தில் ஒயிலாகச் சாய்ந்து கொண்டிருந்த அழகியைக் கண்டவுடன் அவன் திடுக்கிட்டான்.

○

## 7. இளவரசி வேண்டும் வரம்

**வி**க்கியண்ணன் கண்களைக் கசக்கிக் கொண்டான். ஒரு முறை அகல விரித்து நோக்கினான். நாம் காண்பது கனவுதானா? இதில் ஏதும் மாயமந்திரம் இல்லையே. காலையிலிருந்து நடந்து வருவதைப்போல் இந்தச் சம்பவமும் எதிர்பாராததுதானா? அல்லது திட்டமிட்டதா?

அந்த அறை சித்திர விசித்திரங்களுடன் விளங்கியது. சாளரங்களில் புதிய வண்ணத் திரைச் சீலைகள் தொங்கின. அவை காற்றில், மாளிகைக் கொடிபோல் படபடத்து ஆடின. மெல்லிய புகை எங்கிருந்தோ வந்தது. அது நறுமணத்தைச் சூழச் செய்தது.

சுவரின் நான்கு பக்கமும் புதுச் சுண்ணம் பூசப்பட்டிருந்தது. தேவி, மகிஷாசுரனை வெல்வது போன்ற சித்திரம் வரையப் பட்டிருந்தது. அந்தச் சித்திரம் சமீபத்தில்தான் தீட்டப்பட்டிருக்க வேண்டும். பாயும் சிங்கத்தின் மீது தேவி அமர்ந்திருக்கிறாள். இளமை ததும்பும் அந்த வடிவத்தில் சித்திரக்காரர் வீரத்தைக் காட்டி இருந்தார். மஞ்சத்தில் ஒயிலாகச் சாய்ந்து கொண்டிருக்கும் அந்தப் பெண்ணை மனத்தில் கொண்டு வரையப்பட்டது போல் தேவியின் வடிவம் காட்சியளித்தது. சிங்கம் பாய்கிறது. எருமைத்தலை அரக்கன் பயந்து சாகிறான்.

விக்கியண்ணன் வியப்பு நிறைந்த விழிகளுடன் அந்தச் சித்திரத்தைச் சிறிது நேரம் பார்த்தான். பிறகு மஞ்சத்தில் புதிய கோணத்தில் சாய்ந்துத் தோற்றம் தரும் அழகணங்கைப் பார்த்தான்.

தன்னை அழைத்து வந்த பணிப்பெண்ணை விசாரிக்கத் திரும்பிப் பார்த்தான். அவளைக் காணவில்லை.

மஞ்சத்துப் பஞ்சவர்ணக்கிளி மெல்லச் சிரித்தது.

விக்கியண்ணனுக்குக் கோபம் மெல்லத் தலை நீட்டியது. ''ஏன் சிரிக்கிறாய்?'' என்று ஒருமையில் கேட்டான்.

01 09 2012

''உங்களுக்கு அருவிக் கரையில் வேறு உடை தந்திருக்காவிடில் குளிரால் எப்படி நடுங்கியிருப்பீர்கள் என்று கற்பனை செய்து கொண்டேன், சிரிப்பு வந்தது'' என்று கூறி மீண்டும் சிரித்தாள்.

''இது சிரிப்பதற்கு ஏற்ற நேரமில்லை...'' என்றான் விக்கியண்ணன் சற்றுக் கடுமையாக.

''நகைப்பதற்கு என்று ஒரு நேரம் தனியே உண்டா?'' என்று அழகி கேட்டாள்.

''இப்போது வீண்பேச்சுப் பேச நேரமில்லை. அதிகாரி எங்கே? பணிப்பெண் என்னை அதிகாரியிடம் அழைத்துச் செல்வதாகக் கூறினாள். நான் செய்த குற்றத்திற்குத் தண்டனையை அவர் அளிப்பாராம். தண்டனை தருவதில் தாமதம் கூடாதல்லவா? அதிகாரி எங்கே?'' என்று கேட்டான் விக்கியண்ணன்.

''இதோ...'' என்றாள் அழகி.

விக்கியண்ணன் சுற்றுமுற்றும் பார்த்தான். ''எங்கே?'' என்று கேட்பது போல் அவனது விழிகள் கேள்விக்குறி எழுப்பின.

மீண்டும் அவள் நகைத்தவாறு, ''நான்தான்'' என்றாள். விக்கியண்ணன் ஏதும் பேசாது வியப்புடன் அவளையே நோக்கினான்.

''நான் அதிகாரியைக் கேட்டேன்'' என்றான்.

''என்னைப் பார்த்தால் அதிகாரியாகத் தெரியவில்லையா?'' என்று கூறி அவள் இதழ்களில் சிரிப்புக் குமிழியிடக் கேட்டாள்.

இப்போது விக்கியண்ணன் சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறீர்கள்?'' - அவள் கேட்டாள்.

''மலைச்சாரல் மாளிகையில் பல விசித்திரங்கள் நிகழும் போலிருக்கிறது. தாங்கள் அதிகாரம் செலுத்துவீர்களோ இல்லையோ? போர்ப்படைகளுக்குத் தலைவி என்பதைக் கண்டு கொண்டேன். நானோ நிராயுதபாணி, அதனால் நகைத்தேன்'' என்றான்.

''நானும் நிராயுதபாணிதான். நான் மறைவாக எந்த வாளையும் வேலையும் வை ்த்திருக்கவில்லை'' என்றாள் அழகி.



''உங்கள் விழிகள், வேலைப் போன்று கூர்மையாக இருக்கவில்லையா?'' என்று விக்கியண்ணன் கூறியவுடன் அழகியும் வாய்திறந்து முத்துப்பல் வரிசை மின்ன நகைத்தாள்.

''சரி... அதிகாரியிடம் செல்ல வேண்டும். வழிகாட்டுங்கள்'' விக்கியண்ணன் மீண்டும் தொடர்ந்தான்.

''மீண்டும் மீண்டும் சொல்கிறேன், நான்தான் அதிகாரி. என் அதிகார எல்லைக்குட்பட்ட இடம் இந்தக் கானகம். இந்தப் பகுதியில் நான் வைத்தது சட்டம்...'' என்றாள் அழகி. பிறகு தொடர்ந்து, ''பணிப்பெண்கள் சொல்லியிருப்பார்களே, என் விரதத்தைப்பற்றி?'' என்று புருவத்தை வளைத்தவாறு கேட்டாள்.

விக்கியண்ணன் தலையை அசைத்தான்.

''இந்தக் கானகத்தின் நடுவே கொற்றவை கோயில் இருக்கிறது. கொற்றவையை வணங்கி வழிபட ஆண்டிற்கு ஒரு முறை வருவேன். இருபத்தியோரு நாள் விரதம் இருப்பேன். அந்த நாள்களில் இங்கே ஆண்கள் யாரும் வரக் கூடாது. அப்படித் தவறி வந்துவிட்டால் கடுந்தண்டனைக் குள்ளாவார்கள்'' என்று அவள் கூறிக் கொண்டிருக்கும்போதே, விக்கியண்ணன் குறுக்கிட்டு, ''என் தலை தப்புமா?'' என்று கேட்டான் தலையைத் தடவிக் கொண்டே.

''என் விரதம் நேற்றுடன் முடிந்துவிட்டது.''

''அப்பாடா...''

''உம். இனித்தான் இருக்கிறது. விரதம் முடிந்து முதன் முதலில் தென்படும் ஆண்பிள்ளைக்கு நிறைய பரிசு தருவேன்...''

''பரிசா...?'' என்று கேட்ட விக்கியண்ணனுக்கு வியப்புத் தாங்கவில்லை.

''ஆம்! நீங்கள் பரிசு கேட்கலாம். அதனால்தான் தங்களுக்கு உடனே ஆடையைப் பரிசாக அளித்தேன். மேலும் என்ன வேண்டுமானாலும் கேளுங்கள்'' என்றாள் அழகி.

''எனக்கொரு குதிரை வேண்டும். திருத்தணிகைக்கு நான் செல்ல வழிகாட்ட வேண்டும்'' என்றான் விக்கியண்ணன்.

அழகி சிரித்தாள். உங்களுக்கு ''எவ்வளவு குதிரைகள் வேண்டுமானாலும் தருகிறேன், நீங்கள் யார்? அதைச் சொல்லவில்லையே?'' என்று கேட்டாள்.



01 09 2012

விக்கியண்ணன் சிறிது யோசித்தான். பிறகு ''நான் ஒரு கவிஞன்'' என்றான்.

''கவிஞனா?'' என்று வியப்புடன் கேட்டாள்.

''ஆமாம், நானும் எனது நண்பனும் திருப்பதியிலிருந்து திருத்தணிகைக்குச் செல்கிறோம். வழி தவறிவிட்டது'' என்றான்.

''கவிஞன் என்றால் கவிதை ஏதாவது சொல்லுங்கள், பார்ப்போம்'' என்றாள் அழகி.

விக்கியண்ணன் ஒரு கணம் திகைத்தான். மறுகணம் தொண்டையைக் கனைத்துக் கொண்டு சொன்னான்:

*கைக்குடம் இரண்டு*
*கனக்கும் பக்குடமும்*
*முக்குடமாய்க் கொண்டால்*
*முறியாதோ - மிக்க புகழ்*
*சேய்க் காற்றி னால்பரவும்*
*தீரநந்தி மாகிரியில்*
*ஈக்காற்றுக்கு ஆற்றா*
*இடை.*

விக்கியண்ணன் நிறுத்தி நிதானமாய்ப் பாடி முடித்ததும் அழகியின் முகஞ் சிவக்கக் கண்டான். அவள் தன் மேலாடையை மேலும் இழுத்து மூடிக்கொண்டு, ''கவிஞரே! உமக்கு வேறு பாடலே தெரியாதா?'' என்று கோபமாகக் கேட்பது போல் கேட்டாள்.

அவளுடைய விழியை உற்று நோக்கிய விக்கியண்ணன், ''பாடல் பல தெரியாவிட்டால் நான் கவிஞனாகப் பல்லவ நாட்டில் உலவ முடியுமா? பாட்டுத்தானே சோறு போடுகிறது'' என்றான்.

''நீங்கள் பாடிய பாடலுக்குப் பொருள் தெரியுமா?'' அவள் உதடுகள் நாணத்தால் துடிப்பதை விக்கியண்ணன் கவனித்தான்.

''கவிஞர்களுக்குக் காதலைப் பற்றிப் பாடுவதென்றால் மிகவும் மகிழ்ச்சி. இளைஞன் ஒருவன் தன் காதலியை நோக்கு கிறான், அவளுடைய இரண்டு ஸ்தனங்களும் அவனுக்குப் பொற்கலசங்களாகவே காணப்படுகின்றன. தன் உள்ளங்கையை மடக்கி நெஞ்சோடு சேர்த்து வைத்துக் கொண்டிருக்கிறாள். அது ஒரு குடம் போல் தோன்றுகிறது. 'முன்பே பொற்குடங்கள் இரண்டு, தென்றல் காற்றைக்கூடத் தாங்க முடியாத



அவளுடைய மெல்லிய இடை எப்படி மூன்று குடங்களைத் தாங்கி நிற்கின்றதோ' என்று இளைஞன் வியப்படைகிறான்...'' என்று விக்கியண்ணன் விளக்கிக் கொண்டே போகும்போது, துள்ளி எழுந்து நிமிர்ந்து உட்கார்ந்து, ''நிறுத்துங்கள், நிறுத்துங்கள். இப்படியெல்லாம் நீங்கள் நாணமில்லாமல் பாடலாமா?'' என்றாள்.

''நானா இயற்றினேன்? உங்கள் நந்திவர்மன் காலத்துப் புலவர் இயற்றியது. அவர் கவிஞர்களை மிகவும் ஆதரித்தவர்'' என்றான்.

அழகியின் மார்பகம் விம்மித் தணிந்தது. அவள் விழிகளை மெல்ல மூடிக் கொண்டாள்.

''நந்திவர்ம சக்கரவர்த்தியின் காலத்தில் கவிகளுக்கு மிகுந்த ஆதரவு இருந்தது. இப்போது...'' என்று அவள் முணுமுணுத்தது விக்கியண்ணன் செவியில் விழுந்தது.

''அப்படியானால் இப்போது ஆதரவு இல்லை என்று கூறுகிறீர்களா?'' என்று கேட்டு அவளுடைய உள்ளத்தின் உணர்ச்சியைத் தூண்டிவிட முயன்றான்.

''இப்போது புகழ்பெற்ற கவிஞர் யார் இருக்கிறார்கள்? தானும் செய்யாமல் மற்றவரும் செய்ய முடியாத ஓர் ஆட்சி...'' என்று சலிப்புடன் கூறினாள்.

மேலும் அவளுடைய கருத்தை அறிய விரும்பி, ''நீங்கள் பல்லவ இளவரசி, நீங்களே ஆட்சியைக் குறை கூறலாமா?'' என்று தூபம் போட்டான்.

''ஆமாம்... பல்லவ இளவரசி... பல்லவ இளவரசி. எனக்கு இளவரசி அந்தஸ்தை யார் தருகிறார்கள்? நியாயமாக என் தந்தைக்குப் பிறகு என் சகோதரன் ஆள வேண்டிய நாட்டை அபராஜிதன் அபகரித்துக் கொண்டார்... எங்கோ சின்னஞ்சிறு ஊர் எங்களுக்குச் சொந்தம். இளவரசி என்ற பழைய பெயர் மட்டும் நிலைத்திருக்கிறது. என் விரதம் முடிவடைந்து என் மனத்துக்குகந்த மணாளனை நான் ஏற்றுக்கொண்ட பிறகு எங்கள் பரம்பரை உரிமையை நிலைநாட்டுவேன்...'' என்றாள்.

விக்கியண்ணனுக்குப் புரிந்தது. இந்த அழகி பல்லவ குலத்தில் வந்தவள். அபராஜிதனுக்கும் நிருபதுங்க வர்மனுக்கும் அரியணை ஏறுவதில் போட்டி ஏற்பட்டிருக்கிறது. அபராஜிதன் அந்தப் போட்டியில் வெற்றியடைந்தான். இவள் அபராஜிதன்

ஆட்சியை வெறுக்கிறாள். அடடா, இப்போது ஆதித்த சோழன் இங்கு இல்லாமல் போய்விட்டாரே!

''பல்லவ நாட்டு இளவரசி அவர்களே!'' என்று மிகுந்த மரியாதையுடன் விக்கியண்ணன் பேச்சைத் தொடங்கினான். ''உங்கள் மனத்துக்கு ஏற்ற மணாளனைத் தேர்ந்தெடுத்து விட்டீர்களா?'' என்று கேட்டான்.

''கொற்றவை எனக்கு வழிகாட்டுவாள். இதுவரை விரதம் முடிந்த நாளன்று எந்த ஆடவரையும் நான் சந்திப்பதில்லை. படைவீரன் யாராவது எதிர்ப்படுவான். ஆனால் இன்று ஒரு கவிஞரைச் சந்தித்ததில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். எனக்கு ஏற்ற மணாளன் எந்த நாட்டில் வாழ்கிறாரோ?'' என்று கூறிப் பெருமூச்சு விட்டாள்.

''பல்லவ குலத்தின் அரசிளங்குமரன் எவரும் உங்களை மணக்க முன் வரவில்லையா?'' என்று விக்கியண்ணன் கேட்டான்.

''பல்லவ குலம்...'' என்று அவள் கூறும்போது வெறுப் புணர்ச்சி இருப்பதைக் கண்டான் விக்கியண்ணன். ''பல்லவ குலமென்றால் தங்களுக்கே சொந்தம் என்று அபராஜிதவர்மன் நினைக்கிறார். தான்தான் என்னை மணப்பதற்கு அருகதை யானவர் என்று மனப்பால் குடிக்கிறார். ஆனால்...'' என்று கூறிச் சற்று நிறுத்தினாள் இளவரசி.

தன் அந்தரங்கங்களைத் தன்னிடம் ஏன் இளவரசி கூறுகிறாள்? விக்கியண்ணனுக்கு வியப்பாக இருந்தது.

''இளவரசி, உங்களை நான் ஒன்று கேட்கலாமா?'' என்று கேட்டபோது, இளவரசியின் விழிகளை நோக்கினான்.

''ஆகா, நன்றாகக் கேளுங்கள், நேற்று வந்திருந்தால் கேட்டிருக்க முடியாது. என்னைச் சந்தித்திருக்கவே முடியாது. எனக்குத் துணையாக வந்திருக்கும் வீரர்கள் சும்மா விட்டிருக்க மாட்டார்கள்'' என்றாள் விழிகளில் வியப்பை வீசியவாறு.

''இப்போதும் என் உயிர் நண்பரைத் தங்கள் வீரர்கள் எதிர்த்துத் தாக்கினர். அவரது கதி என்னவென்று தெரியவில்லை. உங்கள் அதிகாரம் இந்தக் காட்டில் கொடிகட்டிப் பறக்கிறது. நாட்டில் செல்லாவிடினும் காட்டிலாவது செல்கிறதே...'' என்றான்.

''என்ன சொன்னீர் கவிஞரே! என் அதிகாரம் நாட்டிலும் நிலை நிறுத்தப்படும் காலம் வரும். இப்போதே வந்திருக்க



முடியும். நான் மட்டும் சரி என்று தலையசைத்திருந்தால்... குரலில் வேதனை மெல்லத் தெரிந்தது.

''தலையசைப்பதில் உங்களுக்கு ஏதாவது சிரமமா?'' விக்கியண்ணன் நகைத்தவாறு கேட்டான்.

''என் வருங்காலத்தை நானே முடிவு செய்து கொள்ள வேண்டியிருக்கிறது. என் அருமைத்தாய் இருந்திருந்தால் எனக்கு நல்லவழி காட்டியிருப்பார்கள். தாய்க்குப் பிறகு என் தாய்மாமன் யோசனைகளை என்னால் ஏற்க முடியவில்லை. ஒரு முறைக்குப் பலமுறை நான் சிந்தித்துச் செயலாற்ற வேண்டியுள்ளது'' என்று இளவரசி குரலில் வேதனை மிகக் கூறினாள்.

''உங்கள் தாய்மாமன் எங்கே இருக்கிறார்?''

''அவர்தான் பல்லவநாட்டின் படைத்தலைவர்களுள் ஒருவர். இப்போது அவர் அபராஜிதவர்மனின் கட்சி!''

''பல்லவச் சக்கரவர்த்தியை மணம் புரிந்து கொள்ளுமாறு அவர் வற்புறுத்துகிறார், அப்படித்தானே...?'' ஏதோ புதிதாகக் கண்டுபிடித்தவனைப் போல் விக்கியண்ணன் பேசினான்.

''ஆமாம்! அவர் இப்போது என்னைக் கடுமையாக வற்புறுத்துகிறார். நீங்களே, சொல்லுங்கள் கவிஞரே! அபராஜித வர்மருக்கு முன்பே திருமணமாகிவிட்டது. பட்டத்தரசி இருக்கும்போது என்னையும் மணக்க விரும்பும் காரணம் என்னவென்று தெரியவில்லை!'' என்று கூறினாள் இளவரசி.

''காரணமிருக்கிறது'' என்றான் விக்கியண்ணன்.

''என்ன காரணம்? எனக்குத் தெரியாமல் நீங்கள் அறிந்து வைத்திருப்பது?''

''உங்கள் அழகு, இளமை, வனதேவதையோ என்று காண்பவர் வியக்கும் எழில். அருவியில் நீங்கள் நீராடிக் கொண்டிருக்கும்போது, தங்க மீன் போல நீங்கள் துள்ளுவதைப் பார்த்து நான் மடுவில் குதித்தேன். இந்தக் கவிஞனே பார்த்த விழியைத் திருப்பாதபோது, இந்த மாபெரும் பல்லவ சாம்ராஜ்ய சக்கரவர்த்தி தங்களை மணம் புரியத் துடிக்க மாட்டாரா? நீங்கள் ஒருகணம் மின்னலெனத் தோன்றி மறைந்தவுடன் நான் துடியாய்த் துடித்தேன், மீண்டும் எப்பொழுது காணப் போகிறோமோ என்று... அரசர் அபராஜிதனுக்குத் துடிப்பு இருக்காதா?''

விக்கியண்ணன் பேசியதைக் கேட்டு இளவரசியின் முகத்தில் புதிய மலர்ச்சி தோன்றியது. அதைக் கவனித்த விக்கியண்ணன் மேலும் தொடர்ந்தான். ''உடனே எனக்கு நந்திக்கலம்பகம் நினைவிற்கு வந்தது. உங்கள் மூதாதையர் நந்திவர்மன் பாக்கியசாலி. அழகிய பெண்களின் ஏக்கத்தை அந்தக் கவிஞன் எவ்வளவு அழகாக வர்ணித்துள்ளான்!''

விக்கியண்ணன் புகழ்ச்சியால் இளவரசி மிக நாணமுற்றாள். முகம் சிவந்தது.

''நன்றாகப் பேசுகிறீர்கள். என் லாவண்யத்தை வர்ணிக்கத் தொடங்கிவிடுவீர்கள் போலிருக்கிறது. நீங்கள் கவி எழுதுவீர்களா?'' என்று இளவரசி விழிகளில் ஒளி பரவக் கேட்டாள்.

''ஆகா! என்ன அப்படிக் கேட்டுவிட்டீர்கள்? கவிஞனுக்கு கவி எழுத வராமலா போகும்?''

''தேவியை வர்ணித்துப் பாடல் எழுத வேண்டும்.''

''கரும்பு தின்னக் கூலியா? விழியழகும், செம்பவள உதட்டழகும், மதி நிகர்த்த வதனமும்... உங்கள் வடிவை வர்ணிக்க நான் பாக்கியம் செய்திருக்க வேண்டும்...''

''உஸ்... என்னை வர்ணிக்கச் சொல்லவில்லை. இந்தக் கானகத்துக் கொற்றவையை, நான் வணங்கும் கொற்றவையை, எல்லா நலன்களும் தரும் கொற்றவையை, கொற்றவையின் வடிவழகை நீங்கள் கண்டுவிட்டால், கவிமழை பொழிவீர்கள்... வாருங்கள் அழைத்துச் செல்கிறேன்...'' என்று உற்சாகமாகப் பேசினாள் இளவரசி.

''பரிசு தருவதாகச் சற்று முன்பு கூறினீர்கள். குதிரை...'' என்றான் விக்கியண்ணன். அவனுக்கு அங்கிருந்து சென்றுவிட வேண்டும் என்றும் தோன்றியது. பிரியவும் மனமில்லை.

''தருகிறேன், ஒன்றுக்கு இரண்டாகத் தருகிறேன். யானை வேண்டுமா? புலவர்களுக்கு யானை பரிசாகத் தருவதுதான் நியாயம். பல்லவ ஐராவதம்போல் அழகிய யானை தருகிறேன்...'' என்று கூறி விக்கியண்ணனை அழைத்துக் கொண்டு கொற்றவை கோயிலிருக்குமிடத்திற்குப் புறப்பட்டாள் இளவரசி.

மாளிகைக்கு மிக அருகில் கோயில் இருந்தது. ஓங்கி வளர்ந்த தேக்கு மரங்களும் விசித்திரமான பூக்கள் நிறைந்த புதர்களும் சூழ்ந்த இடத்தில் கொற்றவை கோயில் இருந்தது. சிறிய கோயில்,



முன் மண்டபமில்லை. பாறையிலேயே காளிதேவியைப் புடைச் சிற்பமாக செதுக்கியிருந்தார்கள. தேவிக்கு அரளிப் பூமாலை அணிவிக்கப்பட்டிருந்தது. அர்ச்சனை செய்யப்பட்ட செம்பருத்தி மலர்கள் அவள் பாதத்தை மறைத்திருந்தன. பாதத்தின் அடியில் சந்தனம், குங்குமம் இடப்பட்ட வாள் ஒன்று வைக்கப்பட்டிருந்தது.

வண்டுகளின் ஓசையும், காற்றினால் மரக்கிளைகள் உராயும்போது ஏற்படும் ஓசையும், கானப் பறவைகளின் கீதநாதமும், மங்கிய வெளிச்சமும், மலர்களின் மணமும் நிறைந்த சூழலில் கொற்றவை எதிரே, இளவரசி விழிகளை மூடி நின்று கொண்டிருந்தாள்.

''இளவரசி, தேவியின் பாதத்தில் பளபளக்கும் கூரிய வாள் எதற்காக...?'' என்று விக்கியண்ணன் கேட்டான்.

இளவரசியின் பதில் அவனைப் பிரமிக்க வைத்தது.

○



01 09 20

# 8. மூலபத்திரன் சபதம்

இளவரசி விழிகளை மெல்லத் திறந்து, "தேவியின் சித்தமே அந்த வாளில்தான். என் பிரார்த்தனைக்கு, என் விரதத்திற்கு இணங்கி, தேவி அளிக்கும் மணாளனுக்கு இந்த வாளைப் பரிசாக அளிப்பேன். தேவியின் சித்தம் வேறாக இருந்தால் இதே வாளால்..." என்று உணர்ச்சிப் பெருக்கில் கூறிய இளவரசி தேவியின் பாதத்தை மறைத்திருந்த செம்பருத்தி மலர்களை விலக்கினாள்.

கொற்றவையின் பாதத்தில் ஒரு சிற்பம் இருந்தது. அது ஒரு வீரனுடைய சிற்பம். அவன் கரத்தில் ஒரு வாள். தலை துண்டாகிக் கீழே கிடந்தது. கொற்றவைக்கு அந்த வீரன் தன் சிரசைத் தானே கொய்து காணிக்கையாக்கியிருந்தான்.

சுத்த வீரனான விக்கியண்ணனுக்கு மெய் சிலிர்த்தது.

அப்போது, அந்தக் கோயிலை நோக்கி யாரோ வந்து கொண்டிருப்பது பேச்சரவத்திலிருந்து தெரிந்தது. மரங்களும், செடி, புதர்களும் மறைத்திருந்ததால் வருபவர்கள் முகம் தெரியவில்லை. ஆனால் இளவரசி பரபரப்படைந்தாள். விக்கியண்ணனை நோக்கி, "கவிஞரே! என் தாய்மாமன் வருகிறார். நீங்கள் மறைந்து கொள்ளுங்கள். அவர் சென்ற பிறகு என்னை மேல்மாடத்தில் வந்து சந்தியுங்கள். சீக்கிரம்... சீக்கிரம்..." என்று துரிதப்படுத்தினாள். அவள் முகத்தில் கவலைக்கோடுகள் பரவின.

விக்கியண்ணன் விரைந்து ஓடி செடி, மரங்களுக்கிடையே மறைந்து கொண்டான்.

விக்கியண்ணன் பெரிதாக வளர்ந்திருந்த மரத்தின் பின்புறம் மறைந்து நின்றுகொண்டான். அங்கே சிறு பாறை ஒன்று வழவழப்பாக இருந்தது. அதில் உட்கார்ந்துவிட்டான். அவன் இப்போது கவிஞன். சோழநாட்டிற்கு வந்து தமிழ் படித்தது அவனுக்கு மிகவும் உதவியது. இல்லாவிடில் பல்லவ இளவரசியைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருக்க முடியுமா? ஒவ்வொரு கணமும் பல்வேறு அதிசயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.



'இதோ, இளவரசியின் தாய்மாமன் வந்துவிட்டார். இளவரசிக்கு ஏன் பயம்? என்னை உடனே மறைந்து கொள்ளச் சொல்லிவிட்டாளே' என்று விக்கியண்ணன் எண்ணினான். அவர்கள் பேசுவது மிக அருகே கேட்டது.

இளவரசி, கொற்றவையைத் துதித்தவாறு நின்று கொண்டிருந்தாள். "தேவி! மாசக்தி, சாமுண்டி, நீலி, என்னை இன்னமும் சோதனை செய்வது தகுமா? உனக்கு இது முறைதானா? என் மனத்தைத் துன்புறுத்த இதோ வந்துவிட்டார். என் மனத்திற்கு விருப்பமில்லாதவரை மணக்கச் சொல்கிறாரே தேவி! என் வேண்டுகோளுக்கு நீ செவி சாய்க்கவில்லை என்றால், உன் பாதத்திலே வீழ்ந்து நான் மாள்கிறேன்" என்று மனமுருக வேண்டினாள். அவள் உதடுகள் அசைந்தன. ஏதோ சொல்கிறாள் என்பது மட்டும் விக்கியண்ணனுக்குக் கேட்டது.

இளவரசியின் தாய்மாமன் மூலபத்திரன் அங்கே வந்து விட்டார். அவரைத் தொடர்ந்து பல்லவ வீரர்கள் சிலர் வந்தனர். பயணஞ் செய்து வந்த களைப்பு மூலபத்திரனின் முகத்தில் நன்றாய்ப் பிரதிபலித்தது. தலைப்பாகையைக் கழற்றிக் கையில் வைத்துக் கொண்டிருந்தார். எழுபது வயதைத் தாண்டியும் பார்வை அவருக்குக் குன்றவில்லை. நடையில் சிறிது தள்ளாமை காணப்பட்டது. பல்லவர்கள் படைகளின் ஒரு பிரிவுக்கு அவர் தளபதி. பல்லவர்கள் பரம்பரையில் ஒரு கிளையினரான இரண்யவர்மனின் வழிவந்தவர். ஆதலால் அபராஜிதனிடம் அவருக்கு செல்வாக்கு மிக உண்டு.

"வயிரக்கண்ணி" என்று கம்பீரமாக அழைத்தார். மூலபத்திரனின் கம்பீரத்துடன் வாஞ்சையும் சேர்ந்த குரல்.

"உன்னுடைய விரதம் முடியவில்லையா?" என்று கேட்டார். அவரிடம் பேசாமல் தாமதப்படுத்த அவள் விரும்பவில்லை. "நேற்றுடன் முடிந்துவிட்டது. இல்லாவிடில் இன்று உங்களை இங்கே வருவதற்கு அனுமதித்திருப்பார்களா?" என்று இளவரசி வயிரக்கண்ணி மறுமொழி கூறினாள். துரும்பு ஒன்றிடம் பேசும் அலட்சியமிருந்தது.

"என்னை அனுமதிக்கமாட்டார்களா?" ஹாஹா என்று நகைத்த அவர், "மகளே! என்ன சொன்னாய்? இந்த மூலபத்திரனைத் தடுத்து நிறுத்தக்கூடியவர்கள் கோதாவரி நதிக்கரையிலிருந்து கன்னியாகுமரி வரை யாரிருக்கிறார்கள்?" என்று கேட்டார்.

01 09 201

"இருக்கிறார்கள்" என்று இளவரசி வயிரக்கண்ணி கூறினாள்.

''ஆகா! என்ன சொல்லிவிட்டாய்? என்னைத் தடுப்பவர்களா? என் பலத்தையும், மதிப்பையும் நீ மறந்துவிட்டாய் போலும்! வயிரக்கண்ணி! பாண்டியர்களைத் திருப்புறம்பியத்தில் ஓட ஓட விரட்டியது யார் தெரியுமா?'' என்று கம்பீரமாகக் கேட்டார்.

''தெரியுமே, சோழ இளவரசன் ஆதித்தன்'' என்று வயிரக்கண்ணி கூறினாள்.

''ஆதித்தனா - அந்தச் சிறு பயலா? பெண்ணே! நீ என் சகோதரியின் மகள் என்றதால் சும்மாவிட்டேன். அத்துடன் பல்லவ சக்கரவர்த்தி அபராஜிதனுக்கு மனையாட்டியாகப் போகிறாய் என்பதனால் மரியாதை கொடுத்தேன். நாளைக்குப் பல்லவ அரசியாகப் போகும் உன்னை அவமதிக்கலாமா? திருப்புறம்பியத்தில் நடந்த போரைப் பற்றிச் சொல்கிறேன் கேள்...'' என்று மூலபத்திரன் தொடர்வதற்குள், ''வேண்டாம், வேண்டாம். பலமுறை உங்களிடம் கேட்டு அலுத்துவிட்டேன். நீங்கள் இங்கே வந்த காரியத்தை மட்டும் சொல்லுங்கள் போதும்...'' என்று சற்று கோபத்துடனேயே பேசினாள் இளவரசி.

''ஆம்; உன்னிடம் நான் அதை எவ்வளவு தடவை சொல்லிவிட்டேன், வயிரக்கண்ணி? உன்னைத் தோள்மீது போட்டுத் தட்டித் தூங்கச் செய்ததற்காக வீரசாகசக் கதைகளைக் கூறியிருக்கிறேன். குறுகுறு என்று நடந்து காஞ்சி மாளிகை பூந்தோட்டத்தில் என் கரத்தைப் பிடித்து வரும்போது, திருப்புறம்பியம் போரில் நான் வீரமாய்ப் போரிட்டு பாண்டியர்களின் படைகளைப் புறமுதுகிட்டு ஓடச் செய்த பிரதாபச் செய்தியைக் கூறியிருக்கிறேன். நான் இருந்திராவிடில் பல்லவர்கள் படைகள் திறமையாகப் போரிட்டிருக்க மாட்டா. உனக்கு ஒரு முக்கிய சம்பவத்தைச் சொன்னதாக நினைவில்லை.

''திரும்புறம்பியத்திற்கருகே பாண்டியர் படைகள் வீராவேசத்துடன் போர் புரிந்தன. இரவு வந்துவிட்டது. படைகள் ஓய்வெடுக்கப் பாசறைகளுக்குச் சென்றன. நீ சற்று முன்பு வீரன் என்றும், தீரனென்றும் புகழ்ந்தாயே ஆதித்த சோழன், அந்தச் சிறுவன், குதிரைமீது திரும்பிக் கொண்டிருக்கிறான். அவனை எதிரிப்படைகள் சூழ்ந்துகொண்டன. தர்ம யுத்தத்தைப் பாண்டியர்கள் மறந்துவிட்டார்கள். நான் ஹூங்காரம் செய்து குரல் கொடுத்து அங்கே விரைந்தேன். நான் கவசம் அணிந்திருக்கவில்லை. கேடயம் இல்லை, வாளும் இல்லை. எதிரிப்படை வீரன் ஒருவனைத் தாக்கி, அவனது வாளைப் பறித்துத் திகிரி போல் சுழற்றினேன்...'' என்று



அவர் சொல்லி நிறுத்தியவுடன் இளவரசி, ''போதும் போதும் நிறுத்துங்கள். இந்தக் கதையை நூறு தடவை சொல்லிவிட்டீர்கள்...'' என்றாள்.

''எவ்வளவு தடவை சொன்னாலும் அலுக்காது மகளே!''

''ஆமாம். ஒவ்வொரு முறையும் புதிய புதிய கற்பனைகளைச் சேர்த்துச் சொல்கிறீர்கள்... போதும் போதும். நீங்கள் வந்த காரணம் சொல்லுங்கள்'' என்றாள் அலுப்புடன்.

''இன்று உன்னிடம் ஒரு முக்கியமான செய்தி சொல்ல வந்திருக்கிறேன். சக்கரவர்த்தி திருத்தணிகைக் கோயிலுக்கு வந்திருக்கிறார். அவர் உன்னையும் காண இங்கு வருவார்'' என்றார்.

''பல்லவ சக்கரவர்த்தி என்னைக் காண எதற்காக வர வேண்டும்? நீங்கள்தான் அவர் சார்பாக அவ்வப்போது வருகிறீர்களே போதாதா?'' என்றாள் இளவரசி.

''நான் ஒவ்வொரு முறையும் உன்னிடம் வரும்போது அபராஜிதனின் மனத்திலுள்ள ஆசையைத் தெரிவிக்கிறேன். நீயோ காது கொடுத்துக் கேட்பதில்லை.''

''நான் செவிடாகி விடுகிறேன்.''

''அபராஜிதன் நிலையை உனக்குப் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். உன் நன்மைக்காகத்தான். நீயே சிந்தித்துப்பார். காஞ்சி மன்னரை அடையக் கொடுத்து வைக்க வேண்டும். அவர் உன் அழகைக் கண்டு மயங்கிவிட்டார் என்றே சொல்ல வேண்டும்.''

''அழகிய பெண்களைக் கண்டு மயங்காத ஆண்களே கிடையாது. உங்கள் அபராஜிதவர்மன் முன்பே மணமானவர். அவரது மனைவி மாதேவி அழகில் குறைந்தவளா? என் மீது அவருடைய நாட்டம் செல்வானேன்?''

இவ்வாறு வயிரக்கண்ணி கேட்டவுடன் மூலபத்திரன் பெரிதாக நகைத்தான். ''பெண்ணே! அரசர்கள் பல மனைவியரை அடைவது புதிதன்று. உன்னுடைய தகப்பனார், சின்னஞ்சிறு குறுநில மன்னர். உன் தாயைத் தவிர அவருக்கு...'' என்று பேச முற்பட்டவுடன் வயிரக்கண்ணி சீறினாள்.

''என் தந்தையைப் பற்றி ஏதும் குறைவாகப் பேசாதீர்கள். என் தந்தைக்கும் உங்களுக்கும் எப்போதும் மனக்கசப்பு. அதனால்தான் ஆண் வாரிசு இல்லாத என் தந்தையின்

01 09 201

பூமியையும் பல்லவ சக்கரவர்த்தியின் ஆளுகைக்கு உட்படுத்தி விட்டீர்கள். என்னை இளவரசி என்று அழைப்பது ஓர் ஏமாற்று வேலை என்பது எனக்குத் தெரியாதா? சொல்ல வந்ததைச் சீக்கிரம் சொல்லிவிட்டுச் செல்லுங்கள், நான் ஓய்வெடுக்க வேண்டும்'' என்று இளவரசி சீறினாள்.

''பெண்ணே! நீ இப்படி கோபப்படும்போதும்கூட அழகாய்த்தானிருக்கிறாய். உன் சிவந்த முகத்திற்குப் பவழ உதடுகள் ஈடுகொடுக்கின்றன. உன்னை மணக்க நினைக்கும் அபராஜிதன் மகா அதிர்ஷ்டசாலி. நீயும் மிக மிக பாக்கியவதி. பல்லவ சக்கரவர்த்தியை மணப்பதென்றால் முன்பிறவியில் புண்ணியம் செய்திருக்க வேண்டும்...'' என்று புகழ்ந்து கொண்டே சென்ற மூலபத்திரனை நிறுத்தினாள் வயிரக்கண்ணி.

''நான் முன்பிறவியில் புண்ணியம் செய்தவள்'' என்றாள்.

மூலபத்திரன் திகைத்தான். ''புண்ணியமா?''

''ஆம்; நான் பல்லவ சக்கரவரத்தியை மணக்கப் போவதில்லை. அதனால்தான் புண்ணியம் செய்தவள்.''

''மணக்கப் போவதில்லையா, ஏன்?''

''எனக்கு விருப்பம் இல்லை.''

''விருப்பம், விருப்பமின்மை இவற்றையெல்லாம் பாகு படுத்தக்கூடிய பருவமன்று உனக்கு... நன்றாக யோசித்துப்பார். நீ ஒரு சாதாரண வீரனைத்தான் மணக்க முடியும். அரச குடும்பத்தில் தக்கவர்கள் கிடைக்க மாட்டார்கள்.''

''ஓர் எளிய உழவனை மணந்து கொள்கிறேன்.''

''உனக்குப் பைத்தியமா பிடித்துவிட்டது? ஆழி சூழ் உலகத்தில் இன்று அபராஜிதனுக்குச் சமமாக ஒருவரும் இல்லை. கங்கர்களும், ராட்டிரகூடர்களும் இருக்குமிடம் தெரியவில்லை. பாண்டியர்களும் அடங்கிவிட்டனர். சோழர்கள் நமக்குக் கப்பம் கட்டும் சிற்றரசர்கள். சக்கரவர்த்தி உன்னைத் தேடி வருகிறார். அவர் உன்னை ஒருமுறை பார்த்துச் செல்ல விரும்புகிறார். அவர் கொங்கு நாட்டிற்குச் செல்கிறார். அங்கேயிருந்து ஏராளமான தங்கப் பாளங்களைக் கொண்டு வரப்போகிறார். அந்தத் தங்கத்தைக் கொண்டு பொன் மலராக்கி முருகபிரானுக்குத் திருத்தணிகையில் கனகாபிஷேகம் செய்யப்போகிறார். அந்த வைபவத்தன்று அவர் உன்னைக் கோலாகலமாகத் திருமணம் செய்துகொள்ளப் போகிறார். திருமண நாளைச் சோதிடர்கள் குறித்துக் கொடுத்துவிட்டார்கள்.''



வயிரக்கண்ணி கூவினாள். ''போதும் போதும் நிறுத்துங்கள். உங்கள் அபராஜிதனின் கனவு ஒரு நாளும் நிறைவேறப் போவதில்லை. இங்கிருந்து உடனே போய்விடுங்கள்.''

மூலபத்திரனுக்கு வியப்பு தாங்கவில்லை. 'இந்தப் பெண்ணுக்குப் பித்துப் பிடித்துவிட்டது. இல்லை என்றால் காட்டின் நடுவே விரதம் இருப்பதாக வருவாளா? ஆண்களே வரக்கூடாது என்று கட்டளையிடுவாளா? காளி பூஜை செய்வாளா? என்னை மரியாதையின்றி நடத்துவாளா? வலிய வரும் சீதேவியை வெறுத்து ஒதுக்குவாளா? அபராஜிதனை மணக்க முடியாது என்று கூறுவாளா?' - மூலபத்திரனுக்கு ஆத்திரமும் கோபமும் ஒன்று கலந்தன.

''வயிரக்கண்ணி! என்ன பேசுகிறாய்? யாரிடம் பேசுகிறாய்? அபராஜிதன் கனவு நிறைவேறாது என்று ஒரு சிறிய பெண் நீ கூறுகிறாய். நான் சொல்கிறேன். மூலபத்திரன் உறுதியாய்ச் சொல்கிறேன். தெள்ளாற்றுப் போரின்போது இளம் வயதிலேயே வீரதீரப் பிரதாபங்களை நிலைநாட்டியவன். திருப்புறம்பியம் போரில் பாண்டியரைக் கிடுகிடுக்க வைத்தவன். என்னை உன் வார்த்தைகள் பயந்துவிடச் செய்யா. அபராஜிதன் கொங்கு நாட்டிற்குச் செல்லத்தான் போகிறார். ஏராளமாக தங்கக்கட்டிகளைக் கொண்டு வரத்தான் போகிறார், திருத் தணிகை முருகனுக்குப் பொன்மாரியாய்ப் பொழியப் போகிறார். உன்னையும் மணக்கப் போகிறார். அபராஜிதன் இங்கே உன்னைச் சந்திக்க வரும்போது அவரிடம் இதுபோல் பேசிவிடாதே'' என்றார்.

''மாமா, இங்கிருந்து உடனே போய்விடுங்கள். உங்கள் அபராஜிதரை நான் சந்திக்க விரும்பவில்லை. இந்தப் பிறவியில் அவர் என்னை மணக்க முடியாது. நான் உண்மையாக விரதமிருந்து பூஜித்து வணங்கும் கொற்றவை என் விருப்பத்தை நிறைவேற்றுவாள். அப்படி நிறைவேற்றாவிடில் இதோ தேவியின் பாதங்களில் கிடக்கும் வாளால் என் தலையைத் துண்டித்து அவளுக்கு காணிக்கையாக்கி விடுவேன்'' என்று சீறி, கொற்றவையின் பாதங்களில் வைக்கப்பட்டிருந்த வாளைப் பாய்ந்தெடுத்து, நெஞ்சுக்கு நேரே தூக்கிப் பிடித்தாள்.

வெயில் ஒளியில் வாள் பளபளவென மின்னியது. வாளுக்கு நிகராக வயிரக்கண்ணியின் விழிகள் மின்னின. சொற்களில் வேகம் மின்னியது. அவள் தோற்றம் மூலபத்திரனை ஒருகணம் நடுநடுங்க வைத்தது.

ஆனால், அவரா அஞ்சுப[illegible]? பல [illegible]களை[illegible] அனுபவப்பட்டவராயிற்றே?

01 09 2012

''பெண்ணே! என்னை நீ பயமுறுத்த முடியாது. அபராஜிதனுக்கு உன்னை மணம் முடிக்காவிடில் நான் இந்த வாளால் தலையைத் துண்டித்து காளிக்குச் சமர்ப்பிக்கிறேன்'' என்று சொல்லும்போது இளவரசிக்குச் சீற்றம் மிகுந்தது. சொற்களில் மரியாதையும் சிறிது குறைந்தது. ''மூலபத்திரரே! கடைசியாக எச்சரிக்கிறேன்! உடனே இந்த இடத்தைவிட்டுப் போய்விடுங்கள். பாவம் உங்கள் தலையைக் காளிதேவி காணிக்கையாக ஏற்கப் போகிறாளே என்று நினைக்கும்போது ஒரு கணம் தாய் வழி உறவினர் என்ற பாசம் நெஞ்சில் ஊற்றெடுக்கிறது. இங்கிருந்து உடனே போய்விடுங்கள். இல்லாவிடில் எனது வீரர்களை அழைப்பேன். கவுரவமாக இங்கிருந்து செல்வதே நல்லது'' என்றாள்.

மூலபத்திரன் மீசை துடித்தது. கரங்கள் துடித்தன. உடல் ஆடியது.

''சிறியவளே, என்ன வார்த்தை சொல்லிவிட்டாய்? என்னை இங்கிருந்து போகச் சொல்ல உனக்கு உரிமை ஏது? பல்லவ நாட்டுத் தளபதி நான்... இது அபராஜிதருக்குச் சொந்தமான வனம்... உன் வீரர்களும் எனக்குக் கட்டுப்பட்டவர்கள்...''

''இந்த மலைச்சாரல் அபராஜிதருக்குச் சொந்தமான இடமன்று. என் தந்தை எனக்குப் பட்டயம் எழுதி வைத்த இடம். காடு, கோயில், மாளிகை யாவும் பிறர் அடைய முடியாதவை. மீண்டும் எச்சரிக்கிறேன், தாய்மாமன் அவர்களே, உடனே இங்கிருந்து புறப்படுங்கள்'' என்று பெண் புலியின் குரல் போல் சீறினாள். அவமான உணர்ச்சி மூலபத்திரனை ஆட்கொண்டது. அவர் ஏதோ சொல்ல வாயெடுக்குமுன் வயிரக்கண்ணி அருகே நின்றிருந்த வீரர்களை நோக்கி, ''ஏன் பார்த்துக் கொண்டு நிற்கிறீர்கள்? அடுத்த சொல் இவரிடமிருந்து வருவதற்கு முன் இவரை அப்புறப்படுத்திக் காட்டிற்கு வெளியே கொண்டு விட்டு வாருங்கள்'' என்று கட்டளையிட்டாள்.

மரத்தின் மறைவிலிருந்த விக்கியண்ணனுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு எல்லையில்லை. அங்கு நடைபெற்ற உரையாடல்களை ஒன்று விடாமல் கேட்டுக் கொண்டிருந்தவன், இளவரசியின் கட்டளை பிறந்ததும் அடுத்து என்ன நடக்கப் போகிறதோ என்று அறிய மெல்ல மரத்தின் மறைவினின்று எட்டிப் பார்த்தான்.

## 9. இளவரசிக்கு ஆபத்து

மூலபத்திரனை வீரர்கள் நெருங்கினர். ஒருகணம் அவனுக்கு வியப்பாக இருந்தது. ஒரு பெண்ணின் கட்டளையை ஏற்று, வீரர்கள் பல்லவ தளபதியை விரைந்து நெருங்குகிறார்கள். தன்னுடைய பதவிக்கு மதிப்பில்லையா? அல்லது செல்வாக்கு குறைந்துவிட்டதா?

அந்த இடத்தை விட்டு நகராவிடில், வீரர்களிடம் அவமானப் பட நேரிடும். அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டுவிட்டாலோ ஒரு பெண்ணின் கட்டளைக்குப் பணிந்தது போலாகிவிடும். எது சரி?

ஒரேகணத்தில் முடிவு செய்துவிட்டான் மூலபத்திரன். சீற்றம், அவமானம், தோல்வி யாவும் கலந்த ஓர் உணர்ச்சி அவனை இயங்க வைத்தது. சட்டென்று திரும்பினான். திரும்பும்போது அவன் பார்த்த பார்வை -

''பெண்ணே! நான் பார்த்து வளர்ந்தவள் நீ. உன்னைத் தூக்கித் தோளிலே வளர்த்துச் சீராட்டியிருக்கிறேன். எனக்கு ஏற்ற வயது உடையவளாய் நீ இருந்திருந்தால் உன்னை முறைப்படி நான் மணந்திருப்பேன்.. இப்போது இந்த இடத்திலிருந்து உனது வீரர்களை ஏவி என்னைப் போகுமாறு பயமுறுத்தியிருக்கலாம். சிறியவளே! நான் அஞ்சவில்லை. பணிந்துவிடுவது போல் பாவனை செய்தேன். மாமன் பயந்துவிட்டான் என்று நீ நினைக்கலாம்... போர்த்தந்திரம் அறிந்தவன். உன்னுடன் போர்க்கொடி உயர்த்திவிட்டேன். உன்னை அபராஜிதனுக்கு மணம் முடிக்காமல் நான் ஓய மாட்டேன். அப்படிச் செய்யாவிடில் சற்று முன்பு கூறியது போன்று என் தலையைக் காளிக்குச் சமர்ப்பித்து விடுவேன்...'' என்று முணுமுணுத்தவாறு சென்றான்.

தன் மாமன் செல்வதைப் பார்த்துக்கொண்டு நின்ற வயிரக்கண்ணி பெருமூச்சு விட்டாள்.

கொற்றவையின் பக்கம் திரும்பினாள். தேவியின் பாதத்தருகே விரைந்தாள்.

''தேவி! மகிஷாசுரனை மாய்க்கப் போர்க்கோலம் பூண்டவளே! அம்மா! என்னை, என் குடும்ப விரோதியிடம் ஒப்படைக்க என் தாய்மாமனே முடிவெடுத்துவிட்டார். அதற்காகவா நான் விரதம் இருந்தேன்? என் அந்தரங்கத் தூய்மையைச் சோதிக்கிறாயா? இந்தக் காட்டுப் பகுதியில் சில நாள்கள் நிம்மதியாக உன்னைத் துதித்து வணங்குவதற்குக் கூட எனக்கு உரிமை இல்லையா? இந்த இடம் எங்கள் குடும்பத்துச் சொத்தல்லவா? தேவி, திரிசூலி, இந்த வீடு எனக்கு வேண்டாம். இந்தக் காடு எனக்கு வேண்டாம். இந்தப் பல்லவ நாட்டை விட்டு என்னைக் கண்காணாத தீவிற்கு அனுப்பிவிடு. அந்தத் தீவு, உனது அருள் பூரணமாக நிறைந்திருக்கும் பொற்பூமியாக இருக்கட்டும். அங்கே மூப்பென்றும், பிணியென்றும், மூவாசைப் பேயென்றும் தோன்றாமலிருக்கட்டும். தேவி, ரணசாமுண்டீ! என் மனத்துக்குகந்த மணாளனை மணக்க நீ அருள் செய். இல்லாவிடில் இந்த வாளால் நான் என் தலையைக் கொய்து உன் காலடியில் காணிக்கையாக்கி விடுகிறேன். உனது பாதத்தை அழகாய் அலங்கரிக்கும் செம்பருத்தியும், செங்குங்குமமும், செவ்வரளியும் அளிக்காத செவ்வண்ணத்தை இந்தக் கன்னியின் செங்குருதி அளிக்கட்டும். ஏ! ஜெகன்மாதா!''

அவள் வாய்விட்டு அலறினாள். வார்த்தைகள் இதயச் சுனையினின்று பொங்கி எழுந்தன. உணர்ச்சி மிகுந்த சொற்கள் உள்ளமெனும் கடலாழத்திலிருந்து சீறிப் பாய்ந்தன.

விக்கியண்ணனுக்கு மெய் சிலிர்த்தது. 'வயிரக்கண்ணி வயிரம் போன்ற நெஞ்சுடையவள் என்று நினைத்தோம். ஆனால் அவள் உள்ளத்தில் தூய்மையும், தெய்வபக்தியும் நிறைந்திருக்கின்றன. உடலழகைப் பெற்றிருக்கும் அவள், ஓர் அரசனை மணந்து சுக சவுக்கியங்களுடன் வாழலாம். ஆனால் அவள் மிகப்பெரிய விரதத்தை அறுவடை செய்ய விதைத்துவிட்டாள். நாம் இங்கே இருப்போமா, அல்லது இறைவன் விட்டவழி என்று திருத்தணிகைக்குச் செல்லும் வழியைத் தேடிச் சென்றுவிடுவோமா?' என்று விக்கியண்ணன் எண்ணினான்.

'அவ்வளவு எளிதல் சென்றுவிட முடியாது' என்று அவன் உள்ளுணர்வு கூறியது.

வயிரக்கண்ணி, தேவியிடம் முறையிட்டு விட்டுத் திரும்பினாள். அங்கே நின்று கொண்டிருந்த வீரர்களை நோக்கி, ''ஏன் இங்கே நிற்கிறீர்கள்? தளபதி இந்தக் காட்டின் எல்லையை



விட்டு நீங்கும் வரையில் சென்று பார்த்துவிட்டுத் திரும்புங்கள்...'' என்று கட்டளையிட்டாள்.

வீரர்கள் சென்றவுடன் வயிரக்கண்ணி என்ன செய்யப் போகிறாள் என்று கவனித்தவாறு நின்றான் விக்கியண்ணன்.

வயிரக்கண்ணி சுற்றுமுற்றும் பார்த்தாள். ''கவிஞரே! கவிஞரே!'' என்று கூவி அழைத்தாள்.

வயிரக்கண்ணியின் குரலில்தான் சிறிது நேரத்தில் எத்தகைய மாற்றம்! மூலபத்திரனிடம் அவள் சீறியதும்...

கொற்றவையிடம் மனமுருகப் பிரார்த்தித்ததும் -

இப்போது ஆவலுடன் ''கவிஞரே, கவிஞரே'' என்று கூவி அன்புடன் அழைப்பதும் -

எரிமலையும், மழைத்தாரையும், தேன் துளியுமாக ஒரே போதில் எவ்வளவு வேற்றுமைகள்!

விக்கியண்ணன் புன்முறுவல் பூத்த முகத்துடன் வயிரக் கண்ணியின் எதிரே வந்து நின்றான்.

''வந்துவிட்டேன்...'' என்று சொல்ல முனைந்தவன், சொற்களை நிறுத்திக் கொண்டான்.

''கவிஞரே! சற்று முன்பு இங்கே நடந்ததைப் பார்த்திருக்க மாட்டீர்கள். ஆனால் கேட்டிருப்பீர்கள்'' என்று இளவரசி கேட்டாள்.

''பார்த்தேன், கேட்டேன். உங்கள் தகுதியை நிலைநாட்டி விட்டீர்கள் என்பதைப் புரிந்து கொண்டேன்'' என்றான் விக்கியண்ணன்.

''எனக்குத் தகுதி எதும் இருப்பதாக நான் நினைக்கவில்லை. ஒரே ஒரு தகுதி இருக்கிறதென்றால், தேவியின் உருவை இதயத்தில் அழுத்தமாகப் பிடித்திருக்கும் தகுதிதான்'' என்று அடக்கமாகக் கூறினாள்.

''அது மகத்தான தகுதி. அந்தத் தகுதி பூரணமாக இருப்பதால்தான் பல்லவ தளபதியை ஒரே சொல்லால் ஓட்டி விட்டீர்கள்'' என்றான் விக்கியண்ணன்.

''அவர் ஓடவில்லை. திரும்பி வருவார். வீரர்களுடன் வருவார். என்னை அபராஜிதவர்மருக்கு மணமுடிக்காமல் ஓயமாட்டார்'' என்று கூறும்போது அவள் குரலில் கவலை தெரிந்தது.

விக்கியண்ணன், இயற்கையாகவே நிமிர்ந்த தோ குடையவன். மேலும் கம்பீரமாக நிமிர்ந்து நின்றான். தொண்டையைக் கனைத்துக் கொண்டான்.

''தேவி'' என்று அவன் அழைத்த குரலில் வீர கர்ஜனை இருந்தது.

''தேவி, நீங்கள் கவலைப்படாதீர்கள். பல்லவ தளபதியின் எண்ணம் நிறைவேறாது'' என்றான்.

வயிரக்கண்ணி சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, ''அதெப்படி சொல்கிறீர்கள்?'' என்று கேட்டாள். கண் இமைகளின் படபடப்பு அருகே இருந்த மலரொன்றில் அமர்ந்திருந்த பட்டாம்பூச்சியை நினைவுபடுத்தியது.

''என்னிடம் போதிய உறுதியிருக்கிறது'' என்றான் விக்கியண்ணன்.

''உங்களிடமென்ன, என்னிடமும் இருக்கிறது'' என்று கூறி நகைத்தாள் இளவரசி.

''என்னிடம் பல்லவ நாட்டையே முறியடிக்கக்கூடிய சக்திப் பின்னணியில் இருக்கிறது'' என்று கூறினான் விக்கியண்ணன்.

வயிரக்கண்ணி சிறிது நேரம் மவுனமாயிருந்தாள். பிறகு, ''நான் நம்புகிறேன். ஆனால், அதெப்படி நடக்கும் என்ற கவலை எனக்கு. கவிஞர்கள் சொன்ன சொல் தவறமாட்டார்கள் என்பதை அறிவேன். ஆனால், அதற்கான வலிமை வேண்டுமே'' என்றாள்.

''நான் கவிஞன் மட்டுமல்ல, வீரன்'' என்றான் விக்கியண்ணன்.

வயிரக்கண்ணி நகைத்தாள். ''உங்கள் வாய் வழியே சில உண்மைகளை வரவழைக்க வேண்டும் என்று நினைத்தேன். நீங்கள் கவிஞரே இல்லை என்று சொல்லிவிட வேண்டும் என்று நினைத்ததுண்டு. ஆனால் நந்திக் கலம்பகப் பாடலைக் கம்பீரமாக நீங்கள் பாடியவுடன் நான் நம்பினேன். இருந்தாலும் கவிஞர் என்ற போர்வைக்குள்ளே மற்றோர் உருவம் இருக்கிறது என்று என் உள்ளுணர்வு சொல்லிக்கொண்டே இருந்தது. என் இதய ஒலி எதை வெளிப்படுத்துகிறதோ அதன்படி நடப்பவள் நான். அதனால்தான் முதலில் உங்களைப் பார்த்தவுடனேயே என் மனத்திலுள்ளதனைத்தையும் கொட்டி விட்டேன்'' என்றாள்.



விக்கியண்ணன் பிரமித்தான். ஆற்றல் மிகுந்த அழகி இவள் என்று முடிவு செய்தான்.

''உம். பிறகு சொல்லுங்கள்'' என்றாள் இளவரசி.

''நான் கவிஞன், வீரன். வீரனுக்கும் மேம்பட்டவன்'' விக்கியண்ணன் கம்பீரமாகக் கூறினான்.

''தெரியும். உங்கள் முகத்தில் ராஜகளை ஒடுகிறது'' என்று கூறியவுடன் விக்கியண்ணன் அதிர்ச்சியடைந்தான்.

''தேவி! உங்களை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. முக்காலும் உணர்ந்த நிமித்திகை போல் நீங்கள் விளங்குகிறீர்கள். பல்லவ மன்னரைக் குறித்தோ, பல்லவ தளபதியைக் குறித்தோ, நீங்கள் கவலைப்பட வேண்டாம். தங்களுக்கு உதவ நானிருக்கிறேன், எனது நண்பரிருக்கிறார்'' என்றான்.

''உங்கள் நண்பர் எங்கே?''

''உங்களுக்குத்தான் தெரியும். உங்கள் வீரர்கள் அவரைச் சூழந்து கொண்டது வரை நான் அறிவேன்...''

''உங்கள் நண்பர் உங்களைப் போல் வீரர். அவர் மிக எளிதில் மலைச்சாரல் மாளிகைக் காவல் வீரர்களை விரட்டி விட்டு ஓடிவிட்டாராம்.''

''ஓடிவிட்டார் என்று சொல்லாதீர்கள். உங்கள் வீரர்கள்தாம் ஓடி வந்திருப்பார்கள்.''

''ஓடி வந்தார்கள், சிலருக்குப் படுகாயம்.''

''நான் அவரைச் சந்திக்க வேண்டும்.''

''எங்கே சந்திப்பீர்கள்?''

''அவரும் நானும் திருத்தணிகைக்குச் செல்வதாகப் புறப்பட்டோம். அதனால் அவர் அங்கு சென்று காத்திருப்பார்!''

''ஓகோ!''

''நானும் அங்கே செல்ல வேண்டும்.''

''அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?''

''உங்கள் சொல்லைக் காப்பாற்ற வேண்டும்.''

''எ...ன்...ன?''

''நான் கேட்டதைத் தருவதாகச் சொன்னீர்கள்!''

''இப்போதும் சொல்கிறேன்.''

''ஒரு குதிரை வேண்டும்.''

''இரண்டு வேண்டாமா? உங்கள் நண்பருக்கு வேண்டாமா? பல்லவ நாட்டை இதுபோல் நடந்தே சுற்றிப் பார்த்துவிட எண்ணமா?''

இளவரசி இவ்வாறு கேட்டவுடன் விக்கியண்ணனுக்கு ஏற்பட்ட திகைப்பிற்கு அளவில்லை.

''குதிரைகள் வேண்டும். ஆனால் இப்போதைக்கு ஒரு குதிரை போதும். திருத்தணிகைக்குச் சென்ற பிறகு மற்றொரு குதிரையை ஏற்பாடு செய்து கொடுத்தால் போதும்'' என்று விக்கியண்ணன் கூறியதைக் கேட்டவாறு விழிகளை மூடியபடி நின்ற இளவரசி, ''குதிரையைத் தருகிறேன். திருத்தணிகையிலும் மற்றொரு குதிரையைப் பெற ஓர் ஓலை தருகிறேன்'' என்றாள்.

மாளிகைக்குள் சென்ற இளவரசி, விக்கியண்ணனை கீழ்க் கூடத்தில் உட்கார வைத்துவிட்டு, மேல் மாடத்திற்குச் சென்றாள்.

சிறிது நேரம் கழித்து பணிப்பெண் அங்கே வந்தாள்.

''குதிரை கேட்டீர்களே, வெளியே நிற்கிறது. இதோ, இந்த ஓலையைக் கொண்டு போய் மலையடிவாரத்திலுள்ள சத்திரத்துத் தலைவனிடம் கொடுங்கள். அவர் ஏற்பாடு செய்வார் மற்றொரு குதிரையை'' என்று கூறிவிட்டு, மறுமொழியை எதிர்பாராமல் சென்று விட்டாள்.

விக்கியண்ணன் சிறிது நேரம் அங்கே அமர்ந்திருந்தான். மற்றொரு பணிப்பெண் வந்தாள். அவள் சைகை செய்து, அவனைச் சமையற்கட்டிற்கு அழைத்தாள். நுனி வாழை இலையில் உணவு வகைகள் பரிமாறப்பட்டிருந்தன. சுவையான பதார்த்தங்களை ருசித்து, ரசித்து உண்டு எழுந்தவன் கரங்களில், ஒரு மூட்டை அளிக்கப்பட்டது.

அதில் ஆடைகள் இருந்தன. சுனையில் தவறிவிட்டதென்று அவன் திகைத்த விடேல் விடுகு அடையாளச் சின்னம் இருந்தது.

''இறைவியின் அருள் கூட்டுவித்தால், காஞ்சி நகரத்தில் வரும் பவுர்ணமியன்று சந்திக்கலாம் என்று இளவரசி சொல்லச் சொன்னார்கள்'' என்றாள் பணிப்பெண்.

''இளவரசியைச் சந்தித்துப் பேச வேண்டும்'' என்று சொன்னான் விக்கியண்ணன்.



''சந்திக்க மாட்டார்கள்...'' என்று மறுமொழியை அழுத்தமாகக் கூறினாள் பணிப்பெண்.

''காஞ்சியில் எங்கே சந்திக்க முடியும்?'' விக்கியண்ணன் கேட்டான்.

''மேற்குக் கோட்டை வாயில் அருகே காடவரையர் மாளிகையில்'' என்று மட்டும் கூறிவிட்டு அவள் போய்விட்டாள்.

அவள் நடந்து செல்லும் நடையழகை ரசிக்க அவனுக்கு அப்போது தோன்றவில்லை.

சிறிது நேரம் அப்படியே நின்று கொண்டிருந்தான். பிறகு, வெளியே நின்று கொண்டிருக்கும் குதிரை அருகே சென்று குதிரையின் வலிமையைச் சோதித்தான்.

குதிரைமீது தாவி ஏறியபோது, மற்றொரு பணிமகள் வந்தாள்.

''இந்த ஒற்றையடிப் பாதை வழியே சென்றால், சிறிது தொலைவிற்குப் பிறகு இரண்டு கிளைப் பாதைகள் பிரியும். வலப்புறம் செல்வது திருத்தணிகைக்கு'' என்று கூறி மெல்லிய புன்னகையை இதழ்களில் அரும்ப விட்டாள்.

விக்கியண்ணன் மெல்லக் குதிரையை நடத்தினான். எழிலார்ந்த இயற்கை கொலுவீற்றிருக்கும் அந்த வனத்தை விட்டு அகலவே அவனுக்கு மனமில்லை. அவன் தனக்குத்தானே சிரித்துக் கொண்டான். 'இளவரசனாக இருப்பதைவிட கவிஞனாக இருந்திருக்கலாம் போலிருக்கிறது. மேலும் கவிதை, இலக்கணத்தை முறையாகப் பயின்று கவிச்சக்கரவர்த்தியாகி யிருக்கலாம். இளவரசியை இன்னும் வர்ணித்திருக்கலாம். இந்த வனம், அருவி, மடு, மரங்கள், கொற்றவை கோயில் அனைத்தையும் வர்ணித்திருக்கலாம்' என்று நினைத்தபோது அவனுக்குச் சிரிப்பு வந்தது.

பகலெல்லாம் குதிரை மீது பயணம் செய்து திருத்தணிகை அடைந்த விக்கியண்ணன், ஆதித்தன் எங்காவது தனக்காகக் காத்திருக்கிறாரா என்று தேடினான்.

ஆனால் அப்போது அவனுக்கு அன்று மாலை நடந்த சம்பவம் தெரிய நியாயமில்லை.

விக்கியண்ணன் புறப்பட்டுச் சென்ற ஐந்து நாழிகைக்குப் பிறகு, வயிரக்கண்ணி மாளிகையிலிருந்து புறப்பட்டாள். பணிப்பெண்களை, வண்டிகளில் வருமாறு ஏற்பாடு செய்தாள்.



01 09 20

அழகிய சிவிகையில் அவள் ஏறி அமர்ந்தாள். இருபுறமும் இரு வீரர்கள் சூழ அவள் திருத்தணிகை நோக்கிப் புறப்பட்டாள்.

களைப்பால் அவள் சிறிது கண்ணயர்ந்தாள். சிவிகையின் குலுக்கல், தொட்டிலில் தாலாட்டுவது போலிருந்தது.

கதிரவன், மலை வாயிலில் விழும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது.

குட்டை மரங்களும், பாறைகளும், சிறு குன்றுகளும் இருபுறமும் நிறைந்த சாலை வழியே சிவிகை சென்று கொண்டிருந்தது.

திடீரென ஓர் ஓலம், பரபரப்பு, வாள் மோதும் ஒலி கூச்சல். வயிரக்கண்ணி கண்விழித்து, சிவிகைத் திரையை விலக்கி வெளியே எட்டிப் பார்த்தாள்.

சில வீரர்கள் சிவிகையைச் சூழ்ந்திருந்தனர். சிவிகைக்குப் பாதுகாவலாக வந்த வீரர்களுடன் அவர்கள் வாளைச் சுழற்றிச் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர்.

பாறைகளின் மறைவில் இளவரசியின் சிவிகை வருவதை எதிர்பார்த்துக் காத்திருந்த வீரர்கள் பல்லவ வீரர்களாக இருந்ததை அறிந்த இளவரசியின் காவல் வீரர்களுக்கு ஒரு கணம் வியப்புத் தாங்கவில்லை. ஆனால், சற்றுத் தொலைவில் மூலபத்திரன் குதிரை மீது அமர்ந்திருப்பதைக் கண்ட பிறகுதான், உண்மையிலேயே இளவரசியைக் கவர்ந்து செல்ல வந்த வீரர்கள் என்பதைத் தெரிந்து கொண்டனர்.

இளவரசியின் வீரர்கள் அஞ்சாமல் போர் புரிந்தனர்.

○



## 10. கலையும் பசியும்

சிற்பி மகள் மீன்விழியைக் கண்டவுடன் ஆதித்தன் உள்ளத்துள் சற்றே திடுக்கிட்டாலும் அதை வெளிக்குப் புலப்படுத்தாமல் மெல்லப் புன்னகை புரிந்தான். இயற்கையான பசி மயக்கத்துடன் களைப்பும் சேர வாடியிருந்த முகத்தை மாற்றிக் கொள்ள முயன்றான். மீன்விழியும் மிகத் திறமையுடன் அவனைத் தேடி வராமல் எதேச்சையாக அங்கு வந்தது போல் நடித்து, ''அடாடா, இங்கேயா இருக்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

தன்னைவிடச் சிற்பி மகள் மிகவும் சாமர்த்தியமாக நடிப்பதை உணர்ந்த ஆதித்தன், ''ஓகோ! இங்கு எப்போது வந்தீர்கள்?'' என்று கேட்டான். பேசுவதற்குச் சற்று சிரமமாகத்தானிருக்கிறது.

''நீங்கள் புறப்பட்ட பிறகு புறப்பட்டு வருவதற்குச் சற்று முன்பு வந்தேன்!'' என்றாள்.

ஆதித்தன் உடனே ஏதும் பேசவில்லை. பிறகு மெல்ல எழுந்து, ''சிற்பக்கூடம் அங்கே பல நாள்களாக இருக்கிறதா?'' என்று கேட்டான்.

''பல ஆண்டுகளாக'' என்றாள் மீன்விழி.

''சிற்பிகள் மிக சுறுசுறுப்பாகப் பணியாற்றுகிறார்கள்'' என்று கூறி மெல்லச் சிரித்தான் ஆதித்தன்.

''பசி தாகம் மறந்து நீங்களே பணியாற்றும்போது தங்கள் வாழ்க்கையையே சிற்பக் கலைக்கு அர்ப்பணித்தவர்கள் அயர்வின்றிப் பணியாற்றக் கேட்பானேன்?'' என்று கூறி முல்லைப் பற்களை மெல்லத் தெரியச் செய்தாள் சிற்பி மகள்.

''எனக்குச் சிற்பக்கலை மீது மிகுந்த ஆர்வம், அதனால்தான் சிற்பிகளுடன் சிற்பிகளாகச் சேர்ந்து கொண்டேன்'' என்றான் ஆதித்தன்.

''குதிரை மீது கூட ஆசை போலிருக்கிறது. உங்கள் நண்பருக்கும் குதிரை மீது மிகுந்த பிரியம், அப்படித்தானே?'' - மீன்விழியாள் கேட்டாள்.



01 09 2

ஆதித்தனுக்கு மெல்லக் கோபம் பொங்கியது. துணிவு மிகுந்த சிற்பி மகள் பொல்லாதவளாகவும் இருப்பாள் போலிருக்கிறது. சோழநாட்டுப் பெண்களைவிட அதிபுத்திசாலி யாக இருக்கிறாளே... சிற்பிகளைச் சோழநாட்டிற்கு அழைத்துச் செல்லும்போது இவளையும் அழைத்துச் சென்றுவிட வேண்டும் என்று முடிவு செய்துகொண்டான்.

பேச்சை மாற்ற விரும்பிய ஆதித்தன், ''காவிரி நதியைப் பார்த்திருக்கிறாயா, மீன்விழி?'' என்று கேட்டான்.

''பாலாற்றை விடப் பெரிதா?'' மீன்விழி கேட்டாள்.

ஆதித்தன் சிரித்தான். ''நல்லவேளை திருப்பதிக்கருகே ஓடுகிறதே காட்டாறு அதைவிடப் பெரியதா என்று கேட்காமல் இருந்தாயே!'' என்று கூறி அவள் விழிகளை நோக்கினான்.

பெண்மைக்குரிய நாணத்துடன், ஆண் மகனுக்குரிய கம்பீரமும் சேர்ந்திருந்ததால், அவளுடைய மேனியின் ஒவ்வோர் அங்கமும் மீண்டும் மீண்டும் பார்த்து ரசிக்கும்படியாக இருந்தது. கணுக்கால் வரை உயர்ந்திருந்த சேலையும், அழுத்தமான வெள்ளிக் காப்பும், சிற்பம் போல் செதுக்கப்பட்ட இடையும், இடையுடன் சேர்ந்த ஆலிலை வயிறும் உந்தியும், உழைப்பால் மினுமினுக்கும் உடலும், வாளிப்பான தோளும், மூங்கில் போன்ற கரங்களும், சங்குக் கழுத்தும், கருமையும் சிவப்பும் கலந்த நிறமுடைய உதடுகளும், எட்பூ நாசியும், கருவண்டினைப் போல அலைபாயும் விழிகளும், வீரன் கைவில்போல் வளைந்த புருவமும் - ஆகா ஒரு கவிஞன் வர்ணித்துப்பாடத் தக்க வடிவம்!

ஆதித்தன் பாதாதி கேசம் வரை வைத்த விழி வாங்காது தன்னை நோக்குவதைக் கண்ட மீன்விழி, அவன் யார் என்பதை எப்படியாவது அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலில், ''எனக்குத் தெரிந்தது அந்தக் காட்டாறு. அதன் பெயர் காட்டாறன்று, சுவர்ணமுகி. அதைவிடப் பெரியது பாலாறு. பெரியது என்றால் மிகப் பெரியது! அப்பப்பா, எங்கெங்கெல்லாம் வளைந்து வளைந்து செல்கிறது. காஞ்சியில் காணலாம்! மாமல்லை அருகே காணலாம்! நீங்கள் கூறும் காவிரி நதி, பாலாற்றைவிடப் பெரியதோ?'' என்று கூறி விழிகளைச் சுழலவிட்டாள். தன் அருகே, மிக அருகே, அவள் நெருங்கி நிற்பதை உணர்ந்த ஆதித்தன் சற்று விலகியவாறு, ''நீ பொன்னி நதியைப் பார்த்தால் அதை விட்டுவரச் சம்மதிக்க மாட்டாய். பெரிய நதி அது. அகத்தியர் அருளிய நதி அது; மேற்கே வெகு தொலைவிலிருந்து ஓடிவரும் நதி அது'' என்றான்.



''ஓ! எங்கள் சக்கரவர்த்தி சொல்லியிருக்கிறார். அவரது கீர்த்தியைக் காவிரியின் நதிப் பிரவாகம் ஒலித்துக் கொண்டே செல்கின்றதாம். காவிரி நதியின் கிளை நதியான மண்ணி யாற்றங்கரையில்தான் எங்கள் சக்கரவர்த்தி பாண்டிய மன்னனை ஓட ஓட விரட்டி, சோழச் சிற்றரசனைக் காப்பாற்றினாராம். ஆம்! எனக்கு அந்த நதியைக் காண ஆசைதான்'' என்றாள்.

ஆதித்தன் முகம் சினத்தால் சிவந்தது. ஒரு சிற்பியின் மகளுக்கு இருக்கும் நாட்டுப்பற்றை நினைக்கப் பெரும் வியப்பாக இருந்தது. சோழச் சிற்றரசனைப் பல்லவ சக்கரவர்த்தி காப்பாற்றினாராம்! சிற்பியின் மகளுக்கு என்ன துணிவு இருந்தால் இப்படி என் எதிரே பேசியிருப்பாள்... ஏதோ கூற வாயெடுத்த ஆதித்தன் மிகச் சிரமப்பட்டு வார்த்தைகளை அடக்கிக் கொண்டான்.

அவன் உள்ளத்துக் குமுறல் எளிதாக அடங்காதது போல் தோன்றியது. 'சோழ நாடு சிறிய நாடுதான். சோழ அரசன் சிற்றரசன்தான். நாமும் சிறிய இளவரசன்தான். அதை மாற்ற வேண்டும் என்பதுதானே நமது இலட்சியம். இந்திரன் உதவிக்குச் சென்ற முசுகுந்தன் பரம்பரையில் வந்த சோழர்கள், பாரெங்கும் நடுநடுங்க ஆண்ட கரிகாலன் பரம்பரையில் வந்த சோழர்கள், சிற்றரசர்கள் ஆகிவிட்டார்கள்! பாவம், இந்தப் பெண். என்னை அறியமாட்டாள். என் இலட்சியத்தை அறியமாட்டாள். மீண்டும் புலிக்கொடியைக் காவிரிக்கரை முதல் விந்தியம் வரை பறக்கவிடக் கனவு கண்டு துடித்தெழுந்து, அதை நிறைவேற்ற பல்லவ நாட்டில் சுற்றுப்பயணம் செய்வதை அறியமாட்டாள். அறியாமல் சொல்லிவிட்டாள் பாவம்! பிழைத்துப் போகட்டும்.

'பல்லவ நாட்டைப் புகழ்ந்து, சோழநாட்டை மிகத் துரும்பாக எண்ணிப் பேசும் சிற்பி மகளை சோழநாட்டிற்கு அழைத்துச் சென்று, சோழநாட்டின் பெருமையை உணர வைக்காவிட்டால் என் பெயர்...'

''என்ன, பகற் கனவு காண்கிறீர்கள், விழிகளை மூடிக்கொண்டு?'' என்று சிற்பி மகள் கேட்டவுடன் ஆதித்தன் உடலைச் சிலிர்த்தபடி விழித்துக் கொண்டான்.

'ஆம். நாம் கனவுதான் கண்டு கொண்டிருக்கிறோம். மிகப் பலம் பொருந்திய பல்லவ நாட்டை வெல்வது அவ்வளவு எளிதான செயலன்று. ஒரு சிற்பி மகளுக்கே இவ்வளவு திறமை, துணிவு இருக்கிறதென்றால் மன்னன் அபராஜிதனுக்கு எவ்வளவு திறமை இருக்கும்?' அவன் தொண்டையைக் கனைத்துக் கொண்டான்.

01 09 20

''என்ன சொன்னாய்? உங்கள் சக்கரவர்த்தி சோழ சிற்றரசனைக் காப்பாற்றினாரா?'' என்று கேட்டான் ஆதித்தன்.

''உங்கள் -என்று ஏதோ மூன்றாவது மனிதரைப் பற்றிப் பேசுவதுபோல் பேசுகிறீர்களே. நமது சக்கரவர்த்தி என்று சொல்லுங்கள். நீங்கள் சோழ நாட்டைச் சேர்ந்தவராக இருந்தாலும், சோழநாடு, பல்லவ நாட்டிற்குள் அடக்கம். அது கிடக்கட்டும், நீங்கள் புகழும் காவிரி நதியைக் காண என்னை அழைத்துச் செல்வீர்களா?'' என்று கேட்டாள்.

'மெய்யாகவே அவள் கேட்கிறாளா?' என்ற சந்தேகம் ஆதித்தனுக்கு ஏற்பட்டது. தான் கேட்பது நிஜம்தான். சாதாரண வழிப்போக்கன் அல்லன். சோழநாட்டு இளவரசன். அபராஜிதனின் நண்பன் என்பதைச் சொல்லி விடுவோமா என்று ஒரு கணம் எண்ணினான்.

மீன்விழியாளின் விழிகள் சுழன்றன. அவள் தன்னை ஊடுருவிப் பார்ப்பதுபோல் அவனுக்குத் தோன்றியது.

''நான் சோழநாட்டைச் சேர்ந்தவன்தான். சோழநாட்டில் கலை உணர்வு அதிகம். பல்லவ நாட்டில் சிற்பமும் சித்திரமும் மிகவும் சிறந்து விளங்குவதைக் கேள்விப்பட்டேன். இசையும் நடனமும் மகோன்னத நிலையில் இருப்பதையும் கேள்விப் பட்டேன்...'' என்று அவன் கூறி வரும்போது மீன்விழி மெல்ல நகைத்தவாறு, ''கேள்விப்பட்ட ஒன்றே என் சகோதரியைச் சோழநாட்டிற்கு அழைக்க வைத்துவிட்டது'' என்றாள்.

''ஆமாம், ஆமாம். உங்கள் சகோதரி - இளையவளா மூத்தவளா என்று எனக்குத் தெரியாது. காளத்தியில் நடனமாடிக் கொண்டிருந்ததைக் கண்டேன். உடனே தஞ்சைக்கு வருமாறு கேட்டுக் கொண்டேன்'' என்றான்.

''நான் உங்களை ஒன்று கேட்கிறேன், மறைக்காமல் சொல்வீர்களா? நீங்கள் யார்? சோழ நாட்டிற்கு வருமாறு அழைக்கிறீர்களே, நீங்கள் அழைத்தால் போதுமா? தஞ்சையில் நீங்கள் பெரிய அதிகாரியா?'' மீன்விழி கேட்டாள்.

ஆதித்தன் உடல் சிலிர்த்தது. சிற்பி மகளின் விழி மட்டுமன்று, சொல்லும் இதயத்தில் ஊடுருவுவதை உணர்ந்தான். 'பெரிய அதிகாரி?'

அவனுக்குச் சிரிப்பு வந்தது.

''எதை நினைத்து சிரிக்கிறீர்கள்?'' - அவள் கேட்டாள்.



''அதிகாரியா என்று கேட்டாயே, அதனால் நகைத்தேன். விஜயாலய சோழர் என்னிடம் பெரிய பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார். சோழநாட்டைக் கலைமணம் வீசும் பூமியாக்க வேண்டும் என்று என்னிடம் கட்டளை யிட்டிருக்கிறார்'' என்றான் ஆதித்தன்.

''ஓகோ!''

''அதனால்தான் இந்த நாட்டில் சுற்றுப்பயணம் செய்கிறேன். கலைஞர்களைச் சந்திக்கிறேன். நாட்டிய மகளான தங்கள் சகோதரியையும் சந்தித்தேன்...''

''ஓகோ!''

''என்ன அப்படி அலட்சியமாகக் கேட்கிறாய்?''

''அலட்சியமில்லை. உங்கள் இலட்சியத்தையும் உங்கள் அரசரின் இலட்சியத்தையும் பாராட்டுகிறேன்.''

''சிற்பியின் மகளான உன்னையும் சந்தித்தேன். எங்கள் நாட்டிற்கு வருமாறு அழைத்தேன்...''

''வருவதாக ஒப்புக் கொண்டுவிட்டேனே... எப்போது வர வேண்டும்? எப்படி வர வேண்டும்? எங்கே வர வேண்டும்?''

மீன்விழியாள் இவ்வாறு கேட்டவுடன் ஆதித்தனுக்கு மிகுந்த சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. 'உள்ளொன்றும் வெளியே ஒன்றும் பேசுகிறாளா? அல்லது நம்மை அடையாளம் தெரிந்து கொண்டுவிட்டாளா?'

''என் கேள்விக்கு இப்போதும் நீங்கள் மறுமொழி கூறவில்லை. காவிரி நதியைக் காண வேண்டும். புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தஞ்சையைக் காண வேண்டும். உங்களுடனேயே புறப்பட்டு விடலாமா?''

மீன்விழியாள் இவ்வாறு கேட்டவுடன் ஆதித்தன் முகம் கோபத்தால் சிவந்தது. சிற்பி மகள் நடிக்கிறாள் என்று எண்ணியவனாக, ''நான் தஞ்சைக்கு இப்போது செல்ல வில்லை...'' என்றான்.

''என் சகோதரியை வரச் சொல்லியிருக்கிறீர்களே...?''

''ஆமாம். திருத்தணிகையில் என்னைச் சந்திக்குமாறு சொல்லியிருக்கிறேன். அவள் உன்னைச் சந்தித்தாளா?''

''நீங்கள் பல்லவ சக்கரவர்த்தியைச் சந்திக்க வேண்டாமா? அவரிடம் கேட்டுக் கொண்டால் அவர் உங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வார்.''

''சிற்பிகளை அனுப்புவாரா?''

''சிற்பிகளை அனுப்ப மாட்டார். சோழ நாட்டில் வேலையில்லாமலிருக்கும் சிற்பிகளை வேண்டுமானால் அனுப்புங்கள்.''

ஆதித்தன் திடுக்கிட்டான். மிகத் திறமையுடன் பேசும் இவளை எப்படி நம்புவது?

''பல்லவ சக்கரவர்த்தியைச் சந்திக்க நீங்கள் நெடுந்தொலைவு செல்ல வேண்டாம். இதோ இங்கேயே வந்திருக்கிறார்'' என்றாள் மீன்விழியாள்.

''இதோ இங்கேயே'' - என்றவுடன் ஆதித்தன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

மீன்விழி நகைத்தாள். ''இதோ, என்றால் உங்கள் அருகிலேயே என்று அர்த்தமா? சிற்பிகளைச் சந்திக்க வந்திருக்கிறார். வாருங்கள், அறிமுகப்படுத்துகிறேன்'' என்றாள்.

ஆதித்தனுக்குச் சங்கடமாகியது. ''கவலைப்படாதீர்கள். சத்திரத்துக் குதிரையை அபகரித்து வந்ததற்காக உங்களைத் தண்டிக்க மாட்டார்'' என்றாள்.

ஆதித்தனுக்கு அவமான உணர்ச்சி மேலோங்கியது. 'தன் நிலை என்ன? இங்கே சாதாரண மனிதனாக, ஒரு சிற்பி மகளிடம் அவமானப்பட நேரிடுகிறதே?'

''குதிரைகள் எங்களிடம் இல்லை. நாங்கள் அதைப் பெற்ற வேகத்திலேயே இழந்துவிட்டோம். குதிரைகளைக் காண வில்லை'' என்றான் ஆதித்தன். சிற்பி மகளிடம் இவ்வாறு பேசிக்கொண்டே இருப்பதா, அல்லது ஏதாவது சொல்லி இங்கிருந்துப் புறப்பட்டு விடுவதா என்று சிந்திக்கலானான்.

''குதிரைகளையும் காணவில்லை. உங்கள் நண்பரையும் காணவில்லை அல்லவா?'' என்று அவள் கேட்டாள்.

''உங்களுக்கு எப்படித் தெரியும்?'' ஆதித்தன் கேட்டான்.

''இதில் என்ன சாமர்த்தியம் வேண்டியிருக்கிறது? உங்களுடன் அவர் வரவில்லை என்பதிலிருந்து புரிந்து கொண்டேன்'' என்று கூறிச் சிரித்த மீன்விழியின் சிரிப்பொலி, ஆதித்தன் உள்ளத்தை ஏதோ செய்தது.

'விக்கியண்ணன் எங்கிருக்கிறானோ? எங்கிருந்தாலும் திருத்தணிகைக்கு வந்து சேர்ந்து விடுவான். நாமும் திருத் தணிகைக்குச் சென்றுவிட வேண்டும். சிற்பி மகள் உதவியுடன்



செல்லலாமா? அல்லது அவளிடம் சொல்லாமல் சென்று விடுவோமா?' என்று சிந்தித்தான்.

''விக்கியண்ணன் அருவிக் கரையில் நீராடக் குதித்தான்...'' என்று சொல்லத் தொடங்கிய ஆதித்தன் சட்டென்று நிறுத்திக் கொண்டான். விவரித்துச் சொன்னால், அங்கே தாம் வீரர்களிடம் சிக்கியதையும், அவர்களிடமிருந்துத் தப்பியதையும் கூற வேண்டியிருக்கும்.

''ஓ! அருவிக்கரைக்குப் போய் சேர்ந்து விட்டீர்களா? அதன் மறுகரையில் கொற்றவையை வணங்க இளவரசி வந்திருப்பாள். அங்கே ஆண்கள் செல்லக்கூடாதே. ஐயோ பாவம், உங்கள் நண்பர் அவளுடைய காவல் வீரர்களிடம் சிக்கியிருப்பார்'' என்றாள்.

''என்னவோ காலையிலிருந்தே எல்லாம் எதிர்பாராத சம்பவங்களாக நடைபெறுகின்றன. நாடு விட்டு நாடு வந்து நாங்கள் ஆபத்தில் சிக்க நேர்கிறது. கலையின் மீதுள்ள ஆசையால் இப்படியொரு சங்கடமா? சிற்பி மகளே! மிகவும் புத்திசாலியாக, திறமை உடையவளாக இருக்கிறாய். நீ ஒரு யோசனை சொல்லு,இப்போது என்ன செய்யலாம்?'' என்று கேட்டான் ஆதித்தன்.

''இப்போது பல்லவ சக்கரவர்த்தியைச் சந்திக்கலாம்'' என்றாள் மீன்விழியாள்.

''நான் உங்களை அவரிடம் அறிமுகப்படுத்துகிறேன். கட்டுடலும், திறமையும், குதிரை ஏற்றமும், நொடியில் குதிரைகளை அபகரிக்கும் திறமையும், இழந்துவிடும் திறமையும், துணிவுடன் சிற்பிகளுடன் சிற்பியாக மாறி சிற்பக் கூடத்தில் வந்திருக்கும் திறமையையும், அறிவையும் அவர் மிகப் பாராட்டுவார். வருகிறீர்களா?'' என்று அவள் கேட்டாள்.

○

## 11. கலைக் கனவு

பல்லவ சக்கரவர்த்தியைச் சந்திப்பதில் ஆதித்தனுக்கு எந்தவித அச்சமுமில்லை. அபராஜிதன் அவனுடைய அன்பிற்குரிய நண்பன். மண்ணியாற்றங்கரைப் போரில் வென்று பாண்டியர்களை விரட்டியபிறகு, ஆதித்தனின் வீரத்தை - திறமையைப் பாராட்டி, அவனது தோள்களைத் தழுவி அபராஜிதன் கூறிய வார்த்தைகள் இன்றளவும் அவன் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

''ஆதித்தா! எப்படி உனக்கு நன்றி கூறுவதென்றே தெரியவில்லை. பல்லவநாட்டின் தெற்கெல்லையைப் பற்றி இனி எனக்கு எந்தவிதக் கவலையும் இல்லை. இந்தப் பகுதிகளை உனக்கே தந்துவிடுகிறேன். ஆண்டுதோறும் ஒரு நாள் - பங்குனி - மாத உத்திர நட்சத்திரத்தன்று காஞ்சிபுரத்துக்கு நீயே வந்து கொடுக்க வேண்டிய திரையைச் செலுத்தி என்னுடன் சில நாள்கள் தங்கியிருந்துவிட்டுச் செல்ல வேண்டும். உன் தந்தை விஜயாலயரை அவ்வாறு அழைக்க நான் விரும்பவில்லை. மூதிர்ந்த பருவத்தில் அவரை வடக்கே வெகுதொலைவு அழைப்பதும் சரியில்லை. நமது நட்பு வளர வேண்டும். ஆண்டுதோறும் சந்திப்போம்'' என்ற அபராஜிதனின் பேச்சில் அன்பு இருந்தது. ஆனால், 'நாம் பல்லவ மாமன்னன், சோழர்கள் நமக்கு அடங்கியவர்கள்' என்ற மமதையும் இருந்தது. நட்பு எனும் போலி வேடத்துடன் நமது மேலோங்கிய உரிமையை நிலைநாட்டப் பார்க்கிறான் - அந்த ஒரு சொல்லால் அபராஜிதன் சொன்ன அன்றே, ஆதித்தன் உள்ளத்தில் சினத்தீ எரியத் தொடங்கியது.

இப்போது அபராஜிதன் எதிரே போய் நின்றால்... இளவரசருக்கான ஆடை ஆபரண அலங்காரமில்லாமல் சென்றால் ஒருவேளை முதலில் புரிந்துகொள்ளாமலிருக்கலாம். மறுகணம் புரிந்து கொண்டுவிட்டால்...

'புரிந்து கொண்டு விட்டாலென்ன? ஒரு கணம் பிரமித்துப் போவான். பிறகு சிந்திப்பான். ஏன் சாதாரணக் குடிமகன்



போல் நான் வந்திருக்கிறேன் என்று சிற்பி மகளிடம் எப்படிச் சொல்வது?' ஆதித்தன் யோசித்தான்.

''என்ன, சில கணங்களுக்குள்ளே சிந்தனையில் மூழ்கி விடுகிறீர்கள். சோர்வா? களைப்பா?'' என்று கேட்டாள்.

'ஆம்' என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தான்.

''நேற்றிரவு சத்திரத்து உணவின் ருசி நாக்கை விட்டு நீங்கவில்லை'' என்றான்.

''ஓ! காலையிலிருந்து ஆகாரம் ஏதும் இன்னும் கிடைக்கவில்லையா? குதிரை மீது ஏற்பட்ட காதல், பசியை மறக்கச் செய்துவிட்டது. அப்படித்தானே?'' என்ற சிற்பி மகளின் குத்தல் நிறைந்த சொற்கள் ஆதித்தனின் சினத்தைத் தூண்டி விட்டது.

''சிற்பத்தின் மீதுள்ள காதல், குதிரை மீது காதல் கொள்ளத் தூண்டியது. கலை ஆர்வம் இன்னும் எதனெதன் மீது காதல் கொள்ளத் தூண்டப் போகிறதோ?'' ஆதித்தன் சற்று எரிச்சலுடன் பேசினான்.

மீன்விழியாள் நகைத்தாள். அவள் பார்வையில் வித்தியாசம் தெரிந்தது.

''ஐயா, சோழ நாட்டவரே! நீங்கள் யாரையும் காதலிக்காவிட்டால்கூட உங்களைக் காண்பவர்கள் உங்கள் மீது காதல் கொள்வார்கள். உங்களுடைய பரந்த மார்பும், ஒளி பொருந்திய கண்களும், மாமல்லபுரத்தில் உள்ள வீரர்களின் சிற்பங்களை நினைவுபடுத்துகின்றன. துணிவு, கலையறிவு, இரண்டும் ஒருசேரத் திகழும் உங்களைக் கைப்பிடிக்கும் பாக்கியவதி யாரோ தெரியவில்லை'' என்று அவள் பேசும்போது, சிற்பி மகளுடைய முகமாறுதலை ஆதித்தன் கவனித்தான். மிக நெருக்கமாக அவள் வரவர அவன் இதுவரை சற்று நகர்ந்து மரத்தின் மீது சாய்ந்துகொள்ளும் நிலைக்கு வந்துவிட்டான். இனி நகர இடமில்லை. அவன் துணிவுடன், ''சிற்பியின் மகளே! உன் பேச்சுத்திறமை கவர்கிறதா, அழகு கவர்கிறதா என்று எனக்குப் பிரித்துச் சொல்லத் தெரியவில்லை. இன்னும் சிறிது நேரத்தில் என் பார்வையினின்று நீ மறைந்துவிடுவாய். இந்த வனப்பிரதேசம் மறைந்துவிடும். பசி மயக்கத்தால் நான் துவண்டு வீழ்ந்துவிடுவேன்'' என்றான்.


01 09 2012

மீன்விழியாள் பரபரப்புடன், ''அடடா, உங்கள் பசியைப் போக்காமல் ஏதேதோ பேசிக் கொண்டிருக்கிறேன், இதோ வருகிறேன். அதற்குள் எங்காவது மறைந்துவிடாதீர்கள்'' என்று கூறிக்கொண்டே சோறு கொண்டுவர விரைந்தாள்.

மீன்விழியாள் ஆகாரம் கொண்டுவரச் சென்றவுடன் ஆதித்தன் அந்த மரத்தடியில் உட்கார்ந்தான். வெயிலின் கடுமை சிறிதும் தெரியாத அந்த இடத்தில் கதிரவன் மேல் திசையில் இறங்கிக் கொண்டிருப்பதால் இருள் மேலும் வளர்ந்தது.

தஞ்சையின் சுற்றுப்பகுதிகளில் நாட்கணக்காக, இரவு பகல் பாராமல், அவன் சுற்றியிருக்கிறான். அரச குடும்பத்துத் தலைப்பிள்ளை என்பதால் அவனுக்கு விஜயாலய சோழ தேவர் எந்தவிதச் சலுகையும் அளிப்பதில்லை. தஞ்சை மாநகரத்தை நிர்மாணிக்கும் பணியில் அவர் ஈடுபட்டிருந்த போது மகன் ஆதித்தனைக் கடுமையாக வேலை செய்யச் சொன்னார். ஒரு சமயம் துண்டு துண்டாகச் செதுக்கப்பட்ட பாறைகளை மதிலின் மீது சாரம் வழியே ஏறிச் சென்று கொடுக்க வேண்டியிருந்தது. ஆண்கள், பெண்கள் வேற்றுமையின்றி மதிலை அமைப்பதில் ஈடுபட்டிருந்தனர்.

சுண்ணாம்பை வட்டக் குழியில் இட்டு, மாடுகள் இழுத்து வெண்ணெய் போல் அரைத்துக் கொண்டிருந்தன. காரம் மிகுதியான சுண்ணத்தில் வெல்லம் கரைத்த நீரை இட்டுக் கொண்டிருந்தனர். ஆதித்தன் அந்தச் சுண்ணக் கலவை நடக்குமிடத்தில், கால் எரிச்சலைப் பொருட்படுத்தாமல் நின்று கொண்டிருந்தான். காலையில் பழைய சோறு கலந்த மோரைக் குடித்த பிறகு நண்பகல் வரை ஒருவாய்கூட ஏதும் குடிக்கவில்லை. தலையில் சும்மாடிட்டு, சுண்ணக் கலவையைச் சுமந்து சென்று மதில் மீதேறிக் கொட்டிவிட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்த அந்தச் சிற்றாள், இளவரசரைப் பார்த்துப் பரிதாபப்பட்டாள். நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொண்டு, மரத்தடியில் சற்று ஒதுங்கிய ஆதித்தனைப் பார்த்து அவள் கேட்டாள்.

''இளவரசர் அவர்களே! வெயிலிலும், சுண்ணாம்பு நெடியிலும் தாங்கள் இப்படி உழலலாமா?'' என்று.

கரிய நிறம்தான். அதில் உழைப்பின் திண்ணமும், பருவத்தின் பளபளப்பும் போட்டி போட்டுக்கொண்டு மினுமினுத்தன. இறைவன் அழகைத் தன் படைப்பில் அள்ளிப் பூசும்போது அதில் அரசன் என்றும், அடிமை என்றும் பார்ப்பதில்லை. அந்தப் பணிப்பெண்ணுக்குத் தன் கை வண்ணத்தைக் குழைத்து வஞ்சனையில்லாமல் குளிப்பாட்டியிருந்தான் பிரமன். கச்சையணியாத அவளது மார்பகங்களின் செழுமையும், உடலின் மூடப்படாத இடம் போக, வெயிலைக் காணாத பகுதிகளின் தாழம்பூ நிறமும் இளம் ஆதித்தனின் மனத்தில் சஞ்சலத்தை ஏற்படுத்தும். அந்தப்புரத்தில் வேலை ஏதுமின்றி, உண்டு உறங்கி உல்லாசமாக வாழும் அவளையொத்த வயதுடைய பெண்களைச் சிறிது நினைத்துக் கொள்வான். அவர்கள் பிறந்த வேளையா அல்லது முற்பிறவிப் பாவ புண்ணியமா இவள் சுண்ணத்து நெடியில் உழல்கிறாள். அவர்கள் பன்னீர் மணத்தில் படுத்துறங்குகிறார்கள்.

ஒரு தடவை அவளைத் தன் விழிகளால் விழுங்கிய பிறகு, ''என்ன கேட்டாய்?'' என்று உற்றுப் பார்த்தவாறு கேட்டான்.

தலைப்பாரத்தை ஒரு கரத்தால் தாங்கி, இடையை நோக வைக்கும் மார்பக பாரத்தை மறைக்க மற்றொரு கரத்தால் சேலைத் தலைப்பை இழுத்துச் செருகிக்கொண்டே முல்லைப் பல் வரிசை பளிச்சிட அவள் சிரித்தவாறு, ''ஏங்க இந்த வெயிலில் நெடியில்? உங்களுக்கு ஏங்க தலையெழுத்து என்று கேட்டேன்'' என்றாள்.

''தலையெழுத்து என்பது இல்லை என்பதை நிரூபிக்க'' என்றான் ஆதித்தன், தன் மெல்லிய மீசையில் அரும்பிய வியர்வையைத் துடைத்தவாறு.

அந்தப் பணிப்பெண் வியப்பால் அவனை, இமைக்காமல் நோக்கினாள். 'அப்படியென்றால்?' என்று கேட்பது போலிருந்தது.

''இந்தக் கடினமான பணியைச் செய்ய உன்னை மட்டும் ஆண்டவன் படைக்கவில்லை. என்னையும்தான் படைத்திருக்கிறான் என்பதை நிரூபிக்க'' என்றான்.

வியப்பும் நாணமும் மிக அவள் தன் இதழ்களை மூடிக்கொண்டாள். பிறகு, ''அதெப்படிங்க முடியும்? நீங்கள் கோட்டை கட்டுகிறீர்கள். கோட்டைக்குள்ளிருந்து எங்களைப் போன்ற பேதைகளை, பணியாளர்களை, இளம் பெண்களை, முதியவர்களை, பாலர்களைப் பாதுகாக்கிறீர்கள். அந்தத் தொழில் செய்ய எங்களால் முடியுமா?'' என்று ஆச்சரியம் மிகப் பேசினாள்.

''முடியும். உன்னால் கோட்டை கட்ட முடியும்'' என்ற ஆதித்தன் பேச்சில் குறுக்கிட்ட பணிப்பெண், ''ஓ! மனக் கோட்டை கட்டுவேன்'' என்றாள்.

''அது போதுமே? மனக்கோட்டையை நான்கூடத்தான் கட்டுகிறேன். தஞ்சை மாநகரைப் பெரிய நகராக்க வேண்டும், நான்கு திக்குகளிலும் சோழநாட்டின் புகழ் பரவ வேண்டும் என மனக்கோட்டை கட்டுகிறேன்'' என்றான்.

முகவாயில் தன் கரத்தைப் பதித்துக்கொண்ட அவள், ''எஞ்சாமி! உங்களுடன் பேச முடியாது. எங்கப்பா சொல்லி இருக்காரு, இளவரசர் பெரிய வீரரு, சாமர்த்தியசாலி என்று...'' என்றபடி கூறிக்கொண்டே தன் வேலையைக் கவனிக்கச் சென்றுவிட்டாள். ஆதித்தன் அவள் நடந்து செல்லும் அழகைக் கவனித்துக் கொண்டிருந்தான். மதில் மீது சுறுசுறுப்பாக இயங்கும் கை தேர்ந்த கட்டடக் கலைஞர்களின் பணியைக் கண்டு பெருமூச்சு விட்டான்.

அதே பெருமூச்சு இப்போது அவனிடமிருந்து எழுந்தது. வெயிலென்றும் மழையென்றும் பாராமல் ஊர் ஊராகச் சுற்றியபோது ஏற்படாத பசியும், தாகமும் அவனுக்கு இன்று ஏற்பட்டன.

காலையிலிருந்து ஒன்றன்பின் ஒன்றாக ஏற்பட்டு வரும் எதிர்பாராத சம்பவங்களும், அவற்றிலிருந்து விடுபடுவதும் அவனுக்குக் கனவு போல் தோன்றின.

கனவு இல்லை. நனவுதான். சிற்பி மகள் தன் எதிரே வந்து நின்று பேசியது கனவாக எப்படி இருக்க முடியும்? அபராஜிதவர்மனைக் கண்டோமே அது எப்படிக் கனவாக இருக்க முடியும்? சிற்பி மகள் தன்னை நெருங்கி நெருங்கிப் பேசினாளே அது கனவா? பசி எடுத்து வயிறு புரட்சி செய்கிறதே அது கனவா? பசிக்குப் புசிக்க ஏதாவது கொண்டு வருவதாகக் கூறி அவள் சென்றிருக்கிறாளே, அது கனவாக எப்படி இருக்க முடியும்?

திடீரென பூம்பூம் என்று சப்தம் முழங்கியது. எக்காளத்தின் ஒலி. முரசின் முழக்கம் கேட்டது. ''வாழ்க பல்லவ சக்கரவர்த்தி! பல்லவ சக்கரவர்த்தி அபராஜிதவர்மர் வாழ்க! வாழ்க!'' என்ற வாழ்த்தொலியை ஏக காலத்தில் சிற்பிகள் எழுப்புவது தெளிவாகக் கேட்டது. அந்த வாழ்த்தொலி எப்படிக் கனவாக இருக்க முடியும்?



ஒருவேளை தஞ்சைக் கோட்டையின் வடக்கு வாசல் வழியாக உள்ளே நுழையும்போது, படைவீரர்கள், ''சோழ இளவரசர் வாழ்க!'' என்று முழங்குவதுதான் இவ்வாறு நம் செவிகளில் வீழ்கின்றதோ...

ஆதித்தன் நினைவு தஞ்சை மாளிகையை நோக்கிச் சென்றது. அவனது அன்புக்குரியவள் மிகமிகக் கோபத்துடனிருப்பாள். திருமணமாகி ஓரிரு மாதங்கள்கூடச் சேர்ந்திராமல் பட்டிதொட்டி ஊர் நகரமென்று சுற்றப் புறப்பட்டுவிட்டால் எந்தப் புதுப் பெண்ணுக்குத்தான் கோபம் வராது. விரைவில் தஞ்சைக்குத் திரும்பிவிட வேண்டும் என்று எண்ணினான்.

ஆனால் அவனுடைய மனம் அதற்கு ஒப்பவில்லை.

தஞ்சையினின்று புறப்பட்டது, பல்லவ நாட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்புவதற்கா? பல்லவ நாட்டின் கலைச் செல்வங்களைக் கண்ணாரக் காண வேண்டும், படை பலங்களை அறிய வேண்டும், ராஜ்ய தந்திரங்களை அறிய வேண்டும். பல்லவ நாட்டினின்று கலைஞர்களைத் தஞ்சைக்கு அழைத்துச் செல்ல வேண்டும், நடன மங்கையரை, சிற்பிகளை அழைத்துச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தின் முதல் கட்டம் நிறைவேறியது.

அடுத்தது சிற்பிகள். சிற்பி மகள் நெருங்கி வருகிறாள். அவளுடைய உதவியிருந்தால் சிற்பக் கலைஞர்களை அழைத்துச் சென்று விடுவோம். தஞ்சையில் சிற்ப அற்புதங்கள் நிறைந்த கோயில் ஒன்றைக் கட்டுவோம். ஆம், தஞ்சையின் புகழ் தரணி எட்ட வேண்டும்.

ஆதித்தன் மெல்லக் கண்ணயர்ந்தான். தஞ்சை, கோலா கலமாகத் திகழ்கிறது. சிற்பிகளின் சிற்றுளி கணங் கணங் கணங் என்ற ஒலியை எழுப்புகிறது. அவர்களுடைய கை வண்ணத் தினின்று எழிலுடை மங்கையர் பலர் உருவெடுக்கிறார்கள். அவர்கள் பதுமை போல் நிற்கவில்லை. முகத்திலே ஆயிரமாயிரம் எழில் உணர்ச்சிகளை வெளிப்படுத்துகிறார்கள். விழிகள் பல நூறு தாமரைகளாக மலர்கின்றன. இதழ்களில் குமிழ்நகை பூத்து நிற்கிறது. தாமரை முகங்களில் எட்பூ போன்ற நாசிகள் கம்பீரமாக நிற்கின்றன. வீரர் கைவேல் போன்ற விழிகள், கொடிய எமனைப்போல் ஒரு கணம் தோன்றுகின்றன. தடாகத்து மீன்கள் கதிரொளியில் துள்ளி எழும்பும்போது மின்னுவது போல் முகக்குளத்திலே அவை துள்ளுகின்றன. வளைந்த புருவங்கள். மன்மதக் கை, கரும்பு வில்போல் வளைந்த



01 09 20

மலர்களை வீச ஆயத்தமாக நிற்கின்றன. தோமணி செவிகள் கூந்தலின் தெளிகளைத் தாங்கி நிற்கின்றன. மங்கையர் காதலிகளாக விளங்குகின்றனர். கொடி பற்றிய பூங்கொடிகளாக விளங்குகின்றனர். கந்தர்வ மங்கையராகத் திகழ்கின்றனர்.

அவர்கள் பல முகபாவங்களைக் காட்டி ஆடுகின்றனர். காதலர்களுடன் களி உவகை கொண்டு கைகோத்து நிற்கின்றனர். அவர்களது செங்கலச தனங்கள் விம்மித் துடித்து நிற்கின்றன. அவர்களது திருவயிறும் உந்தியும் இடையினுக்கு அணி செய்கின்றன. பலவட மேகலைகள் அங்கே நெளிந்துத் துவள்கின்றன. ஆடைகள் உள்ளனவோ இல்லையோ என்ற நிலையில் சிற்பி மெல்லிய ஆடையை அணிவித்திருக்கிறான். பாடகமும், வளையலும், வங்கியும், தொங்கலும், மாலையும், ஆபரணமும் மங்கையர் மேனியின் அழகுக்கு அழகு செய்கின்றன.

செஞ்சீரடியையும் சிற்பி சாதாரணமாக விட்டு வைக்க வில்லை. பாத விரல்கள் தளிர் மெல்லரும்பு போல் உள்ளன. பாதச் சதங்கை, பாதங்களில் மென்மையைத் தழுவிக் குலுங்குகின்றன. ஆகா, சிற்பி என்ன மனிதனா? தேவனா? நான்முகனா? இளைஞர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ள வந்த காலனா? இவர்களுக்கு மனோதர்மம் எப்படி உருவாகியது? யாரை மனத்தில் உருவகப்படுத்தி சிற்பமாக வடிக்கிறார்கள்? அவர்களுக்கு என்று ஒரு பெண் பிறந்து வளர்ந்து என்றும் இளமையோடு இருக்க வேண்டும். ரூபலாவண்யமிக்க அந்த எழிலரசி சிற்பிகளின் இதய அரங்கிலே எப்போதும் எக்கணமும் நடனமாடிக் கொண்டிருக்க வேண்டும்... அவர்களின் திரு உருவம் சிற்பிகளின் கரங்கள் வழியாக, விரல்களின் வழியாக வழிந்து கற்களைக் காவியமாக்கியிருக்க வேண்டும். அந்த எழில் மங்கை எப்படியிருப்பாள்?

திருக்காளத்தியில் சந்தித்தோமே அந்த நடன மங்கையைப் போலிருப்பாளா? ஆகா! அவளுடைய அழகைப் போல் இனி ஒரு பெண்ணின் அழகைக் காண முடியுமா? மன்னாதி மன்னர்களின் மகள் பட்டத்தரசியாக, இளவரசியாக, அந்தப்புரத்தில் அழகுப் பதுமையாகத்தான் இருக்க முடியும் அவர்கள். நடனமங்கையின் எழில் எதிரே நிற்க முடியாது.

பல்லவ சிற்பி மகா பாக்கியசாலி. அவருக்கு இரண்டு பெண்கள். ஒருத்தி நடன மங்கை. அழகு ராணி. மற்றொருத்தி மீன்விழியாள். இவள் எந்தக் கலையில் சிறந்தவள்?



சாமர்த்தியமாகப் பேசுகிறாள்... என் உள்ளத்தை அப்படியே ஊடுருவும் திறமை பெற்றவளாகத் திகழ்கிறாள். காலையில் சத்திரத்தில் சந்தித்தபோதே இவளுடைய ஆற்றல் சிறிது விளங்கியது. குதிரைகளை எடுத்துச் சென்றதைப் பற்றிக் கோபப்படாமல் குளிர் முகம் காட்டுகிறாள். காவிரி நதியைக் காண வேண்டும் என்கிறாள். உண்மையாக இருக்குமா? உண்மையில் இவளுக்குச் சோழ நாட்டைக் காண வேண்டும் என்ற ஆவல் இருக்குமா? இல்லாவிடில் - ஒருவேளை நம்மை இன்னார் என்று அடையாளம் தெரிந்து கொள்வதற்காக இருக்குமா?

எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். நாம் மிகக் கவனமாகப் பழகுவோம். எப்படியாவது மீன் விழியாளைச் சோழ நாட்டிற்கு அழைத்துச் சென்றுவிடுவோம். அவள் வந்தால் அவளுடன் அவள் தந்தை சிற்பி வந்துவிடுவார். சிற்பியுடன் அவரது சீடர்கள் வந்துவிடுவார்கள். நடன மங்கையும் சிற்பியும் வந்துவிட்டால், சோழ நாட்டைக் கலை பூமியாக்குவதில் எந்தவிதச் சங்கடமும் இருக்காது. சிற்ப சித்திர இசையில் கலைப்பெருமை கொண்ட பல்லவ நாட்டிற்கு இணையாக - என் - அதைவிட மேலாகவே சோழநாட்டை வளர்த்து விடலாம். பல்லவ நாட்டில் கலைக்கு ஒரு காஞ்சி என்றால், சோழ நாட்டில் கலைக்கு ஒரு தஞ்சை என்று உயர்த்திவிடுவோம்.

ஆம்! உயர்த்த வேண்டும், வளர்க்க வேண்டும். பெருமை கொண்டு தலைநிமிர்ந்து நிற்கச் செய்ய வேண்டும்.

அவன் உதடுகள் மெல்ல அசைந்தன. மூடியிருந்த விழிகள் எதிரே மகத்தான தோற்றம் ஒளி வீசித் திகழ்ந்தது. யாரோ அவனது கன்னத்தைத் தடவுவது போல் தோன்றியது. அன்னம் தன் தூவியால் மெல்ல வீசுகிறதா? மயில் தன் தோகையால் சாமரம் வீசுகிறதா? பொதிகைச் சந்தனத்தை எடுத்து மெல்ல யாரோ குளிர் பொங்கப் பூசுகிறார்களா? இமயத்துப் பனியை எடுத்து நெற்றியில் இடுகிறார்களா? நாம் எங்கிருக்கிறோம்?

மெல்லிய நகையொலி கேட்கிறதே. வளையல்கள் குலுங்கு கின்றனவே, கானப் பறவைகளின் கலகலவென்ற ஓசையைப் போல் மெல்லிய குரலோசை கேட்கிறதே...

ஆதித்தன் மெல்லக் கண் விழித்தான். அவன் அருகே மண்டியிட்டமர்ந்து மார்பின் மீது அவன் அழகில் மயங்கி தன் வயமிழந்து அவன் பூவுடல் மெல்ல அமிழ, முகத்தைத் தன் மென்விரல்களால் மீன்விழியாள் மெல்ல வருடிக் கொண்டிருந்தாள்.

''இன்பக் கனவு கண்டு கொண்டிருந்தீர்களோ?'' என்று அவள் புன்னகை தவழக் கேட்டாள்.

அருகே ஒரு தட்டில் உணவு இருந்தது. மெல்லிய துணியால் அது மூடப்பட்டிருந்தது.

பசி மயக்கத்தால் கண்ணயர்ந்த ஆதித்தன், மன அரங்கில் எழுந்தவை ஒவ்வொன்றும் மீன்விழியாளுக்குத் தெரிய நியாயமில்லை. பொதுவாகக் கனவு என்று கூறிவிட்டான். இன்பக் கனவு என்று கூறிவிட்டான். இளமை பூத்துக்குலுங்கி நிற்கும் அவள் அவ்வாறு நினைக்காமல் வேறு என்ன நினைக்க முடியும்?

அவள் பூ உடல் மெல்ல நெளிந்தது. தேக்கு மரத்தின் மீது தவழ்ந்திருக்கும் செண்பகக் கொடி போன்று விளங்கினாள்.

அவனை எழுப்புவதற்காக அவள் மண்டியிட்டுக் குனிந்திருப்பதாகத் தோன்றியதே தவிர, அவள் தன் விருப்பத்திற்கேற்ப அவன் மார்பின் மீது படர்ந்திருந்ததாகத் தோன்றவில்லை.

ஆதித்தன் திடுக்கிட்டு எழ முயன்றான். அவளுடைய கரங்கள் ஆதித்தன் நெற்றியில் துளிர்த்திருந்த வியர்வையை மெல்லத் துடைத்தன. விம்மி எழும் மார்பகங்கள் ஆதித்தனின் இதய ஒலியை உணர முயல்வது போல் நெருங்கி அழுந்தின.

○



## 12. ''நான் இளவரசன்''

ஆதித்தன் கணத்தில் தன் நிலைமையைப் புரிந்து கொண்டுவிட்டான். அப்படியே இருப்பதா, அல்லது அவளிடமிருந்து விடுபட்டு எழுவதா? அந்தப் பூங்கரங்களுக்கும் வலிமை இருப்பதை அவன் உணர்ந்து கொண்டான். மீன்விழியாளின் தோற்றத்திற்கும், அவளுடைய உள்ளுணர்வுக்கும், குணத்திற்கும் சிறு தொடர்புகூட இல்லை என்பதையும் புரிந்து கொண்டான்.

இறைவன் மீன்விழியாளிடம் எல்லையற்ற எழிலைப் படைத்துவிட்டான். நளினத்தைப் படைத்துவிட்டான். கவர்ச்சியைப் படைத்துவிட்டான். கண்களாலேயே கொள்ளை கொள்ளும் உடல் ஆயுதங்களை அளித்துவிட்டான். சாதாரண சிற்பி மகள் அல்லள் அவள்.

சிற்பி மகள் என்ற போர்வையில், அவள் பல்லவ நாட்டின் முக்கியஸ்தர்களுடன் நெருங்கிப் பழகிச் செல்வாக்கைத் தேடிக் கொண்டுள்ள விசித்திரக் குணமுடையவளா? பெண்மையும், ஆண்களுக்குள்ள துணிவும் நிறைந்தவளா? அதனால் அவளை அளவிட முடியவில்லை. அவனிட்ட அளவு அவளுடைய உடல்வாகை, விழியின் சுழற்சியை, புருவத்தின் வளைவை, செழுமையான கன்னங்களை, துடிக்கும் உதடுகளை, வளை குலுங்கும் கரங்களை, உடுக்கையை நினைவூட்டும் இடையை, இவ்வளவு நளினமான உடலமைப்புடன், சுறுசுறுப்பு மிகுந்த அவளுடைய உழைப்பால் மெருகேறி கடினத் தன்மையும் சேர்ந்திருப்பதையும் கண்டான்.

தொலைவிலிருந்து எடைபோட்டவை இந்தத் தோற்ற இனிமைகள், இப்பொழுது அவள் மிக நெருங்கிவிட்டாள்.

சிறிது சிறிதாக அவள் நெருங்கியதை அவன் முதலில் உணரவில்லை. சிற்பி மகளிடம் மிகவும் எச்சரிக்கையுடன் பழக வேண்டும் என்று முதன்முதலில் அவளைச் சந்தித்தபோதே முடிவு செய்திருந்தான்.

01 09 2

ஆனால், இந்த மரத்தடியில் மறைவிடத்தில் அவனைக் கேள்வி கேட்டுக்கொண்டே மெல்ல மெல்ல அவள் நெருங்குவதை அவன் உணர்ந்தான். பாதங்கள் நகர்ந்தன. இடையில் கரத்தை வைத்துக்கொண்டு திரும்பினாள். தோள்களைக் குலுக்கியவாறு நகர்ந்து வந்தாள். அவளுடைய மெல்லிய மூச்சுக்காற்று அவன்மீது பட்டு உடலில் சிலிர்ப்பை ஊட்டியது. மிக நெருங்கிய அவளது எழிலான பூவுடலின் காந்த சக்தி அவனை இழுத்தது. தஞ்சையில் அந்தப்புரத்திலுள்ள அவனது சிறிய மனையாட்டி அவன் கண்ணெதிரே தோன்றி நீள இருந்த கரங்களைத் தடுத்து நிறுத்தினாள்.

"ஓ! விக்கியண்ணா! நீ எங்கே போய்விட்டாய்? நீ அருகே இருப்பது ஒரு கவசம் போல் எனக்கு இருந்ததே..." என்று வாய்விட்டு கூற வேண்டும்போல் தோன்றியது.

பல்லவப் பெருநாட்டில் பெண்கள் இவ்வளவு துணிவு பெற்றுவிட்டார்களா? ஆண்களைக் கண்டால் ஓடி ஒளியும் நாணமெனும் திரை நீங்கி வெளிவந்துவிட்டார்களா? மீன் விழியாள் தன்னை அடையாளம் கண்டுகொண்டால், ஒருவேளை இன்னும் அதிகமான உபசாரம் செய்வாளோ? என்ன இருந்தாலும், புதிதாக அறிமுகமான ஓர் ஆடவனிடம் சிற்பி மகள் நடந்துகொள்ளும் விதம் ஏற்கக்கூடியதாக இல்லை.

ஆதித்தனால் விழிகளைத் திறக்க முடியவில்லை. அரச குமாரன் என்றும், ஏழை குடிமகன் என்றும், பசி வேற்றுமை பார்ப்பதில்லை. அது எவரையும் எளிதில் ஆட்கொண்டு விடும். அந்தப்பசி, ஆதித்தனையும் விட்டு வைக்கவில்லை. பசிக் களைப்பு, ஆதித்தனை எழ முடியாமல் அழுத்தியது. அந்தப் பாரத்தை, மீன்விழியாளின் மெல்லுடல் என்று நினைத்துக் கொண்டுவிட்டான்.

ஒரு கரத்தால் அவளது பிடியை மெல்ல விலக்க முயன்றான். அவனது வலக்கரம் அவளது இடத்தோளைத் தொட்டது. மீன்விழியாள் அவன் முகத்தின் வியர்வையைத் தன் மலர்க் கன்னங்களால் ஒத்தி எடுக்க முயன்றாள்.

ஆதித்தன் இரு கரங்களாலும், அவளுடைய தோளைப் பற்றித் தூக்கி நிறுத்தியவாறு தானும் எழ முயன்றான்.

"எவ்வளவு நேரமாக இதுபோல் என்னருகே இருக்கிறாய்?" என்று பரபரப்புடன் கேட்டான் ஆதித்தன்.

"தங்கள் கனவு தொடங்கியது முதல்..." என்று கூறியவாறு அவருடைய மீசையில் படிந்துள்ள தூசியைத் தடவினாள்.



அந்த ஸ்பரிசம், ஆதித்தனை ஓரளவு சிணுங்கொள்ளச் செய்தது. 'நீ ஓர் ஆண்மகன்! இளவரசன், மகத்தான சாம்ராஜ்யமாக எழப்போகும் சோழப் பெருநாட்டின் இளவரசன், நீ மணமானவன். உன் இளம் மனைவி உன் அணைப்பின் சுகத்திற்கு ஏங்கித் தஞ்சையில் தவித்துக் கொண்டிருப்பது நினைவிருக்கட்டும்' என அவன் உள் மனம் சொல்லவே, ஆதித்தன் சிலிர்த்துக் கொண்டு எழுந்தான்.

"கனவு கண்டேனா..." ஆதித்தன் திடுக்கிட்டுக் கேட்டான்.

மீன்விழியாள் இப்போது பாறையின் மீது சாய்ந்தவாறு ஒரு கரத்தைத் தலைக்கு அணைப்பாக வைத்து உட்கார்ந்தாள். "உட்காருங்கள், எங்கே எழுந்துவிட்டீர்கள்? பசியைத் தீர்க்க ருசியான உணவு கொண்டு வந்திருக்கிறேன்" என்று அருகிலிருந்த தட்டின் மேலிருந்த துணியை அகற்றினாள். இரண்டு தோசை, புளியஞ்சோறு, தயிர்ச்சோறு எல்லாம் இருந்தன. தயிரின் புளிப்பும், புளியஞ்சோற்றின் எண்ணெய் கலந்த மிளகாய், மஞ்சள் நெடியும் வீசின.

ஒரு கணம். அவற்றை எடுத்துப் புசிக்கலாமா வேண்டாமா என்று நினைத்தான்.

"உம். பசியால் மயங்கிச் சாய்ந்து விட்டீர்கள். ஓடோடிச் சென்று மீதி இருந்த உணவை எடுத்து வந்தேன். நேற்று இரவும் கால் வயிறுகூட நிறைந்திருக்காது. பல்லவ நாட்டில் பட்டினியால் கிடக்க ஒருவரையும் அனுமதிக்க மாட்டோம்" என்று கூறி அவன் கரத்தைப் பற்றி இழுத்து உட்கார வைக்க முயன்றாள். சற்று எழுந்து கரத்தை உயர்த்திய நிலையில் அவளே ஒரு சிற்பம் போல் திகழ்ந்தாள். வியர்வையால் அவள் அணிந்திருந்த கச்சு நனைந்திருந்தது. நெற்றியில் முத்தாரம் போன்ற வியர்வைத் துளிகள் புதிய ஆபரணமாகத் திகழ்ந்தன.

'பாவம், நமக்காக மிகவும் சிரமப்படுகிறாள். அவளுடைய செய்கைக்கு உள்ளர்த்தம் ஏன் கற்பிக்க வேண்டும்?' என்று ஆதித்தன் நினைத்தான்.

அவளருகே உட்கார்ந்து கொண்டான்.

"அதோ, செம்பில் நீர், கை கழுவிக் கொள்ளுங்கள். குடிப்பதற்கும் அந்த நீர்தான்... அதனால் அளவோடு உபயோகியுங்கள்" என்று கூறி, கால்களைக் குத்திட்டு உட்கார்ந்து கொண்டு நெற்றி வியர்வையை மேலாடையால் துடைத்துக் கொண்டாள். எதிரே ஓர் ஆடவன் இருக்கும் நாண உணர்வே அவளுக்கு இல்லாததை ஆதித்தன் கவனித்தான்.

01 09 2012

''பசியால் துடித்தீர்கள், இப்போது வெளியே பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். உம், ஆகட்டும். தோசை ஒரு விள்ளல், ஒரு பிடி புளியஞ்சோறு... ஒரு வாய்த் தண்ணீர்... என்று மளமளவென்று பசியை ஆற்றிக் கொள்ளுங்கள்.''

ஆதித்தன் மெல்லச் சிரித்தான்.

''வயிற்றுக்குள் ஒரு கவளம் போவதற்கு முன்பே முறுவல் பூக்கிறதே...'' என்றாள் மீன்விழியாள்.

''என்னை யாரென்று அறியாமலே இவ்வளவு சிரமப் படுகிறாயே... என்ற நினைப்பு சிரிப்பையளிக்கிறது.''

''நான் சிரமப்படுகிறேன் என்றால் அதற்காக இரக்கப்பட வேண்டும். சிரிப்பு ஏன் வருகிறது? இப்படி ஒரு பெண் விடாப்பிடியாக உபசாரம் செய்கிறாளே என்று நாணமற்ற செய்கையை எண்ணி நகைக்கிறீர்களா?''

ஆதித்தன் திடுக்கிட்டான். ''இல்லை... இல்லை... அதற்காக நான் சிரிக்கவில்லை. என் நிலையை எண்ணிச் சிரித்துக் கொண்டேன். எங்கோ பிறந்தேன், எங்கோ சுற்றுகிறேன். காட்டின் நடுவே ஒரு கவளம் சோற்றிற்காக ஓர் பெண்ணிடம் ஏங்கி நிற்கிறேனே என்று எண்ணினேன், சிரிப்பு வந்தது.''

''சோழ நாட்டவர்கள் புத்திசாலிகள் எனக் கேள்விப் பட்டிருக்கிறேன். அதனால் அவர்கள் எங்கு சென்றாலும் பிழைத்துக் கொள்வார்கள். உங்களை யார் என்றே எனக்குத் தெரியாது. சந்தித்த ஒரே கணத்தில் தங்களை எனக்குப் பிடித்து விட்டது. நீங்கள் என்னைச் சோழ நாட்டிற்கு அழைத்தவுடன் மிக நெருங்கிய உணர்வை அடைந்துவிட்டேன்'' என்றாள்.

அவள் குரலில் பாச உணர்ச்சி நிறைந்திருந்தது. வார்த்தைகளில் பொய் இல்லை என்பது தெரிந்தது. சிற்பி மகளை நாம் நமது திட்டத்திற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வந்தவனாக ஆதித்தன், அவள் அருகே உட்கார்ந்து கொண்டான். கை கழுவிக்கொண்டு ஒரு தோசையை விண்டு வாயில் போட்டுக் கொண்டான்.

''ஆகா, பிரமாதம்'' என்றான். ஒரு வாய்ப் புளிச்சோற்றை எடுத்து வாயில் போட்டுக் கொண்டவுடன் அவன் விழிகள் அகன்றன. கீழே உமிழ முடியாமல் விழுங்கினான். கண்களில் நீர் ததும்பியது.

''ஆகா, ஆனந்தக் கண்ணீர்'' என்றாள் மீன்விழியாள்.

''சுவையான உணவு என்றாயே?''



''ஆமாம்,.ஒரு சுவை அதிகமாகிவிட்டது.''

''உப்பு மட்டுமன்று...''

''நீங்கள் வீரரல்லவா? அதனால் காரம் அதிகமாக இருக்க வேண்டும்.''

''காரம் மட்டுமன்று, பல்லவ நாட்டுக் கலைச் செல்வத்தின் பிஞ்சுகளும் கலந்திருக்கின்றன.''

''என்ன சொல்கிறீர்கள்? என்னைப்பற்றி அப்படி மறைமுகமாகக் குறிப்பிடுகிறீர்களா?''

''ஓ!'' ஆதித்தன் நகைத்தான். ''நீயும் பல்லவ நாட்டுக் கலைச்செல்வம்தான். ஆனால் பிஞ்சன்று, மலர். நான் குறிப்பிடுவது இந்தப் புளிச் சோற்றில் கலந்துள்ள மலைப் பிஞ்சுகளை.''

இவ்வாறு ஆதித்தன் கூறியதைக் கேட்ட மீன்விழி, பெரும் நகைச்சுவையை ரசித்து விட்டதுபோல் இருகரங்களையும் தூக்கியவாறு சிரித்தாள். அவள் உட்கார்ந்திருந்த இடத்தினின்று சிறிது துள்ளி எழுந்து அமர்ந்தாள். அப்படியே ஆதித்தன் மீது பாய்ந்து உணர்ச்சி மிகுதியால் அவனை அணைத்துக்கொண்டு விடுவது போல் இருந்தது அவள் செய்கை.

''நன்றாகத்தான் பேசுகிறீர்கள்... நகைச்சுவையாகவும் பேசுகிறீர்கள். தாங்கள் வீரர் மட்டுமல்லர், சிறந்த அறிவாளி என்பதையும் புரிந்துகொண்டேன். உங்களைவிட நான் அறிவாளி, தெரியுமா?'' என்று கூறும்போது ஒரு குழந்தையின் மழலை அவள் சொற்களில் தொனித்தது.

அவளுடைய பேச்சில் கர்வமிருப்பது போல் தோன்றியது.

''நீங்கள் சிறந்த வீரர், அறிவாளி என்பதை இன்று காலையில் பார்த்தவுடனேயே தெரிந்துகொண்டு விட்டேன். ஆனால் நீங்கள் என்னைப்பற்றி இன்னும் புரிந்து கொள்ளவில்லை. அதனால்...'' என்று மீன்விழி சொன்னபோது,

''அதனால், நீ என்னைவிடப் பெரும் அறிவாளி, அப்படித்தானே?'' என்று கூறும்போது அவன் குரலில் சீற்றமிருந்தது.

''அடடா, அதற்குள் முகம் மாறிவிட்டதே! விளையாட்டுப் பேச்சு வினையாகிவிடப் போகிறது. என் உள்ளத்தை இதற்குள் நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள் என நினைக்கிறேன். ஒரு பெண் தன் மனத்திலுள்ளதை உடனே, வி[illegible]ரைக்க[illegible]ாள்

01 09 20

அதுவும் புது மனிதனிடம். தாங்கள் என்னைப் பொறுத்தவரை புதியவரல்லர். உம்... என்ன அப்படி என்னை விழுங்கி விடுபவர் போல் பார்க்கிறீர்கள்? தட்டிலுள்ளதைத் தீர்த்துவிடுங்கள்... என் தந்தை காத்திருப்பார். நான் போக வேண்டும். அதற்குள் நான் உங்களிடம் மனம் விட்டுப் பேச நினைக்கிறேன். காந்தம்போல் என்னை இழுத்துவிட்ட உங்களிடம் கள்ளமற்ற என் இதயத்துணர்ச்சியைக் கூறியாக வேண்டும்.''

இவ்வாறு மீன்விழி கூறும்போது அவளுடைய விழிகள் மின்னின. அவள் உணர்ச்சி வயப்பட்டிருக்கிறாள் என்பது அவளுடைய அங்கங்கள் துடிப்பதிலிருந்து தெரிந்தது.

ஆதித்தன், அவளையே உற்று நோக்கினான். 'காந்தம் போல் கவர்பவர்கள் பெண்கள் என்று சொல்வார்கள். நாம் இவளுக்குக் காந்த சக்தியாகி விட்டோமே?' பெண்களைக் கவரக்கூடிய சக்தி அப்படி என்ன நம்மிடம் இருக்கிறது?

'உம். மீன்விழியாள் கூறுவது உண்மையாயிருப்பின் நம்முடைய திட்டத்தைச் சிற்பியின் மகளைக் கொண்டே நிறைவேற்றிக் கொள்வோம்' என்று முடிவு செய்தான்.

'நான் சோழநாட்டின் சாதாரணக் குடிமகன் அல்லன், பல்லவ நாட்டைச் சுற்றிப்பார்க்க வந்த யாத்ரிகன் அல்லன். விஜயாலய சோழரின் ஒரே மகன். அபராஜிதனின் நண்பன். இளவரசன் ஆதித்த சோழன்' என்று கூறிவிட முடிவு செய்தான்.

○



# 13. வாளும் விழியும்

தன்னை எப்படி வெளிப்படுத்திக் கொள்வது என்று ஒரு கணம் யோசித்தவாறே மீன்விழியாள் கொண்டு வந்த உணவை, அது கல் நிறைந்ததாயிருந்தாலும், ஒரே புளிப்பாக இருந்தாலும், விரைவில் உண்டு தீர்த்து முடித்தான். குவளை நீரை எடுத்து ஒரே மூச்சில் குடித்தான்.

மீன்விழியாள் அவனை வைத்த விழி வாங்காது அப்படியே பருகித் தீர்த்து விடுபவள் போல் பார்த்துக் கொண்டிருந்தாள். அச்சம், மடம், நாணம் மூன்றையும் நாம் எவ்வாறு விட்டோம் என்று சிற்பி மகள் நினைத்தாள். அச்சத்தை விட்டவள் அவள் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் நாணத்தை விட்டவள் என்று அவளைப் பற்றி ஒருவரும் சொல்லத் துணிய மாட்டார்கள். பல்லவ நாட்டில் பெரிய அதிகாரி முதல் தன் தந்தையிடம் பணியாற்றும் சிற்பி வரை அவள் சகஜமாகப் பழகுவாள். கள்ள உள்ளம் அவளிடம் கிடையாது. நேருக்கு நேர் விழி இமைக்காமல் பார்ப்பதும், முத்துப் பற்கள் தெரிய, நாணயங்கள் கொட்டுவது போல் கலகலவென்று சிரிப்பதும், கண்டிப்பாகவும் அழுத்தமாகவும் பேசுவதும் அவளுடைய பிறவிக் குணங்கள். அதை அறியாது மூக்கு அறுபட்டவர்களும் உண்டு. அவளைக் கண்டாலே அஞ்சி நடுங்குபவர்களும் உண்டு.

ஆதித்தனும், ஆண்மகன் போன்ற, அவளுடைய குணத்தைப் பற்றி நேற்று முதல் சிந்தித்து வருகிறான். அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

சோழ அரச குமாரன் என்று தெரிவித்துவிட்டால், அவளுடைய மனப்பான்மை எப்படி மாறுமோ?

தண்ணீரைக் குடித்துக்கொண்டே ஆதித்தன் எண்ணினான்.

''மெல்ல மெல்ல... வேகமாகக் குடித்தால் எப்படி?'' என்று மீன்விழியாள் மெல்லக் கூறி அவனைப் பார்த்தாள்.

மீன்விழியாள் என்ற பெயர் அவளுடைய விழி அழகால் இடப்பட்டது என்று சிலர் நினைக்கலாம். ஆனால், அவளுடைய தந்தை சிற்பி, திருஆலவாய் நகரில் வாழ்ந்தபோது, அவள் பிறந்ததனால் மீனாட்சி அம்மையின் திருப்பெயர் கொண்டு

இடப்பட்டது. முகமெனும் தடாகத்தில் இரு விழிகளும் சுழல்வது கயல்களின் துள்ளலைப் போன்றிருக்கிறது.

ஆதித்தன் மெல்ல நகைத்தான். "உன்னை அரசர் தேடவில்லையா?" என்று கேட்டான்.

"அவர் புறப்படுவதற்குள் சென்று வழியனுப்பி விட்டேன்!" என்றாள் மீன்விழி.

"அரசர் எங்கு செல்கிறார்?" - ஆதித்தன் கேட்டான்.

"அவர் எங்கு வேண்டுமானாலும் செல்வார். இப்போது கோயில்கள் கட்டப் புதிய புதிய ஊர்களைத் தேர்ந்தெடுப்பதற்குச் சுற்றுப்பயணம் செய்கிறார்" என்று மீன்விழி கூறிக்கொண்டே, செம்பில் மீதியிருந்த தண்ணீரை எடுத்து, ஆதித்தனின் வாயை மெல்லத் துடைத்தாள்.

ஆதித்தன் உடல் சிலிர்த்தது. "மீன்விழி, உனக்கு இந்தப் பெயரைச் சூட்டியது தகும்" என்றான் ஆதித்தன்.

மீன்விழி மெல்ல நகைத்தாள். "எல்லோரும் சொல்வதைத் தான் நீங்களும் சொல்கிறீர்கள்."

"எல்லாரும் என்ன சொல்கிறார்கள்?"

"என் பெயரைப் பற்றித்தான்..."

"அது சரிதானே?"

"உங்களை எந்தக் காந்த சக்தியும் எளிதில் கவர்ந்துவிடும் என்று தோன்றவில்லை..."

அப்போது ஆதித்தன் சிரித்தான். ஆதித்தன் சிரிப்பில் எப்போதும் எதிரியின் இதயத்தைக் குலுக்கிவிடும் ஒளி இருக்கும்.

"சில நாள்களுக்கு முன்பு என் சகோதரியைக் காளத்தியில் சந்தித்தீர்கள். அப்போதும் இதே சிரிப்பு சிரித்தீர்கள். அந்தச் சிரிப்பில் அவள் மயங்கி விட்டாள். அதனால்தான் உங்கள் பேச்சை நம்பி, ஊரை விட்டுப் புறப்பட்டு விட்டாள். தஞ்சைக்குச் செல்லப் போகிறாள்" என்றாள்.

"என் பேச்சை நம்பினாள் என்று சொல்லு. மயங்கினாள் என்று சொல்வது சரியா?" என்றான் ஆதித்தன்.

"நம்பிக்கை இருந்தால்தான் மயங்குவர்..." என்றாள் மீன்விழி.

"மயங்குபவர்கள் நம்பலாமல்லவா?" என்று ஆதித்தன் அவள் இதயத்திற்குள் விழியைப் பாய்ச்சுவது போல் கேட்டான்.



22780 ; கிளை நூலகம் தூத்துக்குடி சிதம்பரநகர்

"மயக்கம் தீர்ந்த பிறகு நம்பிக்கை குறைந்து விடலாமல்லவா?" ஆதித்தன் மறுமொழி கூறினான்.

"ஓ! மிக நன்றாகப் பேசுகிறீர்கள். சோழ நாட்டவர்கள் மிகவும் புத்திசாலிகள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்... நேரே இப்போது பார்த்துவிட்டேன்..."

"உம்... சோழ நாட்டவர்கள் புத்திசாலிகளாக இருந்து என்ன பிரேயாசனம்? பல்லவ நாட்டவர்களுக்கு அடிமையாகவல்லவா இருக்கிறார்கள்..."

ஆதித்தன் இவ்வாறு கூறியவுடன், மீன்விழி அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவள் முகத்தில் வியப்புக்குறி புலப்பட்டதா அல்லது சந்தேகம் தெரிந்ததா என்பது புரியவில்லை.

"என்ன சொல்கிறீர்கள்? சோழநாடு, பல்லவநாடு என்று ஏன் பிரித்துப் பேசுகிறீர்கள்? பாண்டிய நாட்டவர்கள், சாளுக்கியர்கள் வேண்டுமானால் பல்லவர்களைக் கண்டு பொறாமைப்படுபவர்களாக இருக்கலாம். சோழ நாட்டவர்கள் வேறு, பல்லவர்கள் வேறு என்று பிரிக்கவே கூடாது. இப்போதுதானே சோழ நாட்டவர்கள் தங்கள் திறமையைக் காட்டத் தொடங்கியிருக்கிறார்கள்? தஞ்சாவூரில் சிறு கோட்டையைக் கட்டியிருக்கிறார்கள். எங்கள் அரசர் அபராஜிதர் மிகவும் பெரிய மனத்துடன் விஜயாலயருக்குச் சில பகுதிகளை விட்டுக் கொடுத்துவிட்டார்" என்று மீன்விழி கூறும்போது ஆதித்தன் உடல் மெல்லத் துடித்தது. சோழநாட்டைச் சிறுமைப்படுத்தி சிற்பி மகள் பேசுவதுபோல் அவனுக்குத் தோன்றியது. மீன்விழி மிக நெருக்கமாகப் பழகுவதை உண்மையாக நம்பிவிடக் கூடாது என்று முடிவு செய்தான். என்றாலும், தான் சோழ இளவரசன் என்பதை அவளிடம் எடுத்துச் சொல்லிவிட வேண்டும் என்ற துடிப்பு ஓங்கி நின்றது.

ஆதித்தன் உடனே எழுந்து நின்றான்.

அவன் உடனே அந்த இடத்தை விட்டு எழுந்துவிடுவான் என்பதை மீன்விழி எதிர்பார்க்கவில்லை.

"ஏன், எழுந்துவிட்டீர்கள்? சற்று இளைப்பாறலாமே" என்று மீன்விழி குரலில் அன்பு குழைந்து வரக் கூறினாள்.

"இல்லை... எனக்கு நேரமாகிறது..." என்றான் ஆதித்தன்.

மீன்விழி சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்?" ஆதித்தன் கேட்டான். அவன் தன் உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொள்ள விரும்பினான்.

"நேரம் உங்களுக்கு மட்டும்தானா ஆகிறது? அதோ மலைவாயிலை நோக்கி விரைந்து கொண்டிருக்கும் கதிரவனும்

நேரமானதால்தான் விரைகிறான். எனக்கும் நேரமாகிறது. தான் பண்டங்களைச் சேகரிக்க வேண்டும். திருத்தணிகைக்குப் புறப்பட வேண்டும்'' என்றாள் மீன்விழி.

''நீ எப்போது புறப்படுகிறாய்?'' என்று ஆதித்தன் கேட்டான்.

''நாளைக்கு'' என்றாள் மீன்விழி. பிறகு அவனை நெருங்கி, அவன் கரங்களைத் தன்னிரு கரங்களாலும் பற்றி, ''நீங்கள் எங்கு புறப்படுகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''காலையிலேயே சொன்னேனே! திருத்தணிகைக்கு. அதற்காகத்தான் குதிரையை நானும் என் நண்பனும் எடுத்துக் கொண்டோம்'' என்றான் ஆதித்தன்.

''இப்போதே புறப்பட்டுத்தான் ஆக வேண்டுமா?'' என்று மீன்விழி கேட்டாள்.

''ஆமாம். உன் உதவியிருந்தால்'' என்றான் ஆதித்தன்.

''என் உதவியா? காத்திருக்கிறேன், கேளுங்கள்'' என்று கூறும்போது மீன்விழியின் கரம் ஆதித்தன் கரத்தை அழுத்தியது. மென்மைக்கும் அழுத்தமுண்டு என்பதைப் புரிந்து கொண்டான். அவள் பிடியைத் தவிர்க்க முயன்றான் ஆதித்தன்.

''எனக்கு உடனே குதிரை ஒன்று வேண்டும். இன்றிரவே திருத்தணிகைக்குச் சென்று என் நண்பனைச் சந்திக்க வேண்டும்'' என்று கூறிவிட்டு மீன்விழியை உற்று நோக்கினான்.

''குதிரை தருவதற்கு நான் என்ன அதிகாரியா?'' என்று மீன்விழி கேட்டாள்.

''அதிகாரிகளுக்கும் மேல்... நீ மனம் வைத்தால் ரதமே ஏற்பாடு செய்ய முடியும்...'' என்று புகழ்ந்தான்.

''தஞ்சைக்கு வந்தால் என்னை ரதத்தில்தான் அழைத்துச் செல்வீர்களோ?'' என்று மீன்விழி அவனது பரந்த தோள்மீது படர முயன்றாள். அவளை மெல்ல, மிக சாமர்த்தியமாக, தன்னருகே வர முடியாமல் நகரச் செய்தான். ஒரு கணம் - மீண்டும் சொல்லி விடுவோமா என்ற துடிப்பு. தஞ்சைக்கு மீன்விழி வந்தால், ரதத்தில் அழைத்துச் செல்வது ஒன்றும் சிரமமில்லை. இளவரசனுடன் இரதத்தில் வந்தால் சாதாரண வரவேற்பா கிடைக்கும்? அதைச் சொல்லி விடுவோமா?'

''என்ன மௌனமாகி விட்டீர்கள். தஞ்சையில் ரதம் கிடைக்காதா?'' மீன்விழி கேட்டாள்.

''தங்க ரதமே கிடைக்கும்'' என்றான் ஆதித்தன்.

''ஓ! அவ்வளவு செல்வம் கொழிக்கிறதா?'' அவள் கேட்ட கேள்வி ஆதித்தனுக்குக் கோபத்தை ஏற்படுத்தியது.

''ஏன் பல்லவ நாடுதான் செல்வம் கொழிக்கும் நாடோ? வெறும் கற்கோயில்களைத் தவிர வேறென்ன இருக்கிறது. எங்கள் அரசர் பெரும் கோயில் கட்டப் போகிறார். தங்கத்தால் விமானம் அமைக்கத் திட்டமிட்டிருக்கிறார்...'' என்றான், சிறு குழந்தை போட்டி போட்டுக்கொண்டு பேசுவது போல்.

மீன்விழி நகைத்தாள். ''பல்லவ அரசரை நீங்கள் மிகவும் சாதாரணமானவராக நினைத்து விட்டீர்கள் என்று தோன்றுகிறது. அவர் திருத்தணிகை முருகபிரானுக்குக் கனகாபிஷேகம் செய்யத் தீர்மானித்திருக்கிறார். அதற்காக ஆலோசனைக் கூட்டம் திருத்தணிகையில் நடக்கப் போகிறது'' என்றாள். பெருமை அவள் முகத்தில் பொங்கிப் பரவியது.

''நீ திருத்தணிகைக்குப் போவது அதற்குத்தானா?''

''ஆமாம். என் தந்தையும் வருகிறார். திருத்தணிகைக் கோயிலில் பல புதிய சிற்ப மண்டபங்கள் கட்ட உத்தேசம். நீங்களும் அந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு வரலாம்...''

''நீ உதவி செய்தால் வருவேன்!''

''குதிரை தானே?'' என்று கூறி, குறும்புத்தனமாக நகைத்த சிற்பி மகள், ''தருகிறேன், ஆனால் நீங்கள் எனக்கோர் உதவி செய்ய வேண்டும்.''

''உதவியா, உனக்கா? உனக்கு உதவி செய்யும் தகுதி எனக்கு இருக்கிறதா?''

''நிறைய இருக்கிறது. திருத்தணிகையில் என்னை நீங்கள் கட்டாயம் சந்திக்க வேண்டும்.''

''இதன் பெயர் உதவியா?''

''என்னைச் சந்தித்தவுடன் நான் உங்களை என் தந்தையிடம் அறிமுகப்படுத்துவேன்...''

''இது நீ எனக்குச் செய்யும் உதவியல்லவா?''

''தஞ்சைக்குச் செல்ல என்னை அனுமதிக்குமாறு நான் தந்தையிடம் கேட்பேன். அப்போது கற்பனையாக ஒரு கதை சொல்வேன். நீங்கள் அதற்கு 'ஆமாம்' என்று சொல்ல வேண்டும். 'இல்லவே இல்லை, பொய்' என்று சொல்லிவிடக்கூடாது!''

''என்ன கற்பனைக் கதை அது?'' ஆதித்தன் கேட்டான்.

''இப்போது சொல்ல மாட்டேன். திருத்தணிகை மலையடிவாரத்திலுள்ள சத்திரத்தில் உங்களைச் சந்திக்கும்போது

கூறுகிறேன். இப்போது இதற்கு ஒப்புக் கொண்டால்தான் குதிரை தருவேன்'' என்றாள். அவள் குரலில் வேண்டுகோளின் அழுத்தம் இருந்தது.

ஆதித்தன் சம்மதித்தான். குதிரை கிடைத்தது. குதிரையைத் தட்டிக் கொடுத்து ஏறும்போது மீன்விழியாள் கையை அசைத்தவாறு நின்று கொண்டிருப்பது தெரிந்தது.

குதிரை காற்றிலும் கடுகிப் பறந்தது. மெல்ல மெல்லக் கதிரொளி சுருங்கியது.

திடீரென குதிரையின் வேகத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

சாலையின் நடுவே அவன் கண்ட காட்சி. பல்லக்கு ஒன்று நின்று கொண்டிருந்தது. அதைச் சுமந்திருப்பவர்கள் கீழே இறக்கி வைக்கத் தோன்றாமல் திகைத்து நின்றனர்.

வாளோடு வாள் உராய, ஏழெட்டுப்பேர் குதிரை மீதிருந்து சண்டையிட்டுக் கொண்டிருந்தனர்.

ஆதித்தன் புரிந்து கொண்டான். சிவிகைக்குள்ளிருக்கும் மங்கைக்காக அந்தச் சண்டை நடக்கிறது என்று நொடியில் தெரிந்து கொண்டான்.

பல்லவ நாட்டில், சாலையில் தைரியமாக நடமாட முடியவில்லை. ஒரு பெண்ணை வழி மறிக்கிறார்கள். யாரா யிருந்தால் என்ன? வழிப்பறிக் கொள்ளையர்களுக்கு இடம் தரக்கூடாது.

ஆதித்தன் குதிரை மீதிருந்து கீழே குதித்தான். ஒரு வீச்சில் ஒரு குதிரை வீரனைக் கீழே வீழ்த்தினான். அவனிடமிருந்து வாளைப் பறித்துக் கொண்டான். ஆதித்தன் கை வாள் சக்கரம் போல் சுழன்றது.

ஓவென்ற அலறலுடன் மூலபத்திரன் வீரர்கள் உயிர் பிழைத்தால் போதும் என்று ஓடி ஒளிந்தனர். சிலர் குதிரை மீதேறி ஓடினர். சிலர் தங்கள் பருத்த சரீரத்தைத் தூக்கிக் கொண்டு ஓடினர்.

சிவிகையின் திரை மெல்ல விலகியது. பல்லவ இளவரசி எட்டிப் பார்த்தாள். வழி மறித்தவர்களை ஓட ஓட விரட்டிவிட்டுத் தன் மேலிருந்த புழுதியைத் தட்டிக் கொண்டு ஆதித்தன் திரும்பினான்.

பல்லவ இளவரசியின் விழிகளும், ஆதித்தன் விழிகளும் ஒரு கணம், ஒரே கணம் சந்தித்துக் கொண்டன.

O



## 14. மயில் ஆடியது

விக்கியண்ணன் திருத்தணிக்கையை அடையும்போது நன்றாக இருட்டி விட்டிருந்தது. மலையடிவாரத்துச் சத்திரத்தை அடைவதற்குள் அவன் கால்கள் தள்ளாடின. அவன் ஏறி வந்த குதிரை அஸ்தமன சமயத்திலேயே பிடிவாதம் பிடிக்கத் தொடங்கிவிட்டது. வேகத்தைக் குறைத்துப் பார்த்தான். குதிரையினின்று கீழே இறங்கிச் சற்று நேரம் அதற்கு ஓய்வு அளித்துப் பார்த்தான். ஊஹூம், ஊஹூம்.

விக்கியண்ணனுக்கு, அசுவ பாஷை தெரியும். அவன் மெல்ல அதன் முதுகைத் தட்டிக் கொடுத்தான். கழுத்தருகே வருடினான். காதருகே ஏதோ முணுமுணுத்தான். குதிரை பயங்கரமாகக் கனைத்தது. இனி அது நகரவே நகராது என்று அவனுக்குப் புரிந்துவிட்டது. நடுவழியே விட்டு விட்டுச் செல்வது முறையாகாது. வேறு குதிரையைப் பெறுவதற்குக் குதிரைச் சாவடியில் ஒப்படைக்க வேண்டும். அவன் நடந்தான். குதிரையையும் மெல்ல நடத்தினான். மெல்ல மெல்ல நடந்து ஊரின் எல்லையை அடையும்போது இருட்டிவிட்டது. நல்லவேளையாக அங்கே குதிரையை ஒப்படைக்க வசதி யிருந்தது. மலையடிவாரத்துச் சத்திரத்திற்கு வழி கேட்டறிந்து கொண்டு மெல்ல நடந்து சத்திரத்தை அடையும்போது அவன் மிகவும் களைத்துவிட்டான்.

ஒரு கவளம் சோறு, ஒரு வாய்த் தண்ணீர் கிடைத்தால் போதும் என்ற நிலைமை அவனுக்கு ஏற்பட்டது. முதல் நாள் இரவும் அதே நிலைதான். அப்போதாவது ஆதித்தன் உடனிருந்தான். இப்போது ஆதித்தன் எங்கே சிக்கி, எப்படித் திண்டாடுகிறானோ என்று நினைக்கும்போது அவனுக்குக் களைப்பைவிட கவலை அதிகமாகிவிட்டது. எங்கே சுற்றினாலும், திருத்தணிகைச் சத்திரத்திற்கு இளவரசர் வந்து விடுவார் என்று உறுதியாக நம்பினான் அவன்.

சத்திரத்திற்குள்ளே பலர் கூடிப் பேசும் ஒலி கேட்டது. பிரகாசமான ஒளி தரும் தீவர்த்திகள் எரிந்து கொண்டிருந்தன.

01 09 201

ஒவ்வொருவராக உணவுண்டு விட்டு வந்து முற்றத்தில் கூடுகிறார்கள் என்பதை உணர்ந்து கொண்டான். உடலெல்லாம் புழுதி மயம். ஓடும் ஆற்றில் நன்றாக அமிழ்ந்து நீராட வேண்டும் போல் தோன்றியது.

பலமாக ஏப்பம் விட்டவாறு வெளியே வந்த ஒருவனைப் பார்த்து விக்கியண்ணன் குளக்கரைக்கு வழி கேட்டான்.

மங்கிய வெளிச்சத்தில் அவன் சொன்னான்.

''ஏன் ஐயா, சந்தனம் பூசிக் கொள்ளும் நேரத்தில் குளிக்கப் போகிறேன் என்கிறாயே? சீக்கிரம் சமையற்கட்டிற்குப் போய் பந்தியிலே உட்கார். இன்னும் சில நாழிகைக்குள் கடைசிப் பந்தி முடிந்துவிடும்'' என்றான்.

விக்கியண்ணன் உள்ளே விரைந்தான். முற்றத்தைத் தாண்டி, இடைக்கழியைத் தாண்டியவுடன் விசாலமான கூடம் ஒன்றில் நூற்றுக்கணக்கானவர்கள் அமர்ந்து விருந்துண்ட வாறிருந்தனர். மணம் மூக்கைத் துளைத்தது.

விக்கியண்ணன் சிலையின் எதிரே அமர்ந்து கொண்டான். அவனருகே மிக வேகமாக குழம்புச் சோற்றை உருண்டை யாக்கிப் பெரிய பெரிய கவளமாக உள்ளே தள்ளிக் கொண்டிருந்த இருவருள் ஒருவருக்குச் சற்று விக்கல் ஏற்படவே, வேகத்தைக் குறைத்தனர்.

''என்னப்பா, இன்னும் தயிர் சோற்றை உள்ளே தள்ளியாக வேண்டும். ஆனால் அதற்குள் மேளம் தட்டி விடுவார்கள் போலிருக்கிறதே'' என்றான் ஒருவன், ஒரு செம்புத் தண்ணீரைக் குடித்தவாறு.

மேளம் தட்டினால், யார் போய் ஆடுவதாம்? அவசரப் படாதே, மெல்லவே ஆகட்டும்'' என்றான் மற்றொருவன்.

''மயிலழகு இன்னும் வரவில்லையா?'' என்று முதலில் பேசியவன் கேட்டான்.

''சீவிச் சிங்காரிச்சு அது வரதுக்குள்ளே பொழுதுவிடிஞ்சிடும் போலிருக்கு'' என்றான் மற்றவன்.

''இந்த ஊரு இல்லையா அந்த மயிலழகுக்கு?''

''காளத்தியிலிருந்து நேற்றுத்தான் வந்தோம். உடனே இன்றைக்கு ஆட வைத்துவிட்டாங்க... உச்சிப் பொழுதுக்கு



வந்துதான் என்னை அழைச்சாங்க. நான் உன்னை வந்து கூப்பிட்டேன், தாளம் போட...''

''யார் யாரு வரப் போறாங்க?''

''தெரியலை... எங்கெங்கோ கோட்டங்களிலேருந்து தலைவருங்களெல்லாம் வந்திருக்காங்க. முதல் பந்தியிலேயே அவங்களுக்கு விருந்தாச்சு. காஞ்சியிலிருந்து அரசர்கூட வராராம்.''

''என்ன பேசப் போறாங்க?''

''நாட்டியம் முடிஞ்சதும் முக்கியமான ஆலோசனைக் கூட்டமிருக்காம்...''

''நமக்கு என்ன தெரியும்? அரசாங்க ரகசியம் நமக் கெதற்கு?''

''ஏதாவது யுத்தம் கித்தம்?''

''அப்படி ஒண்ணும் தெரியலை... ஆனா, பல்லவ ராஜாவுக்கு தங்கம் நிறைய வேணுமாம்...''

''தங்கம் எதுக்கு?''

''அதுதான் தெரியலை... தங்கத்திற்காக ஏதாவது போர் ஏற்படலாம்... நாமெல்லாம் வாளெடுத்துக்கொண்டு போக நேரிடலாம்...''

''போரா? நாம் போவதா?'' - தோளைக் குலுக்கிக் கொண்டவன் உடல் மெல்ல நடுங்கியது.

மேளம் தட்டும் சப்தம் கேட்டது. சதங்கை ஒலியும் தொடர்ந்தது. தாளம் தட்டுபவர்கள் இருவரும் கை கழுவிக் கொண்டோடினர். விக்கியண்ணன் கடைசிப் பருக்கை வரை உண்டு முடித்து மெல்ல எழுந்து சென்றான்.

நடுமுற்றத்தைச் சுற்றியிருந்த தாழ்வாரம் முற்றும் நிறைந்திருந்தது. சுளுந்தும், பெரும் அகலில் தீபமும், தீவர்த்தியும் ஆங்காங்கே எரிந்து ஒளி கொடுத்துக் கொண் டிருந்தன. பெரும் மீசையும், தலைப்பாகையுமாகத் தூண்களில் சாய்ந்தவாறு கோட்டத் தலைவர்கள் அமர்ந்திருந்தனர். ஊரிலுள்ள பெரிய தனக்காரர்கள், நாட்டாண்மைக்காரர்கள் வெற்றிலையைச் சுவைத்துக் கொண்டிருந்தனர். காற்றில் அலைபாயும் தீச்சுடரின் ஒளியால் மனித உருவங்களின்

நிழல்கள் மிகப் பெரிதாகச் சுவரில் தெரிந்து, அசையும்போது பயங்கரமாகக் காட்சியளித்தன.

நாட்டியம் காண்பதற்கு அந்தக் கூடத்தில் அமர வேண்டும் என்ற ஆசைதான் விக்கியண்ணனுக்கு. ஆனால், இளவரசர் எப்படியும் தேடி வந்துவிடுவார் என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்தபடியால் சத்திரத்திற்கு வெளியே காத்திருப்பது என்று முடிவு செய்தான்.

உள்ளே சதங்கை ஒலி கேட்டது. மத்தள சப்தம் எழுந்தது. 'கிணிங் கிணிங்' என்று தாள ஓசையுடன் புரியாத மொழியில் யாரோ பாடுவதும் கேட்டது. காளத்தியில், இளவரசரும் அவனும் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்த அந்தப் பெண், செழுமையான மேனி அமைப்பும், கருமை நிறமானாலும் முகத்தில் வீசும் அழகொளியும், ஒவ்வோர் அசைவிலும் காண்பவரைச் சுண்டி இழுக்கும் எழில் கவர்ச்சியும் விக்கியண்ணன் மனத்தில் அழியாமல் பதிந்துவிட்டன. நல்ல உயரம், அடர்த்தியான கூந்தல். சோழ நாட்டிலோ, கங்க நாட்டிலோ பார்த்திருக்க முடியாத கம்பீரமான, கண்டால் மோகங்கொள்ளும் தோற்றம்.

இளவரசரும், அவனும் கலந்து பேசியே அவளைச் சோழ நாட்டிற்கு அழைத்தனர். காளத்தியில் அரை வயிற்றுக்குக்கூட கிடைக்காத உணவும், அரை உடலை மறைக்கக்கூட கிடைக்காத உடையுமாக வாழ்ந்து வந்தவளுக்குச் சோழ நாட்டினரின் அழைப்பு சுவர்க்கபுரியின் அழைப்பாகவே தோன்றியது.

இளவரசர், விக்கியண்ணன் இருவருமே அவளுடைய உள்ளத்தில் புகுந்து கொண்டனர். இருவருக்கும் பரந்த தோள்கள். தேக்குமரம் போன்று உறுதியான கரங்கள், விழிகளிலே வீசும் வீர ஒளி, உணர்ச்சி வயப்படக் கூடியவர் என்பதைப் புலப்படுத்தும் உதடுகள், அதன்மேல் வளர்ந் திருக்கும் கருமையான மீசை. ஆகா, பருவச் செழுமையுடன் ஏழிலெலாம் உருக்கி வார்த்த மேனியை உடைய அவள் ஒரு கணம் மெய்மறந்தாள். ஆரத்தழுவ வேண்டும் என்ற துடிப்பு அவளுள்ளத்தில் உதித்தது. எழுந்த உணர்ச்சியை உடனே வெளிப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. தஞ்சைக்கு அழைத்தபோது, உடனே சம்மதம் தெரிவித்ததற்குக் காரணமே அதுதான்.

சிற்பியின் இரண்டாவது மகள் அவள் என்று பலரும் கூறினாலும், அவள் பிறப்பில் ரகசியமிருந்தது. சிற்பி அதைத் தன் மனத்திற்குள்ளேயே புதைத்து வைத்திருந்தார்.



மீன்விழிக்கும் தெரியாது. தனது இளைய சகோதரி என்றே எண்ணினாள். சகோதரியிடம் மீன்விழிக்குப் பிரியம் அதிகம். எனவே தன்னுடனேயே இருக்குமாறு பலமுறை வற்புறுத்தி யிருக்கிறாள்.

காளத்தியில் இளவரசரின் அழைப்பை ஏற்றவுடன், மயிலழகு மீன்விழியாளைக் காண விரைந்து வந்தாள். சோழ நாட்டிற்குச் செல்லப் போவதைக் குறித்துத் தெரிவித்தாள். திருத்தணிகையில் சந்திப்பதாக சோழ நாட்டவர்கள் கூறியிருப்பதையும், தன் கலைத்திறமைக்கு ஏற்ற இடம் சோழ நாடென்றும் மயிலழகு உறுதியாகத் தெரிவித்தபோது மீன்விழி மறுத்தோ, ஆமோதித்தோ ஏதும் பேசவில்லை. எந்தவிதக் கருத்தையும் மனத்தில் உருவாக்கிக் கொள்ளவில்லை. அவளை அழைத்த சோழ நாட்டவர்கள் யாராக இருக்கக்கூடும் என்று கேட்க யோசித்துக் கொண்டிருந்தபோது ஆதித்தனும், விக்கியண்ணனும் அவளைச் சந்தித்தனர்.

மயிலழகு சத்திரத்தில் நடனமாடுவதைக் காண வேண்டும் என்ற துடிப்பு விக்கியண்ணனிடம் இருந்தது. அதேபோல் இளவரசரைச் சந்திக்காமல் போய்விடக் கூடாதே என்ற கவலையுமிருந்தது. அதனால் சந்தித்து நீண்ட வெளித் தாழ்வாரத்தின் கோடியில் சற்று இருள் நிறைந்த இடத்தில் காணப்பட்ட தூணொன்றில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான். அவன் விழிகள் வீதியிலும், மனமெல்லாம் உள்ளேயுமாக இருந்தன. 'ஜல் ஜல்' என்ற பாதச் சலங்கை ஒலி கேட்டது. இடையிடையே இனிய குரலொன்று, அவள் பாடுகிறாள் போலிருக்கிறது. எழுந்து ஓடோடிச் சென்று பார்த்தான். நடனமாடும் இடத்தில் கூட்டம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. ஆலோசனைக் கூட்டம் இங்கே நடப்பதற்கு அறிகுறியே இல்லையே என்று விக்கியண்ணன் எண்ணினான். வாசற்படி வரையில் கூட்டம் நெருக்கியடித்து நின்று கொண்டிருந்தது. இடையிடையே மயிலழகியின் முகம் தெரிந்தது. முகத்தில் சுழலும் விழிகள் தெரிந்தன.

சங்கு போன்ற கழுத்து தெரிந்தது. மூங்கில் போன்ற தோள்கள் வளைவதும், நாகம் நெளிவது போல் பின்னல் துள்ளித் துள்ளி அசைவதும் தெரிந்தன. ஒரு சமயம் கழுத்தின் கீழ்ப்பகுதி மட்டும் தெரிந்தது. கச்சைகளுக்குள் கட்டுண்டு கிடக்கும் செங்கலசங்கள் துள்ளுவது தெரிந்தது. பொய்யோ என்று கூறப்படும் இடை அசைவது தெரிந்தது. சுற்றிச் சுழலும்போது பின்னழகும் சிலிர்க்க வைத்தது.

மயிலழகு சோழ நாட்டிற்கு வருவது சோழநாடு செய்யும் பெரும் பாக்கியம் என்று எண்ணியவாறு, மீண்டும் வெளித் தாழ்வாரத்தின் கோடியில் சென்றமர்ந்தான் விக்கியண்ணன்.

இதமான மலைக்காற்று வீசியது. உண்ட மயக்கமும், நாள் முழுவதும் அலைந்த களைப்பும், இனிய நினைவுகளும் அவனது விழிகளை மெல்லப் பொத்தின. அவன் ஒரு கணம் திருத்தணிகை விட்டுப் பறந்தான். இனிய கனவுகள் அவன் எதிரே வந்து நர்த்தனமாடின. காலையில் சந்தித்த இளவரசி வந்தாள். மீன்விழி தோன்றினாள். மயிலழகு ஆடினாள்.

யாரோ அவனைத் தட்டி எழுப்புவது போன்ற உணர்வு.

"ஏன்யா. ஒவ்வொருத்தர் முண்டிக்கொண்டு நாட்டியத்தை ரசிக்கிறாங்க, நீ நல்லா குறட்டை விடுகிறாயே. உன் குறட்டைச் சப்தம் நாட்டியத் தாளத்திற்கேற்ப ஒலிக்கிறதே!" என்றார் அவனைத் தட்டி எழுப்பியவர்.

விக்கியண்ணன் மெல்லக் கண்களைத் திறந்தான்.

"என்னிஷ்டம், நான் தூங்குவேன்! நீ யாரய்யா எழுப்புவதற்கு? சுகமான நித்திரையை அநியாயமாகக் கலைத்து விட்டாயே!" என்று விக்கியண்ணன் சீறினான்.

"இங்கே தூங்கக்கூடாதய்யா?"

"ஏன், சத்திரம் எதற்காகக் கட்டியிருக்கிறார்கள்? உண்டு, உறங்கத்தானே!"

"இருக்கலாம். இப்போது மகாராஜா வரப்போகிறார். அவர் வரப்போ யாரும் தூங்கக் கூடாது!"

"ஏன், அவருக்கும் தூக்கம் வந்துவிடுமோ?"

"அதிகப்பிரசங்கி, சக்கரவர்த்தியை அவமரியாதையா பேசுகிறாயே, உன்னை என்ன செய்கிறேன் பார்?" என்ற அவன் விக்கியண்ணனைத் தூக்கி நிறுத்த முயன்றான்.

விக்கியண்ணன் மிக எளிதாக அவனைப் பிடித்து இழுக்கவே, அவன் தாழ்வார மேடையிலிருந்து கீழே உருண்டான்.

அப்போது - தொலைவில் ஆதித்தன் நடந்து வருவது அவனுக்கு மிக நன்றாய்த் தெரிந்தது. விக்கியண்ணன் பரபரப்படைந்தான். 'இளவரசே!' என்று கூவியழைக்க வேண்டும் என்று தோன்றியது.



திடீரென அந்த வீதியின் மறுமுனையில் பரபரப்பு ஏற்பட்டது. கீழே மண்ணில் உருண்டவனும் எழுந்து மண்ணைத் தட்டிக்கொண்டு வீதி முனைக்கு ஓடினான்.

யானை ஒன்று முகபடாம் அணிந்து கம்பீரமாக அசைந்து வந்தது.

இரண்டு வீரர்கள் ரிஷபக் கொடி ஏந்தி குதிரைமீது கம்பீரமாக அமர்ந்து வந்தனர். காளைகள் மீது முரசு ஏற்றப்பட்டிருந்தன. வேல் ஏந்திய வீரர்கள் அணிவகுத்து வந்தனர். அவர்களுக்கும் பின்னே, வெண்புரவி ஒன்றில் பல்லவ சக்கரவர்த்தி அபராஜிதவர்மன் கம்பீரமாய் அமர்ந்திருந்தான்.

சத்திரத்து வாயிலை நோக்கி ஒருபுறம் சோழநாட்டு இளவரசன் ஆதித்தன் வந்து கொண்டிருந்தான்.

எதிர்ப்புறம் அபராஜிதன் வந்து கொண்டிருந்தான்.

விக்கியண்ணன் செய்வதறியாது திணறினான்.

○



01 09 2012

## 15. விஜயாலயன் வேண்டிய வரம்

விஜயாலயசோழ தேவர் இருள்பிரியா அந்த வேளையில் துயிலெழுந்து நீராடி, வெண்புரவி மீதேறி காளி கோயிலை நோக்கிப் புறப்பட்டார். அவருடைய வழக்கமான அன்றாட நிகழ்ச்சி அது. நிசும்ப சூதனியாகிய துர்க்கையின் தரிசனமில்லாமல் அவர் அன்றாட அலுவல்களைத் தொடங்க மாட்டார்.

அவர் நெற்றியில் துலங்கும் வட்ட வடிவக் குங்குமம், முறுக்கிவிட்ட மீசை. இயற்கையாகவே சிவந்த விழிகள், தேக்கைப் போன்ற உறுதி வாய்ந்த உடல், காண்பவர் அஞ்சுவர், குரலும் இடிமுழக்கம் போலிருக்கும்.

அவருடைய வஜ்ரம் போன்ற தோளில் மெல்லிய மாலை ஒன்று துலங்கும். பாறை போன்று கடினமான பரந்த மார்பில் போர்க்களத்திலே பெற்ற புண்களால் ஏற்பட்ட வடுக்களை எண்ணினால் தொண்ணூற்றாறு இருக்கும். பகைவரைப் புறங்காட்டி ஓடச் செய்தவரல்லாமல், தான் திரும்பி ஓடி வந்ததென்ற சம்பவமே கிடையாது.

தேவியின் திருவருள் பூரணமாக நிரம்பப் பெற்ற விஜயாலயன் நினைவெல்லாம் எப்போதும் நிசும்பசூதனியின் திருவடிகளிலேதான்.

'தேவி! இன்னும் எவ்வளவு காலம் இந்தச் சோழநாட்டை அடிமை நாடாக வைத்திருக்கப் போகிறாய்? என் காலத்திலே நான் சோழ நாட்டைச் சுதந்திர நாடாகக் காண்பேனா? என்னுடைய திருக்குமாரன் ஆதித்தனின் வாழ்நாளில் அவன் புலிக்கொடியை வேங்கடம் முதல் குமரி வரை பறக்க விடுவானா? தேவி! கடைக்கண்ணால் தஞ்சைப் புரியை நோக்குவாய். உன் கரத்துத் திரிசூலத்தை எமக்களித்து பகைவரை ஒழிக்க வழி காட்டுவாய்' என்று விஜயாலயன் துதிக்காத நாளில்லை.

காலையில் தன் கடமைகள் அனைத்தையும் தானே செய்து கொள்வார். அவரது பட்டத்து அரசி, ஆதித்தனின் தாய் காலமாகி எட்டாண்டுகள் கழித்துவிட்டன. அவர் மற்றொரு பெண்ணை



நினைத்தாரில்லை. அந்தப்புரத்தில் இருக்கும் பெண்களில் ஒருத்தியை அவர் நினைத்தால் அழைத்துக் கொள்ளலாம்.

மகன் ஆதித்தனுக்கு வல்லவரையர் மகளை மணம் புரிவித்த பிறகு அவர் தனது மேல்மாட அறையைவிட்டு வெளியே புறப்படுவதில்லை. ஆதித்தனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டி அவன் பொறுப்பில் நாட்டை ஒப்புவித்த பிறகு அவர் இறைவன் திருவடிகளை நினைப்பதிலேயே பொழுதைக் கழித்தார்.

மருமகள் இளங்கோ பிச்சியைப் பாடச் சொல்லிக் கேட்டு மகிழ்வார். ஒற்றர்களை வரவழைத்து நேரம் போவது தெரியாமல் விவாதிப்பார். மகன் ஆதித்தனுடன் உரையாடுவார். அவர் சிந்தையெல்லாம் சோழநாட்டை எவ்வாறு விரிவுபடுத்துவது என்பதிலேயே இருந்தது.

அரிசிலாற்றங்கரைப் போரில் பாண்டிய மன்னனை முறியடிக்கப் பல்லவ மன்னனுக்கு உதவியதிலிருந்து விஜயாலயன் மிகத் தீவிரமாகத் திட்டமிட்டார். இளவரசன் ஆதித்தன் அவர் கருத்துக்குச் சாதகமான யோசனைகளைக் கூறியதுடன், புதிய பல திட்டங்களைத் தெரிவித்தான்.

அதில் ஒன்றுதான் தொண்டை நாடு முழுவதும் சுற்றி வருவதென்ற திட்டம். ஆதித்தனுடன் விக்கியண்ணனும் செல்கிறான் என்பதால், விஜயாலயன் மனச் சமாதானமடைந்தார். பல்லவ நாடு விரோதியின் நாடன்று. ஆனால், இளவரசன் ஒருவன் மாற்றுருவில் நாடெங்கும் சுற்றுவதில் அபாயமில்லாமலில்லை.

விஜயாலயன் கோயில் வாயிலருகே புரவியினின்று இறங்கினார். குதிரை கனைத்தது. அறிமுகமானவர் அருகே வந்தால் அது கனைக்கும். விஜயாலயன் திரும்பிப் பார்த்தார். கோயில் கோபுர வாயிலையொட்டி உடல் முழுவதும் போர்த்திக் கொண்டு ஓர் உருவம் நின்று கொண்டிருந்தது. பணிவும், பயமும், பக்தியும் ஒன்று சேர அவ்வுருவம் நிற்பது அந்த மங்கிய ஒளியிலும் புலப்பட்டது.

''யார், இராமதேவனா?'' என்று விஜயாலயன் குரல் கொடுத்தார்.

பயபக்தியுடன் அந்த உருவம் மேல் போர்வையை அகற்றியது.

''ஆமாம் பேரரசரே'' என்று கைகொண்டு வாய் பொத்திக் கூறினான் இராமதேவன்.

''இளவரசரைப் பற்றிய செய்தி கிடைத்ததா?'' என்று விஜயாலயன் கேட்டார்.

வாயைத் திறந்து சொல்லத் துணிவின்றி, இல்லை என்பதற்கு அறிகுறியாக தலையை அசைத்தான் இராமதேவன்.

இராமதேவன் சோழநாட்டு ஒற்றர் படைகளின் தலைவன். சோழநாட்டு ஒற்றர்கள் மிகத் திறமையுடன் இயங்கி வந்ததால், சிறு படையைக் கொண்டு பெரும் படையை முறியடிக்க முடிந்தது. இப்போது தொண்டை நாட்டில் சுற்றுப்பயணம் செய்யும் ஆதித்தனைக் கண்டுபிடித்து உடனே தஞ்சைக்கு வரவழைக்க வேண்டும் என்று விஜயாலயன் விரும்பினார். ஒற்றர்படை வீரர்கள் ஆங்காங்கே சென்றனர். ஆனால் ஆதித்தனைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

விஜயாலயன் ஒரு கணம் திடுக்கிட்டு நின்றார். தன் திகைப்பை அவர் வெளியே புலப்படும்படி காட்டிக் கொள்ளவில்லை. ஒற்றர் படைத் தலைவருடன், அரசர் பேசுகிறார் என்பதும் யாருக்குமே தெரியா வண்ணம் நடந்துகொண்டார். என்றாலும், இராமதேவனால் கண்டுபிடிக்க முடியாததும் உண்டா என்ற வியப்பு அவருக்கு ஏற்பட்டது.

''இராமதேவா! உனக்கு எங்கிருந்தெல்லாம் செய்திகள் கிடைத்தன?'' என்று விஜயாலயன் கேட்டார்.

''கங்க நாட்டிலிருந்து வந்த செய்தியிலிருந்து விக்கியண்ணன் அங்கிருந்து புறப்பட்ட பிறகு திரும்பவில்லை என்று தெரிந்தது. காஞ்சியிலும், மாமல்லபுரத்திலும் நமது ஒற்றர்கள் நாள்தோறும் செய்தியை அனுப்பிய வண்ணமிருக்கிறார்கள்'' என்றான் இராமதேவன்.

''யாரிடம் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறாய்?'' விஜயாலயன் சற்று அழுத்தமாகக் கேட்டார்.

''கிடாரவன்...'' என்று பெயரை மட்டும் கூறியதோடு நிறுத்தினான் இராமதேவன்.

விஜயாலயன் நெற்றியைச் சுருக்கிக் கொண்டார். 'கிடாரவன்' என்று ஒரு முறை சொல்லிக் கொண்டார்! அவருக்குத் திருப்தி ஏற்படவில்லை என்பது முகக் குறிப்பிலிருந்து தெரிந்தது.

விஜயாலயன் எதும் கூறாமல் கோயிலுக்குள் நுழைந்து விட்டார். அவ்வாறு செய்கிறார் என்றால், அவருடைய உள்ளத்தில் அடக்கமுடியாத சீற்றம் பொங்கிக் கொண்டிருக்கிறது என்று பொருள்.



கோயில் பூசாரி கருவறைத் திரையை விலக்கினான். கருவறையில் துர்க்கை கம்பீரமாகக் காட்சியளித்தாள். அங்கே ஒளி கொடுத்துக் கொண்டிருந்த சுடர்விளக்கின் வெளிச்சத்தில், நிசும்ப சூதனியின் விழிகளில் வழக்கத்திற்கு மாறாக சீற்றம் நிறைந்திருப்பது போல் தோன்றியது.

நெய்விளக்கை ஏற்றி பாதாதிகேசம் ஒருமுறை பூசாரி நன்றாகத் தெரியுமாறு காட்டினார். அரளிப் பூ மாலையும், சிவந்த ஆடையும், பாதங்களில் குவிந்திருக்கும் குங்குமமும் அந்த வெளிச்சத்தில் தேவியின் சாந்த ரூபத்தை மாற்றின.

எப்போதும் புன்முறுவலை மட்டுமே கண்டு வரும் விஜயாலயன் தேவியின் மாறுதலான போக்கைக் கண்டார்.

''தேவி!'' என்று உரத்த குரல் கொடுத்தார். இதயதாபத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று அவருக்குத் தோன்றியது. மனம் விட்டுத் தேவியிடம் முறையிட வேண்டும் என்ற வேகம் எழுந்தது.

''உன் திருவிளையாடல் என்று எண்ணி நான் மௌனமாக இருக்க முடியவில்லையே அம்மா! என் ஒரே மகன் சோழக் குலக்கொழுந்து மாற்றான் நாட்டில் உலவுகிறான். அவனுக்கு நீ துணிவைத் தந்திருக்கிறாயா? அல்லது அவனுக்குத் துன்பம் தர, நீ அவன் மனத்தில் அத்தகைய புத்தியை ஏற்படுத்தி அலையச் சொல்லியிருக்கிறாயா?''

''தேவி ஆதித்தன் மனத்தில் அப்படியொரு புத்தியை ஏன் கொடுத்தாய்? பல்லவ நாட்டின் படைபலம் அறிய வேண்டுமானால் ஒற்றர்களிடமிருந்து அறிய முடியாதா? இவன் ஏன் அலைகிறான்?'' விஜயாலயன் குரல் தழுதழுத்தது.

''தேவி! நான்தான் அவனுக்கு அனுமதி தந்தேன். காஞ்சி நகரத்தையும், கடல் மல்லைத் துறையையும் கண்டு திரும்பி வருவதாகக் கூறினான். அனுமதித்தேன். ஆனால் இரண்டு பூர்ணிமைகள் கழிந்து விட்டனவே! தேவி! அவன் எங்கிருக்கிறான்? அவனை அடையாளம் அறிந்து அவன் உயிருக்கு ஊறு செய்ய யாராவது துணிந்துவிட்டால்? தேவி! துளிர்விட்டு வரும் சோழர்க் குலம் கருகிப் போவது நின் திருவுளமா? தேவி! என் மகனை விரைவில் என்னிடம் சேர்ப்பித்துவிடு. என்னிடம் படை பலம் இருந்தென்ன? திறமை வாய்ந்த ஒற்றர்கள் இருந்தென்ன? உன் அருளில்லாவிடில், உன் திருவுளமில்லா விடில் வெற்றி ஏது தேவி? தேவி! எனக்காக இல்லாவிடினும், இளவரசன் ஆதித்தனின் இளம் மனைவி இளங்கோ பிச்சிக்காகவாவது, ஆதித்தனைத் தஞ்சைக்கு உடனே

வருமாறு செய் தாயே! அவள் துயரமடைந்து வேதனைப் படுவது என்னால் தாங்க முடியவில்லை. தேவி... சொல் தேவி... கட்டளையிடு தேவி!'' என்று விஜயாலயன் மெல்லப் பிரார்த்திக்கத் தொடங்கினார். குரல் உயர்ந்து - உயர்ந்து உச்ச நிலையை அடைந்தது. ஆவேசம் வந்தவர் போல் விஜயாலயன் அலறினார். குரல் மிக மிக உயர்ந்து உயர்ந்து... நெடுஞ்சாண் கிடையாக நிசும்பசூதனியின் திருவடிகளிலே வீழ்ந்தார்.

தஞ்சை நகரம் முழுவதும் பரபரப்பு. மன்னர் விஜயாலயன் கோயிலில் மயக்கமடைந்து வீழ்ந்துவிட்டார் என்ற செய்தி எங்கும் பரவியது. மன்னரைக் காணத் துடித்த பெருமக்கள் ஒருவரையும் மாளிகைக்குள் வேளக்காரப் படையினர் அனுமதிக்கவில்லை.

அந்தப்புரத்துத் தனி அறையில் விஜயாலயன் மஞ்சத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார். அவரருகே ஒருவருமில்லை. மயிற்பீலி விசிறிக் கொண்டு மெல்ல விசிறிய வண்ணம் நிற்கிறாள் இளங்கோ பிச்சி.

விஜயாலயன் முகத்தில் மெல்லிய முறுவல். ஏதோ அவர் சொல்ல நினைக்கிறார் என்பதறிந்த இளங்கோ பிச்சி அவர் செவிக்கருகே குனிகிறாள்.

''மிகவும் பயந்துவிட்டாயா, மகளே!'' என்று மன்னர் விஜயாலயன் கேட்கிறார்.

விஜயாலயனின் நேருக்கு நேர் நின்று இளங்கோ பிச்சி பேசியது ஓரிரு முறைகள்தாம் இருக்கும். அப்போது உடன் ஆதித்தன் இருப்பார் அல்லது பணிப்பெண் இருப்பர்.

ஒருவருமில்லாத அந்த விசாலமான அறையில் அவள் தனியே இருந்து மன்னருடன் பேசும்போது ஒருவித மரியாதை, அச்சம், நாணம் கலந்த உணர்ச்சி அவளிடம் மேலிட்டது. ஆஜானுபாகுவான அவரைச் சிலர் சுமந்து வந்து மஞ்சத்தில் கிடத்தினர். மயங்கிய நிலையிலிருந்த அவரைக் காணும்போது இளங்கோ பிச்சி நடுநடுங்கிவிட்டாள்.

இரவில் கண்ட சொப்பனத்தால் கலக்கமடைந்திருந்த அவளுக்குச் சோழ மன்னர் மயக்கமடைந்து வீழ்ந்துவிட்ட செய்தி மிக அதிர்ச்சியை அளித்தது.

''மிகவும் பயந்து விட்டாயா மகளே!'' என்று மன்னர் விஜயாலயன் கேட்ட குரலில் பரிவு இருந்தது. பரிவும், பாசமும் கலந்த அவரது கேள்வி, இதுவரை அடக்க முடியாது வைத்திருந்த துக்கத்தை அவளிடமிருந்து வெடித்துப் பொங்கச் செய்தது.



விம்மல் ஒலி வெளியே கேட்காமல், கண்ணீர்த் தாரைகள் மட்டும் முகத்தில் வழிய, தலையை அசைத்தாள்.

''உங்களுக்கு ஒன்றும் நேர்ந்துவிடவில்லையே, மாமா'' என்று ஒவ்வொரு சொற்களாகக் கூட்டிக் கூட்டிக் கேட்டாள்.

தன் மகளைப் போன்ற இளங்கோ பிச்சியின் வலக்கரத்தை விஜயாலயன் மெல்லப் பிடித்து, ''மிகவும் பயந்துவிட்டாயா?'' என்று கேட்டார்.

துக்கம் மடை திறந்தது. தலையை மட்டும் அசைத்த இளங்கோ பிச்சி, பயந்தேன் என்கிறாளா? பயப்படவில்லை என்கிறாளா? வல்லவரையர் மகள் பயப்படலாமா? மன்னர் அதிகாலையில் மயக்கமடைந்து வீழ்ந்துவிட்ட சம்பவம் கேட்டுப் பயப்படாமலிருக்க முடியுமா?

விஜயாலயன் மெல்லப் புன்முறுவலிப்பது தெரிந்தது.

''இளங்கோ பிச்சி... இளங்கோபிச்சி என்று நான் கூப்பிட்ட படியே, தேவியின் மலரடியில் விழுந்து விட்டேனாம், கேள்விப்பட்டாயா?'' என்று விஜயாலயன் கேட்டார்.

இளங்கோ பிச்சியின் முகத்தில் கண்ணீரிடையே நாண மலர் பூத்தது.

''இளங்கோ பிச்சி! உன் மன வருத்தம் என் இதயத்தில் ஈட்டி போல் குத்தியது. போர்க்களத்தில் பலமுறை பெற்ற விழுப்புண்களைவிட அது அதிகமாக வலித்தது. ஆதித்தனைத் தஞ்சையை விட்டுச் செல்லுமாறு ஏன் அனுமதித்தேன் என்று நான் நொந்து கொண்டேன்'' என்று விஜயாலயன் மெல்லக் கூறினார்.

''இளங்கோ! கவலைப்படாதே. எனக்கு எதும் நேர்ந்து விடவில்லை. என் கவலையெல்லாம் ஆதித்தனுக்கு ஒன்றும் நேர்ந்துவிடக் கூடாது என்பதே. சரியான தகவல்கள் கிடைக்க வில்லை. தேவி நிசும்பசூதனி கைவிடமாட்டாள். தைரியமாக இரு'' என்று விஜயாலயன் கூறும்போது இளங்கோ பிச்சியால் தைரியமாக இருக்க முடியவில்லை.

அவள் முதல் நாள் இரவு கண்ட பயங்கரக் கனவுக்கு ஏற்றாற்போல் இருக்கிறதே, மன்னர் கூறும் செய்தி என்று அவள் அஞ்சினாள்.

அந்தக் கனவை இப்போது நினைக்கும்போது கூட இளங்கோ பிச்சியின் உடல் சிலிர்த்தது.

01 09 2012

# 16. ஆதித்தனின் காதலி

இளங்கோ பிச்சி கண்ட கனவு அவளுக்கு மட்டும் மன நடுக்கத்தை அளிக்கவில்லை. அவள் சொல்லக் கேட்டுக் கொண்டிருந்த விஜயாலய சோழ தேவரே ஒரு கணம் நடுங்கினார். அஞ்சாநெஞ்சினரான அவர், இளங்கோ பிச்சி சொல்லி வரும்போது கவலையடைந்தார்.

பல ஆண்டுகளுக்கு முன்பு வல்லம் கோட்டையினின்று புறப்பட்டு தஞ்சை நகரைச் சில வீரர்களுடன் வெற்றி கொண்டபோது, எதிர்பாராதவிதமாக எதிரிகளின் நடுவில் சிக்கிக் கொண்டார். அப்போதுகூட அவர் மனம் கலங்கவில்லை. சில ஆண்டுகளுக்குப் பிறகு பாண்டியர் படைகள் தஞ்சைக் கோட்டையை முற்றுகையிட்டன. முற்றுகை பல நாள்கள் நீடித்தது. பாண்டிய வீரர்களைக் கலங்க வைப்பதற்காக துணிந்து எதிரிகள் முகாமிற்குள் சில வீரர்களுடன் புகுந்தார். அவருடன் வந்த சோழ வீரர்களை மிக எளிதில் பாண்டிய வீரர்கள் வெட்டி வீழ்த்தினர். அப்போதுகூடக் கலங்காத விஜயாலயன் இப்போது இளங்கோ பிச்சி தான் கண்ட கனவை வர்ணித்து வந்தபோது ஒரு கணம் நடுங்கினார்.

பல தடவை வற்புறுத்திய பிறகே இளங்கோ பிச்சி தான் கண்ட கனவைச் சொல்லத் தொடங்கினாள். அவ்வாறு அவளை வற்புறுத்தாது இருந்திருக்கலாமோ என்றுகூட அவருக்குத் தோன்றியது.

இளங்கோ பிச்சியின் அழகிலும், இளமையிலும் மயங்கியவன் ஆதித்தன். பாண்டியர்களை வென்ற பிறகு, விஜயாலயன் தன் மகனுக்கு இளங்கோ பிச்சியை மணம் புரிவித்தார். இளஞ்சிட்டுகள் போல் தன் மகனும், மருமகளும் இன்பந் துய்ப்பதைக் கண்டு பெரிதும் மனமகிழ்ந்தார்.

அவர்கள் நாகப்பட்டினம் சென்றார்கள். சீர்காழி சென்றார்கள். உறையூர் சென்றார்கள், காவிரியில் படகோட்டி மகிழ்ந்தார்கள். உறையூர் அருகே பாயும் அகண்ட காவிரியில் செல்லும் பொழுதுதான் ஆதித்தனுக்குப் பெரும் சாம்ராஜ்யத்தை அமைக்க வேண்டும் எனும் எண்ணம் ஏற்பட்டது. அகண்ட காவிரியின் பெரும் வெள்ளம் போல் குன்றாது, குறையாது சோழநாட்டின் பெருமை திக்கெட்டும் பரவ வேண்டும் என்று சோழ இளவரசன் கனவு கண்டான்.



ஆதித்தனுடைய தோளைத் தழுவிக் கொண்ட இளங்கோ பிச்சி, அவன் மார்பில் இருக்கும் வடுக்களை மெல்ல வருடிக்காட்டி, "இவை கவசம் அணிந்ததால் ஏற்பட்ட வடுக்கள்தாமே?" என்று கேட்டாள்.

"ஆமாம்" என்று அந்தப் பூங்கரத்தைத் தடவித் தனது கண்களில் எடுத்து வைத்துக் கொண்டான். "கவசம் எதற்காக அணிவது என்று நீ கேட்கவில்லையே" என்று, தன் விரல்களை அவளுடைய கைவிரல்களோடு பின்னியவாறு கேட்டான்.

"கேட்கமாட்டேன்...!" என்றாள் பிச்சி, அவன் மார்பின் மீது சாய்ந்து கொண்டு, அவனது இளம் மீசையையும், மீசையின் கீழே இருக்கும் உதடுகளையும் தடவியவாறு.

"ஏன்?"

"நானும் ஒரு வீருடைய, மகள்."

"அதனால்?"

"வீரர்கள் எதற்காகக் கவசம் அணிவார்கள் என்பதை நான் அறிவேன். போர்க்காலங்களில் துள்ளிவரும் வேல் மார்பிலே தைக்காதிருப்பதற்காக."

"நான் இப்போது அணியவில்லையே?"

"இப்போது எதற்காக? நாமென்ன போர்க்களத்திலா இருக்கிறோம்?"

"உனது விழி வேலின் தாக்குதலினின்று தற்காத்துக் கொள்ள."

"ஆதித்தன் இவ்வாறு கூறவும், பிச்சி நாணமுற்று பொய்க் கோபங்கொண்டு தன் மூடிய புறங்கையால் அவன் மார்பிலே சிறு குழந்தைபோல் தாளமிட்டு, "என் விழிகள் விரோதியின் வேல்களா?" என்று கேட்டாள்.

"ஆமாம், எதிரி உன்னைப் பயன்படுத்திக் கொள்கிறான்" என்று கூறவும், பிச்சை திடுக்கிட்டவளாய், "என்ன? விரோதியா! என்னையா?" என்றாள்.

"ஆமாம். மாறன் உன் விழிகளைக் கணைகளாகக் கொண்டு வீசி என்னை வேதனைப்படுத்துகிறான். விழிவேல் என் மார்பைப் பிளந்து உள்சென்று என்ன பாடுபடுத்துகிறது தெரியுமா? அடடா, கவசம் அணியாமல் போனோமே என்று அப்போதுதான் தோன்றியது" என்று ஆதித்தன் கூறவும், பிச்சி தன்னிரு கரங்களாலும் முகத்தினை மூடியவாறு தலையைக் குனிந்து கொண்டாள்.



01 09 20

அவள் அழுகிறாளோ என்றெண்ணி, அவனிருக்க, பிச்சி கலகலவென நகைத்து, ''நீங்கள் ஒரு கவிஞராகப் பிறந்திருக்க வேண்டும்'' என்றாள்.

''கவிஞராகத்தான் எனக்கு ஆசை. சோழ நாட்டைச் சுதந்திர நாடாக ஆக்கிவிட்டால், நான் கவிஞனாகி விடுவேன்.''

''நானும் விக்கியண்ணனும் மாளிகையில் புலவரிடம் தமிழ் இலக்கியங்களைப் படித்து வருகிறோம். விரைவில் நானே பாட்டெழுதுவேன். உன்னை வர்ணிப்பேன். அடக்கமற்று முன் நிற்கும் உன் பொல்லாத செங்கலசங்களை வர்ணிப்பேன். இருக்கிறதோ இல்லையோ என்று சந்தேகப்படும்படியாக விளங்கும் உன் இடையை வர்ணிப்பேன். நீ நடந்து செல்லும் போது, தாளத்திற்கேற்ப நீ மெல்லடி வைத்துச் செல்லும்போது உன் நடையழகை... பின் அசைவை வர்ணிப்பேன்'' என்று ஆதித்தன் வர்ணித்துக் கொண்டே போகும்போது இளங்கோ பிச்சியின் தாபம் எல்லையைக் கடந்தது. ஆதித்தனை அவ்விடத்திலேயே இறுகத் தழுவத் துடித்தது அவள் உள்ளம். நாணமும் அச்சமும் தடுத்தன. படகோட்டி இருக்கிறானே என்ற நாணம் வேறு. முகத்தை மெல்லத் திருப்பிக் கொண்டாள். ஓடும் காவிரிப் பிரவாகத்தின் சுழல் அவள் கண்களில் பட்டது. கைகளால் நீரை எடுத்து ஆதித்தன் மீது வீசினாள். கலகலவென்று நகைத்தாள். படகு சென்றுகொண்டே இருந்தது.

இளங்கோ பிச்சி அந்த இனிய சம்பவத்தையும் அதைப் போன்ற ஊடலும், கூடலும் சேர்ந்த நிகழ்ச்சிகளையும் நினைத்துக் கொண்டாள். ஒரு பொருள் அருகே இல்லாதபோது தான் அதன் அருமை மிகவும் தெரிகிறது. ஆதித்தன் தொண்டை நாட்டைச் சுற்றி வருவதாகப் புறப்பட்டபோது தெரியாத பிரிவுத் துன்பம் இப்போது மிகமிகத் தெரிந்தது.

படுக்கையில் படுத்தால் உறக்கம் வருவதில்லை. அவளுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான பணிப்பெண், மஞ்சத்தின் கீழே தரையில் பாயை விரித்துப் படுத்துக் கொண்டிருக்கிறாள். அவள் அயர்ந்து உறங்குவதைக் காணப் பிச்சிக்குப் பொறாமையாக இருக்கும். அவள் திருமண மாகாதவள். திருமணமாகிக் கணவனைப் பிரிந்திருப்பதால் ஏற்படும் பிரிவாற்றாமைத் துயர் அவளை வாட்டவில்லை.

உறக்கம் விழிகளைத் தன் வயப்படுத்திக் கொள்ளும் வரை இனிய நினைவுகளில் திளைத்திருப்பாள். உறக்கம் வந்து விட்டாலோ கனவு அவளை ஆட்கொண்டுவிடும். கனவிலும் அன்பு மிகுந்த ஆதித்தன் வந்து அவளருகே நிற்பான்.



'தொண்டை மண்டலத்தைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்ற ஆசை அவருக்கு ஏன் ஏற்பட்டது' என்று ஒரு கேள்வியைக் கேட்டுக் கொண்டபோது அதற்கு விடை கிடைக்கவில்லை.

ஒரு நாள் மன்னரையே கேட்டுவிட்டாள். விஜயாலயன் சிறிது நேரம் ஒன்றும் பேசாமலிருந்து விட்டுப் பிறகு மெல்ல நகைத்தவாறு சொன்னார்:

''இளங்கோ பிச்சி! உன் நாதன் என்னையும் விஞ்சப் பார்க்கிறான்.''

இளங்கோ பிச்சிக்குப் புரியவில்லை. மழைக் கண்களைக் கொண்டு ஏறிட்டு நோக்கினாள். விஜயாலயன் மேலும் சொன்னார்:

''நான் சோழநாட்டின் அரசன். உன் கணவன் இளவரசன். சோழநாடு, ஒரு காலத்தில் தொண்டை மண்டலம் வரை பரவியிருந்தது. முன்னோர்கள் இமயம் வரை சென்று, புலிக்கொடியை நாட்டிய பெருமையை உடையவர்கள். ஆதித்தனுக்குச் சிறு வயதிலிருந்தே கவலை ஒன்றுண்டு. தஞ்சைக் கோட்டையைச் சுற்றியுள்ள பகுதியை மட்டும் ஆண்டு வருவதில் என்ன பெருமை இருக்கிறது என்று அடிக்கடி சொல்வான். பல்லவர்களுக்கு ஆண்டுதோறும் கப்பஞ் செலுத்தி வரும் சிற்றரசராக இருப்பது அவனுக்குத் துளியும் சம்மத மில்லை. சோழநாட்டை விரிவுபடுத்த வேண்டும். வடக்கே வெகுதூரத்துக்கு வெகுதூரம் சோழ நாடு பரவியிருக்க வேண்டும் என்று எண்ணுவான். சோழச் சிற்றரசர் என்பதைவிட சோழ சக்கரவர்த்தி என்று கூறிக் கொள்ளும் காலத்தை வெகு விரைவில் எதிர்பார்த்துக் கனவு காண்பான். அந்த வகையில் என்னைவிட, சோழநாடு விரிவடைய வேண்டும், பெருமையடைய வேண்டும் என்ற மகத்தான ஆசை அவனுக்குப் பெரிதும் ஏற்பட்டுவிட்டது. பகலிலும் இரவிலும், எப்போதும் அதே கனவுதான். கனவை நனவாக்க முதலில் பெரிய சாம்ராஜ்யமாக விளங்கும் பல்லவ நாட்டைச் சுற்றிப்பார்க்க வேண்டும் என்று விரும்பினான். தான் காணும் கனவை நனவாக்கத் துடித்தான். அவனுக்கு உற்ற நண்பன் விக்கியண்ணன் கிடைத்தான். இருவரும் புறப்பட்டுவிட்டார்கள்'' என்றார்.

இளங்கோ பிச்சி மௌனமானாள். 'இந்த விக்கியண்ணன் ஏன் இவருக்கு நண்பரானார். இவரது துணையிருப்பதனால் அன்றோ நாடு விட்டு காடு சென்றிருக்கிறார் என் பிரிய நாயகர்' என்று எண்ணினாள்.

''எப்போது திரும்பி வருவார், மாமா?'' என்று பிச்சி கேட்டாள்.

''விரைவில் வந்து விடுவாரம்மா'' என்று சமாதானம் கூறினார் விஜயாலயன்.

''சோழ இளவரசர் என்று மற்றவர்கள் அறியாமல் சுற்றுப்பயணம் செய்கிறாரே, ஏன்? சோழ இளவரசர் என்ற பெருமையோடு செல்லக்கூடாதா?'' என்று பிச்சி கேட்டாள்.

'நல்ல கேள்விதான். நானும் முதலில் அப்படித்தான் நினைத்தேன். இளவரசனாக எல்லா இடங்களுக்கும் செல்ல முடியாது' என்று சமாதானப்படுத்திக் கொண்ட விஜயாலயன், ''அப்படி முடியாதம்மா. ஆதித்தனின் இலட்சியத்திற்கு அது சிறிதும் ஒத்துவராது'' என்று சமாதானப்படுத்தினார்.

''பல்லவ நாட்டிலும் ஒற்றர்கள் இருப்பார்கள் அல்லவா?'' என்று இளங்கோ பிச்சி கேட்டாள். தலையை அசைத்தார் விஜயாலயன், இருப்பார்கள் என்பதைக் காட்டும் வகையில்.

''பல்லவ அரசருக்கு உண்மை தெரிந்துவிட்டால்?''

''ஆதித்தனும், விக்கியண்ணனும் மிகவும் சாமர்த்திய சாலிகள்'' என்று மட்டுமே விஜயாலயன் சொன்னார்.

இளங்கோ பிச்சி சமாதானமடையவில்லை. அவளுக்கு ஏனோ ஒருவித அச்சம் மனத்திலேற்பட்டது. அதற்கேற்ற வகையில் அவள் கனவு கண்டாள். கனவென்றே அவளுக்கு அது தோன்றவில்லை. அவள் கண்ணெதிரே நடப்பது போலவே தோன்றுகிறது.

அவளுடைய அன்பு நிறைந்த நாதன் பல்லவ நாட்டைச் சுற்றி வருகையில் இரண்டு பெண்களைச் சந்திக்கிறான். இருவருடைய அழகிலும் மயங்குகிறான். ஒருத்திக்கு ஆதித்தன் மீது தணியாத காதல் ஏற்பட்டுவிடுகிறது. மற்றொருத்திக்கு அந்தவித எண்ணம் ஏதுமில்லை. ஆதித்தனை விரும்பியவளுக்குப் பொறாமை ஏற்படுகிறது. அவள் ஆதித்தனை பல்லவ சக்கரவர்த்தியிடம் காட்டிக் கொடுத்துவிடுகிறாள். பல்லவ மன்னன், ஆதித்தனைச் சிறையிலிடுகிறான். நண்பனின் முயற்சியால் ஆதித்தன் சிறையிலிருந்து தப்பி விடுகிறான். பல்லவ வீரர்கள் ஆதித்தனைத் தேடி அலைகிறார்கள். கடைசியில் ஆதித்தன் தான் காதலித்தவளின் வீட்டில் தஞ்சம் அடைகிறான். பல்லவ வீரர்கள் வீட்டைச் சூழ்ந்து கொள்கிறார்கள்.

இளங்கோ பிச்சி பயத்துடன் அலறியவாறு விழித்தெழுகிறாள். அதற்குப் பிறகு உறக்கம் வரவில்லை.



விஜயாலயன், இளங்கோ பிச்சி கூறியது கேட்டு நடுங்கினார். போர்க்களத்திலே விழுப்புண்கள் பெற்றுப் பகைவர்கள் தலைகளைப் பந்தாடிய வீரன் நடுங்கலாமா?

ஒரே மகன் ஆதித்தன் உயிருக்கு ஆபத்து என்பதால் நடுங்கினாரா?

விஜயாலயன் தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொள்ள முயன்றார். இளங்கோ பிச்சியையும் சமாதானப்படுத்த முயன்றார்.

''உன் நாதனுக்கு ஒன்றும் நேராது'' என்று கூறித் தேற்ற முயன்றார்.

''அவருடைய உயிருக்கு ஆபத்து நேரிடுவதற்கு முன்பு அவருடைய் உள்ளத்துக்கு ஆபத்து நேர்ந்து விட்டதே'' என்று விம்மினாள் இளங்கோ பிச்சி.

''என்ன சொல்கிறாய் மகளே?'' என்று சோகந் ததும்பும் குரலில் கேட்டார் விஜயாலயன்.

''என் மீது தணியாத ஆசை கொண்டிருந்த அவர் பல்லவ நாட்டில் ஒரு மங்கை மீது ஆசை கொண்டார் என்றால் அவருடைய உள்ளத்துக்கு ஆபத்துதானே? அதிலும் ஒரு பெண் இவரைக் காதலிக்கிறாள். இவர் மற்றொரு பெண்ணைக் காதலிக்கிறார். இருவராலும் ஆபத்துநேரும் என்று தெரிந்தும் பல்லவ நாட்டில் ஏன் சுற்றுப்பயணம் செய்கிறார்?'' - இளங்கோ பிச்சியின் குரலில் ஆத்திரம் இருந்தது.

விஜயாலயன் அவளைச் சமாதானப்படுத்த முயன்றார். ''பிச்சி! நீ கண்டது அனைத்தும் கனவு. ஆதித்தன் உன் மீது மிகுந்த அன்பு கொண்டிருக்கிறான் என்பதை நான் அறிவேன்'' என்றார்.

''இல்லை, இல்லை. பல்லவ நாட்டுப் பெண் அவரை மயக்கிவிட்டால்? நான் அவரிடம் செல்ல வேண்டும். உடனே அவரைக் காண வேண்டும்'' என்று கூவினாள்.

''பிச்சி! வெறும் கனவுக்குப் பயப்படலாமா? நீ வீரன் மகளல்லவா?'' என்றார்.

''ஆமாம், நான் வீரனின் மகள். என் தந்தைக்குச் சொல்லியனுப்பப் போகிறேன், அவரைத் தேடி உடனே அழைத்து வருமாறு'' என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினாள்.

விஜயாலயன் மீசை, கோபத்தால் துடித்தது.

# 17. இளவரசிக்குக் காவல்

மயிலழகு ஆடிய நடனத்தில் அபராஜிதவர்மனின் கவனம் செல்லவில்லை. அவருடைய சிந்தனை, முருகபிரானுக்குக் கனகாபிஷேகம் செய்ய வேண்டும் என்பதிலேயே இருந்தது.

புழல் கோட்டத்தாரைத் தன் அருகே அழைத்து வைத்துக் கொண்டு பேசினார். மெல்லிய குரலில் பேசினார்.

''இன்றைய ஆலோசனைக் கூட்டத்தில் முக்கியமாக நாம் கனகாபிஷேகத்தைப் பற்றித்தான் பேச வேண்டும்'' என்றார் அபராஜிதன்.

புழல் கோட்டத்தார் கேட்டார். ''நாம் அவ்வளவு சொர்ணத்திற்கு எங்கே செல்வது? நமது கருவூலத்தில் உள்ள பொன்னாபரணங்களை எல்லாம் உருக்கினால்கூட அவ்வளவு தங்கம் சேராதே'' என்றார்.

அபராஜிதன் அவருக்கு மட்டும் கேட்கும்படியான மெல்லிய குரலில், ''மலைமீது உள்ள சுரங்க அறையில் தங்கப் பாளங்கள் சேர்த்து வைத்திருப்பதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?'' என்று கேட்டார்.

''தங்கப் பாளங்களா? எனக்குத் தெரியாது அரசே!'' என்றார் புழல் கோட்டத்தார்.

''யாருக்கும் தெரிந்திருக்க நியாயமில்லை. அப்படி மற்றவர்களுக்குத் தெரிந்திருந்தால் அந்தச் செய்தி வெளி நாட்டவர்களுக்குச் சென்று எட்டிவிடும். அவ்வளவு ரகசியமாக நான் பாதுகாத்து வந்திருக்கிறேன்'' என்றார் அபராஜிதன்.

''பொற்கொல்லர்கள் பணியைத் தொடங்க நாள் பார்த்துச் சொல்லுமாறு கேட்கிறார்கள்'' என்றார் புழல் கோட்டத்தார்.

''அதற்கு முன்பு கனகாபிஷேகத்திற்கு ஆகும் தங்கத்தின் அளவை நாம் நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். ஆலோசனைக் கூட்டத்தில் அதைப்பற்றி முடிவெடுத்தாக வேண்டும்'' என்றார் அபராஜிதவர்மர். அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். இடையிடையே அபராஜிதன் பார்வை நடனமாடுபவர்களின் மேல் விழும். இரவு நடுநிசியைத் தாண்டிக் கொண்டிருந்தது.



மேளத்தின் சப்தம் கேட்டது. தாளத்தின் ஒலி எழுந்தது. இடையிடையே நட்டுவனார் பாடினார். நாட்டியத்தை ரசிப்பவர்கள் 'ஆகா' என்று தலையை அசைத்தார்கள். அபராஜிதனும் ஒருமுறை திரும்பிப் பார்த்தார். ''நடனமாடும் இந்தப் பெண் எந்த ஊரைச் சேர்ந்தவள்?'' என்று கேட்டார்.

புழல் கோட்டத்தாருக்கு அவளைப் பற்றி எதுவும் தெரியவில்லை.

நடனம் முடிந்தது. மயிலழகு, சக்கரவர்த்திகளை வணங்கினாள். ''பெண்ணே, உனக்கு எந்த ஊர்?'' என்று அபராஜிதன் கேட்டார்.

மயிலழகு நாணமுற்றவளாய்க் குனிந்த தலையுடன் நின்றாள். உடனே அருகிலிருந்த தாளம் தட்டுபவர், ''திருக்காளத்தியிலிருந்து வருகிறாள்'' என்றார்.

மயிலழகு அரசரை நோக்கி, ''சக்கரவர்த்திகளே! என்னைத் தாங்கள் மறந்து விட்டீர்களா? நான் சிற்பியின் இளைய மகள் என்பது தங்களுக்குத் தெரியாதா?'' என்று மெல்லிய குரலில் சொன்னாள்.

அபராஜிதவர்மன் அவளை ஏற இறங்கப் பார்த்து, ''சிற்பியின் மகளா நீ? எனக்கு மீன்விழியை மட்டும்தான் தெரியும். சிற்பிக்கு இவ்வளவு அழகான பெண்ணொருத்தி இருக்கிறாள் என்பதே தெரியாது, அவருடைய சிற்பங்களில் உன்னுடைய அழகு பிரதிபலிக்கிறது'' என்றாள்.

மயிலழகு நாணமடைந்தவளாய், ''என் சகோதரி என்னைவிட அழகாய் இருப்பாள். தந்தையின் அருகேயே அவள் இருப்பதனால், அவளுடைய அழகுதான் சிற்பங்களில் பிரதிபலிக்கிறது'' என்றாள்.

அவளுடைய அடக்கத்தை, அழகைக் கண்டு வியந்த அபராஜிதன் அந்தக் கணமே ஒரு முடிவுக்கு வந்தார்.

''காஞ்சி ஏகாம்பரேச்வரர் கோயிலில் சந்தியா நிருத்தியம் ஆடுவதற்கு நடன மங்கை தேவை. நீ காஞ்சிபுரம் செல்கிறாயா பெண்ணே?'' என்று கேட்டார் பல்லவ மன்னர். ரகசியமாக சோழநாடு செல்வதாக, சோழ நாட்டைச் சேர்ந்தவர்களிடம் மயிலழகு வாக்களித்திருக்கிறாள். அவர்களைத் திருத்தணிகையில் சந்திப்பதாக இருக்கிறாள். அப்படி இருக்கும்போது காஞ்சிபுரம் செல்லுமாறு சக்கரவர்த்தி பணிக்கிறாரே என்ன செய்வது என்று அவளுக்குப் புரியவில்லை. மௌனமாக அவள் நிற்பதைக் கண்ட அபராஜிதன்

01 09 20

தினம் அதைப் பற்றி முடிவு செய்து கொள்வோம். நீ சென்று ஓய்வெடுத்துக் கொள்'' என்று கூறி அவளுக்குரிய பரிசுகளை ஒரு தட்டில் வைத்து அளித்தார். வணக்கம் தெரிவித்துவிட்டு மயிலழகு அங்கிருந்து சென்றாள்.

ஆலோசனைக் கூட்டத்திற்குச் சம்பந்தப்பட்ட கோட்டத் தலைவர்களும் அதிகாரிகளும் தவிர, மற்றவர்கள்அங்கிருந்து வெளியேறிவிட்டனர்.

அபராஜிதவர்மன் ஒவ்வொரு கோட்டத் தலைவரையும் பார்த்து அவர்களுடைய நலன் விசாரித்துவிட்டு, திருத்தணிகை முருகப்பிரானுக்குக் கனகாபிஷேகம் செய்ய முடிவு செய்திருப்பதையும், அதற்கு ஏராளமான தங்கம் வேண்டுமென்றும் தெரிவித்துவிட்டு, அதற்குக் கோட்டத் தலைவர்கள் மிகவும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

கோட்டத் தலைவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் கருத்தையும் யோசனையையும் தெரிவித்தார்கள். ஒருவர் புதிய வரி வசூலிக்கலாம் என்றார். மற்றொருவர் மக்களிடம் அதிகப்படியாக உள்ள ஆபரணங்களைப் பெற்றுத் தரலாம் என்று கூறினார். செங்குன்றக் கோட்டத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் வேறுவிதமான யோசனையைக் கூறினர். ''மக்கள் மீது புதிய வரி போடுவதோ, ஆபரணங்களைத் திரட்டுவதோ சரியான யோசனை என்று எனக்குத் தோன்றவில்லை. கங்க நாட்டிற்கு நாம் செய்தி அனுப்புவோம். நீண்ட நாட்களாக முறைப்படி அவர்களிடமிருந்து நமக்குத் திறைப்பணம் வருவதில்லை. நாம் இப்போது அதை வற்புறுத்திக் கேட்போம். அவர்கள் நாட்டிலுள்ள தங்கச் சுரங்கங்களிலிருந்து தங்கப் பாளங்களை வெட்டியெடுத்து நமக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்வோம்'' என்றார்.

அந்த யோசனை சரி என்று அனைவருக்கும் தோன்றியது. சிறிது நேரம் அதைப் பற்றிய விவாதங்கள் நடைபெற்றன. இப்போது பல்லவ நாட்டுச் சேனாதிபதி ஒரு யோசனையைத் தெரிவித்தார். ''கங்க நாட்டினின்று நாம் தங்கத்தைக் கோரிப் பெறுவது நன்றாக நடக்கட்டும். ஆனால் அதற்கு முன்பாக நமக்குத் தஞ்சையினின்று ஏராளமான திறைப்பணம் வரவேண்டியிருக்கிறது. அதை நாம் இப்போது பொன் ஆபரணங்களாகக் கேட்போம்'' என்றார்.

படைத்தலைவரின் யோசனையை அனைவரும் விரும்பி வரவேற்றனர். ஒரு கோட்டத் தலைவர் கேட்டார். ''தஞ்சையினின்று ஏன் ஆண்டுதோறும் கப்பப் பணத்தை வசூலிப்பதில்லை?'' என்று.



மற்றொருவர் குறுக்கிட்டுச் சொன்னார்... ''நமது சக்கரவர்த்திகளுக்குத் தஞ்சை இளவரசர் மிக உற்ற நண்பர். பல்லவ நாட்டின் ஒரு பகுதியைத் தஞ்சைச் சிற்றரசருக்குத் தந்தது போல திறைப்பணமும் கட்ட வேண்டாம் என்று உத்தரவிட்டு இருப்பார் போல் தோன்றுகிறது'' என்றார்.

''நட்பு வேறு, அரசியல் வேறு என்று நமது சக்கரவர்த்திக்குத் தெரியாதா?'' என்றார் மற்றொருவர். இவற்றை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த பல்லவ சக்கரவர்த்தி அபராஜிதவர்மனே பேசத் தொடங்கினார். ''கோட்டத் தலைவர்களே! அருமை அரசியல் அதிகாரிகளே! சோழ நாட்டு அரசர், பாண்டியர் படையெடுப்பின் போது நமக்குச் செய்த பேருதவிக்காகப் பல பகுதிகளை அவருக்கு அரசாள உரிமையாக அளித்தோம். ஆனால், ஆண்டுதோறும் திறை தராமல் இருக்க வேண்டும் என்று நாம் என்றும் சொன்னதில்லை. அதிகாரி கூறியது சரி. நாம் தக்கவர் ஒருவரைத் தஞ்சைக்குத் தூது அனுப்பித் திறைப் பணத்தை வாங்கி வரச் செய்வோம். ஆனால், அந்தப் பணத்தினால் மட்டும் நமது திட்டம் நிறைவேறாது. நாம் தூதுவரை அனுப்புவோம்'' என்றார்.

அங்குக் கூடியிருந்த கோட்டத் தலைவர்களுக்கு அரசரின் யோசனை சரி என்று தோன்றியது. இவற்றையெல்லாம் தவிர அபராஜிதன் ஒரு முக்கியமான செய்தியை வெளியிட்டார். ''கொங்கு நாட்டில் ஏராளமான தங்கம் அந்த நாட்டுச் சிற்றரசரின் கருவூலத்தில் இருக்கிறதென்றும் நமக்கு அடங்கிய சிற்றரசர் அவர் என்பதனையும் நான் உங்களுக்குச் சொல்லித் தெரிவதில்லை. கொங்கு நாட்டரசருக்கு நாம் ஒரு செய்தி அனுப்புவோம். குறிப்பிட்ட நாள்களுக்குள் தங்கப் பாளங்கள் ஏராளமாக அனுப்ப வேண்டுமென்று கட்டளையிடுவோம். கொங்கு நாட்டினின்று தங்கம் நமக்குக் கிடைத்துவிட்டால் நமது கனகாபிஷேகப் பணி முடிவடைந்துவிட்டது என்று மகிழ்ச்சியடையலாம்'' என்றார்.

கொங்கு நாட்டிற்கும் தஞ்சைக்கும் தூதுவர்களை அனுப்புவது என்று முடிவு செய்யப்பட்டது. மற்றும் பல கோட்டத் தலைவர்கள் பல்லவ நாட்டில் செய்யப்பட வேண்டிய முன்னேற்றப் பணிகளைக் குறித்துத் தங்கள் கருத்துகளைத் தெரிவித்தார்கள். கூட்டம் நடுநிசியைத் தாண்டியதால் சக்கரவர்த்திகள் ஓய்வெடுக்க எழுந்தார். கூட்டமும் முடிவுற்றது.

அவர் புறப்படும்போது சில வீரர்கள் ஓடோடி வந்து சக்கரவர்த்திகள் எதிரே வணங்கி நின்றனர்.

அபராஜிதவர்மர் வியப்புடன் அவர்களைப் பார்த்த பிறகு, படைத் தலைவரை நோக்கினார்.

படைத்தலைவர் அவர்களை நோக்கி, அவர்கள் அவ்வாறு அந்நேரத்தில் விரைந்து ஓடி வருவதன் காரணத்தை வினவினார்.

''ஐயா, தலைவர் மூலபத்திரன் நடுச்சாலையில் பலமாக அடிபட்டுக் கிடக்கிறார். அவரைத் தூக்கி வருகிறார்கள்'' என்றார், வீரர்களில் ஒருவர் பதறியபடி.

அபராஜிதன் திடுக்கிட்டார். தன் தாய் மாமன் மூலபத்திரன் இளவரசி வைரக்கண்ணியை, அவள் விருப்பத்திற்கு மாறாகத் தூக்கி வந்துவிடத் திட்டமிட்டிருப்பதை அறிவார். மூலபத்திரன் திட்டத்தை அவர் எதிர்க்கவுமில்லை. ஆதரிக்கவுமில்லை. ஆனால் பல்லவ வீரர்கள் சிலருடன் மூலபத்திரன் மலைச்சாரல் மாளிகைக்குச் சென்றிருப்பதையும் அவர் அறிவார்.

''மூலபத்திரனை யார் தாக்கியிருப்பார்கள்?'' என்று அபராஜிதன் கேட்டார். இளவரசி வைரக்கண்ணிக்கு ஏதாவது நேர்ந்ததா என்று அவர் கேட்கவில்லை. ஆனால், அறிந்து கொள்ள விரும்பினார்.

வீரர்கள் தொடர்ந்து சொன்னார்கள். ''சிவிகையில் சென்று கொண்டிருந்த இளவரசியை மூலபத்திரன், தனது ஆட்களுடன் சூழ்ந்த கொண்டபோது, தன்னந்தனியே குதிரையில் வந்தவன் ஒருவன் அவர்களைத் தாக்கி விரட்டியிருக்கிறான். அந்தச் சமயத்தில் மூலபத்திரன் படுகாயமடைந்து விட்டார்'' என்றார்கள்.

''இளவரசிக்கு ஏதாவது நேர்ந்ததா? நமது நாட்டில் வழிப்பறி நடக்கிறதா?'' என்று படைத் தலைவர் கேட்டார்.

''இல்லை... இல்லை... அந்த வீரனைப் பார்த்தால் வழிப் பறிக்கு வந்தவனைப் போலத் தோன்றவில்லை. இளவரசியும் காஞ்சி செல்லும் பாதையில் சென்றுவிட்டார்களாம்'' என்றான்.

''காஞ்சி செல்லும் பாதையிலா அல்லது கடிகாசலம் செல்லும் பாதையிலா?'' என்று கேட்டார் படைத்தலைவர்.

''காஞ்சி செல்லும் பாதையில்தான்'' என்றான் மற்றொரு வீரன்.

''அப்படியென்றால் உடனே காஞ்சிக்குச் சென்று இளவரசி தங்கியிருக்கும் மாளிகையைச் சுற்றிக் காவல் போடுங்கள். ஒருவரையும் உள்ளே செல்லவும், வெளியே வரவும் அனுமதிக் காதீர்கள்'' என்றார் படைத்தலைவர்.

அபராஜிதன் அதை ஆமோதிப்பது போல் தலையை அசைத்தார். சத்திரத்துத் திண்ணையில் ஒரு மூலையில் அமர்ந்திருந்த விக்கியண்ணன் அதைக் கேட்டுக் கொண்டிருந்தான்.



## 18. அடையாளச் சின்னம்

சத்திரத்திற்குள் நடனம் பார்த்துக் கொண்டிருக்கும்போது பல்லவ சக்கரவர்த்தி அபராஜிதவர்மர் வருவதையும், அதே சமயத்தில் வீதியின் கோடியில் ஆதித்தன் வந்து கொண்டிருப்பதையும் கண்ட விக்கியண்ணன், இருவரும் நேருக்கு நேர் சந்தித்துவிடப் போகிறார்களே என்று முதலில் பயந்தான். அபராஜிதன் சத்திரத்திற்குள் நுழைந்த பிறகு, பரிவாரங்களும் அங்கிருந்து அகன்ற பிறகு விக்கியண்ணன் வீதியின் முனைக்குச் சென்றான்.

ஆதித்தன், தெரு முனையிலிருந்த ஒரு வீட்டின் திண்ணையில் அமர்ந்து கொண்டான். அந்த வீட்டில் யாருமில்லை. இருளடைந்திருந்த அந்த வீட்டுத் திண்ணையில் தூணில் சாய்ந்துகொண்டு 'அப்பாடா' என்று உட்கார்ந்தான். மிகவும் களைத்துப் போயிருந்தான்.

விக்கியண்ணன், அவன் அருகே நெருங்கி, ''இளவரசே!'' என்று மெல்ல அழைத்தான். ஆதித்தன், திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

''இப்படி யாராவது இளவரசே என்று கூப்பிட்டவுடன் திரும்பிப் பார்ப்பீர்களா?'' என்று விக்கியண்ணன் கேட்டவுடன், ''விக்கியண்ணா! அவ்வளவு எளிதில் யாரும் என்னை அடையாளம் கண்டுகொள்ளும்படியாக நடந்து கொள்ள மாட்டேன். உன்னுடைய குரல் எனக்குத் தெரியாதா? உன்னுடைய குரல் எப்போது கேட்கும், உன்னை எப்போது மீண்டும் எங்கே பார்ப்போம் என்ற எண்ணத்துடனேயே நான் வந்து கொண்டிருந்தேன். மலையடிவாரத்துச் சத்திரத்தில் எப்படியாவது சந்தித்துக் கொள்ளலாம் என்றிருந்தோம் அல்லவா? அந்தச் சத்திரத்தை நோக்கி வந்து கொண்டிருந்தேன். சத்திரம் இந்த வீதியில்தான் இருக்கிறது என்றார்கள். சத்திரத்தில் ஒரு நடன நிகழ்ச்சி நடக்கப் போவதாகவும், பல்லவ மன்னர் அந்த நிகழ்ச்சிக்கு வரப்போவதாகவும் பலர் பேசிக்


01 09 20

கொண்டார்கள். அதனால்தான் நான் இந்தத் தெரு முனையிலேயே சற்று இளைப்பாறுவோம் என்று திண்ணையில் அமர்ந்தேன். சிறிது நேரத்திற்கெல்லாம் நீயும் வந்தாய். சத்திரத்தில் என்ன நடக்கிறது விக்கியண்ணா?'' என்று ஆதித்தன் கேட்டான்.

ஆதித்தனின் முகத்தை விக்கியண்ணன் மெல்ல நோக்கினான். களைத்துப் போய்க் காணப்பட்ட இளவரசரின் களைப்பிற்குக் காரணம் என்ன என்று முதலில் அறிய வேண்டுமென்றும், காலையிலிருந்து நடந்த சம்பவங்களை ஒவ்வொன்றாகக் கேட்க வேண்டும் என்றும் ஆவல் கொண்டான்.

ஆதித்தனோ, விக்கியண்ணன் எப்படி இந்தச் சத்திரத்திற்கு வந்து சேர்ந்தான் என்று அறிய வேண்டும் என்று உள்ளக் கிடக்கை கொண்டிருந்தான். இருந்தாலும் சத்திரத்தில் என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளும் ஆவல் ஆதித்தனுக்கு இருந்தது.

விக்கியண்ணன், சத்திரத்தில் பல்லவ மன்னன் வந்திருப் பதையும், நடன நிகழ்ச்சி நடைபெறுவதையும் தெரிவித்தான். ''நடனமா!'' என்று ஆதித்தன் கேட்டான்.

''ஆமாம்! திருக்காளத்தியில் நாம் சந்தித்தோமே அந்த நடன மங்கை இங்கே வந்திருக்கிறாள். அவளை நாம் நேரே தஞ்சைக்குச் செல்லச் சொன்னோம் அல்லவா? அவள் எப்படி இங்கே தங்கிவிட்டாள் என்பது தெரியவில்லை'' என்று விக்கியண்ணன் சொன்னான்.

''தஞ்சைக்கு நடனப் பெண் செல்லப்போகிறாளா என்று நாம் அறிய வேண்டும். அவளது சகோதரி, சிற்பியின் மகளை இன்று பகலில்தான் சந்தித்தேன்'' என்றான் ஆதித்தன்.

''நீங்கள் சிற்பியின் மகளைச் சந்தித்தீர்கள் - நான் இளவரசியைச் சந்தித்தேன்'' என்றான் விக்கியண்ணன்.

''இளவரசியா!'' என்று ஆதித்தன் வியப்புடன் கேட்டதும் விக்கியண்ணன் நடந்த சம்பவங்களை ஒன்றுவிடாமல் விவரித்தான்.

ஆதித்தனுக்குச் சிரிப்பு பொங்கியது. ''விக்கியண்ணா, நீ விட்ட இடத்தை நான் தொடர்ந்தேன் தெரியுமா?'' என்று ஏதோ புதிர் போடுவது போல் சொன்னான். விக்கியண்ணனுக்கு



ஒன்றும் புரிவதில்லை. ஆதித்தன், தான் வரும் வழியில் இளவரசியைக் காப்பாற்றியதையும், இளவரசியை எதிர்த்த வீரர்களை ஓட ஓட விரட்டியதையும், கதை போல் விவரித்துச் சொல்லவும் விக்கியண்ணனுக்கு வியப்பாய் இருந்தது.

* * *

அன்று மாலையில் இளவரசியின் விழிகளை நேருக்கு நேர் சந்தித்ததை ஆதித்தன் இப்போது நினைத்துக் கொண்டான். அதை விக்கியண்ணனிடம் தெரிவித்தான்.

இளவரசி தன்னைக் காப்பாற்றிய ஆதித்தனுக்கு நன்றி தெரிவித்தாள். நன்றி தெரிவித்துவிட்டு, ''உங்களை நான் யாரென்று அறியலாமா?'' என்றும் கேட்டாள். ஆதித்தன் சற்று நேரம் பேசாமல் இருந்து, பின் குதிரையைத் தட்டிக் கொடுத்து, குதிரையின்மீது ஏறி அமர்ந்து கொண்டான். இளவரசிக்குச் சற்றுக் கோபமாக இருந்தது... நாம் இவ்வளவு கேட்கிறோம், பதில் சொல்லாமல் குதிரையின் மீது அமர்ந்து விட்டானே என்று அவளுக்கு ஆத்திரம் வந்தது.

ஆதித்தன் சிவிகை சுமப்போரை நோக்கி, ''உடனே இங்கிருந்து விரைவாகச் செல்லுங்கள். இங்கேயே தங்கி யிருப்பதனால் உங்களுக்கு மேலும் ஆபத்து வரலாம் என்று அவர்களைத் துரிதப்படுத்தினான்.

இளவரசி அவனை நோக்கிக் கேட்டாள். ''நீங்கள் சென்ற பிறகும் ஆபத்து வராது என்பது என்ன நிச்சயம்?''

ஆதித்தன் சொன்னான். ''சிவிகையுடன் சிறிது தொலைவு தொடர்ந்து வருவேன். யாராவது மீண்டும் வழிப்பறி செய்ய வந்தால், விரட்டி அடிக்கக்கூடிய சக்தி என்னிடம் இருக்கிறது'' என்று.

''அவர்கள் வழிப்பறி செய்பவர்களல்லர்'' என்றாள் இளவரசி.

''பல்லவ நாட்டில் யார் வழிப்பறி செய்வார்கள், யார் செய்யமாட்டார்கள் என்று பிரித்துச் சொல்லத் தெரியவில்லை. ஓர் இளமங்கை வீதியிலே சிவிகையில் செல்லுகையில், அவளைச் சூழ்ந்து தாக்குபவர்களை ஏன் வழிப்பறி செய்பவர்கள் என்று சொல்லக்கூடாது?'' என்று கேட்டான் ஆதித்தன்.

சிறிது நேரம் அங்கு மௌனம் நிலவியது. சிவிகை சென்று கொண்டிருந்தது. ஆதித்தனும் குதிரை மீது மெல்லப் பின்

01 09 201

தொடர்ந்தான். சிறிது தொலைவு சென்றவுடன் ஆதித்தன் சிவிகையின் அருகே வந்தான். அவன் வருவதற்கும் திரை விலகுவதற்கும் சரியாக இருந்தது.

''நான் ஏதோ வழிப்பயணம் செல்லும் பெண் என்று நினைத்து விட்டீர்களா?'' என்று கேட்டாள் இளவரசி.

''நான் எதும் நினைக்கவில்லை. சாலை வழியே சென்று கொண்டிருக்கும் எந்த ஒரு பெண்ணுக்கும் ஆபத்து வந்தால் அவர்களை இளவரசி என்றும், குடிமகள் என்றும் வித்தியாசம் பார்க்கமாட்டேன். அதனால் நீங்கள் இளவரசியா அல்லது பெரிய செல்வரின் மகளா என்று கேட்கவும் மாட்டேன்'' என்றான் ஆதித்தன்.

ஆதித்தனின் பேச்சு அவளுக்கு எரிச்சல் மூட்டியது. ஆபத்தில் உதவியவன் என்பதால்தான் அவனுடன் பேச விரும்பினாள். ஆனால் அவனோ தலைக்கனம் மிக்கவன் போல்பேசுகிறான். யார் என்று கேட்டால் சொல்லவில்லை. தான் ஒரு இளவரசி என்று அதற்காக அவன் பேசவும் இல்லை. 'என்ன ஆச்சர்யம். இப்படிக்கூட ஆண்கள் இருக்கிறார்களா' என்று இளவரசி நினைத்துக் கொண்டாள். பொதுவாக அவள் எந்த ஓர் இளம் வாலிபருடனும், அரசகுலத்து ஆண்களுடனும் நேருக்கு நேர் பேசுவதில்லை. ஆனால் இப்போது ஆதித்தனைக் கண்டது முதல் அவனுடன் பேச வேண்டும் போல் தோன்றியது. ''நான் காஞ்சிபுரம் வரை செல்லப் போகிறேன். நீங்கள் அதுவரை பாதுகாவலாக வரப்போகிறீர்களா?'' என்று கேட்டாள்.

''உங்களுக்குப் பாதுகாவலனாக நீங்கள் என்னை நியமிக்கவில்லையே! நான் ஒரு வழிப்போக்கன். திருத்தணிகைக்குச் செல்கிறேன். அதுவரையில் உங்களுக்கு எந்த ஓர் ஆபத்தும் நேராமல் நான் பார்த்துக் கொள்கிறேன். அது ஓர் ஆண்மகனின் கடமை'' என்றான் ஆதித்தன்.

''வழிப்போக்கனா? நீங்கள் எங்கிருந்து எதுவரை செல்லப் போகிறீர்கள்?'' என அவள் கேட்டாள். ஆதித்தன் உடனே மறுமொழி கூறவில்லை. அவனுக்குப் பல்லக்கின் வேகத்திற்கேற்ப குதிரையை மெல்லச் செலுத்தி வருவது பிடிக்கவில்லை. விரைந்து திருத்தணிகையைச் சென்றடைய வேண்டும் என்ற ஆவலிருந்தது. ஆவல் என்பதைவிட ஆவேசம் என்றுகூடச் சொல்லலாம்.

விக்கியண்ணனை எப்படியும் சந்தித்தாக வேண்டும் என்ற பரபரப்பு இருந்ததனால் பல்லக்கோடு மெல்ல நடைபோட்டு



வருவது அவனுக்குச் சற்றும் பிடிக்கவில்லை. இருந்தாலும் இளவரசியுடன் பேச வேண்டும் என்ற துடிப்பும் அவனுள் எழுந்தது.

சற்றுக் கண்களை மூடிக் கொண்டால் அந்த அழகிய முகம் கண்முன் வந்தது. இந்தப் பல்லவ மங்கையை ஏன் வழிப்பறி செய்ய முயல்கிறார்கள் என்ற காரணம் அவனுக்குத் தெரியவில்லை. 'தன்னை இளவரசி என்று கூறிக் கொள்கிறாள். எந்த ஊர் இளவரசியாய் இருக்கும்?' ஆதித்தன் இப்போது அறிய விரும்பினான். அதனால் பல்லக்கின் மிக அருகே வந்து இளவரசி மீண்டும் பேசுவாளா என்று எதிர்பார்த்தான். இளவரசிக்கு, குதிரை அருகே வருவது தெரிந்தது. திரையை விலக்கி அவனுடன் பேச வேண்டும் போலவும் தோன்றியது. ஆனால் பேசாமல் இருக்க முடிவு செய்தாள். சிறிது நேரம்தான் அவளால் அப்படி இருக்க முடிந்தது. அவள் திரையை விலக்கவும், ஆதித்தன் அவளைக் கூப்பிடுவதற்காகக் குனியவும் சரியாக இருந்தது. இருவரும் மெல்ல நகைத்தனர்.

''இளவரசி என்கிறீர்களே, நீங்கள் எந்த நாட்டு இளவரசி?'' என்று ஆதித்தன் கேட்டான்.

''இது எந்த நாடு என்று உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் வழிப்போக்கர் என்று சொன்னீர்கள், எந்த ஊரிலிருந்து வருகிறீர்கள் என்று தெரியவில்லை. ஒருவேளை வடக்கே வாதாபியிலிருந்து வருகிறீர்களா, அல்லது இன்னும் வடக்கே இமயமலைச் சாரலிலிருந்து வருகிறீர்களா?'' என்று கேட்டாள் இளவரசி.

ஆதித்தன் மேலும் பேச்சை வளர்த்த விரும்பாமல், தான் காளத்தியிலிருந்து வருவதையும் பல்லவ நாட்டைச் சுற்றிப் பார்க்க வந்ததையும் சொன்னான்.

''பல்லவ நாட்டைச் சுற்றிப்பார்க்கும் ஆவல் உங்களுக்கு எப்படி வந்தது?'' என்று கேட்டாள் இளவரசி.

''பல்லவ நாட்டில் கலை மிகச் சிறந்து விளங்குவதாகச் சொன்னார்கள். சிற்பக் கூடங்கள் ஏராளமாக இருக்கின்றனவாம். நடனமும், இசையும் செழித்து ஓங்கி இருக்கின்றனவாம். அவற்றைக் காண வேண்டும் என்ற ஆவல் இருப்பதனால் நான் வந்தேன்'' என்றான் ஆதித்தன்.

''ஓ! உங்களுக்குக் கலை மீது மிக ஆர்வமோ?'' என்று கேட்டாள் இளவரசி. ''ஆமாம்!'' என்று தலையசைத்தான் ஆதித்தன்.

01 09 20

''காஞ்சிபுரம் பார்த்திருக்கிறீர்களா?'' என்று கேட்டாள் இளவரசி.

''இல்லை'' என்று தலையசைத்தான் ஆதித்தன். ''காஞ்சியை இன்னும் காணவில்லை. திருத்தணிகையை அடைந்த பிறகுதான் நான் என் திட்டத்தை முடிவு செய்து கொள்ள வேண்டும். பிறகுதான் திருக்கழுக்குன்றம், கடல் மல்லை போன்ற நகரங்களைக் காண வேண்டும் என்பது என் அவா. ஆனால் அங்கெல்லாம் உணவுக்கு வசதியிருக்கிறதா, தங்குவதற்கு இடம் இருக்கிறதா என்றெல்லாம் தெரியாது. நான் கொண்டு வந்த பொருளும் செலவாகிவிட்டது'' என்றான் ஆதித்தன்.

இளவரசி பெருமூச்சு விட்டாள். ''இப்படிக் கலையார்வம் கொண்டு நாடெங்கும் சுற்றும் ஒரு பயணிக்குத் தோள் வலிமையும் இருக்கிறதே என்று அறிய எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. நீங்கள் எந்த ஊர் என்று சொல்லவில்லையே'' என்று கேட்டாள் இளவரசி.

''தெற்கே தஞ்சை மாநகரம் என்று ஓர் ஊர் இருக்கிறது தெரியுமா உங்களுக்கு?'' என்று கேட்டான் ஆதித்தன்.

''ஆமாம். தெரியும். தஞ்சையிலே சோழ சிற்றரசர்கள் மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருகிறார்கள். அவர்கள் உதவியில்லாவிட்டால் மன்னர் அபராஜிதவர்மன் பாண்டியர்களைத் தோற்றோடச் செய்திருக்க முடியாது என்பதும் எனக்குத் தெரியும்'' என்றாள் இளவரசி.

''அரசியலை நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறீர்களே, நீங்கள் அபராஜிதவர்மருக்கு உறவா?'' என்று கேட்டான் ஆதித்தன்.

இளவரசி கலீரென நகைத்துவிட்டாள். தொடர்ந்து, ''அபராஜிதவர்மன் என்னை மணக்க விரும்புகிறார். நான் அதற்கு இசைய மறுத்துவிட்டேன். அதனால்தான் வழிமறித்து என்னைத் தூக்கிச் செல்வதென்று திட்டமிட்டுவிட்டார்கள். அச்செய்கையை நீங்கள் சற்று முன்பு கண்டீர்கள். நான் பல்லவ குலத்தின் மிக முக்கியமான கிளை முறையைச் சேர்ந்த இளவரசி. நியாயமாக இந்த நாடு எனக்குச் சொந்தமாக இருக்க வேண்டும். ஆனால் பெண்களுக்கு நாட்டுடைமை இல்லையாதலால்தான் அபராஜிதவர்மன் இந்த நாட்டை ஆளுகிறார்'' என்று கூறினாள் இளவரசி. ஆதித்தன் மெல்ல நகைத்தான்.



''இளவரசியாரே! முன்பின் தெரியாத வழிப்போக்கன் ஒருவனிடம் இப்படி உங்களின் செய்தி முழுவதையும் சொல்கிறீர்களே, இது சரியா? இப்படி நீங்கள் சொன்னால் தங்களைக் கவர்ந்து மட்டுமென்ன, சிறையில்கூட அடைப்பார்கள். போட்டிக்காக முளைத்திருக்கும் இளவரசியை யாரும் நாட்டில் இப்படி சுதந்திரமாக உலவவிட மாட்டார்கள்'' என்றான் ஆதித்தன்.

''நான் உள்ளத்தில் ஒன்று வைத்து வெளியில் ஒன்று பேசமாட்டேன். காலையில்கூட அப்படித்தான். ஒரு கவிஞர் என்னைத் தேடி வந்தார். அவரிடம் நான் என் கதை முழுவதையும் சொன்னேன். அவர் எனக்கு உதவுவதாகச் சொன்னார். அவருக்குக் குதிரையொன்று கொடுத்து உதவினேன். வழியிலே நீங்கள் வந்திராவிடில் வீரபத்திரன் என்னைக் கவர்ந்து சென்றிருப்பான். பலவந்தமாக என்னை மணமுடிப்பதற்கும் ஏற்பாடு செய்திருப்பான். நல்லவேளையாக நீங்கள் என்னைக் காப்பாற்றினீர்கள். இன்னும் ஓர் உதவி செய்ய முடியுமா?'' இளவரசியின் இனிய குரலில் குழைவும், விழியில் சுழற்சியுமிருந்தன.

○

## 19. கனவுகள் மூன்று

ஆதித்தன் இளவரசியின் முகத்தை நோக்கினான். ''என்னுடைய கையிலே வாளிருக்கிறது. தோளிலே வலிமை யிருக்கிறது. என்னால் உதவி செய்ய முடியும். சொல்லுங்கள், இளவரசியாரே!'' என்றான்.

''காஞ்சி வரையில் துணையாக நீங்கள் என்னுடன் உதவிக்கு வர வேண்டும். காஞ்சியிலே என்னுடைய அரண்மனைக்குள் நுழைந்துவிட்டால் என்னை எதிர்த்துக் கவர்ந்து செல்ல ஒருவராலும் முடியாது. மக்கள் என் பக்கம் இருக்கிறார்கள். என் கட்சியிலே சேர்ந்து பல்லவ மன்னனை எதிர்த்து நிற்கவும் அவர்கள் தயங்க மாட்டார்கள்'' என்றாள் இளவரசி.

ஆதித்தன் ஒருகணம் யோசித்தான். 'இளவரசியாரே! பொருத்தருள வேண்டும். என்னால் காஞ்சி வரையில் வர முடியாது. திருத்தணிகை வரையில் உங்களுக்குப் பாதுகாவலாக வர முடியும். குதிரையில்லாவிட்டாலும் நடந்தே உங்களுக்கு உறுதுணையாக வர முடியும். திருத்தணிகையில் எனது நண்பர் ஒருவரைச் சந்தித்த பின்தான் என் திட்டத்தை உறுதி செய்வேன்'' என்றான்.

இளவரசி வேறொன்றும் பேசவில்லை. சிவிகை ஆடி அசைந்து சென்று கொண்டிருந்தது. சிவிகை சுமப்போரின் 'ஹோ ஹோ' என்ற ஒலியும், மெல்ல மறைந்துவரும் மாலைக் கதிரவனின் மறைவால் பறவைகள் வானத்திலே கூச்சலிட்டுச் செல்லும் ஒலியும், அமைதியாக சாலையின் இருபுறங்களிலும் புரியாத புள்ளினங்கள் கிறீச்சிடும் ஒலியும் கேட்டுக் கொண்டேயிருந்தன.

''திருத்தணிகை அதோ வந்துவிட்டது'' என்று கூறினாள் இளவரசி. ''திருத்தணிகைக்குச் செல்லாமலே காஞ்சிக்குச் செல்ல ஒரு பாதை இருக்கிறது. அது இங்கே பிரிகிறது. அந்த வழியே நான் செல்லுகிறேன்'' என்றாள் இளவரசி. பிரியும் பாதையில் சிவிகையைச் சற்று இறக்கி வைத்துவிட்டு, இளைப்பாறுகின்ற நேரம் சற்று ஆதித்தனுடன் பேசலாம் என்று



நினைத்து சிவிகை சுமப்போரிடம் சைகை காட்டினாள். சிவிகை கீழே இறக்கப்பட்டது. இளவரசியும் சிவிகையினின்று கீழே இறங்கினாள். ஆனால், ஆதித்தன் குதிரையினின்றும் கீழே இறங்கவில்லை. அவன் இறங்காதிருப்பதைப் பார்த்த இளவரசி, ''சற்று நேரம் இங்கு இளைப்பாறிச் செல்லலாமா?'' என்று கேட்டாள்.

''இளவரசியாரே! திருத்தணிகைக்கு நான் மிக விரைவில் செல்ல வேண்டும். அன்பு கூர்ந்து என்னைப் பொருத் தருளுங்கள், நான் வருகிறேன்'' என்றான்.

''திருத்தணிகை இதோ வந்துவிட்டதே'' என்றாள் இளவரசி.

''வந்த பிறகுதான் எனக்கு ஆவல் பொங்குகிறது. நான் வருகிறேன். நீங்கள் தைரியமாகச் செல்லுங்கள். உங்களுக்கு எந்தவித இடையூறும் வராது என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது'' என்றான்.

''நீங்கள் செய்த உதவிக்குக் கைம்மாறாக நான் என்ன செய்வது?'' என்று இளவரசி கேட்டாள்.

''பலன் கருதி நான் உதவி செய்யவில்லை'' என்றான் ஆதித்தன்.

இளவரசி பெருமூச்சு விட்டாள். ''காஞ்சிக்கு நீங்கள் கட்டாயம் வர வேண்டும்'' என்று அவனை நோக்கிக் கூறினாள்.

''சாதாரண வழிப்போக்கனால் மாளிகைக்குள் வர முடியுமா?'' என்று ஆதித்தன் கேட்டான்.

''இதோ, இந்த அடையாளச் சின்னத்தை வாயிலில் காட்டுங்கள். எந்தத் தடையும் சொல்ல மாட்டார்கள்'' என்றாள் இளவரசி.

ஆதித்தன் அந்த அடையாளச் சின்னத்தைப் பெற்றுக் கொண்டான்.

* * *

''இளவரசே, நீங்கள் அதிர்ஷ்டசாலிதான். என்னை ஒரு கவிஞர் என்றெண்ணி ஒரு குதிரையைக் கொடுத்து அனுப்பி விட்டாள். உங்களுக்கு அடையாளச் சின்னமே கொடுத் திருக்கிறாள். என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று கேட்டான் விக்கியண்ணன்.

பிறகு நடந்தவற்றைச் சொல்கிறேன். நீ நடந்த கதையைச் சொல்லு. நாம் சத்திரத்திற்குச் செல்வோம்'' என்றான் ஆதித்தன்.

''சத்திரத்திற்கா? ஆபத்து இளவரசே! நம்மை அடையாளங் கண்டுகொண்டால்?'' என்று தன் பயத்தைத் தெரிவித்தான் விக்கியண்ணன்.

''அந்த நடனக்காரியைச் சந்திக்க வேண்டும்'' என்றான் இளவரசன்.

''ஐயோ ஆபத்துதான்'' என்றான் விக்கியண்ணன்.

இருவரும் சத்திரத்துத் திண்ணையில் சென்றமர்ந்து கொண்டார்கள்.

நடனம் முடிவடைந்து அபராஜிதவர்மன் வெளியே வந்து பேசிக் கொண்டிருக்கும் வரையில், திண்ணையில் இருள் நிறைந்த மூலையில் உட்கார்ந்திருந்தார்கள்.

அன்று இரவு அந்த வீதியில், இருள் நிறைந்த அந்த வீட்டுத் திண்ணையில், விக்கியண்ணனும், ஆதித்தனும் தங்கள் நேரத்தைக் கழித்தார்கள். இருவருக்கும் உறக்கம் வரவில்லை. உறங்காமல் பேசிக்கொண்டே அவர்கள் நேரத்தைக் கழித்து மறுநாள் காலை புலரும் பொழுதைக் கண்டுவிட்டார்கள். அவர்கள் இதுபோல் நாடெல்லாம் சுற்றி அலைய வேண்டும் என்பது தேவையேயில்லை. நாட்டின் மூலை முடுக்குகளைச் சுற்றிப் பார்ப்பதென்பது ஆகும் காரியமும் இல்லை. ஆனால், பல்லவ நாட்டின் கலைப் புகழ்பெற்ற ஊர்களைக் கண்டு மகிழ்ந்திட வேண்டும் என்ற எண்ணம் விக்கியண்ணனுக்கும், ஆதித்தனுக்கும் இருந்ததால் தங்களுக்கு ஏற்படும் தொல்லை களை - அசௌகரியங்களை - அவர்கள் பொருட்படுத்தவில்லை. அவர்கள் நினைத்திருந்தால் பல்லவ சக்கரவர்த்தியிடம் சுற்றிக்காட்டும் வாய்ப்பைப் பெற்றிருக்கலாம். அவர்கள் அதை விரும்பவில்லை. அபராஜிதனை அணுகி ஏதோ பிச்சை கேட்பதைப் போல் இந்தச் சலுகையைக் கேட்க வேண்டும் என்று ஆதித்தனுக்கு விருப்பமில்லை.

'என்னுடைய நாடு, என்னுடைய மூதாதையர் ஆண்ட நாடு தொண்டை மண்டலம். அந்த நாட்டில் நான் வேறு ஒருவரை எதற்காக வேண்டிக் கேட்க வேண்டும்? நான் ஒரு சாதாரண யாத்திரிகனைப் போல் கலைச் சிற்பங்களைப் பார்த்து, கலை இன்பத்தைப் பருகி, அத்துடன் பல்லவ நாட்டின் படை பலத்தையும் தெரிந்து செல்ல வேண்டும்' என்ற எண்ணத்துடன் - முடிவுடன் அவர்கள் இவ்வாறு எளிய மக்கள் போன்ற



வேடத்தில் பயணம் செய்யத் தொடங்கினார்கள். பயணத்தின் சில நாட்களிலேயே இப்படி ஒரு பெரும் அனுபவம் தங்களுக்கு ஏற்படுமென்று அவர்கள் நினைக்கவில்லை.

பல்லவ இளவரசி நடுவழியில் மறிக்கப்படுகிறாள். சிற்பியின் மகள் ராஜ விவகாரங்களில் ஈடுபாடு கொண்டவளாய்த் திகழ்கிறாள். கலைத் திறமையுடன் நாட்டியமாடும் ஒரு பெண்ணைப் பல்லவ நாட்டிலேயே இருப்பதற்காக இப்போதுதான் அந்தப் பெண்ணை அறிந்து கொண்டவர்போல் அபராஜிதன் வழிவகைகளை வகுக்கிறான். இவர்கள் மூவரையும் சோழ நாட்டிற்கு அழைத்துச் செல்ல வேண்டும். இதுதான் ஆதித்தனின் இலட்சியம்.

விக்கியண்ணனிடம் ஆதித்தன் இதைக் கூறியவுடன், அவன் முதலில் ஒன்றும் மறுமொழி கூறாமல் மவுனமாயிருந்தான்.

''விக்கியண்ணா, களைப்பாயிருக்கிறதா? பசி வயிற்றைக் கிள்ளுகிறதா?'' - இளவரசன் கேட்டான்.

விக்கியண்ணன் மெல்லச் சிரிப்பது அந்த இருளிலும் நன்கு தெரிந்தது. ''எனக்கென்ன பசி? சத்திரத்தில் எனக்கு விருந்துபசாரம் நடைபெற்றது. இரண்டு வயிறு இல்லையே என்ற கவலைகூட. உண்ட களைப்பு கண்களைச் சுழற்றியது. சிறிது உறங்கியும் விட்டேன்'' என்றான் விக்கியண்ணன். ஆதித்தன் பெருமூச்சு விட்டான்.

''எனக்கு ஒருவாய் கூட சோறு கிடைக்கவில்லை தெரியுமா?'' என்று ஆதித்தன் சொன்னவுடன் கவலையடைந்த விக்கியண்ணன், 'ஐயோ இளவரசன் முழுவதும் பட்டினியுடன் இருக்கிறான். ஆனால் அதை வெளியே சொல்லவில்லை' என்று எண்ணி, ''இளவரசே! இப்படி நீங்கள் பட்டினியாக இருக்கலாமா? இதை நீங்கள் ஏன் என்னிடம் தெரிவிக்க வில்லை?'' என்று பரபரப்புடன் கேட்டான்.

''ஏன், சொல்லியிருந்தால் விருந்திற்கு ஏற்பாடு செய்திருப்பாயா?'' என்று இளவரசன் கேட்டான்.

''ஆமாம். நேரே சத்திரத்திற்குள் நுழைந்து அங்கிருப்பவர் களிடம் கேட்டு, சோற்றைத் துணியில் ஒரு மூட்டையாகக் கட்டி வந்து உங்கள் முன்னிலையில் வைத்திருப்பேன். வைர வைடூரியங்களை எல்லாம் கொண்டு வந்து சேர்ப்பிக்கும் திறமைபெற்ற இந்தக் கரங்களுக்கு ஒரு தயிர்ச்சோற்றையோ, குழம்புச் சோற்றையோ கொண்டு[illegible] [illegible]யாமல்

போய்விடும்?'' என்று விக்கியண்ணன் பெருமையுடன் பேசினான்.

''விக்கியண்ணா! வைர வைடூரியங்களைக் கொண்டு வந்து சேர்க்கலாம். தங்கப் பாளங்களை வெட்டி எடுத்து வந்து சேர்க்கலாம். ஆனால், ஒரு வாய் உணவு பெறுவது இருக்கிறதே, அதுதான் சிரமமான வேலை. அந்த உணவிற்காகத்தான் இந்த உலகமே இயங்குகிறது, தெரியுமா?'' என்றான் ஆதித்தன்.

''நான் அதை ஒப்புக் கொள்ளமாட்டேன். வெறும் உணவிற்காகத்தான் இந்த உலகமே இயங்குகிறதா? அப்படி யென்றால் உணவு உண்டவுடன் உறங்க வேண்டியதுதானே இந்த உலகம்? அதன் பிறகு பலவித சேஷ்டைகளுடன் விளங்குகிறதே, அதற்கென்ன காரணம்?'' என்று விக்கி யண்ணன் கேட்டான்.

''விக்கியண்ணா! அந்த ஒருவாய் உணவிற்காகச் செய்யும் சேஷ்டைகளும், கிடைத்த பிறகு உண்டான தெம்பைத் தீர்ப்பதற்குச் செய்யும் சேஷ்டைகளும்தான் அன்றாட நிகழ்ச்சிகள். ஏன் நம்மையே எடுத்துக் கொள்ளேன்...'' என்று இளவரசன் சொல்ல முற்பட்டவுடன் விக்கியண்ணன் மேலே அவனைப் பேசவிடவில்லை.

''உம்... எடுத்துக் கொள்வோம். நாம் ஒரு வாய் உணவிற்காகத்தான் பல்லவ நாட்டில் சுற்றுகிறோமா?'' என்று கேட்டான்.

''இல்லைதான்... ஆனால் இந்த ஒரு வாய் உணவு இல்லாவிடில் எப்படித் துடித்துப் போகிறோம்? கண்ணெதிரே கலைப் பொருள்களைக் கொண்டு நிறுத்தினால்கூட சகித்துக் கொள்கிறோமா? நேற்று இரவு நாம் என்ன அவஸ்தைப் பட்டோம்? மறந்து விட்டாயா? சத்திரத்திற்குள் வயிற்றுக்குச் சற்று ஈவதற்காகத்தானே நுழைந்தோம்? அதனால்தானே இவ்வளவு விளைவுகளும்? இல்லாவிடில் இரவோடு இரவாக நாம் நேரே திருத்தணிகைக்கு வந்திருந்தால் இந்தப் பிரச்சினைகளில் எல்லாம் சிக்கியிருக்க மாட்டோம்'' என்றான் ஆதித்தன்.

சிறிது நேரம் அவர்களிடையே மவுனம் நிலவியது.

''பிரச்சினை என்று எதைச் சொல்கிறீர்கள்?'' என்று விக்கியண்ணன் கேட்டான்.

''ஆமாம், நாம் முக்கியமான மூன்று பேரைச் சந்தித்திருக்கிறோம். சிற்பி மகளை நான் சந்தித்தேன். சிற்பி



மகளைக் கொண்டு சிற்பியையே சோழ நாட்டிற்கு அழைத்துச் சென்றுவிட வேண்டுமென்பது என் கனவு. நாட்டிய மகளை நாம் சந்தித்தோம். சோழ நாட்டிற்கு வருமாறு திருக்காளத்தியில் அவளைச் சந்தித்தபோது சொன்னோம். தஞ்சையில் அவளது நாட்டியத்தைக் கண்டு மகிழ வேண்டும்; சோழ நாட்டில் நாட்டியக் கலை வளர்ச்சிக்கு வழி செய்ய வேண்டும். இது எனது இரண்டாவது கனவு'' என்று சொல்லி நிறுத்தியவுடன், விக்கியண்ணன் அவனை நெருங்கி, ''இளவரசே! உங்களது மூன்றாவது கனவு என்னவென்று எனக்குப் புரிந்துவிட்டது. நான் அதை வெளியே சொல்லலாமா?'' என்று கேட்டவுடன், இளவரசன் சிரித்துவிட்டான்.

''விக்கியண்ணா! நீ நினைப்பது போல் நான் பல்லவ இளவரசியின் மேல் காதல் கொண்டுவிடவில்லை. அவளை நான் அதிகமாகக் கூடப் பார்க்கவில்லை. ஒரே ஒரு பார்வைதான். இன்னும் அது என் இதயத்தில் அரும்பாகத்தான் இருக்கிறது. அரும்போ, மொக்கோ என்று சொல்ல முடியாத நிலை. இளவரசியைப் பார்த்தால் அவளது அழகு, மனத்தைக் கவருகின்றது. ஆனால் அவளது குணநலன்களைப் பார்த்தாலோ இவ்வளவு துணிகரமான இளமங்கை சோழநாட்டிற்கு வந்து தனது கொள்கைகளையெல்லாம் மாற்றிக் கொள்வாள் என்பது என்ன நிச்சயம்? அதுதான் என் இதயத்தில் உறுத்துகிறது'' என்றான்.

''இந்தக் கனவு நனவாக வேண்டும் என்று விரும்புகிறீர்களா? கனவு, கனவாகவே இருந்துவிட்டுப் போகட்டும் என்று நினைக்கிறீர்களா?'' என்று விக்கியண்ணன், சுற்றி வளைக்காமல், நேரடியாகவே கேட்டான்.

''விக்கியண்ணா! அதுதான் சொன்னேனே, இப்போது எனக்கு நாடு முக்கியம். சோழநாடு தலைநிமிர்ந்து நிற்க வேண்டும். சோழ நாட்டின் பழம்பெருமையெல்லாம் நிலைநாட்டப்பட வேண்டும். சோழநாடு பல்லவ நாட்டிற்கு அடங்கிக் கிடக்கிறது என்ற அவப்பெயர் அழிக்கப்பட வேண்டும். அதற்குப் பிறகுதான் மற்றவையெல்லாம். அதனால் எந்த பெருஞ்செயலை நிறைவேற்ற வேண்டுமென்றாலும் நான் ஆயத்தமாயிருக்கிறேன்'' என்றான் ஆதித்தன்.

* * *

பொழுது புலருவதற்கான அறிகுறியாக, எங்கும் இருள் விலகி கதிரவனின் மெல்லிய கோடுகள் ஆட்சி செய்யப்

01 09 201

போகின்றன என்பதற்கான அடையாளம் தெரிந்துவிட்டது. கதிரவனை வரவேற்பதற்காகப் புள்ளினங்கள் ஆர்ப்பரித்துக் கொண்டு பறந்து கொண்டிருந்தன. வீதியிலே இன்னும் சுறுசுறுப்பு ஏற்படவில்லை. மெல்லிய பனிப்படலம் வீதியில் போர்வை போர்த்தியிருந்தது. மக்கள் நடமாட்டம் அந்த வீதியில் இன்னும் ஏற்படவில்லை. கோவிலில் காலைப் பூஜையின் மணியோசை மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது. மன்னன் அபராஜிதவர்மன் திருத்தணிகையிலேயே தங்கியிருக்கிறாரா, அல்லது காஞ்சிக்குத் திரும்பிவிட்டாரா, நாட்டியப் பெண் எங்கிருக்கிறாள் என்பதையெல்லாம் அறிய வேண்டும் என்று ஆதித்தன் எண்ணினான்.

தூணில் சாய்ந்தமர்ந்தபடியே இளம் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தான் விக்கியண்ணன். திடீரென ஏதோ நினைத்துக் கொண்ட ஆதித்தன், விக்கியண்ணனை எழுப்பி, ‘‘விக்கியண்ணா! விடியற்காலையிலேயே இங்கிருக்கும் குளத்தைத் தேடிச் சென்று குளித்து, உடையைத் தோய்த்துக் காய வைத்த பிறகு மற்றவற்றைக் கவனிக்கலாம். நம்முடைய மாற்றுடை மூட்டையைச் சத்திரத்திலேயே நாம் விட்டுவிட்டோம், வா புறப்படு’’ என்றான்.

அவர்கள் மலையடிவாரத்தில் இருக்கும் குளக்கரையை நோக்கிச் சென்றார்கள். திருக்குளத்தைச் சுற்றி அடர்ந்த மரங்கள் சூழ்ந்திருந்தன. பெரும் படிக்கட்டுகளாக விளங்கும் பாறைகள் பெருமளவில் பாசி பிடித்து வழுக்கும்படியாயிருந்தன. தாமரை மலர்கள் தடாகத்தில் நிறைந்திருந்தன. அவர்கள் சென்று கொண்டிருக்கும்போது ஒருவன் ஓடிவந்து, ‘‘ஐயா, இப்படிச் சற்று வருகிறீர்களா?’’ என்று கேட்டான்.

அவர்கள் திடுக்கிட்டுத் திரும்பினார்கள். அவனை அவர்கள் முன்பின் பார்த்ததில்லை.

‘‘நீ யாரப்பா?’’ விக்கியண்ணன் கேட்டான்.

‘‘ஐயா, என்னை உங்களுக்குத் தெரியாது’’ என்றான்.

‘‘எங்களை மட்டும் உனக்குத் தெரியுமோ?’’ என்று கேட்டான் விக்கியண்ணன்.

‘‘எனக்கும் தெரியாது. ஆனால், எங்கள் மயிலுக்குத் தெரியும்’’ என்று அவன் கூறினான்.

‘‘அது யாரப்பா மயில்?’’ என்று விக்கியண்ணன் கேட்டான்.

‘‘உங்களுக்கு மயிலைத் தெரியாதா? அவளுக்கு உங்களைத் தெரியுமென்று சொன்னாள். உங்களை அழைத்து வருமாறு சொன்னாளே’’ என்றான் அழைத்தவன்.

இப்போது விக்கியண்ணன் புரிந்து கொண்டான்.

‘‘நாட்டியப் பெண்ணின் பெயர் மயில். பெயரைத் தெரிந்து கொள்ளாமலேயே அவளைத் தஞ்சைக்கு வருமாறு கூப்பிட்டோம்’’ ஆதித்தன் காதில் மட்டும் விழும்படியாகக் கூறி, ‘‘நாங்கள் போவதை அவள் எங்கிருந்து பார்த்தாள் ஐயா?’’ என்று அவனை நோக்கிக் கேட்டான்.

‘‘அதோ, அந்தச் சாளரத்தின் வழியாக’’ என்றான் அழைத்த ஆசாமி.

ஆதித்தன் திரும்பிப் பார்த்தான். சாளரத்தின் வழியே முகம் தெரிந்தது. மயிலின் அழகிய வதனம், அந்தக் காலையிலும் தாமரைபோல் மலர்ந்து தெரிந்தது.

‘‘போகலாமா?’’ என்று ஆதித்தன் கேட்டான்.

‘‘வேண்டாம், வேண்டாம். ஒருவேளை அபராஜிதன் இங்கே வரலாம்’’ என்று தடுத்தான் விக்கியண்ணன்.

‘‘பல்லவ சக்கரவர்த்தி நாட்டியப் பெண்ணின் வீட்டிற்கு ஏன் வருகிறான்?’’ என்று ஆதித்தன் கேட்டான்.

‘‘சோழ இளவரசர் செல்ல விரும்பும்போது பல்லவ அரசர் வர விரும்புவதில் வியப்பில்லை’’ என்றான் விக்கியண்ணன்.

‘‘எனக்குக் கலையின் மீது காதல்’’ என்றான் ஆதித்தன்.

‘‘அபராஜிதனுக்கும்கூட அப்படித்தான்’’ என்றான் விக்கியண்ணன்.

விக்கியண்ணன் மெல்லச் சிரித்தான்.

‘‘ஏன் சிரிக்கிறாய் விக்கியண்ணா? நான் சொல்வதில் உனக்கு நம்பிக்கையில்லையா?’’ என்று கேட்டான்.

‘‘உங்களிடம் எனக்கு மிகவும் நம்பிக்கை இருக்கிறது. ஆனால் உங்கள் கலைக் காதல் மீதுதான் எனக்கு நம்பிக்கையில்லை’’ என்றான் விக்கியண்ணன்.

‘‘அப்படியென்றால், சோழநாட்[illegible] நான் நினைப்பதில் உனக்கு நம்பிக்கையில்லையா?’’ என்று ஆதித்தன் கேட்டான்.

01 09 2012

''ஆகா, நான் அப்படியொன்றும் சொல்லவில்லை. திருக்காளத்தியில் சந்தித்த இந்த நாட்டியப் பெண்ணின் கலைமீது, நீங்கள் கொண்ட காதலில்தான் எனக்கு நம்பிக்கையில்லை!'' என்று விக்கியண்ணன் கூறவும், ஆதித்தனும் பெரிதாக நகைத்துவிட்டான்.

''அப்படி நினைக்காதே விக்கியண்ணா! தஞ்சையில் கலைச் சிறப்பு மிக்க கோயில் ஒன்று கட்ட வேண்டும். அந்தக் கோயிலில் குடிகொண்டிருக்கும் இறைவனுக்கு நாள்தோறும் நடன மங்கையர் நாட்டியாஞ்சலி செலுத்த வேண்டும். மயில் அந்தப் பணியைத் தொடங்கி வைப்பாள். அதற்காகத்தான் மயிலைத் தஞ்சைக்கு அழைக்கிறேன்'' என்றான் ஆதித்தன்.

''ஆனால் அபராஜிதனோ அவளை இங்கேயே தங்க வைக்கத் திட்டமிடுகிறான்'' என்றான் விக்கியண்ணன்.

''அபராஜிதன் எண்ணத்தை முதலில் முறியடிப்போம்'' என்றான் ஆதித்தன்.

''பல்லவச் சக்கரவர்த்தியின் கட்டளையை மயில் ஏற்பாளா? சோழநாட்டு நாடோடிகள் என நம்மை அவள் எண்ணியிருக்கிறாள். நாடோடிகளின் கோரிக்கையை ஏற்பாளா?'' என்று விக்கியண்ணன் கேட்டான்.

''நாம் யார் என்பதை அவளிடம் தெரிவித்து வருவோம்'' என்றான் ஆதித்தன்.

''கூடாது. கூடவே கூடாது. இளவரசே! இங்குதான் நீங்கள் மகத்தான தவறு செய்கிறீர்கள். நம்மை இன்னார் என்று தெரிந்து கொண்டவுடன் அவள் பல்லவ சக்கரவர்த்தியிடம் தெரிவித்து விட மாட்டாள் என்பதற்கு என்ன உறுதி?'' என்று விக்கியண்ணன் பரபரப்புடன் சொன்னான்.

''எனக்கு மயிலிடம் நம்பிக்கை இருக்கிறது. அவளிடம் பேசுவோம். வீதியிலேயே நின்று விவாதிப்பதைவிட வீட்டிற்குள் செல்வோம்'' என்றான் ஆதித்தன்.

○

## 20. அபராஜிதன் சந்தேகம்

விக்கியண்ணனும், ஆதித்தனும் மயில் தங்கியிருந்த வீட்டிற்குள் நுழைந்தனர்.

அந்த வீடு சிறு வீடுதான். அரசாங்கத்திற்குச் சொந்தமானதாயிருந்ததால் ஆடம்பரமாக இருந்தது.

''நேற்று என் நடனத்தைப் பார்த்தீர்களா?'' என்று மயிலழகு ஆதித்தனை நோக்கிக் கேட்டாள்.

உண்பதற்குப் பொங்கலை இரு தட்டுகளில் ஒரு பணிப்பெண் கொண்டு வந்து அவர்கள் எதிரே வைத்தாள். பேச்சிலே கவனம் ஓடவில்லை அவர்களிருவருக்கும். மயிலழகைப் பார்த்து ரசித்தவாறு, பேசிக்கொண்டே பொங்கலை ருசிப்பதில் முனைந்தனர்.

''நீங்கள் கூறியதுபோல் திருத்தணிகைக்கு வந்துவிட்டேன். வந்த இடத்தில் எனது நாட்டிய நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தார்கள்'' என்றாள் மயிலழகு.

''கோட்டத்தலைவர்கள் அனைவரும் வந்திருந்தார்கள். பல்லவ சக்கரவர்த்தியும் வந்து ரசித்தார்'' என்றான் விக்கியண்ணன்.

''ஓ! நீங்கள் என் நடனம் முழுவதையும் கண்டு ரசித்தீர்களா?'' என்று மயிலழகு கேட்டாள்.

''இல்லை, நான் கண்களை மூடிக்கொண்டுவிட்டேன்'' என்றான் விக்கியண்ணன்.

''எனது நாட்டியம் உங்களுக்குப் பிடிக்கவில்லையா?'' கவலையுடன் கேட்டாள் மயிலழகு.

''இல்லை, இல்லை. அவன் தூங்கிவிட்டான்'' என்று ஆதித்தன் கூறியவுடன் மயில[illegible] சிரித்தாள். சிரிப்பு அவளுடைய நடனத்தைப் போல[illegible] அழகா[illegible]து.

''நகைச்சுவையுடன் பேசுகிறீர்கள்'' என்றாள் மயிலழகு.

''பொங்கலைச் சுவைத்தவுடன் எல்லாச் சுவையும் தானே வந்துவிடும்'' என்றான் விக்கியண்ணான்.

''பல்லவ சக்கரவர்த்தி, உன்னை இந்த ஊரிலேயே தங்கியிருக்கச் சொல்கிறார், அப்படித்தானே?'' என்று விக்கியண்ணான் கேட்டான்.

''ஆகா! அதையும் நீங்கள் கேட்டுக் கொண்டிருந்தீர்களா?'' என மயிலழகு வியப்புடன் கேட்டாள்.

இப்போது ஆதித்தன் சொன்னான். ''மயிலழகு! மிக அழகான பெயர். திருக்காளத்தியில் உனது நடனத்தைக் கண்டோம். ஆனால் அதை ரசிக்க இங்கே ஒருவருமில்லை என்பதையும் அறிந்தோம். அதனால் சோழ நாட்டிற்கு உன்னை அழைத்துச் சென்றால் உனக்கு நல்ல பாராட்டு கிடைக்கும். உனது வருங்காலம் மிகப் பிரகாசமாக அமையும். அதனால்தான் உன்னை உடனே திருத்தணிகைக்கு வரச்சொன்னோம். ஆனால், இங்கே பல்லவ சக்கரவர்த்தி உன் நடனத்தைப் பாராட்டியவுடன் சோழ நாட்டிற்குச் செல்லும் எண்ணத்தையே நீ மறந்துவிடுவாயோ என்ற சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது'' என்றான்.

''இல்லை, இல்லை. அப்படியொன்றும் எனக்கு எண்ணமில்லை. இந்த நாட்டிலிருந்தால் என் கலை பரிமளிக்காது. என்னைப் போன்ற பலர் நடனத்தை மறந்துவிட்டு வேறு தொழில் செய்யத் துணிந்துவிட்டனர். நான் நடனக் கலையை வாழ்நாளில் மறக்க மாட்டேன். இந்த ஊருக்கு வந்தவுடன் நீங்கள் எப்போது வருவீர்கள் என்று ஆவலுடன் எதிர் பார்த்திருந்தேன்'' என்றாள்.

''உன் சகோதரி மீன்விழியை நீ சந்தித்ததையும் அறிந்தோம்'' என்றான் ஆதித்தன்.

மயிலழகின் முகம் மாறியது. ''மீன்விழியை நீங்கள் சந்தித்தீர்களா? அவள் எனது சகோதரிதான். ஆனால், பொறாமை மிகுந்தவள். என்னைப்பற்றி இல்லாதது - பொல்லாததைக் கூறியிருப்பாள், அதை நம்பாதீர்கள்'' என்று கூறும்போது அவள் குரலில் பயம் த்வனித்தது.

''நாங்கள் உன் பேச்சைப் பூரணமாக நம்புகிறோம். நீ தஞ்சைக்கு வருவது உறுதிதானே?'' விக்கியண்ணான் கேட்டான்.

''உறுதிதான். தஞ்சைக்கு எப்படிச் செல்வது? எவ்வளவு தொலைவு இருக்கிறது? அங்கே சென்றால் யாரைச் சந்திப்பது?



எங்கே தங்குவது?'' என்று பலப்பல கேள்விகளைக் கேட்டாள் மயிலழகு.

விக்கியண்ணானும், ஆதித்தனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். ஆதித்தன் 'உண்மையைச் சொல்லி விடட்டுமா?' என்று தலையை அசைத்துக் கேட்டான்.

விக்கியண்ணான் பார்வையில் 'கூடாது' என்ற வேண்டுகோள் இருந்தது.

''நீங்கள் இருவரும், தஞ்சைக்கு எப்போது போகிறீர்கள்? தஞ்சைக்குச் சென்றால் அங்கே இளவரசர் ஆதித்த சோழ தேவரைச் சந்திக்க முடியுமா? அவர் மிகுந்த கலை ரசிகர் என்று, எனது கலைக் குழுவில் இருந்தவர்கள் பேசிக் கொண்டனர்'' என்று மயிலழகு கேட்டாள்.

'நான்தான் அந்த ஆதித்தன்' என்று சொல்லிவிடத் துடித்தான் ஆதித்தன்.

அப்போது வீட்டின் வெளியே யாரோ வரும் ஓசை கேட்டது. பல்லவ வீரர்கள் வாயிற்படியருகே நின்று ''ஐயா, ஐயா'' என்றழைத்தனர்.

வெளியே வந்து குரல் கொடுத்து அழைப்பவர்களை இன்னார் என்று அறிந்துகொண்ட விக்கியண்ணான், ஆதித்தனிடம் கண்களாலேயே எச்சரித்தான்.

ஆதித்தன் எழுவதற்கு முயன்றான். விக்கியண்ணானும் தட்டிலிருந்ததை ஒரே வாயில் எடுத்து அடைத்துக் கொண்டான்.

''ஏன் அதற்குள் எழுந்துவிட்டீர்கள்?'' என்று மயிலழகு பரபரப்புடன் கேட்டாள்.

''உன்னைச் சக்கரவர்த்தி அழைக்கிறார். நீ போகப் போகிறாய். இனி எங்களுக்கு என்ன வேலை?'' என்றான் ஆதித்தன்.

''நான் உடனே போகப் போவதில்லை. உங்களிடம் பேசுவதற்கு பல விஷயங்கள் உள்ளன...'' என்றாள் மயிலழகு, அவர்கள் எதிரே அமர்ந்து.

''என்ன பேசப்போகிறாய்? சோழநாட்டிற்கு வர முடியவில்லை என்று சொல்லப் போகிறாய். அதற்குப் பல சமாதானங்களை என்னிடம் சொல்லப் போகிறாய். அப்படித்தானே?'' என்று விக்கியண்ணான் கேட்டான்.


01 09

"இல்லை... இல்லை. நான் சோழநாட்டிற்கு வரத்தான் போகிறேன். எப்போது புறப்படுவது? நீங்களும் உடன் வருகிறீர்களா? அங்கே நான் எங்கு தங்குவது? எனக்குத் துணையாக வர ஒருவருமில்லையே. ஐயா, என் கதையே விசித்திரமானது. அதைச் சொல்லத்தான் உங்களை இருக்கச் சொல்கிறேன்..." - மயிலழகு அவர்களிருவரையும் மாறி மாறிப் பார்த்துக் கூறினாள்.

"சிற்பியின் மகளான உன் கதையில் சித்திரம்தான் ததும்பி நிற்கும். விசித்திரம் ஏது? உன் தந்தை பாக்கியசாலி நடன மங்கையைப் பெற்றிருக்கிறார். மற்றொரு பெண்ணோ அரசாங்கத்தில் செல்வாக்கு உடையவள், அஞ்சா நெஞ்ச முடையவள்..." என்று ஆதித்தன் கூறினான்.

"என் சகோதரியின் பேச்சை எடுக்காதீர்கள். என் முன்னேற்றத்தில் அக்கறை இல்லாதவள். என் கலைத் திறமையைக் கண்டு பொறாமைப்படுபவள். அதனால்தான் பல்லவநாட்டை விட்டே போய்விட வேண்டும் என்று நான் உறுதியுடனிருக்கிறேன். நல்லவேளையாக உங்களைச் சந்தித்தேன்..." என்று உணர்ச்சிவசப்பட்டுக் கூறினாள்.

ஆதித்தனும், விக்கியண்ணனும் பொருள் நிறைந்த புன்னகை பூத்தனர்.

வெளியே இருந்து மீண்டும் குரல் கேட்டது.

"மயிலழகு! இன்னும் சிறிது நேரத்தில் அவர்கள் உள்ளே வந்துவிடுவார்கள். நாங்கள் போகிறோம்..." என்றான் விக்கியண்ணன்.

"வரட்டுமே? உங்களுக்குத்தான் என்ன பயம்? எனக்குத்தான் என்ன பயம்?" என்றாள் மயிலழகு.

"எதற்காக அவர்கள் உன்னை அழைக்கிறார்கள்?" விக்கியண்ணன் கேட்டான்.

"பல்லவ சக்கரவர்த்தி அழைப்பதாகக் கூறுவார்கள்" என்று ஆதித்தன் மறுமொழி கூறினான்.

மயிலழகு நகைத்தாள். "ஒருவர் கேள்வி கேட்க மற்றொருவர் விடை கூறுவது அழகாகத்தானிருக்கிறது" என்றாள்.

"உன்னைவிட எங்கள் மறுமொழி அழகோ?" என்றான் விக்கியண்ணன்.



மயிலழகின் மாந்தளிர் முகம் நாணத்தால் சிவந்தது.

"உன்னுடைய நாட்டியத் திறமை சக்கரவர்த்திக்குத் தெரியாதா?" என்று ஆதித்தன் கேட்டான்.

"நேற்றுத் தெரிந்து கொண்டிருப்பார்" என்றான் விக்கியண்ணன்.

மீண்டும் மயிலழகு சிரித்தாள். அவள் சிரிப்பு ஆதித்தனை மயக்கியது. இளங்கோ பிச்சியின் மெல்லிய சிரிப்பு அவன் எதிரே ஒலித்தது.

வாயிற்படியேறி அவர்கள் வரும் அரவம் கேட்டது. விக்கியண்ணனும், ஆதித்தனும் எழ முயன்றார்கள். மயிலழகு ஆதித்தன் தோளைப் பிடித்தழுத்தி, "உட்காருங்கள். அவர்களிடம் பேசி விரைவில் அனுப்பி விடுகிறேன்" என்றாள்.

"எங்களைப்போல் அவர்களும் உட்கார்ந்துவிட்டால்?" என்று விக்கியண்ணன் கேட்டான். மயிலழகு சுட்டெரித்து விடுபவள் போல் அவனை உற்றுப் பார்த்துவிட்டு வாயிற் படியருகே விரைந்தாள்.

பல்லவ அரசர் அனுப்பிய பணியாட்கள் பணிவுடன் வணங்கி நின்றனர்.

"உங்களைச் சக்கரவர்த்தி உடனே அழைத்து வருமாறு கூறினார்" என்று மிகவும் பணிவுடன் கூறினார்கள்.

"நான் இப்பொழுதுதான் எழுந்தேன். இன்னும் சிறிது நேரமாகுமே..." என்றாள் மயிலழகு.

"நாங்கள் காத்திருக்கிறோம்..." என்றனர் அவர்கள்.

"எனக்கு வழி தெரியும். நீங்கள் போகலாம்" என்று அழுத்தமாகக் கூறினாள் மயிலழகு.

"நேற்று உங்கள் நடனத்தை நான் கண்டு மகிழ்ந்தேன்" என்றான் வந்த பணியாட்களில் ஒருவன்.

"ஓ!" என்று கூறி மிக அலட்சியமாக விழிக்கணையை அவர்கள் மீது எய்தாள் மயிலழகு.

"இப்பொழுதுகூட நீ ஆடப் போகிறாய் அல்லவா?" என்றான் மற்றொருவன். வார்த்தையில் மரியாதை குறைந்து வந்தது.


01 09 201

''நினைத்தபோது ஆடமாட்டேன்'' என்றாள் மயிலழகு.

''பிறகு எப்போது ஆடுவாய்? நான் அதைப் பார்க்க வேண்டாமா?'' என்றான் ஒரு பணியாள்.

''வேண்டாம், நீ போகலாம்'' என்றாள் மயிலழகு சீற்றமுடன்.

''இங்கேயே இருந்து அழைத்து வருமாறு அரசர் உத்தரவு...'' அழுத்தமாகவே கூறினான் பணியாள்.

''என்னைத் தேடி என் சொந்தக்காரர்கள் சிலர் வந்திருக் கிறார்கள். அவர்களுக்கு உணவு பரிமாறி விட்டு வருகிறேன். நீங்கள் போகலாம்'' என்று கூறிவிட்டு, மயிலழகு, கதவைத் தாழிட்டுக் கொண்டே உள்ளே வந்தாள்.

வெளியே நடந்த பேச்சைக் கேட்டவாறிருந்த ஆதித்தன், ''அதிகப் பிரசங்கிகள். அவர்கள் நீ புறப்படும் வரை நகரமாட்டார்கள். உம், நீ சொல்ல வேண்டியதைச் சொல்லு...'' என்றான்.

''தஞ்சைக்கு...'' என்று மயிலழகு மீண்டும் பேச்சைத் தொடங்கினாள்.

''நீ காஞ்சிக்கு வந்துவிடு. அங்கிருந்து தக்க துணையுடன் உன்னைத் தஞ்சைக்கு அனுப்ப ஏற்பாடு செய்கிறேன்'' என்றான் ஆதித்தன்.

''துணை. உங்களுடன் வருகிறேன். நீங்கள்தான் தக்க துணை. பல்லவ நாட்டில் வேறு யாரையும் நம்ப முடியாது'' என்று அவள் கூறும்போது விக்கியண்ணனுக்கு மெய்சிலிர்த்தது.

மயிலழகு, தக்க அலங்கார ஆடை அணிகளுடன் வாயிற் கதவைத் திறந்தாள். திண்ணையில் பணியாட்கள் இருவரும் உட்கார்ந்திருந்தனர். மயிலழகு அவர்களுடன் சென்றாள். காலில் சதங்கை ஒலிக்கவில்லை. அவள் நடக்கும் அழகை, ஆதித்தன் கதவோரமாக நின்று பார்த்துக் கொண்டிருந்தான்.

''இளவரசே!'' என்று விக்கியண்ணன் மெல்ல அழைத்தான்.

ஆதித்தன் திரும்பினான். ''நீங்கள் இந்த நடனப் பெண்ணை மறந்துவிட வேண்டும்'' என்றான் அவன்.

''ஏன்?'' என்றான் ஆதித்தன்.

''இல்லாவிடில் பல்லவ நாட்டினின்று ஒருகாலும் மீள முடியாது.''

''என்ன சொல்கிறாய் விக்கியண்ணா?'' ஆதித்தன் கேட்டான்.

''உங்கள் பார்வையில் மாறுதல் தெரிகிறது'' என்றான் விக்கியண்ணன்.

''உன் கணிப்பு தவறு...''

''விக்கியண்ணன் தவறான கணக்கைப் போடமாட்டான்.''

''உன் மதிப்பு தவறானது. பார்க்கலாம்... என் மனம் என்னிடம் கட்டுப்படாமல் வேறு யாரிடம் கட்டுப்படும்?''

''மனக்குதிரை பிடிக்க முடியாமல் தாவுகிறது...''

''அடக்க முடியும், என்னால்.''

''சரி, பார்ப்போம்.''

விக்கியண்ணனும், ஆதித்தனும் இப்படி சபதமிட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில், மயிலழகு பல்லவ சக்கரவர்த்தியின் எதிரே பணிவுடன் நின்று கொண்டிருந்தாள்.

தலையை அசைத்த அபராஜிதன், ''நேற்று உன் நடனத்தைக் கண்ட பிறகு, உன் திறமையைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள முடிவு செய்துவிட்டேன். இதுவரையில் உன் தந்தை - சிற்பி - உன் நடனத் திறமையைப் பற்றி என்னிடம் ஒரு வார்த்தையும் சொல்லவில்லையே...'' என்றார்.

மயிலழகு மகிழ்ச்சியுறுவதற்கு மாறாகத் திடுக்கிட்டாள்.

''மயிலழகு! காஞ்சிக்கு நீ சென்றிருக்கிறாயா?'' என்று மன்னர் கேட்டார்.

'இல்லை' என்பதற்கு அடையாளமாக மயிலழகு தலையசைத்தாள்.

○

01 09 2012

## 21. இதயத்தில் புகுந்தவள்

"காஞ்சியில் கயிலாயநாதர் ஆலயம் மிகப் புகழ் வாய்ந்தது. நடனத் தோற்றங்களை எனது முன்னோர்கள் காலத்தில் அங்கே செதுக்கி வைத்துள்ளனர். நானும் அதுபோன்ற கோயில் ஒன்றைக் கட்ட எண்ணியுள்ளேன். அப்போது உனது சேவை மிகவும் உதவியாக இருக்கும். எனது திட்டம் விரைவில் நிறைவேறும். திருத்தணிகை முருகனுக்குக் கனகாபிஷேகம் செய்த பிறகு அந்தச் சிற்பக் கோயில் கட்டும் பணியைத் தொடங்கப் போகிறேன். அதுவரையில் நீ காஞ்சி ஏகாம்ப ரேச்வரர் ஆலயத்தில் காலையும், மாலையும் நடனமாடிக் கொண்டிரு. உனக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கிறேன்" என்றார் அபராஜிதவர்மன்.

மயிலழகு ஒன்றும் பேசவில்லை.

"நாளையே புறப்பட வேண்டும்" என்றார் மன்னர்.

இப்போது மயிலழகின் முகத்தில் புதுப்பொலிவு தோன்றியது.

"அப்படியே! தங்கள் கட்டளையை ஏற்பதில் நான் பெரும் பாக்கியம் செய்துள்ளேன்" என்றாள் மயிலழகு.

மயிலழகுக்கு உத்தரவிட்டுக் கொண்டிருக்கும் அந்த வேளையில், அபராஜிதன் தங்கியிருந்த மாளிகையின் வெளியே சந்தடி ஏற்பட்டது. பரபரப்பாக வீரர்கள் ஓடி வந்து கொண்டிருந்தனர். திருத்தணிகைக் கோட்டத்து வீரர்கள் பலர் சூழ, மூலபத்திரனைச் சுமந்து வந்து கொண்டிருந்தனர்.

மூலபத்திரன் குற்றுயிருடன் பலமான தாக்குதலுக்குள்ளாகி நடுச்சாலையில் கிடந்த செய்தியை அபராஜிதன் அறிந்து திடுக்கிட்டார்.

மூலபத்திரனுடன் இருந்த வீரர்கள், வைரக் கண்ணியின் சிவிகையைச் சூழந்து கொண்டு, ஆதித்தனால் தடுத்துத் தாக்கப்பட்ட பிறகு செத்தோம் பிழைத்தோம் என்று



ஓடியவர்கள், திருத்தணிகைக்குச் சென்று செய்தியை அறிவித்தனர். மூலபத்திரன் இறந்து விட்டிருப்பான் என்றே அனைவரும் எண்ணியிருந்தனர்.

மூலபத்திரன் உயிர் நீங்காமல் இன்னும் ஊசலாடிக் கொண்டிருந்தது.

அபராஜிதன் கவலையுடன் அவனருகே நின்று கொண்டிருந்தார். 'உடனே காஞ்சிக்கு எடுத்துச் சென்றால், மருத்துவர்கள் அவன் உயிரைக் காப்பாற்றிவிடுவார்கள்' என்று அவர் எண்ணினார். உடனே மூலபத்திரனைக் காஞ்சிக்குக் கொண்டு செல்ல உத்தரவிட்டார்.

அவர் நெடுநேரம் சிந்தனை செய்தார். மூலபத்திரனைக் கடுமையாகத் தாக்கக்கூடியவன் யாராயிருக்க முடியும் என்று யோசித்தார்.

நடந்த சம்பவங்களை அபராஜிதன் மிகவும் கவனமாகக் கேட்டறிந்தார்.

தன் அருகே இருந்த பல்லவ தளபதியை அழைத்து, "ஒரே ஒருவன் இப்படி பல வீரர்களை எதிர்த்துப் போரிட்டிருக்கிறான் என்றால் நாம் உடனே உண்மையைக் கண்டறிய வேண்டும். சாளுக்கியர்களின் கைவரிசையாக இருக்குமோ?" என்று கேட்டார்.

"நானும் விசாரித்தேன் அரசே! குதிரையொன்றில் வந்து கொண்டிருந்த ஒருவன் நிராயுதபாணியாக இருந்திருக்கிறான். நமது வீரர் ஒருவரிடமிருந்து வாளைப் பறித்துத் தாக்கி யிருக்கிறான். போர் முறையை மிக நன்கு கற்றுணர்ந்தவனாக இருக்க வேண்டும் என்று தெரியவருகிறது" என்றார் தளபதி.

அபராஜிதன் சிறிது நேரம் ஏதும் பேசவில்லை. பிறகு, "நமது ஒற்றர்படைத் தலைவருக்கு உடனே தகவல் சொல்லி யனுப்புங்கள். காஞ்சியில் என்னைச் சந்திக்குமாறு சொல்லுங்கள். வைரக்கண்ணியின் மாளிகையைக் காவலிட்டிருக் கிறீர்களா?" என்று கேட்டார். பிறகு, "உடனே காஞ்சிக்குப் புறப் படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள்" என்று உத்தரவிட்டார்.

"அரசே!" என்று மிகவும் பணிவான குரலில் உட்படுக்கருமத் தலைவர் கேட்டார். "இன்று பகல், கோட்டத் தலைவர்களின் மந்திராலோசனை சபைக் கூட்டம் இருக்கிறதே" என்றார்.

''ஆமாம். கொங்கு நாட்டின் மீது படையெடுத்துச் செல்வதற்கான திட்டங்களை வகுக்கவும் படைகளைத் திரட்டச் செய்யவும் கோட்டத் தலைவர்களுடன் கலந்தாலோசிக்க விரும்பினேன். மிக முக்கியக் கூட்டம். உம்...'' என்றார் அரசர் சிந்தித்தவாறு.

''கோட்டத் தலைவர்களின் கருத்தை அறிந்தால்தான் படையெடுப்புக்கான நாளை முடிவு செய்யலாம்'' என்றார் படைத்தளபதி.

''ஆம். பகல் கூட்டம் முடிவடைந்த பிறகு காஞ்சிக்குப் புறப்படுவோம்'' என்றார் அபராஜிதன்.

ஆதித்தனும் விக்கியண்ணனும் குளத்தில் நீராடிவிட்டு சத்திரத்தினருகே வந்தனர். கோட்டத் தலைவர்களின் கூட்டம் நடைபெறப் போவதையும் மூலபத்திரனைக் காஞ்சிக்குக் கொண்டு சென்றிருப்பதையும் அறிந்தனர்.

அன்றைய கூட்டத்தில் எடுக்கப்படவிருக்கும் மிக முக்கியமான முடிவை எவ்வாறு அறிந்து கொள்வது என்று ஆதித்தன் யோசித்தான்.

விக்கியண்ணன் சொன்னான்: ''இளவரசே! நீங்கள் இங்கேயே இருங்கள். நான் கூட்டம் நடக்குமிடம் சென்று விவரம் அறிந்து வருகிறேன். ஒருவேளை அபராஜிதன் உங்களைக் கண்டால் அடையாளம் தெரிந்து கொள்வார். என்னை அவருக்குத் தெரியாது.''

''விக்கியண்ணா! மிக எச்சரிக்கை தேவை. மூலபத்திரன் தாக்கப்பட்ட சம்பவத்திலிருந்து பல்லவ வீரர்கள் எச்சரிக்கை அடைந்துவிட்டனர்'' என்று ஆதித்தன் கூறினான்.

''இளவரசே! நீங்கள் கவலைப்படாதீர்கள். கூட்டம் முடிவடைந்தவுடன் விரைந்து வந்துவிடுவேன். நாம் உடனே காஞ்சிக்குப் புறப்பட்டாக வேண்டும்'' என்று கூறி கோட்டத் தலைவர்களின் கூட்டம் நடக்குமிடம் நோக்கிச் சென்றான் விக்கியண்ணன்.

திருத்தணிகையிலிருந்து காஞ்சி செல்லும் பாட்டையில், ஆதித்தனும், விக்கியண்ணனும் நடந்து சென்று கொண்டிருந்தனர்.

''போர் ஒன்று நடக்கப் போவது என்று உறுதியாகி விட்டதல்லவா?'' என்று கேட்டான் ஆதித்தன்.



விக்கியண்ணன் சிந்தனை வேறு எங்கோ இருந்தது. அதனால் உடனே அவன் மறுமொழி கூறவில்லை.

''என்ன விக்கியண்ணா! பேச்சையே காணவில்லை. ஊர் நினைவு வந்துவிட்டதா?'' என்று ஆதித்தன் கேட்டான்.

''ஆம்...'' என்று விக்கியண்ணன் கூறியவுடன் ஆதித்தன் திடுக்கிட்டான்.

''ஊர் நினைவா? அப்படியென்றால் காஞ்சியுடன் பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பப் போகிறாய் என்று சொல்லு'' என்று ஆதித்தன், விக்கியண்ணனை நோக்கிக் கேட்டான்.

''ஊர் நினைவு என்றவுடன் ஊர் திரும்ப வேண்டும் என்ற கட்டாயமா? போர் என்றவுடன் தலைநகரத்து நினைவு வந்தது. அவ்வளவுதான்'' என்றான் விக்கியண்ணன். மேலும் தொடர்ந்து, ''இளவரசே! அபராஜிதன் படை திரட்டுகிறான் என்றால் கோட்டத் தலைவர்கள் மிக வேகமாக இயங்குவார்கள்'' என்று கூறிப் பாதியிலேயே பேச்சை நிறுத்தினான்.

''அவர்கள் வேகமாக இயங்கட்டுமே'' என்றான் ஆதித்தன் அலட்சியமாக.

''கொங்கு நாட்டின் மீது படையெடுக்கச் சிறுபடை போதும். ஏராளமான படை வீரர்களைக் கொண்டு வேறு என்ன செய்வார்கள்?'' என்று விக்கியண்ணன் கேட்டான்.

''அதைப்பற்றி நமக்கென்ன கவலை? அபராஜிதன் படைகளை ஒருங்கு சேர்ப்பதற்குள் நாம் தஞ்சைசென்று விடுவோம்... இன்னும் நாம் பார்க்க வேண்டிய இடங்கள் நான்குதான்'' என்றான் ஆதித்தன்.

''நான்கு இடங்கள் மட்டுமா? மீன்விழியாள் சொல்லிய பட்டியலைப் பார்த்தால் நூற்றுக்கணக்கான ஊர்கள் இருக்கும் போலிருக்கிறதே'' என்று வியப்புடன் கேட்டான் விக்கியண்ணன்.

''அப்படியா?'' என்று விக்கியண்ணனைக் கூர்ந்து நோக்கிய ஆதித்தன், ''மீன்விழியாளை நீ சந்தித்தாயா? அதற்குள் திருத்தணிகைக்கு வந்துவிட்டாளா? சிற்பியும் வந்துவிட்டாரா?'' என்று கேட்டான்.

விக்கியண்ணன் திடுக்கிட்டான். கூடவே வியப்பும் மிகுந்திருந்தது பேச்சில்.

"என்ன சொல்கிறீர்கள் இளவரசே? மீன்விழியைத் தாங்கள் சந்திக்கவில்லையா?" என்று கேட்டான். ஆதித்தன் ஏதும் பேசாமல் விக்கியண்ணனைப் பார்த்தான்.

"கனவு கண்டாயா? மீன்விழி கனவில் வந்தாளா?" என்று புன்சிரிப்புடன் ஆதித்தன் கேட்டான்.

"கனவா? நீங்கள் பேசுவதுதான் கனவுபோல் தோன்றுகிறது. மீன்விழி உங்களைச் சந்தித்த பிறகுதான் இன்று என்னைச் சந்தித்திருக்கிறாள். உங்களுடன் பேசிக் கொண்டிருந்ததாகக் கூறினாள்" விக்கியண்ணன் கூறவும், ஆதித்தன் திடுக்கிட்டான்.

"என்ன சொல்லுகிறாய் விக்கியண்ணா?"

"ஆமாம், இளவரசே! மயிலழகு தங்கியிருந்த சத்திரத்திற் கருகே மீன்விழியாளைச் சந்தித்தேன்."

"கோட்டத் தலைவர்கள் கூடிப் பேசிய இடத்திற்குச் சென்று வந்த பிறகா, அதற்கு முன்பா?"

"சென்றுவந்த பிறகுதான். அதற்கு முன்பு நான் எப்படிச் சந்தித்திருக்க முடியும்? நீங்களும் நானும் ஒன்றாகத்தானே புறப்பட்டோம். நீங்கள் மலைமீது சென்று முருகபிரானைக் கும்பிட்டுவிட்டு, மண்டபத்தில் காத்திருப்பதாகக் கூறினீர்கள்."

"ஆமாம், அதுபோல், சாமி கும்பிட்டுவிட்டு உடனே மண்டபத்திற்கு வந்துவிட்டேன். நீயும் வந்துவிட்டாய்."

"வரும் வழியில், மயிலழகு தங்கியிருந்த வீட்டிற்கருகே மீன்விழியாளைச் சந்தித்தேன்..."

"உம்... சொல்லு, சொல்லு. சுவாரசியமாக இருக்கும் போல் இருக்கிறது."

"சுவாரசியமா? எனக்கு இப்போது கவலையாக இருக்கிறது. மீன்விழி மிகவும் சாமர்த்தியசாலி என்று தோன்றுகிறது" என்று விக்கியண்ணன் கூறியபோது, அவன் முகத்தில் கவலைக் கோடுகள் பதிந்தன.

"மீன்விழியின் சாதுர்யத்தை, சாமர்த்தியத்தைச் சத்திரத்தில் நேற்று நாம் காணவில்லையா? அதற்குப் பிறகு நான் அவளைச் சந்தித்து அவளுடைய குணாதிசயங்களை அறிந்து கொண் டேன்" என்றான் ஆதித்தன்.

"ஆமாம். சொன்னீர்களே. சிற்பியின் மகளாக இருக்கும் அவள் ராஜ்ய விவகாரங்களில் வல்லவளாக இருக்கிறாள்" என்றான் விக்கியண்ணன்.

"அவளுடைய தயவு நமக்கு வேண்டும் விக்கியண்ணா! என் கனவு மட்டும் நிறைவேறுமானால் சோழநாட்டைக் கலைப் பூமியாக ஆக்கிவிடுவேன். அதற்குச் சிற்பம், நடனம், இசை அறிந்தவர்களின் ஒத்துழைப்பு வேண்டும். நடன மங்கையைத் தஞ்சைக்கு வருமாறு செய்துவிட்டேன். சிற்பியின் மகள் வரவேண்டும்" என்றான் ஆதித்தன்.

"நீங்கள் இன்று அவளைச் சந்தித்து, காஞ்சியில் சந்திப்பதாகக் கூறினீர்களாம்" - விக்கியண்ணன் இவ்வாறு கூறவும் ஆதித்தன் சற்று நின்று விக்கியண்ணனை நோக்கினான்.

"காஞ்சிக்குத்தானே நாம் செல்கிறோம்? மீன்விழிக்கு எப்படித் தெரிந்தது?" - ஆதித்தன் கேட்டான்.

"நீங்கள் கூறியதாக அவள் சொன்னாள்."

"இன்னும் என்ன சொன்னாள்?"

"அவளுடைய சகோதரியை நம்பக் கூடாதாம். அவள் பல்லவ அரசருக்கு மிக நம்பிக்கை வாய்ந்தவளாம்."

"ஒகோ! மயிலழகை நாம் சந்தித்ததையும், அவளைக் காஞ்சியில் சந்திக்கப் போவதையும் நீ சொன்னாயா?"

"நான் சொல்லவில்லை..."

"ஆனால், அவள் உன்னைச் சொல்ல வைத்துவிட்டாள். அப்படித்தானே?"

"மீன்விழி மிகவும் சாதுர்யம் மிகுந்தவள். அவள் இனிமையாகப் பேசினாள். தேன் சுவை கலந்து பேசினாள். சோழ நாட்டிற்கு, நான் வரப்போகும் நாளை ஆவலுடன் எதிர்பார்ப்பதாகக் கூறினாள்" என்று விக்கியண்ணன் கூறிச் சற்று நிறுத்தினான்.

"விக்கியண்ணா! பேச்சில் மிக வல்லவன் என்று உன்னை நான் எண்ணியிருந்தேன். உன்னையும் வெல்லக்கூடியவள் ஒருத்தியுமிருக்கிறாள் என்பதை இப்போது தெரிந்து கொண்டேன்" என்று கூறி ஆதித்தன் சிரித்தான்.

விக்கியண்ணன் திகைத்தான். "என்ன சொல்கிறாய் இளவரசே?"

01 09 201

''உன் வாய்மொழியாகப் பல செய்திகளை அறிந்து கொண்டிருப்பாள். அப்படித்தானே?''

''உங்களுடன் நீண்ட நேரம் பேசியதாக அவள் சொன்னாள்.''

''உன்னை ஏமாற்றிவிட்டாள். நல்லவேளை, நமது உண்மைத் தோற்றத்தைப் புலப்படுத்தி விடவில்லையே? அதையும் நானே சொல்லியிருப்பதாக அவள் கற்பனையில் கூறி உன்னை மயக்கி விட்டாளா?'' ஆதித்தன் இவ்வாறு கேட்டதும் விக்கியண்ணன் தலையைக் குனிந்து கொண்டான்.

ஆதித்தன் பரபரப்புடன், ''விக்கியண்ணா! என்ன நேர்ந்தது? உடனே சொல்லு'' என்றான்.

''இளவரசே! மீன்விழியிடம் ஏதோ ஒரு விதக் காந்த சக்தியிருக்கிறது. அவளைப் பார்ப்பவர்கள் அவளுக்கு வணக்கம் தெரிவிக்கிறார்கள். நலன் விசாரிக்கிறார்கள். பல்லவ நாட்டில் மிகப் பிரபலமானவள் என்று தெரிகிறது. அவளைப்போன்ற பல கலை அறிந்த திறமைசாலி நம் நாட்டிற்குத் தேவை'' என்று விக்கியண்ணன் சொன்னான். சிறிது உற்சாகமிருந்தது அவன் குரலில்.

''அப்படியென்றால் அவளுக்கு முக்கியமான பதவி தருவதாக வாக்களித்துவிட்டாயா? சோழநாட்டில் புத்திசாலிகளே இல்லை என்பது உன் அபிப்பிராயமோ?'' ஆதித்தன் சற்றுக் கடுமையான குரலில் கேட்டான்.

''சோழ நாட்டிற்கு அவள் சேவை தேவையில்லை என்றால், கங்க நாட்டிற்கு அழைத்துச் செல்கிறேன்'' என்றான் விக்கியண்ணன்.

''ஓகோ! அதனால்தான் ஊர் நினைவு வந்துவிட்டதாகக் கூறினாயோ? மீன்விழியைக் கங்க நாட்டிற்கு அழைத்துச் சென்று, அவளுடைய சேவையைப் பயன்படுத்தி கலைமணம் கமழும் நாடாக்கத் திட்டமிட்டிருக்கிறாய். அப்படித்தானே?'' ஆதித்தன் குரலில் கேலியும் சற்றுக் கோபமும் இருந்தன. விக்கியண்ணன் ஒன்றும் மறுமொழி கூறவில்லை.

''மீன்விழியாள் சிற்பியின் மகள். அரசியல் கலையறிந்தவள். பேச்சில் வல்லவள். அழகி. அதனால் அவளை நாட்டுச் சேவைக்கு மட்டுமா வைத்துக் கொள்ளப்போகிறாய்?'' என்று ஆதித்தன் கேட்டான்.

○

## 22. வேல்விழிகள் - எச்சரிக்கை!

''இளவரசே!'' என்று பரபரப்புடன் அவர் பக்கம் திரும்பிய விக்கியண்ணன், ''மீன்விழியாளிடம் ஒரு தனிக்காந்த சக்தி இருக்கிறது என்பதை மறுக்க முடியாது. நீங்களும் அதில் விதிவிலக்கல்லர் என்பதும் எனக்குத் தெரியும். உங்களுடன் இளம் வயது முதல் பழகிய எனக்குத் தெரியாதா உங்கள் இதயம்? சோழநாட்டில் இல்லாத சிற்பியா? மீன்விழியாளை வரவழைக்க வேண்டும் என்பதற்காகத்தானே, சிற்பத்தைப் பற்றிப் பேசுகிறீர்கள்? மீன்விழி, மயிலழகு இருவரையும் சோழநாட்டிற்கு அழைத்துச் சென்றுதான் ஆகவேண்டுமா?'' என்று விக்கியண்ணன் கேட்டான்.

ஆதித்தன் மௌனமாகவே நடந்தான். ''விக்கியண்ணா! என் மனமும் சஞ்சலப்படுவது உண்மைதான். ஆனால் நீ நினைப்பது போல் அழகிகளைக் கண்டு நான் மயங்க மாட்டேன். அவர்களுடைய கலை மீதுதான் எனக்குக் காதல்'' என்றான்.

''சரி, இளவரசியிடம் எந்தக் கலையைக் கண்டீர்கள்?'' என்று விக்கியண்ணன் கேட்டான்.

ஆதித்தன் மெல்லப் புன்முறுவல் பூத்தான்.

''விக்கியண்ணா! மறந்துவிடாதே. நாம் காஞ்சி இளவரசியின் மாளிகையை உடனே தேடிக் கண்டுபிடித்தாக வேண்டும்'' என்றான்.

''அது ஒன்றும் கடினமான காரியமன்று'' என்றான் விக்கியண்ணன்.

''எப்படித் தெரியும் உனக்கு?'' என்று கேட்டான் ஆதித்தன்.

''மீன்விழியாளை முதலில் சந்திக்கப் போகிறோம். அவளைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்...'' என்று விக்கியண்ணன் கூறியவுடன் ஆதித்தன் முகம் மாறியது.

''இளவரசியைச் சந்திக்கும் [illegible] மீன்விழியிடமோ மயிலழகியிடமோ நாம் சொல்லக் கூடாது.



01 09 20

மேலும் இதுவரையில் பல்லவ நாட்டில் சர்வ சுதந்திரத்துடன் நடமாடியதுபோல் நாம் காஞ்சியில் உலவ முடியாது. நமது பணிகளை மிக விரைவாக முடித்துக் கொள்ள வேண்டும்...'' என்றான் ஆதித்தன் கடுமையான குரலில்.

''எனக்குத் தெரிந்தவரையில் நாம் யாரையும் சந்திக்கவே வேண்டாம். நேரே தஞ்சைக்குச் சென்றுவிடுவோம். பல்லவக் கலைச் செல்வங்களைக் கண்டுதான் சோழநாட்டில் கலையை வளர்க்க வேண்டுமா?'' என்றான் விக்கியண்ணன். அவன் வழக்கம்போல் சாதாரணக் குரலில்தான் பேசினான். ஆனால் அவன் ஏதோ கோபங்கொண்டு விட்டது போல் தோன்றியது.

''விக்கியண்ணா, கோபமா உனக்கு? நீ சொல்வதிலும் நியாயமிருக்கிறது என்றாலும் மீன்விழியையும், மயிலழகியையும், இளவரசியையும் நாம் காஞ்சியில் சந்திப்பதாகக் கூறியுள்ளோம். காஞ்சியினின்று அவர்களைத் தஞ்சைக்கு அழைத்துச் சென்று விடுவது என்பது என் திட்டம்...'' என்றான் ஆதித்தன் சமாதானப்படுத்துவது போல்.

''இளவரசியையுமா தஞ்சைக்கு அழைத்துச் சென்றுவிடப் போகிறீர்கள்?'' என்று விக்கியண்ணன் கேட்டவுடன் ஆதித்தன் முகம் மாறியது. சிறிது நேரம் மௌனமாக இருந்தான்.

பிறகு, விக்கியண்ணனை நோக்கி, ''விக்கியண்ணா! உன்னிடம் அந்தரங்கம் எதையும் நான் மறைத்ததில்லை. ஒரே கணம்தான் நான் நடுவழியில் இளவரசியைக் கண்டேன். அதுமுதல் என் இதயத்தில் பதிந்துவிட்ட அந்த முகத்தை மறக்க முடியவில்லை'' என்றான்.

''நான் எதிர்பார்த்ததுதான். மீன்விழியாளைவிட, மயிலழகியைவிட, இளவரசி அவ்வளவு அழகா?'' என்று விக்கியண்ணன் கேட்டான்.

''ஏன், தஞ்சையில் எனதருமை இளங்கோ பிச்சியைவிட, பல்லவ இளவரசி அழகி என்று சொல்லமாட்டேன். ஆனால், அழகு மட்டும்தான் இதய ஒற்றுமையை வளர்க்குமென்று சொல்லிவிட முடியாது. மீன்விழியும், மயிலழகும் என்னைக் கவர்ந்துவிடவில்லை...'' என்றான் ஆதித்தன்.

விக்கியண்ணன் ஏதும் பேசவில்லை. பிறகு ''இளவரசே! நீங்கள் தீவிரமாக யோசித்து ஒரு நல்ல முடிவுக்கு வர வேண்டும். பல்லவ இளவரசியை நீங்கள் விரும்புவது ஒரு ராஜீய பிரச்சனையாகிவிடும். உங்கள் தந்தை சம்மதிப்பாரா? தேவி இளங்கோ பிச்சி அறிந்தால் வருத்தப்பட மாட்டார்களா? மந்திரி



மண்டலத்தார் ஒப்புக் கொள்வார்களா?'' என்று கேள்விமேல் கேள்வி கேட்டான். பிறகு சற்று அழுத்தமான குரலில், ''இளவரசர் அவர்களே! பல்லவ இளவரசியை நீங்கள் விரும்புவதால், பல்லவ அரசர் அபராஜிதவர்மனின் விரோதம் நமக்கு ஏற்படக்கூடுமென்று நான் அஞ்சுகிறேன்'' என்றான்.

''ஓ!'' என்று பலமாக நகைத்த ஆதித்தன், ''அபராஜித வர்மனின் ஆத்திரத்தைத் தூண்டிவிட வேண்டும் என்பதே என் கனவு. அந்தக் கனவு நிறைவேறட்டும் விக்கியண்ணா! அபராஜிதனின் வாளுக்கு நீ பயப்படுகிறாயா?'' என்று கேட்டான்.

''இல்லை, இல்லை. நான் அஞ்சவில்லை. சோழநாட்டை எதிர்த்துவரும் எவருக்கும் நான் எந்த வகையிலும் அஞ்சவில்லை. உங்கள் கனவு நிறைவேறட்டும். விரைவில் நிறைவேறட்டும். அதற்காகவே உடனே இளவரசியைச் சந்திப்போம்'' என்று சூளுரைத்தான் விக்கியண்ணன்.

காஞ்சியை நெருங்கிக் கொண்டிருந்தபோது விக்கியண்ணனும், ஆதித்தனும் ஏரிக்கரையில் சற்று இளைப்பாற விரும்பினர். வழியில் வயிற்றுக்கு வேண்டியவை கிடைத்துக் கொண்டிருந்தன. வயல்களில் கதிர்கள் முற்றி அறுவடைக்கு ஏற்றவையாய்த் தலைவணங்கி நின்றன. மாலை மஞ்சள் வெயில் அவற்றின் மீது தவழ்ந்து, நெல்மணிகளின் அழகை அதிகப் படுத்திக் கொண்டிருந்தன.

''சோழ நாட்டிற்குப் பொன்னித்தாய் சோறு போடுகிறாள். தொண்டை நாட்டில் ஆறுகள் அதிகமில்லாமலே செழிப்புடன் விளங்குகின்றன பார்த்தீர்களா, இளவரசே'' என்று ஏரி நீரைப் பார்த்தவாறு சொன்னான் விக்கியண்ணன்.

''நானும் கவனித்தேன். ஆங்காங்கே ஏரிகளும் குளங்களும் தொண்டை நாட்டின் தேவையைக் கவனித்துக் கொள்கின்றன. மழை பெய்யும்போது, அந்தத் தண்ணீரைத் தேக்கி வைப்பதற்காக முன் யோசனையுடன் தடாகங்களை அமைத்திருக்கிறார்கள்'' என்று ஆதித்தன் பெருமூச்சு விட்டவாறு கூறினான்.

''மகேந்திர பல்லவனும் நந்திவர்மனும் வைரமேகனும், பல்லவ நாட்டில் திட்டமிட்டுத் தடாகங்களையும் பேரேரிகளையும் அமைத்தார்களாம்'' என்றான் விக்கியண்ணன்.

ஆதித்தன் திரும்பிப் பார்த்தான். ''உனக்கு யார் சொன்னது? மீன் விழியாள்தானே?'' என்று கேட்டான் சற்று கோபத்துடன்.



01 09 2

விக்கியண்ணன் கலகலவென்று சிரித்தான். ''இளவரசர் கோபப்படுகிறாரா அல்லது பொறாமைப்படுகிறாரா என்று என்னால் முடிவுக்கு வரமுடியவில்லை. மீன்விழிதான் சொன்னாள்.''

''அப்படியென்றால் நீண்ட நேரம் இருவரும் பேசிக் கொண்டிருந்திருக்கிறீர்கள் என்பது தெரிகிறது. அப்படித் தானே?'' என்று ஆதித்தன் கேட்டான்.

''ஆமாம். நான்தான் பேச்சுக் கொடுத்து பல செய்திகளை அறிந்தேன். மீன்விழி செல்வாக்கு மிக்கவள் என்பதுடன், பல்லவ நாட்டு ரகசியங்கள் பல அறிந்தவள் என்பதையும் தெரிந்து கொண்டேன். அது என் தவறு என்று சொல்கிறீர்களா இளவரசே!'' என்று விக்கியண்ணன் கேட்டான்.

ஆதித்தன் உடனே மறுமொழி ஏதும் கூறவில்லை. பெருமூச்சொன்று அவனிடமிருந்து வெளிப்பட்டது. இதயத்து உணர்ச்சியை அது பிரதிபலிப்பதாக இருந்தது. விக்கியண்ணன் இளவரசர் முகத்திலிருந்து, உள்ளத்தை உணர முயன்றான், முடியவில்லை.

''சரி, புறப்படுவோம். பொழுது சாயுமுன்பு காஞ்சியை அடைந்துவிடுவோம்'' என்று ஆதித்தன் கூறினான்.

தொலைவிலிருந்தே காஞ்சியின் மதிற்சுவர்கள், மங்கிய வெளிச்சத்தில் கோடுகள் போல் புலப்பட்டன. மதிலின் நீளம் கண்ணுக்கெட்டிய தொலைவு வரையில் தென்பட்டது.

ஆதித்தனுக்குப் பிரமிப்பே ஏற்பட்டுவிட்டது. மயிலைப் போன்ற வடிவுடையதாயிருக்குமாம் காஞ்சி நகரம் என்று அவன் கேள்விப்பட்டிருக்கிறான். நான்கு திக்குகளிலும் நுழைவாயில்கள் இருக்கும் என்றும் கூறியிருக்கிறார்கள்.

கோட்டைக்கு வெளியே கடல் போன்ற பெரிய ஏரியிருக்கு மென்றும் கேள்விப்பட்டிருந்தான். அந்த ஏரியைத்தான் இப்போது கண்டான்.

கோட்டையை நெருங்க நெருங்க ஆதித்தனிடம் பரபரப்பு மிகுந்தது. ஏதோ முன்பிறவியில் விட்ட குறையான நகர மொன்றை இந்தப் பிறவியில் காண்பது போன்ற ஆர்வம் அவனுள்ளத்தில் எழுந்தது.

கோட்டையைச் சுற்றி பெரும் அகழியிருந்தது. அகழியில் நீர் தளும்பி நின்றது. கோட்டைக் கதவுகள் திறந்து தானிருந்தன.

கோட்டையின் மீது நந்திக்கொடி கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது.



மதிலின் அகல உயரத்தையும் ஒருமுறை நிமிர்ந்து நோக்கினான் ஆதித்தன். கோட்டையின் பரிமாணத்தையும் உறுதியையும் மனத்திற்குள்ளே பதிய வைத்துக் கொண்ட ஆதித்தன் விக்கியண்ணனை நோக்கி, ''காஞ்சிக் கோட்டையைப் பார்க்கும்போது, தஞ்சைக் கோட்டை விளையாட்டுப் பொம்மையைப் போல் எனக்குத் தோன்றுகிறது. தஞ்சைக் கோட்டையின் மதிலை இதுபோன்று அகலமாகக் கட்ட வேண்டும்'' என்றான்.

''இளவரசே! காஞ்சியின் வரலாற்றுப் பெருமை என்ன! பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே கட்டப்பட்ட கோட்டையைப் பல்லவ மன்னர்கள் ஒவ்வொருவரும் விரிவுபடுத்தி யிருக்கிறார்கள். காஞ்சியுடன் தஞ்சையை ஒப்பிடக்கூடாது. இழந்த பெருமையை இப்போதுதான் நீங்கள் சிறிது சிறிதாக நிலைநாட்டி வருகிறீர்கள். மேலும்...'' என்றான் விக்கியண்ணன் சமாதானப்படுத்தும் வகையில்.

''மேலும்... சொல்லு விக்கியண்ணா...! உனக்குப் பழைய வரலாறு தெரியுமா? காஞ்சிக்கோட்டை, சோழ மூதாதையர் களுடையது. அவர்கள்தாம் காஞ்சியை உருவாக்கினார்கள். பல்லவர்கள் காஞ்சியை அபகரித்துக் கொண்டனர்... உம், நீ சொல்ல வந்ததைச் சொல்லு'' என்றான்.

''காஞ்சிக் கோட்டையின் மதில், கருங்கற்களால் உறுதியாகக் கட்டப்பட்டிருக்கிறது. பல்லவ நாட்டில் பாறைகளுக்குப் பஞ்சமில்லை. மலையே இல்லாத சோழ நாட்டில் கருங்கற்களால் கோட்டை கட்டுவது இவ்வளவு எளிதல்லவே'' என்றான் விக்கியண்ணன்.

''ஏன் கட்ட முடியாது? நான் இப்போதே உறுதியாகச் சொல்கிறேன். பல காத தொலைவு சென்றாவது பாறைகளை வெட்டிக் கொண்டு வருவேன். கருங்கற்களைக் கொண்டே தஞ்சைக் கோட்டையைக் கட்டுவேன். கோயில் ஒன்றை முழுவதும் கற்களாலேயே கட்டுவேன்'' என்று கூறும்போது, அவனுடைய இயற்கையான கம்பீரம் முகத்தில் மேலும் அதிகமாக விளங்கியது.

இளவரசரின் உறுதியை விக்கியண்ணன் முன்பே அறிவான். ஆதித்தன் தான் காணும் கனவை எவ்வித இடையூறுகளையும் வென்று நனவாக்கிவிடுவான் என்பதும் அவனுக்குத் தெரியும். சோழ கலைச் சிறப்பைக் காண வேண்டும். அதுபோல் சோழ நாட்டிலும் கலைப் பெருமையை நிலைநாட்ட வேண்டும் என்பதற்காகத்தானே இளவரசர் துணிந்து [illegible]

வந்துள்ளார் என்பதும் அவனறியாததா? அதற்காகத்தானே சிற்பியின் மகளைச் சந்தித்துத் தஞ்சைக்கு வருமாறு அழைத்தார் என்பது விக்கியண்ணனுக்குத் தெரியாததா?

''இளவரசே! தஞ்சையில் நீங்கள் நிறைவேற்ற நினைக்கும் எல்லாப் பணிகளுக்கும் நான் துணையாக இருப்பேன். தஞ்சைக் கோட்டைக்கு வேண்டிய பாறைகளை கங்க நாட்டினின்று அனுப்புகிறேன். ஒரு மலையையே வெட்டியனுப்புகிறேன் இளவரசே!'' என்று விக்கியண்ணன் உற்சாகத்துடன் பேசினான்.

ஆதித்தன், விக்கியண்ணனின் தோள் மீது தன் கரத்தைப் போட்டுக் கொண்டு, ''விக்கியண்ணா! நீ இருக்கும்போது எனக்கென்ன கவலை?'' என்றான்.

கோட்டைக்கு வெளியே நின்று பேசிக்கொண்டிருக்கும் போதே, முரசொலி கேட்டது. குதிரைகள் வரும் குளம்படி ஓசை கேட்டது.

நந்திக்கொடி பிடித்த வீரர்கள் குதிரை மீதமர்ந்து வந்து கொண்டிருந்தனர்.

கோட்டைக்கு உள்ளேயும், வெளியேயும் செல்லுபவர்கள் பாதை ஓரமாக ஒதுங்கி நின்றனர். விக்கியண்ணன் பரபரப்புடன், ''இளவரசே! அபராஜிதன் வருகிறார் எனத் தோன்றுகிறது. நாம் இங்கே நிற்பது கூடாது'' என்றான்.

அபராஜிதன் வருகையைக் காண மக்கள் அகழி அருகிலும், பாதையின் ஓரமாகவும் நின்றனர். விக்கியண்ணனும், ஆதித்தனும் மரத்தின் ஓரமாகச் சென்று சற்று மறைவாக நின்றனர்.

குதிரைகள் சென்றன. கடைசியாக வெண் புரவியொன்றின் மீதுபல்லவச் சக்கரவர்த்தி அபராஜிதன் கம்பீரமாக அமர்ந்து சென்றார்.

அவரைத் தொடர்ந்து அத்திரிபூட்டி இழுத்து வந்த வண்டிகளில் பல பெட்டிகள் இருந்தன. அவற்றில் தங்கப் பாளங்கள் இருந்தன. காஞ்சியிலுள்ள பொற்கொல்லர்கள் தங்கத்தாலான பொற்பூவை உருவாக்கப் போகிறார்கள்.

ஆதித்தன் விக்கியண்ணனைப் பொருள் நிறைந்த பார்வையுடன் நோக்கினான். விக்கியண்ணனும் தலையை அசைத்தான்.

மக்கள் கூட்டம் கலைந்தது. விக்கியண்ணனும் ஆதித்தனும் கோட்டைக்குள் நுழைந்தனர்.



கதிரவன் மேல் திசையில் மறைந்தான். எங்கும் இருள் சூழ்ந்தது. காஞ்சி நகரத்து வீதிகளின் மூலைகளிலுள்ள கருங்கல் கம்பங்களில் அமைந்த சுளுந்துகள் ஏற்றப்பட்டன. வீடுகளின் வாயிற்புறத்தில் அகல் விளக்குகள் ஏற்றப்பட்டன.

''இரவு தங்குவதற்கேற்ற இடத்தை நாம் முதலில் தேடிக் கொள்வோம்...'' என்றான் ஆதித்தன்.

''கயிலாயநாதர் ஆலயத்திற்கருகே சந்திக்குமாறு மீன்விழியாள் சொல்லியிருந்தாள்...'' என்றான் விக்கியண்ணன்.

''இப்போதே போக வேண்டுமா? அதற்குள் காஞ்சிக்கு வந்திருக்க மாட்டாள். நீ வேண்டுமானால் இப்போதே சென்று கோயில் வாசலில் படுத்துக்கொள்'' என்று சற்று நகைச் சுவையுடன் கூறினாலும் அதில் சற்றுக் கடுமையும் இருந்தது.

''இளவரசே! நீங்கள் இளவரசியைச் சந்திக்கச் சென்று விட்டால்... சிற்பியின் மகளை மறந்து விடுவீர்களல்லவா, அதனால்தான் முன் எச்சரிக்கையுடன் கூறினேன்'' என்றான் விக்கியண்ணன் நகைத்தவாறு, ஆதித்தன் சிரித்தான்.

''எனக்கொன்று தோன்றுகிறது, நாளைக்கு நாம் இருவரும் தனித்தனியே பிரிந்து விடுவோம். நீ மீன்விழியைச் சந்திக்கச் செல். நான் இளவரசியைச் சந்திக்க முயல்கிறேன். இருவரும் ஒரு வாரம் கழித்து எங்கே சந்திப்பது என்று நாளைக்கு முடிவு செய்து கொள்வோம்'' என்றான்.

விக்கியண்ணன் தலையை இருபுறமும் அசைத்தான். ''கூடாது... கூடாது இளவரசே! உங்களை நான் தனியே விட்டுச் செல்ல மாட்டேன்'' என்றான்.

''நான் விவரமறியாத சின்னஞ் சிறியவன் என்பது உன் அபிப்பிராயமா?'' ஆதித்தன் கடுமையாகக் கேட்டான்.

''அப்படி நீங்கள் நினைக்கக் கூடாது. நாம் இப்போது பல்லவ தலைநகரத்திலிருக்கிறோம். பல்லவ ஒற்றர்கள் திறமைசாலிகள். நம்மை அவர்கள் எளிதில் கண்டுவிட்டால்...'' விக்கியண்ணன் குரலிலும் சற்று அழுத்தமிருந்தது.

''நாம் திறமையற்றவர்களா? கடந்த ஒரு மாதமாக பல்லவ நாட்டில் சுற்றுகிறோம். ஒற்றர்களுக்கு இதுவரையில் தெரிந்திருக்காதா?'' ஆதித்தன் கேட்டான்.

○



01 09 20

## 23. ''நான் வருகிறேன் சோழ நாட்டிற்கு...''

''இதற்கு முன்பு தெரிந்திராவிடில் எப்போதும் தெரிய வராது என்று முடிவு செய்துவிட முடியுமா?'' விக்கியண்ணன் கூறினான். பிறகு, ''பல்லவத் தளபதி ஒருவன் படுகாய முற்றிருக்கிறான். பல்லவ ஒற்றர்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டிருக்கும். அயலூர்க்காரர்களை அவர்கள் கண்காணிப்பர்'' என்றான்.

ஆதித்தன் மௌனமாயிருந்தான். பிறகு, ''சரி! உன்து யோசனை என்ன?'' என்று கேட்டான்.

''உங்களை விட்டுப் பிரிய நான் விரும்பவில்லை.''

''மீன்விழியாளைச் சந்திக்கும்போது கூடவா?''

விக்கியண்ணன் மெல்லச் சிரித்தான்.

''இளவரசே! மீன்விழியாளிடம் எனக்கென்ன தனியே பேச்சிருக்கிறது? அவளிடமிருந்து சில இரகசியங்களை அறிய விரும்புகிறேன்.''

''அவள் உன்னிடமிருந்து அறிந்துவிட்டால்...''

''விக்கியண்ணன் வெல்கிறானா, அல்லது மீன்விழி வெல்கிறாளா பார்ப்போம்! மீன்விழியிடமிருந்து சகல செய்திகளையும் அறிந்து அவளையும் தஞ்சைக்கு வருமாறு செய்துவிடுகிறேன் பாருங்கள்'' என்றான் விக்கியண்ணன்.

''மயிலழகும் காஞ்சிக்கு வருகிறாள். மீன்விழியும், மயிலழகும் ஒன்றுபட்ட கருத்துடையவர்களாயில்லை.''

''மீன்விழியாள் கயிலாயநாதர் ஆலயத்தருகில் தானே உன்னைச் சந்திப்பதாகச் சொல்லியிருக்கிறாள்?'' என்று ஆதித்தன் கேட்டவுடன் விக்கியண்ணன் விரைவாய்த் துள்ளியெழுந்தான்.

''ஆமாம், அங்குதானே நாம் போகப் போகிறோம்?'' என்று பரபரப்புடன் கேட்டான்.



''ஆமாம்! அவளைச் சந்திப்பதற்கு முன்பு குளத்தில் துணிகளைத் துவைத்துச் சிறிது நேரம் காயவைத்துப் பளிச்சென்றாவது உடுத்திக் கொள்ள வேண்டாமா? அதற்காகத்தான் நான் உன் உறக்கத்தைக் கலைத்தேன்'' என்றான் ஆதித்தன்.

விக்கியண்ணன் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து, ''சரி, போவோம்'' என்றான்.

கயிலாயநாதர் ஆலயத்தை நெருங்கும்போது ஆதித்தன், ''ஆகா'' என்று வாய்விட்டுக் கூவிவிட்டான்.

''என்ன இளவரசே?'' என்று விக்கியண்ணன் கேட்டான்.

''அதோ தெரிகிறதே, அந்த விமானத்தைப் பார். எவ்வளவு புதுமையாக இருக்கிறது. இதுபோன்ற கோயில் விமானத்தை நான் பார்த்ததேயில்லை. கயிலாயநாதர் ஆலயத்தைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த ஆலய அமைப்பு மிக நூதனமானது என்று சொல்லியிருக்கிறார்கள். கோயிலுக்குள்ளே உள்ள திருச்சுற்றில் அழகிய சித்திரங்கள் தீட்டப்பட்டிருக்கின்றனவாம். சிவபெருமானது நடனத் தோற்றங்கள் கம்பீரமாக சிற்ப வடிவில் செதுக்கப்பட்டிருக்கின்றனவாம். கயிலாயநாதர் ஆலயத்தை எப்போது காண்போம் என்று துடித்துக் கொண்டிருந்தேன். அந்த நாள் என்று வரும் என்று நான் கனவு கண்டு கொண்டிருந்தேன். என் கனவு பலித்துவிட்டது'' என்று ஆர்வத்துடனும், உணர்ச்சி வயப்பட்டும் கூறினான் ஆதித்தன் ஆலய விமானத்தைப் பார்த்தவாறு பேசினான்.

''உங்கள் கனவு பலிக்கவில்லை'' என்றான் விக்கியண்ணன்.

''என்ன சொல்கிறாய் விக்கியண்ணா?'' என்று ஆவலுடன் கேட்டான் ஆதித்தன்.

''உங்கள் கனவு பலிக்கவில்லை என்று சொல்கிறேன். கயிலாயநாதர் ஆலயத்தைக் காண்பது மட்டும்தான் உங்கள் கனவா? அதைப்போன்ற ஆலயத்தைத் தஞ்சையில் கட்ட வேண்டும் என்பது உங்கள் கனவல்லவா?'' என்று விக்கியண்ணன் கூறியபோது ஆதித்தன் அவன் முதுகைத்தட்டி, ''விக்கியண்ணா! எனது கனவு மட்டுமன்று, எனது இலட்சியமும் அதுதான். பல்லவநாட்டைப் போல சிற்பங்கள் நிறைந்த கோயில்களைச் சோழ நாடெங்கும் நிறையக் கட்ட வேண்டும். அந்தக் கோயில்கள் சித்திர அழகோடு சிறப்பாய்த் திகழ வேண்டும். அங்கு இன்னிசை ஒலிக்க வேண்டும். எழில்

01 09 2

மங்கையர் நடனமாட வேண்டும்'' என்று விழிகளை மூடியவாறு கூறினான் ஆதித்தன்.

''இப்போது சோழநாட்டில் கோயில்களே இல்லை என்று சொல்கிறீர்களா?'' என்று கேட்டான் விக்கியண்ணன்.

''இல்லையென்று யார் சொன்னார்கள்? அப்பரும், ஞானசம்பந்தரும், சுந்தரரும், சோழநாட்டில் கோயில்கள் இருந்தமையால்தானே அங்குள்ள இறைவன் மீதும், இறைவியின் மீதும் பாடல்களை ஆரமாகத் தொடுத்து அணிவித்திருக்கிறார்கள். பாடல் பெற்ற அந்தக் கோயில்கள் செங்கற்களால் கட்டப்பட்டு, கவனிப்பார் இல்லாமல் அழியும் நிலையிலே இப்போது இருக்கின்றன.அவற்றைக் கற்றளிகளாக மாற்ற வேண்டும். அதுதான் எனது இலட்சியம்., அதற்காகத்தான் பல்லவ நாடெங்கும் சுற்றிப்பார்க்க வந்தேன்'' என்றான் ஆதித்தன்.

அப்பொழுது கீழ்த்திசையில் கதிரவனின் பொற்கதிர்கள் பூத்துக் கோயிலை நோக்கிப் பொங்கி வரத்தொடங்கின. பனித்துளிகளில் மெல்லிய பொன் ரேகைகள் தவழ்ந்து மின்னின. குளத்தில் குளிர்ந்த நீரில் இருவரும் அமிழ்ந்து குளித்துவிட்டு, படிக்கட்டுகளில் ஆடைகளை உலரப்போட்டுத் திரும்பியபோது அங்கே மீன்விழி நின்று கொண்டிருந்தாள். விக்கியண்ணனும், ஆதித்தனும் வைத்த கண் வாங்காமல் அவளை நோக்கிக் கொண்டிருந்தனர். தாங்கள் காண்பது கனவா அல்லது நனவா என்று அவர்கள் பிரமிப்புடன் நோக்கிக் கொண்டிருந்தபோது, மீன்விழி மெல்லச் சிரித்தாள். குளத்திலே மலர்ந்திருந்த அல்லி மலரை அது நினைப்பூட்டியது.

''என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்? நான்தான், நானேதான்'' என்றாள் மீன்விழி, அவர்களை நெருங்கி, படிக்கட்டுகளில் இறங்கி வந்தவாறு. உறக்கக் கலக்கம் அவளது விழிகளிலே நெளிந்தது. அவளும் அவர்களை அங்கு எதிர்பார்க்கவில்லை.

''எங்களை நீ இங்கு எதிர்பார்க்கவில்லை அல்லவா?'' என்று ஆதித்தன் கேட்டான்.

''ஆமாம். உங்கள் இருவரையும் சேர்ந்தே பார்ப்பேன் என்று நான் நினைக்கவில்லை. நீங்கள் மட்டும்தான் வருவீர்களென்று நினைத்தேன்'' என்று விக்கியண்ணனைப் பார்த்துக் கூறினாள்.

''அப்படியென்றால் நான் மெல்ல இப்படி நகர்ந்து கொள்ளட்டுமா?'' என்றான் ஆதித்தன், விக்கியண்ணனைப் பொருள் பதிந்த பார்வையோடு நோக்கியபடி



''வேண்டாம், வேண்டாம் இளவரசே!'' என்று சொன்னதும், உடனே தீயை மிதித்தவன்போல் சற்றுத் துள்ளி உதட்டை மெல்ல மடித்தவாறு மீன் விழியாளையும், ஆதித்தனையும் மாறி மாறிப் பார்த்தான். ஆதித்தன் முகத்தில் கோபம் பொங்கியதைக் கண்டான். மீன்விழி முகத்தில் வியப்பும், ஏதும் புரியாததால் திகைப்பும் ஏற்படுவதைக் கண்டான். விக்கியண்ணன் கணம்கூடத் தாமதிக்காமல், ''நேற்று இரவு நாம் ஒரு நாடகம் பார்த்தோமே, அந்த நாடகத்தில் வேடமிட்டவர்கள் இப்படித்தானே அரசராகவும், இளவரசராகவும் அழைத்துக் கொண்டே நடிக்கிறார்கள். அது என்ன கதை நினைவிருக்கிறதா? சாதாரண மனிதன் அரசராகத் தன்னைக் கருதிக் கொள்வதில் எவ்வளவு பெருமைப் படுகிறான்?'' என்றான்.

''அப்படியா, அரசே!'' என்று வாயை மிகவும் மரியாதையுடன் பொத்திக்கொண்டு வணங்குவதுபோல் நடித்தான் ஆதித்தன்.

இப்போது மூவரும் சேர்ந்து சிரித்தார்கள்.

''சோழ நாட்டில் உள்ளவர்களுக்கு நகைச்சுவை உணர்ச்சியும் உண்டு போலிருக்கிறது'' என்றாள் மீன்விழி.

''ஏன், உங்கள் நாட்டில் அந்த உணர்ச்சி கிடையாதோ?'' என்று ஆதித்தன் கேட்டான்.

பிறகு அந்தப் பேச்சை மாற்ற விரும்பி, ''உங்கள் தந்தை சிற்பியார் காஞ்சிக்கு வந்திருக்கிறாரா?'' என்று ஆதித்தன் கேட்டான்.

''இல்லை, அவர் வருவதற்கு இன்னும் சில நாள்களாகும்'' என்றாள் மீன்விழியாள்.

''தந்தையை விட்டுவிட்டு நீங்கள் மட்டும் வந்து விட்டீர்களே?'' என்று ஆதித்தன் கேட்டான்.

''சொன்னபடி நடக்க வேண்டுமல்லவா?'' என்று மீன்விழி, விக்கியண்ணனைக் கடைக்கண்ணால் பார்த்தவாறு சொன்னாள்.

''மிக்க நன்றி'' என்றான் ஆதித்தன்.

''எதற்கு?''

''எங்களிடம் வாக்களித்தபடி வந்துவிட்டீர்களே அதற்காக!''

''அதற்காக மட்டும் வரவில்லை, வேறொரு கடமையும் இருக்கிறது'' என்றாள் மீன்விழி.

''அதை நாங்கள் அறியலாமா?'' என்று ஆதித்தன் கேட்டான்.

''உங்களுக்குத் தெரிய வேண்டிய செய்தியன்று. நீங்கள் அறிய வேண்டிய ஒரே ஒரு செய்தியை மட்டும் நான் இப்போது சொல்கிறேன். நான் குளத்தில் நீராடிவிட்டு உடனே போக வேண்டும். உங்களை நாளைக்குத்தான் இங்கு எதிர்பார்த்தேன். இன்றே நீங்கள் வந்துவிட்டபடியால் உங்களிடம் இப்போதே சொல்லிவிடுகிறேன். நான் சோழ நாட்டிற்கு உடனே புறப்பட்டு வருவதென்று முடிவு செய்துவிட்டேன்'' என்றாள்.

ஆதித்தன் திடுக்கிட்டான். விக்கியண்ணனை நோக்கினான்.

''நேற்றே இவரிடம் சொல்லியிருக்கிறேன்'' என்றாள் சிற்பியின் மகள்.

'என்னிடம் நீ சொல்லவில்லையே' என்பதுபோல் சற்று கோபமாக விக்கியண்ணனைப் பார்த்தான் ஆதித்தன்.

''என்னிடமும் சொல்லவில்லை'' என்றான் விக்கியண்ணன்.

மீன்விழியாள் விக்கியண்ணனைப் பார்த்தவாறு, ''சொன்னதாகத்தான் எனக்கு நினைவு. நான் அப்படிச் சொல்லியிராவிடில் இப்போதுதான் சொல்கிறேனே... மாமல்லபுரத்தில் மாசி மாதப் பௌர்ணமியன்று மிகச் சிறப்பாகத் திருவிழா நடைபெறும். அதைக் காண நான் செல்லப் போகிறேன். லட்சோப லட்சம் பேர் கடலாட வருவார்கள். நானும் அந்தச் சமயத்தில் சோழ நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்றுவிடலாமென்று நான் முடிவு செய்திருக்கிறேன். உங்களில் ஒருவர் எனக்குத் துணையாக வந்தால் நான் சோழ நாட்டை அடைந்துவிடுவேன்'' என்றாள்.

திடீரென மீன்விழியாள் இவ்வாறு பேசுவது அவர்களுக்கு வியப்பை அளித்தது.

ஆதித்தனும், விக்கியண்ணனும் அவள் சொல்வது உண்மைதானா என்று கேட்பது போல், அவளை நோக்கினார்கள். அவர்களைப் பார்த்து மீன்விழியாள், ''நான் சொல்வதில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?'' என்று கேட்டாள்.

ஆதித்தன் மெல்லக் கனைத்துக் கொண்டு, ''நம்பிக்கை இருக்கிறது. ஆனால் உனது தந்தை அனுமதிப்பாரா அல்லது பல்லவ அரசர்தான் சம்மதிப்பாரா'' என்று கேட்டான்.



''என் தந்தையே கூட பல்லவ நாட்டைவிட்டு வேறு நாட்டிற்குச் செல்ல முடிவு செய்துவிட்டார்'' என்றாள் மீன்விழி.

ஆதித்தன் மெல்லச் சிரித்தபடி, ''ஒரே நாளில் எவ்வாறு மனமாற்றம் ஏற்பட்டிருக்கிறது? புதிய கோவில்களைக் கட்டுவதற்குப் புதிய சிற்பிகளைத் தேர்ந்தெடுத்து அதற்கான முயற்சியில் பல்லவ அரசர் தீவிரமாய் ஈடுபட்டிருக்கும்போது சிற்பி தன் மனத்தை ஏன் மாற்றிக் கொண்டார்? நம்ப முடியவில்லையே!''

''திடீரென்று அவர் தன் மனத்தை மாற்றிக் கொள்ளவில்லை. நான்தான் அவர் மனம் மாறும்படியாகப் பேசி வருகிறேன்'' என்றாள்.

''ஏன்? அப்படி பேசி வருகிறாய்?''

''சிறிது காலமாக சக்கரவர்த்தி திருத்தணிகை முருகனுக்குப் பொன்மலர் செய்வதிலேயே கவனம் செலுத்தி வருகிறார். பொக்கிஷத்துச் செல்வம் முழுவதும் அதற்கே செலவாகி விட்டால் சிற்பப்பணி நிறைவேறுவது எது? இப்போது படையெடுப்பைப் பற்றித் தீவிரமாக திட்டமிட்டு வருகிறார். கோட்டத் தலைவர்கள் எல்லாரும் தத்தமது பகுதிகளில் படை திரட்ட முனைந்திருக்கிறார்கள். எந்த நாட்டின் மீது படையெடுத்துச் செல்லப் போகிறாரோ தெரியவில்லை. சமாதானம் நிலவும் காலத்தில்தான் சிற்பப்பணி சிறப்பாக நடைபெறும். படைவீரர்களை நிலையாக வைத்துக் கொண்டு அவர்களுக்குச் சோறிடுவதென்றால் பஞ்சம் மிக விரைவில் எட்டிப் பார்த்துவிடும். அதனால்தான் நான் முடிவு செய்தேன், இனி பல்லவ நாட்டில் சிற்பிகளுக்கு வேலை இல்லை என்று' என்று மிக அழுத்தந்திருத்தமாக மீன்விழி சொல்லி முடித்தாள்.

ஆதித்தனும் விக்கியண்ணனும் அவள் பேசும்போது அவள் முகத்திலேற்படும் உணர்ச்சிகளை மிகக் கவனத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மீன்விழி படிக்கட்டுகளில் இறங்கினாள். ''நான் உங்களுடன் பேசியதிலேயே நேரம் அதிகமாகிவிட்டது. நான் குளித்துவிட்டுப் புறப்படப் போகிறேன். நான் சொன்னது நினைவிலிருக்கட்டும். பௌர்ணமியன்று மாமல்லபுரம் வந்து சேருங்கள். இங்கிருந்து நேர்சாலை மாமல்லபுரத்திற்குச் செல்கிறது. பல வண்டிகள் செல்லும். ஏற்றிச் செல்வார்கள். கடற்கரை அருகே சிவன் கோயில் ஒன்றிருக்கிறது. அங்குள்ள தீப ஸ்தம்பத்திற்கு அருகே நான் நிற்பேன். உங்களில் ஒருவரை நிச்சயம் எதிர்பார்க்கிறேன்''



01 09 2

என்றாள். அவள் பேச்சில் உறுதி இருந்தது. விக்கியண்ணனும், ஆதித்தனும் அங்கேயே நின்று கொண்டிருந்தார்கள்.

''நீங்கள் போகலாம். கயிலாசநாதர் ஆலயத்துக் காலை பூசையைக் கண்டு, இறைவன் அருள் பெற நீங்கள் போகலாம்'' என்று கூறி அவள் ஒவ்வொரு படிக்கட்டாக இறங்கித் தண்ணீருக்குள் மூழ்கினாள். தடாகத்தில் மலர்ந்திருந்த அல்லி மலரோடு மலராக அவள் முகம் தெரிந்தது.

விக்கியண்ணனும், ஆதித்தனும் கயிலாயநாதர் ஆலயத்தை நோக்கிச் சென்றனர். இருவரும் மௌனமாகவே நடந்தனர்.

''மீன்விழி சொல்வதை நம்பலாமா?'' என்று ஆதித்தன் கேட்டான்.

''நானும் அதைத்தான் யோசிக்கிறேன்'' என்று கூறிய விக்கியண்ணன் சிறிது நேரம் கழித்து, ''மாமல்லபுரத்திற்குப் போய்த்தான் பார்ப்போமே'' என்றான்.

''புரிகிறது. புரிகிறது. மீன்விழியை அழைத்துக் கொண்டு கங்க நாட்டிற்குச் செல்லத் திட்டமிடுகிறாய்'' என்று ஆதித்தன் கடுமையாகக் கேட்டான்.

○



## 24. இளவரசி அழைக்கிறாள்

கயிலாயநாதர் ஆலயத்திற்கு, அந்தக் காலை வேளையில், லிங்க வடிவிலுள்ள சிவபெருமானைத் துதித்து வணங்க மக்கள் வந்து கொண்டிருந்தார்கள்.

ஆதித்தனும், விக்கியண்ணனும், பாயும் நிலையிலுள்ள சிங்க வடிவச் சிற்பங்கள் நிறைந்த மதிலைத் தாண்டி முன்வாயில் வழியாக உள்ளே நுழைந்தார்கள்.

''விக்கியண்ணா! இந்த ஆலயத்தைக் கட்டியவர் யார் தெரியுமா?'' என்று ஆதித்தன் கேட்டான்.

''தெரியுமே. ஒரு பல்லவ அரசர்'' என்று கூறி நடந்தான் விக்கியண்ணன். ஆதித்தனும் மெல்ல நகைத்து, ''நல்லவேளை, தெய்வம் என்று சொல்லாமலிருந்தாயே'' என்றான்.

''தெய்வம் என்று கூறியவுடன் எனக்கு இந்தக் கோயில் தொடர்பான ஒரு கதை நினைவிற்கு வருகிறது'' என்றான் விக்கியண்ணன்.

''கதையா? சொல்லு.... சொல்லு... கேட்டுக் கொண்டே திருச்சுற்றிலுள்ள சிற்பங்களை ரசிக்கிறேன்'' என்றான் ஆதித்தன்.

''இந்தக் கோயிலைக் கட்டிய பல்லவ அரசன் இராஜசிம்மன் குடமுழுக்கிற்கு நாளும் குறிப்பிட்டுவிட்டார். ஆனால், அவர் கனவில் சிவபெருமான் தோன்றி, வேறு ஒரு நாளன்று உனது கோயிலின் குடமுழுக்கை வைத்துக் கொள்'' என்றார். பல்லவ அரசர் காரணம் வினவினார். அதற்கு இறைவன், ''எனது பக்தர் ஒருவர், பூசலார் என்று பெயர். அவர் ஒரு கோயில் கட்டியிருக்கிறார். அந்தக் கோயிலின் குடமுழுக்குக்குச் செல்கிறேன்'' என்றார். இராஜசிம்மன் வியப்புடன், ''நாம் அறியாமல் மற்றொரு பெரிய கோவிலா? இறைவனே கலந்து கொள்ளக்கூடிய கோயிலா'' என்று, குடமுழுக்கில் கலந்து கொள்ளக்கூடிய கோயிலா'' என்று, அந்தக் கோயிலைக் காணச் சென்றார். அங்கே கோயில் இல்லை. பூசலார் தியானத்தில் அமர்ந்திருந்தார். கோயில் எங்கே என்று கேட்ட அரசரிடம் அவர் தன் இதயத்தைக் காட்டினார்.



01 09 2

இதயத்தில் அவர் அமைத்த கோயிலுக்கு இறைவன் வருகிறார்... என்று விக்கியண்ணன் கூறவும். ஆதித்தன் அவனைத் தட்டிக் கொடுத்து, ''அப்பப்பா... எவ்வளவு தெரிந்து வைத்திருக்கிறாய் பல்லவர்களைப் பற்றி நிறைய அறிந்திருக்கிறாய்'' என்று பாராட்டினான்.

''பல்லவர்களைக் குறித்து நான் சில ஆண்டுகளாகவே கேட்டு அறிந்து வருகிறேன். நமது தமிழாசிரியரிடம் நான் அதற்காகவே பல்லவ மன்னருக்குப் பிரியமான பாடல்களைக் கற்றேன்'' என்றான் விக்கியண்ணன்.

''அதென்ன, பல்லவ மன்னருக்குப் பிடித்த பாடல்கள்?'' என்று ஆதித்தன் ஆவலுடன் கேட்டான்.

''அபராஜிதனுக்கும் பல ஆண்டுகளுக்கு முன்னர், நந்திவர்மன் என்றோர் அரசர். அவர் மகாவீரர். பாண்டிய மன்னன்கூட அவரிடம் தோற்றுவிட்டார். அவரைப் பற்றிப் புகழ்ந்த பாடல்கள் 'நந்திக்கலம்பகம்' என்ற பாடல்கள். அதைக் கற்றேன்'' என்று விக்கியண்ணன் கூறியவுடன் ஆதித்தன் வியப்புடன் பார்த்தான்.

''நந்திக் கலம்பகப் பாடலை நான் படித்திருந்ததால், இளவரசி வைரக்கண்ணி என்னிடம் மனம்விட்டுப் பேசினாள்'' என்றான் விக்கியண்ணன்.

''அப்படியா?'' என்று ஆதித்தன் ஆவலுடன் கேட்டாலும் அதில் பொறாமையுமிருந்தது.

''நீங்கள் நினைப்பது போலில்லை. 'நந்திக் கலம்பக'ப் பாடல்களை நான் பாடியதால் தமிழ்க் கவிராயர் என்று நினைத்துவிட்டாள்'' எனறான் விக்கியண்ணன்.

ஆதித்தன் பெருமூச்சுவிட்டான். ''நல்லவேளை, தமிழ்ப் பாடலுக்காகத் தன் நெஞ்சைப் பறிகொடுக்கவில்லையே...'' என்று கூறிய ஆதித்தன், ஆலயத்து முன் வாயிற்படியைத் தாண்டிச் திருச்சுற்றுக்குள் நுழைந்தான். விக்கியண்ணனும் உடன் பின்தொடர்ந்தான்.

ஒவ்வொரு சிறு மாடத்திலும் அழகிய ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. விழியழகுடைய மங்கையர் தம் முகங்கள் பேசும் பொற்சித்திரங்களாகத் திகழ்ந்தன.

''விக்கியண்ணா! பல்லவர்கள் சிற்பக் கலையில் வல்லுநர்கள் என்று மட்டும்தான் நினைத்திருந்தேன். அற்புத ஓவியங்களைத்



தீட்டியிருக்கிறார்களே...'' என்று பரபரப்புடன் கூறி, ஒவ்வொரு மாடமாகப் பார்த்தவாறு ஓடினான். பின்னர் திரும்பி வந்தான். துள்ளினான். விக்கியண்ணனைத் தழுவிக் கொண்டான்.

''இளவரசே! பல்லவர்கள் சித்திரக் கலையையும் மிகவும் ஆதரித்தார்கள். மகேந்திர பல்லவன் - அவனே ஒரு ஓவியன். 'சித்திரக்காரப்புலி' என்று அவனுக்குப் பட்டப் பெயரும் உண்டு. நீங்கள் கேள்விப்பட்டதில்லையா? உங்கள் தந்தை விஜயாலயர் சொல்லியிருக்கிறார். அவர் கட்டியுள்ள மூவர் கோயிலுக்கு அருகே உள்ள மலையில் மகேந்திர பல்லவன் அழியாத வர்ணங்களால் அமைந்த சித்திரத்தைத் தீட்டி யிருக்கிறார் என்று சொல்கிறார்கள்'' என்று கூறிய விக்கி யண்ணனை நோக்கி, ''அழியாத வர்ணங்களா?'' என்று ஆதித்தன் கேட்டான்.

''ஆமாம், இளவரசே! நாம் இப்போது யாருமறியாமல் பல்லவ நாட்டில் அலைவதுபோல் மகேந்திர பல்லவன், சாளுக்கிய நாட்டில் சுற்றி, அழியாத வர்ணங்களைப் பற்றிய ரகசியம் அறிந்தார். தான் அறிந்ததை பல்லவ நாட்டில் பல கோயில்களில் வண்ண ஓவியங்களாகத் தீட்டினார்.''

விக்கியண்ணன் சொல்லச் சொல்ல ஆதித்தனுக்கு வியப்புத் தாங்கவில்லை.

''விக்கியண்ணா, இவ்வளவு தெரிந்து வைத்து இருக்கிறாயே! இதுவரையில் பல்லவர்கள் பெருமையைப் பற்றி நீ அறிந்திருப்பதாக எனக்குச் சொல்லவில்லையே'' என்றான் ஆதித்தன்.

''பல்லவர்கள் பெருமையையும், திறமையையும் நேரே அறியப் போகிறோமே என்ற எண்ணத்தில் இருந்தேன். இப்போதுதான் நேரே காண்கிறோமே'' என்றான் விக்கியண்ணன்.

''விக்கியண்ணா? என் பசி கட்டுக்கடங்காமல் போகிறது. சோழ நாட்டைக் கலைச் செல்வங்கள் நிறைந்த பூமியாக்க வேண்டும். தஞ்சையில் ஒரு பெரிய கோயிலைக் கட்ட வேண்டும். அங்கே இதுபோல் திருச்சுற்றில் சித்திரங்கள் தீட்ட வேண்டும். சிற்பங்கள் அமைக்க வேண்டும். இறைவன் எதிரே நங்கையர் நடனமாட வேண்டும். அதற்கேற்ற தமிழ்ப் பாடல்களைக் கவிஞர்கள் இயற்ற வேண்டும். சிற்பத்திற்கு மீன்விழி, நடனக்கலைக்கு மயிலழகு - சித்திரத்திற்கு - விக்கியண்ணா! நீ மாமல்லபுரத்திற்கு இன்றே புறப்பட்டுவிடு'' என்று ஆதித்தன் பரபரப்புடன் சொற்கள் புயல் போல் பாயப் பேசினான்.



01 09 201

திருச்சுற்றை வலம் வரும்போது தெற்கு மூலையில் ''ஐயா'' என்ற குரல் கேட்டது.

இருவரும் திரும்பிப் பார்த்தனர். ஓர் இளம் பெண் நின்று கொண்டிருந்தாள்! அவள் வேறு யாரையோ அழைப்பதாக நினைத்துச் செல்லத் தொடங்கினர்.

''ஐயா, உங்களைத்தானே, கவிராயரே! தங்களைத்தான்...'' என்ற அந்த இனிய குரல் கேட்டு விக்கியண்ணன் திடுக்கிட்டான்.

அவள் விக்கியண்ணன் அருகே வந்தாள். ''ஐயா கவிராயரே! என்னை உங்களுக்கு நினைவில்லையா?'' என்று கேட்டாள்.

ஆதித்தனும் விக்கியண்ணனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். ''நல்லவேளை, இன்று பகல் உணவிற்கு ஒருவருடைய உதவி கிடைத்துவிட்டது'' என்று மெல்ல ஆதித்தன் விக்கியண்ணனிடம் கூறினான்.

''கவிராயர் அவர்களே! என்னை மறந்துவிட்டீர்களா? அருவிக்கரை மாளிகையில் பார்த்ததை அதற்குள் மறந்து விட்டீர்களா? பல்லவ இளவரசியின்...'' என்று அவள் சொல்லத் தொடங்கியவுடன் விக்கியண்ணன் புரிந்து கொண்டான்.

''ஆமாம், ஆமாம். நினைவிற்கு வருகிறது. எவ்வளவோ பெண்களை நாள்தோறும் சந்திக்கிறேன். உடனே நினைவுக்கு வருவதில்லை...'' என்று கூறிய விக்கியண்ணன், ஆதித்தனின் செவிகளில் மட்டும் கேட்குமாறு, ''பல்லவ இளவரசியின் பணிப்பெண் இவள்'' என்றான்.

''ஓ! இளவரசி நலமாயிருக்கிறார்களா?'' என்று விக்கியண்ணன் கேட்டான்.

''உம்...'' என்று தலையசைத்த பணிப்பெண், ''இளவரசியின் மனம்தான் சரியாக இல்லை. அவரைப் பிடித்திருந்த கிரஹணம் ஒன்று விடுபட்டு விட்டது என்றாலும் நேற்று முதல் இளவரசிக்குப் புதிய ஆபத்து'' என்றாள்.

''புதிய ஆபத்தா?''

''ஆமாம். இளவரசிக்கு மாளிகையைச் சுற்றிக் காவல் போட்டிருக்கிறார்கள். இரண்டு நாள்களாக நான் காஞ்சியில் பல இடங்களில் உங்களையும், மற்றொருவரையும் தேடி அலைகிறேன்...''

''எதற்காக? என்னைத் தேடுவதில் நியாயமிருக்கிறது. இளவரசிக்கு என்னைத் தெரியும்... மற்றொருவர் யார்?'' என்று கேட்டான்.



''மற்றொருவரை எனக்கும் தெரியாது. ஆனால் அடையாளம் சொல்லியிருக்கிறாள் இளவரசி...'' என்று கூறி, விக்கியண்ணன் அருகே நின்றிருந்த ஆதித்தனைத் திரும்பித் திரும்பிப் பார்த்தாள் பணிப்பெண்.

''என்ன அடையாளங்கள் சொல்லியிருக்கிறாள், உங்கள் இளவரசி?'' என்று கேட்டான் விக்கியண்ணன்.

பணிப்பெண் நாணத்தால் மெல்லத் தலைகுனிந்து கொண்டு, ''அவர்கள் சொல்லியிருப்பதை எப்படி வெளியே சொல்ல முடியும்? என் மனசுக்குத்தான் தெரியும்'' என்றாள்.

விக்கியண்ணன் ஆதித்தனைப் பார்த்து மெல்லச் சிரித்தவாறு, ''இளவரசி, என்னென்ன அடையாளங்கள் சொல்லியிருக்கிறாள் என்பதை நான் சொல்லட்டுமா?'' என்று பணிப்பெண்ணை நோக்கிக் கேட்டான்.

அவள் தலையசைத்தாள்.

''நீண்ட கோரைப்பல், சப்பை மூக்கு, குழிவிழுந்த கண்கள், பெண்களைப்போல் மீசை முளைக்காத முகம், குழி விழுந்த மார்பு, பயந்து நடுங்கும் மேனி, மொட்டைத் தலை...'' என்று வர்ணித்துக் கொண்டே போனபோது பணிப்பெண் குபீரென்று நகைத்து, ''போதும், போதும் நிறுத்துங்கள் கவிராயரே! நீங்கள் சொல்வதற்கு நேர் விரோதமான அடையாளங்கள்'' என்றாள்.

''அத்தகைய அடையாளம் உடையவரை இளவரசி எங்கே சந்தித்தாள்?'' என்று விக்கியண்ணன் கேட்டான்.

''உங்களுக்குத் தெரியாதா அந்தச் சம்பவம்? இளவரசி பல்லக்கில் காஞ்சியை நோக்கிப் புறப்பட்டாள் இல்லையா?''

''எனக்குத் தெரியாது பெண்ணே! நான் குதிரை ஒன்றைப் பெற்றுக் கொண்டு புறப்பட்டுவிட்டேனே!'' என்று ஒன்றும் தெரியாதது போல கேட்டான் விக்கியண்ணன்.

○



01 09 2

## 25. அவர்களை அழைத்து வா!

"அதற்குப் பிறகு வெயில் தாழ்ந்தவுடன் இளவரசி புறப்பட்டாள். வழியில் இளவரசியின் தாய்மாமன் வழிமறித்தார். இளவரசியைத் தூக்கிச் செல்லத் திட்டமிட்டிருந்தார்" என்றாள் பணிப்பெண்.

"அடடா.... தாய்மாமன் செய்யக்கூடிய காரியமா? தூக்கிச் செல்லத் திட்டமிடுவானேன்? பல்லக்கில்தான் சௌகரியமாக வந்து கொண்டிருக்கிறாளே..."

இது கேட்டுப் பணிப்பெண் சிரித்துவிட்டாள். "அது சரிங்க... தளபதிக்குத் தீய எண்ணம். இளவரசியை அரசருக்குத் திருமணம் செய்து வைத்துவிட வேண்டும் என்ற எண்ணம்."

"ஏன் உங்கள் அரசருக்கு இன்னும் திருமணமாக வில்லையா?"

"ஆகிவிட்டது. இருந்தாலும் இளவரசியின்மீது அவருக்கு ஆசை."

"ஒகோ! பின்னர் என்ன நேர்ந்தது?"

"நல்லவேளையாக, ஆணழகர் ஒருவர் நடுவழியே வந்தார். அவரிடம் வாளில்லை. எதிர்த்தவர்களிடமிருந்து வாளைப் பறித்து, தனி ஒருவராகவே தளபதியையும், அவரது படைவீரர்களையும் ஒட்டி விட்டார், தளபதி குற்றுயிராய்க் கீழே சாய்ந்து விட்டார்."

"ஐயோ, தளபதிக்கு என்ன ஆனது? பிழைத்துவிட்டாரா?"

"நல்ல கவிராயரய்யா நீங்கள். இளவரசி என்ன ஆனாள் என்று கேட்காமல் அந்தக் கொடியவனைப் பற்றிக் கேட்கிறீர்களே?"

"உம், சொல்லு பெண்ணே! நாங்கள் சீக்கிரம் செல்ல வேண்டும். பசிக்கிறது" என்று விக்கியண்ணன் நடந்தான்.

"தளபதி நேற்று இறந்துவிட்டார். இளவரசிக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. அவரைக் காப்பாற்றிய அந்த வீர இளைஞர் காஞ்சிக்கு



வருவதாகக் கூறியிருக்கிறார். இளவரசியைச் சந்திப்பதாகவும் சொல்லியிருக்கிறார். அவரைத் தேடி அழைத்து வருமாறு இளவரசியின் கட்டளை" என்று சொல்லி முடித்தவுடன் விக்கியண்ணன், "இதோ, இவரைப் போலிருப்பாரா, உன் இளவரசி அடையாளம் சொல்லியனுப்பியவர்?" என்று கேட்டான்.

பணிப்பெண் தலைகுனிந்து கொண்டாள். கீழ்க் கண்ணால் இருவரையும் நோக்கினாள்.

"ஓர் அடையாள மோதிரம் கொடுத்திருப்பதாகவும் கூறினாள்" என்றாள்.

விக்கியண்ணன் ஆதித்தனை நோக்கித் திரும்பி, "என்னிடம் சொல்லவில்லையே" என்று கேட்டான்.

"பரம ரகசியம்; இளவரசி, பணிப்பெண்ணிடம் கூறியது கூடத் தவறு" என்றான்.

"ஆ! நீங்கள் தான் - இப்போது தெரிந்துவிட்டது. உங்கள் பேச்சு, முகம், மீசை, தோள் அனைத்தைப் பற்றியும் இளவரசி கூறியது நூற்றுக்கு நூறு சரி. ஐயா, உடனே வாருங்கள். நான் வழிகாட்டுகிறேன்" என்று பணிப்பெண் படபடத்தாள்.

விக்கியண்ணன் ஆதித்தனை நோக்கினான். பிறகு பணிப்பெண்ணைப் பார்த்து, "அவரை மட்டுந்தான் வரச் சொன்னார்களா? நான் வரக் கூடாதா?" என்று கேட்டான்.

"இருவரையும்தான். இருவரும் சேர்ந்து ஒரே இடத்தில் இருப்பீர்கள் என்று நான் நினைக்கவில்லை" என்றாள் பணிப்பெண்.

விக்கியண்ணனும், ஆதித்தனும் சிறிது நேரம் மௌனமாக நின்று கொண்டிருந்தனர். அடுத்து என்ன செய்வது என்று அவர்களுக்குத் தோன்றவில்லை. அவர்களுடைய மௌனத்தைப் பணிப்பெண்ணே கலைத்தாள்.

"கவிஞரும், அந்த வீரரும்... இரண்டு பேருமே இளவரசியைச் சந்திக்க வாருங்கள்" என அழைத்தாள்.

'அடி பெண்ணே! நானும் வீரன்தான்' என்று விக்கியண்ணன் நினைத்தான். ஆதித்தனை நோக்கி, "வீரரே! இளவரசியின் அழைப்பு உங்களுக்கு வந்துவிட்டது. புறப்படுங்கள்" என்றான்.

"மாளிகைக்குப் பலத்த காவல் இருப்பதாகக் கேள்விப்பட்டேனே" என்றான் ஆதித்தன்.



01 09

''என்னுடன் வாருங்கள்; உங்களுக்கு எதற்கு அந்தக் கவலையெல்லாம்?'' என்று பணிப்பெண் கூறினாள். அவளைப் பின்தொடர்ந்து இருவரும் சென்றனர்.

அவர்கள் இருவரும் பின்தொடரும்போது, மயிலழகு சற்று மறைவில் நின்று கொண்டிருந்தவள், வெளியே வந்தாள். விக்கியண்ணனும், ஆதித்தனும் செல்வதைப் பார்த்துப் பெருமூச்சுவிட்டாள்.

**கா**ஞ்சி மாநகரத்துப் பல்லவர்களின் பரம்பரை மாளிகையின் மேல்மாடத்தில், அபராஜிதவர்மன் மஞ்சத்தில் சாய்ந்தவாறு வானத்தை நோக்கியிருந்தான். அருகே முக்கனிகளின் நறுமணம், மலர்க்கொத்தின் மணத்துடன் போட்டி போட்டுக் கொண்டிருந்தது.

தென்றல் காற்று தவழ்ந்து வந்து கொண்டிருந்தது. அகிலின் நறுமணப் புகையுடன், பரிவாதினி யாழின் மெல்லிய ஓசையும் எழுந்து சொப்பனபுரியாக்கிக் கொண்டிருந்தது.

மயிலழகின் கால் சதங்கை ஓசையுடன் மெல்லிய சிரிப்பொலி அந்த மடத்தில் எழுந்து, கீழ்த்தளத்தில் உள்ள பணிப்பெண்களைத் திகைக்க வைத்தது. சிலர் பொறாமையும் கொண்டனர்.

''மயிலழகிடம் அரசர் மயங்கிவிட்டார்'' என்றாள் ஒரு பணிப்பெண்.

''அப்படிச் சொல்லாதே. அரசர் நடனத்தை ரசிக்கிறார்'' என்றாள் மற்றொருத்தி.

''நான் மட்டும் என்ன சொல்லிவிட்டேன்? மயிலழகு தன் நடனத்தின் மூலம் மயக்கிவிட்டாள் என்றுதான் சொன்னேன்'' என்றாள்.

''அரசர் அதற்கெல்லாம் மயங்கி விடுபவர் அல்லர் என்பது உனக்குத் தெரியாதா?'' என்று கேட்டாள் மற்றொருத்தி.

''ஆனால் மயிலழகிடம் கடந்த இரண்டு நாள்களாகச் சற்று நெருங்கித்தான் பழகுகிறார்'' என்றாள் முதலில் பேசியவள்.

''மயிலழகு, சிற்பியின் மகள் என்பது உனக்குத் தெரியாதா?''

''அதனால்?''

''அதனால் அவள் அரசரிடம் நெருங்கிப் பழக முடிகிறது.''



பணிப்பெண்கள் நகைத்தனர். சொன்னவள் கோபத்துடன் இவர்களைப் பார்த்து, ''இதில் சிரிக்க என்ன இருக்கிறது?'' என்று சீறினாள்.

''அரசரின் குணம் இப்போது மாறி வருகிறது தெரியுமா? அழகிய பெண்களின் நெருக்கத்தை அவர் விரும்புகிறார்'' என்றாள் ஒருத்தி.

''வாயை மூடு. அரசியின் காதில் விழுந்தால் நாவைத் துண்டித்துவிடுவாள்.''

''அரசிக்கும் தெரியும். அந்தப்புரத்தில் ஒரு சிறு புயலே உருவாகிவிட்டது.''

''அப்படியா? என்ன நடந்து விட்டது?''

''வைரக்கண்ணியை அவர் மணந்து கொள்ளப் போகிறாராம். அதற்கான திட்டங்களை வகுத்துக் கொடுத்த தளபதியை யாரோ கொலை செய்துவிட்டார்கள். இந்தச் செய்தி அரசிக்கும் தெரிந்துவிட்டது.''

''வைரக்கண்ணி சம்மதித்து விட்டாளா?''

''சம்மதிக்காததால்தான் மாளிகையிலேயே பலத்த காவலிட்டு வைத்திருக்கிறார்.''

''இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?''

''மயிலழகுடன் மாலையில் பேசிக் கொண்டிருந்தேன். அவளை ஏகாம்பரேச்வரர் கோயிலில் நடனமாட அரசர் அழைத்தாராம். அவளுக்கோ தஞ்சைக்குச் செல்ல விருப்பமாம்.''

''தஞ்சைக்கா? அங்கே யார் இருக்கிறார்கள்?''

''தஞ்சையில் சோழ அரசர் இருக்கிறாராம். அவருக்குக் கலையின் மீது ஒரே பித்தாம்.''

''சோழ சிற்றரசரா? பல்லவ நாட்டை விட்டு சோழ சிற்றரசரிடம் செல்வதால் அவளுக்கு என்ன பலன்?''

''நானும் அப்படித்தான் நினைத்துக் கேட்டேன். அவள் மனத்தை யாரோ இருவர் மாற்றியிருக்கிறார்கள். சோழ நாட்டைச் சேர்ந்தவர்கள் அவளைச் சந்தித்திருக்கிறார்கள்.''

''அப்படியென்றால், சக்கரவர்த்தியிடம் மயிலழகு ஏன் நெருங்கிப் பழகுகிறாள்? நம்ப முடியவில்லையே!''

''நான் அங்கே சென்று அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைத் தெரிந்து வருகிறேன்'' என்று கூறிச் சென்ற பணிப்பெண் மறைந்து நின்று கொண்டாள்.

01 09 20

மேல்மாடத்துத் திறந்த முற்றத்தில் அபராஜிதன் எதிரே மயிலழகு நடனமாடிக் கொண்டிருந்தாள். அபராஜிதன் நடனத்தை ரசித்துக் கொண்டிருந்தான். அவனது கையிலிருந்த பரிவாதினி வீணையினின்று எழுந்த நாதம் மயிலழகின் நடனவெறியைத் தூண்டிவிட்டது.

அவள் பாதங்கள் நோகும் வரை ஆடினாள். இடை துவளும் வரை ஆடினாள். தென்றல் காற்றிலும் வியர்வை பெருக்கெடுத் தோடி வரும் வரை ஆடினாள்.

பரிவாதினியின் இனிய நாதம் மட்டும் தொடர்ந்து எழுந்து கொண்டிருந்தது.

அபராஜிதன் எழுந்து மயிலழகு அருகே சென்றான்.

"களைத்துவிட்டாயா, பெண்ணே?"

"இல்லை... இல்லை..." என்று மெல்லச் சிரித்தாள் மயிலழகு.

அபராஜிதன் அவளை மெல்லத் தூக்கிவிட முயன்றான். மயிலழகு அவரது ஸ்பரிசம் படுமுன்பே துள்ளி எழுந்து சற்றுத் தொலைவில், நாணத்துடன் நின்றாள்.

"உன் நடனத் திறமையை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்பொழுதுதான் கண்டறிந்தேன்" என்றான் அபராஜிதன்.

அவனுடைய கூர்மையான கண்கள் எதையோ அறிய முயன்றன.

"நான் காஞ்சிக்கு வருவது இதுதான் முதல் தடவை. அதனால் உங்கள் எதிரே ஆடுவதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை" என்று அவள் மெல்லக் கூறினாள்.

அபராஜிதன் மஞ்சத்தில் சென்றமர்ந்தான்.

"நாட்டியத்தை எங்கு கற்றாய்?" என்று பல்லவ மன்னன் கேட்டான்.

மயிலழகு மெல்ல நகைத்தாள்.

"மாமல்லபுரத்தில்" என்றாள் மயிலழகு.

"மாமல்லபுரத்தில் வசித்தவள் காஞ்சியைக் காணாதது மிக வியப்பே..." என்றான் அபராஜிதன்.

"மாமல்லபுரத்தில் நானும் என் சகோதரியும் எங்கள் தந்தைக்கு உதவியாக இருந்தோம். அங்கு எனக்கு நாட்டியம் கற்பதைத் தவிர வேறு வேலையில்லை. பிறகு தந்தை,



மாமல்லபுரம் விட்டுப் புறப்பட்டு, திருவிடந்தை வந்தார். அங்கிருந்து திருவான்மியூர் வந்தார். அல்லிக்கேணியில சில நாள்களிருந்தோம். திருவொற்றியூர் சென்றோம். பிறகு என் தந்தையின் சகோதரி என்னை மட்டும் திருக்காளத்திக்கு அழைத்துச் சென்றுவிட்டாள்" என்று மயிலழகு கூறினாள்.

"காளத்தியினின்று திருத்தணிகைக்கு ஏன் வந்தாய்?" என்று அபராஜிதன் கேட்டான்.

"திருக்காளத்தியில் என்னை இருவர் சந்தித்தனர்" என்றாள் மயிலழகு.

"அவர்கள் யார்?"

"சோழ நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று என்னிடம் சொன்னார்கள்."

'அவர்களை உனக்கு முன்பே தெரியுமா?" - மயிலழகு தலையசைத்தாள், 'தெரியாது' என்பதைப் போல.

"அவர்கள் அழைத்தவுடன் எப்படி புறப்பட்டு விட்டாய்?" அபராஜிதன் குரலில் கடுமை இருந்தது.

"அவர்கள் கலை ரசிகர்கள். என் நடனத் திறமையைப் புகழ்ந்தார்கள்" - மயிலழகு, அபராஜிதனை நிமிர்ந்து பாராமலேயே கூறினாள்.

"அதனால்?"

"அவர்கள் அழைப்பை ஏற்றேன்."

"தஞ்சை எங்கிருக்கிறது தெரியுமா?"

"தெற்கே..."

"சோழர்கள் எனக்கு அடங்கியவர்கள் என்பதை அறிவாயா?"

"கேள்விப்பட்டிருக்கிறேன்."

"அடிமை நாட்டிற்கு ஏன் செல்கிறாய்?"

"தஞ்சை அரசர்தான் பல்லவ அரசருக்கு அடங்கியவர்கள். மக்கள் அல்லர்... சோழ நாட்டு ரசிகர்கள் என்னை அழைத்தார்கள்."

"அதனால்...?"

"அன்பும், ஆதரவும் எங்கு நிறைந்திருக்கின்றனவோ, அங்கு செல்ல விரும்புகிறேன்."



01 09 2

''ஒரு தந்தை காட்டும் அன்பும், பல்லவ நாட்டு ஆதரவும் அங்கு கிடைக்குமா?''

''கிடைக்கும் என்றே எதிர்பார்க்கிறேன்...''

''நீ நினைப்பதற்கு மாறுதலாக இருந்தால்? உன் எழிலை அனுபவிக்க உன்னை அழைத்திருந்தால்?''

''அப்படியென்றால் சோழ நாட்டை விட்டு உடனே புறப்பட்டுவிடுவேன்.''

''அப்போது பல்லவ நாடு உன்னை ஏற்காது.''

''நான் அதை எதிர்பார்த்தே இருந்தேன். நீங்கள் விரும்பாவிடில், பாண்டிய நாட்டிற்குச் செல்வேன்.''

மயிலழகு இவ்வாறு கூறியதைக் கேட்டு, அபராஜிதன் சிரித்தான். மயிலழகு அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். 'ஏன் சிரிக்கிறீர்கள்' என்று கேட்பதைப் போலிருந்தது அந்த நிமிர்ந்த பார்வை.

''பாண்டியர்கள்...'' என்று மீண்டும் நகைத்த அபராஜிதன், ''பாண்டியர்கள் என்று சொல்லிக் கொள்ள அவர்கள் இருக்கிறார்களா? பாண்டியர்களை நான் வென்று ஓடோடச் செய்துவிட்டது தெரியாதா?'' என்று கூறியதும் மயிலழகு தலைகுனிந்து மௌனமாக நின்றாள்.

''பெண்ணே! நீ எளிதில் ஏமாந்துவிடக் கூடியவள் என்று தோன்றுகிறது. உன்னை யாரோ அழைத்தார்கள் என்று நீ காளத்தியிலிருந்து புறப்பட்டு விட்டாயே? அவர்கள் யார், எங்கிருக்கிறார்கள் என்றெல்லாம் கேட்டறிந்தாயா?'' என்று கேட்டான்.

''என் மனத்திற்குத் திருப்தி ஏற்பட்டது. எனக்கு அவர்கள் மீது நம்பிக்கை ஏற்பட்டது. திருத்தணிகையிலும், அவர்கள் என்னுடன் பேசிக் கொண்டிருந்தனர்'' என்று மயிலழகு கூறிச் சற்று நிறுத்தினாள்.

அபராஜிதன், திடுக்கிட்டான். ஆனால், அதை வெளியே புலப்படுத்திக் கொள்ளாமல், ''திருத்தணிகைக்கும் வந்திருந்தார்களா?'' என்று கேட்டான்.

''ஆம், என் நடனத்தையும் கண்டு ரசித்தார்களாம்.''

''ஓ!''

''காஞ்சியில் சந்திப்பதாகக் கூறியிருக்கிறார்கள்.''

''காஞ்சியிலா?''



''ஆமாம், கயிலாசநாதர் ஆலயத்தருகே, கயிலாச நாதர் ஆலயத்திலுள்ள சிவபெருமானின் அழகிய நடனத் தோற்றங்களையும் சித்திரங்களையும் காண அவர்களுக்கு ஆவலாம்.''

''ஓ! அவ்வளவு ஆர்வமுள்ள கலை ரசிகர்களா? அவர்கள் பெயர் என்ன?'

''பெயரைக் கேட்கவில்லை.''

அபராஜிதன் மௌனமானான். மயிலழகு குனிந்த தலையுடன் நின்று கொண்டிருந்தவள், அரசரை நிமிர்ந்து பார்த்தாள்.

''மயிலழகு! அவர்களை நீ எப்போது சந்திக்கப் போகிறாய்?''

''அவர்கள் கூறியபடி நாளை வந்து விடுவார்கள்.''

''அவர்களைச் சந்தித்து என்னிடம் அழைத்து வா!''

தலையை அசைத்த மயிலழகை நோக்கி அபராஜிதன் ''பல்லவ அரசர் அழைப்பதாகச் சொல்ல வேண்டாம்'' என்று கூறியபோது மயிலழகு அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''அதெப்படி முடியும்'' என்பதுபோல தோன்றியது அந்தப் பார்வை.

''மாளிகைக்கு அழைத்து வந்தால், அவர்கள் புரிந்து கொண்டு விடுவார்கள் என்று நினைக்கிறாயா?'' என்று அபராஜிதன் கேட்டபோது மயிலழகு தலையை அசைத்தாள், மறுப்பது போல.

''நான் ஒரு யோசனை சொல்கிறேன். வைகுண்டநாதர் கோயிலைப் பற்றி அவர்களிடம் புகழ்ந்து சொல். அங்கே பல்லவர்களின் சரித்திரம் ஆதி முதல் சிற்ப வடிவில் இருப்பதை எடுத்துச் சொல். அதைக் காணும் ஆவலில் அவர்கள் வருவார்கள். நான் அங்கே வேறு வடிவில் இருக்கிறேன். நான் அவர்கள் சில கேள்விகள் கேட்கிறேன். அவர்கள் உண்மையாகவே கலை ரசிகர்களா இல்லையா என்பது தெரிந்துவிடும் என்ன?'' என்று அபராஜிதன் யோசனை கூறினான்.

கயிலாசநாதர் கோயிலுக்கு மயிலழகு வருவதற்குச் சற்று நேரமாகிவிட்டது. அவள் வரும்போது, விக்கியண்ணனும், ஆதித்தனும் இளவரசியின் பணிப்பெண்ணுடன் பேசிக் கொண்டிருந்தனர்.

○



01 09 20

## 26. பரிசு தருகிறேன்

பல்லவ நாட்டு இளவரசி வைரக்கண்ணி வசித்து வந்த மாளிகை அளவில் சிறியதாக இருந்தாலும் பெரிய நந்தவனத்தின் நடுவே இருந்தது. நந்தவனத்தை ஒட்டி வேகவதி ஆறு ஓடிக் கொண்டிருந்தது. வேகவதி ஆற்றைக் கடந்தால், சமண தீர்த்தங்கரர்களுடைய திருக்கோயில் திகழும் சமணக் காஞ்சி.

வைரக்கண்ணியின் நடமாட்டத்திற்குக் கட்டுப்பாடு இருந்தது. ஆனால் அவளுக்கு அதைப் பற்றி ஏதும் தெரியாது. இளவரசிக்குத் தெரியாமல், அவளைக் காண வருபவர்களைக் கண்காணிக்குமாறு, அபராஜிதன் ஒற்றர் படைத் தலைவரிடம் கூறியிருந்தார்.

மாளிகைக்கு வந்த நாளிலிருந்து ஒவ்வொரு கணமும் அவள் ஆதித்தனை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். அவனுடைய பெயரை அவள் கேட்டறியவில்லை. அவனுடைய ஊரும் அவளுக்குத் தெரியாது என்றாலும், அவனுடைய அகன்ற புஜமும், ஒளி மிகுந்த விழிகளும், அழகிய மீசையும் அவளைப் பெரிதும் கவர்ந்துவிட்டன.

கவிராயரையும் அவள் எதிர்பார்த்தாள். அவர் எப்போது வருவார் என்று அவளுக்குத் தெரியாது என்றாலும் கவிராயராகத் திகழ்ந்த விக்கியண்ணனுடன் பேசிக் கொண்டிருக்க வேண்டும் என்ற ஆவல் அவளுக்கு இருந்தது.

பணிப்பெண்ணிடம் அடையாளங்களைத் தெரிவித்து அவள் அனுப்பினாள். பணிப்பெண் இரண்டு மூன்று முறை கயிலாயநாதர் ஆலயத்திற்குச் சென்றாள். கடைசியாக ஆதித்தனையும், விக்கியண்ணனையும் சந்தித்தாள். மாளிகைக்கு அழைத்துச் சென்றாள்.

அவர்களிருவரும் மாளிகைக்குச் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த மயிலழகு பெருமூச்சுவிட்டாள். அவர் களிருவரும் எங்கே செல்கிறார்கள் என்பதைக் கண்டறியப் பின்தொடர்ந்தாள்.



வைரக் கண்ணியின் மாளிகைத் தோட்டத்திற்குள் அவர்கள் பணிப்பெண்ணைப் பின் தொடர்ந்து செல்வதைக் கண்டவுடன் அவளுக்கு ஏற்பட்டது ஆவலா, பொறாமையா, சீற்றமா என்று அவளுக்கே தெரியவில்லை.

நந்தவனத்திற்கு வெளியே அவள் மட்டும் தனியே நிற்கும்போது குதிரை மீதமர்ந்த வணிகனொருவன் அவளை நெருங்கி, பல்லவ சக்கரவர்த்தியின் மாளிகைக்குச் செல்லும் வழியை வினவினான். மயிலழகு குதிரை மீதிருந்த வாலிபனை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தாள்.

''அயல் ஊரோ?'' என்று அவள் கேட்டாள்.

குதிரை மீதிருந்த வாலிபன், கீழே இறங்கினான். தலைப் பாகையை அவிழ்த்து முகத்தில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக் கொண்டான்.

''ஆமாம், அயலூர். தெற்கே...'' என்றான்.

''தெற்கே என்றால் தென்குமரி வரையிலும் தெற்கு தான். பாண்டிய நாடோ?'' என்று மயிலழகு கேட்டாள்.

''இல்லை, தஞ்சாபுரி...'' என்றான் வாலிபன்.

''ஓகோ! சோழ நாடா?'' என்று சர்வசாதாரணமாகக் கேட்டாள் மயிலழகு.

''உனக்குத் தஞ்சாபுரியைத் தெரியுமா?'' என்று வாலிபன் கேட்டான்.

வாலிபன் எடுத்த எடுப்பிலேயே, 'நீ, உனக்கு' என்று பேசுவதைக் கண்டு, வாலிபனை ஓரக்கண்ணால் ஒருமுறை பார்த்துவிட்டு, அவன் வேண்டுமென்றே அவ்வாறு அழைக்க வில்லை என்பதை உணர்ந்து, ''தஞ்சாபுரியும் தெரியாது, சோழ நாடும் தெரியாது. ஆனால், சமீப காலத்தில் தஞ்சை, சோழ நாடு என்று சொல்லிக் கொண்டு வருபவர்கள் அதிகமாகி விட்டார்கள்'' என்று கூறி முகத்தைத் திருப்பிக் கொண்டு நடக்கத் தொடங்கினாள் மயிலழகு.

''நான் கேட்டதற்கு மறுமொழி கூறாமல் நீ நடந்து கொண்டிருக்கிறாயே?'' என்றான் வாலிபன்.

மயிலழகு சற்று நின்றாள்.

''நீங்கள் என்ன கேட்டீர்கள்?''



01 09 20

''மாளிகைக்குச் செல்லும் வழியை.''

''வழி கூறினால் தெரியாது. அதனால் என்னைப் பின்தொடர்ந்து வாருங்கள்'' என்றாள் மயிலழகு.

வாலிபன் தொண்டையைக் கனைத்துக் கொண்டான்.

''மிகத் தொலைவோ?''

''ஆமாம்.''

''அப்படியென்றால் உங்களுக்கு ஆட்சேபணை ஏதும் இல்லையென்றால் குதிரையில் அமரலாம்..''

அவன் அவ்வாறு கூறியவுடன், மயிலழகு அவனைச் சுட்டெரித்து விடுவதுபோல் பார்த்தாள்.

''சோழ நாட்டில் இப்படித்தான் வழக்கமோ? கன்னிப் பெண்ணைக் குதிரை மீதேற்றி, இளம் வாலிபன் அழைத்துச் செல்வது?'' என்று சீறினாள்.

''நான் எங்கேயும் அழைத்துச் செல்லவில்லையே. நீங்கள் நடந்து வரவேண்டாம். வெயில் காலைச் சுடுமே. குதிரையில் ஏறி அமர்ந்து கொண்டால் நான் நடந்து வரலாம் என்று எண்ணினேன். நீங்கள் வேறுவிதமாக எண்ணிவிட்டீர்கள் போலிருக்கிறது'' என்றான் மெல்ல.

மயிலழகு உதட்டை மெல்லக் கடித்துக் கொண்டாள். அவசரப்பட்டுவிட்டோம். சந்தேகப்பட்டுவிட்டோம் என்றாலும், வாலிபன் பேச்சில் மிகக் கெட்டிக்காரனாக இருக்கிறான். உம். இருக்கட்டும்.

''சோழ நாட்டவர்கள் பேச்சில் கெட்டிக்காரர்கள்'' என்றாள் மயிலழகு.

''சோழ நாட்டுக் கெட்டிக்காரர்கள் பலரை நீ சந்தித் திருக்கிறாயா?'' என்று வாலிபன் கேட்டான். மயிலழகு நடந்து கொண்டே இருந்தாள். வாலிபனும் குதிரையைப் பிடித்துக் கொண்டு நடந்து சென்றான். அவ்வப்போது அவளை ஒருமுறை பார்த்துக் கொண்டான். மயிலழகும் அவனைக் கடைக்கண்ணால் நோக்கியவாறு நடந்தாள்.

சோழ நாட்டிலிருந்து முன்பு இருவர் வந்துள்ளனர். இப்பொழுது மற்றொருவர். எதற்காக இவர்கள் பல்லவ நாட்டிற்கு வந்து கொண்டிருக்கிறார்கள்?



இவரும், சோழ நாட்டிற்கு வருமாறு நம்மை அழைப்பாரோ?

''பல்லவ அரசருடைய மாளிகைக்கு எதற்காகப் போகிறீர்கள்?'' என்று மயிலழகு கேட்டாள்.

வாலிபன் திரும்பிப் பார்த்தான். குதிரை மீதிருந்த மூட்டையைத் தொட்டு அதைச் சரியாமல் நகர்த்தினான்.

''நான் ஒரு புடைவை வியாபாரி. மாளிகைக்குச் சென்றால், விதவிதமான புடவைகளை அவர்களிடம் காட்டி வியாபாரம் செய்ய விருப்பம்'' என்றான்.

மயிலழகு சிரித்தாள். ஏன் சிரிக்கிறாய் என்று கேட்பது போல் அவளை அவன் திரும்பிப் பார்த்தான்.

''காஞ்சியில் இல்லாத புடைவைகளா? நீங்கள் என்ன புதுமையாகக் கொண்டு வந்திருக்கக் கூடும்?'' என்று குறும்புத்தனம் சொற்களில் மிளிரக் கேட்டாள்.

''புடைவைகளைப் பார்த்தால் பிரமித்து விடுவாய்'' என்றான் வாலிபன்.

''என்னைப் போன்ற பேதைகளுக்குப் பிரமிப்பு ஏற்படும். ஆனால் அரச குடும்பத்தவர் மயங்கமாட்டார்கள். நீங்கள் அங்கு செல்வது வீண்'' என்றாள் மயிலழகு.

''வீண் என்று சொல்லாதே. நீயே பிறகு சொல்வாய் இவ்வளவு அழகிய வண்ண விசித்திரங்களாலான புடைவையைப் பற்றி. தங்க இழைகள் நிறைந்த பட்டுப்புடைவை'' என்று மிகப் பெருமிதத்துடன் பேசினான் வாலிபன். அவன் எதையோ அறிந்து கொள்ள விரும்பிப் பேசிக் கொண்டே சென்றான்.

மயிலழகும் அவனிடமிருந்து ஏதோ அறிந்து கொள்ள விரும்பினாள். தஞ்சையைப் பற்றியும், சோழ நாட்டைப் பற்றியும் தெரிந்து கொள்ளத் துடித்தாள்.

''காஞ்சிபுரத்தில், தரமான பட்டுப் புடைவைகளை நெய்வதற்கென்றே பல குடும்பங்கள் இருக்கின்றனர். அவர்கள் திறமைக்கு உங்கள் நாட்டுப் புடைவைகள் ஈடு இணையாகாது'' என்று அவள் கூறும்போது ஒரு கணம் அவளுக்குப் புடைவை வியாபாரியுடன் ஏன் இப்படி வீணே பேசிக் கொண்டு வருகிறோம் என்றும் தோன்றியது.

''ஐயா, இங்கிருந்தே நான் வழிகாட்டுகிறேன். நீங்கள் போகிறீர்களா?'' என்று கேட்டாள்.



01 09 20

''அடடா! அதற்குள் உனது மனம் மாறிவிட்டதே! உங்களுக்கு முதலில் நான் கொண்டு வந்திருக்கும் புடைவைகளைக் காட்ட நினைத்தேன். உங்கள் வீடு எங்கே இருக்கிறது?'' என்று கேட்டான்.

மயிலழகு மௌனமானாள். அவள் தன் வீடு என்று எதைக் குறிப்பிடுவாள்? தன்னைப் பற்றி எவ்வாறு அறிமுகப்படுத்திக் கொள்வாள்.

திடீரென்று அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது.

''ஐயா, வியாபாரியே! என் வீடு அந்த நந்தவனத்தருகே இருக்கிறது'' என்றாள்.

''நந்தவனத்தின் நடுவே மாளிகையொன்று இருந்ததைப் பார்த்தேன்'' என்றான் வாலிபன்.

''அந்த மாளிகையே தான்...''

''அப்படியென்றால் நீ பெரும் செல்வரின் மகள் என்று நீ சொல்லு...''

வாலிபர் இப்படிக் கேட்டவுடன் மயிலழகு குலுங்கக் குலுங்கச் சிரித்தாள்.

அவள் தோளும், மார்பும் குலுங்குவதையும் விழியில் மெல்லிய நீர்க்கோடுகள் திரையிட்டிருப்பதையும் கண்ட வாலிபன், இவள் தன்னை முட்டாளாக்குகிறாளோ என்று திகைத்தான்.

''ஐயா பட்டுப் புடைவை வணிகரே! நான் செல்வரின் மகளும் அல்லள், அந்த மாளிகை என் வீடுமன்று. அந்த மாளிகை இளவரசியினுடையது. நான் அங்கே பணிபுரிபவள். அங்கேயேதான் நான் தங்குகிறேன். என் வீடு அதுதான். உற்றார் உறவினர் அங்கே இருப்பவர்கள்தாம்'' என்றாள்.

அவளுடைய பேச்சு சற்று நம்பக் கூடியதாக இருந்தது.

''அப்படியென்றால், நான் கொண்டு வந்திருக்கும் புடைவைகளை நீயும் பார்க்கலாம். இளவரசியும் பார்க்கலாம். நீயும் சிபாரிசு செய்யலாம்'' என்று கூறிய வாலிபன் சற்று நின்றான். குதிரையைத் திருப்பினான்.

''உன் பெயரைக் கேட்காமல், 'நீ-உன்னை' என்றே அழைக்கிறேன். உன் பெயரென்ன?'' என்று கேட்டான் வாலிபன்.



''அப்படியே அழைக்கலாம், நான் மட்டும் உங்களைப் பற்றி விசாரித்தேனா?'' என்றாள்.

''இளவரசியின் பணிப்பெண்ணே! நீ எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும். உதவி செய்தால் உனக்கு ஒரு பரிசு தருகிறேன்'' என்றான் வாலிபன்.

''உதவியா?'' - மயிலழகு அவன் முகத்தை உற்று நோக்கினாள்.

அவன் விழிகளில் ஒருவிதக் காந்த சக்தி இருப்பது தெரிந்தது.

''ஆம்; சிறு உதவிதான். உன்னால் செய்யக்கூடிய உதவிதான்...'' என்றான் வாலிபன்.

''உங்கள் வியாபாரத்தில் ஒத்துழைப்பு - அவ்வளவு தானே? எங்கள் இளவரசி ஒரு மாதிரி. மிகவும் கண்டிப்பானவள். என்னுடன் கூட அவள் சரிவரப் பேசமாட்டாள். நான் உங்களை அறிமுகப்படுத்திவிட்டு வெளியே நின்றுவிடுவேன்...'' என்றாள்.

''அந்த உதவியை நான் கேட்கவில்லை. பல்லவ சக்கரவர்த்தியின் மாளிகையில் நான் தடங்கலின்றிச் செல்ல வகை செய்ய வேண்டும்...'' என்று கூறிச் சற்று நிறுத்தினான்.

''அவ்வளவு தானே...? என்னால் முடிந்த அளவு செய்கிறேன்'' என்றாள். எந்தத் துணிவுடன் அவ்வாறு கூறினாள் என்றே அவளுக்குப் புரியவில்லை. இருந்தாலும் அந்த வியாபாரியிடம் ஏதோ ரகசியம் புதைந்திருக்கிறது என்பதை உணர்ந்தாள். அத்துடன் புடைவை வியாபாரியை இளவரசி யிடம் அழைத்துச் செல்வதுபோல, சோழ நாட்டவர்கள் இருவரும் இளவரசியிடம் என்ன பேசுகிறார்கள் என்பதை அறிந்து கொள்ளலாம் என்றும் முடிவு செய்தாள்.

''நான் உனக்கு ஒரு பரிசு தருகிறேன் என்று கூறினேனே, என்ன பரிசு என்று கேட்கவில்லையே?''

''எனக்குப் பரிசு வாங்கிப் பழக்கமில்லை. பரிசுக்காக, அன்பளிப்புப் பெறுவதற்காக நான் எந்தக் காரியமும் செய்பவளும் அல்லள்'' என்றாள் மயிலழகு.

''நீ அபூர்வப் பெண்தான். பரிசு... ஒரு புடைவை... தகதகவென்று பளபளக்கும் பட்டுப் புடைவை'' என்றான் வாலிபன்.


01 09 2

''அதற்கெல்லாம் நான் மயங்கமாட்டேன்'' என்றாள் மயிலழகு.

''பரிசுக்காக உதவவில்லை என்றால், வேறு எதற்காக நீ எனக்கு உதவ முடியும்?'' - வாலிபன் கேட்டான்.

''வேற்று நாட்டவர் என்பதால்'' என்றாள் மயிலழகு.

''சோழநாடு பல்லவநாட்டிற்கு அயல் நாடா?''

''ஆமாம்.''

''நான் அப்படி நினைக்கவில்லை. ஒரு காலத்தில் இந்தக் காஞ்சிபுரம் சோழர்களுக்கு உரியதாயிருந்தது.''

''பொய்... நல்ல கற்பனையுடன் பேசத் தெரிந்தவர். இப்போது சோழநாடு பல்லவர்களுக்கு அடிமைப் பட்டிருக்கிற தென்பது உங்களுக்குத் தெரியாதா?'' - மயிலழகு சற்றுக் கண்டிப்பான குரலில் பேசினாள்.

மயிலழகு அவனை வியப்புடன் நோக்கினாள்.

''ஆமாம், நாங்கள் அடிமைத் தளையிலிருந்து விடுபட முடிவு செய்துவிட்டோம்....'' என்று உறுதியுடன் அவன் பேசியதைக் கேட்டு மயிலழகு திகைத்தாள்.

''நாங்கள்... என்றால் இன்னும் யார், யாரைச் சொல்கிறீர்கள்?'' என்று மயிலழகு கேட்டதற்கு வாலிபன் கூறிய மறுமொழி அவளைத் திடுக்கிடச் செய்தது.

○



## 27. மன்னர் அனுப்பிய பரிசு

சோழ நாட்டினின்று பட்டுப் புடவைகள் கொண்டு வந்த அந்த இளைஞன் தன் பெயர் அமுதன் என்று சொல்லிக் கொண்டான். தான் காஞ்சி நகரத்திற்கு வந்தது புடைவை விற்கவன்று என்றும், தஞ்சை நகரிலிருந்து வந்திருக்கும் பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளையைத் தேடுவதற்கு என்றும் சொல்லிக் கொண்டான்.

மயிலழகு திடுக்கிட்டாள். ''தஞ்சையிலிருந்தா?'' என்று கேட்டாள்.

''ஆமாம்... தஞ்சையிலிருந்துதான் அவர் வந்திருக்கிறார்'' என்றான் அமுதன்.

''நீங்கள் அவருக்கு என்ன உறவு?'' மயிலழகு கேட்டாள், விழிகளைக் கூர்மையாக்கிக் கொண்டு.

''நான் அவர் வீட்டுப் பணியாள்'' என்றான் அமுதன். அவளை ஊடுருவுவது போல் பார்த்துக் கொண்டு.

''ஏன் அவரைத் தேடி வந்தீர்கள்?''

''அவர் வீட்டை விட்டுப் புறப்பட்டுப் பல நாள்கள் ஆகின்றன.''

''ஏன் அவர் வீட்டை விட்டுப் புறப்பட்டார்? ஏதாவது கோபமா?''

''கோபமில்லை. அவர் பல்லவ நாட்டைச் சுற்றிப் பார்க்க விரும்பினார்.''

''அவர் மட்டும்தானா வந்தார்? அவருடன் யாரும் வரவில்லையா?''

''வந்திருக்கிறார். அவருடைய நண்பர்.''

''அப்படியென்றால், நீங்கள் தேடி வருவானேன்?''

''அவரது தந்தைக்கு உடல்நலம் சரியில்லை. அவரது மனைவி அவரை அழைத்து வரச் சொன்னார்கள்...''



01 09 2

அமுதன் இவ்வாறு கூறியவுடன் மயிலழகு மீண்டும் அதிர்ச்சிக்குள்ளானாள்.

''அவருக்குத் திருமணமாகிவிட்டதா?'' - என்று வியப்பு மிகக் கேட்டாள்.

''ஆமாம். உன் முகம் ஏன் இப்படி மாறிவிட்டது?'' என்று அமுதன் கேட்டான்.

மயிலழகு தன் முக மாறுதலைப் புலப்படுத்தாமல் இருக்க முனைந்து புன்முறுவலுடன், ''பாவம், இளம் மனைவியைத் தனியே விட்டுவிட்டு வந்துவிட்டார். அவருடைய மனைவி பிரிவாற்றாமையால் மிகவும் ஏக்கம் கொண்டிருப்பாள். பாவம் அப்படித்தானே?'' - மயிலழகு விழிகளைச் சுழல விட்டவாறு கேட்டாள்.

''பிரிவாற்றாமைத் துயரத்தை நீ அனுபவித்திருக்கிறாயா?'' என்று உதடுகளில் குறும்புத்தனம் மிளிரக் கேட்டான்.

''திருமணமானவர்களுக்கு மட்டும்தான் ஏக்கமா? ஆகாதவர்கள் காதல் வேதனையால் தவிக்க மாட்டார்களா?'' என்று மயிலழகு கேட்டாள்.

''எனக்கு எப்படித் தெரியும்?'' என்று உதட்டை மடித்துக் கொண்டான் அமுதன்.

''உங்களுக்குத் திருமணமாகிவிட்டதா?'' மயிலழகு கேட்டாள்.

''இல்லை...'' என்று கூறும்போது குரலில் நாணம் மிளிர்ந்தது.

''காதல் அனுபவமுண்டா?'' மயிலழகு கேட்டாள்.

''இன்று காலை வரையிலில்லை'' - அமுதன் சிரிப்பை அடக்கிக் கொண்டான்.

''காலைக்குப் பிறகு காதல் பிறந்து விட்டதா?'' - மயிலழகு திகைப்புடன் கேட்டாள்.

''ஆமாம், இதுவரை அனுபவித்தறியாத காதல் உணர்வு...'' என்றான் அமுதன் அவளது விழிகளை நோக்கியவாறு.

''காஞ்சிக்கு வந்த பிறகு காதலா?''

''ஆமாம். இந்த நந்தவனத்திற்கு அருகே வந்தவுடன் காதல் உதயமாகிவிட்டது. இப்படி காதல் திடீரென்று தோன்றுவதை எதற்கு ஒப்பிடலாம்?''



''மின்னலுக்கு ஒப்பிடலாம். ஒரு கணத்தில் கடலினின்று எழும் முழுமதிக்கு ஒப்பிடலாம். இரவில் மொக்காக இருந்து, ஒரு கணத்தில் மலர்ந்துவிடும் மலருக்கு ஒப்பிடலாம்....''

''ஆகா, என்ன அருமையாக வர்ணிக்கிறாய்...?''

''உம், சொல்லுங்கள். இந்த நந்தவனத்திற்கு அருகே வந்தவுடன் காதல் உதயமாகிவிட்டது. பிறகு...? தஞ்சை நகரத்தில் நீங்கள் சந்தித்த காதலியின் வடிவத்தை நினைத்துக் கொண்டீர்களா? அல்லது...?''

''தஞ்சையில் காதலி யாரும் எனக்கு இல்லை. சோழ நாட்டிலும் இல்லை. காஞ்சிக் காதலி என் எதிரே தோன்றினாள்... நீ சொன்னது போல் அவளைக் கண்டவுடன் மொக்கு மலர்ந்து மணம் வீசிவிட்ட...''

அமுதன் கூறியதைக் கேட்டு மயிலழகு சுற்றுமுற்றும் பார்த்தாள்.

''யாரையும் காணோமே? நீங்கள் வரும்போது அவள் இங்கிருந்தாளா? அழகானவளா? இளம் பெண்ணா?''

''அழகானவள். இளம் வயது. காந்தம்போல் கவரக் கூடியவள். முகபாவங்கள் அடிக்கடி மாறும். நான் வரும்போதும் இங்கேயே இருந்தாள்.''

''அப்படியா...? ஆச்சர்யமாயிருக்கிறதே... அதற்குள் எங்கே போயிருப்பாள்? நான் பார்க்கவில்லையே?''

''எங்கேயும் போகவில்லை. இங்கேதான் இருக்கிறாள். நீயும் பார்க்கிறாய்...''

அமுதன் கூறியவுடன் மயிலழகு ஒரு கணம் திகைத்தாள். பிறகு, ''ஐயா, புடைவை விற்பவரே, புதிர் போடுகிறீர்களா?'' என்றாள்.

''புதிர் போடவில்லை. காஞ்சிக் காதலியே! என் உள்ளம் கவர்ந்தவளை நான் என் கண்களால் இதோ எதிரில் காண்கிறேன்'' என்றவுடன் மயிலழகின் முகம் நாணத்தால் சிவந்தது. என்றாலும் வெளியே புலப்படுத்திக் கொள்ளாமல், ''ஓ! ரொம்பவும் துணிச்சலுடையவர்... ஒரு கணத்தில் என் மீதே காதல் கொண்டுவிட்டீரே! உங்கள் எசமானரைத் தேடி வந்ததை விட்டுக் காதல் புரியத் தொடங்கிவிட்டீரா. ரொம்பவும் அழகுதான். இப்படி இன்னொரு தடவை பேசினால் நான் பேசாமல் போய்விடுவேன்...'' என்று சீறினாள். ''சீற்றத்திலும்



01 09

ஓர் அழகு இருக்கிறது. உண்மை சொன்னவுடன் கோபிக்கிறாய், மறைத்துப் பேச எனக்குத் தெரியவில்லை'' என்றான் அமுதன்.

''மறைத்துப் பேசினீர்கள். வந்தவுடன் அரசரின் மாளிகைக்கு வழி கேட்டீர்கள், பொய்தானே?'' என்றாள் மயிலழகு.

''உண்மைதான். நான் பல்லவ சக்கரவர்த்தியைச் சந்திக்க விரும்பினேன்...'' என்றான் அமுதன்.

''ஏன்?'' - மயிலழகு கோபத்துடன் கேட்டாள்.

''மறுபடியும், மறுபடியும் சொல்லச் சொல்கிறாயா?''

''உங்களுடன் நான் பேச விரும்பவில்லை'' - மயிலழகு முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''பேச விரும்பாவிட்டால், போகிறது. இளவரசியை எனக்கு அறிமுகப்படுத்தினால் போதும்...'' என்றான் அமுதன்.

''நான் உங்களை மாளிகைக்குள் அழைத்துச் செல்லப் போவதில்லை...'' என்றாள் மயிலழகு. அவளிடம் மின்னும் கோபம் பொய்யானது என்பதை அமுதன் கண்டு கொண்டான்.

''நீ அழைத்துச் செல்லாவிடில் நான் நேரே கம்பீரமாகச் செல்கிறேன்'' என்றான் அமுதன்.

''காவலாளர்கள் விடமாட்டார்கள்....''

''உன் பெயரைச் சொல்கிறேன். கடை வீதியில் குதிரை மீது சென்று கொண்டிருந்த என்னை, நீ கைதட்டி அழைத்ததாகக் கூறுவேன்...''

''நம்ப மாட்டார்கள்.''

''இளவரசியின் திருமணத்திற்குப் பட்டுச் சேலைகள் கொண்டு வந்திருப்பதாகக் கூறுவேன். சக்கரவர்த்தி அனுப்பியதாகக் கூறுவேன்...''

''பொய்... பொய்...''

''பொய் என்று யாரும் சொல்ல மாட்டார்கள். என்னிடம் சேலைகளில்லாவிடில் தான் பொய்யாகும்....''

''உங்களுக்கு எப்படித் தெரியும். இளவரசிக்குத் திருமணம் நடைபெறப் போகிறதென்று?''

''பெண் என்றால் திருமணம் செய்து கொண்டு தானே ஆகவேண்டும். அதனால் சொன்னேன்.''



''பெண் என்றால் திருமணம் செய்து கொண்டுதான் ஆகவேண்டுமா? நான் கல்யாணம் செய்து கொள்ளப் போகப் போவதில்லை...'' என்று மயிலழகு முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''அப்படிச் சொல்லிவிட்டால்? நான் பிரம்மச்சாரியாக வாழ்நாளைக் கழிக்க வேண்டியிருக்குமே! நியாயமா?'' என்று அமுதன் சொன்னவுடன் உண்மையிலேயே மயிலழகு கோபங் கொண்டாள்.

''ஓ, வியாபாரியே! என்ன பேசுகிறதென்று தெரியாமல் பேசுகிறீர். உம்மிடம் முகங்கொடுத்துப் பேசத் துணிந்த என்னைத்தான் குறை சொல்லிக் கொள்ள வேண்டும்'' என்றாள்.

''பெண்ணே! உன் பெயரை அறிந்து கொள்ளாமலே நான் பேசிக் கொண்டிருக்கிறேன். நேரமாகிறது. பசி வயிற்றைக் கிள்ளுகிறது. உனக்குக் கோடி புண்ணியமுண்டு. இளவரசியிடம் என்னை அறிமுகப்படுத்திவிடு. அவர்கள் சேலைகளைப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே எனக்கு ஒரு வாய்ச் சோற்றிற்கும் ஏற்பாடு செய்துவிடு. இல்லாவிடில் நாவுக்கரசர் மடத்திற்குத்தான் செல்ல வேண்டும்....'' என்றான்.

''ஓ! நாவுக்கரசர் மடத்தை முன்பே அறிவீர்களா?'' என்று மயிலழகு கேட்டாள்.

''காஞ்சியிலே என்னென்ன செய்ய வேண்டும். என்ன நடக்கும் என்று சொல்லியனுப்பியிருக்கிறார்கள்...'' என்றான் அமுதன்.

''ஓ! அப்படியா...? இளவரசியைச் சந்திப்பீர்கள் என்று முன்பே தெரியுமா?''

''உம்; தெரியும். அழகிய மயில்போன்ற விழியுடைய மங்கை நல்லாளைச் சந்திப்பேன் என்றுகூடச் சொல்லியனுப்பி யிருக்கிறார்கள்...'' என்று அமுதன் கூறியபோது மயிலழகி திடுக்கிட்டாள்.

''என் பெயர் உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டாள்.

''தெரியும்; தெரியும். உன் விழியின் காந்த சக்தியையும் அறிவேன். ஏ! அழகுப் பெண்ணே! மாளிகைக்குள் சென்று பேசலாமா? எனக்கு இல்லாவிடினும், இந்த வாயில்லா ஜீவனுக்காகவது கொள்ளும், புல்லும், தண்ணீரும் வாங்கித் தந்தால் அடுத்த பிறவியில் அரச குமாரியாகப் பிறப்பாய்...'' என்று குழைந்தான்.



01 09

''இதேபோல் நாட்டியக் கலை அறிந்த சிற்பி மகளாகப் பிறந்தாலே போதும்'' என்று சொன்ன மயிலழகு உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

அமுதன் திரும்பிப் பார்த்தான். ''என்ன உனக்கு நடனம் தெரியுமா? நல்லதாகப் போச்சு. எனக்கு நாட்டியம் நன்றாகவே தெரியும். ஆகா! என்ன ஒற்றுமை! ஒற்றுமை!'' என்றான்.

மயிலழகு மௌனமானாள். பின்னர் ஒரு தடவை கடைவிழியால் அவனை நோக்கினாள். இனியும் அமுதனிடம் வீண் பேச்சு பேசி நேரத்தைக் கடத்த விரும்பவில்லை.

நந்தவனத்திற்குள் நுழைந்து, இளவரசியிடம் எவ்வாறு இவரை அறிமுகப்படுத்துவது என்பது அவளுக்கு ஒரு கவலையாகிவிட்டது. அங்கே சோழ நாட்டினின்று வந்த இருவர் இருப்பார்கள். அவர்கள் தன்னை அடையாளம் கண்டு கொள்வார்கள். மூட்டையை அவிழ்த்துச் சேலைகளை எடுத்துக் காட்டும்போது மெல்ல அங்கிருந்து நழுவிவிட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தாள்.

நழுவுவதா? சோழ நாட்டிற்குச் செல்ல வேண்டும். தஞ்சைக்குச் செல்ல வேண்டும் என்ற ஆவலை அதற்குள் அடக்கிக் கொண்டு விட்டாயா என்று உள் மனம் கேட்டது. சக்கரவர்த்திக்கு என்ன மறுமொழி கூறப் போகிறாய் என்றும் கேட்டுக் கொண்டாள்.

''ஐயா, சேலை வணிகரே!'' என்று மயிலழகு அவனை அழைத்தாள்.

''என் பெயர் அமுதன்! அமுதன் என்றழைக்கலாம் அல்லது சோழ நாட்டாரே என்று அழைக்கலாம்'' என்றான் அமுதன், நகைத்தவாறு.

''அமுதன் - அமுதன். அழகிய பெயர் ஆளைப் போல. பெயர் சொல்லி எப்படி அழைப்பது?''

''சோழ நாட்டிற்கு வருவதற்கு மட்டும் உனக்கு ஆசை. பெயரைச் சொல்ல ஆசையில்லையா? சரி, சரி எப்படி வேண்டுமானாலும் கூப்பிடு. சீக்கிரம் மாளிகைக்குள் என்னை அழைத்துச் செல்'' என்றான்.

தொலைவிலிருந்து பார்த்தால், காவலர்கள் இருவர் இருப்பது தெரிந்தது. அமுதன் பக்கம் திரும்பி, ''ஐயா, நீங்கள் இங்கேயே இருங்கள். நான் மாளிகைக்குள் சென்று வருகிறேன்'' என்றாள்.



''சீக்கிரம் வரவேண்டும்'' என்றான் அமுதன். தலையை அசைத்துவிட்டுச் சென்ற மயிலழகுக்கு இப்போது பயம் பிடித்துக் கொண்டது. இளவரசியின் பணிப்பெண் என்று, அமுதனிடம் பொய் சொல்லியிருக்கிறோம். காவலர்கள் தடுத்துவிட்டால் என்ன ஆவது என்ற கவலையுடன் சென்றாள்.

மாளிகைக்கு அருகே நெருங்கும்போது அவள் இதயம் படபடத்தது. ''இதென்ன வீண் விவகாரம்'' என்று எண்ணினாள்.

''வாம்மா, மயிலழகு'' என்ற ஆண் குரல் கேட்டது. காவல்காரருள் ஒருவன் முகமலர்ச்சியுடன் வரவேற்றான். அவனை அவள் இதற்கு முன்பு பார்த்தது கிடையாது என்றாலும், தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, ''நீர் இங்கு எங்கே வந்தீர்?'' என்றாள் கம்பீரமாக.

''இரண்டு நாட்களாக எனக்கு இங்கே காவல் பணி'' என்றான் அவன்.

நேரே உள்ளே சென்றவளைச் சற்று நிறுத்தி, ''மயிலு, இன்றைக்கு உன் நடனம் இங்கே இருக்கிறதா? மகாராஜா இன்றைக்கும் வருகிறாரா? என்று கேட்டான்.

''மகாராஜா இன்றைக்கும் வருகிறார்?'' மயிலழகு சற்று யோசித்தாள்.

''மகாராஜா நேற்று வந்தாரா?'' என்று கேட்டாள்.

''நேற்று வந்தாரம்மா. அபராஜித மகாராஜா அந்த இளவரசியிடம் மண்டியிடாத குறைதான். தன்னை எப்படியும் மணம் புரிந்து கொள்ள வேண்டும் என்று கெஞ்சுகிறார். இளவரசி வைரக்கண்ணி முகங் கொடுத்துப் பேசவில்லை. சற்றுக் கோபமாகக் கூடப் பேசிப் பார்த்தார்.''

''தளபதியைக் கொன்ற குற்றத்தை உன் மீது சுமத்துவேன்'' என்று பயமுறுத்தியும் பார்த்தார்.

''இளவரசி பயப்படவில்லை' தனியே சாலை வழியே வந்த என்னை வழிமறித்த உங்கள் தளபதி ஒரு வீரரா? என்னைப் பலவந்தமாகத் தூக்கிச் செல்ல முயன்றார். முடியவில்லை. தெய்வமாக அனுப்பியவர் போல் ஒரு வீரர் வந்தார். பல்லவ வீரர்கள் உயிருக்குப் பயந்து ஓடினர். உங்கள் தளபதி எதிர்த்துப் பார்த்தார். அவரிடமிருந்து வாளைப் பறித்தே அந்த வழிப்போக்கர் அவரைத் தாக்கி ஓட்டினார். அவரை நானோ அந்த வழிப் போக்கரோ கொலை செய்யவில்லை' என்று அழுத்தந் திருத்தமாக இளவரசி சொல்லி விட்டார். இளவரசியின் மனத்தை



01 09

எப்படியும் மாற்ற, ஒரு வேளை உன்னைக் கொண்டு முயல்கிறாரோ என்று கேட்டேன்'' என்றான் காவல்காரன்.

மயிலழகுக்குச் சற்று எரிச்சலாக இருந்தது. அபராஜிதவர்மர் இளவரசியிடம் ஏன் காதல் பிச்சை கேட்க வேண்டும் என்று அவளுக்குப் புரியவில்லை. காவல்காரர்களே அரசரைக் கேவலமாகப் பேசுமளவுக்கு வந்துவிட்டதே என்று வேதனைப்பட்டாள்.

அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது. ''ஆமாம், ஆமாம். எப்படியாவது இளவரசியின் மனத்தை மாற்ற விரும்புகிறார் சக்கரவர்த்தி. அதற்காக ஏராளமான பட்டுப் புடைவைகளை ஒரு வியாபாரியிடம் கொடுத்து அனுப்பியிருக்கிறார். வியாபாரி வெளியே நிற்கிறார். அழைத்து வரலாமா என்று இளவரசியை அனுமதி கேட்க வந்தேன்'' என்றாள்.

''இளவரசியிடம் அனுமதியா? நானல்லவா அனுமதி கொடுக்க வேண்டும்? மயிலழகு! சேலை வியாபாரியை அழைத்துச் செல்லம்மா. இளவரசிக்கு நல்ல பட்டுப் பட்டாடைகள் வாங்கிக் கொடு. நீயும் இரண்டு எடுத்துக் கொள்'' என்றான். முகத்தில் அசட்டுச் சிரிப்பு வழிய.

மயிலழகு உடனே திரும்பினாள். குதிரை அருகே ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்த அமுதனை நோக்கி, 'சோழ நாட்டாரே! வாருங்கள். இளவரசியிடம் நீர் கொண்டு வந்திருக்கும் துணி மூட்டையைப் பிரித்துக் காட்டுங்கள்'' என்றாள். அமுதனும், மயிலழகும் அந்த மாளிகைக்குப் புதியவர்கள். மாளிகையின் நடுக்கூடத்தில், விக்கியண்ணன் மட்டுமே அமர்ந்திருந்தான்.



கிளை நூலகர்
தூத்துக்குடி சிதம்பரநகர்

## 28. சிற்பிகளே கத்தி ஏந்துங்கள்

மாசி மாதத்து மகம் திருவிழா வருவதற்கு இன்னும் இரண்டு நாள்களே இருந்தன. மாமல்லபுரம் களைகட்டிவிட்டது. இப்போது சில ஆண்டுகளாக கடல் மல்லை என்றழைக்கப்படும் மாமல்லபுரத்தில் வாணிபம் குறைந்துவிட்டது. அயல்நாட்டுக் கலங்கள் கடல்மல்லைத் துறைக்கு வருவதும் குறைந்துவிட்டன. கடல்மல்லைத் துறை அலைகளால் மணல்மேடிட்டு விட்டதால் பெருங்கலங்கள் கடல்துறைக்கு வெகு தொலைவிலேயே நங்கூரம் பாய்ச்ச நேர்ந்தது. பண்டங்களை இறக்குவதும் ஏற்றுவதும் குறைந்ததால் வணிகர்கள் வருவதும் கடல்மல்லையில் தங்குவதும் குறைந்தன.

விருந்தினர் விடுதிகள் ஜனசந்தடியற்று இருந்தன. அரியும், அரனும் ஒன்றாய் எழுந்தருளியிருக்கும் இராஜசிம்மேச்வரம் கோயிலின் அர்த்தஜாம பூஜை முடிந்து பட்டர்களும், சிவாசாரியர்களும் புறப்பட்டுவிட்டனர்.

மீன்விழி நந்திச் சிற்பத்திற்கருகே நாள்தோறும் நிற்பதைக் கவனித்த அவளை அறிந்த பட்டர் ஒருவர் அவளை நெருங்கிப் புன்முறுவல் பூத்தார்.

''நீ மீன்விழிதானே?'' என்று கேட்டார்.

மீன்விழி புன்முறுவல் பூத்து, ''ஆமாம், பட்டரே! என்னை மறந்துவிட்டீர்களா?'' என்று கேட்டாள்.

-''மறந்திருந்தால் கேட்பேனா? உன் தந்தை சௌக்கியமாக இருக்கிறாரா? இப்போது திருப்பணி எங்கே நடக்கிறது?'' என்று கேட்டார்.

மீன்விழி மறுமொழி கூறினாள். மெல்ல அங்கிருந்து நகர முயன்றாள்.

''இரண்டு நாள்களாக, இதே வேளையில் நீ இங்கே நிற்பதைப் பார்க்கிறேன்'' என்று பட்டர் மேலும் கேட்டார்.

மீன்விழி தலையை அசைத்தாள். ''மாசி மகத்திற்கு எனது உறவினரொருவர் வருவதாகக் கூறியிருந்தார். அவருக்கு நான்

தங்கியிருக்கும் இடம் தெரியாது. அதனால்தான்'' என்று கூறியவள், மெல்ல, செல்லத் தொடங்கினாள்.

''எங்கே தங்கியிருக்கிறாய்?'' என்று கேட்ட பட்டருக்கு, ''பூஞ்சேரியில்'' என்று மெல்லச் சொல்லிவிட்டு நடந்தாள் மீன்விழி.

ஏமாற்றத்தாலும், களைப்பாலும், சோர்வுற்றிருப்பது அவளது நடையிலிருந்தே தெரிந்தது. சோழ நாட்டவர்கள் இதுவரை வரவில்லை. உம்... ஒருவேளை மகத்தன்று வருகிறார்களோ?' என்று நினைத்துக் கொண்டாள்.

இரவு முழுவதும் அவளுக்கு உறக்கம் வரவில்லை. எவ்வளவு காலம் தந்தையுடன் கலை, கலை என்று சொல்லிக் கொண்டு ஊரெல்லாம் சுற்றி வருவது. அரசாங்க அதிகாரிகளுடன் பழகுவது, உறுதியான உள்ளத்துடன் எந்தச் சபலத்துக்கும் ஆளாகாமல் இருப்பது என்பதை நினைக்கும்போது அவளுக்குச் சோர்வு அதிகமாகியது.

'சோழ நாட்டவர்களுடன் எதற்காகப் பழகுகிறோம்? அவர்கள் சோழ நாட்டிற்கு அழைத்ததற்கு ஏன் சம்மதித்தோம்?' என்று தன்னையே கேட்டுக் கொண்டாள்.

'அவர்களைக் கடல்மல்லைக்கு வருமாறு ஏன் அழைத்தோம்? அவர்களுடன் தஞ்சைக்குச் சென்றுவிடுவ தென்று உறுதி கொண்டு விட்டோமா? அவர்களை நம்பலாமா? மயிலழகு கூறியதிலிருந்து, அவளையும் அவர்கள் அழைத்திருக்கிறார்கள் என்பது உண்மையாக இருக்குமா?' புரண்டு படுத்துக் கொண்டாள். ஒருமுறை தனக்குள்ளே சிரித்துக் கொண்டாள்.

கடற்காற்று சற்றுக் குளிரச் செய்தது. பனிப்படலம் நீங்கவில்லை. காஞ்சியினின்று கடல்மல்லைக்கு வரும் சாலை, அவள் தங்கியிருந்த வீட்டிற்கு மிக அருகே இருந்தது. பாரவண்டிகள் செல்லும் ஓசை கேட்டது. பின்பனிக்காலத்து, விடிகால வேளை, பூமிதேவியின் மெல்லிய போர்வையைக் கலைக்க விடிவெள்ளி உதயமாகிக் கொண்டிருந்தது. மீன்விழி அப்பொழுதே கண்ணயர்ந்தாள்.

யாரோ கதவைத் தட்டும் மெல்லிய ஒலி கேட்டு மீன்விழி திடுக்கிட்டு விழித்துக் கதவைத் திறந்தாள்.

பல்லவ மன்னர் அபராஜித வர்மனின் மெய்க்காவலருள் ஒருவர் நின்றிருந்தார். அவளுக்கு அறிமுகமானவர்தான்.



கண்களைக் கசக்கிக் கொண்டு, ''உள்ளே வாருங்கள்'' என அவரை அழைத்தாள்.

''இல்லை... நான் உடனே போயாக வேண்டும். ஒரு முக்கியமான செய்தியைச் சொல்ல வந்தேன்'' என்று கூறி அவளைக் கூர்ந்து நோக்கினார். வீட்டினுள்ளேயும் நோக்கினார்.

''உள்ளே, கிழவிதான் படுத்துக் கொண்டிருக்கிறாள். அயர்ந்து தூங்குகிறாள்...'' என்றாள் மீன்விழி.

''மகத்திற்குச் சக்கரவர்த்தி மாமல்லபுரம் வரவில்லை'' என்று கூறினார் மெய்க்காவலர்.

''அப்பாடா'' என்பது போல் நிம்மதிப் பெருமூச்சு அவளிடமிருந்து வந்தது.

''உன்னை உடனே காஞ்சிக்குப் புறப்பட்டு வர வேண்டுமாறு சக்கரவர்த்தி யோசனை கூறியுள்ளார்'' என்றார்.

'யோசனையா? கட்டளையே இடலாமே' என்று மீன்விழி நினைத்துக் கொண்டாள்.

''ஏன் இப்போதெல்லாம் சக்கரவர்த்தி திடீர் திடீரென்று தம் முடிவை மாற்றிக் கொள்கிறார்?'' - மீன்விழி கேட்டாள். மறுமொழியை எதிர்பார்க்காமலேயே, ''புதிய புதிய கோயில்களைக் கட்டப் போகிறேன் என்று அதற்கேற்ற கருங்கற்களைத் தேடி வருமாறு என் தந்தையிடம் கட்டளையிட்டார். திருத்தணிகைக்கருகே சிவாலயம் ஒன்று கட்டத் திட்டமிட்டார். திருத்தணிகை முருகனுக்குப் பொற்பூக்களால் அபிஷேகம் செய்யப் போவதாகக் கூறினார். இப்போது போருக்குப் படை திரட்டுகிறார். மாமல்லபுரம் செல்லுமாறு என்னைப் பணித்தார். இப்போது என்னைத் திரும்பவும் காஞ்சிக்கு வரச் சொல்லுகிறார்'' என்று சலித்துக் கொண்டாள்.

மெய்க்காவலர் திண்ணையில் உட்கார்ந்து சோம்பல் முறித்து, ''யுத்தத்திற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெறுகின்றன'' என்றார்.

''யாருடன் போர்?'' என்று மீன்விழி கேட்டாள்.

''உனக்குத் தெரியாதது உண்டா?'' என்று மெல்ல நகைத்த மெய்க்காவலர், ''மற்ற எவராவது கேட்டிருந்தால் நான் சொல்லியிருக்க மாட்டேன். கொங்கு நாட்டுடன் போர் தொடுக்கப் போகிறார் அரசர்'' என்றார்.



01 09 2

''திடீரென்று கொங்குநாட்டின் பக்கம் கவனம் திரும்பக் காரணம் என்ன?'' மீன்விழி கேட்டாள்.

''அங்கே ஏராளமாகத் தங்கமிருக்கிறது. நமது அரசருக்கு வேண்டிய தங்கம் கேட்டுத் தூதுவரை அனுப்பினார். கொங்குவேள் மறுத்துவிட்டார். அதனால்தான் போர்...'' என்றார் மெய்க்காவலர்.

மீன்விழி மறுமொழி ஏதும் பேசவில்லை. தூக்கம் கண்ணைச் சுழற்றியது. அதை அறிந்த மெய்க்காவலர், ''அரைத் தூக்கத்தில் விழித்தெழுந்துவிட்டாய் போல் இருக்கிறது. நான் போய் வருகிறேன். செய்தியைச் சொல்லத்தான் வந்தேன். இன்று மாலை காஞ்சிக்கு இரட்டைப் புரவி பூட்டிய ரதம் செல்கிறது. அதில் நீ ஏறிச்செல்ல நான் அனுமதி பெற்று வந்திருக்கிறேன்'' என்றார்.

''என்னை எதற்காக வரச் சொல்கிறார், அரசர்?'' என்று மீன்விழி கேட்டாள்.

மெய்க்காவலர் மெல்ல நகைத்தார். ''அம்மா மீன்விழி! உனக்குத் தெரியாததா எனக்குத் தெரியும்? நீ அரசரின் இதயம் என்று, உன்னைக் குறித்து அனைவரும் சொல்கிறார்கள். இதயத்திற்குத் தெரியாததா இந்த மெய்க்குத் தெரியப் போகிறது?'' என்று கேட்டார்.

''இதயமா? என்ன மெய்க்காவலரே, உங்கள் பேச்சில் கேலி நிறைந்திருக்கிறது'' என்று சற்றுக் கோபமாகக் கேட்டாள் மீன்விழி.

''கேலி இல்லை. மீன்விழி உண்மையைச் சொல்கிறேன். உனக்குத் தெரியாதது இந்த நாட்டில் மற்ற எவருக்கும் தெரியாது என்று எல்லாரும் பேசிக் கொள்கிறார்கள். பல்லவ தளபதி நடுச்சாலையில் கொலையுண்டது உனக்குத் தெரிந்திருக்கிறது. கொன்றவர் யார் என்பதும் உனக்குத் தெரியுமாம். அதனால் உன்னை வரவழைத்து உண்மைக் குற்றவாளியைக் கண்டறிய வேண்டுமாம். எதிரி நாட்டு ஒற்றர்களின் நடமாட்டம் பல்லவ நாட்டில் அதிகமாகிவிட்டதாக அரசருக்குச் செய்திகள் எட்டியிருக்கின்றன. அதனால்தான் உன்னைக் காஞ்சியில் சந்திக்க வருமாறு மன்னர் அழைத்திருக்கிறார்'' என்றார்.

''அயல்நாட்டு ஒற்றரை எனக்குத் தெரியுமா?' மீன்விழி சற்றே திகைப்புடன் கேட்டாள். பிறகு சிறிது நேரம் மௌனமாயிருந்தாள்.



''சரி; பொழுது நன்றாய்ப் புலர்ந்துவிட்டது. எனக்கு துறைமுகத்தில் ஒரு முக்கியவேலை இருக்கிறது. நான் செல்கிறேன். நீ காஞ்சிக்கு இரவு எந்த நேரமாயினும் சென்றுவிடு'' என்று மெய்க்காவலர் கூறிவிட்டுப் புறப்பட்டார்.

மீன்விழி, திண்ணையிலுள்ள தூணின் மீது சாய்ந்து கொண்டு சிந்தனையிலாழ்ந்தாள். தூக்கம் அவளை மெல்ல ஆட்கொண்டது. அப்பொழுது வீட்டிற்குள்ளே உறங்கிக் கொண்டிருந்த கிழவி விழித்தெழுந்து வெளியே வந்தபோது, மீன்விழி உட்கார்ந்தே தூங்குவதைக் கண்டு அவளைத் தட்டி எழுப்பிய பிறகே திடுக்கிட்டு எழுந்தாள் மீன்விழி.

உள்ளே சென்று, உறக்கமின்மையால் எரியும் விழிகளின் சூடு தணிய கிணற்றிலிருந்து தண்ணீரைக் குடங்குடமாக இழுத்துத் தலையில் கொட்டிக் கொண்டாள்.

பல்லவ மன்னரின் தற்போதைய போக்கு அவளுக்குப் பிடிபடவில்லை. தன் சகோதரியும் சோழ நாட்டிற்குச் சென்றுவிடுவாள். தான் மட்டும் பல்லவ நாடடில் சோர்வு நிறைந்த உள்ளத்துடனிருந்து என்ன பலன்? அவள் தனக்குத்தானே ஆத்ம விசாரணை செய்து கொண்டாள். தன்னுள் ஏற்பட்ட மாறுதலுக்குக் காரணம் என்ன? சோழ நாட்டவர்களை முதன் முதலில் சந்தித்தவுடனே மனப்புரட்சிக்கு வித்தூன்றி விட்டதை உணர்ந்தாள். சோழ நாட்டில் சிற்பப்பணிக்கு உதவுவது இருக்கட்டும். தனது வாழ்க்கையின் மறுமலர்ச்சிக்கு அவர்கள் உதவுவார்கள் என்றே எண்ணினாள். அதனால்தான் மாமல்லபுரத்தில் அவர்களைச் சந்தித்து, அவர்களுடன் சோழநாட்டிற்குச் சென்றுவிடுவதென்று முடிவு செய்திருந்தாள்.

மாசி மகத்தன்று அவர்கள் இருவரும் உறுதியாக வந்துவிடுவார்கள். ஒருவேளை ஓரிரு நாள்கள் முன்பாகவே வந்துவிடக்கூடும். அதற்காகக் காத்திருந்தாள் அவள். இருவரில் ஒருவரையும் காணவில்லை. அதற்கு மாறாக, அரசரின் மெய்க்காவலர் வந்து கூறிய செய்தி அவளுடைய சோர்வை அதிகமாக்கிற்று.

அரசரின் கட்டளைப்படி காஞ்சிக்கு உடனே புறப்படுவதா அல்லது, நாளை மாசி மகம் திருநாள் வரை காத்திருப்பதா? அருவிபோல் தலையில் நீரை ஊற்றிக் கொண்டே சிந்தித்தாள். போதுமென்ற மன நிறைவுடன் குளிப்பதை நிறுத்தி, உள்ளே சென்று வேறு ஆடையை உடுத்திக் கொண்டு, தலையைத் துவட்டிக் கொண்டிருக்கும்போது, 'அம்மா' என்ற குரல்



01 09 2

கேட்டது. வெளியே வந்தாள். சிற்பி வெள்ளீச்வரன் நின்று கொண்டிருந்தான்.

திருத்தணிகையிலிருந்து வெள்ளீச்வரன் இங்கு எப்படி வந்தான், ஏன் வந்தான் என்ற கேள்விக் கணையை வளைந்த புருவத்துடன் தனக்குள்ளே விடுத்துக் கொண்டாள்.

''நேற்று நடுநிசிக்கு மேல்தான் வந்தேன்'' என்றான் வெள்ளீச்வரன்.

தனது தந்தையின் உடல்நலத்தைப் பற்றியும், சிற்பப் பணிகளைப் பற்றியும் விசாரித்தாள் மீன்விழி.

''குருநாதரும் மாமல்லபுரம் புறப்படுகிறார்'' என்றான் வெள்ளீச்வரன்.

''ஏன்? பாறைகளைச் சமன்செய்யும் பணி அங்கே நடைபெறுகிறதே, அதை நிறுத்திவிட்டு இங்கே ஏன் வருகிறார்?'' என்று மீன்விழி கேட்டாள்.

''சிற்பப் பணிகளை உடனே நிறுத்துமாறு மன்னரின் கட்டளை. சிற்பிகளுள் உடல் வலிமை மிக்கவர்களைப் படையில் சேருமாறும் உத்தரவு'' என்றான் சிற்பி.

மீன்விழி திடுக்கிட்டாள். 'இது என்ன விசித்தரமான உத்தரவு! சிற்பிகள் படையில் சேர வேண்டுமா?' என்று எண்ணினாள்.

''அதனால் தந்தை மாமல்லபுரத்தல் வந்து தங்கிவிடப் போகிறார். நீங்கள் காஞ்சியில் இருப்பீர்கள் என்று காஞ்சிக்கு வந்தேன். தந்தை செய்தி சொல்லி அனுப்பியிருக்கிறார். காஞ்சியிலிருந்து நீங்கள் மாமல்லபுரம் வந்துவிட்டதாக அறிந்தேன்!'' என்றான் வெள்ளீச்வரன்.

''யார் சொன்னார்கள்?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

''மாசி மகம் வரையில் நீங்கள் இங்கே இருப்பீர்கள் என்று உங்கள் சகோதரி தெரிவித்தாள்.''

''இன்னும் என்ன சொன்னாள்?''

''மகத்திற்குப் பிறகு உங்களைச் சந்திக்க முடியாதாம்!''

''எதனால் அப்படிச் சொன்னாள்?''

வெள்ளீச்வரன் சற்றுத் தயங்கி, ''சோழ நாட்டிற்குச் சென்றுவிடப் போகிறீர்களாம். மாமல்லபுரத்தினின்று புறப்படப் போகிறீர்களாம். உங்கள் சகோதரி கூறினாள்'' என்றான். பிறகு தொடர்ந்து, ''அதனால்தான் நான் ஓட்டமும் நடையுமாக



காஞ்சியினின்றும் வருகிறேன். சிறிது தொலைவு வண்டி. பிறகு நடைதான். இரவு வந்து நீங்கள் தங்கியிருக்கும் இடம் தெரியாமல் அலைந்தேன்'' என்றான்.

''இப்போது எப்படிக் கண்டுபிடித்தாய்?'' என்று மீன்விழி கேட்டாள்.

''அரசாங்க அதிகாரியைச் சந்தித்தேன்...''

''அவர் என்ன சொன்னார்?''

''ஒன்றும் சொல்லவில்லை. நீங்கள் தங்கியிருக்குமிடம் சொன்னார். வசதியான வீடு, அமைதியான சூழ்நிலை'' என்று கூறி, அவன் மெல்லச் சிரித்தான். அவனது விழிகள் அவளுடைய மேனியின் மீது பரவின.

குளித்துவிட்டு புடைவையைச் சரிவர உடுத்தாமல் நெடிய கூந்தலைக் கோதிவிட்டுக் கொண்டிருக்கும் அவளது எழில் கொஞ்சி விளையாடும் பருவ மேனியைக் கலை உள்ளம் நிறைந்த அந்த இளைஞன் விழிகளால் பருக முயல்வதை மீன்விழியின் உள்மனம் உணர்த்தியது. அவள் மெல்ல, தனக்குள்ளே நகைத்துக் கொண்டாள். வெள்ளீச்வரன் ஏதோ சொல்லிக் கொண்டே போனான். ''அரசரின் போக்கு மாறித்தான் வருகிறது'' என்றான்.

''சிற்பப் பணியினை நிறுத்திவிட்டு, யுத்தத்திற்கு ஆயத்தம் செய்கிறார். நமது சிற்பப் பணிகள் என்ன ஆவது?'' என்று கேட்டான். பிறகு, ''மாமல்லபுரத்தில் எங்கே தங்குவது என்று கவலைப்பட்டேன். இங்கேயே தங்கலாம் என்று முடிவு செய்துவிட்டேன்'' என்று அவன் கூறியபோது மீன்விழி திடுக்கிட்டாள்.

○

# 29. காமத்துக்குக் கண் ஏது?

**மீ**ன்விழி மெல்லச் சிரித்தாள். வெள்ளீச்வரன் அவள் முகத்தையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தவன், தடாகத்தில் பூத்த அல்லி மலர் போல் அவளது சிரிப்பில் விரிந்த உதடுகளைப் பார்த்து உடலைச் சிலிர்த்துக் கொண்டான்.

''ஏன் சிரித்தீர்கள்?'' என்று வெள்ளீச்வரன் கேட்டான்.

மீன்விழி தாழ்வாரத்தைக் கடந்து சற்று மறைவான இடத்திற்குச் சென்றாள். தனது ஆடையைச் சரிசெய்து கொண்டு கால்களிலும், முதுகிலும் முத்துகள்போல் ஒட்டிக் கொண்டிருக்கும் நீர்த்துளிகளைச் சிற்றாடையால் மெல்ல ஒற்றி எடுத்தாள். அங்கிருந்தே குரல் கொடுத்தாள்.

''ஏன் சிரித்தேன் தெரியுமா? அது சிரிப்பில்லை. வேதனையில் வெடித்த மாதுளை'' என்று கூறி மீண்டும் சிரித்தாள்.

''மாமல்லபுரத்திற்குத் தந்தை வருகிறார். நானோ மாமல்லபுரத்தை விட்டுப் போகிறேன்...'' என்று கூறும்போது மீண்டும் அவளுக்குச் சிரிப்பு வந்தது. சிறு துவாலை அவள் மேனி முழுதும் விளையாடியது. சங்குக் கழுத்தைத் தூக்கித் துடைத்துக் கொண்டாள்.

கூந்தலை அள்ளிச் செருக அவள் ஒரு கையால் கூந்தலைப் பிடித்துக் கொண்டாள்.

''காஞ்சிக்கு உடனே வருமாறு அரசரின் கட்டளை. நீயே காஞ்சியினின்று இங்கே வந்திருக்கிறாய்'' என்று கூறி மீண்டும அவள் நகைத்தாள்.

வெள்ளீச்வரனிடமிருந்து எந்தவித மறுமொழியும் கிடைக்கவில்லை.

''என்ன, வெள்ளீச்வரா! பேச்சையே காணோம். மறுமொழி என்ன கூறுவதென்று திகைக்கிறாயா?'' என்று கேட்டவள்,



திடுக்கிட்டுத் திரும்பினாள். கூந்தலைச் செருக முனைந்ததால் மேல் தலைப்பு சரிந்திருந்தது. மற்றொரு கரத்தால் மாராப்பைச் சரி செய்து கொண்ட மீன்விழி, அவனை நோக்கி, ''நீ இங்கேயா நிற்கிறாய்!'' என்று கேட்டாள். குரலில் சற்றுக் கடுமை இருந்தது. நாணத்தால் முகம் சிவந்திருந்தது.

மீன்விழி மறைவிடத்திற்குச் சென்றவுடன் அவளுடன் பின்தொடர்ந்த வெள்ளீச்வரன் உள்ளத்தில் காம ஜ்வாலை மெல்ல வீசத் தொடங்கியது.

வெள்ளீச்வரன் சிரித்தவாறு அவள் அருகே மேலும் நெருங்குவதைக் கண்ட மீன்விழி, தன்னுள் பொங்கும் சீற்றத்தை மெல்லக் கட்டுப்படுத்திக் கொண்டு, ''நான் ஆச்சர்யப்பட்டேன்'' என்றாள்.

வெள்ளீச்வரன் புருவங்கள் உயர்ந்தன. அவன் உடல் மெல்லச் சிலிர்த்தது.

''ஏன்...'' என்று பல்லைக் காட்டினான்.

''நான் கேட்பதற்கும், பேசுவதற்கும் உன்னிடமிருந்து எந்தவித மறுமொழியும் காணவில்லையே என்று ஆச்சரியப் பட்டேன். நீ என்னைத் தொடர்ந்து என் அருகே வந்து நிற்கிறாய். இது முறையா?'' என்று அவள் பற்களைக் கடித்தாள். அப்பொழுதும் அவன் மீது அவளுக்குக் கோபம் ஏற்படவில்லை.

''ஆமாம்... நான் உன்னைப் பின்தொடர்ந்தேன். நீ சேலையைச் சுற்றிக் கொண்டாய். துவாலையால் உடலைத் துவட்டிக் கொண்டாய்... சிற்பத்திற்கெல்லாம் சிற்பமே! உயிர் பெற்று நடனமாடும் ஜீவ சிற்பமான உன்னைச் சிற்பக் கூடத்தில் காணும்போதெல்லாம் என்னுள் மெல்ல மெல்லச் சுடர் விட்டெழும் ஆசைத் தீ இன்று விசுவரூபம் எடுத்துவிட்டது. மீனா...'' என்று பேசும்போது அவனுக்கு மூச்சு வாங்கியது. அவன் கரங்கள் துடித்தன. பாதி இருளும் பாதி வெளிச்சமும் நிறைந்த அந்த இடத்தில் ஒரு தேவதை போல் நிற்கும் மீன்விழியை அவன் நெருங்கினான்.

''மீனா! உனக்குத் துணிவு மிக அதிகம். அழகைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். அறிவைப் பற்றி உலகம் அறியும். மூன்றும் சேர்ந்த நீ என்னைப் பித்துப் பிடித்தவனாகச் செய்துவிட்டாய். நான் ஒரு சிற்பி. இருவருக்கும் ஏற்ற பொருத்தம். என் இலட்சியக் கனவு நிறைவேற நீதான் உதவ

வேண்டும்'' என்று வெள்ளீச்வரன் கூறினான். காமத் தீ கொழுந்து விட்டெரியும் குரலில் நடுக்கமும் இருந்தது.

மீன்விழியாள் உறுதி குலையவில்லை.

"உன் இலட்சியக் கனவு என்ன?" என்று அவள் கேட்டாள். உதடுகளில் குறும்புச் சிரிப்பு இருந்தது.

"என் இலட்சியக் கனவைச் சொல்கிறேன். மீனா! என் அன்பின் பெட்டகமே! பல்லவ மன்னர் சிற்பப் பணியை நிறுத்திவிட்டாலும் நான் நிறுத்தப் போவதில்லை. அதிரண சண்டன் மண்டபத்திற்கருகே சிற்பப் பணியைத் தொடங்கப் போகிறேன். அந்த அமைதியான சூழ்நிலையில் குடில் ஒன்று அமைத்துக் கொள்ளப் போகிறேன்..."

"ஓ..." மீன்விழியாள் குரல் கொடுத்தாள்.

"அந்தக் குடிலில் நீ என் அருகே இருப்பாய்... உன் வடிவத்தைப் பாறையில் வரைவேன். உன் வடிவக் கோட்டில் சிற்றுளிகள் பொழியும். என் திறமையை எல்லாம் செலுத்து வேன்... அழகிய சிற்பம் உருவாகும். உனது விதவிதமான வடிவங்கள் அழியாத சிற்பங்களாக உருவாகும்..."

"உம்... பிறகு...?"

"பிறகு என்ன... எப்போதும் நீ என் அருகே இருப்பாய்... எனக்கு இரட்டை அதிர்ஷ்டம். என் கரங்கள் உன் மேனி யெங்கும் சுதந்தரமாக நடமாடும். சிற்பமாக ஆன உனது வடிவச் சிற்பத்தை ஒவ்வோர் அணுவாகத் தடவித் தடவி அழகு பார்ப்பேன். சிற்ப சாஸ்திர இலக்கணங்களின் இலக்கியமே! வடிவழகு அத்தனையும் ஒன்று சேர உருப்பெற்று வந்தவளே! வேய்ந்தோள்களை உடையவளே! செந்திருக் கண்ணினாளே! செங்கலசத்துத் தனங்களை உன் இடை எப்படித் தாங்கு கின்றதோ? பொய்யோ என்று எண்ணும் இடையைச் சிற்றுளி மெய் மெய் என்று வடிக்கும். உன் உடலில் ஓடும் ஜீவ நரம்புகளை நான் எப்படி வடிக்கப் போகிறேனோ? நீ நடந்து போகும்போது அசையும் உன் பின்னழகை நான் சிற்பத்தில் எப்படி வடிப்பேன்? நீ கூந்தலை அள்ளிச் செருகியபோது நின்ற நிலையை - உன் ஒரு கரம் உயர்ந்து, ஒரு கரம் கூந்தலைப் பிடித்திருக்க - அந்த நிலையைப் பார்த்தவாறே காலமெல்லாம் இருக்கலாம். அதை அழியாத சிற்பமாக்க வேண்டுமே, எப்படிச் செய்யப் போகிறேன்? என் கண்ணே மீனா! ஜீவ சிற்பமான உன்னை அமர சிற்பமாக்குவதே என் இலட்சியம்..." என்று



கூறிக்கொண்டே வெள்ளீச்வரன் தாவி அவளைத் தழுவ முயன்றான்.

உடனே மீன்விழியாள் எரிமலையானாள். குமுறும் கடலானாள். காட்டுத் தீ ஆனாள். வீசும் புயலானாள். மூங்கில் கரங்கள் இரும்புக் கரங்களாயின. கொடி உடல் தேக்கு மரமாயிற்று. உடலைச் சிலிர்த்தாள். கைகளை மடக்கினாள். அவனைப் பிடித்துத் தள்ளினாள்.

வெள்ளீச்வரன் நிலை தடுமாறி முற்றத்தில் போய் வீழ்ந்தான்.

இரு கரங்களையும் ஊன்றி எழ முயன்ற அவனை நோக்கி, "குப்பையே! நீ கோபுரத்தில் அமரப் பார்க்கிறாயா? ஏ தூசியே! எரியும் தீயில் விழப்பார்க்கிறாயா?" என்று சீறினாள்.

அப்போதும் வெள்ளீச்வரன் அசட்டுச் சிரிப்புடன், "மீனா! தேனை ருசிக்க எண்ணும்போது தேனீக்களின் தாக்குதல் இருக்கத்தான் செய்யும்... மீனா! நீ சற்று அமைதியாகச் சிந்தித்துப் பார்! நீ சிற்பியின் மகள். சிற்பக்கலை தெரிந்தவள். நான் சிற்பி. உன் தந்தையின் அபிமானத்தைப் பெற்றவன். பாராட்டுதலைப் பெற்றவன். இருவரும் ஒன்று சேர்ந்தால்..." அவன் முதுகில் சுரீர் என்ற வலி ஏற்பட்டது.

அவிழ்ந்திருந்த கூந்தலை அள்ளிச் செருகியபடி மீன் விழியாள், "என்மேல்தான் தவறு. நீ இங்கே வந்தபோது மரியாதையின்றிப் பேசினாய். திடீரென்று என்னை நீ என்று அழைத்தபோதே உன்னைத் திருத்தியிருக்க வேண்டும். உன் எதிரே ஆடைகளைச் சரிசெய்து கொள்ளாமல் நான் வந்திருக்கக் கூடாது. உன் மனத்துள் இருந்த கள்ள எண்ணத்தைக் கிளர்ந்தெழச் செய்தது என் தவறுதான்" என்றாள்.

வெள்ளீச்வரன் முனகியபடி, "நான் பல ஆண்டுகளாக உன்னைக் கவனித்து வருகிறேன். நீ உறங்கும்போது, அருவிக்கரையில் குளிக்கும்பேது நான் உனது அழகிய மேனியழகை ரசித்திருக்கிறேன். திடீரென்று என் உள்ளத்தில் மோகம் வளர்ந்துவிடவில்லை. உன் வடிவழகு என் உள்ளக் கனலை வளர்த்து வந்தது. நீ ஆடவர்களுடன் எளிதில் பழகுவதையும் நான் கண்டிருக்கிறேன். உனக்கு ஏற்ற இளைஞன் இதுவரை கிடைக்கவில்லை என்பதும் எனக்குத் தெரியும். அதிகாரிகளை உன் மோக வலையில் சிக்க வைக்க முயல்வாய். அப்படித்தான் சோழ நாட்டிலிருந்து வந்தவர்களை வசப்படுத்தினாய்... அப்படியிருக்க என்னைப் போன்ற

கலைஞன், அழகன் உனக்குக் கிடைப்பது பெரிய அதிர்ஷ்டம் என்று நினைத்துக் கொள். இன்றும் இப்படியே நீ ஊர் ஊராய்ச் சுற்றிக் கொண்டிருந்தால் உனது இளமை பாழாகிவிடும்... மீனா... என் அன்பை ஏற்றுக் கொள்'' என்று கூறி, மெல்ல எழ முயன்றான். இடுப்பில் பலமான அடிபட்டிருந்ததால் எழ முடியவில்லை. 'விண் விண்' என்ற வலி அதிகமாகியது.

மீன்விழியாளின் கோபம் குறைந்தது. அவன் சொல்வதிலும் நியாயம் இருப்பதாகவே உணர்ந்தாள். 'காட்டில் காய்ந்த நிலவு போல் இளமை வீணாகத் தான் வேண்டுமா? ஆனால் இவன் சொல்வதுபோல், அதிகாரிகளை என் மோக வலையில் சிக்க வைக்க முயன்றேனா? பாவி. அவ்வாறு நான் செய்திருந்தால், பல்லவ நாட்டில் நானும் ஓர் இளவரசி போல் உலவியிருப்பேனே... ஒரு தவறு செய்தேன். செய்து வந்தேன். பெண்களுக்கான அடக்கமின்றி நாடெங்கும் உலவி வந்தேன். தாயற்ற பெண் என்று என் தந்தையும், என்னைக் கண்டிக்க வில்லை. என் இளமை, அழகு பற்றி எனக்கே தெரியவில்லை. கழுகுக் கண்கள் பல பசி தீர்க்கப் பார்த்துக் கொண்டிருந்ததை நான் அறியவில்லை...'' சிலையென நின்று மீன்விழி நினைத்தாள்.

வெள்ளீச்வரன் முணுமுணுத்தான். உடல் வலியால் முனகினான்.

''நீ என்னைப் பலவந்தமாகப் பிடித்துத் தள்ளியபோது உன் கரும்புக் கரங்களுக்குள்ள இரும்புப் பலத்தை ருசித்தேன். ரசித்தேன். அதைவிடப் பலமடங்கு பலம் எனக்குண்டு என்பது உனக்குத் தெரியாது. சிற்றுளி பிடித்து வலுவேறிய கை உன் உடலைப் புண்ணாக்கக் கூடாதே என்றுதான், நான் என் பலத்தைப் புலப்படுத்தவில்லை... மீனா! வா. அருகில் வா. உன் மென் கரங் கொடுத்து என்னைத் தூக்கிவிடு. அதேபோல், காமத் தீயில் வீழ்ந்து பொசுங்கிக் கொண்டிருக்கும் என்னையும் தூக்கிவிடு...'' என்று கெஞ்சினான்.

''வெள்ளீச்வரா! உன் போன்ற இளம் வாலிபர்களுக்கு ஏற்படும் முறையற்ற காதலும் காமமும் தான் இன்று உனக்கேற்பட்டிருக்கின்றன. ஆனால் உனக்கேற்பட்ட காமம் வயதுக்கு மீறியது, பாபகரமானது'' என்று மீன்விழி கூறினாள். அவள் அவனையே வெறுப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''காதலும், அதன் மறுபக்கமான காமமும் பாவம் என்று புதிதாக நீ கூறுகிறாய். அது புனிதமானது என்று நான்



கூறுகிறேன்...'' என்று வலியையும் பொருட்படுத்தாமல் அவன் பேசினான்.

''வெள்ளீச்வரா! என்னை விட நீ வயதில் சிறியவன். குருவின் மகளிடம் தகாத முறையில் நடந்து கொள்வது பாபமல்லவா? நான் மன்னரிடம் முறையிட்டால் உனக்குக் கிடைக்கும் தண்டனை என்னவென்று தெரியுமா?

''என்னை நீ மறந்துவிடு. தீய கனவு கண்டால் அதை எப்படி மறந்துவிட வேண்டுமோ அதைப்போல் மறந்துவிடு. சிற்பக் கூடத்திற்குத் திரும்பிச் சென்று உனது பணியைத் தொடர்ந்து சரிவரக் கவனி. சிற்பப் பணி ஏதுமில்லாவிடில் என் தந்தைக்குப் பணிவிடை செய். நானும் அவரருகில் இல்லை. என் இளைய தம்பி போல் நினைத்துச் சொல்கிறேன். உன்னை நான் மன்னித்து விட்டேன்'' என்று அவள் அமைதியாய்ச் சொல்லும்போது, வெள்ளீச்வரன் முகம் மாறியது.

அவனது உடலுக்குள் பரவி வந்த காமாக்கினியை அவனால் அடக்க முடியவில்லை.

''ஏ, மீனா! எனக்கா அறிவுரை கூறுகிறாய்? காதலுக்குக் குருவின் மகள் என்ற வித்தியாசம் தெரியாது. குரு பத்தினியைப் பெண்டாடினால்தான் குற்றம். நீ குருவின் மகள். உன் உடலுக்காக மட்டும் நான் ஆசைப்படவில்லை. மணம் புரிந்து முறையான வாழ்க்கை நடத்துவோம். இப்போது என் உள்ளத்துத் தீயைச் சிறிதாவது தணிக்க வேண்டும் என்றால், என்னை ஆரத் தழுவு. உன் மெத்தென்ற மேனி என் உடலின் உஷ்ணத்தைச் சமன்படுத்தட்டும். உள்ளத்தில் பொங்கிப் பொங்கி எழும் காமம் தணியட்டும். மீனா! உன் அறிவுரைகள் என் செவிகளில் விழவில்லை. சீறி வரும் புயலைச் சிறு கயிற்றால் கட்ட முடியுமா? மீனா! என் உறுதியைக் குலைக்க முயலாதே... வா... அருகில் வா...'' என்று கூவினான்.

மீன்விழியாள் மிகவும் அலட்சியமாகச் சிரித்தாள். ஆக்ரோஷமாகச் சிரித்தாள்.

அவள் சிரிப்பு அவனைச் சிலிர்த்தெழச் செய்தது. எங்கிருந்தோ அவன் உடலில் புதிய பலம் எழுந்தது. இடுப்பில் ஏற்பட்ட வலியும் மறைந்தது போல் தோன்றியது. அவன் துள்ளி எழுந்து மீன்விழியாள் மீது பாய்ந்து அவள் மூச்சுத்திணறும் வகையில் அவளை அணைத்தான்.

மீன்விழியாள் சிலிர்த்தாள். தன் தலையாலேயே அவனது முகத்தில் முட்டினாள். மூக்கு பலமாகத் தாக்கப்பட்டது. அவன்



01 09 20

பிடி சற்றுத் தளர்ந்தது. வலக்கரத்தாலும், இடக் கரத்தாலும் மாறி மாறி அவன் முகத்தில் குத்துகளை வீசினாள்.

வெள்ளீச்வரன், மூக்கிலிருந்தும் ரத்தம் ஒழுகியது. துடைத்துக் கொள்வதற்குத் தனது கரத்தை முகத்தருகே கொண்டு சென்றபோது அவனது முழங்காலை நோக்கி உதைத்து அவனைத் தன் பலம் கொண்ட மட்டும் தள்ளினாள். வெள்ளீச்வரன் நிலைதடுமாறி வீழ்ந்தான். அவன் தலை, முற்றத்துப் படிக்கட்டுகளில் மோதின. அவன் கண்கள் எதிரே இருந்த அந்த வீடு, சுற்றுப்புறம் யாவும் சுழன்றன.

மீன்விழி வீட்டை விட்டு வெளியே ஓடி வந்தாள். கடற்கரையை நோக்கிச் சென்றாள். பிறகு திரும்பவும் நடந்து வந்து இராஜசிம்மேச்வரம் கோயிலுக்குள் நுழைந்தாள். சுற்றுமுற்றும் பார்த்தாள். நுழைவாயில் அருகே இருந்த மரத்தின் நிழலில் உட்கார்ந்து கொண்டாள். அவள் இதயத்தில் ஏற்பட்ட படபடப்பு அடங்கவில்லை. வாக்களித்தபடி சோழ நாட்டவர்கள் வரவில்லை. அப்போதிருந்த மனநிலையில் அவர்கள் வராமல் இருப்பதே நல்லது என்று எண்ணினாள். காஞ்சிபுரத்திற்குச் செல்வது என்று உறுதியாகத் தீர்மானித்தாள். அவள் மனம் ஏதோ சமாதானமடைந்தது போல் தோன்றியது.

○



## 30. கேட்ட குரல்

இராஜசிம்மேச்வரம் கோயிலில் உச்சிகால பூஜையை முடித்துக் கொண்டு, மீண்டும் பட்டர் வெளியே வந்தார். மீன்விழியைப் பார்த்துத் திடுக்கிட்டார்.

மரத்தடியில், கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு கவலையுடன் இருக்கும் மீன்விழியை நோக்கி, ''என்ன சிற்பி மகளே! இன்று கவலையுடன் காணப்படுகிறாயே...'' என்று அவளருகே வந்தார்.

மீன்விழி முகத்தில் மகிழ்ச்சியை வரவழைத்துக் கொள்ள முயன்றாள். மெல்லிய புன்முறுவல் பூத்தாள்.

''மாசி மகத்திற்கு நீ எதிர்பார்த்திருந்த உறவினர் வரவில்லையா?'' என்று கேட்டார்.

அவர் கையிலிருந்த கூடையிலுள்ள வெண் பொங்கல் மணத்தது. துளசியும், மருக்கொழுந்தும் கலந்த மலர்மாலை மணம் தெய்வீகச் சூழலை ஏற்படுத்தியது.

மீன்விழி தலையை அசைத்தாள். பட்டர் நகரவில்லை. ''மீன்விழி! உன் இமைகள் சிவந்திருக்கின்றன. உறக்கம் வராமல் இரவெல்லாம் விழித்திருக்கிறாய் என்பதை இமைகள் புலப்படுத்துகின்றன...'' என்று மேலும் அவளிடமிருந்து மறுமொழியை எதிர்பார்த்துக் கேட்டார்.

ஆம் என்பாளா? இல்லை என்பாளா? பட்டர் மிகக் கெட்டிக்காரர். செய்தியை வரவழைக்கப் பார்க்கிறார் என்பதைப் புரிந்து கொண்டாள்.

''இரவெல்லாம் உறக்கமில்லை...'' என்றாள் மீன்விழி.

''என்ன கவலையோ?'' என்று கேட்டார் பட்டர். என்ன கவலை என்று கூறுவாள்?

''மாசி மகம், சிறப்பாகக் கொண்டாடப்படும் இல்லையா?' என்று மீன்விழி கேட்டாள்.



01 09 201

''ஆமாம், இந்த ஆண்டு பல்லவ மன்னரும் வருவதாக செய்தி வந்திருக்கிறது'' என்றார் பட்டர்.

''என் உறவினரும் வருவதாகக் கூறியிருந்தார்'' என்றாள் மீன்விழி சுற்றிலும் பார்த்தவாறு.

''ஏன் வரவில்லை...?'' பட்டர் கேட்டார்.

''அதுதான் தெரியவில்லை. அதனால்தான் இங்கே காத்திருக்கிறேன்'' என்றாள் மீன்விழி.

''நடுப்பகலில் மட்டும் காத்திருந்தால் போதுமா? காலையிலோ மாலையிலோ வந்திருந்தால்? இரவு நெடுநேரம் கழித்து வந்திருந்தால்?''

''அதனால்தான் இரவெல்லாம் விழித்திருந்தேன்...'' என்றாள் மீன்விழி.

பட்டர் மெல்லச் சிரித்தார். ''நான் நம்பவில்லை. நீ வேறு யாருக்காகவோ காத்திருக்கிறாய். பெண்ணே! என்னை உன் தந்தை போல் நினைத்து என்னிடம் சொல்லு.''

மீன்விழி திடுக்கிட்டாள். அவள் எழுந்து நின்றுவிட்டாள்.

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்று குரலில் சற்றுக் கடுமையை வரவழைத்துக் கேட்டாள்.

''தானாக ஒன்றும் சொல்லவில்லை. கேள்விப்பட்டதைச் சொன்னேன்...'' என்று பட்டர் பற்கள் தெரியச் சிரித்தார்.

''என்ன கேள்விப்பட்டீர்கள்?''

''உன்னுடைய அபிமானத்துக்குப் பிரியமானவர் உன்னை இங்கே, கோயிலருகே சந்திப்பதாகச் சொல்லியிருக்கிறார் அப்படித்தானே?''

''யார் சொன்னார்கள்?''

''யாரோ சொன்னார்கள். உண்மைதானே சொல்லு...''

''இல்லை...''

''அதுமட்டுமா? உடனே காஞ்சிக்கு வருமாறு அரசரின் உத்தரவு.''

இது கேட்ட மீன்விழி திடுக்கிட்டாள். ''யார் சொன்னார்கள்?''

''யாரோ சொன்னார்கள் என்று சொல்லிவிட மாட்டேன். காலையில் அரங்கநாதர் தரிசனத்திற்காக மன்னரின் அந்தரங்க



அதிகாரி வந்தார். அவர் சொன்னார்'' என்றார் பட்டர். தன் கையிலுள்ள கூடையைத் திறந்து துளசி மாலையை எடுத்து ''இந்தா பெருமாள் பிரசாதம்'' என்றார்.

கூடையின் மூடியைத் திறந்தபோது வெண்பொங்கலின் மணம் நாசியைத் துளைத்தது. துளசி மாலையைப் பெறக் கையை நீட்டவில்லை அவள்.

''அவர் வேறு என்ன சொன்னார்?'' என்று மீன்விழி ஆவலுடன் கேட்டாள்.

''இன்னும் என்னென்னவோ சொன்னார். அதெல்லாம் உன்னிடம் சொல்ல மாட்டேன். நீ வாயே திறவாமல் இருந்து என்னிடமிருந்து செய்தியை வரவழைக்கப் பார்க்கிறாயா?'' என்று பொய்க் கோபம் கொண்டார்.

''அடடா, பட்டருக்குக் கூட கோபம் வருமா?'' என்று மீன்விழி தன் விழிகளை மெல்லச் சுழற்றினாள். அந்தச் சோக நிலையிலும் விழிகள் மயக்கத்தைப் பொழிந்தன. அவர் அருகே மெல்ல நெருங்கினாள்.

''மீன்விழியின் விழிகள் கோபத்தில் மாறும்போது நான் மட்டும் மாறமாட்டேனா?'' பட்டர் நடந்தார்.

மீன்விழி அவர் தோளை உராய்வது போல் நெருங்கித் தானும் நடந்தவாறு ''பட்டரே! மன்னரின் அதிகாரி என்ன சொன்னார்?'' என்று கேட்டாள்.

பட்டர் மெல்ல நடந்தவாறு ''காலையில் நீ குளித்தாயிற்றா?'' என்றார் அவளைத் திரும்பிப் பார்த்து.

மீன்விழிக்குக் கோபம் பொங்கியது. ''ஓய் பட்டரே! என்ன நினைத்துக் கொண்டீர்? என் கூந்தலில் இன்னும் ஈரம் காயவில்லை பாருங்கள். என்ன அப்படிக் கேட்டுவிட்டீர்?'' என்று சீறினாள்.

'ஹிஹிஹி' என்று பட்டர் நகைத்து ''அதற்காகக் கேட்கவில்லை சிற்பி மகளே! என்மேல் பட்டபடி நடக்கிறாயே... நான் வீட்டிற்குச் சென்று ஆராதனை செய்துவிட்டுத்தான் உண்ண வேண்டும். அதனால்தான்...'' என்றார்.

''என்ன பட்டரே! காலையிலிருந்து பள்ளிகொண்ட பெருமாளுக்கு ஆராதனை செய்கிறீரே, வீட்டுக்குப் போய் மீண்டும் ஆராதனை செய்ய வேண்டுமா?'' மீன்விழி கேட்டாள்.

''ஆமாம். என் ஆத்மார்த்தமான பூஜை, நான் சாளக்கிராமப் பூஜையை முடிக்க ஒரு நாழிகை ஆகிவிடும். அதற்குப்



01 09 2

பிறகுதான் ஆகாராதிகள். நீ காலையில் நீராடாமல் என் அருகே வந்துவிட்டால் நான் மீண்டும் நீராட வேண்டும். அதனால்தான் கேட்டேன். வேறுவிதமாக நினைக்காதே!''

மீன்விழியின் கோபம் பறந்தது. ''பாவம் தங்களின் மனைவி அதுவரையில் பசியுடன் தவித்திருப்பாள் இல்லையா?'' என்று கேட்டாள்.

பட்டர் தலையை அசைத்தார். ''நான் வீட்டிற்குள் நுழைந்தவுடனேயே என்னுடைய கடைக்குட்டிச் செல்வங்கள் இந்தக் கூடையைப் பறித்துக் கொள்ளும். அவர்களுக்குக் கொடுத்து அவளும் எடுத்துக் கொள்வாள். எப்போதும் மூன்று பங்கு, இன்று நாலு பங்கு...'' என்றார் பட்டர்.

''இன்று எதற்கு நாலு பங்கு?'' மீன்விழி கேட்டாள்.

''உனக்கொரு பங்கு... உன் முகத்திலுள்ள பசிக்களைப்பை அறிந்தேன். உன்னை என் வீட்டிற்கு அழைத்துச் செல்லப் போகிறேன். பெருமாள் பிரசாதத்தை நீ உண்டு, சற்றுக் களைப்பாறு...'' என்றார் பட்டர்.

மீன்விழி அவரைத் திரும்பிப் பார்த்தாள். பட்டர் தொடர்ந்து சொன்னார். ''மீன்விழி, என் வீட்டிற்கு அருகே இருந்துதான் காஞ்சிபுரத்திற்கு மாட்டுவண்டி புறப்படுகிறது. உன்னை அதில் ஏற்றிச் செல்லுமாறு மன்னரின் அந்தரங்க அதிகாரியின் கட்டளை.''

''விசேஷ இரட்டைப் புரவி பூட்டிய ரதம் ஒன்று செல்லப் போகவதாகக் கூறியிருந்தாரே...'' கவலையுடன் கேட்டாள் மீன்விழி.

''ஆமாம். ஆனால் ரதம் வந்து சேரவில்லை. இரட்டைக் காளைகள் பூட்டப்பட்ட வண்டியை மெய்க்காவலர் ஏற்பாடு செய்திருந்தார். பாடகர்கள் கோஷ்டி ஒன்று வண்டியில் செல்கிறது. நீயும் செல்கிறாய்'' என்றார் பட்டர்.

''மெய்க்காவலர் உங்களிடம் சொல்லிவிட்டாரா? மேலும் என்ன சொன்னார்?'' என்று கேட்டாள் மீன்விழி.

''அவையெல்லாம் அரசாங்க ரகசியம்'' என்றார் பட்டார்.

மீன்விழி அலட்சியமாகச் சிரித்தாள். ''அரசாங்க ரகசியத்தை ஒரு பட்டர் அறியும்போது, சிற்பியின் மகள் அறியக் கூடாதா?'' என்று கேட்டாள்.

''கூடாது. நீ அறிந்திருக்கும் ரகசியங்களை என்னிடம் சொல்வாயா? மன்னர் உன்னை எதற்காக மாமல்லபுரம்



செல்லுமாறு கட்டளையிட்டார்? திருத்தணிகையிலிருந்து காஞ்சிக்குச் செல்லுமாறு ஏன் கூறினார்?'' என்று பட்டர் கேட்டார்.

''அதுவா, வந்து, வந்து...'' என்று மீன்விழி சொல்ல முற்படுவதற்குள் பட்டர், ''யோசனை செய்து கற்பனையாக ஏதாவது கூற வேண்டாம். மெய்க்காவலர் உன்னைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்'' என்றார்.

''என்ன சொல்லியிருக்கிறார்?''

''அரசரின் அந்தரங்க அன்புக்கு உரியவள் நீ என்றும், உன்னிடமிருந்து ஒரு வார்த்தையைக் கூட அறிய முடியாதென்றும் சொல்லியிருக்கிறார்'' என்றார்.

மீன்விழி மறுமொழி ஏதும் கூறவில்லை. 'மெய்க்காவலர் கூறுவது உண்மையா? பல்லவ மன்னர் என்னைப் பற்றி உயர்வாக நினைத்திருக்கிறாரா? அப்படிப்பட்ட அன்புக்கு உரியவரை விட்டு, சோழ நாட்டிற்குச் செல்ல முடிவு செய்துவிட்டோமே' என்று எண்ணினாள்.

பட்டரின் வீடு வந்துவிட்டது. வீதியிலிருந்தே குரல் கொடுத்து, தன் மனைவியையும், குழந்தையையும் அழைத்து, மீன்விழியை அறிமுகப்படுத்தி வைத்தார். பட்டரின் மனைவி, சூடிக்கொடுத்த சுடர்க்கொடியைப் போல் அழகாக இருந்தாள். பெயரும் கோதை.

''கோதை! இன்று மாலை வண்டி புறப்படுகிறது. காஞ்சிக்குச் செல்வதற்கு உனக்குத் துணை கிடைத்துவிட்டதால் காஞ்சிக்குச் சென்றால் உத்தரமேரூர் செல்வது சிரமமில்லை'' என்றார். பிறகு மீன்விழியின் பக்கம் திரும்பி, ''கோதையின் தந்தை, உத்திரமேரூர் வைகுந்தப் பெருமாள் கோயிலில் பட்டர். அவரைக் காண இவள் செல்கிறாள். வண்டி காஞ்சிக்குச் செல்லும்போது நாளைப் பொழுதாகிவிடும். இடையில் பழைய சீவரத்தில் தங்கிச் செல்ல வேண்டும்'' என்றார்.

பட்டர் வீட்டில் மதிய உணவு உண்டு, சற்றுக் களைப்பாறிய மீன்விழி நன்றாக உறங்கிவிட்டாள். பொழுது நன்றாகச் சாய்ந்துவிட்டது. அவள் பெயரைச் சொல்லி யாரோ அழைப்பது காதில் வீழ்ந்தது. திடுக்கிட்டு விழித்தெழுந்தாள் மீன்விழி.

பட்டர் வீட்டு வாயிலில் இரட்டைக்காளைகள் பூட்டிய கூண்டு வண்டி கம்பீரமாக நின்றிருந்தது. காளைகள் இரண்டு


01 09 2

கம்பீரமாக, வளைந்த கொம்புகளுடனும் நின்று கொண்டிருந்தன. மாடுகளை அடக்கிப் பிடித்திருந்த வண்டிக்காரன், தலையில் கட்டிய முண்டாசுடன், மேலே போர்த்திய போர்வையுடன் அடர்ந்த மீசையுடன் நின்று கொண்டிருந்தான். பட்டர் கோயிலுக்குச் சென்றுவிட்டார். வண்டிக்குள் ஒவ்வொருவராக ஏறிக் கொண்டனர். மூன்று ஆண்கள், இரண்டு பெண்கள். அவர்களைத் தவிர பட்டரின் மனைவி. மீன்விழி வண்டியின் பளுவைச் சமன் செய்த பிறகு வண்டி புறப்பட்டது.

காளைகளின் கால் சதங்கை ஓசையும், கழுத்து மணி ஓசையும் வண்டியின் வேகத்துக்கேற்ப ஒலித்தன.

மாமல்லபுரம் கண்ணுக்கெட்டிய தொலைவினின்று மறைந்தது. மரங்கள் அடர்ந்த சாலையின் வழியே வண்டி சென்றது. இருபுறமும் பாறைகள் நிறைந்த பாட்டை வழியே சென்றது. திருக்கழுக்குன்றத்தைத் தாண்டியபோது இரவின் தனிமைக்கு எதிரொலிப்பது போல் வண்டியின் சப்தத்தைத் தவிர அப்பாதையில் வேறு ஏதுமில்லை. வண்டியில் உடன் அமர்ந்திருந்த பெண்களில் ஒருத்தி தேவாரப் பாடல்களைப் பாடினாள். மற்றொருத்தி சில பிரபந்தப் பாடல்களைப் பாடினாள்.

வானத்து வட்ட நிலவும், சாலையின் அமைதியும் வண்டியின் சப்தமும், பாடல்களின் இனிய ஒலியுமாக வண்டியிலிருந்து மற்றவர்கள் மெல்ல இமைகளை மூடிக் கொண்டனர். இனிய உறக்கம் அவர்களைக் கவ்வியது.

நடுநிசியைத் தாண்டியபோது வண்டி நின்றது. அகன்ற பாலாற்றங்கரையில் வண்டி நின்று கொண்டிருந்தது.

வண்டியிலிருந்த ஒருவர் கேட்டார்: ''பாலாற்றங்கரைக்கு வண்டி ஏன் வந்தது?''

வண்டிக்காரன் மறுமொழி பேசவில்லை. அவன் திரும்பிப்பார்த்து ஹுங்காரமிட்டான். ''இது ஒரு கிளைப்பாதை, காஞ்சியை விரைவில் அடைந்துவிடலாம்'' என்றான்.

மீன்விழிக்கு, பாதி உறக்கத்தில், அந்தக் குரலை எங்கோ கேட்டது போலிருந்தது. உறக்கம் அவளை நன்றாக அழுத்தியது.

ஆற்றின் நடுவே உள்ள கற்பாறைகளின் மீது வண்டி கடபுடா என்று தட்டுத்தடுமாறி சென்றது. கரையை ஏறி, பாட்டைக்குள்



செல்லத் தொடங்கியதும், வண்டியைத் தொடர்ந்து இரு குதிரைகள் விரைந்து வருவது தெரிந்தது.

வண்டி ஓட்டி ஒருமுறை திரும்பிப் பார்த்துவிட்டு வண்டியை மேலும் துரிதமாக ஓட்டலானான்.

குதிரை மீதிருந்தவர்கள் வண்டியையும் முந்தி விரைந்து சென்று வண்டியின் எதிரே மறித்துக் குதிரையை நிறுத்தினர்.

''ஏய், வண்டிக்காரா, வண்டியை எங்கே ஓட்டுகிறாய்?'' என்று குதிரை மீதிருந்தவர் அதட்டினார்.

வண்டி நிறுத்தப்பட்டது. வண்டிக்காரன் மறுமொழி பேசாமல் வண்டியினின்று இறங்கினான்.

''ஏய், மறுமொழி சொல்லு...'' என்று குதிரை வீரன் கர்ஜித்தான்.

''நீ யார்?'' என்றான் வண்டி ஓட்டி. மீன்விழி விழித்துக் கொண்டாள். வண்டியில் அரைத் தூக்கத்திலிருந்தவர்கள் அனைவரும் விழித்துக் கொண்டனர்.

மீன்விழி வண்டியினின்று இறங்கிவிட்டாள். அங்கே இமைக்கும் நேரத்தில் வண்டி ஓட்டியை குதிரை மீதிருந்த வீரர்கள் வாளைச் சுழற்றித் தாக்க முற்படுவதைக் கண்டாள்.

'என்ன நேருமோ, வழிப்பறிக் கொள்ளையர்கள் போலவும் தெரியவில்லை. ஆனால், வண்டி ஓட்டியை ஏன் இவர்கள் தாக்குகிறார்கள்?' என்று கவலை கொண்டாள்.

ஆனால் வண்டி ஓட்டி, கூண்டு வண்டிக்குள்ளிருந்த கோல் ஒன்றை எடுத்தான். வலமும், இடமுமாக அவன் அந்தக் கோலைச் சுழற்றிய வேகத்தில், குதிரை வீரர்கள் கையிலிருந்த வாள் சிதறிப் போய்த் தொலைவில் வீழ்ந்தன.

குதிரை வீரர்களும் உயிருக்குத் தப்பியவர்கள் போல் வந்த வழியே திரும்பி ஓடுவதை வியப்புடன் பார்த்தாள் மீன்விழி.

''உம்! எல்லோரும் வண்டியில் ஏறி அமருங்கள்'' என்ற வண்டிக்காரனின் குரல் அவளைத் திடுக்கிட வைத்தாலும், அந்தக் குரல் பழகிய குரலாக அவளுக்குத் தோன்றியது.

○


01 09 20

## 31. மீன்விழி திகைத்தாள்

வானத்தில் நீந்தியபடி நிலவு அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தது. அமைதியான அந்தப் பாட்டையில், வண்டிக்குள்ளிருந்தவர்களுக்குச் சிறிது நேரம் ஒன்றும் புரியவில்லை. மீன்விழி வண்டியினின்று இறங்கி ஏதோ உரத்த குரலில் பேசிய போதுதான் அவர்கள் என்ன நடக்கிறது என்று அறிய முற்பட்டனர்.

''வண்டிக்காரரே, என்ன நடந்தது?'' என்று மீன்விழி சற்று கோபமாகக் கேட்டாள்.

வண்டி ஓட்டி மெல்ல மீசையை ஒதுக்கிவிட்டுக் கொண்டு, ''ஏன், நீதான் பார்த்துக் கொண்டிருந்தாயே'' என்றான்.

மீன்விழி திடுக்கிட்டாள் என்பதைவிட திகைத்தாள் என்று சொல்லலாம். பொதுவாக வண்டி ஓட்டி, வண்டியிலிருப்பவர் களைச் சற்று மரியாதையுடன் அழைப்பது வழக்கம். 'நீ' என்று அழைக்கிறாரே? அதனால் அவள் திகைத்தாள். கேட்ட குரலாக இருக்கிறது. அதுவும் திகைப்புக்குக் காரண மாயிருக்கலாமே?

''வண்டியைத் தொடர்ந்து இரண்டு பேர் குதிரையில் வந்தார்கள். வண்டியை வழிமறித்தார்கள். அதைத்தான் பார்த்துக் கொண்டிருந்தேன்'' என்றாள் மீன்விழி எரிச்சலுடன்.

''பல்லவநாட்டில் வழிப்பறி அதிகமாகிவிட்டது. சில நாள்களுக்கு முன்புகூட பல்லவ இளவரசியை இப்படி வழிமறித்தார்கள்...'' என்றார் வண்டிக்காரர்.

மீன்விழிக்குப் 'பளிச்'சென்று புரிந்துவிட்டது. ''ஏனய்யா வண்டிக்காரரே? வழி தவறி ஓட்டி வந்துவிட்டீரா? தெரிந்தே இந்த வழியே வந்துவிட்டீரா?'' என்று கேட்டாள்.

''ஆமாம்'' என்ற பதில் வண்டி ஓட்டியிடமிருந்து வந்தது. மாடுகளைத் தட்டிக் கொடுத்து வண்டியில் ஏறுவதற்குச் சக்கரத்தின் மீது ஒரு காலை வைத்தார்.

''நான் காஞ்சிபுரம் செல்ல வேண்டும். இந்த வண்டியும் காஞ்சிக்குச் செல்ல வேண்டும். இதில் உள்ளவர்கள் அனைவரும் காஞ்சிபுரம் செல்ல வேண்டும் தெரியுமா?'' மீன்விழி சீறினாள்.



வண்டி ஓட்டி மெல்லச் சிரித்தார். ''நீ காஞ்சிக்குச் செல்வதாக எப்போது முடிவு செய்தாய்?'' என்று கேட்டவுடன், மீன்விழி துணுக்குற்றாள்.

''இந்த வண்டியை ஏற்பாடு செய்தவர், பல்லவ சக்கரவர்த்தியின் மெய்க்காவலர்தானே?'' என்று கடுமையான குரலில் கேட்டாள் மீன்விழி.

''இல்லை...'' என அழுத்தந்திருத்தமாக மறுமொழி வந்தது வண்டியோட்டியிடமிருந்து.

''இல்லையா, பட்டர் வீட்டிலிருந்து வண்டி புறப்படவில்லையா?'' மீன்விழியின் குரலில் திகைப்பிருந்தது.

''ஆமாம், பட்டர் வீட்டிலிருந்துதான் வண்டி புறப்பட்டது. பட்டர்தான் வண்டியையும் ஏற்பாடு செய்தார்'' என்று வண்டியோட்டி கூறியதைக் கேட்ட மீன்விழிக்குக் கவலை ஏற்பட்டது. இதென்ன, வண்டி ஓட்டி சொல்வது உண்மை யாயிராதோ?

மற்றுமொரு கேள்வியைக் கேட்டுவிட்டுத் தனது சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்துகொள்ள விரும்பினாள் மீன்விழி.

''பட்டர் வண்டியை ஏற்பாடு செய்திருப்பது எனக்குத் தெரியும். அவரது மனைவியும் இந்த வண்டியில் வருவதும் நானறிவேன். பட்டரின் மனைவிக்கு இந்த வண்டி வழிதவறிச் செல்கிறது என்பது தெரியுமா?'' மீன்விழி கேட்டாள்.

''சரியான பாதையில் செல்கிறது என்றுதான் பட்டர் மனைவி நினைத்திருப்பாள்'' - வண்டியோட்டி மீண்டும் மெல்லச் சிரித்தார்.

''அவர்களை ஏமாற்றலாமா?''

''நான் ஏமாற்றவில்லையே. பட்டருக்கும் தெரியும். பட்டரின் மனைவிக்கும் தெரியும், இந்தப் பயணம் தஞ்சையை நோக்கி என்று. இன்னும் சிறிது தூரம் சென்றால் 'காசி இராமேசுரவரம்' பாட்டை தொடங்கிவிடும். அந்த வழியே சென்று, சிதம்பரத்தில் தங்கி பிறகு திருக்குடந்தை சென்று...'' வண்டியோட்டி மேலே சொல்வதற்குள் மீன்விழி குறுக்கிட்டு, ''நீங்கள் யார்? கேட்ட குரலாயிருக்கிறதே?'' என்றாள்.

''உம், வண்டியில் ஏறி உட்காருங்கள். நேரமாகிறது. மீண்டும் குதிரை வீரர்கள் வரலாம். சென்றுகொண்டே பேசுவோம்'' என்று வண்டியில் ஏறி அமர்ந்துவிட்டார் வண்டி ஓட்டி.



01 09 2

''இல்லை, எனக்கு விவரம் தெரிந்தாக வேண்டும். நான் காஞ்சிக்குச் சென்றாக வேண்டும். வண்டியைத் திருப்பா விட்டால்...'' என்று வண்டியின் நுகத்தடியைப் பிடித்து அசைத்தாள். வண்டியோட்டி நகைத்தான் பெரிதாக. ''மீன்விழி! ஏன் இந்த வீண் பிடிவாதம்? என்னைத் தெரியவில்லையா?'' என்று கூறித் தலைப்பாகையை அவிழ்த்து, ஒட்ட வைத்திருந்த பொய் மீசையை அகற்றியவுடன், மீன்விழியின் மெய் சிலிர்த்தது. ''நான் சந்தேகப்பட்டேன்'' என்றாள் மீன்விழி.

''சந்தேகப்பட்டது போல் நடந்து கொள்ளவில்லையே? இவ்வளவு நேரம் வண்டியை இங்கே நிறுத்தி வைக்கச் செய்துவிட்டாயே?'' என்றான் வண்டியோட்டி வடிவில் இருந்த விக்கியண்ணன்.

மீன்விழிக்கு உடனே பேச முடியவில்லை. பெரும் தோல்வி தனக்கு ஏற்பட்டது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

''உம், வண்டியில் அமர்ந்து கொள். தூக்கம் வரும் வரையில் பேசுவோம்'' என்றான் விக்கியண்ணன்.

''இரவோடு இரவாக வண்டியை ஒய்வில்லாமே ஓட்டிச் செல்வதாக எண்ணமா?''

''ஆமாம். செத்தோம் பிழைத்தோம் என்று ஓடிய அந்த வீரர்கள், மேலும் படை வீரர்களை அழைத்து வருவதற்குள் பல்லவ நாட்டெல்லையைக் கடந்து விட வேண்டும்.''

''பல்லவ நாட்டெல்லை, காவிரிக் கரையில் இருக்கிறது என்பதை மறந்துவிட்டீர்கள் என்று நினைக்கிறேன்...''

''அது இந்தக் காலம்...''

''சோழர்கள் நாடும் பல்லவர்களுக்கு அடக்கம் என்பதை மறந்து விடாதீர்கள்.''

''மறந்துவிடக் கூடிய காலம் விரைவில் வருகிறது மீன்விழி! திருப்பாதிரிப் புலியூரைத் தாண்டிவிட்டாலே பல்லவர்கள் கொட்டம் அடங்கித்தான் இருக்கும். மலையமான்கள் பல்லவர்களுக்கு அடங்கப் போவதில்லை...''

''மலையமான்களா? யார் அவர்கள்?''

''இப்போது விளக்க நேரமில்லை. இப்போது சோழர்கள் இருப்பது போல் அவர்களும் குறுநில மன்னர்கள். இன்னும் சிறிது காலத்தில் பல்லவர்களும் அந்த நிலையை அடையலாம்...''

விக்கியண்ணன் கூறியதற்கு மறுமொழி கூறி பேச்சைத் தொடர மீன்விழி விரும்பவில்லை. ஆயினும் அவள்



மௌனமாயிருந்தாலும் தீவிரச் சிந்தனையிலாழ்ந்தாள். வண்டியிலிருப்பவர்களுக்குத் தவறான வழியில் வண்டி செல்கிறது என்று தெரியாதா? தெரிந்தும் ஏன் சும்மாயிருக்கிறார்கள்? தன் மனைவி உத்திரமேரூர் செல்லப் போவதாகப் பட்டர் கூறினாரே? மீன்விழிக்கு ஒன்றும் புரியவில்லை. காஞ்சிக்குச் செல்லாமல் தான் தஞ்சைக்குச் செல்வது நியாயமா? வண்டியை நிறுத்தச் சொல்லி வண்டியினின்று இறங்கி வந்த வழியே நடந்து சென்றுவிடுவோமா என்று எண்ணினாள்.

''சிற்பி மகளே! என்ன யோசிக்கிறாய்?'' என்று விக்கியண்ணன்ன கேட்டான்.

''எனக்கு ஒன்றுமே புரியவில்லை'' என்றாள் மீன்விழி.

''என்ன புரியவில்லை? நினைத்தது போல் சோழ நாட்டிற்குச் செல்கிறோம். உன்னைப் பத்திரமாக அழைத்துச் செல்பவன் விக்கியண்ணன் என்னும் பெயருடையவன். சோழ இளவரசனின் நண்பன்'' - விக்கியண்ணன் மிக மெல்லிய குரலில் கூறினான்.

மேலும் அதிர்ச்சியடைந்தாள் மீன்விழி.

''என்ன சொல்கிறீர்கள்?''

''இந்த வண்டியோட்டி சோழ இளவரசனின் நெருங்கிய நண்பன்.''

''அப்படியென்றால் அன்று சத்திரத்தில் உங்களுடன் தங்கியிருந்தவர் சோழ இளவரசரா?''

''ஆமாம்...''

''என்னிடம் பொய் தானே சொன்னீர்கள்?''

''உண்மையைச் சொல்லியிருந்தால் உடனே பல்லவச் சக்கரவர்த்தியிடம் காட்டிக் கொடுத்திருப்பீர்கள்.''

''ஏன் மாறுவேடத்தில் வந்தீர்கள். தைரியமாக சோழ இளவரசர் என்றே சொல்லி வந்திருக்கலாமே?''

''வெளிப்படுத்திக் கொள்ள வாய்ப்பு கிடைக்கும் என்று நினைத்தோம். ஆனால், சம்பவங்கள் வேறுவிதமாக நடந்து விட்டன. பல்லவ இளவரசியை இளவரசர் சந்தித்தார்.''

''ஓ! இளவரசியைக் காப்பாற்றியவர் சோழ இளவரசரா? அவர் பெயர் என்ன?''

''ஆதித்தன். கோதண்டராமன் என்ற பெயரும் உண்டு.''

மீன்விழி மீண்டும் மௌனமானாள். 'சோழ இளவரசரிடம் மிக நெருங்கிப் பேசினேன். ஆனால், பல்லவ இளவரசிக்கு

அதிர்ஷ்டம் அடித்தது... உம் நாம் எதற்காக சோழ நாடு செல்ல வேண்டும்?'

''இளவரசரின் நண்பரே! சோழ நாட்டில் எனக்கென்ன வேலை?'' என்று கேட்டாள். மீன்விழியின் குரலில் சோகம் ஒலித்தது.

விக்கியண்ணன் சிரித்தான். சதங்கை ஒலி எழுப்பியவாறு வண்டி சென்று கொண்டிருந்தது.

''சோழ நாட்டில் உனக்கில்லாத வேலையா? ஏன் திடீரென்று மனம் மாறிவிட்டது?'' என்று விக்கியண்ணன் கேட்டான்.

''என் மனம் மாறவில்லை. ஆனால் ஏனோ முன்பு இருந்த உற்சாகம் என்னிடம் இரண்டு நாட்களாக இல்லை. நீங்கள் வருவீர்கள் என்று இரண்டு நாள்களாக ராஜசிம்மேச்வரம் கோயில் அருகே காத்திருந்தேன். மனம் மாறியிருந்தால் நான் காத்திருக்கமாட்டேன்...'' என்று மீன்விழி கூறும்போது அவள் குரல் தழுதழுத்தது.

''நீ சொன்னபடி நான் மகத்திற்கு இருநாள்கள் முன்பே வந்துவிட்டேன். நீ கூறிய இடத்தில் காத்திருந்தேன். ஆனால் உன்னைச் சந்திக்க முடியவில்லை. பட்டரைச் சந்தித்து சிநேகம் செய்து கொண்டேன். அவரிடமிருந்து பல செய்திகளை அறிந்தேன். அவற்றுள் ஒன்று - நீ காஞ்சிபுரம் செல்ல இருப்பது'' விக்கியண்ணன் இவ்வாறு கூறக் கேட்டு மீன்விழி திடுக்கிட்டாள்.

''பட்டர் இன்னும் என்ன சொன்னார்?'' மீன்விழி பரபரப்புடன் கேட்டாள்.

''அரசியல் இரகசியம். இப்போது சொல்ல மாட்டேன். நீ தஞ்சைக்கு வந்தபிறகு சொல்கிறேன்.''

''அப்படியென்றால், நான் தஞ்சைக்கு வருவது உறுதியாகிவிட்டதா?''

''அதில் எங்களுக்கு எந்தவிதச் சந்தேகமும் இல்லை.''

''மயிலழகு வருகிறாளா?''

''அவள் வருவது, அவளை அழைத்து வருவது இளவரசரின் பொறுப்பு. அவள் வருகிறாளோ இல்லையோ, பல்லவ இளவரசி வருவது உறுதி.''

விக்கியண்ணன், இவ்வாறு கூறியவுடன் மீன்விழி பரபரப்புடன், ''உங்கள் இளவரசர், பல்லவ இளவரசியைச் சந்தித்து விட்டாரா?'' என்று கேட்டாள்.



''மிகுந்த கட்டுக்காவலுக்கிடையே, பல்லவ மன்னர் இளவரசியை ஒருவரும் சந்திக்க முடியாத நிலையில் வைத்திருந்தாலும், எங்கள் இளவரசர் இளவரசியைச் சந்தித்து விட்டார்'' என்று விக்கியண்ணன் மிகுந்த பெருமிதத்துடன் கூறினான்.

''இளவரசருக்கு எங்கள் இளவரசியின் மீது காதலா?'' மீன்விழி கேட்டாள்.

''இருக்கலாம்...''

''அவர்கள் சந்தித்து என்ன பேசியிருப்பார்கள்?''

மீன்விழி கேட்டதற்கு, விக்கியண்ணன் வாய்விட்டுச் சிரித்தான்.

''காதலர்கள் பேசிக் கொள்வதையெல்லாம் என்னிடம் சொல்வார்களா? அல்லது மறைந்திருந்து கேட்பதுதான் சரியா?'' விக்கியண்ணன் கூறினான்.

மீன்விழி பெருமூச்சு விட்டாள். ''இவ்வளவு எளிதில் இளவரசி உங்கள் இளவரசரின் வயப்பட்டுவிட்டாளே எப்படி?''

''அதெப்படி எனக்குத் தெரியும்? இளவரசர் இளவரசி தங்கியிருக்கும் மாளிகையை அடைந்தார். மேல்மாடத்துக்குச் சென்று நேரம் போவது தெரியாமலே பேசிக் கொண்டிருந்தார். மாமல்லபுரத்திற்கு எங்களை வருமாறு நீ கட்டளையிட்டிருப்பது என் நினைவுக்கு வந்தது. அதனால் நான் அங்கிருந்து உடனே மாமல்லபுரத்துக்குப் புறப்பட்டுவிட்டேன்...''

விக்கியண்ணன் சொல்லிக் கொண்டே போகும்போது மீன்விழியின் இதயத்தை யாரோ கசக்கிப் பிழிவது போல் தோன்றியது.

சோழ நாட்டிளவரசர் பல்லவ இளவரசியைச் சந்தித்த அந்த நிகழ்ச்சியை மீன்விழி கற்பனை செய்து கொண்டாள். அவள் உள்ளத்தில் திடீரென ஓர் வெஞ்சினம் மூண்டது.

விக்கியண்ணனும், ஆதித்தனும் மாறுவேடத்தில் பல்லவ நாட்டிற்கு வந்து, தங்களை இன்னார் எனத் தன்னிடம் புலப்படுத்திக் கொள்ளாமல் இளவரசியிடம் தெரிவித்துக் கொண்டதை அறிய மீன்விழிக்கு அடக்க முடியாத சினம் எழுந்தது.

○



01 09 20

## 32. இருளுக்குப் பின் நிலவு

அமுதன் தான் கொண்டு வந்திருந்த துணி மூட்டையை நடுக்கூடத்தில் பிரித்தான். இளவரசி, மேல் மாடத்திலிருந்து இறங்கி வருவாள் என்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அமுதன், அங்கு விக்கியண்ணனைப் பார்த்தவுடன் திகைத்து மரியாதை செலுத்த எழுந்து நின்றான். ஆனால் விக்கியண்ணன் சைகை செய்துவிட்டு அந்த இடத்திலிருந்து சென்றுவிட்டான். மயிலழகை சற்று நிறுத்தி ஏதோ கேட்க எண்ணினான். அதற்குள் மயிலழகு மாளிகையை விட்டு வெளியே செல்வது தெரிந்தது.

மேல் மாடத்திலிருந்து இளவரசி வைரக்கண்ணி இறங்கி வந்தாள். பிரித்திருந்த மூட்டையிலிருந்து பட்டாடைகள் வெளியே தவழ்ந்து வந்தன.

''கவியாரே! பட்டாடைகளைப் பார்த்தீர்களா?'' என்று இளவரசி கேட்டாள், விக்கியண்ணனை நோக்கி.

''நீங்கள்தான் பார்க்க வேண்டும் இளவரசி! உங்கள் திருமணத்திற்குப் பட்டாடைகள் இப்போதே வந்துவிட்டன'' என்றான் விக்கியண்ணன். தன்னைக் கவிராயர் என்றும், புலவர் என்றும் இளவரசி இன்னும் உண்மையில் நம்பிக் கொண்டிருப்பதை நினைக்க அவனுக்குச் சிரிப்பு வந்தது. ஆனால் அதே போன்று இளவரசியின் முகத்தில் நாணங் கலந்த சினம் சுழன்று நிற்பதையும் அவன் கண்டான்.

''என் திருமணத்திற்குப் பட்டாடைகளா? என்ன சொல்கிறீர்கள் கவிராயரே?'' என்று வைரக்கண்ணி சற்றுக் கடுமையான குரலில் கேட்டாள்.

அதற்குள் அமுதன் பேசினான்: ''ஆமாம். உண்மைதான் இளவரசியாரே! உங்கள் கல்யாணத்திற்குப் பட்டாடைகளை அரசர் கொடுத்தனுப்பியிருக்கிறார்.''

இளவரசி அவன் பக்கம் திரும்பி, ''எந்த அரசர்? உன்னை யார் அனுப்பினார்கள்?'' என்று கேட்டாள்.



''இப்போது இங்கிருந்தாளே உங்கள் மாளிகைப் பணிப்பெண். அவள்தான் அழைத்து வந்தாள்'' என்றான் அமுதன்.

''பணிப்பெண்ணா? அழைத்து வந்தாளா?'' இளவரசி பரபரப்புடன் கேட்டாள். ''மாளிகைக்குள் ஒருவரையும் நுழைய விடுவதில்லையே. கட்டுக்காவல் பலமாக இருக்கிறதே. நேற்று இங்கே வந்த அபராஜிதன் ஏதும் பட்டாடைகளைப் பற்றிச் சொல்லவில்லையே'' என்று கேள்வி மேல் கேள்வி கேட்டாள்.

''மாளிகை வாயிலிலுள்ள காவல்காரர்களிடம் அவள் சிரித்துப் பேசினாள்'' என்றான் அமுதன்.

அப்போது அமுதனின் பார்வை மாடத்திலிருந்து இறங்கி வரும் படிக்கட்டுகளின் மீது சென்றது. அவன் கை கூப்பி வணக்கம் தெரிவிப்பதைக் கண்ட இளவரசி திரும்பிப் பார்த்தாள்.

ஆதித்தன் படிக்கட்டுகளிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தான்.

''அமுதா எப்பொழுது வந்தாய்?'' என்று ஆதித்தன் கேட்டான்.

''பத்து, இருபது நாழிகை இருக்கலாம் இளவரசே!'' என்றான் அமுதன்.

இளவரசர்...

வைரக்கண்ணி திரும்பிப் பார்த்தாள். விக்கியண்ணன் உதடுகளில் விரலை வைத்துச் சைகை செய்தான். அதையும் கண்டுவிட்டாள் வைரக்கண்ணி.

ஆதித்தனை அவள் பார்த்தாள். அந்தப் பார்வையில் பெரும் சந்தேகம் பொங்கியது.

ஆதித்தன் சிரித்தான். ''ஆம்'' என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தான்.

இதுவரை அவர்களிருவரும் மேல் மாடத்தில் என்ன பேசிக் கொண்டார்கள்? இருவர் இதயமும் பேசிக் கொண்டன. விழிகள் பேசிக் கொண்டன, சிறிது நேரம்.

''மூலபத்திரனைக் கொன்றவர் யாரென்று பல்லவ சக்கரவர்த்தி கண்டுபிடித்து விட்டாராம்'' என்றாள் வைரக் கண்ணி.



01 09 201

## 32. இருளுக்குப் பின் நிலவு

அமுதன் தான் கொண்டு வந்திருந்த துணி மூட்டையை நடுக்கூடத்தில் பிரித்தான். இளவரசி, மேல் மாடத்திலிருந்து இறங்கி வருவாள் என்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அமுதன், அங்கு விக்கியண்ணனைப் பார்த்தவுடன் திகைத்து மரியாதை செலுத்த எழுந்து நின்றான். ஆனால் விக்கியண்ணன் சைகை செய்துவிட்டு அந்த இடத்திலிருந்து சென்றுவிட்டான். மயிலழகை சற்று நிறுத்தி ஏதோ கேட்க எண்ணினான். அதற்குள் மயிலழகு மாளிகையை விட்டு வெளியே செல்வது தெரிந்தது.

மேல் மாடத்திலிருந்து இளவரசி வைரக்கண்ணி இறங்கி வந்தாள். பிரித்திருந்த மூட்டையிலிருந்து பட்டாடைகள் வெளியே தவழ்ந்து வந்தன.

''கவியாரே! பட்டாடைகளைப் பார்த்தீர்களா?'' என்று இளவரசி கேட்டாள், விக்கியண்ணனை நோக்கி.

''நீங்கள்தான் பார்க்க வேண்டும் இளவரசி! உங்கள் திருமணத்திற்குப் பட்டாடைகள் இப்போதே வந்துவிட்டன'' என்றான் விக்கியண்ணன். தன்னைக் கவிராயர் என்றும், புலவர் என்றும் இளவரசி இன்னும் உண்மையில் நம்பிக் கொண்டிருப்பதை நினைக்க அவனுக்குச் சிரிப்பு வந்தது. ஆனால் அதே போன்று இளவரசியின் முகத்தில் நாணங் கலந்த சினம் சுழன்று நிற்பதையும் அவன் கண்டான்.

''என் திருமணத்திற்குப் பட்டாடைகளா? என்ன சொல்கிறீர்கள் கவிராயரே?'' என்று வைரக்கண்ணி சற்றுக் கடுமையான குரலில் கேட்டாள்.

அதற்குள் அமுதன் பேசினான்: ''ஆமாம். உண்மைதான் இளவரசியாரே! உங்கள் கல்யாணத்திற்குப் பட்டாடைகளை அரசர் கொடுத்தனுப்பியிருக்கிறார்.''

இளவரசி அவன் பக்கம் திரும்பி, ''எந்த அரசர்? உன்னை யார் அனுப்பினார்கள்?'' என்று கேட்டாள்.



''இப்போது இங்கிருந்தாளே உங்கள் மாளிகைப் பணிப்பெண். அவள்தான் அழைத்து வந்தாள்'' என்றான் அமுதன்.

''பணிப்பெண்ணா? அழைத்து வந்தாளா?'' இளவரசி பரபரப்புடன் கேட்டாள். ''மாளிகைக்குள் ஒருவரையும் நுழைய விடுவதில்லையே. கட்டுக்காவல் பலமாக இருக்கிறதே. நேற்று இங்கே வந்த அபராஜிதன் ஏதும் பட்டாடைகளைப் பற்றிச் சொல்லவில்லையே'' என்று கேள்வி மேல் கேள்வி கேட்டாள்.

''மாளிகை வாயிலிலுள்ள காவல்காரர்களிடம் அவள் சிரித்துப் பேசினாள்'' என்றான் அமுதன்.

அப்போது அமுதனின் பார்வை மாடத்திலிருந்து இறங்கி வரும் படிக்கட்டுகளின் மீது சென்றது. அவன் கை கூப்பி வணக்கம் தெரிவிப்பதைக் கண்ட இளவரசி திரும்பிப் பார்த்தாள்.

ஆதித்தன் படிக்கட்டுகளிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தான்.

''அமுதா எப்பொழுது வந்தாய்?'' என்று ஆதித்தன் கேட்டான்.

''பத்து, இருபது நாழிகை இருக்கலாம் இளவரசே!'' என்றான் அமுதன்.

இளவரசர்...

வைரக்கண்ணி திரும்பிப் பார்த்தாள். விக்கியண்ணன் உதடுகளில் விரலை வைத்துச் சைகை செய்தான். அதையும் கண்டுவிட்டாள் வைரக்கண்ணி.

ஆதித்தனை அவள் பார்த்தாள். அந்தப் பார்வையில் பெரும் சந்தேகம் பொங்கியது.

ஆதித்தன் சிரித்தான். ''ஆம்'' என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தான்.

இதுவரை அவர்களிருவரும் மேல் மாடத்தில் என்ன பேசிக் கொண்டார்கள்? இருவர் இதயமும் பேசிக் கொண்டன. விழிகள் பேசிக் கொண்டன, சிறிது நேரம்.

''மூலபத்திரனைக் கொன்றவர் யாரென்று பல்லவ சக்கரவர்த்தி கண்டுபிடித்து விட்டாராம்'' என்றாள் வைரக் கண்ணி.



01 09 2

''யார் கொன்றார்களாம்?'' உண்மையில் ஆதித்தனுக்கு குற்றவாளியை அறிவதில் அக்கறை இல்லை.

வைரக்கண்ணி ஆதித்தனை விரலால் சுட்டிக் காட்டினாள்.

''நானா?'' என்று திகைப்புடன் கேட்டான் ஆதித்தன்.

''ஆமாம். அவரது இச்சைக்கு இணங்காவிடில் என் மீதும் கூடக் குற்றத்தைச் சுமத்துவாராம்'' என்றாள் வைரக்கண்ணி.

ஆதித்தன் பெரிதாக நகைத்தான். ''அபராஜிதன் பல்லவப் பரம்பரைக்கே இழுக்குத் தேடுகிறார். வீண்பழி சுமத்துகிறார். நீயே சொல்லு. நானா கொன்றேன்?'' என்று ஆதித்தன் கேட்டான். வைரக்கண்ணி தலையைப் பக்கவாட்டில் இருபுறமும் அசைத்தாள்.

''நீ என்ன செய்யப் போகிறாய்? அபராஜிதனை மணக்கப் போகிறாயா?'' ஆதித்தன் கேட்டான்.

வைரக்கண்ணியின் முகம் மாறியது. ''ஒருபொழுதும் சம்மதிக்க மாட்டேன். அருவிக்கரை கோயிலில் கொற்றவையை நோக்கி எதற்காக கடுந்தவம் இருந்தேன்? பல்லவ சக்கரவர்த்தியை மணப்பதற்காகவா? உங்களுடன் வந்த கவிராயரைக் கேளுங்கள், சொல்வார்'' என்றாள்.

''அப்படியென்றால் பழியை நீ ஏற்றுக் கொள்ளப் போகிறாயா?'' என்று ஆதித்தன் கேட்டான்.

''நான் ஏன் ஏற்றுக் கொள்கிறேன்? நான் குற்றம் செய்திருந்தால்தானே? மூலபத்திரன் என் தாய்மாமன். அவரைக் கொல்வதால் எனக்கு எந்தவிதப் பயனுமில்லை. வினை விதைத்தார். வினையை அறுவடை செய்தார். என்னைக் கவர்ந்து செல்ல முயன்றார். நல்லவேளையாக நீங்கள் தெய்வம் அனுப்பியது போல் வந்தீர்கள். என்னைக் காப்பாற்றினீர்கள். மற்றும் ஒருமுறையும் காப்பாற்றமாட்டீர்களா?'' வைரக்கண்ணியின் குரலில் ஏக்கமும் வேண்டுகோளும், குழைவுமிருந்தன.

''மற்றும் ஒரு முறையா?'' ஆதித்தன் கேட்டான்.

''ஆமாம், அதற்காகத்தானே உங்களை மாளிகைக்கு வருமாறு சொன்னேன்? நீங்களும் வந்தீர்கள்...''

''வந்தேன். உன்னை மீண்டும் ஒருமுறை, ஊருக்குச் செல்வதற்குள் காண வேண்டும் என்று தோன்றியது. வந்தேன்.''



''என்னைப் பார்ப்பதற்காக மட்டும்தானா?'' இளவரசியின் விழிகள் ஆதித்தனைக் கூர்ந்து நோக்கின.

''என்னை வருமாறு கூறியது உன்னைக் காப்பாற்ற மட்டும்தானா?'' - ஆதித்தன் கேள்விக்கு இளவரசியார் உடனே மறுமொழி கூறவில்லை.

சிறிது நேரம் குனிந்த தலையுடனிருந்தவள், ''என் உயிர் என்னிடமில்லாவிடில் நான் பிழைப்பதேது? அதனால் என்னைக் காப்பாற்ற வாருங்கள் என அழைத்தேன்'' என்றாள்.

''உன் உயிரை யார் கவர்ந்து சென்றுவிட்டார்கள்?'' ஆதித்தன் பரபரப்புடன் கேட்டான்.

''சொன்னால், என்னிடம் கொண்டு தருவீர்களா?''

''உயிரில்லாமலா இப்போது என்னுடன் பேசுகிறாய்?''

''ஆமாம், உயிரைக் கண்டுவிட்டோம் என்ற பெரும் நம்பிக்கை...''

''நீ சொல்வது எனக்குப் புரியவில்லையே. உன் உயிரை உன்னிடம் கொண்டு தருவதா? உயிரைக் கண்டுவிட்டாயா?''

''ஆமாம், கடந்த இரண்டு நாள்களாக என் உயிர் என்னிடமில்லை.''

''யாரிடமிருந்தது?''

இளவரசி வைரக்கண்ணி ஆதித்தனை மிக நெருங்கி அவன் மார்பில் தன் விரலைப் பதித்து, ''உங்களிடம்தான்'' என்றாள்.

''அப்பாடா!'' என்று பெருமூச்சு விட்ட ஆதித்தன், அவளது கரத்தை விடாமல் பிடித்துக்கொண்டு, அன்புடன் அவள் கன்னத்தை வருடி, ''என்னைப் பயப்பட வைத்துவிட்டாய்'' என்றான்.

''பயப்படக்கூடியவரா நீங்கள்?''

''பயந்துதான் ஆக வேண்டும் போலிருக்கிறது. இல்லாவிடில் என் உயிர் என்னிடமிராதே.''

''நான் என்ன அவ்வளவு பொல்லாதவளா?''

''இல்லை. நீ மாரனின் சகோதரி. கண்ணுக்குத் தெரியாத அந்த மன்மதன் தனது கரும்பு வில்லை உன்னிடம் கொடுத்துவிட்டானே!''

01 09

''உங்கள் கையில் சுழலும் வாள்! எதிரே மாரன் வில் என்ன செய்யும்?''

''என்னிடம் ஒரே ஒரு வாள். உன்னிடமோ இரண்டு வேல்கள். அவை பாய்ந்தால் நான் என்ன செய்வேன்?''

''உங்களுடைய வலிமை மிகுந்த தோள், கரம், மார்பாகிய கவசம் வேல்களைத் தடுத்து நிறுத்திவிடுமே.''

''எனக்கு நம்பிக்கையில்லை. பயமாகவும் இருக்கிறது.''

''பயமா? உங்களுக்கா? மார்புக் கவசத்தின் உறுதியைப் பார்த்துவிடுவோமே'' என்று கூறிய இளவரசியை. ஆதித்தன் இழுத்து அணைத்துக் கொண்டான்.

இளவரசியின் காந்தள் விரல்கள் அவனது முதுகை வருடின. ஆதித்தனின் கரங்களுள் ஒன்று அவள் இடையிடம் பேசின. ஒன்று அவள் கூந்தலைத் தடவின. நெற்றியில் தவழ்ந்த கூந்தல் கற்றைகளை அகற்றின. வேல்விழியின் கூர்மையை ஆராய்ந்தன. எட்பூ நாசியின் மென்மையை உணர்ந்தன. செவ்விதழின் செம்மையையும் அதற்குள் மறைந்திருக்கும் வெண் முத்துகள் போன்ற பற்களையும் ஸ்பரிசித்தன. சங்குக் கழுத்தையும், வேயுறு தோளையும் விம்மும் செங்கலசங் களையும் நெருங்கும் போது இளவரசி துவண்டாள். அழகிய அந்தப் பெண் கொடி ஒரு கணத்தில் ஆதித்தனென்னும் துவஜத்தைப் பற்றியது.

ஆதித்தனின் மெல்லிய மூச்சு அவள் கழுத்தில் தவழ்ந்து அவள் உடலைச் சிலிர்க்கச் செய்தது.

''இளவரசி! என்னை மன்னித்துவிடு'' என்று ஆதித்தன் அவள் செவியருகே முணுமுணுத்தான்.

''எதற்காகவாம்?'' - வைரக்கண்ணி விழிகளைப் பாதி மூடியவாறு கேட்டாள்.

''சோழ நாட்டிலிருந்து வந்த ஒரு யாத்திரிகன் இளவரசியை இதுபோல்...''

''இதுபோல்...?''

''நெருக்கமாக...!''

''நெருக்கமாக...?''

ஆதித்தன் மெல்ல நகைத்தான். ''இளவரசிக்குப் பால பாடத்திலிருந்து தொடங்க வேண்டும் போல் தோன்றுகிறது'' என்றான்.



''எந்தக் கலையை?'' என்று கேட்டவளை, ஆதித்தன் வாய் திறவாமல் செய்துவிட்டான். தன் இதழ்களால்.

அப்போதுதான் கீழே அமுதன் வந்து விக்கியண்ணனிடம் பேசும் குரல் கேட்டது.

''பகல் என்பதை மறந்துவிட்டோம்'' என்றான் ஆதித்தன.

''ஏன், நாம் ஏதும் முறை தவறி நடக்கவில்லையே'' என்றாள் வைரக்கண்ணி.

''ஒருவேளை பல்லவ சக்கரவர்த்தியின் ஆட்கள் வந்திருந்து நம் நிலையைக் கண்டுவிட்டால் உங்களுக்கு அவப்பெயர் ஏற்படக் கூடுமல்லவா?''

''மேல் மாடத்திற்கு வரும் துணிவு அவர்களுக்கு இல்லை. அப்படியே வந்தாலும், அவப்பெயர் ஏற்படுமாறு நான் என்ன செய்துவிட்டேன்?''

''பல்லவ நாட்டு இளவரசி இப்படி ஒரு சாதாரண சோழநாட்டுப் பிரஜையுடன் சல்லாபிப்பது சரியா? ஊர் உலகம் அறிந்தால் உங்கள் அந்தஸ்து என்ன ஆவது?''

''உங்கள் கேள்வி ஒவ்வொன்றிற்கும் நான் சரியான விடையளிக்கிறேன். நானும் பல்லவ நாட்டு சாதாரணக் குடிமகள்தான். இளவரசி என்று அழைக்கிறார்களே தவிர. எனது உரிமை எப்போதோ பறிக்கப்பட்டுவிட்டது. அடுத்து சோழ நாட்டு சாதாரண பிரஜையான நீங்கள் என்னைக் காப்பாற்றினீர்கள். கவர்ந்து செல்லப்படுவதனின்றும் என்னைத் தடுத்துக் காப்பாற்றினீர்கள். அதனால் உயர்ந்த மனிதராகி விட்டீர்கள்.''

இளவரசி இவ்வாறு மிகச் சாதுர்யமாகப் பேசியதைக் கேட்டு அவளது பேச்சு வன்மையை மெச்சிய ஆதித்தன் அவளது முதுகை அன்புடன் தடவி, ''இழந்த உன் உரிமையையும் நான் மீட்டுத் தருகிறேன். மீட்டுத் தந்தால் எனக்கு என்ன பரிசு தருவாய்?'' என்று கேட்டான்.

வைரக்கண்ணியின் எழில் முகத்தில் நாணக்கொடி படர்ந்தது. உதடுகள் துடித்தன. அவள் தன்னிரு கரங்களையும் அகல விரித்து, ''பரிசா? முன்பே அளித்துவிட்டேனே!'' என்றாள்.

''பரிசை அளித்துவிட்டாயா?'' என்று ஆதித்தன் கேட்க, ''ஆமாம், என்னையே பரிசாக உங்களுக்கு அளித்துச் சில நாள்கள் ஆகின்றன'' என்றாள்.

ஆதித்தன் அவள் விழிகளுக்குள் தன்னைக் காண முயன்றான்.

மீண்டும் கீழேயிருந்து, விக்கியண்ணன் குரலும் அமுதன் குரலும் கேட்டன. ஆதித்தன் வைரக்கண்ணியை நோக்கி, கீழே சென்று என்ன நடக்கிறது என்று பார்த்து வருமாறு கேட்டுக் கொண்டான்.

வைரக்கண்ணி கீழே இறங்கிவந்து அமுதனுடன் பேசும் போது, ஆதித்தனும் படிக்கட்டுகளின் வழியே இறங்கி வரவும், ஆதித்தனைப் பார்த்து அமுதன் வணக்கம் தெரிவிக்க, மிக மரியாதையுடனும், பயபக்தியுடனும் இளவரசே என்று அழைக்க ஒன்றும் புரியாதது போல திகைத்த வைரக்கண்ணியை நோக்கி, ''இளவரசி! என்னை மன்னிக்க வேண்டும்'' என்று கூறினான்.

''எதற்காக?'' என்பதுபோல் வைரக்கண்ணி அவனை நோக்கினாள்.

இப்போது விக்கியண்ணன் விரைந்து முந்திக் கொண்டு, ''என்னையும் மன்னிக்க வேண்டும்'' என்றான்.

''எதற்காக? தாங்கள் கவிராயர் இல்லையா?'' என்று கேட்டாள் வைரக்கண்ணி, தன் உதடுகளில் குறும்புச் சிரிப்பு மிளிர.

''சோழநாட்டு இளவரசரை உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்காததற்காக...'' என்று கூறிய விக்கியண்ணனை நோக்கி, வைரக்கண்ணி ''இளவரசரின் உயிர்த்தோழரே! என்ன ஆபத்தான செயலில் இறங்கியிருக்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''எங்கள் இளவரசர் உங்களைக் காதலித்ததைக் கூறுகிறீர்களா?'' என்று கேட்டான்.

''ஐயா! நான் கூறுவதைத் தவறாகப் புரிந்து கொண்டு விட்டீர்கள். எந்த நேரத்திலும் அபராஜிதன் இங்கு வரலாம். அல்லது இங்குள்ள காவலர்கள் உங்களை அறிந்து அரசரிடம் தெரிவித்துவிடலாம். என் கண் எதிரே நீங்கள் சிக்கிக் கொள்வதை நான் சகிக்க மாட்டேன்.''

''இப்போது நாம் அதற்கென்ன செய்யலாம்?'' என்று விக்கியண்ணன் கேட்டான்.

''நீங்கள் இங்கே மறைந்து கொள்ளுங்கள்'' என்றாள்.



''இந்த வாலிபன் அமுதன்?''

''அவர் உள்ளே வந்திருப்பதைக் காவலர்கள் அறிவர். உடனே இந்தப் பட்டுப் புடைவைகள், ஆடைகளை மூட்டையாகக் கட்டிக் கொண்டு வந்தது போலவே சென்றுவிடுங்கள்'' என்றாள்.

இப்போது ஆதித்தன் குறுக்கிட்டான். ''அமுதா! நீ உடனே விரைந்து தஞ்சைக்குப் புறப்பட்டு என் தந்தையிடம் என் நலன்களைக் கூறி விரைவில் வந்துவிடுவதாகவும் செய்தி தெரிவித்துவிடு. விக்கியண்ணா! நீ உடனே முன் திட்டப்படி மாமல்லபுரம் சென்றுவிடு'' என்றான்.

அவர்கள் சென்றவுடன் வைரக்கண்ணி ஆதித்தனை அழைத்துக் கொண்டு மாளிகையின் நடுக்கூடத்திற்குச் சென்றாள். அங்கிருந்த விளக்கொன்றை ஏற்றிக் கொண்டு கூடத்தின் ஓர் ஓரமாக இருந்த மஞ்சத்தை நகர்த்தினாள்.

கீழே செல்லப் படிக்கட்டுகளுடன் சுரங்கப் பாதை தெரிந்தது.

விளக்கொளியுடன் வைரக்கண்ணி முன்செல்ல, ஆதித்தன் அவளைப் பின்தொடர்ந்து படிக்கட்டுகளில் இறங்கினான்.

○



01 09

## 33. அபராஜிதன் கேட்ட காதல் பிச்சை!

''நீங்கள் இங்கேயே இருங்கள். எனக்கென்னவோ உள் மனத்தில் ஏதோ ஒன்று சொல்லிற்று. இன்னும் சிறிது நேரத்தில் பல்லவ சக்கரவர்த்தியே இங்கு வந்து விடுவார் என்று. அவர் தங்களைக் கண்டுவிடக் கூடாது'' என்றாள்.

''அவர் உன்னைத் திருமணத்திற்கு வற்புறுத்தி, உடன் அழைத்துச் சென்றுவிட்டால்...'' என்று ஆதித்தன் கேட்டான். ''அது மட்டும் நடக்காது. என்னை அவர் நெருங்கவே முடியாது. இப்போது எனக்குள்ள கவலையெல்லாம் உங்களைப் பற்றித்தான். அவர் உங்களைக் கண்டுவிட்டால், சிறைப்படுத்தி விட்டால்... எனக்கு நினைக்கவே முடியவில்லை...'' இளவரசி உடலைச் சிலிர்த்துக் கொண்டாள்.

''என்னைப் பற்றிக் கவலைப்படாதே வைரக்கண்ணி! எந்த நேரத்திலும் என்னை அபராஜிதனின் ஆட்கள் கண்டு கொள்ளலாம் என அறிந்துதான் வைத்திருக்கிறேன்'' என்றான் ஆதித்தன்.

''அறிந்து வைத்திருக்கிறீர்களா? காஞ்சிக்கு வந்தது சிறைப்படுவதற்காகவா?''

''சிறைப்படுத்த!''

''யாரை...?''

இதற்கு ஆதித்தன் மறுமொழி கூறாமல் நகைத்தான்.

''நாம் இருவரும் இந்த மாளிகையிலிருந்து வெளியேறி விடுவோம்.''

''எப்படி வெளியேற முடியும்? இன்னும் சிறிது நேரத்தில் இந்த மாளிகையைச் சுற்றி பலத்த காவல் ஏற்பட்டுவிடும்...''

ஆதித்தன் இதைக் கேட்டு மெல்ல நகைத்தான். ''வைரக் கண்ணி! உனக்கேற்பட்டிருக்கும் கவலையை அறிந்தேன். உன் மனநிலையை அறியவே இவ்வாறு பேசினேன். அடுத்து என்ன செய்யலாம் என்று நீயே யோசனை சொல்லு!'' என்று



அவளை மெல்ல அணைத்துக் கொண்டான். அவள் கையில் இருந்த விளக்கு எண்ணெய் இல்லாததால் ஒளி குன்றியது.

''உம்... இங்கேயே நீங்கள் உட்கார்ந்திருக்க வேண்டும். இரவு நடுநிசிக்கு மேல் நான் வருகிறேன். இந்தச் சுரங்கப்பாதை வழியே வெளியே சென்று விடுவோம்...'' என்றாள் இளவரசி.

''இந்த வழி எங்கு செல்கிறது...?'' ஆதித்தன் கேட்டான்.

''நகரத்திற்கு வெளியே செல்கிறது'' என்றாள் வைரக்கண்ணி. விளக்கு அணைந்துவிட்டது.

''இளவரசி! நீ தான் உண்மையான பல்லவ வாரிசு. என்ன துணிவு...?'' என்று கூறி அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

''இரவு வரை இங்கே இருளில்தான் இருக்க வேண்டும்'' என்றாள் இளவரசி.

''மிகவும் நல்லது. நீயும் இருந்துவிடு'' என்றான் ஆதித்தன்.

''அதெப்படி நான் இருக்க முடியும்? இன்னும் சிறிது நேரத்திற்கெல்லாம் அபராஜிதன் என்னைத் தேடி வந்துவிடுவார். நான் மாளிகையில் இல்லாவிட்டால் எப்படியும் தேடிக் கண்டுபிடித்து விடுவார். எனக்காக இந்த இருளில் நடுநிசி வரையில் காத்திருங்கள்...'' என்று அவனது கரத்தைப் பிடித்து அழுத்தினாள்.

''நடுநிசி வரையில் இருட்டில் இருக்கிறேன். அதற்குப் பிறகும் இரவுதானே... இருள்தானே...?'' என்றான் ஆதித்தன்.

''இல்லை, இல்லை. வானத்தில் வட்ட முழுமதி பகல் போலக் காயும். நாம் பல்லவ நாட்டை விட்டே போய்விடுவோம்'' என்றாள்.

அந்தச் சுரங்கப்பாதை வழியாக வைரக்கண்ணி நடந்து சென்று கொண்டிருந்தாள். வைரக்கண்ணி மாளிகைக்குள் வருவதற்கும், அதே சமயம் வெளியிலிருந்து அபராஜிதன் பரிவாரங்களுடன் நுழைவதற்கும் சரியாக இருந்தது.

பல்லவ இளவரசி வைரக்கண்ணி, மிக வேகமாக மேல்மாடம் சென்று மஞ்சத்தில் படுத்துக்கொண்டாள்.

அந்த மாளிகைக்குள் அபராஜிதனின் அந்தரங்கப் படை வீரர்கள் நுழைந்து முக்கியமான வாயில்களில் நின்று கொண்டனர்.

மாளிகையைச் சுற்றிக் குதிரை வீரர்கள் சூழ்ந்து கொண்டனர். இளவரசியின் பணிப்பெண்களுக்கு ஒன்றும் புரியவில்லை. பல்லவ மன்னர் மாளிகைக்குச் சில நாட்களாக வருகை தருவது அவர்களுக்கு மிகவும் பெருமையாக இருந்தது. என்றாலும் இன்று ஏனோ அவர்களுக்குப் பயம் பிடித்துக் கொண்டது.

அபராஜிதன் கம்பீரமாக மாளிகையின் நடுவே நின்றுகொண்டு சுற்றும் முற்றும் பார்த்தார். அவர் முகத்தில் குறும்புத்தனம் நிறைந்த புன்னகை மிளிர்ந்து கொண்டிருந்தது. கையும் களவுமாக வேற்று நாட்டரசனைப் பிடித்து விடப் போகிறோமென்று பெருமிதம் நிறைந்திருந்தது.

'மாளிகையில் ஒருவரையும் காணவில்லையே?' அபராஜிதன் குறுக்கும் நெடுக்கும் நடந்தார்.

"ஏய், இளவரசி எங்கே?" என்று அபராஜிதன் சற்று கோபமாகக் கேட்டார்.

பணிப்பெண்கள் மிகவும் பயந்துவிட்டனர். சக்கரவர்த்தி இவ்வாறு கோபமாகப்பேசி அவர்கள் கேட்டதில்லை. பணிப் பெண்கள் தலைகுனிந்து நின்றனர்.

"எங்கே வைரக்கண்ணி?" என்று அவர் குரல் கொடுத்தவுடன் அந்தப் பணிப்பெண்களுக்குப் பேச நா எழவில்லை. சொற்கள் தடுமாற, 'மேலே மேலே' என்று கையைக் காட்டினர்.

அபராஜிதன் மேல்மாடத்திற்குச் செல்லுமுன் வீரர்கள் தலைவனை அழைத்து, "மிகவும் கண்காணிப்பாக இருங்கள். ஒருவரையும் உள்ளே விடவோ, வெளியே அனுப்பவோ வேண்டாம்" என்று கூறிவிட்டு வேகமாகப் படிக்கட்டுகளில் தாவி ஏறினார்.

கூடத்தை ஒட்டிய அறையில், வைரக்கண்ணி மஞ்சத்தில் படுத்திருப்பது அவருக்குத் தெரிந்தது. அவள் குதூகலமாக இல்லாமல் சோகத்துடனிருப்பதையும் கண்டார். மயிலழகு தன்னிடம் கூறியது பொய்யாக இருக்குமோ என்ற சந்தேகம் அவருக்கு எழுந்தது.

வைரக்கண்ணியின் மஞ்சத்துக்கருகில் சென்றார். யாரோ தன் அறைக்குள் வருகிறார்கள் என்பதைக் காலடியோசை மூலம் வைரக்கண்ணி உணர்ந்து கொண்டாள். சக்கரவர்த்தி யாகத்தானிருக்கும் என்பதும் அவளுக்குத் தெரியும். அவள் மனம், புரிய முடியா வேதனையால் தவித்தது. அவளது இதயம் படபடத்தது. பெருமூச்சு எழுவதனால் அவளுடைய மார்பகம் விம்மித் தணிந்தது.



அபராஜிதன் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். வைரக்கண்ணி திரும்பிப் பார்க்கவில்லை.

"நான் இங்கு வருவேன் என்று உனக்குத் தெரியுமா வைரக்கண்ணி?" என்று அபராஜிதன் அவளை நெருங்கிக் கேட்டார்.

வைரக்கண்ணி, திடுக்கிட்டவள் போல் திரும்பிப் பார்த்து, அப்பொழுதுதான் அரசரைக் காண்பவள்போல் மஞ்சத்தில் பரபரப்புடன் எழுந்து உட்கார்ந்தாள்.

"நீங்கள் வந்ததை நான் கவனிக்கவில்லை" என்றாள்.

அபராஜிதன் நகைத்தார். அந்தச் சிரிப்பு அவள் சொல்லில் நம்பிக்கை இல்லை என்பதை புலப்படுத்தியது.

வைரக்கண்ணி அவரைக் கண்ணிமைக்காமல் உற்று நோக்கினாள். அபராஜிதன் மீண்டும் சிரித்தவாறு, "இளவரசி! மேல்மாடத்திற்கு வருபவர் யாரென்று தெரியாமல் படுத்திருக்கிறாய், நம்ப முடியவில்லை..." என்றார்.

வைரக்கண்ணி உதட்டைக் கடித்துக் கொண்டாள். "நீங்கள் வருவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை... இந்த இடத்திற்குப் பணிப்பெண்களைத் தவிர வேறு ஒருவரும் வருவதில்லையே..." என்றாள்.

அபராஜிதனால் உடனே மறுமொழி கூற முடியவில்லை.

"இந்த இடத்திற்கு வருவதற்கு எனக்கு உரிமை இல்லையா?" என்று பேச்சை வேறு திசையில் திருப்ப விரும்பினார்.

"உரிமை கிடையாது" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினாள் வைரக்கண்ணி.

அபராஜிதன் திடுக்கிட்டான். மெல்ல சினம் மூண்டது.

"என்ன, எனக்குக் கூடவா...?"

"ஆமாம். யாராயிருந்தால் என்ன? அந்தப்புரத்திற்குள் என் உத்தரவின்றி ஆடவர் வரக்கூடாது என்று தங்களுக்குத் தெரியாதது ஆச்சரியமாயிருக்கிறது."

"எனக்குக்கூட ஆச்சரியமாத்தானிருக்கிறது! மற்ற ஆடவர்கள் இங்கே வரும்போது எனக்கு மட்டும் தடை ஏன்?"

அபராஜிதன் இவ்வாறு கேட்டவுடன் வைரக்கண்ணி திடுக்கிட்டாள், என்றாலும் தன் உணர்ச்சியைப் புலப்படுத்திக்



01 09

கொள்ளாமல், ''ஆடவர்களா? இங்கேயா? என்ன சொல்கிறீர்கள் அரசே?'' என்று கேட்டாள்.

அபராஜிதன் தன் கோபத்தை உடனே வெளிக்குப் புலப்படுத்தாமல் மெல்லச் சிரித்து, ''வைரக்கண்ணி! உண்மையை மறைக்கும்போது மாறும் உன் முக அழகை இன்றெல்லாம் ரசித்துக் கொண்டிருக்கலாம்...'' என்றார்.

''ரசிக்கத்தானே நீங்கள் இங்கே வந்தீர்கள்? ரசித்தாகி விட்டதென்றால் இங்கிருந்து போய்விடலாம்...'' என்று சீறினாள்.

''அவ்வளவு எளிதில், சீக்கிரமாகப் போய்விடுவதற்காக வரவில்லை...''

''அப்படியென்றால், பகல் உணவும், இரவு விருந்தும் ஆயத்தப்படுத்தச் சொல்லட்டுமா?''

''உன் முகம் பகல் உணவாக அமைந்துவிட்டது. இரவு விருந்துக்கு வேண்டுமானால் நீ சம்மதித்தால் எனக்கு ஆட்சேபணை இல்லை...'' என்ற அபராஜிதன் இரு பொருளில், தான் கூறியதற்காக பெரிதாக நகைத்தான்.

வைரக்கண்ணியும் புரிந்து கொண்டுவிட்டாள். ''ஒரு மகத்தான நாட்டின் சக்கரவர்த்தி பேசும் வார்த்தையாக இல்லை. பல்லவ பரம்பரையில் பண்புக் குறைவாக நடந்தவர்களைப் பற்றி நான் கேள்விப்பட்டதில்லை'' என்று வைரக்கண்ணி முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு சொன்னாள்.

''ஓ, அப்படியா? பல்லவ சக்கரவர்த்தியின் கீர்த்தி, கௌரவம் குறைவதற்கான செயல்களைச் செய்யும் ஓர் இளவரசியும் இதுவரை பல்லவ குடும்பத்தில் இருந்ததாக நானும் கேள்விப் பட்டதில்லை...''

வைரக்கண்ணி சீறியெழும் பெண் புலியை போல் திரும்பினாள்.

''என்ன சொன்னீர்கள்? பல்லவ சக்கரவர்த்தியின் கீர்த்தி, கௌரவம் குறைவதற்கான செயல்களை நான் செய்கிறேனா? யோசித்துப் பேசுங்கள். என் குலம் சிறக்க என் உயிரையே தியாகம் செய்யச் சித்தமாயிருக்கும் என்னைப் பார்த்தா இப்படிச் சொல்கிறீர்கள்?''

''ஆமாம், உன்னைப் பார்த்துத்தான் சொல்கிறேன். பல்லவ இளவரசி என்று சொல்லிக்கொள்ளும் உன்னைப் பார்த்துத்தான் சொல்கிறேன் வைரக்கண்ணி! நீ செய்திருக்கும் மகத்தான



குற்றத்தை நான் ஏன் மறந்து மன்னிக்கிறேன் தெரியுமா? வேற்று நாட்டு இளவரசருக்கும் அவருடன் வந்தவருக்கும் நீ அடைக்கலம் தந்திருக்கிறாய். அது எவ்வளவு பெரிய குற்றம் என்று உனக்கே தெரியும். அந்தக் குற்றத்தையும் - செய்யவே இல்லை என்று பொய் கூறி மறைத்துவிட்டாய். அது மற்றொரு குற்றம். இந்தக் குற்றங்கள் இராஜத் துரோகக் குற்றங்கள் என்று உனக்குத் தெரியாமலா இருக்கும்? அவற்றிற்கு என்ன தண்டனை தெரியுமா?''

வைரக்கண்ணி அஞ்சவில்லை. அபராஜிதன் குரலுக்கும் ஒருபடி மேலே உரத்த குரலில், ''தண்டனை பெற வேண்டியவர்களே தண்டனையைப் பற்றிப் பேசுவது வியப்பாக இருக்கிறது. நியாயமாக எனக்குச் சேர வேண்டிய இந்த நாட்டை அபகரித்துக் கொண்டதோடு, என்னையும் நடுச்சாலையில் கவர்ந்து செல்லச் சதி செய்த உங்களுக்கு என்ன தண்டனை? யார் தருவது?'' என்றாள்.

அபராஜிதன் தன் சீற்றத்தைத் தணித்துக் கொண்டு, குரலையும் மெல்லக் குறைத்துக்கொண்டு, ''வைரக்கண்ணி! நீ பல காலமாக தவறாகக் கற்பனை செய்து கொண்டிருக்கிறாய். நாட்டின் வாரிசாக பல்லவ நாட்டை இதுவரை தவறான வாரிசுதாரர்கள் ஆளவில்லை. நடுசாலையில் உன்னைக் கவர்ந்து வருமாறு யாரும் கட்டளையிடவுமில்லை. உனது தாய்மாமன் உன்னை அழைத்துப் போகவே விரும்பினான். அவரை நீ தடுத்ததோடல்லாமல், அவர் உயிர் போகவும் சதி செய்தாய். அவரைக் கொன்றவர் யாரென்று நாங்கள் கண்டுபிடித்து விட்டோம். சோழ இளவரசன் ஆதித்தன் மாறுவேடத்தில் இந்த நாட்டில் நடமாடியிருக்கிறான்.

''அவன்தான் கொலைக்குற்றம் செய்தவன். அவனுக்கு நீதான் அடைக்கலம் தந்தாய். இந்த மாளிகையில் அவனிருக் கிறான். அவனுடைய தோழனிருக்கிறான். அவர்களைச் சிறைப்படுத்தவே நான் வந்திருக்கிறேன்! உன்னையும் சிறைப்படுத்த முடியும்...'' என்று கூறிச் சற்று நிறுத்தினான்.

வைரக்கண்ணி சீறி வரும் பெண் புலியென அவன் முன் வந்து அவன் முகத்தை அனல் கக்கும் விழிகளால் நிமிர்ந்து நோக்கி, ''உம், என்னைச் சிறை செய்யுங்கள். எந்தக் கடுஞ்சிறையிலும் வாழ நான் சித்தமாயிருக்கிறேன்...'' என்றாள்.

''வைரக்கண்ணி! ஆத்திரப்படாதே. அவ்வளவு எளிதில் என்னை ஏமாற்றிவிட முடியாது. சோழ இளவரசனை இன்னும் சிறிது நேரத்தில் பிடித்து உன் முன் நிறுத்திய பிறகு உனக்குச்



01 09

சிறை தண்டனை விதிப்பதைப் பற்றி முடிவு செய்கிறேன்'' என்று கூறி வேகமாக படிக்கட்டுகளில் இறங்கிக் கீழ்க்கூடத்தை அடைந்தார்.

பல்லவ வீரர்கள் மாளிகையின் ஓரிடம்கூட விடாமல் தேடினர். வைரக்கண்ணியும் கீழ்க்கூடத்திற்கு வந்து மஞ்சத்தில் உட்கார்ந்து கொண்டாள். தைரியமாகப் பேசினாளே தவிர, அவள் உள்ளத்தில் பெரும் கிலி பிடித்தாட்டியது. சுரங்கப் பாதையைக் கண்டுபிடித்து, அதன் வழியே சென்று இளவரசரைப் பிடித்துவிட்டால் என்ன செய்வது என்று மிகவும் அஞ்சினாள். எல்லாத் தெய்வங்களையும் வேண்டினாள். கண்களை மூடிக்கொண்டு கொற்றவையைத் துதித்தவாறு ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்தாள்.

சிறிது நேரம் கழிந்தது. பின்னர், ''வைரக்கண்ணி, வைரக் கண்ணி'' என்ற குரல் கேட்டது. திடுக்கிட்டு தியானத்திலிருந்து விழித்த வைரக்கண்ணியின் எதிரே அபராஜிதன் நின்று கொண்டிருந்தான்.

''நீ அதிர்ஷ்டசாலி'' என்றான் அபராஜிதன்.

''நிச்சயமாக, உறுதியாக நான் அதிர்ஷ்டசாலிதான். இந்தப் பிறவியில் இல்லாவிட்டாலும் அடுத்த பிறவியிலாவது பல்லவ நாட்டின் முழு உரிமையைப் பெற்று அரசியாவேன்'' என்றாள் வைரக்கண்ணி உட்கார்ந்தபடியே.

''ஏன், இந்தப் பிறவியிலேயே நீ பல்லவ அரசியாகலாம். இதுவரையில் யாரிடமும் மனம்விட்டுக் கெஞ்சிக் கேட்காத நான் உன்னிடம் காதல் பிச்சை கேட்கிறேன். நீ என்னை மணப்பதாக வாக்குக்கொடு. நீதான் பல்லவ நாட்டு அரசி'' என்றான்.

''அதுவும் இந்தப் பிறவியில் நமக்கு இல்லை. கனவு காண வேண்டாம். இந்த மாளிகையைச் சோதனைப் போட்டாகி விட்டதா? சோழ இளவரசரோ அல்லது அவரது பணியாளோ எங்காவது மூலையிலாவது இருந்தனரா?'' என்று கேலி நிறைந்த குரலில் வைரக்கண்ணி கேட்டாள்.

அபராஜிதன் கோபப்படவில்லை. ''வைரக்கண்ணி! நீ அழகு மிக்கவள் என்று மட்டுமே இதுவரை நான் எண்ணி யிருந்தேன். ஆற்றலுமிக்கவள், பல்லவ நாட்டின் அரசி யாவதற்குத் தகுதி வாய்;' தவள். பல்லவ நாட்டிற்கு அறிவும் ஆற்றலும் மிகுந்த சந்ததியைப் பெற்றுத்தர சக்தி வாய்ந்தவள். சோழ இளவரசன் தப்பிவிட்டான். ஆனால், அவனுடைய வேலைக்காரன் சிக்கிவிட்டான். அவனைக் கொண்டு, சோழ இளவரசனையும் வெகு விரைவில் கண்டுபிடித்து விடுவோம். அது எப்படியோ போகட்டும். அந்த வேலைகளை இனி என் வீரர்கள் கவனித்துக் கொள்ளுவர். வைரக்கண்ணி! நீ 'உம்' என்று உன் விழியால் சம்மதம் தெரிவித்துவிட்டால், இந்த நாடே வியந்து போற்றும் வகையில் உன்னைத் திருமணம் செய்து கொள்கிறேன். பங்குனி உத்திர நாளன்று நமது கல்யாணம் கோலாகலமாக நடைபெறும் வைரக்கண்ணி!'' என்று அபராஜிதன் குரலில் குழைவு குலவப் பேசினான்.

வைரக்கண்ணி அந்த இடத்தைவிட்டு நகர்ந்து, ''பல்லவ சக்கரவர்த்தி அவர்களே! உமது கனவு கனவாகவே இருக்கட்டும். என் பணிப்பெண்கள் எதிரே உம்மை அவமரியாதையாக நான் பேசும் நிலையை ஏற்படுத்தி விடாதீர்கள். உடனே இங்கிருந்து புறப்பட்டுச் செல்லுங்கள். உம்மை மணந்த பல்லவ அரசிக்குத் துரோகம் செய்யாதீர்கள். அவர்களுக்குப் பிள்ளைப் பேறு இல்லாததால் என்னை மணந்து உமது சந்ததியை வளர்க்க நினைக்காதீர். ஆண்டவன் திருவுள்ளம் உம்முடன் உமது சந்ததி நின்றுவிட வேண்டும் என்றிருக்கிறது. அதை மாற்ற முடியாது. இனி நீங்கள் உடனே இங்கிருந்து போய்விடலாம்...'' என்று அழுத்தமாக ஆனால், அரசர் செவியில் மட்டும் விழும் வண்ணம் கூறினாள்.

அபராஜிதன் சிரித்தான். முதலில் சாதாரண சிரிப்பாக இருந்த அது பயங்கரச் சிரிப்பாக மாறியது.

''வைரக்கண்ணி, கடைசியாக உன்னைக் கேட்கிறேன். என் விருப்பத்திற்கு இணங்க முடியுமா, முடியாதா?'' - குரலில் பதற்றமிருந்தது.

வைரக்கண்ணி மறுமொழி கூறவில்லை. வலது கரத்தைத் தூக்கி, ஒற்றை விரலை மடித்து, வெளியே செல்லும் வழியைக் காட்டினாள்.

அபராஜிதன் குனிந்த தலையுடன் நடந்தான். கூடத்தின் வாயிற்படியருகே சென்று, ''வைரக்கண்ணி! உன் முடிவுக்காக நீ வருத்தப்படப் போகிறாய்'' என்று கூறி விரைந்து சென்றான்.

அபராஜிதனின் பரிவாரங்களும் வெளியேறின. சுரங்க வழியிலிருந்த சிறு இடத்தில் பசியாலும், அடுத்து என்ன நேருமோ என்ற கவலையுடனும், பசிக் களைப்புடனும் விழிகளை மூடியவாறு ஆதித்தன் அமர்ந்திருந்தான்.

○





01 09

## 34. இளங்கோ பிச்சியின் திட்டம்

விஜயாலய சோழ தேவர், இளங்கோ பிச்சியைத் தன்னிருப்பிடத்திற்கு வரவழைத்தார். அந்தப்புர மகளிரை, அரச மண்டபத்திற்கு மன்னர் இவ்வாறு கூப்பிட்டனுப்புவது கிடையாது. அவரே நேரே சென்றுதான் சந்திப்பார்.

விஜயாலயருக்குக் கடந்த சில நாள்களாகவே உடல்நலம் குன்றி இருந்தது. இரத்த அழுத்த நோய் அவரை மிகவும் பாதித்திருப்பதாக மருத்துவர்கள் நாடி பிடித்துப் பார்த்துச் சொல்லிவிட்டனர். படுக்கையிலிருந்து எழுவதோ, வேறுவித அரசியல் அலுவல்களில் ஈடுபடுவதோ கூடாது என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

விஜயாலயரால் ஒருபோதும் எந்தவித அலுவலகமின்றிப் படுத்திருப்பதென்பது பிடிக்காத செயல். குதிரை மீதேறி அவர் சுற்றாத நாளில்லை. அவருடைய அருமைக் குதிரை அசுவரதனைக் காணாமல் அவரால் ஒரு நாள்கூட இருக்க முடியாது. படுக்கையில் படுத்தபடியே அவர் நாலா தேசங்களிலிருந்து ஒற்றர்கள் அவ்வப்போது கொண்டு வந்து தரும் செய்திகளைக் கேட்ட வண்ணமிருப்பார். மருத்துவர்கள் அதைக்கூட தடுத்துவிட்டனர். விஜயாலயரின் கோரிக்கைக்கு இணங்கி பல்லவ நாட்டினின்று வரும் ஒற்றர்களை மட்டும் அனுமதித்தனர். இளங்கோ பிச்சியின் முயற்சியால் சென்ற ஒற்றர்கள் சில நாள்கள் முன்பு அனுப்பிய செய்தி அவரைக் கவலைக்கு உள்ளாக்கியது.

இளங்கோ பிச்சி தன் தந்தையின் மூலமாக காஞ்சிக்கு ஒற்றர்களை அனுப்பிய நடவடிக்கையைச் சிறிதும் அவர் ஏற்கவில்லை என்றாலும், வெளிப்படையாகத் தமது விருப்பமின்மையைத் தெரிவிக்கவில்லை.

பட்டுத்துகில் வணிகரைப் போன்ற வேடம் அணிந்து நம்பிக்கை வாய்ந்த ஒற்றரொருவர் சென்றிருக்கும் செய்தியையும் அவர் அறிந்தார். இளங்கோ பிச்சி கனவு கண்டது போன்றே இளவரசர் காஞ்சியில் பெண்ணொருத்தியிடம் மையல்



கொண்டிருக்கும் செய்தி கிடைத்தபோது விஜயாலயர் திடுக்கிட்டார். அது தொடர்பாகப் பேசவே இளங்கோ பிச்சியைத் தன்னிருப்பிடத்திற்கு வரவழைத்தார்.

இளங்கோ பிச்சியின் முகத்தில் முன்பிருந்த கவலை குறைந்திருந்தது. நம்பிக்கை எனும் ஒளி விழிகளில் வீசிக் கொண்டிருந்தது.

மாமனை வணங்கி அவரருகே சென்று அவர் நலம் விசாரித்துப் பணிவுடன் நின்ற இளங்கோ பிச்சியை, ஒரு முறை தலை முதல் கால் வரை உற்று நோக்கிய விஜயாலயன், "மகளே! காஞ்சியினின்று செய்தி ஏதாவது வந்ததா?" என்று கேட்டார்.

மருத்துவர்கள் அவளிடமும் எச்சரித்தனர். அதிர்ச்சி தரும் எந்தச் செய்தியையும் சொல்ல வேண்டாம் என்று அவர்கள் வேண்டிக் கொண்டனர்.

"நான் சொல்லாமல் இருக்கவும் முடியாது. சொல்லாமல் இருக்கவும் கூடாது. என்ன செய்வது?" மருத்துவர்களை நோக்கிக் கேட்டு அவர்களையே திக்குமுக்காட வைத்தாள்.

"என் சொந்த விருப்பங்கள் சம்பந்தப்பட்ட விஷயம் என்றால் கடவுள் மீது பாரத்தைப் போட்டு மௌனமாக இருந்துவிடுவேன். இது நாட்டைப் பற்றியது. சோழநாட்டைப் பற்றியது" என்று இளங்கோ பிச்சி கேட்ட கேள்விக்கு மருத்துவர்கள் மறுமொழி கூறாமல் கைகளைப் பிசைந்து கொண்டு நின்றனர்.

"அரசர் அதிர்ச்சியடையக்கூடாது. அவ்வளவுதான்" என்றனர் மருத்துவர்கள்.

"பயங்கரமான போர்க் களங்களைக் கண்டவர் அரசர் என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்று இளவரசி கேட்டாள்.

"குருதி சிந்தும் கொடிய களங்கள் கூட அவரை ஒன்றும் செய்துவிடா. ஆனால் குருதி கொப்பளிக்கும் சிறிய வார்த்தை கூட அவருக்கு ஆகாது..." என்று எச்சரித்தனர் மருத்துவர்.

இளங்கோ பிச்சி மௌனமாயிருந்தாள். பிறகு "எந்த விதத்தில் பக்குவமாகக் கூற முடியுமோ அவ்வாறே கூறுகிறேன். சோழ நாட்டிற்கு மாமன்னரின் உயிரும் முக்கியம். அதுபோன்று இளவரசரின் உயிரும் முக்கியம் அல்லவா?" என்று இளங்கோ பிச்சி கூறினாள்.



01 09

மருத்துவருள் ஒருவர் ஓரளவு விஷயத்தைப் புரிந்து கொண்டார். ‘‘தேவி! பல்லவ நாட்டில் இளவரசருக்கு ஏதாவது ஆபத்தா?’’ என்று கேட்டார்.

இளங்கோ பிச்சி மெல்லிய சிறு புன்முறுவல் மூலம் தன் இதய பாரத்தைப் புலப்படுத்தி, ‘‘நான் வல்லவரையர் மகள். விஜயாலயர் மருமகள். அதனால் எந்தவித இடர்பாடுகளையும் எளிதில் போக்கிவிடும் மனப்பக்குவம் இருக்கிறது. நான் அரசரைச் சந்திக்கப் போகலாமா?’’ என்று கூறிக்கொண்டே விஜயாலயர் அருகே சென்றாள்.

‘‘காஞ்சியினின்று உங்களுக்குக் கிடைத்தசெய்தியைவிட, புதிதாக எனக்கு ஏதும் கிடைக்கவில்லை’’ என்று சாதுர்யமாகப் பேசினாள் இளங்கோ பிச்சி.

மீண்டும் ஒருமுறை இளங்கோ பிச்சியின் முகத்தைத் தன் கூரிய கண்களால் ஊடுருவிப் பார்த்தார். ‘‘அந்தச் செய்தியை உன்னால் தாங்கிக்கொள்ள முடிந்ததா, மகளே!’’ என்றார்.

‘‘என் தலைவர் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது. சிற்பியின் மகளோ, நாட்டியப் பெண்ணோ அவரது இதயத்தில் அணுவளவு கூட இடம் பிடித்துவிட முடியாது’’ என்றாள்.

விஜயாலயர் மெல்ல நகைத்தார். ‘‘மகளே! அதைவிட மற்றொரு செய்தி உனக்குக் கிடைத்ததா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. காஞ்சியில் பல்லவ மன்னர்களின் பரம்பரையில் வந்ததாகக் கூறிக்கொள்ளும் ஒரு மங்கையை ஆதித்தன் சந்தித்ததாகவும் செய்தி கிடைத்திருக்கிறது. தன்னைக் காஞ்சி மாளிகையில் சந்திக்குமாறு அவள் விடுத்த அழைப்பையும் இளவரசன் ஆதித்தன் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் செய்தி கூறுகிறது...’’ என்று கூறவும் இளங்கோ பிச்சியின் முகத்தில் எவ்விதச் சலனமும் ஏற்படவில்லை.

அவள் பொதுவாக விஜயாலய சோழரை மாமா என்றே அழைப்பது வழக்கம். ஆனால் அப்போது அவள், ‘‘அரசே!’’ என்று அழைக்கத் தொடங்கினாள்.

‘‘அந்தச் செய்தியும் எனக்கு எட்டியது. அதனால் எள்ளளவு வருத்தமும் எனக்கு ஏற்படவில்லை. ஆனால் கவலைதான் ஏற்பட்டது. பல்லவ இளவரசியை, பல்லவ அரசர் மணக்க எண்ணுகிறார். மன்னரின் சொந்த விஷயத்தில் இவர் தலையிடுவதால் ஆபத்து ஏற்படுமே என்ற கவலைதான் எனக்கு ஏற்பட்டிருக்கிறது...’’ என்றாள் அமைதியாக.



விஜயாலயர் வியப்புடன் இளங்கோ பிச்சியை நோக்கினார்.

‘‘என்னம்மா சொல்கிறாய்? உனக்கு வருத்தமே ஏற்படவில்லையா? ஆதித்தன் பல்லவ இளவரசியைக் காதலிக்கிறான் என்பதை அறியவில்லையா? அதனால் உனக்குப் போட்டி ஏற்படவிருக்கிறது என்பதை உணரவில்லையா?’’ என்று கேட்டார்.

இளங்கோ பிச்சி மிக அமைதியாக, முகத்தில் மகிழ்ச்சியை வரவழைத்துக் கொண்டு, ‘‘சோழ மாமன்னர் அவர்களே!எனக்கு எந்தவித வருத்தமும் இல்லை. என் கணவரைப் பற்றி எனக்குத் தெரியும். சிற்பியின் மகள், நாட்டிய மங்கை இருவரையும் சோழ நாட்டிற்கு அவர் அழைத்து வருவது, சோழநாட்டில் கலையை வளர்ப்பதற்காகத்தானிருக்கும். அதுபோல்...’’ என்று கூறியவளை நோக்கி விஜயாலயர், ‘‘அது போலவா பல்லவ இளவரசியை அழைத்து வருவது?’’ என்று கேட்டார்.

இளங்கோ பிச்சி விழிகளை உயர்த்தி விஜயாலயரின் விழிகளை நேருக்கு நேர் சந்தித்து, ‘‘அதிலும் ஏதாவது நன்மை இருக்கும்’’ என்றாள்.

‘‘பேதைப் பெண்ணே! வெளுத்ததெல்லாம் பால் என்று நினைக்கிறாயே...’’ என்றார் விஜயாலயர்.

‘‘பாலைத் தவிர வெளுப்பான திரவம் எதையும் என் முன் என் தலைவர் வைக்கமாட்டார் அரசே’’ என்றாள் இளங்கோ பிச்சி.

‘‘அபூர்வமான பெண்.’’

‘‘சோழநாட்டின் இளவரசியாக - உங்கள் மருமகளாக நான் திகழ்வது, மிக அபூர்வமாக சென்ற பிறவியில் புண்ணியம் செய்தவர்களுக்கே கிட்டும்...’’

‘‘பெண்ணே! பல்லவ இளவரசியை ஆதித்தன் விரும்புவதால் ஏற்படக்கூடிய ஆபத்தை உணர்ந்தாயா?’’

‘‘உணர்ந்தேன் அரசே! அவளுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் உடனே உதவுவதற்கும் ஏற்பாடு செய்து உள்ளேன்...’’

‘‘ஆகா, நானும்கூட அத்தகைய சில ஏற்பாடுகளைச் செய்திருக்கிறேன். உடனே ஆதித்தனை திரும்பி வருமாறு உத்திரவிட்டிருக்கிறேன்...’’



01 09

"காஞ்சிமா நகரத்திற்கே, தேர்ந்தெடுத்த ஐம்பது வீரர்களை எப்படியாவது மாறுவேடத்தில் செல்லுமாறு செய்திருக்கிறேன்..."

"இந்த இளவயதிலும் மூன் எச்சரிக்கையுடன் கூடிய ராஜதந்திரம் கைவரப் பெற்றிருக்கிறாய்..."

"சோழ அரசரின் மருமகள் என்பதால் அந்த அளவுக்குக்கூட திறமை என்னை வந்தடைந்திருக்காதா?"

விஜயாலயர் அவளிடம் ஏதோ கேட்க முயன்றபோது, "கருணை கூர்ந்து நான் விடைபெற்றுச் செல்ல என்னை அனுமதிப்பீர்களா? இதற்கு மேல் நீங்கள் காஞ்சியைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தால் உடல்நலம் பாதிக்கப்படலாம். உங்கள் திருக்குமாரர் எந்தவித ஆபத்துமின்றி வந்து சேர்ந்துவிடுவார். கவலையின்றி நீங்கள் அமைதியாக இருக்க வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்..." என்று சொல்லிவிட்டு, விஜயாலயர் முகத்தில் ஏற்பட்டதொரு புதிய ஒளியைக் கண்ட திருப்தியுடன், அந்தப்புரம் திரும்பினாலும், இளங்கோ பிச்சியின் மனத்தில் ஒருவித அச்சம் ஏற்பட்டது.

அவளுக்குச் செய்தி எட்டியவரையில் விக்கியண்ணனும், ஆதித்தனும் தனித்தனியே வெவ்வேறு இடங்களில் இருப்பதாகவும், பல்லவ இளவரசியின் மாளிகையில் ஆதித்தன் இருக்கிறார் என்பதும் கேட்டபோது அவள் என்ன செய்வது என்பதறியாமல் சிறிது நேரம் தவித்தாள்.

காஞ்சிக்கு ஐம்பது வீரர்கள் சென்றிருந்தனர் என்பது ஒருவிதத்தில் தைரியத்தை அளித்தாலும், மாளிகைக்குள் தன்னந்தனியராய் - நிராயுதபாணியாய் அவர் சிக்கிக் கொண்டால் என்ன செய்வது என்ற கவலை பிடித்தது. அமுதனை அனுப்பியவளும் இளங்கோ பிச்சிதான். மெல்லிய ஆனால் உறுதியான மார்புக் கவசத்தையும், மிகக் கூர்மையான உடைவாளையும் அமுதனிடம் கொடுத்து அனுப்பியிருந்தாள் பிச்சி. தக்க சமயத்தில் அமுதன் போய்ச் சேர வேண்டுமே என்ற கவலை அவளை உறக்கம் பிடிக்காமல் செய்தது.

ஆனால் அமுதன், பல்லவ இளவரசியின் மாளிகையில் ஆதித்தனைச் சந்தித்து பட்டாடைகளையும், கவசத்தையும், வாளையும் கொடுத்துவிட்டதை இளங்கோ பிச்சி அறிய நியாயமில்லை. அதேபோல் அபராஜிதனின் வீரர்களிடம் அகப்பட்டுக் கொண்டதும், இளங்கோ பிச்சி எப்படி அறிவாள்? ஆதித்தன் கட்டளைக்கிணங்க, அமுதன் வைரக்கண்ணியின்



மாளிகையை விட்டு வெளியே வந்து குதிரை மீதேறி எங்கே செல்வதென்று தெரியாமல் சிறிது தொலைவு சென்றவுடனேயே எதிரே வந்த பல்லவ வீரர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டனர்.

அமுதன் ஒரு கணம் ஏதும் புரியாமல் திகைத்தான்.

"நான்... நான்... என்னை" என்று குழறினான், பேச முடியாமல்.

"அப்பனே! நீ - நான் - உன்னையேதான். சக்கரவர்த்தி உன்னைக் கையோடு அழைத்து வரச் சொன்னார், வருகிறாயா?" என்று கேட்டனர்.

"எந்தச் சக்கரவர்த்தி?" என்று அமுதன் கேட்டிருக்க வேண்டாம். அவன் அப்படிக் கேட்ட உடனேயே, "பல்லவச் சக்கரவர்த்தியை உனக்குத் தெரியாதல்லவா? அவரை நீ அறிமுகப்படுத்திக்கொள்ள வேண்டாமா? அதனால்தான் உன்னைத் தக்க மரியாதையுடன் அழைத்துப் போக வந்திருக்கிறோம்" என்றனர்.

அமுதனுக்கு என்ன சொல்வது? என்ன செய்வது என்றே தெரியவில்லை. ஆகா? சரியானபடி அகப்பட்டுக் கொண்டோம் என்று எண்ணியவாறு பல்லவ வீரர்கள் முன்னும் பின்னும் செல்ல, அபராஜிதன் மாளிகையை நோக்கிச் சென்றான்.

○

## 35. அமுதன் கூறிய உண்மை

இளவரசி வைரக்கண்ணியின் மாளிகையிலிருந்து திரும்பிய அபராஜிதன் உள்ளம் ஏமாற்றத்தாலும், எண்ணம் நிறைவேறாததால் ஏற்பட்ட ஆசாபங்கத்தாலும் கொதித்தது. கடுங்கோடை வெயிலும் ஒன்று சேர்த்தது.

அருகே வந்த உடன் கூட்டத்து அதிகாரியை நோக்கி, "மாளிகை முழுவதும் நன்றாக சோதனையிட்டீர்களா?" என்று கேட்டார். அவர் சத்தியம் செய்தார். "அந்த மாளிகையின் ஒவ்வொரு மூலையையும் நான் அறிவேன். சோழ இளவரசராவது, வைரக்கண்ணி மாளிகையில் புகுந்திருப்பதாவது!" என்று கூறி மெல்லச் சிரிக்கவும் செய்தார்.

அபராஜிதன் மௌனமாக இருந்தார் சிறிது நேரம். "மயிலழகு பொய் சொல்ல மாட்டாள்" என்றார்.

"அந்த நடன மங்கையைத்தானே சொல்கிறீர்கள்? தங்கள் மனத்தைக் கவர அவள் ஏதாவது பொய் சொல்லியிருக்கலாம்" என்று மீண்டும் அந்த அதிகாரி, அபராஜிதன் கூற்றை மறுத்தார்.

"அவள் ஏன் இதுபோன்ற பொய் சொல்ல வேண்டும்? என்னைக் கவர வேண்டும் என்ற அபிப்பிராயம் அவளுக்கு இல்லை என்று நான் நினைக்கிறேன்" என்றார் பல்லவ மன்னன்.

"உங்கள் எதிரே, நிலா முற்றத்தில்கூட அவள் நடனமாடியிருக்கிறாள்."

"நான்தான் அவளை வரவழைத்தேன். ஆடச் சொன்னேன்."

"அப்படியென்றால் உங்களுக்கு அவள் மீது மையல் ஏற்பட்டிருப்பதை அவள் அறிந்து, தன் விருப்பத்தை நிறைவேற்ற முயன்றிருக்கலாம்" என்று உடன் கூட்டத்ததிகாரி கூறவும், அபராஜிதன் அவர் முகத்தை உற்று நோக்கினார். அபராஜிதனைவிட வயதில் மூத்தவர் அவர்.

"மயிலழகு அவ்வளவு எளிதில் என் விருப்பத்திற்கு இசைந்துவிட மாட்டாள். அதுவுமின்றி அவளிடமிருந்து



செய்தியொன்றை அறிய அவளை நிலா முற்றத்திற்கு வருமாறு சொன்னேன். அப்பொழுதுதான் சோழநாட்டு இளவரசன் காஞ்சிக்கு வந்திருப்பதை அறிந்தேன். மயிலழகு மீது எனக்கு மையலோ, என் மீது மயிலழகுக்குக் காதலோ ஏற்படவில்லை!"

அதிகாரி சற்று நேரம் மௌனமாயிருந்தார். "நமது ஒற்றர் படையைச் சேர்ந்தவர்கள் இளவரசர் வந்திருக்கும் செய்தியைத் தெரிவிக்கவில்லையா? இத்தகைய முக்கியச் செய்திகள் தெரியாமலேயே போய்விட்டால்..." அதிகாரி கவலையுடன் கேட்டார்.

"நானும் அதைப் பற்றித்தான் யோசிக்கிறேன். ஆதித்தன் எனது நண்பன். எனக்குத் தகவல் அனுப்பிய பிறகே வந்திருக்கலாம். சோழ சிற்றரசன் என்பதால் வரவேற்பில் குறைவே இருந்திருக்காது" என்று அபராஜிதன் கூறும்போது அவன் குரலிலும் கவலை தெரிந்தது.

"கொங்கு நாட்டின் மீது நாம் படையெடுக்கும் தருணத்தில் இப்படியெல்லாம் நேருகிறதே?" - அதிகாரி மெல்லக் கூறினார். பிறகு, "வைரக்கண்ணியின் மாளிகைக்குத் தஞ்சை இளவரசன் ஏன் சென்றான்?" என்று கேட்டார்.

"அதைப் பற்றிய முழு விவரமெல்லாம் கிடைத்துவிட்டது. வைரக்கண்ணியின் மாமன் கொலைக்கும், சோழ இளவரசன் அவள் மாளிகைக்குச் சென்றதற்கும் தொடர்பு இருக்கிறது. அதற்கான தடயங்கள், ருசுக்கள் யாவும் கிடைத்துவிட்டன. இதுவரை, தான் பல்லவ பரம்பரையைச் சேர்ந்தவள் என்று கூறி, வைரக்கண்ணி நாட்டில் கிளர்ச்சியை ஏற்படுத்த முயன்று வந்திருக்கிறாள். அதற்கு ஒரு முடிவை ஏற்படுத்த எனக்கு ஒரு வாய்ப்பு கிடைத்துவிட்டது. அவளைச் சிறைப்படுத்தி வழக்கை விசாரித்துத் தண்டனை வழங்கக்கூடிய தருணம் நெருங்கிவிட்டது. இன்று மட்டும் ஆதித்தன் அவள் மாளிகையில் இருந்திருப்பதைக் கையுங் களவுமாகப் பிடித்திருந்தால், வைரக்கண்ணிக்கு ராஜத் துரோகத் தண்டனை கிடைத்திருக்கும். சோழ சிற்றரசுக்கு நான் அளித்திருந்த உரிமையைத் திரும்பப் பெற்று, சோழ நாடென்று ஒரு நாடு இல்லாமல் செய்திருப்பேன். ஆனால், ஆதித்தன் என் நண்பன். பாண்டியர்களைப் புறமுதுக்கிட்டோடச் செய்ய மிகவும் உதவியிருக்கிறான். அவனுடைய தந்தை மாவீரர், பக்திமான்..." என்று கூறி வரும்போது அதிகாரி குறுக்கிட்டு, "ஆனால், ஏதோ மறைமுக சதித்திட்டம் உருவாகியிருப்பதாக எனக்குத் தோன்றுகிறது" என்றார்.

01 09 20

அபராஜிதன் மௌனமாயிருந்தார். பிறகு ஓய்வெடுப்பதற்காக மேன்மாடம் செல்லப் புறப்பட்டார். அதிகாரியும் விடைபெற்றுக் கொண்டார். அவர் சென்றவுடன் பணியாளனை அழைத்து, மயிலழகை உடனே அழைத்து வருமாறு கட்டளையிட்டார்.

சிறிது நேரம் கழித்தே மயிலழகு வந்தாள். வணங்கி நின்ற அவளைப் பார்த்த அபராஜிதன், ''மயிலழகு! என்னை ஏமாறுமாறு செய்வதில் உனக்கென்ன ஆதாயம்?'' என்று கேட்டார்.

மயிலழகு சிறிது நேரம் ஒன்றும் புரியாமல் திகைத்தவாறு நின்றவள், மன்னரை நோக்கி விழிகளாலேயே கேள்விக்குறியை எழுப்பினாள்.

''சோழநாட்டு இளவரசன் காஞ்சிக்கு வந்தது உண்மை தானா?'' என்று கேட்டார்.

''உண்மைதான்'' என்று மறுமொழி கூறினாள் மயிலழகு.

''வைரக்கண்ணியின் மாளிகையில் இளவரசன் தங்கியிருக்கிறான் என்று உனக்கு எப்படித் தெரியும்? மாளிகை முழுவதையும் ஓரிடங்கூட விடாமல் சோதனை செய்து விட்டேன். ஏமாற்றம்தான் மிச்சம்...'' என்று அபராஜிதன் கூறும்போது குரலில் கடுமை கலந்திருந்தது.

''வீரர்கள் நன்கு சோதனையிட்டிருக்க மாட்டார்கள். மாளிகை வாயிற் காவலர்கள்கூட வைரக்கண்ணியின் மாளிகைக்கு இருவர் வந்ததாக உறுதி செய்தார்களே'' என்றாள்.

''இருவரா?'' அபராஜிதன் வியப்புடன் கேட்டார்.

''ஆமாம்! இளவரசரின் நண்பராம் மற்றொருவர்'' என்று மயிலழகு உறுதியுடன் கூறினாள்.

அபராஜிதன் உடலில் ஒருவித ஆவேசம் எழுந்தது.

''நீ சொல்வது உண்மைதானா மயிலழகு...?'' என்று கூவினார்.

''உங்களுக்கும் அந்த உண்மை தெரிந்துதானே என்னை, நிலா முற்றத்தில் நடனமாட அழைத்தீர்கள்? திடீரென, பல்லவ நாட்டில் ஒரு நடன மங்கை இருக்கும் விஷயம் உங்கள் நினைவுக்கு வந்து என்னை அழைத்தீர்கள்?''

அபராஜிதன் கோபம் சற்றுத் தணிந்தது.



''இளவரசியின் மாளிகையை உங்கள் வீரர்கள் நன்றாகச் சோதனையிட்டார்களா?'' என்று மயிலழகு கேட்டாள்.

'ஆமாம்' என்பதற்கு அடையாளமாக அபராஜிதன் தலையை அசைத்தார்.

''அங்கே பட்டுப்புடவை வியாபாரியும் இல்லையா?'' என்று கேட்டாள்.

''பட்டுப்புடவை வியாபாரியா?'' என அபராஜிதன் ஆவலுடன் கேட்டார்.

''ஆமாம்! உங்கள் மாளிகையைத் தேடி வந்த வியாபாரி இளவரசியின் மாளிகைக்குள் அவர் சென்றதைப் பார்த்தவுடன் நான் உங்களிடம் செய்தியைத் தெரிவிக்க ஓடிவந்தேன்'' என்று கூறி அபராஜிதனை நோக்கினாள்.

''ஓ! வைரக்கண்ணியின் மாளிகையிலிருந்து வந்து கொண்டிருந்தவன் என்றறிந்து ஓர் இளைஞனைச் சிறைப் படுத்தியிருக்கிறார்கள். ஓ! அந்த இளைஞன்தான் பட்டுப்புடவை வியாபாரியோ?'' என்று அபராஜிதன் கேட்டார்.

மயிலழகு பரபரப்புடன், ''அந்த வியாபாரியின் பெயர் அமுதன். அவர் எங்கே?'' என்று கேட்டாள்.

அபராஜிதன் அவள் முகத்தை ஒரு கணம் கூர்ந்து நோக்கினார். பிறகு மயிலழகை நோக்கி, ''நீ இப்போது உடனே ஒரு காரியம் செய்ய வேண்டும்'' என்றார்.

''கட்டளையிடுங்கள்...'' என்றாள் மயிலழகு.

''நீ உடனே சிறைக்கோட்டத்திற்குச் சென்று அமுதனைச் சந்தித்து அவனிடமிருந்து பல செய்திகளை அறிந்து வர வேண்டும்'' என்றார்.

''என்ன செய்தி அரசே?'' என்று கேட்டாள் மயிலழகு.

''நீ அந்த வியாபாரியை வைரக்கண்ணியின் மாளிகைக்குள் அழைத்துச் சென்றாயே, அந்தச் செய்தியின் மூல காரணத்தை'' என்றார் அபராஜிதன்.

''நான் ஓர் உண்மையை அறிய விரும்பினேன். அறிந்த உண்மையை உங்களிடம் தெரிவிக்க விரும்பினேன்'' என்றாள் மயிலழகும் சளைக்காமல். ''தெரிவித்தாய். ஆனால் சோழ இளவரசரைக் கையுங் களவுமாகப் பி[illegible]முடிய[illegible]லையே''
என்று கவலையுடன் தெரிவித்தா[illegible] அபராஜி[illegible]

''அமுதன் அகப்பட்டால், அந்தச் சோழ இளவரசரும் அகப்பட்டுவிடுவார்'' என்றாள் மயிலழகு.

''அகப்படவில்லையே! அதனால்தான் உன்னை இப்போது அந்தப் புடவை வியாபாரியிடம் அனுப்புகிறேன்'' என்று கூறினார் அபராஜிதன்.

''சிறைக் கோட்டத்திற்குச் சென்று அந்தப் புடவை வியாபாரியைச் சந்திக்க வேண்டும். அவ்வளவுதானே...?'' என்று மயிலழகு புன்முறுவல் பூக்கக் கேட்டாள்.

''மிகச் சாதாரணமாகக் கேட்டுவிட்டாய். அவ்வளவு எளிதான காரியம் என்று தோன்றவில்லை'' என்றார் அரசர்.

''நான் சென்று முழு விவரமும் அறிந்து வருகிறேன். அறிந்து வந்தால் என்ன பரிசு தருவீர்கள்?'' என்று மயிலழகு கேட்டாள்.

''பரிசு கொடுக்குமளவிற்கு அவ்வளவு முக்கியமான காரியமா?'' அபராஜிதன் கேட்டார்.

''முக்கியமான காரியமோ இலலையோ, எளிதானது இல்லை, அல்லவா?'' என்று மயிலழகு கேட்டபோது மன்னரும் சிரித்துவிட்டார்.

''நான் பரிசாக தங்களைக் கேட்டுவிட மாட்டேன். இந்த ராஜ்யத்தில் பாதியைக் கேட்டுவிட மாட்டேன்'' என்று கூறி மீண்டும் நகைத்தாள் மயிலழகு.

''எது வேண்டுமானாலும் கேள் மயிலழகு'' என்றார் அபராஜிதன்.

''சிறைக் கோட்டத்திற்குச் சென்று வந்த பிறகு கேட்கிறேன்'' என்று கூறிப் புறப்பட்ட மயிலழகு மீண்டும் வந்து, ''என்னைச் சிறைக்கோட்டத்திற்கு அனுமதிப்பார்களா? அமுதனைச் சந்திக்க முடியுமா?'' என்று கேட்டாள்.

அங்கே இருந்த பேழையிலிருந்த ஓர் அடையாளச் சின்னத்தை எடுத்துத் தந்து, ''இதை உபயோகப்படுத்திக் கொள். பிறகு ஜாக்கிரதையாக என்னிடம் திருப்பித் தந்துவிடு'' என்றார்.

மயிலழகு, மீண்டும் திரும்பி வரவோ, அடையாளச் சின்னத்தைத் திருப்பித் தரவோ இல்லை.

சிறைக்கோட்டத்தை அவள் அடையும்போது மாலை வேளை. இருள் மெல்ல மெல்லச் சூழத் தொடங்கியது. சிறைக்



கோட்டத்தின் மூலையில் ஓர் அறையில் அமுதன் அடைக்கப் பட்டிருந்தான்.

கவலை நிறைந்த முகத்துடன் அமர்ந்திருந்த அவனருகே போய் நின்ற அவளை முதலில் சிறிது நேரம் அவன் கவனிக்கவில்லை.

மெல்லக் கனைத்தாள் அவள். அமுதன் திரும்பிப் பார்த்துத் திடுக்கிட்டு, ''யாரது?'' என்று கேட்டவாறு எழுந்து நின்றான்.

''என்னை அதற்குள் மறந்துவிட்டீர்களா?'' என்று மயிலழகு கேட்டாள்.

''மறக்க வேண்டியவர்களை மறப்பதும், நினைவில் கொள்ள வேண்டியவர்களை நினைத்திருப்பதும் நல்லதுதானே?'' என்று கூறிய அமுதன், அருகே கழற்றி வைத்திருந்த மேலங்கியை எடுத்துத் திறந்திருந்த மார்பை மூடிக்கொள்ளப் பரபரப்புடன் முனைந்தான்.

அமுதனின் பரந்த மார்பை ஒரு கணம் நோக்கினாள் மயிலழகு. அமுதனிடம் பெண்மை கலந்த ஓர் ஆண்மைத்தன்மை விளங்குவதை அவள் முதல் சந்திப்பிலேயே கண்டுணர்ந்து விட்டாள். அந்த இனிய வடிவழகுதான் அவளை அமுதனிடம் ஈர்த்தது. உள்ளத்தின் ஒரு மூலையில் அமுதனை ரசிக்கும் நாம் ஏன் சக்கரவர்த்திகளின் வைரக்கண்ணி மாளிகையைப் பற்றியும், சோழ இளவரசர் அங்கு தங்கியிருப்பதைப் பற்றியும் ஏன் தெரிவித்தோம்? அவளுக்கே அதன் காரணம் புரியவில்லை. ஏதோ ஒருவிதப் பொறாமை அவள் உள்ளத்தில் கிளர்ந்திருக்கிறது. அது தன் சகோதரி மீன்விழியிடம் ஏற்பட்டதா? எதனால் என்று அவளுக்குப் புரியவில்லை.

தாம் தனிமைப்பட்டு நிற்கிறோம் என்ற பய உணர்ச்சியும் ஒரு காரணமாக இருக்கலாம். தான் கற்ற நடனக் கலைக்குப் பல்லவ நாட்டில் ஆதரவு இல்லையே என்பதும் ஒரு காரணமாக இருக்கலாம். ஆதரவு தரக்கூடிய சோழ நாட்டிற்குத் தன்னை வருமாறு முன்பின் தெரியாத சோழ நாட்டவர்கள் அழைத்தபோது அவள் உடனே சம்மதித்து, காளஹஸ்தி ஊரைவிட்டுப் புறப்பட்டு திருத்தணிகை வந்து சேர்ந்தாளே... அந்த மனநிலைக்கும் இப்போது சோழநாட்டவரையே காட்டிக்கொடுத்த மனநிலைக்கும் உள்ள வேறுபாட்டிற்கு அவளாலேயே காரணம் கண்டுபிடிக்க முடியவில்லை.

தன்னையே விழுங்கி விடுபவள் போல் கூர்ந்து பார்த்துக் கொண்டு நிற்கும் மயிலழகைப் பார்த்து அமுதன் புன்சிரிப்புடன்

''உன்னையும் சிறையில் தள்ளிவிட்டார்களா?'' என்று கேட்டான்.

மயிலழகு மெல்லச் சிரித்தாள்.

''என்னை ஏன் சிறையிலடைக்கிறார்கள்?'' என்று கேட்டாள் மயிலழகு.

''அப்படியென்றால் என்னை மட்டும் ஏன் திடீரென பொய் சொல்லி அடைத்துவிட்டார்கள்!'' என்று அமுதன் கேட்டான்.

மயிலழகு இதற்கு உடனே மறுமொழி கூறவில்லை.

''ஏதோ தவறு நடந்திருக்கிறது... தங்களைப் பற்றிய உண்மையைக் கூறினால் பல்லவ மன்னரிடம் கூறி உடனே விடுதலை செய்ய என்னால் முடியும்'' என்றாள் மயிலழகு.

அமுதன் அவளுடைய சொற்களில் இருந்த ஒருவித அழுத்தத்தையும், பேச்சு, பார்வை ஆகியவற்றிலிருந்து உறுதியையும் கவனித்தான். இவ்வளவு துணிவுடைய பெண், அரசாங்கத்திற்கு மிக வேண்டியவளாக இருப்பாள் என்றே தெரிந்தது.

''உண்மையைச் சொல்லச் சொல்கிறாயே, அப்படியென்றால் நான் பொய் சொல்வதாக எண்ணமோ?'' என்று கேட்டான் அமுதன்.

மயிலழகும் இதழ் பிரியா நகையை ஒளிரச் செய்து, ''நான் அப்படி நினைக்கவில்லை. ஆனால், பல்லவ மாமன்னர் அப்படித்தான் நினைக்கிறார்'' என்றாள்.

''பல்லவ மன்னருக்கு என்னைப் பற்றித் தெரியுமா?'' கவலையுடன் கேட்டான்.

''உங்களைப் புரிந்து கொண்டார். ஆனால், உங்களுடைய இந்தத் தோற்றத்திற்கும், புறத் தோற்றத்திற்கும் வித்தியாசமிருப்பதாக நினைக்கிறார்'' என்று கூறி அமுதன் முகத்தையே நோக்கினாள்.

''அவர் நினைக்கிறாரா அல்லது நீ நினைக்கிறாயா?'' என்று அமுதன் கேட்டான்.

''நான் நினைத்து என்ன ஆகப்போகிறது. நாடாளும் மாமன்னருக்குத்தான் தெரிய வேண்டும்'' என்றாள் மயிலழகு.

''அவர் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் நீ ஏன் வருகிறாய்? அவருடைய அந்தரங்க அதிகாரியா நீ?'' என்று கேட்டான் அமுதன்.



அமுதன் இவ்வாறு கேட்பான் என்று மயிலழகு நினைக்கவில்லை. தன் கேள்வியாலேயே அமுதன் தன்னை மடக்கி விட்டான் என்று புரிந்துகொண்டாள்.

அமுதனிடமிருந்து அவ்வளவு எளிதில் எந்த உண்மையையும் வரவழைக்க முடியாது என்பதைப் புரிந்துகொண்டாள். அமுதன் பேசப்பேச அவளுக்கு மேலும் அவனுடன் பேசிக் கொண்டிருக்க வேண்டும் என்று தோன்றியது.

நாமும் சிறைச்சாலையிலேயே இருந்து விடுவோமா என ஒரு கணம் எண்ணினாள்.

அமுதன் கேட்ட கேள்விக்கு ஆம் என்று சொன்னால், நிச்சயம் அமுதன் தன்னைப் பற்றியும் சோழ இளவரசரைப் பற்றியும் உண்மையைச் சொல்ல மாட்டான்.

இல்லை என்று சொன்னால் பல்லவ மன்னர், அமுதனைச் சந்தேகப்படுவது எனக்கு எப்படித் தெரிந்தது என்று அமுதன் கேட்பான்.

மயிலழகுக்கு உடனே தக்கபடி மறுமொழி கூற முடியவில்லை. 'நாம் ஏன் இதுபோன்ற பெரிய பெரிய அரசியல் விவகாரங்களில் இறங்கினோம்' என்று கவலை கொண்டாள். விழிகளை மூடியவாறு சற்று யோசித்தாள்.

திடுக்கிட்டுக் கண் விழித்தபோது அமுதன் தன் மிக அருகே நிற்பதையும், அவனது இடக்கரம் தன் தோள்மீது இருப்பதையும், வலக்கரம் தன் விரல்களுடன் கோத்திருப்பதையும் உணர்ந்தாள்.

○

# 36. பெண்ணையாற்றங்கரையில்...

ஓர் இரவு, ஒரு பகல் அந்தக் காளைகள் பூட்டிய வண்டி சளைக்காமல் பயணம் செய்தது. இடையிடையே மாடுகளை அவிழ்த்து இளைப்பாறச் செய்ததால்தான் காளைகளால் அவ்வளவு தொலைவு செல்ல முடிந்தது.

இரவு நெருங்கிய பொழுதில் பெண்ணையாற்றங்கரையில் உள்ள சத்திரத்தில் இளைப்பாற ஏற்பாடு செய்தான் விக்கியண்ணன்.

''இனி பல்லவ வீரர்கள் தொடர்ந்து வரமாட்டார்கள் என்ற துணிவு. அப்படித்தானே?'' என்று கேட்டாள் மீன்விழி. உள்ளத்திற்குள்ளே குமுறல் குறைந்துவிட்டது. குழப்பமான மன நிலைக்கும் முடிவொன்றைக் கண்டுவிட்டாள். வண்டியிலிருந்த மற்றவர்களுடன் பேசாமல் விக்கியண்ணனிடம் மட்டும் பேசிக்கொண்டு வந்தாள்.

அவர் சோழ இளவரசர் ஆதித்தனுடைய உயிர் நண்பன் என்பதைப் புரிந்துகொண்ட பிறகு, விக்கியண்ணனின் மீதிருந்த மதிப்பு மேலும் அதிகரித்தது. ஓர் ஆணின் பார்வையிலிருந்தே, அவன் மனத்தை அறிந்து கொள்ளக்கூடிய சக்தி சாதாரணப் பெண்களுக்கு உண்டு. சராசரிப் பெண்களைவிட நுண்ணறிவு படைத்த மீன்விழி விக்கியண்ணனைத் தெளிவாகப் புரிந்து கொண்டாள். தன்னைத் தஞ்சைக்கு அழைத்துச் செல்ல விரும்பும் விக்கியண்ணனுடைய நோக்கத்தில் தவறேதுமில்லை என்பதை எளிதில் அறிந்தாள்.

வண்டியை விட்டு இறங்கியவுடன் சோம்பல் முறித்த அவளுடைய நிலையைக் கண்டு பார்த்ததும் பார்க்காமல் முகத்தைத் திருப்பிக்கொண்டு காளைகளைப் பிடித்து நீர்த் தொட்டியிருக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்ற விக்கியண்ணனைப் பின்தொடர்ந்த மீன்விழி, ''நான் அப்போது கேட்டதற்கு மறுமொழி ஏதும் நீங்கள் சொல்லவில்லையே?'' என்றாள் மெல்லச் சிரித்தவாறு.



''என்ன கேட்டாய்?'' என்று அவளைத் திரும்பிப் பார்த்தவாறு கேட்டான் விக்கியண்ணன்.

''பல்லவ வீரர்கள் தொடர்ந்து வரமாட்டார்கள் என்ற துணிவுதானே?'' என்றாள்.

''தொடர்ந்து வரட்டுமே, எனக்கு என்ன பயம்?'' என்றான் விக்கியண்ணன்.

''பயமில்லை என்பதறிவேன். ஒருவரே பல பேரை எதிர்த்து நிற்பீர்கள் என்பதையும் அறிவேன். ஆனால் ஒரு படையே வந்துவிட்டால்?'' என்று மீன்விழி கேட்டாள். அவளுக்குத்தான் பயம். விக்கியண்ணன் சிறைப்படுத்தப்படுவதோடு, தன்னையும் மீண்டும் காஞ்சிக்கே அழைத்துச் சென்று விடுவார்களே என்ற கவலை.

விக்கியண்ணன் இதழ்களில் அலட்சியப் புன்னகை தோன்றியது.

''பல்லவ வீரர்கள் தொடர்ந்து வர வேண்டும் என்றே எதிர்பார்க்கிறேன். நீ கவலைப்படுவது போல் ஒன்றும் நேர்ந்து விடாது. அதோ பார்!'' என்று ஓரிடத்தைச் சுட்டிக்காட்டினான். சத்திரத்தின் அருகே இருந்த ஆலமரத்தடியில் பத்துப் பதினைந்து பேர் அடுப்பை மூட்டிச் சோறாக்கிக் கொண்டிருந்தார்கள். அடுப்பில் எரியும் தீயின் செந்நாக்குகள் இருளை ஓட்ட முயல்வது போல் எழுந்து கொண்டிருந்தன.

''பார்த்தேன்! அவர்களுக்கு என்ன?'' என்று மீன்விழி கேட்டாள். அடுப்பு வெளிச்சத்தில் அடுப்பைச் சுற்றி உட்கார்ந்திருந்தவர்கள் பயங்கரமாகக் காட்சியளித்தார்கள்.

''அவர்களுக்கு ஒன்றுமில்லை. வரப்போகும் பல்லவ வீரர்களின் கதியை நினைத்தால்தான் கவலையாக இருக்கிறது'' என்றான் விக்கியண்ணன்.

''அவர்கள் யார்?'' - மீன்விழியின் குரலில் பயமிருந்தது.

''அரசாங்க ரகசியம். இருந்தாலும் உன்னிடம் சொல்கிறேன். நான் சொல்லும் ரகசியச் செய்தியை அறிந்த நீ, இரவோடு இரவாக இங்கிருந்து புறப்பட்டுச் சென்று பல்லவ வீரர்களை எச்சரிக்கலாம். அப்படி நீ ஓடிச்சென்று பல்லவ வீரர்களை எச்சரித்தாலும் கவலையில்லை'' என்று கூறிக்கொண்டே வந்த விக்கியண்ணனை நோக்கி, ''நான் ஏன் ஓட வேண்டும்? என்னைப் பார்த்தால் அவ்வளவு தரங்குறைந்தவளாகத் தோன்றுகிறதா?'' என்றாள் மீன்விழி. குரலில் சீற்றமிருந்தது.

''ஆகா! சிற்பியின் மகளை நான் அப்படியெல்லாம் நினைக்கவில்லை. சிற்பியின் மகள் தஞ்சைத் தரணிக்கு வர வேண்டும் என்பதில் எங்களுக்குப் பெரு மகிழ்ச்சி. சிற்பி யாரையும் சேர்த்து அழைத்து வந்தால் மிகவும் மகிழ்ச்சி யடைவோம். இவர்கள் வேளக்காரப் படையைச் சேர்ந்தவர்கள்'' என்று விக்கியண்ணன் கூறினான்.

''மெய்க்காவலர்களா?'' என்று மீன்விழி கேட்டாள்.

''இல்லை, இல்லை. மெய்க்காவல் படையைச் சேர்ந்தவர்கள்கூட சில சமயம் துரோகிகளாகலாம். ஆனால், வேளக்காரப் படையினர் அரசரின் உயிருக்காகத் தங்கள் ஆவியையும் அளிக்கச் சித்தமாயிருப்பவர்கள். சோழ இளவரசர் ஆதித்தனுக்குப் பல்லவ நாட்டில் ஏதோ ஆபத்து நேர இருக்கிறது என்பதை அறிந்த அவர்கள் காஞ்சியை நோக்கிச் செல்கிறார்கள் என்று நினைக்கிறேன்'' என்றான் விக்கியண்ணன்.

மீன்விழி விக்கியண்ணனின் முகத்தையே வைத்த விழி வாங்காமல் நோக்கினாள். ''ஆம்! நீங்கள் சொல்வது பரம இரகசியம்தான். என்னை நீங்கள் முழுவதும் நம்பி விட்டீர்கள். நான்தான் சலனப்பட்டு மனத்தை மிகவும் அலைபாய வைத்துவிட்டேன்'' என்றாள்.

''நாங்கள் கலைஞர்களைப் பூரணமாக நம்புவோம். சோழ நாட்டில் கலையில் மறுமலர்ச்சி ஏற்பட நினைக்கும் எங்கள் இளவரசர், கலைஞர்களுக்காக எத்தனை தியாகம் வேண்டு மானாலும் செய்யச் சித்தமாயிருக்கிறார். மேலும் சோழ நாட்டிற்கு வருமாறு நாங்கள் அழைத்தபோது மனமுவந்து வருவதாக நீ கூறினாய். அதனால்தான் உன்னை மாமல்ல புரத்திலிருந்து அழைத்து வந்தேன். இப்போதுகூட உனக்குப் பிரியமில்லாவிடில் நீ காஞ்சிக்குச் செல்லலாம். தக்க துணையை ஏற்பாடு செய்து தருகிறேன்'' என்றான்.

''இல்லை... இல்லை... நான் காஞ்சிக்குச் செல்ல விரும்பவில்லை. சிற்பப் பணிகளைத் தற்காலிகமாக அரசர் நிறுத்தி வைத்துவிட்டார். கொங்கு நாட்டின்மீது படையெடுக்க அவர் படைகளைத் திரட்டுகிறார். எனக்கு அங்கே இனி என்ன வேலை...?'' என்றாள்.

சிறிது நேரம் மௌனமாக இருந்த விக்கியண்ணன் மீன்விழியை நோக்கி, 'நீ சென்று ஓய்வு எடுத்துக் கொள். இரவு ஆகாரத்தையும் சத்திரத்திலிருந்து பெற்று மற்றவர்களுக்கும் ஏற்பாடு செய்து கொடுத்துவிடு. விடியற்காலை நேரத்தில்



நமது பயணம் தொடங்கும். இன்னும் இரண்டு நாள்களில் தஞ்சையைச் சென்றடைய வேண்டும்'' என்றான்.

பட்டரின் மனைவியின் அருகே மீன்விழி படுத்திருந்தாள். ஏனோ அவளுக்கு உறக்கம் வரவில்லை. அதைப் போன்றே பட்டரின் மனைவிக்கும், மீன்விழி அவளிடம் பேச்சுக் கொடுத்தாள்.

''உத்திரமேரூர் போக வேண்டிய நீங்கள் தஞ்சைக்கு வருகிறீர்களே?'' என்று மீன்விழி கேட்டாள்.

அவள் ஏதும் உடனே பேசவில்லை. ''உம்...'' என்று மட்டும் மெல்லக் கூறினாள்.

''பட்டருக்குத் தெரிந்தால் பதறிவிட மாட்டாரா? வண்டி யோட்டி சதி செய்துவிட்டது. உங்களுக்குத் தெரியாதா?'' என்று மீன்விழி மீண்டும் கேட்டாள்.

''என்ன? பட்டர் தஞ்சைக்கு வருகிறாரா?'' என்ற கேள்வியில் வியப்பைவிட அதிர்ச்சி அதிகமாக இருந்தது.

பட்டரின் மனைவி சிரிப்பது கேட்டது. அவள் வருத்தப்பட வில்லையா?

''என்ன சொல்கிறீர்கள் நீங்கள்? தஞ்சைக்கு வருவதில் உங்களுக்குப் பூரணச் சம்மதமா?''

''ஆமாம்! அவரின் முன் ஏற்பாட்டின் பேரில்தான் வண்டியில் புறப்பட்டேன்.''

'என்னிடம் உத்திரமேரூர் போவதாகச் சொன்னாரே?' - மீன்விழியின் அதிர்ச்சி நீங்கவில்லை.

''ஆமாம். தெரிந்தே சொன்னார். நீங்கள் இதுவரை அறிந்த கொண்டிருப்பீர்கள் என நினைத்தேன். தஞ்சையில் பிரமாண்ட மான கோயிலொன்று கட்டத் திட்டமிட்டிருப்பதாகவும் அந்தக் கோயில் மாமல்லபுர இராஜசிம்மேச்வரம் கோயில் பாணியில் இருக்கும் என்றும், கோயில் கட்டத் தொடங்குவதிலிருந்து குடமுழுக்கு வரை பட்டரின் யோசனை பெரிதும் தேவைப்படும் என்றும் விக்கியண்ணன் கூறினார்.

''இளவரசரின் விருப்பமும் அதுவேதானாம். அதனால் பட்டர் இன்னும் சில நாள்களில் புறப்படுகிறார். என்னை அனுப்புவதற்குத் தக்க தருணத்தை எதிர்பார்த்திருந்தார். உங்கள் துணையும் கிடைத்தது'' என்றாள் பட்டரின் மனைவி.

மீன்விழி சிறிது நேரம் ஒன்றும் பேசவில்லை. ''பட்டர் அவ்வாறு முடிவு எடுத்ததற்கும் காரணம் என்ன? பல்லவ நாட்டிலில்லாத கோயில் ஒன்றைக் கட்டி அதற்குப் பூஜை செய்யத் திட்டமிடும் வரை பட்டர் ஒரு வேலையுமில்லாமல் தானே அங்கே இருக்க வேண்டும்?'' என்று மீன்விழி கேட்டாள்.

''என் கணவருக்குத் திடீரென மனத்தில் ஒருவித முடிவு ஏற்படும். மாமல்லபுரத்தின் மீது அபராஜித சக்கரவர்த்திக்கு அக்கறை குறைந்து வருகிறது என்பதைக் கண்டு கொண்டார். கோயில் பூசைகளை சரிவர அதிகாரிகள் செய்வதில்லை. அவர்களைத் தட்டிக் கேட்பதற்குத் தக்க ஆளில்லை. சிறிது காலத்தில் ஒரு பெரிய பிரளயம் போன்ற ஒன்று தோன்றி கடல் அலைகள் பிரம்மாண்டமாக எழுந்து கோயிலையே அழித்துவிடும் என்ற பயம் அவர் உள்ளத்தில் எழுந்துவிட்டது'' என்று கூறிய பட்டரின் மனைவி, ''உங்களுக்கு விருப்பமில்லையா? விக்கியண்ணனோடு மிகவும் விவாதித்து வந்தீர்களே?'' என்று கேட்டாள்.

மீன்விழி பெருமூச்சு விட்டாள். விருப்பமும் இருந்தது. விருப்பமில்லாமலும் இருந்தது. தெளிவு பிறக்காமல் தடுமாறினேன். இப்போது தெளிவு பிறந்துவிட்டது'' என்று அவள் கூறும்போது பெரும் நிம்மதி ஏற்பட்டதுபோல் தோன்றியது.

மறுநொடியில் நித்திரைதேவி அவளை அழுத்தமாக ஆலிங்கனம் செய்துகொண்டாள். நடுநிசிக்குப் பிறகு சுகானுபவங்களோடு கூடிய இன்பக் கனவுகள் அவளுக்கு ஏற்பட்டன.

விக்கியண்ணன் அவளருகே வந்து நிற்கிறான். அவளைப் பார்த்துப் புன்னகை செய்கிறான். அவனுடைய மெல்லிய அணைப்பால் அவள் உடல் சிலிர்க்கிறது. அவளுடைய பூங்கரங்களை எடுத்து அவன் தன் கரங்களோடு பிணைத்துக் கொள்கிறான். அவளும் தன் கரத்தால் மெல்ல அவன் தோளைத் தொடுகிறாள்.

மீன்விழிக்குத் திடீரென விழிப்பு ஏற்பட்டது. உடல் சிலிர்க்க அவள் ஒரு கணம் தாம் எங்கே இருக்கிறோம் என்று புரியாமல் திகைத்தாள். அருகே பட்டரின் மனைவி நன்றாக உறங்கிக் கொண்டிருந்தாள். அவளுடைய ஒரு கரம் மீன்விழியின் மீது இருந்தது. இடக்கால், அவளது காலின் மீது தவழ்ந்தது.

மீன்விழி மெல்லச் சிரித்துக் கொண்டாள். அவள் கரத்தை ஒதுக்கிவிட்டு, சத்திரத்தைவிட்டு எழுந்து வெளியே வந்தாள்.



அப்பொழுதே ஆற்றங்கரைக்குச் சென்று அமிழ்ந்து குளிக்க வேண்டும்போல் தோன்றியது.

பெண்ணையாற்றின் ஓர் ஓரமாக சலசலவெனத் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. செடி, கொடிகள் சற்று அடர்ந்து வளர்ந்திருந்த இடத்திற்குச் சென்று பல் விளக்கி, அவிழ்ந்து நீராடினாள்.

பிறகு ஈரப்புடைவையை நன்றாகப் பிழிந்து ஒரு முனையை மரக்கிளையில் கட்டி, மற்றொரு முனையை இடுப்பில் சுற்றிக் கொண்டாள்.

தொலைவில் பட்டரின் மனைவி விரைந்து வருவது தெரிந்தது.

''மீன்விழி, மீன்விழி'' என்று குரல் கொடுத்தவாறே அவள் ஓடி வந்து கொண்டிருந்தாள்.

அவளருகே வந்ததும், ''உடனே புறப்பட வேண்டுமாம் விக்கியண்ணன். அவசரப்படுகிறார். பல்லவர் படைகள் காஞ்சியை விட்டுப் புறப்பட ஆயத்தங்கள் நடப்பதாக செய்தி வந்துள்ளது'' என்றாள்.

○



01 09 201

# 37. மயிலழகியின் மதி மயக்கம்!

மயிலழகு கண நேரத்தில் ஏமாந்துவிட்டாள். அவள் தன் சுயநிலையை அடைந்தபோது சிறைச்சாலையில் அமுதன் தங்கியிருந்த அறைக்கதவு வெளியே தாளிடப்பட்டிருந்தது.

இதுவரை மயிலழகை நெருங்கித் தொட்டவர்கள் எவருமிலர். அமுதன் ஒரு கரத்தைத் தோள் மீது பதித்தான். அவள் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. மற்றொரு கரத்தைத் தன் விரல்களுடன் கோத்து விளையாடவிட்டான்.

ஒரு புடைவை வியாபாரிக்கு இவ்வளவு துணிவா? சோழ நாட்டிளவரசனைப் பற்றிய செய்தியை அறிய வேண்டும் என்ற அளவில் அவள் எந்தவித மறுப்பும் தெரிவிக்கா மலிருந்தாள்.

அமுதனின் மூச்சு அவள் கழுத்துப் பகுதியில் மெல்லத் தவழ்ந்தது

"மயிலழகு! என்னைத் தேடி வந்தக் காரணத்தை நீ சொல்லவில்லையே. நான் நினைத்தது சரியாய்விட்டது" என்று அவள் செவியருகே மெல்லக் கேட்டான்.

"என்ன நினைத்தீர்கள்?" என்று அவன் முகத்தை நோக்கிக் கேட்டாள்.

"முதல் சந்திப்பிலேயே என்னை உனக்குப் பிடித்துவிட்டது அப்படித்தானே?" - என்று கூறிக் கொண்டே அவளது முகத்தை மெல்லத் திருப்பினான். தன் முகத்தின் மிக அருகே கொண்டு வந்தான். அவனது பிடியின் அழுத்தம் எளிதில் விடுபட முடியாமலிருந்தது. என்ன துணிவு அவனுக்கு? பேச்சிலும்தான்!

மயிலழகு என்ன மறுமொழி கூறுவாள்? 'அப்படியொன்றும் என் மனத்தில் எந்தவித உணர்ச்சியும் தோன்றவில்லை' என்பாளா?

தர்மசங்கடமான நிலை, சக்கரவர்த்திகளிடம் சோழ நாட்டு இளவரசரைக் குறித்துச் சொல்லியாக வேண்டும். மயிலழகு வாயைத் திறந்து ஏதாவது பேச முற்படாவிடில், அமுதனின்



அதரங்கள் தன் இதழ்களுடன் சேரத் துணிந்து விடும் என்பதை மயிலழகு உணர்ந்தாள்.

பெண்மைக்கு உரிய நாணமும், சிறிது அச்சமும் இப்போது உடன் சேர்ந்து உதவின.

"நான் கேட்டதற்கு நீங்கள் தக்க மறுமொழி கூற வில்லையே" என்று கூறும்போது சிணுங்குவது போலிருந்தது.

ஓர் ஆடவனின் பலமான அணைப்பிலிருந்து விடுபடும் முனகல் இருந்தது.

"என்னைப் பற்றிய உண்மையைத் தானே கேட்கிறாய்?" என்று அமுதன் கேட்டான்.

மயிலழகு ஆம் என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தாள்.

"உண்மையை நான் சொல்லவில்லை என்றுதானே நீ நினைக்கிறாய்?" அமுதன் கேட்டான். அவன் பிடி சற்றுத் தளர்ந்தது.

மயிலழகு தலையை அசைத்தாள்.

"உண்மையைச் சொன்னால், சக்கரவர்த்திகளிடம் சொல்லி, என்னை விடுதலை செய்துவிட முடியும். அப்படித்தானே...?" அமுதன் கரங்கள் அவள் முதுகுப்புறம் இறங்கின.

மயிலழகின் உடல் புல்லரித்தது. அவள் நெளிந்தாள். அமுதன் உண்மையையும் சொல்ல வேண்டாம். ஒன்றும் சொல்ல வேண்டாம். இந்த இடத்திலிருந்து போய்விட வேண்டும் என்று ஒரு கணம் எண்ணினாள். மனம் நினைத்தது. உடல் இயங்க மறுத்தது. அவன் கரத்தைத் தள்ள அவள் கரம் முனைந்தது. மனம் இயக்க கட்டளை இட மறுத்தது. நெற்றியில் வியர்வைத் துளிகள். முத்துகளாக முதுகிலும் அரும்பின.

"மயிலழகு - உன் பெயர்தான் எவ்வளவு அழகு! மயிலைப் போல் ஆடுவாயா?" அமுதன் கேட்டான்.

மயிலழகு தன் சேலைத் தலைப்பை எடுத்து நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொள்ள முயன்றாள். அதற்குள் அமுதனின் விரல்கள் அவள் நெற்றியில் தவழ்ந்தன.

"இந்தச் சிறைக்கூடத்தில் காற்றே இல்லை."

"இந்த இடத்திலிருந்து எனக்கு விடுதலை எப்போது?"

"இதுபோல் காஞ்சிச் சிறையில் என்னை அடைத்து விடுவார்கள் என்று நான் நம்பவேயில்லை..." என்று அமுதன் கேள்வி கேட்டுப் பேசிக் கொண்டே இருந்தான்.

"உங்களை விடுதலை செய்யவே நான் வந்திருக்கிறேன்" என்றாள் மயிலழகு.

"இப்போதே நாம் புறப்படலாமா?" என்று பரபரப்புடன் கேட்டான். "நாம் புறப்பட்டாக வேண்டும். இதற்குள் இளவரசருக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்திருக்கும் அல்லது தப்பியிருப்பார்" என்றான்.

"உங்களுக்கு எப்படித் தெரியும்?" மயிலழகு கேட்டாள்.

"என்னிடம் சொன்னார்."

"நீங்கள் அவருக்கு நண்பரா? உறவா?"

"இரண்டுமில்லை. நான் மாளிகையில் ஓர் ஊழியன்."

"ஊழியனென்றால்?"

"பல்வேறு பணிகளைச் செய்வேன். பாடுவேன்... ஆடுவேன்..."

"ஆடுவீர்களா?" - மயிலழகு வியப்புடன் கேட்டாள்.

"ஆமாம். ஆடுவேன். நடனம் கற்றுக்கொடுப்பேன்..."

அமுதன் இவ்வாறு சொன்னவுடன் மயிலழகு சிரித்து விட்டாள்.

"ஆண் பிள்ளைகள் ஆடுவார்களா?" என்று சிரிப்பிற்கிடையே கேட்டாள் மயிலழகு.

"என்னைப்போல் நாட்டியக் கலையைப் பயின்றவர்கள் பலர் இருக்கிறார்கள். பலருக்குப் பயிற்றுவிக்கிறோம்" என்றான் அமுதன்.

"அப்படியென்றால் என்னை உங்கள் ஊருக்கு அழைத்ததற்கு என்ன காரணம்?" என்று கேட்டாள் மயிலழகு.

"யார் அழைத்தார்கள்?" - தெரியாமல்தான் அமுதன் கேட்டான்.

மயிலழகு மெல்ல நகைத்தாள். "நிஜமாக உங்களுக்குத் தெரியாதா?" என்று கேட்டாள்.

"தெரியாது மயிலழகு! சொல் தெரிந்து கொள்கிறேன்" என்றான் அமுதன். அவனது கரங்களின் தொல்லையிலிருந்து விடுபட விரும்பி, உடலை நெளித்துக் கொண்டு, "நான்



காளஹஸ்தி நகரில், காளத்திநாதர் திருக்கோயிலில் நடனமாடிக் கொண்டிருந்தேன். சந்தியா நிருத்யம் ஆடுவதில் எனக்குத் திறமை அதிகம். சோழ நாட்டிலிருந்து இருவர் வந்தனர். சோழ நாட்டைப் பற்றி வானளாவப் புகழ்ந்தனர்."

"உண்மைதானே?"

"அவர்கள் சோழ நாட்டினர் என்றுதான் எனக்குத் தெரியுமே தவிர, அவர்களுள் ஒருவர் சோழ இளவரசர் என்பது எனக்குத் தெரியாது. அவர்கள் என்னைச் சோழ நாட்டிற்கு அழைத்தனர். பொன்னும் பொருளும் தருவதாக ஆசை காட்டினர். ஒரு வீடும் விளை நிலங்களும் எனக்குத் தருவதாகக் கூறினார். நான் சம்மதித்தேன்."

"வீடும், நிலமும் உன்னைக் கவர்ந்து விட்டனவா?"

"இல்லை, இல்லை. அதற்கு மேலாக அவர்களது வார்த்தைகளில் மயங்கினேன். காவிரி பாயும் சோழநாட்டின் பெருமையை மனக்கண் முன்னால் கொண்டு வந்தேன். கரிகால் சோழனுடைய மரபினர் எங்கள் பகுதியில் இன்னும் ஆட்சி புரிந்து வருகிறார்கள். அவர்கள் உறையூர் சோழர்களைப் பற்றியும், கரூர் சோழர்களைப் பற்றியும், பூம்புகார் சோழர்களைப் பற்றியும் வானளாவப் புகழ்வார்கள்."

"ஏன் அவர்களுக்குத் தஞ்சைச் சோழர்களைப் பற்றித் தெரியாதா?"

"தஞ்சைச் சோழர்கள் பல்லவ நாட்டிற்குள் அடக்கமாயிற்றே. அவர்கள் எப்படி அறிவார்கள்?"

"அறியச் செய்யவே எங்கள் இளவரசர் புறப்பட்டார்."

"அவர் இளவரசர் என்று எனக்குத் தெரியாது. எங்கள் சக்கரவர்த்திக்கும் தெரியாது."

"இப்போது தெரிந்து விட்டதல்லவா? நீ அவரிடம் சொல்லியிருப்பாயே?"

"ஆம்" என்று மயிலழகு கூறியபோது, அமுதன் தன் பிடியை விடுவித்து அவளது முகத்தை இரு கரங்களாலும் அழுத்தமாகப் பிடித்து, "உன்னால் எங்கள் இளவரசருக்கு ஆபத்து, எனக்கும் ஆபத்து. என்னை விடுவிப்பதாக நீ ஓர் உறுதியளித்திருக்கிறாய். நினைவிருக்கிறதா?" என்று கேட்டான்.

"அப்பப்பா! என்னை விட்டுவிடுங்கள். உங்கள் இரும்புக் கரம் என் எலும்பை நொறுக்கிவிடும்போல் தோன்றுகிறது. நடனமாடத் தெரிந்தவர்கள் நளினமாக இருப்பார்கள் என்று சொல்லுவார்கள். நீங்கள் ஏன் இப்படி, பல்லவ நாட்டில் மாறுவேடத்துடன் வந்து வம்பில் சிக்கிக் கொண்டீர்கள்?"



01 09 201

''நீ ஏன் ராஜாங்க விஷயத்தில் தலையிட்டு என்னையும் சிக்கவைத்து, என் இளவரசரையும் சிக்க வைத்தாய்? நடன மணியாக இலட்சணமாக ஊரோடு இல்லாமல் ஏன் திருக்காளத்தியிலிருந்து இங்கு வந்தாய்?''

அமுதன் கேள்விக்கு உடனே அவளால் மறுமொழி கூற முடியவில்லை. ஓர் அழகிய இளம் வாலிபனிடம் அவ்வாறு நெருங்கி நின்று அவன் பிடிக்கு, தழுவலுக்கு ஏன் இடமளித்தோம் என்று அவளுக்கே தெரியவில்லை. காலையில் சந்தித்த போதே ஏன் அவனை இளவரசியின் மாளிகைக்குள் அழைத்துச் சென்றோம்? சந்தித்தபோதே ஏன் அவனிடம் பேசினோம்? ஏன்? அவளுக்கே எதுவும் புரியவில்லை.

இப்போது என்ன செய்வது? எவ்வாறு அமுதன் சிறைச்சாலையினின்று வெளியேற வழிசெய்வது? நம் உள்ளத்தில் நம்மை அறியாமல் பொறாமை உணர்ச்சி மேலிட்டதால் நாம் பல்லவ சக்கரவர்த்தியிடம் இளவரசரைப் பற்றிச் சொன்னோம். மயிலழகுக்கு ஒன்றுமே புரியவில்லை. திகைத்து நின்றாளா? மோகப் பிடியில் மது உண்ட வண்டென நின்றாளா?

''உங்கள் அபராஜிதனிடம் எங்கள் இளவரசர் அகப்பட்டு விடுவாரென்று நீ எளிதில் நினைத்துவிட்டாயா?'' அமுதன் குரலில் ஏளனமிருந்தது.

''நான் அப்படி நினைக்கவில்லையே'' மயிலழகு குரல் மெல்லியதாக இருந்தது. அவளால் அந்தக் காற்றோட்டமில்லாத சிறையறைக்குள் நிற்க முடியவில்லை. சாய்ந்தால் சுவரில் சாய வேண்டும். அல்லது அமுதனின் தோள் மீது சாய வேண்டும்.

''மயிலழகு! ஆகா, அழகான பெயர். உன் பெயரும், அழகும், நடனத் திறமையும் வீண் போக வேண்டும் என்பது உன் ஆசையா?''

''இல்லை, இல்லை. என் கலைத் திறமையை மற்றவர்கள் புகழ வேண்டும். திறமையை மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டும். அதனால்தான் நான் முன்பின் தெரியாத வழிப் போக்கர்கள் பேச்சை நம்பி காளத்தியிலிருந்து வந்தேன். என் சகோதரிக்குக்கூட என் மீது பொறாமை'' என்று கூறும்போது சிறிது சோகம் இருந்தது.

''உன் சகோதரியின் பெயர் மீன்விழிதானே...?''

''ஆமாம், உங்களுக்குத் தெரியுமா?''



''அவள் இந்நேரம் சோழ நாட்டிற்குச் செல்லும் பாட்டையில் சென்று கொண்டிருப்பாள்.''

''உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''எப்படியோ தெரியும். இந்த இருட்சிறையில் நான் தான் வாட வேண்டும் என்று ஆண்டவன் கட்டளை. உனக்கு ஏனம்மா தலையெழுத்து? நீ வந்த வழியே போ. எனக்குக் களைப்பாக இருக்கிறது. உறக்கம் விழிகளைச் சுழற்றுகிறது'' என்றான் அமுதன்.

''ஆண்டவன் கட்டளை இல்லை. அரச கட்டளை. அதை மாற்ற முடியும். இந்த புழுக்கத்தில் என்னால் ஒரு கணம் கூட நிற்க முடியாது. ஆனால் நீங்கள் அருகே இருக்கும்போது, உங்கள் அருகே எவ்வளவு காலம் வேண்டுமானாலும் நான் நிற்கச் சித்தமாயிருக்கிறேன்!''

''நான் இந்தச் சிறையில் இருக்க விரும்பவில்லை. எப்படியும் சோழ நாட்டிற்கு நான் சென்றுவிடுவேன். அப்போது நீ என்ன செய்வாய்?''

''தங்களுடன் வருவேன்!''

இதைச் சொன்னவுடன் அமுதன் திகைத்தான். ''என்னுடன் வருகிறாயா?'' என்று கேட்டான்.

''ஆமாம்; நான் ஒன்று சொல்கிறேன், அதைப்போல் நீங்கள் செய்ய முடியுமா?'' என்று மயிலழகு கேட்டாள்.

''சோழ இளவரசரும், இளவரசியும் சொல்வதைத் தான் நான் செய்வேன். மற்றவர்கள் சொல்வதை நான் கேட்க மாட்டேன்.''

''அப்படியென்றால் இங்கேயே இருட்சிறையில் இருக்க வேண்டியதுதான்.''

''அப்படியென்றால் நீயும் இருக்க வேண்டியதுதான்'' அமுதன் சொன்னவுடன் மயிலழகு சிரித்தாள்.

''சரி! என்ன செய்ய வேண்டும்?'' அமுதன் கேட்டான்.

''என்னுடன் சக்கரவர்த்திகளிடம் வரவேண்டும்.''

''உம், பிறகு?''

''சோழ இளவரசரின் இருப்பிடத்தைச் சொல்ல வேண்டும்.''

''பிறகு?''

''பிறகு... உங்கள் விடுதலைக்கு நான் பொறுப்பு!''


01 09

மயிலழகு இவ்வாறு கூறியவுடன் அமுதன் அது சிறைச்சாலை என்பதையும் மறந்து சிரித்தான்.

''பைத்தியக்காரத்தனமான யோசனை. இதுவரையில் சோழ நாட்டு இளவரசர் அங்கே இருக்கமாட்டார். அப்படி ஒருவேளை இருந்திருந்தால் அபராஜிதவர்மன் அவரைக் கண்டுபிடித்து சிறையிலடைக்க உத்திரவிட்டிருப்பார். ஒரு வேளை இன்னும் சிறிது நேரம் இங்கேயிருந்தால் சோழநாட்டு இளவரசரையும் எனக்குத் துணையாக இங்கே கொண்டு சேர்த்துவிடலாம்!'' என்றான்.

மயிலழகின் உடல் காரணமின்றி ஏனோ நடுங்கியது. ''அப்படியென்றால் என்ன செய்யலாம்? நான் பல்லவ சக்கரவர்த்தி அவர்களுக்கு வாக்குக் கொடுத்து வந்திருக்கிறேன், உங்களை அழைத்து வருவதாக!''

''வாக்குத் தவறித்தான் ஆக வேண்டும்.''

''சக்கரவர்த்தியின் கோபத்துக்கு உள்ளாக நேரிடும். சிறைவாசம் கிடைக்கும்.''

''அமுதன் சிரித்தான். எனக்கென்னவோ, உனக்குத் தண்டனையெதுவும் கிடைக்காது என்று தோன்றுகிறது. அபராஜிதவர்மரால், இளவரசரைச் சிறைபிடிக்க முடியாது. மயிலழகு! நான் ஒன்று சொல்கிறேன். நீ கேட்கிறாயா?'' என்று கேட்டான்.

மயிலழகின் முகத்தில் பரபரப்பும் ஆவலும் தோன்றின.

''நான் இந்தச் சிறையிலிருந்து வெளியேறி விடுகிறேன், நீயும் என்னைத் தொடர்ந்து வந்துவிடு.''

''எங்கே போகப் போகிறீர்கள்?''

''சோழ நாட்டிற்கு.''

''சோழ நாட்டிற்கா? இங்கேயிருந்து எப்படித் தப்பிச் செல்வீர்கள்?'' என்று மயிலழகு கேட்டாள்.

''இதோ - இதைக் கொண்டு'' எனறு கூறி தன் கையிலிருந்த அடையாளச் சின்னத்தைக் காட்டினான்.

அபராஜிதவர்மன், மயிலழகிற்குக் கொடுத்த அதே அடையாள மோதிரம், மயிலழகின் விரல்களில் திகழ்ந்த அந்த மோதிரம் இப்போது அமுதன் விரல்களில் திகழ்ந்தது. அதைக் கண்ட மயிலழகு திடுக்கிட்டாள்.

○



## 38. கனவும் நனவும்

அமுதன் இவ்வாறு செய்வான் என்று மயிலழகு எதிர்பார்க்கவில்லை. மிக நெருங்கிப் பேசினான். நெகிழ் வேற்படுமாறு பேசினான். இருவருடைய மூச்சும் ஒன்று கலந்தன. அவனது ஸ்பரிசம் அவளது மேனியில் புதுச் சிலிர்ப்பை ஏற்படுத்தியது. இதுவரை எந்த ஆடவரையும் நெருங்க விடாமலேயே விழிகளாலேயே பித்தனாக்கி வந்த அவள், ஒரு பகலில் அமுதனிடம் மனத்தைப் பறிகொடுத்து விட்டாள். அவனை அபராஜிதன் முன்பு கொண்டு நிறுத்த விரும்பிய அவள் மனம் மாறிவிட்டது. அவனுக்கு எப்படியாவது விடுதலை வாங்கித்தர வேண்டும் என்று முடிவு செய்து கொண்டாள். சக்கரவர்த்திகளிடமே நேரே அழைத்துச் சென்று தன் செல்வாக்கைப் பயன்படுத்தி அவனுக்கு விடுதலை வாங்கித்தர எண்ணினாள். விடுதலை வாங்கித் தந்த பிறகு அவனுடன் சோழ நாட்டிற்குச் சென்றுவிடவும் திட்டமிட்டாள். திட்டங்களை எல்லாம் சில கணங்களுள் முடிவு செய்துவிட்டாள். அவன் கரங்கள் தன் உணர்ச்சியை மீட்டி முடிப்பதற்குள் முடிவுக்கு வந்துவிட்டாள்.

ஆனால் அவன் இப்படிச் செய்துவிட்டானே... ''மயிலழகு! நான் போகிறேன். எப்படியாவது என்னைச் சந்தித்து என்னுடன் சோழ நாட்டிற்கு வந்துவிடு...'' இவ்வளவுதான் அவன் கூறிய வார்த்தைகள்.

அமுதன் அந்தச் சிறையின் சிறு கூடத்தை விட்டு ஒரே தாவாகத் தாவினான் -

''ஐயோ... அவர் எப்படி வெளியே செல்வார்?'' என்று தான் அவள் அப்போதும் எண்ணினாள். சிறைக் காவலர்களிடம் சிக்கிவிட்டால் அடுத்து மரண தண்டனைதானே கிடைக்கும்...

''ஐயோ...'' என்ற ஒலிதான் அவளிடமிருந்து எழுந்தது. அவள் செய்வதறியாது கைகளைப் பிசைந்த வண்ணம் வெளியே ஓடிவந்தாள்.

அங்கொன்றும் இங்கொன்றுமாக சிறையில் தீவர்த்தி விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. முழு இருளும் ஆட்சி செய்யத் தொடங்காததால் சிறையில் நடமாடுபவர்களின் உருவம் தெளிவாகத் தெரிந்தது.

மயிலழகின் குரல் கேட்டுக் காவலரிருவர் ஓடி வந்தனர்.

சிறையில் ஒரு பெண் நிற்பதையும், முகத்தில் கவலையும் பயமும் நிறைந்திருப்பதையும் கண்ட அவர்கள் ஒரு கணம் திகைத்தனர்.

''அம்மணி! நீங்கள் யார்? இங்கு எங்கே வந்தீர்கள்?'' என்று அவர்களுள் ஒருவன் கேட்டான்.

மயிலழகு உடனே தன் கைவிரலைப் பார்த்துக் கொண்டாள். அரசரின் அடையாள மோதிரத்தைக் காட்டினால் காவலர்கள் புரிந்து கொள்வார்கள். ஆனால் அவளிடம் அந்த மோதிரம் இல்லை.

சிறைச்சாலையிலே பரபரப்பு ஏற்பட்டது. சிறையிலடைக்கப் பட்ட சோழ நாட்டவன் தப்பி ஓடிவிட்ட செய்தி அந்தக் கணத்தில் தெரியவில்லை.

மயிலழகை அழைத்துக் கொண்டு சிறை வாயில் அருகே சென்றபோது அங்கிருந்த சிறைவாயிற் காவலர்கள் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர்.

மயிலழகை அவர்கள் அறிவார்கள். அழைத்து வந்தவன் முகத்தில் சொல்ல முடியாத பீதியும் கவலையும் நிறைந் திருப்பதைக் கண்டனர். அவளை அழைத்து வந்த காவலர்களைப் பார்த்துக் காரணத்தை வினவினார்.

''திடீரென்று ஐயோ என்ற குரல் கேட்டது. நாங்கள் ஓடி வந்தோம்'' என்றனர் காவலர்கள்.

''இவர்களை யாரென்று தெரியுமா?'' என்று சிறை வாயில் தலைவன் கேட்டான். அவர்கள் தலையை அசைத்தனர்.

''இந்த நாட்டிலேயே சிறந்த நடனப் பெண்'' என்று கூறி மயிலழகைப் பார்த்துச் சிரித்தான். அசட்டுத்தனம் பொங்கி வழிந்தது.

''இவர்கள் சிறைச்சாலைக்கு எப்படி வந்தார்கள்?''

''சக்கரவர்த்தி அனுப்பியிருக்கிறார். அவர் தன் அடையாள மோதிரத்தையும் கொடுத்தனுப்பியிருக்கிறார்.''



அடையாள மோதிரம் மயிலழகிடம் இல்லை. அவர்கள் கேட்டுவிடப் போகிறார்களோ என்ற பயத்தைவிட, ஓடிப் போனானே அவனைப் பற்றிய எண்ணமே மிகுதியாய் இருந்தது. அது கவலையா ஆத்திரமா? - பயமா?

''இப்படி ஓர் இளைஞன் ஓடினானே பார்த்தீர்களா?'' என்று மயிலழகு கேட்டாள். அப்போதுதான் விழித்துக் கொண்டார்கள்.

''யார், யார்? அந்தச் சோழ நாட்டவனா?'' என்ற குரலுடன் பரபரப்பும் கலந்தது.

''இதோ இப்போதுதானே கம்பீரமாகப் போகிறான். தன் விரலிலுள்ள முத்திரை மோதிரத்தை என் முகத்தருகே நீட்டினான்...'' என்று சிறைவாயிற் காவலர் தெரிவித்தார்.

''ஆ! மோசம் போனோம்'' என்ற கூக்குரல் எழுந்தது.

''குதிரையில் ஏறிப் போனான்'' என்ற குரல்தான் மற்றவர்களிடம் அதிகப் பயத்தை அளித்தது.

மிக வேகமாகப் படர்ந்த இருள் போர்வையை விலக்கி விட்டு, அமுதனைத் தேட விரைந்தனர்.

மயிலழகு என்ன வேண்டிக் கொள்வாள்? ''ஈசனே சோழ நாட்டவர் அகப்பட்டுவிடக் கூடாது' என்றா?

'ஆண்டவனே, அவர் அகப்பட்டுக் கொண்டாலும், சக்கரவர்த்தியிடம் தக்கவாறு சொல்லி விடுவித்துவிடும் தைர்யத்தை எனக்கு அளிப்பாய்' என்றா?

மயிலழகு பல்லவ சக்கரவர்த்தி அபராஜிதவர்மனின் மாளிகையை அடைந்தபோது மாளிகையில் அரசரில்லை.

* * *

சோழ இளவரசன் ஆதித்தன் வைரக் கண்ணிக்காக அந்த நிலவறையில் காத்திருந்தான். எங்கிருந்து இயற்கையான காற்று வருகிறது என்பதை ஆராய்ந்து கொண்டிருந்தான்.

அந்தச் சுரங்கப் பாதையை அவ்வப்போது யாரும் பயன்படுத்துவதில்லை என்றாலும் தூய்மையாக அந்த இடம் பாதுகாக்கப்பட்டு வருவது தெரிந்தது. குறுக்கும் நெடுக்குமாக அந்தக் குறுகிய இடத்தில் எவ்வளவு நேரம் நடைபோட முடியும்?

ஒரு தடவை, மாளிகையிலிருந்து சுரங்கப் பாதைக்கு இறங்கும் இடம் வரையில் போய்ப் பார்த்து வந்தான். மாளிகையில் பலர் பரபரப்புடன் நடமாடும் ஓசை கேட்டது. அபராஜிதனின் ஆட்கள், தன்னைத்தான் மாளிகையில் தேடுகிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டான். அவனிடம் உடைவாளில்லை. ஆனால், அமுதன் கொடுத்த புத்தாடை அணிந்திருந்தான். இப்போது அவனைப் பார்த்தால் நாடோடியாகப் பல்லவ நாட்டில் அலைபவன் போல் தோன்றவில்லை. வைரக்கண்ணியும் இப்போது அவனைப் பார்த்தால் பிரமித்துவிடுவாள்.

நீண்ட நேரம் கழித்து வைரக்கண்ணி ஆதித்தன் இருக்குமிடம் வந்தாள். அவள் கரத்தில் குடிநீர் செம்பும், தயிர்ச்சோறு கலந்த பாத்திரமும் இருந்தன. அவள் முகத்தில் தோன்றியிருந்த கவலையை ஆதித்தன் தெளிவாய்ப் புரிந்து கொண்டான்.

சிறிது எண்ணெய் வார்த்தபோது விளக்கொளி பிரகாசமாகியது.

"நான் இங்கேயே தங்கியிருக்க வேண்டும் என்பது உன் எண்ணமா?" என்று ஆதித்தன் கேட்டான்.

"நீங்கள் இங்கேயே தங்கியிருந்து நானும் உங்கள் அருகிலேயே இருந்துவிட்டால் எனக்கு எந்த நாடும் தேவையில்லை" என்றாள் வைரக்கண்ணி.

"இந்த நிலவறையிலே தங்கிவிடலாம் என்பது உன் எண்ணமா?" ஆதித்தன் அவளுடைய கையிலிருந்த தண்ணீர் செம்பைப் பெற்றுக் கொண்டான். பெறும் போது அவள் கரத்தை அழுத்தமாகப் பிடித்துக் கொண்டான்.

"மாளிகையில் வாழ்வதைவிட இந்த நிலவறை எவ்வளவோ மேல்." அங்கே பயந்து வாழ வேண்டும். இங்கே அந்தப் பயம் இல்லை." என்று கூறிய வைரக்கண்ணி ஆதித்தன் மார்பில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். விழிகளை மூடிக் கொண்டு அவனது மார்பிலே விழிகளைத் தேய்த்தாள். இதழ்களால் அவன் இதயத்துடன் பேச முயன்றாள். மற்றொரு கரத்திலிருந்த உணவுத் தட்டைக் கீழே வைத்துவிட்டுத் திரும்பிய வைரக்கண்ணியின் மீது ஆதித்தன் ஆவலுடன் பருகிய நீர்த்துளிகள் சிந்தின.

"அடாடா. உன் மேலாடை நனைந்துவிட்டதே" என்று, மேலாடையில் சிந்திய நீரைத் துடைத்தான்.



அவன் கரத்தை அப்படியே மார்பில் அழுத்திக் கொண்டாள் வைரக்கண்ணி.

"அன்பெனும் அருவியில் நனைந்து திக்குமுக்காடும் காலத்தை எதிர்பார்த்திருந்த என்னை நீங்கள் நினைத்ததால் ஆனந்த வெள்ளம் பொங்கித் துள்ளி எழுகிறது" - வைரக்கண்ணியின் சொற்கள் வெளியே ஒலிக்காமல் ஆதித்தன் செய்தான்.

"தேவி கவிதை மழை பொழிகிறாள்!" எனறான் ஆதித்தன். அவள் முகத்தை நிமிர்த்தி, "கருமுகிலின் அழுத்தம் ஏற்பட்டால் கண்டிப்பாய் மழை பொழிய வேண்டியதுதானே!" என்று கூறி மெல்ல நகைத்தாள் வைரக்கண்ணி. சிறு விளக்கொளியில், பற்கள் முத்தென மின்னின.

"நீண்ட நாள்களாக எனக்கொரு கனவு" என்றான் ஆதித்தன்.

"சொல்லுங்கள் இளவரசே! இளவரசரின் கனவை நனவாக்க என்னால் முடிகிறதா பார்க்கிறேன்" என்றாள் வைரக்கண்ணி. அவன் தோள்களை வருடியவாறு.

"பாண்டிய நாட்டு அழகிய வெண் முத்துகளாலான மாலையொன்றை அணிய வேண்டும். அதற்காகப் பாண்டிய நாட்டின் மீது படை எடுத்துச் செல்ல வேண்டும் என்பதே என் கனவு!"

"பாண்டிய நாட்டு முத்தா? அடடா நான் அந்தக் கனவை நிறைவேற்ற முடியாது!" - அவள் மீண்டும் நகைத்தாள்.

"முடியும். பல்லவ இளவரசி! உன்னால் முடியும்" ஆதித்தன் அவளது இதழ்களை மெல்லத் தொட்டுத் தடவினான்.

"பெயர்தான் இளவரசி மாளிகையில் கூட வாழ முடியாமல் இதோ இந்த நிலவறைக்கு வந்து ஏதோ கள்ளி போல் உங்களுடன் நிற்கிறேன்..." என்று கூறும்போது அவள் கண்களில் இரு முத்துகள் மின்னின.

"நன்றாக ஒப்புக்கொண்டாய், நீ கள்ளிதான்."

"ஐயோ..."

"உன்னிடமே முத்து இருக்கிறது. அதற்குப் பாண்டிய நாட்டுக்குப் போக வேண்டாம்..."

"என்னிடமா...?"

''ஆமாம், உனது வெண் முத்துப் பல் வரிசையை செம்பவள இதழ்களுக்கிடையே மறைத்து வைத்திருக்கிறாய்...!''

ஆதித்தன் இவ்வாறு கூறியவுடன், வைரக்கண்ணி, விம்மினாள். சிரித்தாள், பித்துபோல் ஆனாள் பேரின்ப நிலையைக் கண்டவள் போல் ஆனாள். முல்லைக்கொடி போல அவனைச் சுற்றிச் சுற்றிப் படர்ந்தாள்.

அவள் மேனி ஆர்வத்தால் நடுங்கியதா? ஆசையால் நடுங்கியதா? உணர்ச்சி வசப்பட்டதால் நடுங்கியதா? முதல் முதலாக ஓர் ஆடவனின் முழுமேனியையும் தன் மீது ஆட்கொண்டதால் நடுங்கியதா?

''பிரபோ! இப்படியே இங்கேயே காலாகாலத்திற்கு இருந்து விடலாமா?'' என்று ஆதித்தன் செவியில் முணுமுணுத்தாள்.

''ஹூம் ஹூம்.... முடியாது, முடியாது. எனக்கென்று ஒரு நாடு இருக்கிறது. என்னை எதிர்பார்த்திருப்பவர்கள் ஆயிரமாயிரம் பேர். மன்னர் விஜயாலயரின் ஒரே மகன் நான். என் தந்தையின் காலத்திற்குள்ளேயே சோழ நாட்டைப் பழைமை மிக்க நிலைக்கு உயர்த்தி விடக் கனவு கண்டு வருகிறேன். என் கனவு மாளிகையை இந்த நிலவறையில் சிதைய விடமாட்டேன். சோழ இளவரசரின் விருப்பங்கள், இலட்சியங்கள் இந்தச் சிறு சதுரத்தில் இல்லை. எனக்கு மிகப் பெரிய பொறுப்புகள் உண்டு. உனது பூங்கரம் தழுவுவதற்கு மட்டுமே என் இந்த இரு தோள்கள் படைக்கப்படவில்லை. சோழ நாட்டின் மாபெரும் பொறுப்பை நான் தாங்க வேண்டும். என் மூதாதையர் காலத்துப் பெருமையை நிலைநாட்ட வேண்டும். கரிகால் பெருவளத்தான் ஆண்ட நாட்டின் எல்லையை மீண்டும் பெற வேண்டும். பல்லவர்களிடம் அடிமைப்பட்டிருப்பதிலிருந்து மீள வேண்டும். சுதந்தர சோழ நாட்டில்தான் கலைகளை வளர்க்க முடியும். சிற்ப அற்புதம் நிறைந்த கோயில்களைக் கட்ட முடியும். அங்கே சித்திரங்கள் தீட்ட முடியும்.... அதனால்... வைரக்கண்ணி இங்கேயே இருந்துவிட வேண்டும் என்று நினைக்காதே...'' என்று உணர்ச்சி பொங்கப் பேசினான்.

வைரக்கண்ணி அவன் முகத்தையே பார்த்தவாறு நின்றாள். அவன் விழிகளில் தோன்றிய வீரக்கனலைப் பார்த்தவாறு நின்றாள். அவன் முகத்தில் நடமாடும் கனவுச் சாயலைத் தரிசித்து நின்றாள். கனவை நிறைவேற்றத் துடித்து நிற்கும் வீரத்தையும் இலட்சிய தாகத்தால் துடிக்கும் அதரங்களையும் கண்டு பிரமித்து நின்றாள்.



ஆதித்தன் தன் சுயநிலையடைந்தான். ''இளவரசி! என் சிலையென நின்றுவிட்டாய்...?'' என்று ஆதித்தன் கேட்டான்.

''நான் இளவரசியல்லள். நான் உங்கள் அடிமை. உங்களை அடக்கி ஆளும் பல்லவ நாட்டு இளவரசி என்று கூறிக் கொள்வதில் பெருமையடைகிறேன். அந்தப் பெருமை என் உடலில் பொங்கிப் பாய்ந்த என்னைக் கற்சிலையாக்கிவிட்டது!'' என்ற வைரக்கண்ணியின் சொற்களைக் கேட்டு, ஆதித்தன் அவளை இழுத்து அணைத்துக் கொண்டு, ''வைரக்கண்ணி! நான் சோழ நாட்டிளவரசனாகத் தொடர்ந்து இருக்க வேண்டு ன்பது தானே உன் எண்ணம்?'' என்று கேட்டான்.

''அதில் என்ன சந்தேகம்? என் மீது, நம்பிக்கை இல்லையா?''

''இந்த நிலவறையில் நாம் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்துவிட்டால் சோழ நாடு இங்கே தேடி வந்துவிடுமா?''

வைரக்கண்ணி நிமிர்ந்து பார்த்தாள்.

''என்னை இங்கே இருளிலும் புழுக்கத்திலும் தங்க வைக்கவா அழைத்து வந்தாய்?''

'இல்லை' என்பதற்கு அடையாளமாய்த் தலையை அசைத்தாள், வைரக்கண்ணி.

''இங்கே நம்மைத்தேடி அபராஜிதனுடைய வீரர்கள் வரமாட்டார்கள் என்பது என்ன உறுதி?''

வைரக்கண்ணியின் உடல் சிலிர்த்தது. பரபரப்பாக இயங்கத் தொடங்கினாள்.

''ஆம், இளவரசே! என்னைப் பொறுத்தருளுங்கள். இந்தப் பாதை மாளிகைக்கு வெளியே செல்கிறது. நாம் உடனே விரைந்து செல்வோம். இரண்டு குதிரைகளும் ஏற்பாடு செய்திருக்கிறேன்'' என்றாள்.

''நீ குதிரை மீது தைரியமாக அமர்வாயா?''

''நான் யானை ஏற்றம், குதிரை ஏற்றம், வாள் சுழற்றுதல் எல்லாம் பயின்றவள்.''

''அதற்குக் கேட்கவில்லை. ஒரே குதிரை போதுமே? என்னருகே அமர்ந்து வருவாயா என்ற எண்ணத்தில்

கேட்டேன்'' என்று ஆதித்தன் சொன்னபோது வைரக்கண்ணியின் முகம் சிவந்தது.

வைரக்கண்ணி கொண்டு வந்த தயிர்ச்சோற்றை உண்ட பிறகு ஆதித்தன் அவள் கரத்தைப் பிடித்துக் கொண்டு சுரங்கப்பாதை வழியாக விரைந்தான்.

போகப் போக வழி குறுகியது. காற்று வீசுவதும் குறைந்தது. படிக்கட்டு தென்பட்டது. படிக்கட்டு மேலே ஏறிச் சென்றது.

''இந்த இடத்தில் வெளியே செல்ல வழி இருக்கிறது. தோப்பினிடையே இருப்பதால் மற்றவர்கள் இவ்வழியை அறியமாட்டார்கள். சிறிது தொலைவு சென்றால் பாலாறு வருகிறது. பாலாற்றங்கரையில் குதிரைகள் இருக்கின்றன'' என்றாள் வைரக்கண்ணி.

''உன் முன் ஏற்பாட்டைப் பாராட்டுகிறேன்' என்று கூறியவாறு, ஆதித்தன் வைரக்கண்ணியின் கரத்தைப் பிடித்துக் கொண்டு சுரங்க வாயில் வழியாக வெளியே வந்தான். மாளிகையினின்று ஒருவருமறியாது வெளியேறி, வைரக்கண்ணியுடன் சோழ நாடு செல்லத் திட்டமிட்ட ஆதித்தன் ஒரு கணம் திகைத்தான்.

வைரக்கண்ணி ஆதித்தன் கரங்களை அழுத்தமாகப் பிடித்துக் கொண்டு, ''ஐயோ, நமது திட்டமெல்லாம் முறியடிக்கப்படும் போல் தோன்றுகிறதே...'' என்று அதிர்ச்சியுடன் கூறினாள்.

''எதும் கவலைப்படாதே வைரக்கண்ணி'' என்றான் ஆதித்தன்.

தொலைவில் அரைவட்டமாக மேட்டின் சரிவில் அபராஜிதனும், அவனது தேர்ந்தெடுத்த வீரர்களும் நின்று கொண்டிருந்தனர்.

○



## 39. வருக, வருக, ஆதித்தா! திரும்பிப் போ, அபராஜிதா!

எதிரே வியூகம் போல் நின்று கொண்டிருந்த அபராஜிதனையும், அவனது வீரர்களையும் பார்த்து வைரக்கண்ணி திடுக்கிட்டாள்.

''நான் கவலைப்பட்டது போலவே ஆகிவிட்டது'' என்று பயம் நிறைந்த குரலில் சொன்னாள் வைரக்கண்ணி.

''பயப்படாதே வைரக்கண்ணி!'' எனறான் ஆதித்தன். பிறகு உடனே, ''இல்லை, இல்லை... பல்லவ இளவரசி... உனக்குத்தான் பயம் என்பதே கிடையாது என்று கேள்விப் பட்டேனே...'' என்றான் ஆதித்தன்.

''என்னைப் பற்றிய கவலையில்லை. உங்களைப் பற்றித் தான்'' வைரக்கண்ணி.

அதற்குள் அபராஜிதன் குரல் கொடுத்தார்.

''ஆதித்தா! வருக! வருக! உன் வரவு நல்வரவாகுக.'' என்று மெல்ல நடந்தவாறு வரவேற்பு கூறினார்.

வைரக்கண்ணி ஆதித்தன் கரத்தை மேலும் சற்று அழுத்தமாகப் பிடித்துக் கொண்டாள்.

''வருக, வருக பல்லவ அரசரே!'' என்று ஆதித்தன் முகத்தில் புன்முறுவலை வரவழைத்துக் கொண்டு அழைத்தான்.

''ஆதித்தா! நீ வருவது தெரிந்திருந்தால் உனக்குச் சிறப்பான வரவேற்பு அளித்திருப்பேனே?'' என்றான் அபராஜிதன். அவனுடைய ஆட்கள் அடிமேல் அடி வைத்து நகர்ந்து முன்னேறி வருவதையும் ஆதித்தன் கவனிக்கத் தவறவில்லை.

''அவர்கள் முன்னேறி வருகிறார்கள்... நாம் மீண்டும், வந்த வழியே திரும்பிவிடலாமா?'' என்று பதறினாள் வைரக்கண்ணி. மெல்லிய குரலில் 'உச்' என்று மட்டும் குரல் கொடுத்த ஆதித்தன், அபராஜிதனை நோக்கி, ''என்?



01 09 2

இப்போதுகூட தாமதமாகிவிடவில்லையே! வரவேற்பை அளிக்கலாமே. பட்டத்து யானையை அழைத்து வாருங்கள். பரிசுகளுடன் கொடி பிடித்த வீரர்களை அழைத்து வந்து நிறுத்துங்கள். எக்காளமும் முரசும் முழங்கட்டும். பல்லவர்களுடைய சிறப்பான வாத்தியமான சமுத்திர கோஷம் எங்கே? ஆடும் மகளிர் நர்த்தனமாடட்டும். சோழப் பெருநாட்டு இளவரசரை வரவேற்கத் தக்க ஏற்பாடுகளைச் செய்யுங்கள். நான் வேண்டுமானால், மீண்டும் திரும்பி மாளிகைக்குள் செல்லட்டுமா?'' என்றான் ஒருவிதச் சிரிப்பை உதிர்த்து.

அபராஜிதன் முகம் சிவந்திருக்க வேண்டும். ''ஆகா, மீண்டும் சுரங்க வழியாக மாளிகைக்குள் செல்வதா? அடடா அந்தச் சிரமமே வேண்டாம். வைரக்கண்ணி மட்டும் மீண்டும் அந்த மாளிகைக்குள் செல்லட்டும். உனக்குத்தான் வரவேற்பு. அவளுக்கு எதற்கு?'' என்றார் அபராஜிதன்.

''எங்களிருவருக்கும் சேர்த்தே வரவேற்பு கொடுக்கலாம்'' என்று ஆதித்தன் கூறியதைக் கேட்டு சினமடைந்தார் அபராஜிதன்.

''ஆதித்தா! அவள் கரத்தை விட்டுவிடு'' என்ற குரலில் சீற்றம் மிகுந்திருந்தது.

''அவள் மாளிகையில் தங்கினேன். அவள் எனக்கு வெளியே செல்ல வழி காட்டினாள். என்னுடன் அவள் வருகிறாள். நான் ஏன் அவள் கரத்தை விட வேண்டும்?'' ஆதித்தன் அபராஜிதன் குரலுக்குச் சளைக்கவில்லை.

''அவள் பல்லவ இளவரசி'' என்றார் அபராஜிதன்.

''ஆ! இப்போதாவது அதை உணர்ந்து கொண்டாயே'' என்றான் ஆதித்தன். ''என்ன சொல்கிறாய், நீ? புரியுமாறு சொல்லு'' அபராஜிதன் கர்ஜித்தார்.

''புரியும்படிச் சொல்ல வேண்டுமானால், நான் வைரக்கண்ணியை பல்லவ நாட்டு அரசியே என்றழைத்திருக்க வேண்டும்'' என்று ஆதித்தன் கூறியவுடன், ''ஆகா! அத்தகைய பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லையே என்னை மணந்து கொள்ளுமாறு இன்று கூட வற்புறுத்தினேன். வைரக்கண்ணி சம்மதிக்கவில்லை. அவள் மனம் மாறவில்லை'' என்று குரலைத் தாழ்த்திக் கொண்டு கூறினான்.

''வைரக்கண்ணி சம்மதித்து விட்டாள்'' என்றான் ஆதித்தன்.

''என்ன?''



''அவள் சோழ நாட்டு இளவரசியாவதற்குச் சம்மதித்து விட்டாள். அவள் பல்லவ அரசியாக முடியாது. அபராஜிதா! முன்பே உன்னை மணந்து பட்டத்தரசியாக விளங்குபவள் வேறொருத்தியிருக்கிறாள். வைரக்கண்ணியை நீ உன் ஆசைநாயகியாக வைத்துக் கொள்ள முடியாது. அவள் உரிமை உடையவள்'' என்றான்.

''தெரியும்'' - அபராஜிதன் முழங்கினார். தொடர்ந்து, ''இந்த நாட்டுக்குரியவளை நீ தொட்டுப் பேசுவது, அவள் கரத்தைப் பிடிப்பது, சுரங்க வழியாக கள்ளன்போல் வருவது எனக்குச் சம்மதமில்லை'' என்றான்.

ஆதித்தன் பெரிதாக நகைத்தான். ''அபராஜிதா! நீ என்ன சொல்கிறாய்? வைரக்கண்ணி என்மீது உயிரையே வைத்திருக்கிறாள். அவள் என்னுடன் சோழ நாட்டிற்கு வருகிறாள். இருள் நிறைந்த சுரங்கப்பாதை வழியை அவள் காட்டி என் கரத்தைப் பிடித்து அழைத்து வந்தாள். இருளிலும், காற்றோட்டமில்லாத நிலையிலும் அவள் எனக்கு வழிகாட்டினாள்'' என்றான்.

''இருளில் ஒரு பருவ மங்கையின் கரத்தைத் தொடுவது இளவரசன் செய்யக்கூடிய செயலா?'' அபராஜிதன் குத்திக் காட்டுவது போல் பேசினான்.

''அவள் சம்மதத்துடன்தான் செய்தேன். இன்னும் இருளும், தனிமையும் ஒன்று சேர இருக்கும்போது அழகிய இளமங்கை அருகில் இருக்கும்போது தர்மோபதேசம் கேட்க உன்னைத் தேடினேன். நீ கிடைக்கவில்லை. மாளிகை முழுவதும் என்னைத் தேடிவிட்டுக் கோபத்துடன் சென்றுவிட்டாய்.''

''நீ எங்கே இருந்தாய்?''

''அவ்வளவு நேரமும் நிலவறையில் இருந்தேன். நிலவறை 'குளுகுளு'வென்றிருந்தது. பல்லவக் கட்டடக் கலையை நான் பாராட்டாமலிருக்க முடியாது.''

''அந்த ஓர் இடத்தை மட்டும் பார்த்துவிட்டுப் பல்லவக் கட்டடக் கலையைப் புகழ்கிறாயே! பல்லவ நாடு முழுவதையும் சுற்றி வந்து எங்கள் மூதாதையர் கட்டியுள்ள கோயில்களைக் கண்டால் பிரமித்து விடுவாய்.''

''பல்லவ நாடு முழுவதும் சுற்றிப் பார்த்துவிட்டேன். பிரமித்து விடவில்லை, பெருமூச்சு விட்டேன்.''

''நாடு முழுவதும் சுற்றினாயா? நான் அப்போதே சந்தேகப்பட்டேன். சோழ நாட்டினின்று இருவர் நமது நாட்டில் சுற்றியலைகிறார்கள் என்று ஒற்றர்கள் தெரிவித்தபோது நான் அலட்சியமாக இருந்துவிட்டேன்.''

''ஏன், தெரிந்திருந்தால் அப்போதே எனக்குப் பெரும் வரவேற்பு அளித்திருப்பாயோ?''

''ஆதித்தா! வாயை மூடு. பல்லவ சக்கரவர்த்தியிடம் பேசுவதாக மனத்தில் கொள். அப்போதே உன்னைக் காராக்கிரகத்தில் அடைந்திருப்பேன்.''

அபராஜிதன் இவ்வாறு கூறியதைக் கேட்டு ஆதித்தன் கேலியாக நகைத்தான்.

''நாங்கள் பல நாள்களாகச் சுற்றியலைகிறோம். காஞ்சிக் காராக்கிரகத்தில் அடைபடுவதற்காக நாங்கள் பல்லவ நாட்டில் அலையவில்லை. கயிலாயநாதர் கோயிலைப் பார்த்தேன். உன் நாடடின் சிறந்த நடனமணியைச் சந்தித்தேன். என் நாட்டிற்கு அவளை அழைத்துச் செல்கிறேன்'' என்றான்.

''சோழ நாட்டிற்கா! - ஆ ஆ'' என்று நகைத்த பல்லவன், ''வீண் கனவு காணாதே! உனக்குச் சுதந்தர உரிமையைக் கொடுத்தது என்னுடைய பிழையாயிற்று. இப்போதே உத்தரவிடுகிறேன். இன்று முதல் சோழ நாடு எனக்கு அடங்கிய நாடு. வழக்கம்போல் திரைப்பணத்தை அனுப்பி வர ஏற்பாடு செய்'' என்றான் கடுமையாக.

ஆதித்தன் கலகலவென்று நகைத்தான். அபராஜிதனைப் பார்க்காமல் வைரக்கண்ணியைப் பார்த்தவாறு, ''வைரக்கண்ணி! அபராஜிதன் சொல்வதைக் கேட்டாயா? சோழ நாடு இனி இவனுக்கு அடிமையாம்! பாவம். மனப்பால் குடிக்கிறான். பாண்டிய நாட்டவர்களிடமிருந்து இவனை மீட்டுக் கொடுத்தற்கு இவன் சொல்வதைப் பார்த்தாயா? பல்லவ நாட்டு அரசியாகத் திகழ்ந்திருக்க வேண்டிய நீ, சொல்லு நியாயத்தை'' என்று கூறவும், அபராஜிதன் சினம் தலைக்கு மேல் ஏறியது.

தனது வீரர்கள் முன்னிலையில் மரியாதைக் குறைவாக ஆதித்தன் பேசியதைக் கேட்டவுடன் தன் வாளை உருவி, ''ஆதித்தா! என்ன பேசுகிறாய்? எங்கே பேசுகிறாய் என்று புரியாமல் பேசிவிட்டாய். எனக்கு உள்ள ஆத்திரத்தில் உன் நாவை ஒரு கணத்தில் துண்டாடியிருப்பேன். ஆனால், நீ இப்போது நினைவுபடுத்தினாயே, அந்தப் போர்க்களச் சம்பவத்தை என்னால் மறக்க முடியவில்லை. உனது நாடு



கையகலச் சிற்றரசு. பல்லவர்களுக்கு அடங்கி, அடக்க ஒடுக்கமாய் வாழும் நாடு. பாண்டியர்கள் காவிரிக் கரையில் பெரும் படைகளுடன் வந்துவிட்டபோது நீ உதவினாய். நீயும் நானும் அப்போது நண்பர்கள். உன் வீரத்தையும், முன்னுக்கு வரக்கூடிய நிறைய ஆற்றல்கள் உன்னிடமிருந்ததையும் நான் அப்போதே உணர்ந்து, இனி கப்பங் கட்ட வேண்டாம் என்று உன் தந்தைக்குச் சோழ நாட்டை ஆளும் உரிமையைப் பரிசாக அளித்தேன். ஆதித்தா! நீ நடந்து கொள்ளும் முறையே சரியில்லை. எனவே எச்சரிக்கிறேன். ஆதித்தா! வைரக்கண்ணியை விட்டுவிடு. உன்னை இந்த எல்லையிலிருந்து காஞ்சி நகருக்குக் கோலாகலமாக அழைத்துச் செல்கிறேன். பட்டும், மணியும் பொன்னும் பரிசாக அளிக்கிறேன். இன்று இல்லாவிடினும் வைரக்கண்ணி நாளை என்னை மணக்க வேண்டியவள். அவளைத் தொட்ட குற்றத்திற்காக உன்னை மன்னித்துவிடுகிறேன். வா, என் அருகே வா, அவள் கரத்தை விட்டுவிட்டு வா - அவள் கரத்தை விட்டுவிட்டு வா'' என்றார்.

''அபராஜிதா! போ, திரும்பிப் போய்விடு. நான் சோழ நாட்டிற்கு வைரக்கண்ணியுடன் செல்கிறேன். எங்களை வாழ்த்தி வழியனுப்பிவிட்டு, காஞ்சி நோக்கித் திரும்பிச் சென்றுவிடு. நேரமாகிக் கொண்டே இருக்கிறது. எனக்காக வீரர்கள் காத்திருப்பார்கள்'' என்று அழுத்தம் திருத்தமாக கூறினான், ஆதித்தன்.

அபராஜிதன் ஹுங்காரம் செய்தார் ''என்ன சொன்னாய் ஆதித்தா? நீ என் நண்பன் என்ற மரியாதை முறையை மறந்துவிட்டேன் இந்தக் கணத்தோடு, திரும்பிப் போ என்று என்னைச் சொல்ல நீ யார்? ஆதித்தா! வைரக்கண்ணியை விட்டு நீ ஒதுங்கி நில்'' என்று கூறி தனது வீரர்களுக்குச் சைகை செய்தார்.

அபராஜிதனுடைய அந்தரங்க ஆதரவாளர்களான வீரர்கள், ஆதித்தனை நோக்கிப் பாய்ந்து வந்தார்கள், உருவிய வாளுடன்.

வைரக்கண்ணி 'ஆ'வென்றலறி ஆதித்தனை இறுக அணைத்துக் கொண்டாள்.

○

# 40. மயிலழகு! நீ உதவ வேண்டும்

மயிலழகு பல்லவ சக்கரவர்த்தியின் மாளிகையை நோக்கி விரைந்தாள். ஓட்டமும் நடையுமாகத்தான். சோழ நாட்டிலிருந்து வந்த அமுதன் தப்பிச் செல்லத் தான் காரணமாக இருந்திருக்கிறோமே என்ற பயமாக உருவெடுத்தது.

கையிலிருந்த அடையாள மோதிரத்தை அவ்வளவு எளிதில் அவன் எப்படி எடுத்திருப்பான் என்பது அவளுக்குப் புரியவில்லை. ஓடிக் கொண்டே யோசித்தாள். பைத்தியக் காரத்தனமான மோகத் துடிப்பால் நாம் வசமிழந்து விட்டோம். வசமிழந்தது இருக்கட்டும்... அடையாள மோதிரத்தை இழந்து விட்டோமே! அரசரிடம் என்ன மறுமொழி கூறப் போகிறோம்? அமுதனை அழைத்து வருவதாக உறுதி கூறி வந்தோம்...

ஆ! என்ன தவறு செய்துவிட்டோம். மாபெரும் தவறு செய்து விட்டோம். அரசர் முகத்தை எப்படிப் பார்க்கப் போகிறோம். என் பேச்சை அவர் நம்புவாரா? எனக்குத் தண்டனையளித்து விட்டால்...'

மயிலழகு, மாளிகையை அடையும்போது வழக்கத்திற்கு மாறான பரபரப்பு அங்கு நிலவியது. வீரர்கள் அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தனர். மயிலழகைப் பார்த்துச் சிறிது புன்முறுவல் புரிந்து செல்பவர்கள் கூட அவளைக் கவனிக் காதவர்கள் போல் விரைந்து சென்று கொண்டிருந்தனர். அவர்கள் முகத்தில் ஒருவிதக் கவலை இருப்பதைக் கண்டாள் மயிலழகு.

மாளிகை மேன்மாடத்திற்குச் செல்லுமுன் அங்கிருந்த காவல் வீரனை நோக்கி, "சக்கரவர்த்திகளை நான் சந்திக்க முடியுமா?" என்று அவள் கேட்டபோது, "உங்களை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்" என்று அவன் மறுமொழி கூறியதும் மயிலழகு வியப்புற்றாள்.

"எனக்காகவா?" - அவள் பயம் அதிகமாகியது. 'சோழ நாட்டவனை நான் அழைத்து வருவேன் என்று எதிர் பார்த்திருக்கலாம்... நாம் என்ன சொல்லப் போகிறோம்?'



என்று தன்னையே கேட்டவாறு படிக்கட்டில் மெல்ல அடிமேல் அடிவைத்து ஏறினாள்.

மேல் மாடத்து நிலாக் கூடத்தில் விளக்கு எரியவில்லை. மஞ்சத்தில் சாய்ந்தவாறு அபராஜிதன் ஏதோ சிந்தித்த வாறிருப்பதை மயிலழகு உணர்ந்தாள்.

அபராஜிதன் திரும்பிப் பாராமலேயே, நடை ஓசையினின்று உணர்ந்து "வா, வா, மயிலழகு" என்றழைத்தது மயிலழகிற்கு வியப்பை அதிகமாக்கியதா, பயத்தை அறிவித்ததா என்று தெரியவில்லை.

மயிலழகு முகத்தை மூடிக்• கொண்டு விம்மினாள்.

"ஏன் அழுகிறாய், மயிலழகு? என்ன நேர்ந்தது? நான் தான் வருத்தப்பட வேண்டியவன். அப்படியிருக்க நீ ஏன் வேதனைப்படுகிறாய்?" என்று அபராஜிதன் கேட்டார். மயிலழகின் விம்மலொலி நிற்கவில்லை.

அபராஜிதனுக்குச் சிறிது எரிச்சலும் ஏற்பட்டது. "மயிலழகு! நிறுத்து அழுகையை. இரவு நடுநிசியில் இப்படி இங்கே வந்து ஏன் வீணாக அழுகிறாய்? நான் மன வேதனையிலிருக்கும் போது ஏதாவது பேசிப் பாடி, ஆடி என்னைக் களிப்பூட்டுவதற்கு மாறாகக் கண்ணீர் விடுவானேன்? உனது ராஜ பக்தியைப் புலப்படுத்திக் கொள்கிறாயா? உனது அந்தரங்க பக்தியை நன்றாக நானறிவேன்..." என்று அபராஜிதன் கூறிய போது மயிலழகு, திடுக்கிட்டாள், கண்ணீர் நின்றது.

அரசர் என்ன சொல்கிறார்? புரியவில்லையே, இரு பொருள் ததும்பப் பேசுகிறார்.

"அரசே! என்னைப் பொறுத்தருளுங்கள்" என்று கூறுவதற்குள் அவள் பட்டபாடு.

"எதற்காக இந்த வார்த்தையைக் கூறுகிறாய்? இப்போது பேசிக் கொண்டிருக்க நேரமில்லை. நான் சில முக்கிய முடிவு களை உடனே எடுத்தாக வேண்டும். உன்னை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்" என்று மறுபடியும் அபராஜிதன் கூறியதைக் கேட்டு மயிலழகு ஒன்றும் புரியாமல் அபராஜிதன் முகத்தை உற்று நோக்கினாள்.

"ஆமாம், மயிலழகு! உன்னை ஒரு மாபெரும் பணியிலே ஈடுபடுத்தப் போகிறேன்" என்று அபராஜிதன் கூறும்போது சொற்களில் கம்பீரம் இல்லை, சோர்வு இருந்தது.

மயிலழகிடமிருந்து மீண்டும் விம்மலொலி பிறந்தது. "சக்கரவர்த்தி அவர்களே! என்னிடம் ஒப்படைத்த முக்கியமான செயலில் நான் தவறிவிட்டேன் என்பதைக் குத்திக் காட்டுகிறீர்களா? என்னை மன்னித்துவிடுங்கள் சக்கரவர்த்தி! ஒரு கணத்தில் நான் தவறு செய்துவிட்டேன்" என்று விம்மியவாறு அபராஜிதன் கால்களைப் பிடித்துக் கொண்டாள்.

அபராஜிதன் அவள் தோள்களைப் பிடித்துத் தொட்டுத் தூக்கி, "என்ன தவறு செய்துவிட்டாய்?" என்று மெல்லக் கேட்டார்.

"சோழ நாட்டுப் புடைவை வியாபாரி தப்பிப் போவதற்கு எனது அசட்டுத்தனமான செயல் காரணம். தங்களிடம் அவரை அழைத்து வரமுடியவில்லையே என்று சொல்வதற்காகவே நான் ஓடோடி வந்திருக்கிறேன். பிரபோ! என்னை மன்னித்து விடுங்கள்" என்று கூறிக் கண்ணீர் விட்டாள்.

"சிறைச்சாலையினின்று சோழ நாட்டு ஒற்றனைத் தப்பிப் போகுமாறு செய்தது மாபெரும் தவறுதான்" என்றார் அபராஜிதன்.

"நான் நினைத்தது வேறு, நடந்தது வேறு" என்று நடந்த சம்பவத்தைக் கூற வாயெடுத்த மயிலழகை நோக்கி, "இப்போது பழைய கதையைப் பேசிப் பயன் இல்லை. புதிய கதை ஒன்றிருக்கிறது" என்று அபராஜிதன் கூறியவுடன் மயிலழகின் பயம் சற்றுக் குறைந்தது.

"மயிலழகு! சோழ நாட்டு ஒற்றன் அவ்வளவு எளிதில் தப்பிச் சென்றுவிட முடியுமா? அவனை உடனே நமது வீரர்கள் பிடித்துவிட்டனர். அங்கே மாளிகையில் தான் இருக்கிறான்" என்ற அபராஜிதனின் சொற்கள் உண்மையா பொய்யா என்றே மயிலழகுக்குப் புரியவில்லை.

"நான் தான் ஏமாந்துவிட்டேன் மயிலழகு, ஏமாந்து விட்டேன். ஆதித்தன் தப்பி ஓடிவிட்டான். வைரக் கண்ணியுடன் அவன் தப்பி ஓடிவிட்டான். நல்ல வேளையாக சோழ நாட்டு வாலிபனைத் தப்பி ஓடிவிடாமல் நமது வீரர்கள் பிடித்துவிட்டனர். இப்போது அவனை வைத்துக் கொண்டு ஆதித்தனை மீண்டும் பிடிக்க வேண்டும். எனக்குப் பெரும் தலைகுனிவைச் செய்துவிட்டான் சோழ இளவரசன். பல்லவ நாட்டிற்கு அடங்கி ஒடுங்கி இருந்தவனுக்கு வாழ்வளித்து நாட்டுத் தலைவனாக்கியதற்கு எனக்குப் பரிசளித்துவிட்டான். பல்லவ இளவரசியுடன் பறந்துவிட்டான். எனது நாட்டில்



மாறு வேடத்தில் வந்து எனக்கொரு தலைக்குனிவைச் செய்ததை என்னால் தாங்க முடியவில்லை மயிலழகு! ஆதித்தனை மீண்டும் பிடிக்க வேண்டும். இதே காஞ்சிக்குக் கொண்டு வர வேண்டும். நடுச்சந்தியிலே, காஞ்சி மக்கள் முன்னிலையிலே அவனுக்குத் தண்டனை தர வேண்டும்" என்று அபராஜிதன் மிகுந்த உணர்ச்சி வயப்பட்டுக் கூறினார்.

அவர் உடனே மௌனமானார். ஆதித்தன் தப்பிச் சென்ற அந்த நிகழ்ச்சி அவர் மனக்கண் முன்பு மறுபடியும் நிழலாடியது.

வைரக்கண்ணியின் மாளிகையைச் சோதனை போட்டு, ஆதித்தன் அங்கு இல்லை என்ற முடிவோடு பகலில் அபராஜிதன் திரும்பிச் சென்றாலும் அவருக்கென்னவோ சந்தேகம். ஆதித்தன் அந்த மாளிகையில்தான் இருப்பான் என்று நீண்ட நேரம் சிந்தித்தார். பல அதிகாரிகளைக் கலந்தாலோசித்தார். பிறகு நிதானமான முடிவுக்கு வந்தார்.

தேர்ந்தெடுத்த சில வீரர்களுடன், வைரக்கண்ணி மாளிகைக்கு வெளியே சற்றுத் தொலைவில் காத்திருந்தார். அபராஜிதன் நினைத்தபடியே நடந்தது. மாளிகையின் சுரங்கப்பாதை வழியே ஆதித்தனும், வைரக்கண்ணியும் வந்தனர்.

அப்போதுகூட ஆதித்தனைச் சிறையில் அடைக்கும் எண்ணம் அபராஜிதனுக்கு இல்லை. சொற்கள் கடுமையாக வீசப்பட்டன. கடைசியாக வீரர்களை ஏவினார். வீரர்கள் ஆதித்தன் மீது பாயத் தொடங்கிய அந்தக் கணம் -

ஆதித்தனிடம் வாள் இல்லை. ஆதித்தன் ஒரு கணம் திகைத்தான்.

"அபராஜிதா! வாளற்றவனோடு போர் புரிய இவ்வளவு வீரர்களா?" என்று ஆதித்தன் கர்ஜித்தான்.

அவன் கர்ஜனையில் ஒரு கணம் திகைத்த அபராஜிதனும் அவனுடைய வீரர்களும் இயங்காமல் இருந்தபோது, ஆதித்தன் அருகே இருந்த வீரன் மீது பாய்ந்து அவன் கரத்திலிருந்த வாளைப் பற்றினான். அவ்வளவுதான்.

வாள் சுழன்றது. திகிரிபோல் சுழன்றது. சுழன்று வரும் பேய்க்காற்றைப் போல் சுழன்றது. எதிர்ப்பட்ட வீரர்கள் கை முறிந்தன. துண்டமாயினர். மின்னலென நிகழ்ந்துவிட்ட அந்தச் சம்பவங்கண்டு அபராஜிதன் பெரிதும் அதிர்ந்து போனார். பின்னோக்கி நகர்ந்தார். மற்ற வீரர்கள் புறமுதுகிட்டனர்.

நிலவொளியில், மண்வெளியில் உயிரற்ற சடலங்கள் ரத்தம் தோய்ந்து கிடந்தன. சிலர் தலை இழந்தனர். தலையிழந்த முண்டம் சிலகணம் துடித்தது.

ஆதித்தன் வாள் மீண்டும் சுழன்றது... அபராஜிதனும் எஞ்சி இருந்த வீரர்களும் அங்கிருந்து ஓடினர்.

ஆதித்தன் வைரக்கண்ணியை ஒரு கரத்தில் பிடித்துக் கொண்டு குதிரை இருந்த இடத்திற்கு ஓடினான்.

வைரக்கண்ணியைக் குதிரையில் ஏற்றித் தன் முன் அமரவைத்தான். குதிரை பறந்தது.

ரத்தம் தோய்ந்த அந்த வாளை அங்கேயே வீசிவிட்டுக் குதிரையைத் தட்டிவிட்டான். எல்லாம் கனவில் நடப்பது போல் வைரக்கண்ணி உணர்ந்தாள். ஆதித்தன் ஏதும் பேச வில்லை. அவனது ஒரு கரம் பல்லவ இளவரசியை அணைத்திருந்தது. தேவலோகப் புரவி போல் அவர்களைச் சுமந்த அந்த வெண்குதிரை பறந்தது.

அபராஜிதன் நினைத்துப் பார்த்தார். அவர் உடல் ஒரு கணம் நடுங்கியது. உடல் நடுக்கத்தை மயிலழகு பார்த்து விட்டாளோ என்று ஓரக்கண்ணால் நோக்கினார். மயிலழகு உடல் பயத்தால் நடுங்க, அரசர் என்ன சொல்லப் போகிறாரோ என்றறியும் நோக்குடன் நின்று கொண்டிருந்தாள்.

''மயிலழகு!'' என்று அபராஜிதன் அழைத்தார்.

''சக்கரவர்த்தி'' என்று மெல்லக் குரல் கொடுத்தாள் மயிலழகு.

''இந்த நிலையில் உன்னிடமிருந்துதான் பேருதவியை எதிர்பார்க்கிறேன்'' என்றார் அபராஜிதன்.

''கட்டளையிடுங்கள் பிரபோ!''

''ஆதித்தன் திட்டமிட்டுச் செய்துவிட்டான். பல்லவ நாட்டில் வந்து மாறுவேடத்தில் உலவியிருக்கிறான். மீன்விழியைச் சந்தித்திருக்கிறான். உன்னையும் சந்தித்திருக்கிறான். தெரியாமல் போய்விட்டது'' என்று கூறி நிறுத்தினார்.

''நானும் சற்று மயங்கியது உண்மைதான். ஆனால் மயக்கம் தெளிந்துவிட்டது'' என்று மெல்லக் கூறினாள் மயிலழகு.

''மயிலழகு! பெரிய பொறுப்பை உன்னிடம் தரப் போகிறேன்.''



''உடலும் உயிரும் பல்லவ நாட்டிற்கு அளிக்கச் சித்தமாயிருக்கிறேன்.''

''உடல், உயிர் வேண்டாம், உன் மதி இருந்தால் போதும் மயிலழகு! நான் சோழர்களை இப்படியே விட்டுவிடப் போவதில்லை. பல்லவ நாட்டிற்கு பெரிய அவமானத்தை விளைவித்துவிட்டான். நண்பனாகக் கருதினேன். பெரும் துரோகி. சோழ நாட்டை நசுக்கி - அப்படியொரு நாடு இருந்ததாகக்கூட எந்தக் காலத்திலும் நினைக்காதவாறு செய்துவிடப் போகிறேன். அதற்கேற்ப நல்லவேளையாக கொங்கு நாட்டின் மீது படையெடுத்துச் செல்லப் படைகளைத் திரட்டியுள்ளேன். இன்னும் நான்கு நாள்களுக்குள் அந்தப் படை பலம் முழுமையும் சேகரித்து தெற்கே படையெடுத்துச் செல்லப் போகிறேன். படை வீரர்களுடன் நீயும் வரவேண்டும்'' என்று கூறி அபராஜிதன் நிறுத்தினார்.

''நானா...?'' வியப்புடன் மயிலழகு கேட்டாள்.

''ஆமாம். நீ தான். நடனமாட அழைக்கவில்லை; நாடகமாட அழைக்கிறேன்'' அபராஜிதன் கூறியபோது மயிலழகு புரியாமல் திகைத்தாள்.

''சோழ இளவரசருடைய எண்ணமே என்னைத் தஞ்சைக்கு அழைத்துச் செல்ல வேண்டுமென்பது. சோழ நாட்டில் நாட்டியக் கலையை வளரவிட வேண்டுமாம்'' என்று மயிலழகு கூறினாள்.

''ஆமாம், ஆதித்தன் எண்ணத்தை நிறைவேற்றுவோம்'' என்றார் அபராஜிதன்.

புரியாமல் விழித்தாள் மயிலழகு.

''மயிலழகு! தஞ்சையைத் தாக்கப் பெரும் படைகளுடன் புறப்படுகிறோம். நீயும் உடன் வருகிறாய். படைகள் தஞ்சையை நெருங்குமுன், நீ மட்டும் தனியே தஞ்சையை அடைய வேண்டும். காஞ்சியினின்று தப்பி ஓடி வருவதாக நடிக்க வேண்டும். ஆதித்தனைச் சந்திக்க வேண்டும். உன்னைக் கண்டவுடன் ஆதித்தன் மதிமயங்கி விடுவான். பெண் பித்துப் பிடித்த அவன் உனக்கொரு வீடு தருவான். உன்னைச் சந்திப்பான். அவன் தங்குமிடம், போன்ற ரகசிய வழிகளை அறிந்து கொள். எனது படைகள் நெருங்கி வருகின்றன என்பதை அவன் அறிவான். பல்லாயிரக்கணக்கான படை வீரர்களை அவன் எதிர்பார்க்க மாட்டான். கோட்டைக்குள் ஒளிந்து கொள்வான். அப்போதுதான் உன் உதவி தேவைப்படும். பல்லவப்படை வீரர்கள் மண்ணியாற்றங் கரையில்

தங்கியிருப்பர். தஞ்சையினின்று நீ ஓடி வந்து உளவு கூறவேண்டும். உன்னால் பெரும் உதவி நிச்சயம் கிடைக்கப் போகிறது... செய்வாயா, மயிலழகு?'' என்று அபராஜிதன் கேட்டார்.

''ஆகா! காத்திருக்கிறேன்'' என்றாள் மயிலழகு.

''மிகக் கவனமாகச் செயல்பட வேண்டும்....'' என்றார் அபராஜிதன்.

''சரி'' என்பதன் அடையாளமாகத் தலையசைத்தாள் மயிலழகு. ஏதோ கூற வாயெடுத்தாள்.

''சக்கரவர்த்தி அவர்களே! ஒரே ஒரு வேண்டுகோள், அதை மட்டும் நிறைவேற்றுங்கள்'' என்று மிகவும் பயத்துடன் கேட்டாள்.

''நீ என்ன கேட்கப் போகிறாய் என்பது எனக்குத் தெரியும். அந்தச் சோழநாட்டு இளைஞனை உடனே நான் விடுவிக்க வேண்டும் என்பதுதானே?'' என்று அபராஜிதன் கேட்டவுடன் மயிலழகு வியப்படைத்தாள்.

''அந்த வாலிபனிடம் நீ உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டாய் என்பதை நான் அறிந்து கொண்டேன். அவனை விடுதலை செய்வதோடல்லாமல், உன்னுடன் அவனை அனுப்புகிறேன். தஞ்சையில் அவனைக் கொண்டே நீ செயல் பட வேண்டும். அப்போதுதான் திட்டம் நாம் நினைத்தபடி நிறைவேறும்'' என்றார்.

மயிலழகு உடல் சிலிர்த்தது. அப்போதே அமுதனைச் சந்தித்துத் தஞ்சையை நோக்கி ஓடிவிட வேண்டும் என்று துடிப்பு ஏற்பட்டது.

○



## 41. நான் தவறு செய்துவிட்டேனா?

பெண்ணையாற்றங்கரையை விட்டு, பட்டர் மனைவியும், மீன்விழியும், மற்றவர்களும் மட்டும் தஞ்சையை நோக்கிப் புறப்பட்டனர்.

விக்கியண்ணனிடம் மீன்விழி விடைபெற்றுக் கொண்டாள்.

''நீங்கள் இங்கேயே தங்கியிருக்கப் போகிறீர்களா? பெண்ணையாற்றங்கரையிலேயே போர் நடக்கும் என்று நினைக்கிறீர்களா?'' என்று மீன்விழி கேட்டாள்.

''போர் இங்கே நடைபெறும் என்பதற்காக நான் இங்கே தங்கவில்லை. இளவரசர் ஆதித்தனின் வருகையை எதிர் நோக்கியிருக்கிறேன். அவர் பல்லவ இளவரசியுடன் வருவார். அவரை இங்கேயே வரவேற்க வேண்டும்'' என்றான் விக்கியண்ணன்.

''இளவரசியுடன் வருவது அவ்வளவு உறுதியா?'' மீன்விழி கேட்டாள். அவள் உள்ளத்தில் அப்பொழுது எழுந்தது திகைப்பா பொறாமையா என்று அவளுக்கே புரியவில்லை.

அவள் ஏன் பொறாமைப்படவேண்டும்? ஆம்; அவள் உள்மனம் கூறியது. சோழ இளவரசரை வைரக்கண்ணி அடைவதில்தான் அவளுக்குச் சிறிது பொறாமை உணர்ச்சி இருந்தது.

சோழ இளவரசர் பல்லவ நாட்டிற்கு இணையாக கோயில்களைச் சிற்பக் கலைச் சிறப்புடன் கட்டட்டும். நடனக்கலையை வளர்க்கட்டும். வைரக்கண்ணி மீது ஏன் ஆசை வைக்க வேண்டும்? அது அவளுக்குப் புரியவில்லை. புரியாததால் மனத்தில் ஒருவித வேற்றுமை உணர்ச்சி. அதன் பெயர் பொறாமை என்றும் வைத்துக் கொள்ளலாம்.

மீன்விழி கூறியதைச் சரியாகக் காதில் வாங்கிக் கொள்ளாமல், தொலைவிலுள்ள சாலையை நோக்கிக் கொண்டிருந்த விக்கியண்ணன், ''என்ன கேட்டாய் மீன்விழி?'' என்றான்.

''நீங்கள் முதன் முதல் சத்திரத்திற்கு வந்தீர்களே நினைவிருக்கிறதா?'' என்று கேட்டாள் மீன்விழி.

பேச்சைத் தொடங்கிவிட்டால் நேரம் அதிகமாகப் போகிறதே என்ற கவலை விக்கியண்ணனுக்கு. அதேசமயம் மீன்விழியுடன் பேச வேண்டும் போலும் தோன்றியது.

''ஆகா, நன்றாக நினைவிருக்கிறது. ஒரு கவளம் சோற்றுக்குப் பறந்து கொண்டு பசியோடு வந்தோம் நாங்கள்'' என்றான் விக்கியண்ணன்.

அப்போது நீங்கள் சோழ நாட்டவர்கள் என்பது எனக்குத் தெரியாது. அவர் இளவரசர் என்பதும் நீங்கள் அவருடைய நண்பர் என்பதும் தெரியாது, இல்லையா?''

''ஆமாம், உனக்குத் தெரியாது. ஒவ்வொன்றாகப் புரிய வைக்க விரும்பினோம். இப்போது கூட நான் யார் என்பது உனக்குத் தெரியாது'' என்று விக்கியண்ணன் கூறிச் சற்று நிறுத்தி மீன்விழியைப் பார்த்தான். நீராடிய பிறகு, கூந்தலைத் தோள் வரையில் சரியவிட்டுக் கொண்டு, மேனியிலே ஓரிரு நீர்த்துளிகளுடன் தேவதை போல் நிற்கும் மீன்விழியை மிக நெருக்கமாகப் பார்த்தான் விக்கியண்ணன்.

மீன்விழி மெல்லச் சிரித்தாள். ''நீங்கள் யார் என்று எனக்குத் தெரியும்'' என்றாள்.

விக்கியண்ணன் அவளை உற்று நோக்கினான். தன்னை அவள் இன்னார் எனத் தெரிந்து கொண்டுவிட்டாளா?

''சோழ நாட்டு இளவரசரின் உற்ற நண்பர் நீங்கள். அவரோடு ஒன்றாகப் படித்தவர். நல்ல கவிஞர்'' என்றாள்.

விக்கியண்ணன் பெரிதாக நகைத்தான். ''அவ்வளவுதான் நீ அறிந்தது. நான் கங்க நாட்டு இளவரசன்'' என்று கூறி மீன்விழியின் முகத்தை உற்று நோக்கினான் மாறுதலை அறிய விரும்பி. மீன்விழியின் முகம் மாறியது. இவ்வளவு நேரம் இல்லாத ஒரு மரியாதை பிறந்தது. அவள் கை எடுத்துக் கும்பிட்டாள்.

''இளவரசர் அவர்களே! நான் தங்களிடம் மரியாதை குறைவாக ஏதும் நடந்து கொண்டிருந்தால் என்னைப் பொறுத்தருளுங்கள். நான் உங்களிடம் அதிக உரிமை எடுத்துக் கொண்டுவிட்டேன்'' என்றாள்.

''அதிக உரிமை எடுத்துக் கொண்டதை நான் பெரிதும் வரவேற்கிறேன். ஆனால் நெருப்புப் போன்ற உன்னிடம்



நெருங்கவே நான் அஞ்சினேன். உன் மன ஒளியில் நான் ஒன்று கலக்கத் துடித்தேன். உன் மனப்பெட்டகத்தைத் திறந்து அதில் உள்ள உன் எண்ணமெனும் மணிமுத்தைக் காண விரும்பினேன்...'' என்று விக்கியண்ணன் மேலும் கூறியபோது, மீன்விழி உணர்ச்சிவயப்பட்டாள்.

விக்கியண்ணன் எதிர்பாராத விதமாக அவன் கரத்தைத் தன் கரத்துடன் மீன்விழி பிணைத்துக் கொண்டாள்.

விக்கியண்ணன் ஒரு கணம் தன் நிலை இழந்தான். அவளை இழுத்துத் தன்னுடன் அணைத்துக் கொண்டான். பிறகு என்ன தோன்றியதோ, ''மீன்விழி! என்னை மன்னித்துவிடு. உன் சம்மதமில்லாமல் நான் உன்னைத் தழுவிவிட்டேன்'' என்று கூறிச் சற்று நகர்ந்து கொண்டான்.

''கங்க நாட்டு இளவரசர் அவர்களே! இதுவரையில் இந்தக் கணம் வரையில் நான் அந்நிய ஆடவருக்குத் தணலைப் போன்றுதானிருந்தேன். இதுவரை எந்த ஆண் மகனின் ஸ்பரிசமும் என்மேல் பட்டதில்லை. இளவரசர் அவர்களே! தங்களுடைய உயர்ந்த பண்பை நான் அறிந்தேன். உங்கள் கரம் பற்றியது நான்தான். நான் உங்கள் அடைக்கலம்'' என்று கூறும்போது மீன்விழியின் குரல் தழுதழுத்தது.

பட்டரின் மனைவி குரல் கொடுத்தாள். ''வண்டி புறப்படப் போகிறது. இன்னும் ஏன் தாமதப்படுத்துகிறாய் மீன்விழி?'' என்ற அவள் குரல் கேட்டு விக்கியண்ணன் சற்று நெருங்கி, ''மீன்விழி! தஞ்சைக்கு நான் விரைவில் திரும்புவேன். அப்போது சந்திக்கிறேன். நலமுடன் போய்வா'' என்றான்.

மீன்விழியின் விழிகளில் நீர் துளிர்த்தது. ''நான் தவறு செய்துவிட்டேனோ என்று அஞ்சுகிறேன்'' என்றாள் அவள்.

''ஏன் அப்படி நினைக்கிறாய்?'' பல்லவ நாட்டினின்று புறப்பட்டு வந்ததை நினைத்துக் கூறுகிறாயா?'' என்று கேட்டான்.

மீன்விழி தலையசைத்தாள். ''அப்படியில்லை. ஒரு சாதாரணக் குடிமகள் இளவரசரைக் காதலித்தது தவறில்லையா?''

''காதல் மனித குலத்தின் ஏற்றத்தாழ்வை அறியாது'' என்றான் விக்கியண்ணன்.

''அரச குடும்பத்தவர்களைச் சாதாரணப் பெண்கள் விரும்புவதன் பெயர் காதலா? நீங்கள் மனம் வைத்தால்,



01 09

யாரை வேண்டுமானாலும் அந்தப்புரத்திற்கு அழைத்து வரலாம். அதற்குப் பெயர் காதலா?'' என்று கேட்டாள் மீன்விழி.

''அரச குடும்பத்தவர்கள் என்றால் அவர்கள் அனைவரும் அயோக்கியர்களல்லர். விரும்பும் பெண்ணை அவர்கள் அடைய நினைப்பதில் இரண்டு விதம் உண்டு. தடையிருந்தால், எதிர்ப்பு தெரிவித்தால் அதை மீறி அவர்கள் அந்த மங்கையை அடைய நாலுவிதமான உபாயங்களையும் கைக்கொள்வதை அரச குலத்தவர்களின் கொடுந் தன்மை என்பார்கள். மற்றோர் அரசரின் மகளை அடையப் பலாத்காரத்தைப் பயன்படுத்தினால் அதன் பெயர் போர். சாதாரண மங்கையைத் தூக்கி வந்து விட்டால் அது அட்டூழியம். அப்படித்தானே?'' என்று விக்கியண்ணன் அவள் கன்னத்தைத் தட்டியவாறு கேட்டான்.

''சோழ இளவரசர் வைரக்கண்ணியை எடுத்து வருவதை என்னவென்று கூறுகிறீர்கள்?'' என்று மீன்விழி கேட்டாள்.

''போர்! போர்! மீன்விழி, பெரும் போர் ஏற்படப் போகிறது. அபராஜிதன் கையைக் கட்டிக் கொண்டு சும்மா இருக்க மாட்டான்'' என்றான் விக்கியண்ணன்.

''காஞ்சியிலேயே, இளவரசரைச் சிறைப்படுத்திவிட்டால் அவரை மீட்க நீங்கள் படையெடுத்துச் செல்வீர்களா?'' என்று மீன்விழி கேட்டாள்.

''ஒருகாலும் எங்கள் இளவரசர், அபராஜிதனிடம் சிக்கமாட்டார். அங்கு வேறுவிதமாக ஏதாவது நடந்துவிட்டால் செய்தி தெரிவிக்க அமுதன் வந்துவிடுவான்'' என்றான்.

மீன்விழி ஏதோ கேட்க வாயெடுத்தாள். அதற்குள் மீண்டும் பட்டரின் மனைவியின் குரல் மிக அருகில் கேட்டது.

''மீன்விழி! இன்னும் என்ன செய்து கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டவாறு, பட்டரின் மனைவி அந்த மறைவிடத்துக்கு வந்துவிட்டாள்.

விக்கியண்ணனின் அணைப்பில் இருந்த மீன்விழி மிகவும் பரபரப்புடன் விலகிக் கொள்வதைக் கண்டு நாணமுற்றவளாய் பட்டரின் மனைவி மறுபக்கம் திரும்பிக் கொண்டாள்.

''மீன்விழி! நேரமாகிறது. இன்னும் இரண்டு அல்லது மூன்று இடங்களில் நீங்கள் தங்கிச் செல்லுமாறு நேரலாம். தஞ்சைக்குப் போய்ச் சேர்ந்தவுடன் பட்டரின் வீட்டிலேயே தங்குங்கள்'' என்றான் விக்கியண்ணன்.



''நீங்கள்...'' என்று ஏதோ கூற வாயெடுத்தவளை நோக்கி, விக்கியண்ணன், ''நான் சோழ இளவரசருடன் தஞ்சைக்கு இரண்டு அல்லது மூன்று நாள்களில் வருவேன். தஞ்சையில் உன் இருப்பிடத்திற்கு வந்து சந்திக்கிறேன்'' என்று கூறி அவள் கரத்தை எடுத்து தன் இதழ்களில் பதிய வைத்து விடை கொடுத்து அனுப்பினான்.

வண்டி அசைந்தாடிச் சென்று கொண்டிருந்தது. மீன்விழி மௌனமாகவே வந்தாள். பட்டரின் மனைவி குறும்புச் சிரிப்புடன் அவளைப் பல குறுக்குக் கேள்விகள் கேட்டாள்.

விக்கியண்ணனிடம், அன்பு கொண்டிருப்பதை இதுவரையில் வெளியிடாமல் அழுத்தமாக இருந்ததைக் குறித்துக் குத்திக் கட்டினாள். மீன்விழி நாணமுற்றுத் தலைகுனிந்தவாறிருந்தாள்.

''பல்லவ நாட்டில், அரச குடும்பத்தவர்களிடம் மனத்தை இழக்காத நீ எவ்வாறு கங்க நாட்டு இளவரசரிடம் மனத்தைப் பறிகொடுத்தாய்?'' என்று பட்டரின் மனைவி கேட்டாள்.

மீன்விழி மெல்லப் புன்முறுவல் பூத்தாள். ''அம்மா! சொல்லப் போனால் நான் காதல் வயப்படவே இல்லை. எந்த ஆடவரையும் பார்க்கும்போது நான் மனத்தில் மாசின்றிப் பழகுவேன். என் உள்ளத்துள்ளே எரிந்து கொண்டிருக்கும் அக்னி எனக்கு வழிகாட்டி ஒளி கொடுக்கும். சோழ நாட்டிளவரசரிடங்கூட ஒரு பகல் நெருங்கிப் பழகினேன். அப்போதும் என் உள்ளம் சலனமடையவில்லை. ஆனால்... ஆனால்... ஏனோ இவரிடம் நான் என் கட்டுப்பாட்டைத் தளரவிட்டுவிட்டேன்'' என்றாள். முறுவல் மறைந்து, மழைக்கால மேகம் போல் கண்கள் பூரணமாகச் சூலுற்றன.

''சோழ இளவரசரிடம் மனத்தை இழந்ததும் ஒன்றுதான். கங்க நாட்டிளவரசரிடம் இழந்ததும் ஒன்றுதான்'' என்று பட்டரின் மனைவி கூறும்போது குரலில் ஏளனம் இருந்தது.

''என்ன சொல்கிறீர்கள் அம்மா?'' என்று மீன்விழி கேட்டாள்.

''சோழ இளவரசரும் முன்பே திருமணமானவர்தாம். கங்க நாட்டிளவரசரும் முன்பே கல்யாணமானவர்தாம். முன்பே ஒருத்தியைக் கைப்பிடித்த அவர்களுக்கு மீண்டும் ஒருத்தியைக் கைபிடிக்க எப்படித்தான் மனம் வருகிறதோ?'' என்றாள் பட்டரின் மனைவி. அவள் குரலில் மிகுந்த ஆத்திரமிருந்தது.


01 09

மீன்விழி அவள் முகத்தைக் கவலையுடன் பார்த்தாள். சிறிது நேரம் அந்த வண்டியில் மௌனம் நிலவியது. வண்டி குலுங்கிக் குலுங்கிச் சென்றது. வண்டியின் ஆட்டம் உடம்பைக் குலுக்கியது. மீன்விழியின் உள்ளமும் ஒருமுறை குலுங்கியது.

"அம்மா! நீங்கள் கூறுவது நிஜம்தானா?" - மீன்விழி மெல்லிய குரலில் கேட்டாள்.

"எதைக் கேட்கிறாய், மீன்விழி?"

"கங்க நாட்டிளவரசருக்கும் திருமணமாகிவிட்டதா?"

"ஆமாம்; உண்மைதான். சோழ நாட்டிளவரசரும், கங்க நாட்டிளவரசரும் திருமணமானவர்கள்தாம்" என்றாள் பட்டரின் மனைவி.

"நான் மாபெரும் தவறு செய்துவிட்டேன்" என்று கூறி மீன்விழி விம்மினாள்.

"இதில் தவறென்ன இருக்கிறது? ஆண்கள் இரண்டு தாரங்களை மணப்பது சகஜம்தானே? அதிலும் அரசர்கள் ஒன்றுக்கு மேற்பட்டவர்களை மணப்பது இயற்கைக்கு விரோதமில்லையே! ஆனால் சாதாரணக் குடிமகள் மீது, காதல் கொள்வது மிக அபூர்வம். அப்படி அரச பார்வை விழுவதும் மிக அபூர்வம். அப்படி அரச பார்வை விழுவதை மிகவும் பாக்கியம் செய்ததாகக் கருதுவார்கள். அதனால் நீ ஏன் வருத்தப்படுகிறாய் மீன்விழி? நீ முற்பிறவியில் புண்ணியம் செய்திருக்கிறாய். கங்க நாட்டு இளவரசரின் அபிமானத்தைப் பெற்றுவிட்டாய்" எனறு உற்சாகமூட்டும் குரலில் கூறினாள் பட்டரின் மனைவி.

"இல்லை, அம்மா, அப்படி இல்லை. நான் மற்றொரு பெண்ணுக்குத் துரோகம் செய்ய மாட்டேன்" என்று விம்மினாள்.

"இதில் துரோகம் என்ன இருக்கிறது? சோழ இளவரசர் மற்றோர் இளவரசியைக் கவர்ந்த வந்து மணந்து கொள்ளப் போகிறார். சோழ இளவரசரின் மனைவி அதற்கு மறுக்கப் போகிறாளா?" என்று சமாதானப்படுத்த முயன்றாள்.

எவ்வளவு கூறியும் மீன்விழி சமாதானமடையவில்லை. அவளிடமிருந்து குதூகலம் பறந்து போய்விட்டது. வண்டி மெல்ல மெல்ல ஆடி அசைந்து சென்று கொண்டிருந்தது.

"தந்தையிடம் தெரிவிக்காமல் வந்து விட்டோமே. பல்லவ நாட்டில் எந்தவிதச் சங்கடத்தை அடைந்தோம்? நமக்குப் பிடிக்காத செயல்கள் அப்படி என்னதான் நடந்து விட்டன? ஆயினும் நமக்கு அதிருப்தி ஏற்படக் காரணமென்ன?" என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள். நொந்து கொண்டாள் என்றும் சொல்லலாம்.

பகல் உணவுக்காக வண்டியைக் குளக்கரையில் நிறுத்தினார்கள். மீன்விழி ஆகாரம் ஏதும் எடுத்துக் கொள்ளவில்லை.

தன்னைக் காணாமல் தந்தை எவ்வாறு மனம் வருந்துவாரோ என்று எண்ணும்போது அவளுக்குத் துக்கம் துக்கமாக வந்தது. கோவென்று கதறி அழ வேண்டும் போலத் தோன்றியது.

வண்டி மீண்டும் புறப்பட்டது. சென்று கொண்டே இருந்தது. பின் நிலவுக் காலம். மூன் சாம இருளைப் பிளப்பது போல் வண்டி ஓசைப்படுத்திக் கொண்டு சென்றது. வண்டி மாடுகள் களைப்படையா வண்ணம் மீண்டும் ஒரு சத்திரத்திற்கருகே வண்டி நிறுத்தப்பட்டது. சத்திரத்துத் திண்ணையில் அனைவரும் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தனர்.

பின் நிலவுச் சந்திரன் மதுக்கிண்ணம் வடிவில் வானத்தே விளங்கினான். மீன்விழிக்கு உறக்கம் வரவில்லை.

மெல்ல எழுந்தாள். வண்டி வந்த வழியே திரும்பவும் நடந்தாள். பத்து நாள் என்ன பதினைந்து நாள்கள் ஆனாலும் காஞ்சி போய்ச் சேர்ந்துவிடலாம் என்ற துணிவு அவளுக்கு.

○

## 42. மீன்விழியின் நெஞ்சம்

மீன்விழியாளுக்கு உள்ளத்தில் மட்டுமில்லை. உடலிலும் மிக மிக வேகம். தான் மகத்தானதொரு தவறு செய்துவிட்டதாக நினைவில் எழுந்து அவளை உந்தியது. பல்லவ மன்னர் நமக்குச் சொந்த விஷயத்தில் என்ன தீங்கு செய்துவிட்டார்?

இதையேதான் அவள் முணுமுணுத்தாள். எப்படியும் அபராஜித வர்மன் போர் தொடுக்கப் போகிறார். பல்லவர்களின் பெரும் படை பலத்தின் எதிரே சோழர்கள் நிற்கப் போவதில்லை. பெரும் அழிவு உறுதி. இந்த நிலையில் தஞ்சைக்கு எதற்காக செல்ல வேண்டும்? மீன்விழியின் நடையில் வேகமிருந்தது.

மங்கிய நிலவொளியில் அவள் விரைந்தாள். மரங்களடர்ந்த சாலையில், மரக்கிளைகளின் இடுக்குகளின் வழியே மெல்லிய சந்திர ரேகை சாலையில் கோலம் போட்டுக் கொண்டிருந்தது. கிராமங்கள் உறங்கிக் கொண்டிருந்தன. அவள் அச்சமடைந்ததே கிடையாது. அவளுக்குத் துணிவு என்பது அவளது ரத்தத்துடன் கலந்தோடுவது.

நடக்கும்போது அவள் பலபல நினைத்துக் கொண்டாள். தந்தை எங்கே இருப்பார்? சிற்பப் பணிகளை நிறுத்திவிட்டுக் காஞ்சி வந்திருப்பார். இளஞ் சிற்பிகள் இனி என்ன செய்வார்கள்? சகோதரி மயிலழகு என்ன செய்து கொண்டிருப்பாள்? அவள் என்ன செய்தால்தான் எனக்கென்ன? அவள்தான் முதன் முதலில் சோழ நாட்டவர்களை நம்பியவள் - மீன்விழியின் நினைவுக் கயிறு நீண்டு கொண்டே சென்றது. படைகள் புறப்படும் முன்பு காஞ்சியை அடைந்துவிட்டால் மிகவும் உதவியாக இருக்கும்.

நடந்து கொண்டிருந்த மீன்விழிக்கு ஓர் உண்மை திடீரெனத் தோன்றியது. இப்படியே நாம் நடந்து சென்றால் பெண்ணை யாற்றங்கரையை அடைந்துவிடுவோம். பெண்ணையாற்றங் கரையில் அல்லவா விக்கியண்ணன் தங்கியிருக்கிறார்? ஐயோ என்ன இப்படி அசட்டுத்தனம் செய்துவிட்டோம் என்று நினைத்தவளுக்கு மேலே ஓர் அடி எடுத்து வைப்பது கடினமாகத் தோன்றியது. திரும்பிப் போகவும் முடியாது. முன்னேறவும் முடியாது. விக்கியண்ணனைச் சந்தித்து விட்டால்...? அவர் திகைப்புடன் ஏன் திரும்பிவிட்டாய் என்று என்னைக் கேட்டால்...



அவள் கால்கள் தள்ளாடின. இரவு தன் யாத்திரையை முடித்துக் கொள்ளும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. விடிவெள்ளியின் மினுமினுப்பு தோன்றியது. அஸ்தமனச் சந்திரனின் அடக்கமான உறக்க கீதம் அப்போது கேட்கத் தொடங்கியது. குளிர்ந்த காற்று உடலை வருடிச் சென்றது. அப்படியும் அவளுக்கு வியர்த்தது. மீன்விழி மெல்ல நடந்தாள். சோர்வு அவளைச் சூழ்ந்து கொண்டது. சிறிது விரைந்தோடிப் பார்க்கலாமா என்று எண்ணினாள். தலை சுற்றுவது போல் தோன்றியது. இனி ஓர் அடி கூட எடுத்து வைக்க முடியாத நிலை உருவாகியது. அப்படியே... அந்த இடத்திலேயே உட்கார்ந்துவிடலாமா என்று தோன்றியது. உறக்கம் கண்களை ஆக்ரமித்தது. ஒருவித மயக்கம். அவள் தள்ளாடினாள். ஐயோ, மீன்விழி நிலமங்கையின் அரவணைப்பில் சாய்கிறாளே! அவளைத் தாங்க வேறு யாருமில்லையா?

புலர்ந்த கதிரவனின் பொற்கதிர்கள் அவள் மேனியைத் தழுவுவதற்கு முன்பே, அந்தச் சாலையில் சிலர் வந்து கொண்டிருந்தனர். ஐந்து இளைஞர்களும் ஒரு முதியவரும் தலைமீது மூட்டையைச் சுமந்தவாறு நடந்து வந்து கொண்டிருந்தார்கள். அந்த இளங் காலையிலேயே அவர்கள் நடக்கத் தொடங்கிவிட்டனர். காலை வெயிலின் கடுமை பரவுவதற்கு முன்பே அருகே உள்ள சிற்றூரை அடைந்துவிட வேண்டும் என்பது அவர்கள் குறிக்கோள். அவர்கள் மெல்லிய குரலில் பாடிக் கொண்டே வந்தனர். சிலசமயம் முதியவர் ஏதோ கூற, இளைஞர்கள் அதைத் தொடர்ந்து கூறுவர். ஸம்ஸ்கிருத மொழியிலுள்ள அந்தச் சுலோகங்கள் உருவ அமைப்பின் விதிமுறையைத் தெரிவித்தன. அங்க இலட்சணங் களை விரிவாக எடுத்துக் கூறின. பஞ்ச பூதங்களை உதவிக்கு அழைத்து அருளுமாறு வேண்டின. குறிப்பாக சிற்பம் செதுக்கும் முன்பு சொல்லப்பட வேண்டிய அந்தச் சுலோகங்களை மனப்பாடம் செய்யவும், மறந்து போகாமலிருக்கவும், அந்த முதியவர் நாள்தோறும் காலையில், தனது சீடர்களான இளைஞர்களை அருகே உட்கார வைத்துக் கூறுவார். இன்று உட்கார நேரமில்லாததால், வழிநடையிலேயே பாடம் சொல்வதை முடித்துக் கொண்டார். அவர் பல்லவ நாட்டுத் தலைமைச் சிற்பி. மீன்விழி, மயிலழகு சகோதரிகளின் தந்தை.

பாதை ஓரமாக, பெண் ஒருத்தி மயங்கிக் கிடப்பதை இளஞ் சிற்பிகளுள் ஒருவன் கண்டுவிட்டான். பரபரப்புடன், மற்றவர்களிடம் சுட்டிக்காட்டி அருகே ஓடினான். அவள் அருகே நெருங்கியதும் அங்கே கிடப்பவள் மீன்விழி

கிளை நூலகர்
தூத்துக்குடி சிதம்பரநகர்

என்றறிந்ததும் அவன் வியப்பு அதிகமாகியது. உடன் அச்சமும் எழுந்தது.

"ஐயா, ஐயா, இங்கே வாருங்களேன். வந்து இங்கே பாருங்களேன்!" என்று பரபரப்புடன் கூவினான்.

சிற்பி, தன் மகளை நடுவழியில் அந்த நிலையில் காண்போம் என்று சற்றும் நினைக்கவில்லை.

"மீன்விழி, மகளே! நீயா இங்கே கிடக்கிறாய்? உனக்கு என்ன நேர்ந்தது?" என்று பரபரப்புடன் கூவியவாறு அவளைத் தன் மடியில் எடுத்துக் கிடத்திக் கொண்டார். இளஞ்சிற்பி ஒருவன் தண்ணீர் கொண்டுவந்து அவள் முகத்தில் தெளித்து மயக்கம் நீங்கி விழித்தெழச் செய்தான்.

மீன்விழி கண்விழித்துப் பார்த்தாள். மயங்கி விழுந்தது நினைவில் வரவில்லை. எங்கே படுத்திருக்கிறோம் என்பதும் அவளுக்குப் புரியவில்லை. அவள் மனத்திற்குள் பெரும் புயல் வீசிக் கொண்டிருந்தது. சப்த மேகங்களும் மோதிப் பேரொலி எழுப்பிக் கொண்டிருந்தன. அவள் விழிகள் நிலைகுத்தி நின்றன.

"குழந்தே, என்னைப் பார்..." என்று சிற்பி மீன்விழியின் கலைந்த கூந்தலைக் கோதிவிட்டார். அவள் பேசவில்லை. யார் வந்திருக்கிறார்கள், எங்கே இருக்கிறோம் என்றும் தெரியவில்லை.

"இங்கே, மரத்தடியில் எவ்வளவு நேரமிருப்பது? அங்கே வீடு ஏதாவது தென்படுகிறதா என்று பார்த்து வருகிறேன்" என்று இளஞ்சிற்பி ஒருவன் கூறிவிட்டு விரைந்தான்.

மீன்விழி மெல்ல எழுந்து உட்கார்ந்தாள். ஆனால் அவளால் பேச முடியவில்லை. சுற்றுச் சூழ்நிலையும் புரியவில்லை. சிற்பிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

"குழந்தாய்! என்னைத் தெரியவில்லையா? உனக்கு என்ன நேர்ந்துவிட்டது. ஒன்றும் பேசாமலிருக்கிறாயே! என்னை விட்டு விட்டு எங்கே வந்துவிட்டாய்?" என்று சோகம் ததும்பச் சிற்பி கேட்டார். மீன்விழி யாரோ புதியவரைப் பார்ப்பது போல் விழித்தாள்.

"அப்பாவை மறந்து விட்டாயா மீன்விழி?" என்று சிற்பி கண்ணீர் ததும்பக் கேட்டார்.

அப்பா - மீன்விழி திரும்பிப் பார்த்தாள். ஏதோ புரிவது போலிருந்தது. ஆனால் ஒன்றும் நினைவில் வரவில்லையே... மீன்விழி எழுந்தாள், நடந்தாள்.



அதற்குள் இளஞ்சிற்பி ஓடோடி வந்தான். கூப்பிடு தூரத்தில் கிராமமொன்று இருப்பதாகவும் அங்கு மருத்துவர் ஒருவர் இருப்பதாகவும் தெரிவித்தான்.

மீன்விழியை அனைவரும் மெல்ல அங்கே நடத்தி அழைத்துச் சென்றனர். நடப்பத்தில் அவளுக்கு எந்தவிதச் சிரமமும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் அவளுக்குச் சுற்றுச் சூழ்நிலை உணர்வுத் தெளிவு இல்லை.

திடீரென்று சிரித்தாள். "அரச. குலத்தவர்கள் என்றால் ஒன்றுக்கு மேற்பட்டவர்களை மணக்கலாமோ?" என்று திடீரென்று சிற்பியைப் பார்த்துக் கேட்டாள்.

"என்ன கேட்கிறாய் மீன்விழி?" என்று சிற்பி கேட்டார்.

"நான் யாரையும் மணந்து கொள்ளப் போவதில்லை. இப்படியே காஞ்சிபுரத்து நாவுக்கரசர் மடத்திற்குச் சென்றுவிடப் போகிறேன்" என்று கூறி மீன்விழி முகத்தை 'உம்'மென்று வைத்துக் கொண்டாள்.

"நாவுக்கரசர் மடத்தில் யாரம்மா இருக்கிறார்கள்?" என்று சிற்பி கேட்டார். அவருக்கு ஒன்றும் புரியவில்லை.

"என் தந்தை இருக்கிறார்" என்றாள் மீன்விழி.

சிற்பிக்குத் தூக்கிவாரிப் போட்டது. "குழந்தாய்! நான் இதோ இருக்கிறேனே... அங்கே போய் யாரைத் தேடப் போகிறாய்? என்னை உனக்குத் தெரியவில்லையா?" சிற்பி குரல் தழுதழுத்தது.

"யாரையா? நான் அந்தச் சோழ நாட்டவரைத் தேடப் போகிறேன். அவர் ஏன் என்னிடம் உண்மையை மறைத்தார்?" என்றாள் மீன்விழி.

சிற்பிக்கு ஒன்றுமே புரியவில்லை. இளஞ்சிற்பிகளோ மீன்விழிக்குப் பேயோ, பிசாசோ பிடித்துவிட்டதாக முடிவு செய்தனர். சிற்பியின் காதில் மட்டும் விழும்படி, "மருத்துவரிடம் உடனே அழைத்துச் செல்வோம். வீணே பேச்சுக் கொடுத்து நேரத்தை வீணாக்க வேண்டாம்" என்றனர்.

மருத்துவர் பரிசோதித்தார். நன்றாக உறங்கி எழுந்தால் சரியாகிவிடும் என்று கூறி, கிராமத்து வீடொன்றை அவர்களுக்கு ஏற்பாடு செய்து கொடுத்து, உறங்குவதற்கு மருந்தும் கொடுத்தார்.

திருமுனைப்பாடி நாட்டின் மிக முக்கியமான ஊர் அது. சிறு ஊராக இருந்தாலும் சுற்றிலும் வயல்களும், தோப்பும் சூழ இயற்கை எழில் கொஞ்சித் திகழ்ந்தது. பல்லவ நாட்டுச்

சிற்பி தங்கள் ஊருக்கு வந்திருக்கிறார் என்பதறிந்த ஊரின் முக்கியமானவர்கள் அங்கே கூடிவிட்டனர். தங்கள் ஊரில் சிவன் கோயில் ஒன்று கட்டித் தருமாறு அவர்கள் சிற்பியை வேண்டிக் கொண்டனர்.

சிற்பி சொன்னார்: ''கோயில் கட்டுவதற்குத் தக்க பாறைகள் வேண்டும். பாறைகள் எங்கே கிடைக்கும் என்று தேட வேண்டும். மேலும் என்னுடைய உள்ளம் எல்லாம் இப்போது பல திருக்கோயில்களைக் கண்டு தரிசனம் செய்வதில் இருக்கிறது. ஞானசம்பந்தர் பிறந்த ஊருக்குச் செல்ல வேண்டும். தில்லைச் சிற்றம்பலம் காண வேண்டும். திருநாகைக் காரோணம் செல்ல வேண்டும். பிறகுதான் சிற்பப் பணிகளைப் பற்றிய நினைவு. பல்லவர்களுக்கும் சோழர்களுக்கும் போர் மூண்டுவிடும் அபாயம் வேறு இருக்கிறது. போரின் முடிவு தெரிந்து நாட்டில் அமைதி நிலவிய பிறகு சிற்பப் ப்ணிகளைப் பற்றிப் பேச வேண்டும்'' என்றார்.

ஊர்ப் பெரியவர்கள் ஒருவரையொருவர் குறிப்பாகப் பார்த்துக் கொண்டனர். தங்களுக்கு இலேசாகத் தெரிந்த செய்தியை, சிற்பி ஊர்ஜிதம் செய்கிறார் என்பதைப்போல் இருந்தது அவர்கள் பார்வை.

''பெண்ணையாற்றங்கரையில் சோழ நாட்டு வீரர்கள் பாடி இறங்கியிருப்பதிலிருந்தே நாங்கள் யூகித்துக் கொண்டோம். ஏதோ நிகழப் போகிறதென்று'' என்று பெரியவர் ஒருவர் கூறினார்.

மற்றொருவர் மெல்லச் சிரித்தபடி கூறினார். ''பத்து இருபது வீரர்கள் இருப்பார்கள். இவர்கள் கடல் போன்ற பல்லவர் படையை எப்படி எதிர்க்கப் போகிறார்கள்?''

''அவர்கள் போர் புரியக் காத்திருக்கவில்லை. நேற்று நான் அங்கே சென்றிருந்தேன். அவர்கள் சோழ இளவரசர் வருவதற்காகக் காத்திருக்கிறார்கள்.''

''சோழ இளவரசரா? சோழ இளவரசர் ஆதித்தன் எப்போது இந்த வழியே சென்றார்?''

''சோழ இளவரசன் மாறுவேடத்தில் பல்லவ நாட்டில் சுற்றுப்பயணம் செய்திருக்கிறார். பல்லவ நாட்டு கலைச் செல்வங்களைக் கண்டு மகிழ்ந்திருக்கிறார். சோழ நாட்டிலும் கோயில்கள் பல கட்டத் திட்டமிட்டிருக்கிறார். பல்லவ மன்னர் இதை அறிந்து அவரைச் சிறைப்படுத்தத் திட்டமிட்டிருக்கிறார்.''

''கோயில்களைப் பார்த்து அதைப்போல் தனது நாட்டிலும் கோயில் கட்ட வேண்டும் என்ற ஆசை கொண்டதற்காக சிறைப்படுத்த எண்ணினாரா? வியப்பாக இருக்கிறதே!''



''ஆம்; அபராஜிதனும் அவரும் நண்பர்கள். ஒருவரைக் கண்டு மற்றவர் பொறாமைப்பட நியாயமில்லையே...?''

''நல்ல நட்பையும் மீறிவிட்டது பொறாமை! பெண் ஒருத்தி குறுக்கிட்டு விட்டாள்.''

''பெண்ணா?''

''ஆமாம், பல்லவ நாட்டின் உரிமையில் பங்கு கேட்கும் இளவரசி. அவள் மையலில் சோழ இளவரசன் ஆதித்தன் வீழ்ந்துவிட்டார். பல்லவ அரசரும் அவளையே அடைய எண்ணினார். ஏமாற்றம், பொறாமையாகிவிட்டது'' என்று கூறி நிறுத்தினார், அந்த ஊரில் விவரம் தெரிந்த பெரியவர்.

''பொறாமை என்றால் புகைச்சலுடன் நின்றுவிடும். சோழ இளவரசர் துணிந்து ஒரு காரியம் செய்துவிட்டார்'' என்று மற்றோர் இளைஞன் தொண்டையைக் கனைத்தான்.

''என்ன, என்ன?'' என்ற குரல் அனைவரிடமிருந்தும் எழுந்தது. ஒருவர் இப்போது முந்திக் கொண்டு, ''சோழ இளவரசர் வைரக்கண்ணியைக் கவர்ந்து கொண்டு வந்து விட்டாராம்'' என்றார்.

மீன்விழி திரும்பிப் பார்த்தாள். அவள் ஏதோ பேச எத்தனித்தாள். முடியவில்லை.

''இளவரசரை எதிர்பார்த்துத்தான் பெண்ணையாற்றங் கரையில் சோழ வீரர்கள் காத்திருக்கிறார்கள்'' என்றார் விவரம் அறிந்து வந்த ஒருவர்.

சிற்பி நிமிர்ந்து உட்கார்ந்தார். ''அப்படியென்றால் போர் நடக்கப் போவது உறுதி. அபராஜிதன் கையைக் கட்டிக் கொண்டா உட்கார்ந்திருப்பார்?'' என்று அவர் கூறும்போது, அப்போதே பல்லவப் படைகள் அங்கு வந்துவிட்டதைப் போல் பரபரப்புடன் பேசினார்.

மீன்விழி சிரித்தாள். அந்தச் சிரிப்பில் பயங்கரமிருந்தது.

''வைத்தியரய்யா! இவள் சிரிப்பதைப் பார்க்க எனக்கு பயமாக இருக்கிறது. உடனே மருந்து கொடுங்கள்'' என்றார் சிற்பி.

மருத்துவர் கொடுத்த மருந்தைக் குடித்த மீன்விழி சிறிது நேரத்தில் கண்ணயர்ந்தாள். சிற்பியும், சீடர்களும் அந்த வீட்டின் வெளித் திண்ணையிலமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

* * *

பெண்ணையாற்றங்கரையை இளவரசர் ஆதித்தனும் வைரக்கண்ணியும் வந்தடைந்தபோது விக்கிரமனும், மற்ற

வீரர்களும் ஆரவாரத்துடன் வாழ்க என்னும் கோஷத்துடனும் வரவேற்றனர்.

வைரக்கண்ணி களைப்பால் மிகவும் சோர்ந்து காணப் பட்டாள். முழு நாள் ஓய்வு அவளுக்குத் தேவைப்படும் போல் தோன்றியது.

"விக்கியண்ணா! இங்கே ஒரு கணம் கூடத் தாமதிக்க முடியாது. எந்தக் கணமும் பல்லவ வீரர்கள் நம்மைப் பின் தொடர்ந்து வரலாம்" என்று ஆதித்தன் பரபரப்புடன் கூறினான்.

"இன்று அவர்களை எதிர்பார்க்க முடியாது. அவர்கள் பலமில்லாமல் பின்தொடர மாட்டார்கள். இனி அடுத்த நடவடிக்கை போர் - போர் தான். அதனால் அமைதியாக இன்று நீங்களிருவரும் சத்திரத்தில் தங்கிவிட்டு நாளை புறப்படலாம். நான் தஞ்சைக்கு இப்போதே விரைந்து சென்று தக்க வரவேற்பிற்கு ஏற்பாடு செய்கிறேன்" என்றான் விக்கியண்ணன்.

"விக்கியண்ணா! தஞ்சையில் எந்தவிதக் குதூகலமான வரவேற்பிற்கும் ஏற்பாடு செய்ய வேண்டாம். இளவரசி வைரக்கண்ணியை நான் அழைத்து வருவதைப் பற்றி எனது தந்தையின் கருத்து எவ்வாறிருக்கும் என்று தெரியவில்லை" என்றான் ஆதித்தன்.

"கவலைப்பட வேண்டாம். அரசர் மிகுந்த மகிழ்ச்சி யடைவார்" என்றான் விக்கியண்ணன்.

"தன் இடத்தை மற்றொருத்தி பிடித்துக் கொண்டுவிட்டாளே என்று இளங்கோபிச்சி... சீற்றங்கொண்டால்?" என்று ஆதித்தன் கேட்டபோது விக்கியண்ணன் மறுமொழி கூறவில்லை.

சிறிது நேரம் கழித்து, "இளவரசே! நான் தஞ்சை சென்றவுடன் நேரில் இளவரசி அவர்களைச் சந்தித்துப் பக்குவமாக எடுத்துக் கூறுகிறேன். நீங்கள் வரும்போது அந்தப்புரத்தில் மகிழ்ச்சியான வரவேற்பு இருக்கும்" என்று ஆறுதல் கூறினான்.

வைரக்கண்ணிக்கு அந்தச் சத்திரம் சௌகரியமாக அமைய வில்லை. அதனால் அருகிலுள்ள சிற்றூருக்குச் சோழ வீரர்களும், விக்கியண்ணனும், ஆதித்தனும், வைரக்கண்ணியும் புறப் பட்டனர்.

திண்ணையில் அமர்ந்திருந்த சிற்பியும், அவரது சீடர்களும், புலிக்கொடி ஏந்திய வீரர்கள் அங்கே விரைந்து வருவதைக் கண்டு திகைத்து எழுந்தனர்.

○



## 43. மயக்கம் தீர்ந்தது.

அந்தச் சிறிய கிராமம் விழாக்கோலம் பூண்டது போல் காணப்பட்டது. தங்கள் கிராமத்திற்குச் சோழ நாட்டிளவரசர் வந்திருக்கிறார் என்பதில் மக்கள் பெருமகிழ்ச்சியடைந்தனர். அந்தக் கிராமம் சோழ நாட்டவர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருக்க வில்லை. பல்லவ நாட்டினருக்கு அவர்கள் திறைப்பணம் செலுத்தி வந்தனர். போர்க் காலங்களில் படை வீரர்களையும் அனுப்பி வைத்தனர். சமீப காலத்தில் போர் ஏதும் நிகழாததால் அவர்கள் யுத்தத்தைப் பற்றியே மறந்தனர். பயிர்த் தொழிலும், நெசவுத் தொழிலும் அந்தக் கிராமத்தவர்களின் முக்கியத் தொழில்கள்.

தங்கள் தறியிலிருந்து நெய்தெடுக்கப்பட்ட பட்டுப் புடைவை ஒன்றை நெசவுத் தொழிலாளி கொண்டு வந்தார். மாந்தோப்பிலிருந்து ஒரு கூடை மாம்பழங்களை விவசாயி ஒருவர் பணிவன்புடன் கொண்டு வந்தார்.

சிற்பியும், மீன்விழியும் ஒரு வீட்டிலும், இளவரசி வைரக் கண்ணியும், இளவரசரும் மற்றொரு வீட்டிலுமாகத் தங்கியிருந்தனர். விக்கியண்ணன் தஞ்சைக்குப் புறப்பட்டுப் போய்விட்டான்.

சிற்பி தங்கியிருக்கும் செய்தி அறிந்த ஆதித்தன் தானே நேரில் அவரைச் சந்திக்க விரும்பினான். சிற்பியை அவர் இருக்குமிடம் அழைத்து வருவதாக கிராம மக்கள் சொன்னதைக் கேட்கவில்லை. சிற்பியின் வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டினான் ஆதித்தன்.

சிற்பி மெல்லக் கதவைத் திறந்தார். அவருக்கு அடையாளம் தெரியவில்லை. தன்னைத் தேடி சோழ இளவரசர் வந்திருப்பார் என்ற நம்பிக்கை அவருக்கில்லை. மகள் மீன்விழி கண்விழித்து உடல் நலமுற்று முன் எப்போதையும் போல் குதூகலத்துடன் நடமாட வேண்டும் என்ற எண்ணம் ஒன்றே அவருக்கு இப்போது.

''யார்?'' - என்று கண்களை இடுக்கிக் கொண்டு பார்த்தார் சிற்பி.

''சிற்பி அவர்களே! என்னைத் தெரியவில்லையா?'' என்று ஆதித்தன் கேட்டான்.

கூடத்தில் படுத்திருந்த மீன்விழியின் செவிகளில் ஆதித்தன் குரல் கேட்டது. நொடியில் புரிந்து கொண்டுவிட்டாள். உடனே பரபரப்புடன் எழுந்து உடையைச் சரிசெய்து கொண்டு, ''வாருங்கள், வாருங்கள் இளவரசர் அவர்களே!'' என்று வரவேற்றாள். அவள் முகத்தில் பிரமிப்பும் பரபரப்பும் கலந்து மிளிர்ந்தன.

''உனக்காவது என்னை அடையாளம் தெரிந்ததே. அதுவரை பெருமகிழ்ச்சி'' என்றான் ஆதித்தன்.

''மறந்துபோவதற்கான சூழ்நிலையோ, காலமோ எதும் ஏற்பட்டுவிடவில்லையே'' என்று தான் பேசினாள். அவள் தலைகுனிந்து நின்றிருந்தாள்.

மிகவும் களைத்துக் காணப்பட்டாள். அங்கே பச்சிலைக் கொடிகள் சில கிடப்பதைக் கண்டான் ஆதித்தன்.

''மீன்விழி! உனக்கு என்ன நேர்ந்துவிட்டது?'' என்று ஆதித்தன் கேட்டான்.

மீன்விழியிடமிருந்து விம்மல் ஒலி எழுந்தது. சிற்பி புரிந்து கொண்டுவிட்டார்.

''ஆகா! சோழ இளவரசரா? வருக, வருக இளவரசே! உங்களை அடையாளம் கண்டு கொள்ளாமல் தான் நான் நிற்கவைத்தே பேசிவிட்டேன். அன்பு கூர்ந்து என்னை மன்னித்தருளுங்கள்'' என்றார்.

ஆதித்தன் பார்வை அப்போதும் மீன்விழியின் மீதே படர்ந்திருந்தது.

''விக்கியண்ணன் சற்று நேரம் முன்பு வரை இந்தக் கிராமத்தில்தான் இருந்தான். நீ இங்கே தங்கியிருப்பதை அவன் என்னிடம் சொல்லவில்லையே'' என்று ஆதித்தன் கேட்டான்.

மீன்விழிக்கு அழுகை பொங்கி வந்தது. தந்தையின் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

''என்ன நேர்ந்துவிட்டது மீன்விழி? நீ தஞ்சைக்குச் செல்லவில்லையா? நீ தஞ்சைக்குச் சென்றிருப்பதாக விக்கியண்ணன் கூறினானே? உன் சகோதரியும் காஞ்சியிலிருந்து



வந்து சேர வேண்டும். வந்துவிட்டால் என் முதல் போரின் வெற்றி உறுதியாகிவிடும்'' என்றான் ஆதித்தன்.

மீன்விழி சேலைத் தலைப்பால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

''நான் தஞ்சைக்குச் செல்லவில்லை'' என்றாள். அந்த ஒரு வார்த்தையைச் சொல்வதற்குள் அவள் பட்டபாடு!

சிற்பி இப்போது பேசினார். ''மீன்விழியை நான் நடுவழியிலேயே சந்திக்க முடியும் என்று நினைக்கவில்லை.''

காலையில் நடந்தவற்றையெல்லாம் விவரித்தார். மயங்கிக் கிடந்த மீன்விழியைக் கிராமத்தில் கொண்டு சேர்த்த சம்பவத்தைக் கூறினார்.

ஆதித்தன் பரபரப்புடன் கேட்டான்: ''தஞ்சைக்குச் செல்லாமல் நீ திரும்பக் காரணம் என்ன? பெரிய மாறுதல்கள் எல்லாம் நேர இருக்கும் இந்தச் சமயத்தில் நீ இப்படிச் செய்யலாமா?'' என்று கேட்டான். குரலில் கவலை இருந்தது.

''என் உள்ளுணர்வு என்னைக் காஞ்சிக்குச் செல்லுமாறு தூண்டிற்று'' என்றாள் மீன்விழி.

''அதற்குக் காரணம் என்ன? நீ செல்வதற்குள் காஞ்சியினின்று அபராஜிதன் புறப்பட்டுவிடுவான். அங்கே சென்று நீ என்ன செய்யப் போகிறாய்? உன் தந்தையைத் தஞ்சையிலிருக்கச் செய்துவிட்டு நீ காஞ்சி செல்லக் காரணமென்ன?'' என்று ஆதித்தன் கேட்டான்.

''எனக்கே தெரியவில்லை. காஞ்சிக்குச் செல்வேன் என்று சொல்ல முடியாது. என் மன அமைதிக்காக எந்த இடத்திற்குச் செல்வேன் என்றும் சொல்ல முடியாது'' என்றாள் மீன்விழி.

அங்கே சிறிது நேரம் மௌனம் நிலவியது. ''மீன்விழி! நான் உன்னை ஒன்று கேட்கட்டுமா?'' என்று ஆதித்தன் பேச்சைத் தொடங்கினான்.

''கேளுங்கள் இளவரசே! உங்களுக்கு இல்லாத உரிமையா?'' என்றாள் மீன்விழி. இப்போது குரலில் சற்றுக் கம்பீரம் பிறந்திருந்தது.

''நான் உன்னை முதன் முதலில் சந்தித்தது பற்றி நினைவிருக்கிறதா?''

''ஆகா! நன்றாக நினைவிருக்கிறது. நேற்றுத்தான் அதை மறுபடியும் நினைவுபடுத்திக் கொண்டேன். உங்கள் உயிர்



01 09 2

நண்பர் இதே கேள்வியைக் கேட்டார். சத்திரத்திற்கு இரவு வெகு நேரம் கழித்து வந்தீர்கள். மறுநாள் குதிரையுடன் பறந்தீர்கள். சிற்பிகளோடு சிற்பியாக சிற்பக்கூடத்தில் என்னைச் சந்தித்தீர்கள். எனக்கும் ஒருவித மயக்கம் ஏற்பட்டதென்பதை நான் ஒளிவு மறைவின்றி ஒப்புக் கொள்கிறேன். பல்லவ நாட்டில் இருக்க எனக்கு ஏனோ விருப்பமில்லை. சோழ நாட்டிற்கு என்னை அழைத்தீர்கள். சிற்பிகளையும் அழைத்து வருமாறு கேட்டுக் கொண்டீர்கள். நானும் சோழ நாட்டிற்கு வர ஒப்புக் கொண்டேன். என் தந்தையைப் பிரிந்து வர ஏன் சம்மதித்தேன் என்று எனக்கே இப்போதும் புரியவில்லை. பக்குவமடையாத மனச் செடியில் பூத்தமலர் அது. மாமல்லபுரத்திலிருந்து, உங்கள் சோழ நாட்டிற்குப் புறப்பட்டுவிட்டேன். உங்கள் நண்பர் மீது எனக்கு ஒருவித மயக்கம் ஏற்பட்டது. அதுவரை நீங்கள் சோழ நாட்டு இளவரசர் என்றோ, அவர் கங்க நாட்டு இளவரசர் என்றோ எனக்குத் தெரியாது. அறிந்தவுடன் பெருமகிழ்ச்சி ஏற்பட்டது. ஆனால் அந்த மகிழ்ச்சி நொடியில் சரிந்தது... உங்கள் நண்பர் கங்க நாட்டு இளவரசர் முன்பே மணமானவர் என்பதை அறிந்தேன். என் மனமயக்கம் அதி அற்புதமாகத் தீர்ந்தது. தெளிவு ஏற்பட்டது. அரச குலத்தவர் பல மகளிரை மணக்கலாம். ஆனால் அந்த இடத்திற்கு ஒரு சாதாரணக் குடிப்பெண், போட்டி போட்டு மற்றொரு பெண்ணின் இடத்தையும் பிடித்துக் கொள்ளக் கூடாது. உறுதியான இந்த முடிவு என் உள்ளத்தில் ஒருவிதத் தெளிவை ஏற்படுத்தியது. இரவோடு இரவாகப் புறப்பட்டு விட்டேன். நான் இப்போது மிக உறுதியான முடிவுடன், தெளிந்த மனநிலையுடன் இருக்கிறேன்.''

அழுத்தமான அவளுடைய பேச்சை ஆதித்தன் மௌனமாகக் கேட்டு வந்தான்.

''மீன்விழி! பல்லவ இளவரசி இந்தக் கிராமத்தில் வந்து தங்கியிருக்கிறாளே, பார்க்க வரவில்லையா? பல்லவ நாட்டினின்று சிற்பக் கலையையும், நடனக் கலையையும் நீங்கள் கவர்ந்துவரக் கனவு கண்டேன். இளவரசியும் கிடைத்தாள். பல்லவ இளவரசிக்கு இந்தக் கிராமத்தில் பொழுதே போகாது. நாளைக் காலை வரையில் இங்கே தங்கியிருப்போம். பிறகு தஞ்சையை நோக்கிப் புறப்பட்டு விடுவோம். தஞ்சையில் அமோகமான வரவேற்புக்கு விக்கியண்ணன் ஏற்பாடு செய்து விடுவான். பல்லவ இளவரசிக்கும், கங்க நாட்டு இளவரசிக்கும், சேர்த்து மகத்தான வரவேற்பு நடத்தப்படும். மீன்விழி, வா,



அருகேயுள்ள பல்லவ இளவரசியைக் காணச் செல்லலாம்'' என ஆதித்தன் அழைத்தான். மீன்விழி உடன் சென்றாள்.

வைரக்கண்ணியும் மீன்விழியும் சந்தித்துக் கொண்டனர். இருவரும் மௌனமாகவே இருந்தனர்.

''விக்கியண்ணன் உள்ளங்கவர்ந்த மீன்விழி ஓர் ஆட்சியை ஏற்று நடத்துமளவுக்குச் சிறந்த திறமை படைத்தவள்'' என்று ஆதித்தன் வர்ணித்தது இளவரசி வைரக்கண்ணிக்குப் பிடிக்க வில்லை போலும். கொழுந்து விட்டெரிந்த பொறாமைத் தீயை அடக்கி வைத்துக் கொண்டு வைரக்கண்ணி, அன்பாகப் பேசுவதுபோல் நடித்தாள்.

ஆதித்தன் சிற்பியுடன் கலந்து பேசச் சென்றுவிட்டான். அன்று மாலையே சிற்பியும் அவரது சீடர்களும் தஞ்சைக்குப் புறப்பட்டுச் செல்ல வேண்டும் என்று திட்டம் வகுக்கப்பட்டது. உடன் துணைக்கு இரு வீரர்களையும் அனுப்பினான். ''இளவரசரே! என் மகளைப் பற்றிய கவலை இனி எனக்கு இல்லை. உங்கள் பொறுப்பில் ஒப்படைத்துவிட்டேன்'' என்று கூறி சிற்பி தன் விழியை மெல்லத் துடைத்துக் கொண்டார்.

''சிற்பி அவர்களே! உங்கள் மகளைப் பற்றிய கவலையை விட்டுவிடுங்கள். அவள் ஓர் இளவரசி. அவள்தான் இனி நம் நலனைக் கவனிக்க வேண்டும்'' என்று உற்சாகப்படுத்தினான்.

சிற்பியும் சீடர்களும் தஞ்சையை நோக்கிப் புறப்பட்டு விட்டனர்.

கதவைத் தாளிட்டுக் கொண்டு வைரக்கண்ணி அந்தக் கிராம வீட்டில் உறங்கினாள். இளவரசர் ஆதித்தன் மாட மாளிகையில் பஞ்சணையில் படுத்துறங்க வேண்டிய சுகவாசி. அந்தக் கிராமத்துத் திண்ணையில் சோழ சாம்ராஜ்யத்தின் முன்னேற்றத்தைப் பற்றிய இனிய கனவுகளுடன் உறங்கிக் கொண்டிருந்தான்.

கிராமமே உறங்கிக் கொண்டிருந்த அந்த வேளையில் மீன்விழி குதிரை மீதமர்ந்து, காஞ்சியை நோக்கிச் செல்லும் பெருவழிப்பாட்டையில் விரைந்து கொண்டிருந்தாள்.

○

## 44. விக்கியண்ணன் கவலை

மேற்குக் கோட்டை வாசலுக்கு அருகில் கம்பீரமாகத் திகழ்ந்த நிசும்ப சூதனி கோயில் வாயிலில், அரச பல்லக்கு இருந்தது. கோயிலுக்கு உள்ளே இளவரசி இளங்கோபிச்சி சென்றிருந்தாள். நாள்தோறும் காலையில் தேவியைத் துதிக்காமல் அவள் எந்தச் செயலிலும் ஈடுபட்டதில்லை. இளவரசர் ஆதித்தசோழன் தஞ்சையை விட்டுப் புறப்பட்டு பல்லவ நாட்டில் மாறு வடிவில் சுற்றுப் பயணம் செல்லச் சென்றதிலிருந்து இளங்கோ பிச்சியின் கவலை அதிகமானது. தேவியைத் துதிக்க காலையில் கோயிலுக்குச் செல்லத் தவறுவதில்லை. அவள் பிரார்த்தனை வேறு என்னவாக இருக்கும்? ''தேவி! என் தெய்வத்தை என்னிடம் முழுமையாக ஒப்படைத்துவிடு'' என்பதுதான்.

இளவரசர் ஆதித்தன் மாவீரன் என்பதை அவள் அறிய மாட்டாளா? பல நூறு பேரை ஒரே சமயத்தில் எதிர்த்துப் போரிட வல்லவன் என்பதை அறியமாட்டாளா? ஆனால் பல்லவ நாட்டிலிருந்து ஒற்றர்கள் அனுப்பிய செய்திதான் அவளை நடுங்க வைத்தது. 'பெண்கள் மையலில் ஆதித்தன் சிக்குண்டுள்ளான்' என்ற செய்தி கேட்டவுடன் ஆயிரம் பகை வீரர்கள் நடுவே ஆதித்தன் சிக்குண்டதை விட அதிக பயத்தைக் கொண்டாள்.

அவள் மனக்குறையை எடுத்துக்கூறி விம்மிக் கண்ணீர் சிந்த மாளிகையில் யாருமில்லை. சோழ மன்னர் விஜயாலயன் அண்மையில் நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையாகிவிட்டார். நிசும்பசூதனியைத் தரிசிக்காது, உணவருந்தாது சோழ அரசர் எழுந்திருக்கவும் சக்தியற்றுக் கட்டிலில் கிடந்தார்.

தொண்ணூற்றாறு விழுப்புண்களை மார்பில் தாங்கி தழும்புகள் ஏற்கெனவே பெற்றுள்ள விஜயாலயனுக்கு, தொண்ணூற்றேழாவது வடுவாக ஆதித்தன் பல்லவ நாட்டில் சிக்கிக் கொள்வதால் ஏற்படும் சம்பவம் அமைந்துவிடுமோ என்ற அச்சம் இருந்தது. ஒவ்வொரு நாளும் ஆதித்தனிடமிருந்து செய்தியை எதிர்பார்த்தார் விஜயாலயன். விக்கியண்ணனாவது செய்தி அனுப்பி இருக்கலாம் என்று பெருமூச்சு விட்டார்.



ஒரு நாள் காஞ்சிக்குச் சில வீரர்களை உடனே அனுப்புமாறு ஆதித்தனிடமிருந்து ஒரு தகவல் வந்தது. நம்பிக்கை வாய்ந்த சோழ நாட்டவர் ஒருவரையும் விஜயாலயன் அனுப்பி வைத்தார். புடைவை வணிகராக வந்த அமுதனைத் தொடர்ந்து வந்த தேர்ந்தெடுக்கப்பட்ட வீரர்களைப் பெண்ணையாற்றங் கரையில் காத்திருக்குமாறு விஜயாலயன் ஏற்பாடு செய்தார். அதன் பிறகு உடல் நலம் சீர்கெட்டது. எழ முடியாமல் படுத்த படுக்கையானார்.

மருத்துவர், பணிப்பெண்கள், தாசிகள் ஆகிய அனைவரையும் விட இளங்கோ பிச்சி தனக்குப் பணி விடை செய்வதையே விஜயாலயன் பெரிதும் விரும்பினார்.

நிசும்பசூதனியின் முகத்தில் தனி ஒளி தெரிவதாக இளங்கோபிச்சி உணர்ந்தாள். தன் பிரார்த்தனை நிறைவேறி விட்டதாக அவளுடைய உள்ளுணர்வு தெரிவித்தது. தன் கணவர் எந்தவித ஆபத்திலும் சிக்காமல் திரும்பி வருவார் என்று மனத்திற்குள் ஏதோ ஒன்று கூறியது. இருந்தாலும் அவள் மனத்தில் ஏதோ ஒருவிதக் கவலையும் நிறைந்திருந்தது.

''தேவி! என் மனக்குறையைத் தீர்க்க உங்களுக்கு இன்னும் கருணை பிறக்கவில்லையா? அரசரும் கடும் நோயால் அவதிப் படுகிறார். இந்த வேளையில் என் தலைவர் இங்கே இல்லாவிடில் நான் என்ன செய்வேன்?'' என்று கண்ணீர் மல்கப் பிரார்த்தித்தாள்.

விழி நீரைத் துடைத்துக் கொண்டு அவள் வெளியே வந்தபோது, விக்கியண்ணன் கோயில் நுழைவாயில் அருகே நின்று கொண்டிருந்தான். விக்கியண்ணனைப் பார்த்தவுடன் பரபரப்புற்ற இளங்கோபிச்சி, ''அவர் வந்துவிட்டாரா?'' என்று கேட்டாள், குரலில் ஆவலும், விழிகளில் ஏதோ அதிசய உணர்ச்சியும் நிறைந்திருந்தன. ஒருவேளை அவர் மாளிகைக்குச் சென்றுவிட்டாரோ என்ற ஐயம் அவளுக்கு ஏற்பட்டது.

''அவர் எங்கே? மாளிகைக்குச் சென்றுவிட்டாரா? நலமாயிருக்கிறாரா? நீங்கள் நலமா? அவரை ஆரத்தி எடுத்துத் திலகமிட்டு வரவேற்க நானில்லாமல் இங்கே கோயிலில் நிற்கிறேன். நான் இங்கு இருக்கிறேன் என்று அவர்தான் சொல்லியனுப்பினாரா?'' என்று கேள்வி மேல் கேள்வி கேட்டு தன் உள்ளத்து ஆவலைச் சொற்களால் உணர்த்தினாள்.

''தேவி! இளவரசர் நலமாக இருக்கிறார். வந்து கொண்டே இருக்கிறார். நற்செய்தியைக் கூற நான் விரைந்து வந்தேன்...''



01 09

என்று விக்கியண்ணன் கூறவும் இளங்கோ பிச்சி, "அவர் இங்கே வந்து கொண்டிருக்கிறாரா? தஞ்சையிலிருந்து வீரர்கள் சென்றார்களே அவர்களைச் சந்தித்தீர்களா? இன்று வந்து விடுவாரா? நடுப்பகலில் வருவாரா? மாலையில் வருவாரா?" என்று கேட்டுவிட்டு, நிசும்ப சூதனி தேவியை நோக்கி, "தேவி! உன் கருணையை என்னவென்று கூறுவேன்? என் தலைவர் வருகிறாராம். அவர் வந்தவுடன் சிறப்பான அபிஷேக ஆராத்னைகளைச் செய்ய வேண்டும். பூசனைகளைப் புரிய வேண்டும். உங்கள் திருக்கோயிலைப் பெரிதாக்க வேண்டும்..." என்று வாய்விட்டுப் பிரார்த்தித்து வேண்டினாள்.

விக்கியண்ணன் உடனே தொண்டையைக் கனைத்துக் கொண்டான்.

"தேவி! கோயிலைப் பெரிதாக்க, விரிவாக்க சிற்பக் கலைஞர்களுடன் வருகிறார்" என்று கம்பீரமாகவும் உற்சாகத்துடனும் கூறினான்.

"அப்படியா... அண்ணா?" என்று விழிகள் வியப்பால் விரியக் கேட்டாள் இளங்கோபிச்சி.

விக்கியண்ணனை அண்ணா என்றுதான் அழைப்பது அவள் வழக்கம். தன் கணவரின் அன்புக்குப் பாத்திரமான விக்கியண்ணனுக்கு அவளும் அதிக மதிப்பும், மரியாதையும் அளிப்பாள்.

"நாம் மாளிகைக்குச் செல்வோம். மாமன்னருக்கு மகிழ்ச்சிச் செய்தியைக் கூறுவோம்" என்று அங்கிருந்து புறப்பட முனைந்தாள்.

"தேவி! சோழ மாமன்னரைத் தரிசித்துவிட்டுத்தான் இங்கு வந்தேன். உங்களுக்கும் மகிழ்ச்சிச் செய்தியைக் கூற விரும்பினேன். இளவரசரின் அதி அற்புதச் சாகசங்களை உங்களிடம் கூறவே வந்தேன்" என்றான்.

"அதி அற்புதங்களா? சாகசங்களா? பல்லவ நாட்டில் அவரையும் உங்களையும் யாரேனும் அடையாளம் கண்டு விட்டனரா?" என்று இளங்கோ பிச்சி கேட்டாள்.

"நாங்கள் பல்லவ நாட்டின் முக்கிய இடங்களைச் சுற்றிப் பார்த்தோம். சிற்பி தஞ்சைக்கு வருகிறார். சோழ நாட்டுக் கோயில்களை எல்லாம் கற்பாறைகளால் மீண்டும் புதுப்பிக்கப் போகிறார். பல்லவ நாட்டில் எவ்வளவு கோயில்கள்! அப்பாடா! விதவிதமான அமைப்புகள். சிற்ப அற்புதங்கள். அவற்றைக் காணும் வாய்ப்பு இளவரசர் கருணையால் எனக்கும் கிடைத்தது."



இளங்கோ பிச்சியின் முகத்தில் புதிய ஒளி மேலும் அதிகமாகியது.

"சிற்பிகளா? கற்கோயில்களா? முதலில் நமது நிசும்பசூதனி திருக்கோயிலைப் பெரிதுபடுத்த வேண்டும்" என்று ஒரு குழந்தைக்கு ஏற்படும் ஆசையைப்போல தன் உள்ளக் கிடக்கையைத் தெரிவித்தாள்.

"பல்லவ நாட்டில் தேவியின் திரு உருவங்களைப் பலவிதத் தோற்றத்தில் சிறப்பாக அமைத்துள்ளார்கள். மகிஷாசுரமர்த்தினி சிற்பத்தை இன்றைக்கு என்ன, என்றைக்கும் கண்டு ஆனந்தப்படலாம்."

"மகிஷாசுரமர்த்தினியா? ஆகா, நான் எப்போது காணப் போகிறேனோ?"

"பல்லவ நாட்டையே சோழ நாட்டிற்குக் கொண்டு வந்துவிடுவோம். பல்லவ நாட்டில் சிறந்து விளங்கும் நடனக் கலையையும் சோழ நாட்டிற்குக் கொண்டு வந்து விடுவோம். சிற்பம், சித்திரம், நடனம் ஆகியவற்றில் சிறந்த கலைஞர்கள் பல பேர் சோழ நாட்டிற்கும் வந்து கொண்டிருக்கிறார்கள்."

"அப்படியா? சிற்பிகள் வருகிறார்களா? நடனத்தில் திறமை பெற்றவர்கள் வருகிறார்களா?"

"மயிலழகு சிறந்த நாட்டியப் பெண், அவள் வருகிறாள். நீங்கள் அனுப்பினீர்களே சேலை வியாபாரி. அந்த இளைஞனுடன் அவள் வருகிறாள்."

"அப்படியா? இனி சதங்கை ஒலி கேட்கும். திருவையாற்றில் அவர்கள் வசிக்கத்தக்க வீடு கொடுப்போம்."

"சிற்பி மகளை அழைத்து வரும் பொறுப்பை மீன்விழி எனும் மங்கை ஏற்றிருக்கிறாள். அதாவது மீன்விழியின் தந்தை பல்லவ நாட்டுத் தலைமைச் சிற்பி. மீன்விழி வருவது என் பொருட்டு..." என்று கூறும்போது விக்கியண்ணன் குரலில் தற்பெருமை சிறிது இருந்தது. சற்று வெட்கமும் கலந்திருப்பதை இளவரசி கண்டு கொண்டாள்.

"ஓ! உங்களுக்காக வருகிறாள், அப்படித்தானே?" இளங்கோ பிச்சி கேட்கும்போது குரலில் குறும்புத்தனமும் மிளிர்ந்தது.

"ஆமாம், தேவி. மீன்விழியின் மீது நான் காதல் கொண்டேனா அல்லது அவள் என்னிடம் மையல் கொண்டாளா என்று பிரித்துக் கூற முடியாது. கோயில் பூஜை செய்யப்

பட்டரும் வரப்போகிறார். பட்டரின் மனைவி வருகிறாள். அவர்களுடன் மீன்விழியும் வருகிறாள்'' என்று விக்கியண்ணன் கூறினான்.

இளங்கோ பிச்சி ஒருகணம் மௌனமாக இருந்தாள். திடீரென குரலில் மாறுதல் தெரிய, ''அப்படியென்றால் மீன்விழியை நீங்கள் மணக்கப் போகிறீர்கள் என்று சொல்லுங்கள்'' என்று கேட்டாள்.

''ஆமாம்! தஞ்சை மாளிகையில் உங்களுக்குத் துணையாக இருக்க அண்ணி வருகிறாள்'' என்றான் விக்கியண்ணன்.

இளங்கோ பிச்சி ஒருகணம் விக்கியண்ணனை உற்று நோக்கினாள்.

''எனக்கு ஓர் அண்ணி கங்க நாட்டில் இருப்பதாக நீங்கள் முன்பு சொன்னதாக நினைவு'' என்றாள்.

''ஆமாம், தேவி! அவள் அங்கே. இவள் இங்கே. உங்களுடன் அந்தப்புரத்தில் வாழ்வாள். தேவி! இனி அந்தப்புரத்தில் நீங்கள் உற்ற தோழிகள் இல்லாமல் தனியே இருக்க வேண்டாம். உங்களுக்கு மற்றொரு நற்செய்தி. உங்கள் தலைவர், இளவரசர் பல்லவ நாட்டையே சோழ நாட்டிற்குக் கொண்டு வந்துவிட்டதாகச் சொன்னேன் அல்லவா? சொல் அலங்காரத்திற்காக அப்படிக் கூறவில்லை. உண்மையிலேயே பல்லவ நாடு இனி சோழ நாட்டுடன் ஐக்கியம். தேவி! பல்லவ இளவரசியே தஞ்சைக்கு வருகிறாள். அந்தப்புரத்தில் உங்களுக்கு என்றென்றும் உற்ற துணையாக இருப்பாள்'' என்றான் விக்கியண்ணன்.

இளங்கோ பிச்சிக்கு எதுவும் புரியவில்லை. ''என்ன சொல்கிறீர்கள் அண்ணா?'' என்று கேட்டாள்.

''ஆதித்த சோழர் பல்லவ நாட்டினின்று திறமை மிக்க கலைஞர்களைக் கொண்டு வருகிறார். அவர்களுடன் பல்லவ இளவரசி வைரக்கண்ணியையும் அழைத்துக் கொண்டு வருகிறார். பல்லவ நாட்டின் உண்மையான வாரிசு அவள்தான்.''

''உங்களைப் போல் அவளும் தேவி பக்தி மிகுந்தவள். கொற்றவையைத் துதித்துக் கடுமையான விரதம் இருந்து பூசித்தாள். அபராஜிதவர்மன் அவளை அடையப் பல சதிகள் செய்தார். அவளைக் கவர்ந்து செல்லவும் திட்டமிட்டார். நமது இளவரசர், உங்கள் தலைவர் அந்தச் சதித்திட்டத்தை முறியடித்து வைரக்கண்ணியைக் காப்பாற்றினார். அவ்வாறு காப்பாற்றிய



தற்கு ஈடாக, பல்லவ இளவரசி தன்னையே பரிசாக இளவரசருக்குத் தந்துவிட்டாள்'' என்று கூறி நிறுத்தினான் விக்கியண்ணன்.

ஆவலுடன் கேட்டுக் கொண்டிருந்த இளங்கோபிச்சி, ''இந்தச் செய்தி பல்லவ அரசருக்குத் தெரியுமா? பல்லவ அரசர் அறிந்தா, வைரக்கண்ணியை இளவரசர் அழைத்து வருகிறார்?'' என்று கேட்டாள்.

''பல்லவ அரசர் அறிந்துவிட்டார். ஆதித்த சோழரைச் சூழ்ந்து கொண்டு சிறைப்படுத்த முயன்றார். நான் நேரில் பார்க்கவில்லை அந்த நிகழ்ச்சியை. இளவரசர் ஒரே வார்த்தையில் கூறிவிட்டார். ''என்னைச் சூழ்ந்து தடுத்து நிறுத்தியவர்களை வீழ்த்திவிட்டு, வைரக்கண்ணியையும் அழைத்துக் கொண்டு வந்துவிட்டேன்'' என்று. ஆனால், அந்தச் சம்பவத்தை மனக்கண்ணில் இப்போது நிறுத்திப் பார்த்தாலும் எவ்வளவு பயங்கரமான ஆபத்திலிருந்து அவர் தப்பியிருக்கிறார் என்பது தெரியும். இளவரசரின் வாள் வலிமையை நான் அறிவேன். ஆனால் வாள் தம் கையிலில்லாத போதும் அவர் பல்லவ இளவரசியை உடன் வைத்து கொண்டு போரிட்ட திறமை இருக்கிறதே அதை எப்படிப் புகழ்வேன்?''

விக்கியண்ணன் இப்படிச் சொல்லி நிறுத்தியவுடன் இளங்கோ பிச்சி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''எப்படியும் புகழவேண்டாம். பெண்களை அபகரித்து வருவதற்காகவா நீங்கள் இருவரும் பல்லவ நாட்டிற்குச் சென்றீர்கள்? அந்தத் திறமையைப் பெரிதாகப் பேசும் உங்களுக்கு வெட்கமாயில்லையா?'' என்று கேட்டுவிட்டு இளங்கோபிச்சி, திரும்பிப் பாராமல், போய் வருகிறேன் என்றும் சொல்லாமல், வேகமாக நடந்து கோயில் வாயிலில் நின்றிருந்த சிவிகையில் ஏறி அமர்ந்து கொண்டாள்.

'ஹோ, ஹோ' என்று சிவிகை சுமப்போரின் ஓசை எழ, சிவிகை சென்று மறையும் வரை அந்தத் திசையை நோக்கி நின்று கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தான் விக்கியண்ணன்.

வைரக்கண்ணியுடன் தஞ்சைக் கோட்டைக்குள் ஆதித்த சோழன் நாளை நுழையும்போது இளங்கோபிச்சி பெரும் புயலையே உருவாக்கிவிடுவாளே, என்ன செய்வது என்று கவலைப்பட்டான் விக்கியண்ணன்.

○



01 09

## 45: சிதைந்த கோட்டை

பல்லவ அரண்மனையில் அமைச்சர்கள் குழுவினர் ஆலோசனைக்காகக் கூடியிருந்தனர். முதல் அமைச்சர் வந்திருந்தார். உத்தம சீலன் என்ற தமிழ்ப் பேரறிஞர் அந்தக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார். உள்படு கருமத் தலைவர்கள் ஆலோசனை மண்டபத்திலில்லாமல், அரண் மனையின் வெளியே பூந்தோட்டத்து மேடைகளில் அமர்ந்திருந்தனர். அவர்கள் முகங்களில் கவலைக் குறியிருந்தது. சில நாள்களாக காஞ்சி நகரில் மக்கள் கூடிக் கூடிப் பேசியதிலிருந்து மக்கள் குழம்பிய மனநிலையில் இருப்பதை அவர்கள் உணர்ந்திருந்தனர்.

கொங்கு நாட்டின் மீது படையெடுத்துச் செல்வதற்காக பட்டி தொட்டிகளிலெல்லாம் படைக்கு ஆட்களைச் சேர்த்து முடித்து அப்போதுதான் காஞ்சிக்கு வந்திருந்த விக்கிரம கேசரி, ஓய்வெடுக்காமல் நேரே மாளிகையை நோக்கி வந்துவிட்டார்.

அவரது காலத்தில் பாண்டியர்களுடன் நடைபெற்ற போருக்குப் பிறகு பல்லவ நாட்டிற்கு எதிரிகளே இல்லை என்ற நிலையில் குறைந்த அளவு வீரர்களைக் கொண்டு மற்றவர்களை அவரவர்களின் ஊர்களுக்குப் பயிர்த் தொழிலிலும், நெசவுத் தொழிலிலும் ஈடுபடக் கூறி அனுப்பிவிட்டார். கொங்கு நாட்டினின்று தங்கம் பெறப் போர் தொடங்கியாக வேண்டும் என்ற கட்டளை அபராஜித னிடமிருந்து பிறக்கவே, அவர் முனைப்புடன் ஏராளமான இளைஞர்களைத் திரட்டிவிட்டார்.

அபராஜிதன் சபையில் வந்தமர்ந்தார். அவர் முகத்தில் மகிழ்ச்சி இல்லை. சினத்தால் முகம் சிவந்திருந்தது.

''சோழ இளவரசர் பல்லவ நாட்டில் இவ்வளவு நாள்கள், உலவியதை நமது ஒற்றர் படையினர் தெரிவிக்காதது வியப்பாயிருக்கிறது'' என்று உத்தமசீலன் வேதனையுடன் கூறினார்.

''நடந்ததைப் பற்றிய ஆராய்ச்சிக்கு இப்போது நேரமில்லை. பல்லவ நாட்டின் மான உணர்ச்சிக்கு ஏற்பட்ட சோதனையில்



நாம் வெற்றி கொள்ள வேண்டும்'' என்றார் அபராஜிதன். உணர்ச்சி மிகுதியால், வார்த்தைகள் சரிவர வராமல் தடுமாறின.

''சிறிய சோழ நாட்டு இளவரசன், வைரக்கண்ணியை அபகரித்துச் சென்றுவிட்ட செய்தியை யாரும் வெளிப் படையாகப் பேச விரும்பவில்லை. துணியவில்லை என்று கூறலாம்'' என்றார் அமைச்சர்களுள் ஒருவர்.

''வைரக்கண்ணியைக் கவர்ந்து சென்ற ஆதித்தனைப் பின்தொடர்ந்து சென்று அவளைக் கைப்பற்றக்கூட முடியவில்லையா?'' என்று கேட்டார்.

தளபதிக்கு முழு விவரமும் தெரியவில்லை. எனவே அபராஜிதனே அதற்கு மறுமொழி கூறினார்: ''வீரர்களை அனுப்பினேன். முன் திட்டமிட்டே ஆதித்தன் பல காரியங்களைப் புரிந்திருக்கிறான். பெண்ணையாற்றங்கரையில் நமது வீரர்கள் எதிர்பாராத தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்தனர்.''

உத்தமசீலன் ஆவேசத்துடன், ''பல்லவ வீரர்கள் பலங்குன்றி விட்டனரா? இளவரசியை மீட்க முடியாத நாம், நாட்டை இழந்தால் மீட்பது எப்படி? என்ன திட்டம் வைத்திருக்கிறீர்கள். சோழர்கள் மீது படையெடுத்துச் செல்ல?'' என்று கூவினார்.

அபராஜிதன் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். பிறகு தொண்டையைக் கனைத்துக் கொண்டு மெல்லப் பேசத் தொடங்கினார்.

''அமைச்சர்களே! சோழ இளவரசன் ஆதித்தன் எனது உயிர் நண்பன். பாண்டியர்கள் நமது நாட்டின் தெற் கெல்லையைக் கவர்ந்து பல காலம் தம் வசம் வைத்திருந்தனர். அந்தச் சமயம் விஜயாலய சோழ தேவர் தஞ்சைக் கோட்டையைப் பலப்படுத்தி, சோழ நாட்டை விரிவுபடுத்தத் திட்டமிட்டார்.

''சோழ நாடு நமக்கு அடங்கிய நாடு. அவர்கள் வளர்ச்சியை நான் தடை செய்யவில்லை. நமக்குப் பெரிதும் அவர்கள் உதவியாக இருப்பார்கள் என்றே நான் எண்ணினேன். என் திட்டம் பலித்தது. பாண்டிய மன்னனை முறியடிக்க விஜயாலய சோழர் தமது படைகளை அனுப்பி உதவினார்.

கங்க நாட்டரசர் பிருதிவீபதியையும் நான் இந்தச் சமயம் மறக்க முடியாது. போர்க்களத்திலே அவர் காட்டிய பெரும் வீரத்தை என்னால் மறந்துவிட முடியாது. மண்ணை



01 09

யாற்றங்கரையிலே பெரும் போர் நடைபெற்றது. பிருதிவீபதி வீரப் போர் புரிந்து உயிரிழந்தார். அந்தப் போர்க்களத்திலே ஆதித்தனின் போர்முறை என்னைக் கவர்ந்தது. அவனது வீரம் என்னைப் பிரமிக்கச் செய்தது. பாண்டிய மன்னன் 'செத்தோம் பிழைத்தோம்' என்று ஓடியதற்கு முக்கியக் காரணம் ஆதித்தன். வெற்றி விழாவைத் தஞ்சையில் கொண்டாடினேன். ஆதித்தன் என் நெருங்கிய நண்பனானான். அவனது தந்தை விஜயாலய சோழரின் உதவிக்காக தஞ்சையையும், தஞ்சைக்கு அருகிலுள்ள பகுதியையும் சுதந்திரமாக ஆள உரிமை அளித்தேன். சில நாள்கள் சோழ நாட்டின் வளம் மிகுந்த ஊர்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு, காஞ்சிக்குத் திரும்பினேன். பிறகு நான் தஞ்சையை மறந்தேன். ஆதித்தனை மறந்தேன். என் கவனம் முழுவதும் திருத்தணிகை முருகபிரானுக்குக் கனகாபிஷேகம் செய்வதில் இருந்தது. கொங்கு நாட்டிற்குச் செல்லத் திட்டமிட்டேன். இந்த வேளையில் ஆதித்தன் தனது நண்பனுடன் பல்லவ நாட்டிற்கு வந்திருக்கிறான். சோழ நாட்டவர் நமக்கு விரோதி யல்லர். அதனால் ஒருவரும் அவர்களைச் சந்தேகப்பட வில்லை.''

அபராஜிதன் சிறிது நிறுத்தினார். அதற்குள் உத்தமசீலன், ''வேற்று நாட்டவர் வந்ததை ஏன் ஒற்றர்கள் அறியவில்லை?'' என்று சற்றுக் கோபமாகவே கேட்டார்.

''அயல் நாட்டவர்கள் பலர் வருகிறார்கள். சீனத்தவர், ஈழத்தவர், அவர்களை எல்லாம் கண்காணிக்க முடியுமா?'' என்று படைத்தளபதி குறுக்கிட்டார்.

''ஆம், அயல்நாட்டவர்களின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கத்தான் வேண்டும்'' என்று உத்தமசீலன் அழுத்தந்திருத்தமாகக் கூறினார்.

''உத்தமசீலன் சொல்வது மிகவும் சரி. ஆதித்தனும் அவன் நண்பனும் திருக்காளத்தி நகரிலிருந்து புறப்பட்டு வந்திருக் கின்றனர். மயிலழகைச் சந்தித்திருக்கின்றனர். சிற்பியைக் கண்டிருக்கின்றனர். மீன்விழியுடன் பேசியிருக்கின்றனர். காஞ்சியைச் சுற்றிப் பார்த்திருக்கின்றனர். ஆதித்தன் நண்பன் மாமல்லபுரத்திற்கும் சென்றிருக்கிறான்'' என்று அபராஜிதன் கூறும்போது முதலமைச்சர் குறுக்கிட்டு, ''உங்களைச் சந்தித்து உங்கள் உதவியுடன் இளவரசன் நாட்டைச் சுற்றிப் பார்த்திருக்கலாம்'' என்றார்.

''நானும் அப்படித்தான் எண்ணுகிறேன். ஆனால், ஆதித்தன் உள்நோக்கம் வேறாக இருக்கிறது. பொறாமை அவனுடைய



உள்ளத்தில் கொழுந்து விட்டெரிந்திருக்கிறது. வைரக் கண்ணியைச் சந்தித்திருக்கிறான். திட்டமிட்டு அபகரித்துச் சென்றுவிட்டான். நமது நாட்டிற்குப் பெரும் அவமானத்தை ஏற்படுத்திவிட்டான். அவனுக்குச் சரியான புத்தி புகட்ட வேண்டும் என்பது என் உறுதியான முடிவு. ஆகவே சோழ நாட்டின் மீது படையெடுத்துச் செல்லத் திட்டமிட்டிருக்கிறேன், உங்கள் கருத்து என்ன?'' என்று கேட்டான்.

''சிற்பிகள் தஞ்சைக்குச் சென்றுவிட்டனராம். நடன அழகி மயிலழகு தஞ்சைக்குச் சென்றுவிட்டாளாம். நம் திறமையை, அறிவை மிகக் குறைத்து மதிப்பிட்டிருக்கும் ஆதித்தனுக்குத் தக்க பாடம் புகட்டியாக வேண்டும். போர்க்களத்தில் அவனை உயிருடன் பிடித்துக் காஞ்சி நகருக்குக் கொண்டு வந்து முச்சந்தியில் நிற்க வைத்துச் சாட்டையாலடிக்க வேண்டும்'' என்று அமைச்சர்கள் சீறினர்.

''ஆம், ஆம்...'' என்ற குரல் பலமாக அனைவரிடமிருந்தும் எழுந்தது.

* * *

போர் முரசம் கேட்டது. பேரிகை ஒலித்தது. போர்ச் சின்னங்கள் யாவும் ஹுங்காரமிட்டன. குதிரைகளும், யானைகளும் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வந்து சேரத் தொடங்கின. காஞ்சிக் கோட்டைக்கு வெளியே பகுதிகளில் போர் வீரர்கள் பலரும் தங்கினர். உணவுப் பண்டங்கள் சேகரிக்கப்பட்டன. அவற்றை ஏற்றிவர நூற்றுக்கணக்கான வண்டிகள் ஆயத்தப்படுத்தப்பட்டன. வேலையும் வாளையும் கூர்மையாக்கக் கொல்லர்கள் பலர் உடன் செல்ல ஆயத்தமாயினர். வேலும், வாளும் சுமந்துவர வண்டிகள் ஆயத்தமாக இருந்தன. சோறு சமைக்கப் பரிசாரகர்கள் அமர்த்தப்பட்டனர். விறகுகளுக்காகக் காய்ந்த மரங்கள் வெட்டிக் கொண்டு வரப்பட்டன.

தையல்காரர்கள் உடைகள் தைக்கத் தொடங்கினர். கவசங்கள் செய்யப்பட்டு மலைபோல் குவிந்தன. யானைக்கும் உருவாயின. குதிரைகளுக்கு லாடங்கள் அடிக்கப்பட்டன. வண்டிகளை இழுக்கக் காளைகள் பல கிராமங்களிலிருந்து கொண்டு வரப்பட்டன. காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சை அளிக்க மருத்துவர்கள் உடன் வர ஆயத்தமாயினர்.

''நாம் எப்போது புறப்படுகிறோம்?'' என்று மயிலழகை நோக்கி அமுதன் துடிப்புடன் கேட்டான். அமுதன் விடுதலை செய்யப்பட்ட பிறகு மயிலழகு அமுதனும் தங்குவதற்குத்

தனி வீடு ஏற்பாடு செய்யப்பட்டது. இரவில் அமுதன் திண்ணையில் படுத்துறங்கினான்.

"நமது பயணம் எப்போது?" என்று அமுதன் மயிலழகைக் கேட்டுக் கொண்டே இருந்தான்.

"நமது கல்யாணம் எப்போது?" என்று கேட்டுத் தொந்தரவு செய்தாலும் நான் மகிழ்ச்சியடைவேன். தஞ்சைக்குச் செல்வதிலேயே குறிக்கோளுடனிருக்கிறீர்களே?" என்று மயிலழகு கேட்டாள்.

"ஆம், கல்யாணம் எப்போது என்று கேட்டுத் தொந்தரவு செய்கிறேன் இனிமேல்" என்று கூறி அவளை நெருங்கி "கல்யாணம் எப்போது? எவ்வளவு நாள்களுக்குத் தான் திண்ணையில் படுப்பது? தஞ்சையில் எனக்குப் பெரிய வீடு இருக்கிறது. வயதான தாயாரும் அங்கே இருக்கிறார்கள். நீலமேகப் பெருமாள் கோயிலில் நான் நடனம் ஆடுகிறேன். நமது திருமணம் தஞ்சையில் நடக்க வேண்டும். அதற்கு நாம் தஞ்சைக்கு எப்போது செல்வது? நம் பயணம் எப்போது?" என்று அமுதன் அவளை நெருங்கிக் கேட்டான்.

அபராஜிதன் மயிலழகிடம் ரகசியமாகக் கூறியுள்ள திட்டம் அமுதனுக்குத் தெரியாது. சோழ அரசனைப் பற்றி ரகசியச் செய்திகளைச் சொல்வதற்காக மயிலழகு தஞ்சை செல்கிறாள் என்பதையும் அமுதன் அறியமாட்டான்.

வீட்டை விட்டு எங்கும் செல்லக் கூடாது என்பது மயிலழகின் அன்புக் கட்டளை. தன்னை இரகசியமாக ஒற்றர்கள் கண்காணிப்பதையும் அவன் அறிவான். அவன் நினைவெல்லாம் தஞ்சையிலேயே இருந்தது. மயிலழகிடம் உள்ளத்தைப் பறி கொடுத்திரா விட்டால், அமுதன் எப்போதோ பறந்திருப்பான்.

மாளிகைக்குச் சென்ற மயிலழகு பரபரப்புடன் ஓடோடி வந்தாள்.

"நாம் இன்று மாலையே தஞ்சைக்குப் புறப்படுகிறோம்" என்றாள்.

அமுதன் அவளது முகத்தில் தெரிந்த மாறுதலைக் கவனித்தான்.

"மன்னரின் கட்டளையா?" என்று அமுதன் கேட்டான்.

"ஆமாம்..." என்று கூறிய மயிலழகு, ஏதோ சொல்லக் கூடாததைக் கூறிவிட்டதுபோல் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.



"தஞ்சைக்குச் செல்வதையும் அவர்தான் கட்டளையிட வேண்டுமா?" என்றான் அமுதன்.

மயிலழ்கு ஏதும் பேசவில்லை. அவரிடம் உண்மையைச் சொல்லலாமா, கடைசி வரை மறைத்து விடலாமா என்று குழம்பினாள்.

"ஏன் திடீரென உன் முகம் மாறிவிட்டது மயிலழகு?" என்று கேட்டான் அமுதன்.

"ஒன்றுமில்லை" என்று மெல்ல நகைத்து முகத்தில் உள்ள கவலைக்கோடுகளை மாற்ற முயன்றாள்.

"நாம் தஞ்சைக்குச் செல்ல, மன்னர் என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்?" என்று அமுதன் கேட்டான்.

"வண்டிதான்..." என்றவள் மறுபடியும் தீயை மிதித்தவள் போன்ற உணர்ச்சியை அடைந்தாள்.

"மயிலழகு! நாம் பல்லவ மன்னரின் திட்டப்படிதான் நடக்க வேண்டுமா?" என்று அமுதன் கேட்டான்.

மயிலழகிற்குப் பேச்சு வரவில்லை. தலையை மட்டும் மேலும் கீழுமாக அசைத்தாள். அவளுக்குத் துக்கம் பொங்கி வந்தது. திடீரென அவனது மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மியவாறு "நான் பெரிய தவறு செய்துவிட்டேன்" என்றாள்.

அவளது முதுகை அன்புடன் தடவி, கண்ணீரை மெல்லத் துடைத்து, "வருத்தப்படாதே! நீ என்ன தவறு செய்திருக்கிறாய் என்பதை நான் அறிவேன். அதற்காக நீ கவலைப்பட வேண்டாம்" என்றான் அமுதன்.

மயிலழகு திடுக்கிட்டு, "என்ன சொல்கிறீர்கள்? உங்களுக்குத் தெரிந்துவிட்டதா? சோழர்களுக்கு எதிராக தஞ்சையில் செயலாற்றுமாறு பல்லவ மன்னர் எனக்குக் கட்டளை யிட்டிருப்பது உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

இதைக் கேட்டு அமுதன் திடுக்கிட்டான். இருந்தாலும் வெளியே புலப்படுத்தாமல், "தெரியும். அதனாலென்ன?" என்றான்.

"உங்களுக்கு விரோதமான செயலல்லவா?" என்று விழிகளை அகல விரித்தவாறு கேட்டாள் மயிலழகு.

"செயலாற்றினால்தானே? தஞ்சைக்குச் சென்றவுடன் உன் மனம் மாறிவிடும்" என்றான் அமுதன்.

"ஐயோ, வாக்களித்துவிட்டேனே" என்றாள் மயிலழகு.



01 09

''தஞ்சைக்குப் போகாமல் இங்கேயே இருந்துவிடுவோம். உங்கள் மன்னர் படைகளுடன் தஞ்சையைத் தாக்கிப் படுதோல்வியுடன் திரும்புவது உறுதி. அப்போது காஞ்சியும் சோழராட்சியின் கீழ் வந்துவிடும். நாம் இட்டதுதான் சட்டம் அப்போது''என்றான் அமுதன்.

மயிலழகு நடுங்கினாள். ''ஐயோ, அதெப்படி முடியும்? அரசர் நமது பயணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருப்பாரே! நம்முடன், இரண்டு வீரர்கள் துணைக்கு வருவார்கள். நாம் இங்கிருந்து புறப்படாமலிருக்க முடியாது'' என்று அவள் கூறும்போது குரலில் பயம் நிறைந்திருந்தது.

''மயிலழகு, சிறிதும் பயப்படாதே. நான் கவனித்துக் கொள்கிறேன். நாம் காஞ்சியிலேயே இருப்போம்'' என்று அவள் அச்சத்தைப் போக்க முயன்றான்.

''ஐயோ, அது முடியாது. நம்மைப் பல்லவ ஒற்றர்கள் மிகக் கவனமாகக் கண்காணிப்பார்கள்'' என்றாள் மயிலழகு.

''பல்லவ ஒற்றர்களையும் ஏமாற்ற என்னிடம் ஏற்ற திட்டமிருக்கிறது. கவலைப்படாதே'' என்றான் அமுதன்.

வியப்புடன் அவளை நோக்கினாள் மயிலழகு.

''ஆமாம், மயிலழகு! நீ மாளிகைக்குச் சென்று, பல்லவர் படைகள் எப்போது தஞ்சையை நோக்கிப் புறப்படுகின்றன என்பதைத் தெரிந்து வா. பிறகு அதற்குத் தகுந்த யோசனையை நான் கூறுகிறேன்'' என்றான் அமுதன் உற்சாகமாக.

மயிலழகு மாளிகைக்குச் சென்றாள். அபராஜிதனை அவளால் சந்திக்க இயலவில்லை. அவள் திரும்பி, தங்கியிருக்கும் இடத்தை அடைந்தபோது, அங்கே அமுதன் அவளை வரவேற்கக் காத்திருக்கவில்லை.

அந்த வீட்டுக் கூடத்தின் நடுவே மார்பிலே குத்துண்டு ரத்த வெள்ளத்தில் கிடந்தான்.

''ஐயோ, அமுதா! உனக்கு இந்தக் கொடுமையைச் செய்தவர் யார்? என் எண்ணக் கோட்டையைச் சிதைத்தது யார்?'' என்று பெரிதாக அலறினாள் மயிலழகு.

அவள் இட்ட ஓலம், வெளியே அணி வகுத்துச் சென்று கொண்டிருந்த பல்லவப் படைகளின் யுத்த கோஷத்தினிடையே சிதறுண்டு சிதைந்தது.

○



## 46. இதயம் ஒன்று; இடம் இரண்டு

இளவரசர் ஆதித்த சோழன், தஞ்சைக்குத் திரும்பி வந்துவிட்ட செய்தி, தஞ்சை நகர மக்களிடையே பெரும் மகிழ்ச்சியை அளித்தது. அவர்கள் கவலை பறந்தோடியது. இளவரசர் தன்னுடன் பல்லவ நாட்டிளவரசியையும் அழைத்துக் கொண்டு வந்திருக்கிறார் என்ற செய்தி அவர்களுடைய மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கியது. அவர்கள் வீட்டுத் திண்ணைகளில் பேசினர். வீதி முனைகளில் பேசினர். வடவாற்றங் கரையில் பேசினர்!

''காஞ்சியிலிருந்து குதிரையிலேயே இளவரசியை அமர்த்திக் கொண்டு வந்துவிட்டாராம்.''

''எதிர்த்த வீரர்கள் தலைகள் உருண்டனவாம்!''

''அம்மாடி! பல்லவ நாட்டுத் தலைவரை எதிர்ப்பதற்கு ஆதித்தனுக்கு எவ்வாறு துணிவு ஏற்பட்டது?''

''பெரிய போர் வரப்போகிறது.''

''பெரிய போர் ஏற்படுவது இருக்கட்டும். மாளிகையில் பூசல் ஏற்படப் போகிறது பாருங்கள். இளங்கோபிச்சி தனக்குச் சமமாக மற்றோர் இளவரசியை அந்தப்புரத்தில் சேர்த்துக் கொள்வாரா?''

என்றெல்லாம் மக்கள் பேசிக் கொள்ளத் தொடங்கினர். இளவரசரைக் காண்பதற்காக மாளிகை வாயிலில் குழுமி நின்றனர்.

தன்னை வாழ்த்தி ஆரவாரம் செய்தவர்களுக்கு ஆதித்தன் புன்முறுவலுடன், கரங்களை அசைத்து நன்றியைத் தெரிவித்தான்.

காலை, நிசும்பசூதனி கோயிலுக்கு ஆதித்தனும் இளங்கோ பிச்சியும் தேரில் வந்திறங்கியபோது அவர்கள் மகிழ்ச்சியுடனிருந்ததைக் கண்ட மக்களுக்குப் பெரும் நிம்மதி ஏற்பட்டது.

இளங்கோ பிச்சிக்கு முதல் நாளிருந்த மனப்பாரம் பெரிதும் குறைந்திருந்தது. இதே கோயில் வாசலில் அவள் நேற்று, விக்கியண்ணனைச் சந்தித்தபோது எந்த மனநிலையிலிருந்தாள்?

''தேவி! உன் கோபம் எல்லாம் இப்போது பறந்தோடி விட்டதல்லவா?'' என்று ஆதித்தன் மெல்ல அவள் செவியருகே முணுமுணுத்தான்.

இளங்கோபிச்சியின் முகம் நாணத்தால் சிவந்தது.

''எல்லாம் தேவியின் அருள்தான். அவள் என்ன எண்ணியிருக்கிறாளோ அதன்படி தானே நடக்கும்?'' என்றாள் இளங்கோபிச்சி.

''அன்னை பராசக்தி நிசும்பசூதனியாக நம் குலத்தைக் காப்பதற்காக நிற்கிறாளே, அவள் உன்னை மட்டும் மனவருத்த மடையச் செய்வாளா?'' என்று ஆதித்தன் கேட்டான்.

''பல்லவ நாட்டு இளவரசி சோழ நாட்டு இளவரசியாக வேண்டும் என்பது, காளிதேவியின் எண்ணம் என்றால் அதை நான் மாற்ற முடியுமா?'' என்று இளங்கோபிச்சி சொன்னாள்.

''என், வேதனையும் ஏமாற்றமும் கலந்த பலவீன முடையவர்கள் கடைசியாகத் தங்கள் மனத்தைச் சமாதானப் படுத்திக் கொண்டு திருப்தி அடைவார்கள். அதுபோல் நீ சமாதானப்படுத்திக் கொண்டுவிட்டாயா? பிச்சி! இப்போது தேவியின் சந்நிதி எதிரே சொல்லு, உனக்கு என்மேல் நம்பிக்கை இருக்கிறதா? எதுவும் கோபமில்லையல்லவா?'' என்று கேட்டான்.

பிச்சி கலகலவென்று நகைத்தாள். ''ஆருயிர்த் தலைவரே! என் மனம் எப்போதும் சலனமற்ற தடாகம், என்று உங்கள் கரம் பிடித்தேனோ அன்றே உங்களை இதயத்தில் அமர்த்திப் பூசனை செய்யத் தொடங்கிவிட்டேன். நான் பூஜிக்கும் தெய்வம் என்னை ஏமாற்றிவிடாது என்று எனக்குத் தெரியும்'' என்றவுடன், ஆதித்தன் அது கோயில் சந்நிதி என்பதையும் கவனியாது இளங்கோபிச்சியை மெல்ல அணைத்து, ''என் அன்பே, இளங்கோ! நீ பூஜிக்கும் தெய்வம் உன்னை நிச்சயமாக என்றுமே உயர்வான இடத்தில் வைக்கும். கவலைப்படாதே!'' என்றான். பிறகு அவளை நோக்கி, ''இளங்கோ! நேற்று விக்கியண்ணன் உன்னிடம் செய்தி கூறியபோது இருந்த மனநிலைக்கும் இன்றைய நிலைக்கும் அதிக வேறுபாடிருக் கிறதல்லவா?'' என்று கேட்டான்.

''ஆமாம், நேற்று என் மனநிலையே வேறு. நான் கோபாவேசத்துடன் அரசரிடம் ஓடினேன். நோய்வாய்ப்பட்டுப் படுத்திருந்த அவர் பாதங்களைப் பிடித்துக் கொண்டு கதறினேன். அந்தப்புரத்திற்குள் பல்லவ இளவரசியை நுழைய விடமாட்டேன் என்று கண்ணீர்க் கோலமிட்டு விம்மினேன்.



அரசர் மெல்ல எழுந்தார். அவர் எனக்கு ஆறுதல் மொழி கூறினார். நம்பிக்கையான வார்த்தைகளைத் தெரிவித்தார். 'இளங்கோ! நீ அரசியாகப் போகும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது' என்றார். நான் அழுகைக்கிடையேயும் சிரித்தேன். 'ஏன் சிரிக்கிறாய் மகளே?' என்று அவர் கேட்டார்."

''என் தலைவர் அரசராகும்போது நான் அரசியாவது இயற்கையாக நடக்க வேண்டியதுதானே? ஆனால் நான் விரைவில் அரசியாவதை விரும்பவில்லை. நீங்கள் தஞ்சைப் பேரரசராய் இன்னும் பலகாலம் நீடூழி வாழ வேண்டும். நான் இளவரசியாகவே வாழ்நாள் முழுவதும் இருக்கச் சித்த மாயிருக்கிறேன். என்றேன்.'

அரசர் மெல்லச் சிரித்தார். 'பேதைப் பெண்ணே! நான் அதைக் குறிப்பிடவில்லை. என் உயிர் சாசுவதமன்று. என்றாவது நான் இறந்துத்தானாக வேண்டும். என் உயிர் இதயக் கூண்டிற்குள் ஏன் தங்கியிருக்கிறது தெரியுமா? என் மகன் ஆதித்தனது கனவுகள் நனவாவதைக் காண்பதற்காக. ஆதித்தன் கனவு என்னவென்று உனக்குத் தெரிந்திருக்குமே? பல கனவுகள் இருந்தாலும் சோழ நாடு பல்லவர் பிடியினின்று முழுமையாக விடுதலையடைய வேண்டுமென்பது ஒன்றாகும். இப்போது நாம் பல்லவர்களுக்குத் திறை செலுத்துவது இல்லை, என்றாலும் சோழ நாட்டின் வடக்குப் பகுதிகளைத்தானே பல்லவர்கள் ஆள்கிறார்கள்? நமது பூமி நமக்கு வரவேண்டாமா? ஆதித்தன் அந்தக் கனவைத்தான் காண்கிறான். பல்லவ நாட்டைச் சோழ நாட்டுடன் சேர்க்க வேண்டும் என்பது அவன் கனவு. அந்தக் கனவு நனவாகும் காலம் வந்துவிட்டது. பல்லவ இளவரசியை ஆதித்தன் கவர்ந்து வந்துவிட்டான். அபராஜிதன் அடையவிருந்தவளை ஆதித்தன் - அதுவும் அவன் உயிர் நண்பன் கவர்ந்து வந்துவிட்டான் என்றால் அபராஜிதன் கையைக் கட்டிக்கொண்டிருப்பானா? படைகளுடன் நம்மைத் தாக்க வருவான். போர் மூளும். காஞ்சியில் புலிக்கொடி பறக்கும். காஞ்சியில் ஆதித்தனுக்கு என் திருக்கரத்தால் முடிசூட்டுவேன். அவன் அரசன், நீ அரசி' என்றார். என் மெய் சிலிர்த்தது. என் கண்ணீர்க் கோடுகள் ஆனந்தக் கோலமிட்டன. என் கோப[illegible] மறைந்தது'' என்று இளங்கோபிச்சி உணர்ச்சியுடன் பேசினா[illegible]

''அப்படியென்றால் நீ அரசியாவதற்கான வாய்ப்[illegible] ஏற்படுவதால்தான் மற்றொரு பெண் அந்தப்புரத்திற்கு[illegible] வருவதற்குச் சம்மதிக்கிறாய், அப்படித்தானே?'' என்றா[illegible] ஆதித்தன்.

''இல்லை, இல்லை. உங்கள் கனவு நனவாகப் போகிறது என்பதற்காக, வைரக்கண்ணியை நீங்கள் கவர்ந்து வராவிடில் பல்லவ அரசர் நம்மீது ஏன் போர் தொடுக்கப் போகிறார்? போர் தொடுக்காவிடில் நமது நாடு மேலும் விரிவாவதேது? அதனால்தான் உங்கள் செய்கையை வரவேற்றேன்'' என்றாள்.

இளங்கோ பிச்சியின் கன்னத்தை மெல்ல வருடி, ''நன்றாகப் பேசக் கற்றுக் கொண்டுவிட்டாய்'' என்றான் ஆதித்தன்.

தஞ்சையில், மக்கள் அடைந்த குதூகலம் ஓரிரண்டு நாள்களுக்குத்தான் இருந்தது. மதிலைச் சீர்செய்வதிலும், அகழியில் தூர்ந்துபோன இடங்களைச் சரி செய்வதிலும் கோட்டைக் கதவுகளைப் பலப்படுத்துவதிலும் வீரர்கள் முயன்றனர். திடமுள்ள இளைஞர்கள் படைகளில் சேர்ந்தனர். அருகிலுள்ள கிராமங்களில் முன்னேற்பாடாக கொல்லர் உலைக்களங்களில் உருவான வேலும், வாளும், கேடயங்களும் தஞ்சைக் கோட்டைக்குள் கொண்டு வரப்பட்டன.

பழையாறையிலுள்ள நந்திபுரக் கோட்டைக்கும் ஏராளமான ஆயுதங்கள் அனுப்பப்பட்டன. மேலும் மண்ணியாற்றங்கரை ஓரமாக உள்ள கிராமங்களில் சோழப் படை வீரர்கள் பாடி வீடமைத்துக் கொண்டனர். அவர்களுக்குப் போதுமான உணவு கிடைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டன.

திருக்குடந்தைக்கு வடக்கே கொள்ளிடக்கரை ஓரமாக சோழர் படைகளின் ஒரு பகுதியை விக்கியண்ணன் அணிவகுத்துச் சென்றான்.

கோட்டைக்குள்ளே ஏராளமான படை வீரர்களை நிற்க வைக்காமல் பல பகுதிகளாகப் பிரித்து அவர்களை வெவ்வேறு இடங்களுக்கு ஆதித்தன் ஏன் அனுப்புகிறார் என்ற காரணம் புரியாமல் பெரியவர்கள் பலர் வியப்புடன் பேசிக் கொண்டனர்.

''காஞ்சியினின்று பல்லவப் படைகளா சோழ நாட்டின் மீது படையெடுத்து வருகின்றன? நம்ப முடியவில்லையே?'' என்று சிலர் தங்கள் வியப்பைத் தெரிவித்தனர்.

ஆதித்தன் ஒவ்வொரு பாடி வீட்டிற்கும் நேரடியாகவே சென்று மேற்பார்வையிட்டு அங்கிருந்த வீரர்களை உற்சாகப் படுத்தினான். பல்லவர் படைகளில் பத்தில் ஒரு பங்குகூட இல்லாத நிலையில் போர்த்திறனால், போர் முறைத் தந்திரத்தால் தான் பல்லவர்களை வெல்ல முடியும் என்பதை ஆதித்தன் நன்றாக உணர்ந்திருந்தான். வாள் சுழற்றுவதிலும், வேல் வீசுவதிலும் திறமை மிகுந்த இளைஞர்கள் மிகுந்த உற்சாகத் துடன் போர்க்களத்தை எதிர்நோக்கியிருந்தனர்.



சோழ நாடு விடுதலையடைய வேண்டும். தங்கள் சொந்த மண் மாற்றார் பிடியினின்று மீள வேண்டும் என்ற இலட்சிய வெறியுடன் அந்த வாலிபர்கள் இருந்தனர்.

காஞ்சியினின்று வந்த வைரக்கண்ணியைச் சந்திக்க விரும்புவதாக இளங்கோ பிச்சி கூறியபோது ஆதித்தன் கூடாதா?'' என்று இளங்கோபிச்சி கேட்டாள்.

இளங்கோ பிச்சியின் பெருந்தன்மையைக் கண்டு உணர்ச்சி வயப்பட்ட ஆதித்தன் அவளை ஆசை நிறைந்த விழிகளுடன் நோக்கி, ''சோழ நாட்டில் பேரரசியாகத் திகழக்கூடிய தகுதி உனக்குத்தான் உண்டு. கண்ணே! அன்பே, ஆரமுதே! வைரக் கண்ணியை அழைத்துவரும் போது நான் ஏனோ மனத்திற்குள் மிகவும் அஞ்சினேன். தஞ்சையில் பெரும் புயல் வீசப்போகிறது என்று பயந்தேன். நாம் ஏதேனும் தவறு செய்துவிட்டோமோ என்றுகூடக் கவலைப்பட்டேன். ஆனால் உன் பெரிய மனம் என்னைத் திக்குமுக்காடச் செய்துவிட்டது'' என்றான்.

''வைரக்கண்ணியின் வருகையால் தொண்டை மண்டலம் நம் நாட்டுடன் சேரப் போகிறது என்பதால், திருமகளே தஞ்சைக் கோட்டைக்குள் அடியெடுத்து வைத்ததுபோல் நான் உணர்கிறேன். திருமகளை நான் சந்திப்பதில் எனக்குத்தானே பெருமை?'' என்றாள் இளங்கோபிச்சி.

வைரக்கண்ணியிடம் ஏனோ முன்பு காஞ்சியிலிருந்த போதிருந்த கலகலப்பு இல்லை. புத்தாடை அணியாமல், அலங்காரங்கள் செய்து கொள்ளாமல் விழிகளில் ஒருவித ஏக்கத்துடன் படுத்திருந்தாள்.

இளங்கோபிச்சி அவளருகே சென்று அவளது கன்னத்தை மெல்ல வருடினாள். ''பல்லவ இளவரசியின் வேல் விழிகளில் கலக்கம் ஏன்? எனக்குக் காரணம் புரிகிறது'' என்றாள்.

இளங்கோபிச்சி தன் அழகிய நீள் விழிகளில் ஒருமுறை அவளை உற்று நோக்கினாள். என்ன காரணத்தை இளங்கோ பிச்சி கூறப்போகிறாள் என்று கேட்பதுபோல் தோன்றியது அந்தப் பார்வை.

''காஞ்சியிலுள்ள முழுச் சுதந்திரம் உனக்கு இங்கு இல்லை என்ற உணர்வு ஏற்படுகிறதல்லவா?'' என்று இளங்கோ கேட்டாள்.

வைரக்கண்ணி எழுந்து உட்கார்ந்தாள். தன் ஆடைகளைச் சரி செய்து கொண்டு, ''எப்பொழுது என் உள்ளத்தைச் சோழ இளவரசரிடம் பறிகொடுத்தேனோ, அப்போதே சுதந்திரத்தை

இழந்துவிட்டேன்'' என்று கூறியவள், மெல்லச் சிரிக்க முயன்றாள்.

''நான் அதைச் சொல்லவில்லை. அன்புக்கு நாங்கள் அடிமைதான். காஞ்சி மாளிகையில் நீ இருந்ததற்கும் இங்கு இருப்பதற்கும் வேற்றுமை தெரிகிறதல்லவா?'' என்று இளங்கோ பிச்சி கேட்டாள்.

''ஒரே ஒரு வேற்றுமையைத்தான் உணர்கிறேன். என் உயிருக்குயிரான பணிப்பெண்களைக் காஞ்சியிலேயே விட்டு வந்துவிட்டேன். அவர்கள் நிலை எப்படி ஆகிறதோ? சற்று அவசரப்பட்டு விட்டேனோ என்று தோன்றுகிறது'' என்றாள்.

''காஞ்சியிலுள்ளப் பணிப்பெண்களைவிட பல மடங்கு சிறந்தவர்களை உனக்களிக்கிறேன். அது ஒரு குறையாக உனக்குத் தோன்றாது இனி'' என்றாள் இளங்கோ பிச்சி.

''எனக்கு உண்மையாக உழைத்தார்கள். பற்றும் பாசமும் மேலோங்கி இருந்தன. இனி அத்தகையவர்களை அடையப் பல நாள்களாகலாம். அத்துடன் மற்றொன்று...'' என்று கூறி நிறுத்தினாள் வைரக்கண்ணி.

''என்ன சொல்லு, வைரக்கண்ணி...'' - பரிவுடன் கேட்டாள் இளங்கோபிச்சி. அவளுடைய தோள்களை மெல்ல அணைத்து, ''சோழ இளவரசர் பெரும் வீரராக இருக்கலாம். ஆனால் பல்லவ நாட்டினின்று வரும் பெரும் படைகளை எதிர்த்து நிற்கும் ஆற்றல் சோழ வீரர்களுக்கு இருக்கிறதா என்ற சந்தேகம் எனக்கேற்பட்டது. என் பொருட்டு ஒரு கணத்தில் இளவரசர் பல்லவ அரசரிடம் விரோதத்தைப் பெற்று விட்டாரே! நான் தவறு செய்து விட்டேனோ? காமம் என் கண்களை மறைத்து விட்டது. காதல் கொண்டு, காத்திருந்து, அதில் வெற்றிக்குப்பின் மாலையிடலாம் என்று கூறியிருக்கலாம். காஞ்சி மாளிகை யினின்று வெளியேறி விட வேண்டும் என்ற பரபரப்பும் துடிப்பும் ஏனோ எனக்கு ஏற்பட்டது. அந்த ஒரு கணம் நான் யோசித்திருந்தால் பலருடைய சங்கடங்களை நான் தவிர்த்திருக்கலாம்'' என்று வைரக்கண்ணி சோர்வும், வேதனையும், சற்றுப் பயமும் கலந்த குரலில் பேசினாள்.

இளங்கோ அவளுடைய வேதனைப் பேச்சிற்கு அஞ்சிவிட வில்லை. கலகலவென்று நகைத்து, ''இப்போது புரிகிறது. உனக்கு ஒருவிதப் பிரிவு ஏக்கம். அருகே பணிப்பெண்கள் இல்லை. இளவரசரும் அந்தப்புரத்திற்கு எப்போது வருவாரோ என்ற கவலை. அந்தப்புரத்திலுள்ள பல பெண்களோடு பெண்களாக இருந்துவிட நேருமோ என்ற கவலை. அஞ்சாதே



வைரக்கண்ணி! பல்லவப் படைகளுக்கு நாங்கள் அஞ்ச மாட்டோம். எதிர்த்து நிற்கும் துணிவு இருக்கிறது. பல்லவப் படைகளை இன்னும் சில நாள்களிலேயே எதிர்'பார்க்கிறோம். போரின் முடிவைப் பற்றிக் கவலையே இல்லை. போருக்கு முன்பாகவே உனக்கும் இளவரசருக்கும் திருமணம் நடைபெறும். நானே முன் நின்று ஏற்பாடு செய்கிறேன். பெற்றோரற்ற, உற்றார் உறவினரைத் துறந்து வந்திருக்கும் உனக்கு, அன்னையாயும், சகோதரியாயும் மற்றும் உற்றார் உறவினராயும் நான் உடன் இருக்கிறேன். கவலைப்பட வேண்டாம்'' என்று கூறி வைரக்கண்ணியின் கண்ணீரைத் துடைத்து; கலைந்திருந்த கேசத்தைக் கோதிவிட்டாள்.

பின்னர், விடைபெற எழுந்து நின்ற இளங்கோபிச்சி, ''வைரக்கண்ணி! இன்னும் சில நாள்களுக்கு நீ பொறுத்திருக்க வேண்டும். இளவரசர் உன்னைச் சந்திக்க மாட்டார். அதற்குள் திருமண ஏற்பாடுகளை நான் செய்கிறேன். வெற்றித் திருவை மணக்கும் முன்பு வைரக்கண்ணிக்கு அவர் மாலையணிவிப்பார் உறுதி'' என்றாள். நடந்தவற்றை ஆதித்தனிடம் இளங்கோபிச்சி கூறினாள். அவளிடம் அவனுக்கு மேலும் மதிப்பு அதிகமாகியது.

''நாட்டின் அரசி ஒரு தாயைப் போன்றவள் என்று சொல்வார்கள். அதைச் செயலில் புலப்படுத்திவிட்டாய். திருமண விஷயமாக வைரக்கண்ணியிடம் வாக்களித்து விட்டாயே. அரசரிடம் அனுமதி கேட்க வேண்டாமா? நகரமே போர் முழக்கத்தில் இருக்கும்போது, திருமண முழக்கம் ஏற்படுவது சாத்தியமா?'' எனறு கேட்டான்.

இளங்கோபிச்சி ஆதித்தன் மார்பில் முகத்தை மெல்லப் புதைத்துக் கொண்டு, ''இந்த இதயத்தில் என் ஒருத்திக்குத் தான் இடமிருந்தது. மற்றொருத்திக்கு இடம் ஏற்படுத்தும் பெரும் பொறுப்பை ஏற்றிருக்கிறேன். நான் இப்போதே உங்கள் தந்தையைச் சந்திக்கப் போகிறேன். போர் முழக்கம் ஏற்படும் முன்பு மண முழக்கம் ஒலிக்கும்'' என்றாள்.

இளங்கோ பிச்சி விஜயாலய சோழரைச் சந்திக்கச் சென்ற போது, அங்கே பரபரப்பு மிகுந்திருந்தது. ''இளவரசருக்குச் சொல்லி அனுப்புங்கள். பெரிய மருத்துவரை அழைத்து வாருங்கள்'' என்று கூறியவாறு அங்குமிங்கும் அதிகாரிகள் ஓடிக் கொண்டிருந்தனர்.

திடீரென்று சோழ மன்னன் விஜயாலயன் இதய வலி அதிகமாகித் தன் நினைவிழந்து கிடந்தார்.

○



01 09

## 47. பெருமழை பெய்தது பேரரசன் திகைத்தான்

விஜயாலய சோழ தேவரின் ஆவி பிரிந்தது. சோழ நாட்டின் பழம் பெருமையை மீண்டும் புதுப்பித்து நிலைநாட்டுவதற்காக படாத பாடுபட்ட அந்த முதிய வீரரின் இயக்கம் ஓய்ந்து விட்டது. எதிரிகளைக் கண்டு அஞ்சாது, எந்நேரத்திலும் வாளெடுத்துச் சுழற்றும் வல்லமை பெற்ற அந்த மாவீரனின் கரங்கள் குளிர்ந்துபோய் துவண்டு வீழ்ந்துவிட்டன. தொண்ணூற்றாறு விழுப்புண்களை மேனியெங்கும் பெற்ற, வடுக்களையே ஆபரணங்களாகக் கொண்ட, அந்த அஞ்சா நெஞ்சனின் இதயம் இயங்குவதை நிறுத்திவிட்டது. அந்த வெற்றிப் புரவலன் விழுப்புண் தழும்பை ஆரமாகக் கொண்டோன். சண்டப் பிரசண்டன் விழிக்காது மஞ்சத்தில் மீளாத் துயில் கொண்டு கிடந்தார்.

பரகேசரி விஜயாலயன் நாற்பதாண்டுகளுக்கு முன்பு இதே தஞ்சைக் கோட்டையினுள், ஒருவருமறியாமல் சாதாரண குடிமகனாக நுழைந்தார். கோட்டைப் பலத்தை நேரே கண்டறிந்தார். தஞ்சைக் கோனாக ஆட்சி புரிந்து கொண்டிருந்த முத்தரையரிடமிருந்து தஞ்சைக் கோட்டையை எப்படிக் கைப்பற்றுவது என்று அப்போதே திட்டமிட்டுக் கொண்டார்.

தமது மூதாதையர்களின் புலிக்கொடி தெற்கே வெள்ளாறு முதல் வடக்கே வேங்கடம் வரைப் பரந்து விரிந்திருந்ததைப் பற்றி அவர் அறிந்திருக்கிறார். தமது வாழ்நாளுக்குள், சரிந்த சோழ நாட்டை நிமிர்ந்து நிற்க வைக்க வேண்டும் என்று உறுதி கொண்டார்.

ஒருநாள் அவர் சில குதிரை வீரர்களுடன் தஞ்சைக் கோட்டையைத் தாக்கினார். கடும் போருக்குப் பிறகு தஞ்சையில் புலிக்கொடி ஏற்றப்பட்டது. பிறகு வல்லம், செந்தலை ஆகியவற்றைக் கைக்கொண்டார். போதுமான பலமில்லாததால் பல்லவர்களுக்கு அடங்கிய குறுநில மன்னர் என்ற தகுதிதான் அவருக்கு இருந்தது. ஆண்டுதோறும் திறைப் பணத்தைக்



காஞ்சிக்கு அனுப்ப நேர்ந்தது. தஞ்சையைச் சுற்றியிருந்த பகைவர்களுடன் அவ்வப்போது போர் புரிய நேர்ந்தது. தெற்கே பாண்டியர்களுடன் சேர்ந்து கடுமையாக பாண்டியர்களுடன் போர் செய்ய வேண்டியிருந்தது.

தஞ்சையைச் சுற்றியுள்ள நாடு பல்லவர்கள் வசம் இருந்தாலும் அந்த மண்ணைச் சோழ மண் என்றே அவர் கருதி வந்தார். பாண்டியர்களின் கோட்டை ஒன்றும், மிகவும் அழகிய மாளிகையொன்றும் மண்ணியாற்றங் கரையிலிருந்தது. சோழ பூமியில் பாண்டியர்கள் இருப்பதாகத்தான் அவருக்குத் தோன்றியதே தவிர, பல்லவர்கள் நாட்டைப் பாண்டியர் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணத் தோன்றவில்லை. "பாண்டியர்களைக் காவிரிக்கு வடக்கே ஓட்ட வேண்டும் படையுடன் வருக அல்லது படை தந்து உதவுக" என்று பலமுறை பல்லவ மன்னர் நிருபதுங்கனுக்கும், அவருக்குப் பிறகு அபராஜிதனுக்கும் செய்தி அனுப்பியிருக்கிறார். அபராஜிதன் செவியில் ஏற்றிக் கொள்ளவில்லை என்பது மன்னர் விஜயாலயனுக்குப் பெரும் கவலையை அளித்தது.

ஒவ்வொரு நாளும் நிசும்பசூதனி தேவியின் திருக் கோயிலுக்குச் சென்று, "சோழ நாட்டிற்கு மகோன்னத எதிர்காலத்தைத் தருவாய் தேவி!" என்று வேண்டிக் கொள்வார். காலம் பறந்து கொண்டிருந்தது. ஆதித்தன் பிறந்த பிறகு அவருக்குப் புதுத்தெம்பு ஏற்பட்டது. வீர மகனின் உறுதுணையுடன் சோழ நாட்டில் புதிய ஒளி ஏற்றலாம் என்ற நம்பிக்கை பிறந்தது. சிறிது சிறிதாக மலையமான்கள் நட்பைப் பெற்றார். சேர மன்னர் உறவு ஏற்பட்டது. ஆதித்தனைப் பல தடவை சேர நாட்டிற்குச் சென்று மலைவளங்கண்டு, விற்பயிற்சி பெற்று, யானையேற்றம் அறிந்து வரச் செய்தார். சேர மன்னன் தாணு ரவி, ஆதித்தனைப் போல் இளம் வயதினன். ஆதித்தனுடைய உயிருக்குயிரான நண்பனானான் தாணு ரவி.

புறபலமும், அகபலமும் பெற்ற விஜயாலயர் ஒவ்வொரு நாளும் திட்டமிட்டார். தன் வீர மகன் ஆதித்தனோடு ஒவ்வொரு சிறு செயலையும் கலந்தாலோசித்தார். வல்லவரையர் மகளை ஆதித்தனுக்கு மணம் புரிந்து வல்லவரையர்களுடன் உறவைப் பெரிதும் பலப்படுத்திக் கொண்டார். ஆதித்தன் உள்ளத்தில் சோழ நாட்டைப் பற்றிய நம்பிக்கையை வளர்த்தார்.

சோழ நாட்டை ஆண்ட முன்னோர்களின் வீரத்தையும், திறமையையும் அவ்வப்போது எடுத்துக் கூறி வந்தார்.

தொடித்தோட்செம்பியன், இளஞ்சேட் சென்னி, கரிகாலன், கிள்ளிவளவன், நலங்கிள்ளி, மாவளத்தான், பெருநற்கிள்ளி, நெடுநற்கிள்ளி, செங்கண்ணான் ஆண்ட சோழ நாட்டின் பெருமைகளைக் கேட்கக் கேட்க ஆதித்தன் உள்ளத்தில் சுதந்திர வேட்கை நீரூற்றைப்போல் பீரிட்டது. தெற்கே உள்ள பாண்டியரையும், தொண்டை மண்டலத்தை ஆக்கிரமித்துக் கொண்டு பேரரசர் என்ற பெருமையுடன் ஆண்டுவரும் பல்லவர்களையும் வெல்ல வேண்டும் என்ற துடிப்பு அவன் உள்ளத்தில் எரிமலை போல் எழுந்தது.

''இப்போதே, காஞ்சிமீது படையெடுத்துச் சென்று விடட்டுமா?'' என்று துடிப்புடன் எழுந்த ஆதித்தனைக் கையமர்த்திய விஜயாலயர், ''ஆதித்தா! போர் என்பது நீயும் அபராஜிதனும் மட்டும் நேருக்கு நேர் நின்று கொண்டு சண்டையிடுவதன்று. படைகள் மோதும். பரிகள் மோதும். கரிகள் மோதும். வில்லவர்கள் மோதுவர். போர்த்தந்திரம் முழுமையாகப் பிரயோகிக்கப்படும். அதனால்...'' என்று விஜயாலயர் கூறுவதற்குள் ஆதித்தன் நிமிர்ந்து நின்று, ''நம்மிடம் பரிகள், கரிகள் இல்லையா?'' என்றான்.

''இல்லை, நம்மிடம் பல்லவப் படைகளை மோதித் தாக்குமளவுக்கு இல்லை. கைதேர்ந்த வீரர்கள் முந்நூறு நானூறு பேர் மட்டும் உள்ளனர். அவர்களை வைத்துக் கொண்டு பல்லவர்களை எதிர்த்து நிற்கக்கூடாது. காலம் கனியும் வரை காத்திருப்போம். இளைஞர்களுக்குப் போர்ப் பயிற்சி கொடு. சேர நட்டரசருடன் இன்னும் நெருங்கிப் பழகு. தேவைப்படும் போது யானைகளை அனுப்புமாறு சொல்லிவை...'' என்றார்.

''இப்பொழுதே தாணு ரவியிடமிருந்து வேழங்களை வரவழைப்பேன்.''

''யானையைக் கட்டித் தீனி போட வேண்டும். நினைவில் வைத்துக் கொள்...''

''பிறகு என்ன செய்வது?''

''காலம் வரக் காத்திருப்பது'' என்ற விஜயாலயர் யோசனையை ஆதித்தன் தவறாமல் கடைப்பிடித்தான்.

இடையில் பாண்டியர்கள் பல்லவர்களின் தெற்கு எல்லையைக் கவர்வதற்குப் படையெடுத்து வந்தார்கள். அபராஜிதன் சோழர்களின் உதவியை நாடினான்.

அப்போது விஜயாலயர் சொன்னார்: ''ஆதித்தா! காலம் கனிகிறது. பாண்டியர்களை முறியடிக்கத் திட்டம் வகுத்து, நம் முழுத் திறமையையும் காட்டிப் போர் புரிவோம்.''



''பல்லவர்கள் மீது பாண்டியர்கள் படையெடுப்பதைத் தடுக்க நாம் ஏன் போரில் ஈடுபட வேண்டும்?''. ஆதித்தன் கேட்டான்.

விஜயாலயன் மெல்ல நகைத்தார். ''ஆதித்தா! பல்லவ நாட்டுத் தெற்கு எல்லை என்பது நம் நாட்டின் தெற்கு எல்லை என்பதை மறந்துவிடாதே!''

வலிமை மிகுந்த பாண்டியர் படைகளைப் பல்லவர் படைகள் எதிர்த்தன. உதவிக்கு ஆதித்தன் போர்க்கோலம் பூண்டான். கங்க நாட்டுப் பிருதிவீபதி உதவிக்கு வந்தார். குருக்ஷேத்திரப் போரைப் போன்று பெரும்போர் நடைபெற்றது. ஆதித்தனுடைய பராக்கிரமத்தைக் கண்டு அபராஜிதன் வியப் படைந்தான். ஆதித்தன் தலைமையில் வந்த சோழர் படைகள் பாண்டியர்ப் படைகளைக் கடுமையாக எதிர்த்தன. ஆனால் பிருதிவீபதி போரில் கொல்லப்பட்டான். தன் நண்பன் இறந்த செய்தி கேட்ட ஆதித்தன் வெகுண்டெழுந்தான். திருப் புறம்பியத்தில் ரத்த ஆறு ஓடியது. பாண்டியர் படுதோல்வி கண்டனர். மண்ணியாற்றங்கரையில் தங்களுக்குச் சொந்தமான மாளிகையை விட்டோடினர். உறையூரையும் கடந்து, காவிரிக்குத் தென்புறம் தாண்டி, வெள்ளாற்றங்கரை வரையில் பாண்டியர்களின் எஞ்சிய படைகள் 'செத்தோம் பிழைத்தோம்' என்று ஓடும் வரையில் ஆதித்தன் விரட்டிச் சென்று வெற்றிக் கொடி நாட்டினான்.

தஞ்சையில் மிகக் கோலாகலமான வெற்றிவிழா நடை பெற்றது. அபராஜிதனுக்குப் பெரும் விருந்து வைத்து விஜயாலயர் மகத்தான காரியத்தைச் சாதித்துக் கொண்டார். நந்திபுரக் கோட்டையையும் மற்றும் அதைச் சுற்றிலுமுள்ள பகுதிகளையும் சோழர்களுக்குத் தந்துவிட்ட அபராஜிதன், ''இனி நீங்கள் சுதந்திரமாக உங்கள் பகுதியை ஆளலாம்'' என்று கூறிவிட்டார்.

''ஆதித்தா! காலம் கனிந்து நமக்கு முதல் வெற்றியை அளித்தது, பார்த்தாயா?'' என்று கேட்டார் விஜயாலயர்.

தன் தந்தையின் மதியுடைமையையும், ராஜதந்திரத் திறமையையும் அறிந்து மகிழ்ந்து போற்றிய ஆதித்தன். ''அடுத்து நான் செய்ய வேண்டியதைச் சொல்லுங்கள் தந்தையே!'' என்று வணங்கி நின்றான்.

விஜயாலயர் யோசனை கூறினார். சோழ இளவரசன் ஆதித்தன் கனவு கண்டான். கனவை நனவாக்கும் திட்டத்தில் ஒரு பகுதியாக பல்லவ நாட்டில் மாறுவேடத்தில் சுற்றுப்பயணம்

செய்தான். பல்லவ இளவரசியையும் கவர்ந்து வந்தான். சிற்பிகளும் தஞ்சைக்கு வர ஏற்பாடு செய்தான். ஆதித்தன் நடவடிக்கைகளை விஜயாலயர் பாராட்டினார். போர் வருவது உறுதி என்பதை அவர் அறிவார். பல்லவர் படைகள் தஞ்சைக் கோட்டையைத் தாக்கினால் என்ன செய்ய வேண்டும் என்பதற்கான திட்டங்களைக் கூறினார்.

ஆனால், ஆனால், ஐயோ - அபராஜிதன் படைகள் வருவதற்கு முன்பே, ஆதித்தன் போர்ப் புதுமைகளைக் காணுமுன்பே அவர் இறந்துவிட்டாரே!

''சூரிய குலத் திலகமே! நம் குலப் பெருமையை எட்டுத் திக்கும் பரவச் செய்ய வேண்டும் என்று துடிப்புடனிருந்த மாவீரரே! என்னைத் தனியே விட்டு நீங்கள் எங்கே ஏகினீர்?'' என்று ஆதித்தன் புலம்பினான். கண்ணீர் ஆறாய்ப் பெருகியது.

ஆதித்தன் கண்ணீரைக் கண்டு வானமும் விடாது பொழிய முற்பட்டது. சப்த மேகங்களும் கண்ணீர் விடுவதைப் போல் பொழிந்தன. ஆறுகளில் பெருவெள்ளம் பெருக்கெடுத்தது. கிளை ஆறுகள் ஒன்று சேர்ந்தன. கொள்ளிடம் இருகரையையும் தொட்டோடியது.

விக்கியண்ணன் பல்லவப் படைகளை எதிர்பார்த்து கொள்ளிடத்தின் வடகரையில் இருந்தவன் பெரும் மழையைக் கண்டு செய்வதறியாது திகைத்தான்.

மழை தஞ்சைப் பகுதியில் மட்டும் பெய்யவில்லை. திருக்கோவிலூரில் பெய்தது. உத்திரமேரூரில் பெய்தது. காஞ்சியில் பெய்தது. மழை பெய்வதற்கு முன்பே பல்லவப் படைகள் அணிவகுத்து சங்கநாத முழக்கத்துடன், பேரிகை முழக்கத்துடன் பறை ஒலியுடன், முரசு ஒலியுடன் புறப்பட்டன.

தென் பெண்ணை ஆற்றங்கரையை அடைவதற்குள் ஊழிக்கால மழையைப் போல் பெய்த பெருமழையைக் கண்டு திகைத்த அபராஜிதன் செய்வதறியாது நின்றான்.

உணவுப் பண்டங்கள் மழையில் நனைந்தன. குதிரைகள் நனைந்தன. காளைகள் நனைந்தன. வேழங்கள் தடுமாறின.

அடுத்து என்ன செய்யலாம் என்ற கவலையுடன் அபராஜிதன் ஓடும் வெள்ளத்தைப் பார்த்தவாறே நின்று கொண்டிருந்தான்.

O

## 48.வைரக்கண்ணி கொண்டு வந்த பரிசு

தஞ்சைக் கோட்டையை மேலும் பலப்படுத்தப்போதிய அவகாசம் கிடைத்தது. மழை விட்டவுடன் நூற்றுக்கணக்கான மக்கள் மதிற் சுவர்களைப் பலப்படுத்தினர். மதிலின் மீது மறைந்திருந்து அம்புகளை எய்துக் கொத்தளங்களை அமைத்தனர். வாயிற் கதவுகளுக்கு இரும்புச் சட்டங்கள் அமைத்தனர். அகழிகளை மேலும் ஆழமாக்கினர். மழை நீரால் அகழி நிறைந்தது.

பழையாறைக்கருகிலுள்ள நந்திபுரக் கோட்டையையும் பலப்படுத்தும் பணிகள் இரவு பகலாக நடைபெற்றன. பல்லவப் படைகளால் முதலில் தாக்கப்படும் என்கிற நிலையிலிருந்த அந்த நந்திபுரக் கோட்டைக்குள்ளே, தேர்ந்தெடுத்தவர்கள் முந்நூறு பேர், படைக்கலன்களுடன் ஆயத்தமாக இருந்தனர்.

பழையாறையினின்று தில்லைச் சிதம்பரம் செல்லும் சாலையில் முக்கியமான இடங்களில் சோழர்ப் படைகள் பாடி வீடமைத்துக் கொண்டு தங்கியிருந்தன.

கொள்ளிடத்து வடகரையில் விக்கியண்ணன் பெரும் படைகளுடன் காத்திருந்தான். கொள்ளிடத்தில் வெள்ளம் இருகரைகளையும் அணைத்துக் கொண்டு ஓடியது. சில இடங்களில் கரையையும் மீறி வயல்களுக்குள்ளேயும் ஊர்களுக்குள்ளேயும் புகுந்துவிட்டது.

பல்லவப் படைகள் இப்போது வரமாட்டா என்ற நம்பிக்கை உறுதியுடன், விக்கியண்ணன் தஞ்சையை நோக்கி விரைந்தான். தந்தை இறந்ததால் துயருற்றிருக்கும் ஆதித்தனைத் தன் ஆறுதல் வார்த்தைகளால் மாற்ற வேண்டும் என்பதும் அவனுடைய பிரயாணத்தின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று.

விக்கியண்ணனைக் கண்ட ஆதித்தன் மடை திறந்தது போல் துக்கத்தைப் புலம்பலால் புலப்படுத்தினான். வீரன் ஒருவன் இவ்வாறு அழுவானா என்று எண்ணும்படி இருந்தது. அவன் வாய்விட்டுக் கதறியது.



01 0

உடன் பிறவாச் சகோதரனான விக்கியண்ணன். ஆறுதல் வார்த்தைகளை எடுத்துக்கூறி, பிறந்தவர் இறப்பது உலக தர்மம் என்பதைப் பல நூல்களிலிருந்து மேற்கோள் காட்டி விளக்கி, ஆதித்தனின் துயரத்தைத் தணிய வைத்தான்.

இளவரசன் ஆதித்தன் - பரகேசரி ஆதித்த சோழ தேவனாக தஞ்சை அரியணையில், சிறப்பாய் மகுடஞ் சூட்டப் பெற்றான். போர் மேகங்கள் குமுறிக் கொண்டு சண்ட மாருதத்துடன் வீசும் வேளையில், பரகேசரி ஆதித்த சோழனின் கரங்களுக்கு மேலும் உறுதி தரவேண்டியது தம் பணி என்று ஒவ்வொரு சோழ அரசியல் அதிகாரிகளும் கருதினர்.

விக்கியண்ணனும், ஆதித்தனும் படைபலத்தையும், தற்காப்பு நடவடிக்கைகளையும் சுற்றிப் பார்த்து வந்தனர்.

''யானைப் படைகள் நம்மிடமில்லாதது பெரிய குறை'' என்று விக்கியண்ணன் வருத்தப்பட்டுக் கொண்டான். ''சேர நாட்டிலிருந்து ஏதாவது செய்தி வந்ததா?'' என்றும் விசாரித்தான்.

''தந்தை இறந்த செய்தியைச் சேரமன்னர் தாணு ரவிக்குச் சொல்லி அனுப்பியிருக்கிறேன். அத்துடன் அபராஜிதவர்மன் படை திரட்டி வருவதைப் பற்றியும் செய்தி அனுப்பி யிருக்கிறேன். கொங்கு நாட்டிற்கும் செய்தி அனுப்பியுள்ளேன்'' என்றான் ஆதித்தன்.

''அபராஜிதன் நோக்கமே கொங்கு நாட்டின் மீது படையெடுப்பதில்தானே இருந்தது? அந்தப் பெரும் படையெடுப்பைத் தடுத்து நிறுத்தியதற்கு நாமும் ஒரு முக்கியக் காரணம் அல்லவா?'' என்று நடந்து போன சம்பவங்களை நினைவுபடுத்தினான் விக்கியண்ணன்.

ஆதித்தன் மௌனமாகக் கேட்டுக் கொண்டான். அவனும் பழைய சம்பவங்களை மீண்டும் நினைத்துப் பார்த்துக் கொண்டான். ''திருத்தணி முருக பிரானுக்குச் சொர்ணாபிஷேகம் செய்வதற்குக் கொங்கு நாட்டினின்று தங்கம் கொண்டு வர முயன்றான் அபராஜிதன். ஆனால் அவனுடைய திட்டம் திசை திரும்பிவிட்டது. ஆனால் நமக்குக் கூடத் தங்கம் தேவை, விக்கியண்ணா'' என்றான் ஆதித்தன்.

''பல்லவ கொக்கிஷமே நமக்குத்தானே?'' என்று கூறிச் சிரித்தான் விக்கியண்ணன்.

''அபராஜிதனை எளிதில் வென்றுவிட முடியும் என்று உறுதியாக நீ நினைக்கிறாயா விக்கியண்ணா?'' என்று கேட்டான்



ஆதித்தன். வேடிக்கையாகக் கேட்டாலும் அதில் வேதனையும், கவலையும் இல்லாமலில்லை.

''என்ன அப்படிக் கேட்டுவிட்டீர்கள் அரசே? போரில் வெற்றி நமக்குத்தான், சந்தேகம் என்ன? ஆனால், தங்கம் எதற்காக வேண்டும்? நீங்கள் எந்தக் கடவுளுக்கு அபிஷேகம் செய்யப் போகிறீர்கள்?'' என்று கேட்டான் விக்கியண்ணன்.

''விக்கியண்ணா! வரும் வழியில் இருந்த தில்லைச் சிற்றம்பலத்துக் கோயிலை நீ பார்க்கவில்லையா?'' என்று கேட்டான் ஆதித்தன்.

''ஆகா! சிதம்பரம் நடராசப் பெருமானைத் துதிக்காமல் வருவேனா?'' என்று மிகப் பெருமையாகக் கூறினான் விக்கியண்ணன்.

''கோயில் எனப்படுவது சிதம்பரம் என்று கூறுவார்கள். பொன்னம்பலவாணன் என்ற திருப்பெயரையுடைய கூத்த பிரானுடைய திருச்சபையில் பொன்னைக் காணோமே! தில்லைக் கோயிலைப் பொற் கோயிலாக்க வேண்டும் என்று பல நாட்களாகக் கனவு காண்கிறேன். அதற்கான தங்கத்திற்கு எங்கே செல்வது? தஞ்சைக் கருவூலத்தில் உள்ள செல்வம் ஒரு படையெடுப்பின் போது வீரர்களுக்கு உணவளிக்கக் கூடக் காணாது. என் கனவு, எப்படி, எப்போது, நிறைவேறும்?'' ஆதித்தன் குரலில் இலட்சிய வேகம் நிறைந்திருந்தது.

விக்கியண்ணன் மெல்ல நகைத்தான்.

''ஏன் சிரிக்கிறாய் விக்கியண்ணா?'' என்று கேட்டான் ஆதித்தன்.

''நீங்கள் எவ்வளவு கனவுகள் காண்பீர்கள் அரசே? இளவரசராக இளம் பருவ வேகத்தில் கனவு காண்பது இயற்கை. சோழ நாட்டரசராகி விட்டீர்கள். வல்லவரையர் மகளை மணந்துள்ளீர்கள். பல்லவ இளவரசியை மணந்து கொள்ளப் போகிறீர்கள். இன்னும் சிறு பிள்ளையைப் போல் கனவு காணலாமா?'' - விக்கியண்ணன் சிரிப்பை நிறுத்தாமல் கேட்டான்.

''கனவுக்கு வயது எல்லை கிடையாது. இலட்சியத்தின் பிறப்பிடமே கனவுதானே? அல்லது இப்படியும் சொல்லலாம். இதய பூமியிலே துளிர்க்கும் இளஞ்செடிகளின் மறுபெயர் கனவுதானே? சோழ அரசர் என்று பெரிய பெயரைக் கூறிவிட்டாய் விக்கியண்ணா! பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு

சேர, சோழ, பாண்டியர்கள் எனும் முடியுடை மூவேந்தர்கள், தமிழ்நாட்டை சம பலத்தோடு ஆண்டு வந்தார்கள். வடக்கே வேங்கடம் முதல், தெற்கே வெள்ளாறு வரை சோழ நாட்டின் எல்லை. பிறகு பாண்டியர்களின் நாடு, மலைத் தொடருக்கும், மாசமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பரசுராம பூமியைச் சேர மன்னர்கள் ஆட்சி புரிந்தனர். இன்றளவும் சேரர்களும், பாண்டியர்களும் தங்களுடைய பெருமை குன்றாமல் சாம்ராஜ்ய எல்லைக் கோடு இளைத்து விடாமல் ஆண்டு வருகிறார்கள். வஞ்சியும், தொண்டியும், கொற்கையும், விழிஞமும் பெருந்துறைமுகப் பட்டினங்களாக உலகப் புகழ்ப் பெற்றுத் திகழ்கின்றன. மயிலையும், கடல் மல்லையும் பல்லவ நாட்டிற்குச் செல்வத்தை அள்ளி அளிக்கின்றன. பூம்புகார் அழிந்த பிறகு நாகப்பட்டினம் மீனவர்களுக்குச் சோறு போட்டுக் கொண்டிருக்கிறது. பாண்டியர்களோடும், சேரர்களோடும் சமமாக என்று நான் நிற்கிறேனோ, அன்று தான் நான் சோழ மாமன்னன். அந்த நாள் வரை நான் ஒரு சிற்றரசன் தான். வல்லத்தை விட்டால் நந்திபுரம். என் இளம் பருவத்தில் நான் சதா சிந்தித்துக் கொண்டே இருப்பேன் என்பது உனக்குத் தெரியாதா? தில்லைக் கோயிலுக்குத் தங்கத் தகடுகளால் சபைமண்டபம் கட்ட வேண்டும். இப்படி எண்ணுவது கனவா?''

ஆதித்தன் உணர்ச்சி வசப்பட்டுப் பேசியது கேட்டு விக்கியண்ணன் கூட ஒருகணம் பயந்துவிட்டான். ''அரசே! அரசே! வேடிக்கையாக நான் ஏதாவது கூறியிருந்தால் பொறுத்தருள வேண்டும். பல்லவ நாட்டை வென்று சோழ நாட்டுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று நீங்கள் கனவு கண்டது தவறில்லை. பல்லவ நாட்டிலுள்ள சிற்பக் கலையைப் போல் சோழ நாட்டிலும் சிற்பக் கலை வளர வேண்டும் என்று நீங்கள் எண்ணியதிலும் தவறில்லை. சித்திரம் சங்கீதம் சோழ நாட்டில் வளர வேண்டும் என்று கனவு கண்டதும் இலட்சியத்தின் விளைவே. அதுபோன்று, தில்லை அம்பலத்தைப் பொன் அம்பலமாக்க வேண்டும் என்று எண்ணுவது உங்கள் இலட்சியக் கனவு. நியாயமான கனவு நிறைவேறும் காலம் வெகு அண்மையில் வந்துவிட்டது. சிற்பிகள் வந்துவிட்டனர். நடன அழகி வந்து கொண்டே இருக்கிறாள். தில்லையைப் பொன் மயமாக்கத்தானே வைரக்கண்ணியை நீங்கள் அழைத்து வந்தீர்கள்...?'' என்று கூறி மெல்லப் பேச்சை நிறுத்தினான்.

''தில்லையைப் பொன் மயமாக்குவதற்கும் வைரக் கண்ணியை நான் அழைத்து வந்ததற்கும் என்ன சம்பந்தம்?'' ஆதித்தன் கேட்டான்.



விக்கியண்ணன் நகைத்தான். ''அரசே! நீங்கள் பல்லவ நாட்டில் மாறுவேடத்தில் உலவியதுகூட, அபராஜிதனுக்கு கோபத்தை அளிக்கவில்லை. சிற்பியின் மகள்கள் மயிலழகையும், மீன்விழியையும் தஞ்சைக்கு வருமாறு செய்ததும் அபராஜிதனுக்குச் சீற்றத்தை அளிக்கவில்லை. சிற்பி தன் சீடர்களுடன் காஞ்சியை விட்டுப் புறப்பட்டதைக் கேட்டு ஆத்திரப்பட வில்லை பல்லவ மன்னன். தான் மணக்க விரும்பிய வைரக்கண்ணியைக் கவர்ந்து வந்த உங்கள் செயல்கண்டு பொங்கி எழுந்துவிட்டார். படைகளுடன் தஞ்சையை நோக்கி வருமாறு செய்தது வைரக்கண்ணிதானே? சோழ நாட்டின் மீது படையெடுத்து வரக் காரணமே பல்லவ இளவரசிதானே? படையெடுத்து வந்து தோற்றால், பல்லவ பொக்கிஷம் உங்களுக்குத்தானே? காஞ்சிக் கருவூலம் உங்கள் உரிமையாகி விட்டால் தில்லையைப் பொற்கோயிலாக்க என்ன தடை? அதனால் பொற்கோயிலுக்கு வைரக்கண்ணி உதவுகிறாள் என்பதில் என்ன தவறு!''

விக்கியண்ணன் இவ்வாறு கூறியவுடன் ஆதித்தன் உற்சாக மிகுதியால் பெரிதாக நகைத்து விக்கியண்ணனைச் சேர்த்து அணைத்துக் கொண்டான்.

''அரசே! சோழ நாட்டுப் பேரரசே! நான் கூறுகிறேன். இன்னும் சில நாள்களில் சோழ நாட்டுப் பேரரசர் என்று அகில உலகமும் ஏற்றுக் கொள்ளப் போகிறது. அப்போது இந்த ஏழை விக்கியண்ணனை மறந்து விடுவீர்களா?'' என்று கேட்கும்போது ஆனந்தத்தால் அவன் விழிகள் பனித்தன.

விக்கியண்ணன் தோளைப் பிடித்துக் குலுக்கி, ''என்ன வார்த்தை கூறிவிட்டாய் விக்கியண்ணா! மற்றொரு முறை நீ இப்படிக் கூறினால் இந்த மகுடத்தைக் கழற்றிவிட்டு, வாளைத் துறந்துவிட்டு, உன்னுடன் கங்க நாட்டிற்கு வந்துவிடுவேன். காவிரி தொடங்கும் ஆரம்ப இடத்தில் பர்ண சாலையை அமைத்துக் கொண்டு காலமெல்லாம் இறைவன் நினைவாகக் கழிப்பேன்'' என்று கூறும்போது மீண்டும் சொற்கள் உணர்ச்சி வேகத்தில் சிதைந்தும், சீறியும், மிதந்தும், மகிழ்ந்தும் வந்தன.

''விக்கியண்ணா! என்னை நீ இன்னும் புரிந்து கொள்ள வில்லையா? சாம்ராஜ்யத்தை வாள் கொண்டு வென்று நிலைநாட்டும் ஆசை எனக்கில்லை. எங்கள் முதாதையர் நாட்டை மீட்டு, புலிக்கொடியைத் தாழாது பறக்கவிட வேண்டும் என்பதே என் கனவு. காவிரி, அழியாத ஜீவநதி. அதன் கரையெங்கும் கோயில்களைக் கட்ட வேண்டும். அதற்காகத்தான் சிற்பிகளை

அழைத்து வருகிறேன். பல்லவ அபராஜிதன் என் உயிர் நண்பன் என்பதால் எங்கள் பரம்பரை உடைமையை அவன் அனுபவிக்க விட முடியுமா? நீ என் நண்பன். உற்ற நண்பன். உயிர் நண்பன். ஆருயிர் நண்பன். எப்படி மறப்பேன்? ஆனால், எனக் கென்னவோ உள்ளத்திற்குள் ஒரு சிறு கவலை இருக்கிறது. போர் எப்படி முடியுமோ'' என்று கூற முற்பட்டவுடன் விக்கியண்ணான் தன் வாளை உருவி, ''பேரரசரே! என் உயிர் உள்ளளவும் தோல்வி என்பதைச் சோழ மண்ணில் ஒலிக்கவிட மாட்டேன். இது உறுதி'' என்று சபதம் செய்தான்.

பிறகு ஏதோ நினைத்துக் கொண்டவனாய், ''அரசே! நான் புறப்படுகிறேன். மழை ஓய்ந்துவிட்டது. எந்தக் கணமும் பல்லவர் படைகள் வந்துவிடலாம். என் வியூகத்தைப் படைகள் தாண்ட முடியாது. அவர்களைத் தடுத்து நிறுத்திவிடுவது உறுதி... நான் செல்கிறேன்...'' என்று கூறிவிட்டு விக்கியண்ணன் புறப்பட்டான்.

புறப்படுவதற்கு முன்பு விக்கியண்ணன் மெல்லிய முறுவலுடன் கேட்டான். ''அரசே! உங்கள் சொந்த விஷயத்தில் தலையிடுவதற்கு மன்னிக்க வேண்டும். பல்லவ இளவரசி அந்தப்புரத்திலிருப்பதைக் குறித்து, சோழ நாட்டு அரச மாதேவி மன வருத்தம் எதுவும் கொள்ளாமலிருக்கிறார்களா?'' என்று கேட்டான்.

ஆதித்தன் 'ஹோஹோ' என்று பெரிதாக நகைத்தான். ''விக்கியண்ணா! பல்லவ இளவரசி வைரக்கண்ணி எப்பொழுதும் போல் மகிழ்ச்சியாக இருக்கிறாள். நீ சொல்வதைப் போல்தான் இளங்கோபிச்சி கூறுகிறாள். 'பல்லவ இளவரசி வந்த வேளை சோழ நாட்டின் பெருமை திக்கெட்டும் பரவப் போகிறது' என்று. மேலும் எங்கள் திருமணத்தை விரைவில் நடத்திவிட வேண்டுமாம். இளங்கோபிச்சியைப் போல் ஒரு உயர் குணமுள்ள அரசகுல மங்கையை உலகில் எங்கும் காண முடியாது'' என்று கூறினான். பேச்சிலும், முகத்திலும் பெருமிதம் கூத்தாடியது.

''பல்லவ இளவரசியை ஒருமுறை சந்திக்க வேண்டும் என்று தோன்றுகிறது'' என்று விக்கியண்ணன் கூறி முடிப்பதற்குள், ''ஆகா, நீ அவசியம் அவளைச் சந்திக்க வேண்டும்'' என்று கூறிவிட்டு, ''யாரங்கே?'' என்று கைதட்டிப் பணியாளைக் கூப்பிட்டு, ''இவரை, காஞ்சி இளவரசி தங்கியிருக்குமிடத்திற்கு அழைத்துச் செல்'' என்று கட்டளையிட்டான்.



வைரக்கண்ணி தங்கியிருக்கும் அறையின் வாயிலில் இருந்த பணிப்பெண்ணிடம், தான் ஒரு கவிஞன் என்றும், இளைய ராணியைச் சந்திக்க வந்திருப்பதாகவும் கூறி அறிமுகப்படுத்திக் கொண்டான்.

உள்ளே போய் வந்த பணிப்பெண், ''கவிஞர் என்றால் எந்த ஊர்க் கவிஞர் என்று இளையராணி கேட்டு வரச் சொன்னார்கள். மேலும் அரசருடைய அனுமதியின்றி ஒருவரையும் சந்திக்க இயலாது என்றும் சொல்லச் சொன்னார்கள்'' என்று தெரிவித்தாள்.

''ஓகோ! அப்படியா? சற்று இங்கேயே இரு. நான் ஒரு பாடலைப் பாடுகிறேன். அதை இளையராணி கேட்பாள். பிறகு நீ உள்ளே செல். அப்பொழுது பாரேன்! உடனே என்னை அழைக்கிறார்களா இல்லையா என்று!'' என்றான். பிறகு தொண்டடையைக் கனைத்துக் கொண்டு பாடினான்.

*கைக்குடம் இரண்டு*
*கனக்கும் பக்குடமும்*
*முக்குடமாய்க் கொண்டால்*
*முறியாதோ - மிக்கபுகழ்*
*சேய்க் காற்றி னால்பரவும்*
*தீர நந்தி மாகிரியில்*
*ஈக்கா ற்றுக்கு ஆற்றா*
*இடை''*

அறைக்கதவுகளின் இடுக்குகளின் வழியே வைரக்கண்ணி மஞ்சத்தில் ஒய்வாகச் சாய்ந்து கொண்டிருப்பது தெரிந்தது.

விக்கியண்ணன் எதிர்பார்த்தபடியே, வைரக்கண்ணி புரிந்து கொண்டு விட்டாள். அங்கிருந்தே கூவினாள். ''அவரை உடனே வரச்சொல்'' என்று.

விக்கியண்ணன், அந்தப் பணிப்பெண்ணைப் பார்த்துப் புன்முறுவல் புரிந்தவாறு உள்ளே சென்று வணங்கினான்.

''இளைய 'ராணி அவர்களே! உங்கள் நலனைக் கேட்டறியவே இங்கு வந்தேன். தஞ்சை மாநகர் உங்களுக்குப் பிடித்திருக்கிறதா? எந்த ஒரு குறையுமில்லையல்லவா? கொற்றவை அருள் புரிந்து விட்டாளல்லவா! எந்தக் கணமும், பல்லவ மன்னரின் வீரர்கள் இந்தக் கோட்டையைச் சூழ்ந்து கொள்ளலாம். நீங்கள் தைரியமாக இருக்க வேண்டும். வெற்றி நம் பக்கம்தான். நாளையே சோழ நாட்டின் இளைய



01 09

இராணியாகி விடுவீர்கள். அப்பொழுது இந்தக் கவிஞனை மறந்துவிடாதீர்கள். தவறாக ஏதாவது கவிதையைச் பாடியிருந்தால் மனத்தில் ஒன்றும் நினைத்துக் கொள்ளாதீர்கள்.''

வைரக்கண்ணி ஏதோ சொல்ல வாயெடுத்தாள். ''பல்லவர் படைகள் முன்னேறி வருகின்றனவா? அவர்களைத் தடுத்து நிறுத்தப் போதுமான படைவீரர்கள் நம்மிடம் இருக்கிறார்களா?' என்றெல்லாம் கேட்கத் தோன்றியது அவளுக்கு.

விக்கியண்ணனை ஒரு கணம் பார்த்துப் பிறகு தலையைக் குனிந்து கொண்ட அவள், ''என்னால் தான் இந்தப் போர். உங்கள் நாட்டிற்குத் தொல்லை. நான் வந்த வேளை பேரரசர் இறந்தார்'' என்று குரல் தழுதழுக்கக் கூறினாள்.

''இல்லை, இல்லை. உங்கள் வருகை சோழ நாட்டிற்குப் பேரதிர்ஷ்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. விஜயாலயர் இறந்தார் என்பது உண்மையே. ஆனால், ஆதித்த சோழர், சோழ நாட்டு அரசராகிவிட்டாரே! பல்லவர்களுடன் போர் நடக்கப் போவது உண்மைதான். ஆனால், பல்லவ நாடு சோழர்களுக்குக் கிடைக்கப் போகிறதே!'' என்றான்.

வைரக்கண்ணியின் முகம் மலர்ந்தது. ஏதோ கூற வாயெடுத்தபோது, காவல் வீரன் ஒருவன் மிக வேகமாக வந்து, விக்கியண்ணன் எதிரே வணங்கி நின்றான். பிறகு மிக மெல்லிய குரலில், ''பல்லவப் படைகள் பெண்ணையாற்றைக் கடந்து விட்டனவாம். விரைந்து வருகின்றனவாம்'' என்றான்.

விக்கியண்ணன், வைரக்கண்ணியிடம் விடைபெற்றுக் கொண்டு, கொள்ளிடக் கரையிலுள்ள பாடி வீட்டை நோக்கி விரைந்தான்.

விக்கியண்ணன், அங்கே சென்ற அன்று மாலையே பல்லவர் படைகள் வீர கோஷமிட்டுக் கொண்டு நெருங்கி வந்து கொண்டிருந்தன.

○



## 49. அவர்கள் வரவில்லை

**கா**ஞ்சிமா நகரத்து வானம், மேகக் கூட்டங்கள் சிறிதும் இன்றி நீலநிறமாகக் காட்சியளித்தது.

வானத்தே பறக்கும் வெண் நாரைக் கூட்டம். வான தேவியின் கழுத்தில் திகழும் அழகிய முத்தாரம் போல் காட்சியளித்தது.

தெற்கே பெய்த மழையின் சிறு துளி கூட தொண்டை மண்டலத்தில் விழவில்லை.

தெற்கிலும், மேற்கிலும் சூழ்ந்திருந்த கருமேகங்களை நகர மக்கள் அண்ணாந்து பார்த்துப் பெருமூச்சுவிட்டனர். நகரமும் களையிழந்திருந்தது. நகரத்திலுள்ள உடல் வலிமையுள்ள ஆண்பிள்ளைகள் படைகளில் சேர்ந்து சோழ நாட்டை நோக்கிச் சென்றுவிட்டனர். பெண்டிரும், முதியவர்களுமாக வீடுகளுக் குள்ளேயே பொழுது போகாமல் தவித்துக் கொண்டு பழைய கதைகளைப் பேசிக் கொண்டிருந்தனர்.

மயிலழகு ஒரு முடிவுக்கு வந்துவிட்டாள். அழுதழுது கண்களில் நீர் வற்றி விட்டது. அகன்ற விழிகள் முனை மழுங்கிய வேல்போல் சிறுத்துவிட்டன.

அவளருகே ஆறுதல் கூறிக் கொண்டிருந்த மூதாட்டியும் களைப்படைந்து அங்கிருந்து எழுந்து சென்றுவிட்டாள்.

இனி மயிலழகுக்குக் காஞ்சி நகரில் என்ன வேலை? அமுதன் படுகொலை செய்யப்பட்டு அந்த வீட்டின் கூடத்தில் கிடந்ததைப் பார்த்துத் திடுக்கிட்டு அலறி, கதறி, கண்ணீர்விட்டு, ஓலமிட்டு, கொலை புரிந்தவர்களைப் பற்றிக் கேட்பதற்கு நகரத்தில் ஒருவருமில்லை என்று தெரிந்த பிறகு அவள் காஞ்சியில் இருந்து என்ன பயன்?

அவள் தன் வாழ்நாளில் மிக உறுதியுடனிருந்தாள். கற்பெனும் பாறையில் சிறு விரிசல் காணவும் அவள் ஒப்பமாட்டாள். ஆண்களோடு பழகுவாளே தவிர, அவர்கள்

வலையில் வீழ்ந்துவிட மாட்டாள். அவள் கற்றிருந்த நாட்டியக் கலைக்கு மேலும் ஆதரவு கிட்ட வேண்டும் என்பதற்காகவே சோழ நாடு செல்ல விரும்பினாள். அமுதன் திடீரென அவள் வாழ்க்கையில் எதிர்ப்பட்டான். அவனுடைய விழிகள் அவளுக்குள்ளே புகுந்தன. அவளுடைய விழிகள் அவனுக்குள்ளே புகுந்தன. அவளுடைய இதயம் அவன் நெஞ்சில் கலந்தது. ஏன் அந்த நிகழ்ச்சி நடந்தது? ஏன் அவள் மாறினாள்? அவளுக்கே புரியவில்லை.

அபராஜிதன் கூறிய திட்டப்படி தஞ்சைக்கு அமுதனுடன் செல்லத் திட்டமிட்டிருந்தாள். அமுதனுக்கு நாட்டியமாடத் தெரியும். அவன் குணம் அவளுக்குப் பிடித்திருந்தது. வாழ்நாள் எல்லாம் அவனுடைய ஆதரவிலேயே வாழ முடிவு செய்திருந்தாள்.

அவளுடைய கனவு சிதைந்தது.

இனி அவள் காஞ்சி நகரில் எதற்காக வாழ வேண்டும்? அவள் துக்கத்தைத் தேற்ற முயன்ற மூதாட்டியால், என்ன கூறியும் அவளைத் தேற்ற முடியவில்லை. அவளைத் தனியே விட்டு அந்த மூதாட்டி சென்றபிறகு, மயிலழகு அமைதியாகச் சிந்தித்தாள். ஒரு முடிவுக்கு வந்துவிட்டாள்.

'காஞ்சி மாநகரே! உனக்கு ஒரு வணக்கம். கயிலாச நாதரே! ஏகாம்பரேச்வரரே! வைகுந்தப் பெருமாளே! உங்கள் அனைவருக்கும் ஒரு வணக்கம். நான் போய் வருகிறேன். என் பேச்சை நம்பி, சிறையினின்று வந்த அமுதன் அற்பாயுளில் இறந்துவிட்டார். அவருடைய ஆன்மா சாந்தியடையட்டும்' என்று கூறிக்கொண்டே மயிலழகு தன்னுடைய, உடைமைகளை எடுத்து ஒரு சிறு மூட்டையாகக் கட்டலானாள்.

யாரோ வாயிற் கதவைத் தட்டும் ஓசை கேட்டது. மயிலழகு எழுந்து சென்று, கதவைத் திறந்தாள். அந்தத் துக்க நிலையிலும் அவள் வியப்புடன் மகிழ்ச்சியை வரவழைத்துக் கொண்டாள்.

மீன்விழி நின்று கொண்டிருந்தாள். நடந்து வந்து களைப்பு விழிகளில் தெரிந்தது. உடலெல்லாம் புழுதி படிந்திருந்தது. முகத்தில் ஒருவித் ஏமாற்றத்தின் சாயை.

"அக்கா" என்று கூவியவாறு அவளை அணைத்துக் கொண்டாள் மயிலழகு.

கூடத்துத் தூணில் சாய்ந்து கொண்ட மீன்விழியை நோக்கி, "அக்கா, நீங்களேதானா? தஞ்சையை நோக்கிச் சென்ற நீங்கள்



ஏன் திரும்பி விட்டீர்களா?" என்று கேள்வி மேல் கேள்வி கேட்டாள்.

மீன்விழி உடனே மறுமொழி கூறவில்லை. சோர்வும், களைப்பும், ஏமாற்றமும் அவள் பேச்சை அடைத்துவிட்டன.

மயிலழகு தனக்கு நேர்ந்த ஏமாற்றத்தைக் கூறினாள். புடைவை வணிகனாக வந்த அமுதனைப் பற்றி மீன்விழி முன்னர் ஏதும் அறியமாட்டாள்.

அமுதனைப் பற்றி அறிந்த மீன்விழி, அவனுக்கு ஏற்பட்ட அகால மரணத்தைக் கேட்டு வேதனைப்பட்டாள்.

"மயிலழகு! நாம் இனி எந்த ஆட்சியையும் அரசையும் நம்பிப் பயனில்லை. அதனால்தான் திரும்பி விட்டேன்" என்று கூறி, நடந்தவற்றைச் சொன்னாள். அவள் மெதுவாகப் பேசினாள். ஆனால் அதில் ஆத்திரமிருந்தது.

"உறுதி கொண்டு உள்ளத்துடனிருந்த நான் சிறிது மயங்கிவிட்டேன். இளவரசரின் நண்பரிடம் மனத்தைப் பறிகொடுத்தேன். பிறகு விழிப்பு வந்தது. ஓடோடி வந்து விட்டேன்" என்றாள்.

"சகோதரி! என் நிலை அப்படியில்லை. நான் சோழ இளவரசரின் அழைப்புக்கு இணங்கியே தஞ்சை செல்ல நினைத்தேன். ஆனால், பல்லவ அரசரின் வேண்டுகோளையும் என்னால் தட்ட முடியவில்லை. இடையில் அமுதன் மீது எனக்குப் பற்றுதல் ஏற்பட்டது. பல்லவ மன்னரின் சூழ்ச்சியால் அமுதன் கொல்லப்பட்டார். அந்த அதிர்ச்சியினின்று நான் இன்றளவும் மீளவில்லை. பல்லவப் படைகள் இப்போது தஞ்சையை நோக்கிச் சென்றிருக்கின்றன. போரின் முடிவு எப்படியாகுமோ? எப்படியாவது ஆகட்டும். இனி இந்தக் காஞ்சி நகரை மிதிக்கப் போவதில்லை. காஞ்சியினின்று புறப்பட முடிவு செய்துவிட்டேன். இன்னும் சிறிது தாமதமாக நீங்கள் வந்திருந்தால் என்னைச் சந்தித்திருக்கக்கூட முடியாது. நான் எங்கே போகிறேன் என்று கேட்டறிந்து விவரத்தைச் சொல்லக்கூடியவர்கள் ஒருவருமில்லை" என்று கூறும்போது அவள் உணர்ச்சி மிகுதியால் கண்ணீர் விட்டாள்.

"என் அருமைத் தங்கையே! வருத்தப்படாதே. நான் உனக்குத் துணையாக இருக்கிறேன். இருவரும் சேர்ந்தே காஞ்சியை விட்டுச் சென்றுவிடுவோம். நீ எங்கே செல்ல முடிவு செய்திருக்கிறாயோ அங்கே நானும் வருகிறேன்" என்றாள் மீன்விழி.



01 0

''அக்கா! எனக்கு ஏற்பட்ட துக்கமே வேறு. நான் இனி மானிடர் முன் ஆடவே போவதில்லை என்று முடிவு செய்துவிட்டேன். ஆனால் உங்கள் நிலை அப்படியில்லை. தந்தையைப் பாதுகாக்கும் பொறுப்பு உங்களுடையது. அவர் சோழ நாட்டிலிருக்கும்போது தாங்கள் என்னுடன் வருவது சரியில்லை'' என்றாள் மயிலழகு.

''இல்லை, இல்லை. தந்தை ஒருநாளும் தஞ்சைக்குச் செல்லமாட்டார். என்னைக் காணாமல் மீண்டும் காஞ்சிக்கே வந்துவிடுவார். தந்தை வரும்வரையில் நாம் இங்கே காத்திருப்போம்'' என்றாள் மீன்விழி.

மயிலழகு தலையை அசைத்தாள். ''தந்தை வரும் வரையில் என்னால் இங்கே தங்கியிருக்க முடியாது. துக்கத்தை மறக்க' நான் எவ்வளவு சீக்கிரம் இங்கிருந்து செல்கிறேனோ அவ்வளவுக்கு நல்லது'' என்று உறுதியுடன் கூறினாள்.

மீன்விழியால் மறுத்துப் பேச முடியவில்லை. போரின் முடிவு எவ்வாறிருக்குமோ என்ற கவலை அவளுக்கு இல்லாமலில்லை.

''பல்லவப் படைகளைச் சோழர் படைகள் எவ்வாறு எதிர்த்துப் பிழைக்கப் போகின்றனவோ?'' என்று தன் கவலையைத் தெரிவித்தாள் மீன்விழி.

''யாருக்கு என்ன நேர்ந்தால் என்ன? நமக்கு இனி அரசர்களின் பேச்சே வேண்டாம். நான் காளஹஸ்தி அருகிலுள்ள சிற்றூருக்குச் சென்று அங்கேயே தங்கிவிடப் போகிறேன். அங்கே அழகிய கோயில் இருக்கிறது. இறைவன் எதிரே நாள்தோறும் நடனமாடுவேன். இறைவனுக்குத் திருநீராட்டத் தண்ணீர் கொண்டு வந்து தருவேன். நந்தவனத் தினின்று மலர் கொய்து வந்து தருவேன். விளக்கேற்றுவேன். வாழ்நாளை இறை பணி செய்து அவன் தாளை மனத்தில் எண்ணியே காலங் கழிப்பேன்!'' என்று மயிலழகு கூறும்போது மீன்விழியின் மெய் சிலிர்த்தது.

''மயிலழகு! அந்த அழகான ஊரின் பெயர் என்ன?'' என்று மீன்விழி கேட்டாள்.

''தொண்டைமான் நல்லூர்'' என்று மயிலழகு கூறினாள்.

''நாம் இங்கே இருப்பவர்களிடம் நாம் செல்லும் ஊரைப் பற்றிய விவரம் கூறிவிட்டுப் புறப்படுவோம். தந்தை வந்தால் அவரிடம் கூறுமாறு சொல்வோம்'' என்றாள் மீன்விழி.



''வேண்டாம், வேண்டாம். நாம் போகுமிடம் பற்றி ஒருவருக்கும் எதுவும் தெரிய வேண்டாம். நாம் இன்றே புறப்படுகிறேன். நீங்கள் இங்கேயே தங்கியிருங்கள். தந்தை வந்தால் அவரையும் அழைத்துக் கொண்டு, நீங்கள் தொண்டைமான் நல்லூருக்கு வந்துவிடுங்கள்'' என்று உறுதியாகக் கூறினாள்.

மயிலழகின் மனஉறுதியை மாற்ற மீன்விழியால் முடியவில்லை.

மயிலழகு புறப்பட்டுவிட்டாள். காஞ்சியின் வடக்குக் கோட்டை வாயில் வரை அவளுடன் கூடவே சென்று வழியனுப்பிவிட்டுத் திரும்பி வரும்போது மீன்விழிக்குக் கண்ணீர் கரை புரண்டது.

பல்லவப் படைகள் விரைந்து வருகின்றன என்ற செய்தியை ஒற்றர்கள் மூலம் அறிந்தான் ஆதித்தன். ஒரு முறை தஞ்சைக் கோட்டையைச் சுற்றிப் பார்த்து அதன் பலத்தையும் பாதுகாப்பையும் அறிந்து மனநிறைவடைந்தான். கோட்டை யினின்று வெளியேறவும், உள்ளே செல்லவும் உள்ள மறைவான ரகசிய வழிக்கு அதிகப் பாதுகாப்பு இருக்கும்படி செய்தான். ஒரு மாதத்திற்கு மேலும் கோட்டை முற்றுகை நடைபெற்றால், கோட்டைக்குள் இருப்பவர்களுக்குப் போதுமான உணவுத் தானியங்கள் சேமித்து வைக்கப் பட்டிருக்கின்றனவா என்பதைக் கண்டு திருப்தியடைந்தான்.

கோட்டையை விட்டு வெளியே சென்று பழையாறை நகரத்தில் இருந்து போர் புரியத் திட்டம் வகுத்திருந்த ஆதித்தன், முதலில் இளங்கோ பிச்சியிடம் விடைபெற்றுக் கொண்டான். நெற்றியில் வீரத் திலகமிட்டு, முழுநகை முகத்துடன் விடை கொடுத்தாள் இளங்கோபிச்சி.

இளங்கோபிச்சியையும் அழைத்துக் கொண்டு, வைரக் கண்ணியைச் சந்திக்கப் புறப்பட்டான் ஆதித்தன். சிரித்துப் பேசும் நேரமன்று அது. இளங்கோ பிச்சியுடன் ஆதித்தன் வருவது கண்ட வைரக்கண்ணி பரபரப்புடன் எழுந்து நின்றாள்.

பல்லவப் படைகள் நெருங்கி வந்து கொண்டிருக்கின்றன என்பதை அவள் அறிவாள். அந்தப் படைகளை வழியிலேயே நிறுத்தி விரட்டி அடிக்காமல் தஞ்சை வரையில் வருமாறு சோழ மன்னர் செய்தவன் காரணம் அவளுக்குப் புரியவில்லை.

வைரக்கண்ணி தலைகுனிந்து நின்றாள். அவள் உடல் ஏனோ இலேசாக நடுங்கியது. ஆதித்தன் புன்முறுவல் பூத்தான்.

என்ன பேசுவது? என்ன பேசினாலும் அதிக நேரம் அங்கே செலவிட முடியாது.

இளங்கோபிச்சி மௌனத்தைக் கலைத்தாள். அவள் அருகே சென்று அவன் தோளை மெல்லத் தொட்டு, "வைரக்கண்ணி! இரண்டு நாள்களாக உன்னைச் சந்திக்கவில்லை. குறை ஒன்றுமில்லையே" என்று கேட்டாள். மெல்லியதாக அவளுக்கு மட்டும் கேட்கும் விதத்தில்.

வைரக்கண்ணியின் விழிகளில் சிரிப்பு மிளிர்ந்தது. உதடுகள் இலேசாக விரிந்தன.

"இளையராணி! நான் புறப்படுகிறேன். வெற்றிகரமாகத் திரும்ப எனக்கு விடை கொடு" என்று கம்பீரமாகக் கேட்டான் ஆதித்தன்.

வைரக்கண்ணி கம்பீரமாக ஆதித்தனை நோக்கினாள். அந்தப் பார்வையில் ஆயிரம் அர்த்தங்கள் பேசின.

வெற்றிகரமாகத் திரும்பி வருமாறு இறைவனை வேண்டிக் கொள்ளும் பிரார்த்தனை அந்தப் பார்வையில் இருந்தது.

இளையராணி என்றழைத்ததால் ஏற்பட்ட குதூகலம் விழிகளில் பொங்கி நின்றது.

"பல்லவப் படைகளைத் தஞ்சைக் கோட்டை வரை வர விட வேண்டுமா? வழியிலேயே தடுத்து நிறுத்திவிடக் கூடாதா?" என்று வைரக்கண்ணி கேட்டாள்.

ஆதித்தன் இளங்கோபிச்சியைத் திரும்பி நோக்கினான். அந்தப் பார்வையில், "நீ கேட்காத கேள்வியைப் பல்லவ இளவரசி கேட்கிறாள்" என்ற பொருள் பொதிந்திருந்தது.

"அப்படிச் செய்வது ஒரு ராஜதந்திரமாக இருக்கலாம். நமக்கெல்லாம் அதை அறிய சக்தி ஏது? ஏராளமான பல்லவப் படைகளைத் தடுத்து நிறுத்தப் போதுமான எண்ணிக்கை நம்மிடம் இல்லாமல் இருக்கலாம். ஆனால்..." என்று இளங்கோபிச்சி சொல்லிச் சற்று நிறுத்தினாள்.

"ஆனால்... மீதி வார்த்தையை முடியுங்கள் தேவி" என்றான் ஆதித்தன்.

நாணம் மேலிட்டவளாய், "என் அதிகப்பிரசங்கித் தனத்திற்கும் ஓர் எல்லையுண்டு. நான் ஏதாவது தவறாக கூறியிருந்தால்..." என்றாள்.



"இல்லை... இல்லை... தவறே இல்லை. சொல்லு... இளங்கோ பிச்சி! சொல்லு" என்றான் ஆதித்தன்.

"நம்மால் தடுத்து நிறுத்த முடியாவிடினும் எதிர்த்துப் போராட முடியும். அதனால்தான் பல்லவப் படைகளைக் கடைசி எல்லை வரை வருமாறு செய்திருக்கிறார்கள் என நினைக்கிறேன்" என்று கூறியவுடன், ஆதித்தன் பெரிதாக நகைத்து, "சோழ அரசி எனும் உயர்ந்த பெயரை நிலைநாட்டி விட்டாய். நீ கூறியதுதான் சரி. பல்லவப் படைகள் தஞ்சைக் கோட்டையைத் தாக்கும். அப்போது அவர்களுக்கு உணவுப் பண்டங்கள் ஏதும் கிடைக்காமல் செய்துவிடுவோம். யானைகளையும், குதிரைகளையும் பசியால் வருந்தச் செய்வோம். நமது வீரர்கள் கோட்டை மீதிருந்தும் தாக்குவர்" என்றான்.

"நீங்கள் கோட்டைக்கு வெளியே சென்று எங்கே தங்கியிருப்பீர்கள்" இளவரசி வைரக்கண்ணி கவலையுடன் கேட்டாள்.

"நான் நந்திபுரக் கோட்டைக்குச் செல்கிறேன். சேர நாட்டிலிருந்து யானைப்படைகள் வந்து சேர்ந்துவிட்டால் வெற்றி நம் பக்கம்தான்..." என்றான் ஆதித்தன்.

"வெற்றி நம் பக்கம்தான். அதை எப்போதோ முடிவு செய்து விட்டீர்கள். தன் தோல்வியை மறைக்கத்தான் அபராஜிதன் படையெடுத்து வருகிறார்" என்றாள் வைரக்கண்ணி.

அவள் சொல்வதன் உட்பொருள் ஆதித்தனுக்குப் புரியவில்லை.

"நடனப்பெண் மயிலழகை, சோழ நாட்டிற்கு வர ஏற்பாடு செய்துவிட்டீர்கள். சிற்பியும், சிற்பி மகள் மீன்விழியும் வந்து கொண்டே இருக்கிறார்கள். சிற்பமும் நாட்டியமும் பல்லவ நாட்டினின்று சோழ நாட்டிற்குக் கொண்டு வரப்பட்டன என்றால் அது பல்லவ மன்னருக்குத் தோல்வி என்றுதானே அர்த்தம்?" என்றாள் வைரக்கண்ணி. இப்போது இளங்கோபிச்சியும் சேர்ந்து கொண்டாள். "மற்றொன்று, மிக முக்கியமான வெற்றியைச் சொல்லவில்லையே?" என்றாள்.

"எதைச் சொல்கிறாய்?" என்று கேட்பது போல் ஆதித்தன் இளங்கோபிச்சியை நோக்கினான்.

வைரக்கண்ணியை நோக்கியவாறு, "பல்லவ மன்னர் அடைய நினைத்த அரும்பொருளைக் கொண்டு வந்தது முதல்

வெற்றி அல்லவா?'' என்றவுடன் வைரக்கண்ணி நாணத்தால் தலைகுனிந்தாள்.

''மீன்விழி எங்கே தங்கியிருக்கிறாள்? அமுதனும் மயிலழகும் வந்து சேர்ந்து விட்டார்களா? தலைமைச் சிற்பிக்கு வசதியாகத் தங்க இடமளித்திருக்கிறாயா?'' என்று கேட்ட ஆதித்தன் ''அமுதன் இன்னும் வந்து சேரவில்லையா?'' என்று கவலையுடன் கேட்டான்.

''அவர்கள் இன்னும் வந்துசேரவில்லை'' என்று இளங்கோபிச்சி கூறவும், ஆதித்தன் திகைத்தான்.

அங்கிருந்து விடைபெற்றுப் புறப்பட்ட ஆதித்தன், ஒற்றர் தலைவனை அழைத்து அமுதன் வந்து சேர்ந்துவிட்டானா? எங்கே தங்கியிருக்கிறான் என்பதை விசாரிக்க உத்தரவிட்டான்.

பல்லவப் படைகள் நெருங்கி வருகின்றன என்ற செய்தியைவிட அமுதனைப் பற்றி ஒற்றர் படைத்தலைவர் கொண்டு வந்த செய்தி, மீன்விழி திரும்பவும் காஞ்சிக்குச் சென்றுவிட்ட செய்தி, ஆதித்தனைப் பரபரப்படையச் செய்தது.

○



கிளை நூலகர்
தூத்துக்குடி சிதம்பரநகர்

## 50. காலமும் கனவும்

பல்லவர் படைகள் முன்னேறி வரும் செய்தி தஞ்சைக்கு வந்து கொண்டேயிருந்தன.

ஆதித்தன் பழையாறைக்கு வந்துவிட்டான். நந்திபுரக் கோட்டையைக் கைப்பற்றிய பிறகே பல்லவர் படைகள் தஞ்சைக்கு வரும் எனும் எண்ணத்துடன் உறக்கமின்றி விழித்துக் கொண்டிருந்தான் ஆதித்தன்.

இப்போது அவன் உள்ளத்தில் கடுஞ்சினம் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தது. அமுதனைக் கொன்ற அபராஜிதனைப் பழிக்குப்பழி வாங்காது விடுவதில்லை என்ற ஆக்ரோஷம் துள்ளி நின்றது.

மயிலழகும், மீன்விழியும் தஞ்சைக்கு வராமல் திரும்பிவிட்ட செய்தி பெரும் ஏமாற்றத்தை அளித்தது. அது ஆதித்தன் கனவு நிறைவேறாமலிருப்பதற்கும் வழி செய்தது.

சிற்பியும் வரவில்லை. ஓ! என் திட்டங்கள் என்னாவாது? என் கனவு மாளிகை உயர்ந்து நிற்பதற்கு இடையூறாக அபராஜிதன் அமைத்துவிட்டானே! ''ஏ, அபராஜிதா! உன்னை என்ன செய்கிறேன் பார்'' என்று சீறினான்.

''பல்லவர் படைகளே வாருங்கள். வலைக்குள் சிக்கிய சிங்கத்திற்கு நேர்ந்த கதிதான் உங்களுக்கும்'' என்று கனல் பொங்கப் பேசினான்.

''அரசே! பல்லவப் படைகள் மூன்று பக்கங்களிலும் அணிவகுத்து வருகின்றன'' என்று ஒற்றன் வந்து கூறினான்.

''ஏன் நான்காவது பக்கம் வருவதற்கு படைகள் இல்லையோ?'' ஆதித்தன் பயங்கரமாக நகைத்தான்.

''யானைப்படைகளின் தொடக்கத்தையும் முடிவையும் காண முடியவில்லை.''

"படை வீரர்கள் இடும் கோஷமும், யானையின் பிளிறலும், குதிரைகள் கனைப்பதும் வெகு தூரத்துக்கு வெகுதூரம் கேட்கின்றன."

"உணவு வண்டிகள் எல்லாம் பெரும் படைகளின் அணிவகுப்பைப் போல் வருகின்றன."

"அவர்களிடும் கோஷம் வழியிலுள்ள கிராம மக்களை நடுங்கச் செய்கின்றன."

என்றெல்லாம் ஆதித்தனிடம் ஒற்றர்கள் செய்தியை அறிவிக்கும்போது ஆதித்தனின் சீற்றம் அதிகமாகியது.

பாடி வீட்டில் அமர்ந்து எதிரிப்படைகளை நாசம் செய்யத் துடித்துக் கொண்டிருக்கும் தன் படை வீரர்களை நோக்கி ஆதித்தன் வீர முழக்கமிட்டான்.

"என் அருமை சோழ நாட்டு வீரர்களே! நம் அடிமைத் தளையை அகற்ற நாம் வீரப்போர் புரியப் போகிறோம். நமது முன்னோர்களின் நாடு தொண்டை மண்டலம். அதை நாம் இழந்து நிற்கிறோம். இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக நாம் நமது பெருமையை இழந்து நிற்கிறோம். கடந்து போன ஆண்டுகளில் பல்லவர்கள் புகழ் பெற்றுவிட்டார்கள். சோழ நாட்டில் கோயில்கள் கட்டப்பட வேண்டாமா? நமது மக்கள் வாணிபத்தில் உயர்ந்து நிற்க வேண்டாமா? நமது துறைமுகங்களில் அயல்நாட்டுக் கலங்கள் பண்டங்களை இறக்கி, ஏற்றிச் செல்ல வேண்டாமா? ஆடைகள் நெய்து, செந்நெல் வளர்த்து செல்வம் சேர்க்க வேண்டாமா? எதிரிகளின் படைகள் எண்ணிக்கையில் அதிகம். ஆனால் உங்கள் திண் தோள்களின் எதிரே அவர்கள் எம்மாத்திரம்? யானைகள் ஏராளமாக இருக்கின்றனவாம். என் அருமை வீரர்களே! யானைப் படைகளைக் குறிபார்த்து ஈட்டிகளை எறியுங்கள். வேல்களை வீசுங்கள். குறிபார்த்து எறியக் கற்றுக் கொண்ட உங்கள் திறமையைப் புலப்படுத்த ஓர் அரிய வாய்ப்பு. எதிரிகளின் வேல் உங்கள் மார்பிலே பாய்ந்தன. அதனால் வீழ்ந்தீர்கள் என்ற செய்தியைத்தான் நான் கேட்க வேண்டும். முதுகிலே பட்டு வீழ்ந்தீர்கள் என்று நான் கேள்விப்படக் கூடாது. திருப்புறம்பியப் போரை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். அந்த ஊர்ப் போர்க்களத்திலே மன்னன் பிருதிவீபதி போர்த் திறனைப் புலப்படுத்தி வீர மரணம் எய்தியதை நீங்கள்



மறந்திருக்க மாட்டீர்கள். உங்கள் வாள்கள் திருமாலின் கையிலுள்ள திகிரி போல் சுழன்றதையும், மின்னல்போல் மின்னியதையும் நான் அறிவேன். உங்கள் திறமை, வலிமை, திண்மை, உற்சாகம் பாண்டியர் படைகளை ஓட ஓட விரட்டின. நினைத்துக் கொள்ளுங்கள். மண்ணியாற்றில் பல்லவர்களின் ரத்தம் ஓட வேண்டும். உங்கள் வெற்றி என் வெற்றி மட்டுமன்று! சோழ நாட்டின் வெற்றி... வெற்றிவேல்! வீரவேல்! வெற்றிவேல்! வீரவேல்..." என்று ஆதித்தன் முழங்க, சோழ வீரர்கள் அந்த வீர வாசகத்தை எதிரொலித்தனர்.

மறுநாள் காலை சூரியோதயத்தின் போது பல்லவப் படைகள் சோழ நாட்டெல்லைக்குள் நுழைந்தன.

கண்ணுக்கெட்டிய தொலைவு வரை யானை - யானை - யானை.

கருங்குன்று நகர்ந்து வருவதுபோல் யானைகள் வந்தன. அதன் தந்தங்கள் சூரிய ஒளியில் பளிச்சென்று மின்னின. யானைகளின் முகபடாம் மின்னின. யானையின் மீது உள்ள அம்பாரியில் வீற்றிருந்த சேனைத் தலைவர்களின் மார்புக் கவசங்கள் மின்னின.

நந்திக்கொடி அசைந்தது. 'வாழ்க' கோஷங்கள் வானைப் பிளந்தன.

சோழர் படைகள் திகைத்தன. சிறி எழத் தயங்கின. தடுமாறின. நந்திபுரக் கோட்டைக்குள் புகுந்தன. வல்லத்துக் கோட்டையை நோக்கி ஒரு பகுதி செல்கிறது என்று கேள்விப்பட்ட ஆதித்தன் மிகுந்த கவலையடைந்தான். வல்லத்துக் கோட்டையைக் கைப்பற்றுவது எளிது. பல்லவர்கள் திட்டமிட்டே மும்முனைப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். யானைப் படைகள் அவர்களுக்குக் கைகொடுக்கின்றன. இச்சமயத்தில் சேரமன்னன் தாணு ரவியின் வேழப் படைகளின் உதவி கிடைத்தால்...?

அபராஜிதனும் தன்னுடைய படை வீரர்களுக்கு உற்சாகமளித்தார். சாளுக்கிய மன்னன் பல்லவ நாட்டின் மீது படையெடுத்து வந்தபோது நடைபெற்ற போர்க்களங்களைத் தன் படை வீரர்களுக்கு அபராஜிதன் நினைவூட்டினார். மணிமங்கலப் போர்க்களமும் புள்ளலூர்ப் போரும், பல்லவ நாட்டிற்கு அளித்த புகழை நினைவுபடுத்தினார்.

பல்லவ நாட்டின் எல்லை குறைந்துவிடக் கூடாது என்பதற்கான காரணங்களை அள்ளி வீசினார்.

சோழ வீரர்கள் மிகுந்த பலசாலிகள்தாம். ஆனால் யானைகளும் குதிரைகளும் பாய்ந்து வரும்போது அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

''நமது படைபலம் அறியாமல் போரில் இறங்கி விட்டோமா?'' என்ற கவலை ஆதித்தனுக்கு எழுந்தது.

இரவு உறக்கமில்லை. நன்றாக உறங்கி நான்கு நாள்களாகி விட்டன. இரவில் போர் நடைபெறாத தர்மயுத்தம் நடைபெறும் காலம் அது.

ஆதித்தன் சிந்தித்தான். இரவெல்லாம் சிந்தித்தான். அதிகாலையில் அவனையறியாமல் விழிகள் சோர்ந்தன.

திடுக்கிட்டு விழித்தபொழுது வெளியே பெரும் ஓசை எழுந்தது.

''அரசே! அரசே! பல்லவர் படைகள் இருபுறமும் நெருங்குகின்றன'' என்று விரைந்தோடி வந்து தெரிவித்தனர் ஒற்றர்கள்.

''இருபுறத்திலுமா?''

''ஆமாம் யானைகள் அணிவகுத்து நிற்கின்றன.''

ஆதித்தன் ஒருகணம் யோசித்தான். விரைந்தெழுந்தான். வீறு கொண்டெழுந்தான். குறி தவறாமல் வேல் வீசக் கூடிய வீரர்கள் ஐம்பது பேரைத் தேர்ந்தெடுத்தான். போர்க்களத்தில் பாய்ந்தான்.

குன்று நகர்ந்து வருவதுபோல் நகர்ந்து வரும் யானைகளை நோக்கிப் பாய்ந்தன வேல்கள்.

பயங்கரமான ஓசையுடன் யானைகள் கீழே வீழ்ந்தன. யானைகள் சிதறின.

''ஆதித்தா'' என்ற குரல் கேட்டது. சேரமன்னன் தாணுரவி வந்து கொண்டிருந்தான்.

சேர நாட்டினின்றும் யானைப் படைகளுடன் தாணுரவி வந்தது ஆதித்தனுக்குப் புதுத் தெம்பை அளித்தது.



''ஆதித்தா! விக்கியண்ணன் கொள்ளிடக் கரையில் வீரப் போர் புரிந்து கொண்டிருந்தான். அவன்தான் யோசனை கூறினான். படைகளுள் பாதிப் பேரை உடனே உனக்கு உதவி புரிய அனுப்பினான். நல்லவேளை, சரியான சமயத்துக்கு வந்துவிட்டேன்'' என்று தாணுரவி கூறியவுடன், அவனைத் தழுவிக் கொண்ட ஆதித்தன் ''ரவி! என் உயிர் நண்பனே! எனக்கு இப்போது ஆயிரம் யானைப் பலம் கிடைத்துவிட்டது'' என்று கூறி, அருகே இருந்த யானை மீது தாவி ஏறி அமர்ந்தான்.

ஆதித்தன் அமர்ந்திருந்த களிறு புயல் போல் சீறியது.

துதிக்கையை இருபுறமும் வீசிக் கொண்டு விரைந்து நடந்தது.

எதிரே உள்ள வீரர்களைச் சுழற்றிக் கீழே சாய்த்து மிதித்தது. நந்திக்கொடி தாங்கிய வீரர்களின் நடுவே புலிக்கொடி ஏந்திய வீரர்கள் பாய்ந்தனர். மல்யுத்தம், வாள் யுத்தம், சிலம்பப் போர், நேருக்கு நேர் கைகலப்பு ஆகியன மிகப் பயங்கரமாக நடைபெற்றன.

''ஆதித்தா'' என்ற குரல் கேட்டது. ஆதித்தன் திரும்பிப் பார்த்தான். யானை மீது அபராஜிதன் அமர்ந்திருந்தார்.

''ஆதித்தா! வா, உன் வரவு நல்வரவாகுக என்று கூறமாட்டேன். உன்னுடைய யுத்தகளப் பிரவேசம் நல்வரவாக எப்படி இருக்க முடியும்? சின்னஞ் சிறு சோழ நாடு என்ற பெயருமில்லாமல் செய்வதற்கு உன்னுடைய வருகை அடிக்கல் நாட்டப் போகிறது'' என்று அபராஜிதன் கொக்கரித்தான். ஆதித்தன் அபராஜிதனை நோக்கினான். பல்லவ மன்னன் அமர்ந்திருந்தது. பட்டத்து யானை என்று பெயர் பெற்ற மிகப் பெரிய யானை. தங்கத்தினாலான விசித்திர வேலைபாடுகள் நிறைந்த முகபடாம்.

யானையின் மீது அம்பாரி. மத்தகத்தின் மீது யானைப் பாகன் அமர்ந்திருக்கிறான். அவன் ஒரு கரத்தில் அங்குசம், மற்றொரு கரத்தில் நந்திக்கொடி.

அம்பாரியின் மீது நந்திக்கொடி. அசைந்து பறந்து கொண்டிருந்தது.

அபராஜிதன் கண்களில் போர் வெறி. மார்பிலே கேடயம், ஒரு கரத்தில் பளபளக்கும் வா

''ஆதித்தா! உன்னை நண்பனாக மதித்தேன். உன் திறமையை நான் உணர்ந்தேன். வீரத்தை மதித்தேன். அதனால் தான் சோழ நாட்டைச் சுதந்திர நாடாக்கினேன். அதற்கு நீ செலுத்திய மரியாதை, போர்க்களத்தில் சந்திக்குமளவிற்குக் கொண்டு வந்துவிட்டது...'' என்று அபராஜிதன் கூவும்போது ஆதித்தன் மேலும் சீற்றத்துடன், ''அபராஜிதா! சிந்தித்துப் பேசு. சோழ நாட்டிற்குச் சுதந்திரம் தர நீ யார்? யார் வீட்டுத் தனத்தை யாருக்கு எடுத்து அளிக்கிறாய்? போர்க்களப் பீதி உன்னைப் புலம்ப வைக்கிறதா?'' என்றான்.

''ஆதித்தா! நீ செய்துள்ள குற்றங்களுக்கு மரண தண்டனைதான் விதிக்க வேண்டும். ஆனால் பாவம்! இப்போதுதான் தந்தையை இழந்திருக்கிறாய். நாட்டையும் இழந்து நடுத்தெருவில் நிற்க விருப்பமா? கடைசியாக எச்சரிக்கிறேன். பிழைத்துப் போ!'' என்று கர்ஜித்தார் அபராஜிதன்.

''அபராஜிதா! எந்த மண்ணில் நின்று நீ பேசுகிறாய் என்பதை மறந்துவிடாதே. மரண தண்டனையை உனக்கு அளிப்ப தென்று எப்போதோ முடிவு செய்துவிட்டேன். உன்னை உயிருடன் பிடித்து, தஞ்சை சபை மண்டபத்தில் நிறுத்தி, ஒன்றுமறியா அமுதனை காஞ்சி நகரில் கொலை செய்ததற்கு மரணதண்டனை அளித்துவிட முடிவு செய்துவிட்டேன். உன்னை உயிருடன் பிடிக்கவே தேடிக் கொண்டிருந்தேன். அகப்பட்டுவிட்டாய்... பிழைத்துப்போ என்று நான் சொல்ல மாட்டேன். கடைசி முறையாக உன் குல தெய்வத்தை வேண்டிக் கொள் என்றுதான் யோசனை கூறுவேன்'' ஆதித்தன் கோபத்தின் உச்ச நிலையில் இருந்தான்.

ஆதித்தன் கூற்றைக் கேட்டு அபராஜிதன் சிரித்தார்.

''யாருக்கு யார் யோசனை கூறுவது. அறிவிலியே! யுத்த முறை அறியாதவனே! எமது படைபலத்தை அறிந்து கொண்டாயா? எனது படையிலுள்ள யானைகளும், குதிரைகளும் சீறி வருவதைப் பார்த்தும் உனக்குப் புத்தி வரவில்லையே! உனக்குத் தவறான யோசனைகள் கூறுவது யார்? அந்த விக்கியண்ணனா? அல்லது சேர நாட்டுத் தாணுரவியா? தன் வசமுள்ள கொங்கு நாட்டைச் சரியான முறையில் ஆளத் தெரியாதவன். உனக்கு ஒரு முடிவு கட்டிவிட்டு அடுத்து கொங்கு நாட்டிற்குச் செல்கிறேன்.



ஆதித்தா! கடைசியாக எச்சரிக்கிறேன். இதே நேரத்தில் வல்லம் கோட்டையும் பிடிபட்டு இருக்கும். இரண்டு சிறு கோட்டைகளை வைத்துக் கொண்டு பெரும் அரணுடன் மோதுகிறாய். போ! உடனே போய்க் கோட்டைகளைக் காப்பாற்று'' என்று குரலை உயர்த்திச் சீறினான்.

ஆதித்தன் ஒருமுறை திரும்பிப் பார்த்தான். யானைகள் மோதிக் கொண்டிருந்தன. குதிரை மீதிருந்த வீரர்கள், வாளைச் சுழற்றிக் கண்டபடி எதிர்த்தவர்கள் சிரங்களை வெட்டி வீழ்த்திக் கொண்டிருந்தார்கள். வீரர்களுக்கு உற்சாகத்தை ஊட்ட, கிளர்ந்து எழ, வீராவேசமாகப் போர் புரிய தாரை தப்பட்டைகளின் ஒலி போர்க்களத்தில் பயங்கரமாக ஒலித்தது. களத்தில் எழுந்த புழுதி வானமண்டலத்தை எட்டிக் கொண்டிருந்தது.

வாளோடு வாள் மோதும் 'கிணிங்கிணிங்' சப்தத்திற்குச் சுருதி கூட்டுவது போல கீழே சாய்ந்த வீரர்களின் ஓலம் நிறைந்திருந்தது. யாரை யார் தாக்குகிறார்கள் என்று ஒரு கணம் தெரியவில்லை.

''ஆதித்தா! மிகவும் சாமர்த்தியமாக வைரக்கண்ணியை அபகரித்து வந்ததாக எண்ண வேண்டாம். அவளை உன் அந்தப்புரத்தில் அமர்த்தி பட்டத்து அரசியாக்கலாம் என்று கனவு காண வேண்டாம். முதலில் தஞ்சைக் கோட்டை பிடிபட்டவுடன் அடுத்த வேலை அந்த வேல் விழியாளைச் சிறைப்படுத்திக் காஞ்சி கொண்டு செல்வதுதான்.

''ஆதித்தா! உன் கனவு பலிக்காது. பல்லவ நாட்டைப் போல் உனது நாடு சிற்ப, சித்திரச் சிறப்பை அடைய முடியாது. நடன மங்கை மயிலழகு உன் நாட்டில் ஒரு நாளும் வாழ மாட்டாள். ஏன் தெரியுமா? நீ இந்தக் களத்திலேயே மண்ணோடு மண்ணாகப் போகிறாய். உன் நாடு, உன் பூமி, உன் மண் என்று சொல்கிறாயே. அந்த மண்ணை நீ இன்னும் சிறிது நேரத்தில் முத்தமிடப் போகிறாய். நில நங்கைக்கு உனது கடைசிக் குருதி அபிடேகத்தைச் செய்யப் போகிறாய். வைரக்கண்ணியைப் புலிக்கொடி உன் மேல் போர்த்தப்படும். நீ குப்புற போர்க்களத்திற்கு அழைத்து வருவேன். பாவம், ஆதித்தா! வீழ்ந்திருக்கும் உன் நிலையைக் காட்டுவேன். பல்லவப் பேரரசுடன் மோதுகிறோம் என்பதை மறந்து விட்டாய். சாளுக்கியர்களும், கதம்பர்களும், கங்கர்களும் தோற்றுப் பணிந்து அடங்கி ஒடுங்கிய கதையை அறியாமல் துள்ளுகிறாய்.

பாவம்! இன்னும் உன்னிடமுள்ள பாசம் என் உள்ளத்து மூலையில் இரக்கத்தைக் கசியச் செய்கிறது'' அபராஜிதன் இவ்வாறு கூறும்போது ஆதித்தன் தன்னுடலில் ஓடும் ரத்த நாளங்கள் வெடித்தது போல் உணர்ந்தான். ஆயிரம் மின்னல்கள் தன் கண்ணெதிரே நடனமிடுவதுபோல் உணர்ந்தான். உடல் பூகம்பம் போல் அதிர்வதை உணர்ந்தான்.

''ஓ! அபராஜிதா! நிறுத்து அகம்பாவப் பேச்சை'' என்று கூறி, தான் வீற்றிருந்த யானையின் மீதிருந்து அபராஜிதன் வீற்றிருந்த யானை மீது தாவினான்.

ஒரு கணம்...

ஒரே கணம், கண்மூடித் திறப்பதற்குள் அந்தச் செயல் நடந்து விட்டது.

ஆதித்தன் வாள், அபராஜிதன் மார்பிலே புகுந்து மறுபுறம் வெளியேறியது. நீரூற்றுபோல் குருதி பொங்கித் தெளித்தது. யானை மீதிருந்த அபராஜிதன் மண்ணிலே வீழ்ந்தான். சோழத் திருநாட்டின் நிலத்திலே வீழ்ந்தான். பல்லவ மன்னன் ரத்தத் தடாகத்திலே மிதந்தான்.

''சக்கரவர்த்தி வீழ்ந்துவிட்டார்!''

''சக்கரவர்த்தி, சோழனால் குத்தப்பட்டு விட்டார்!''

''அவர் அமர்ந்திருந்த யானை, மதம் பிடித்து ஓடுகிறது!''

''நான்கு புறமும் சோழப் படைகள் சூழ்கின்றன. நம் உயிரை நாம் தான் இனிக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.'' இப்படிச் சொல்லிக் கொண்டே பல்லவ வீரர்கள் சிதறி ஓடினார்கள்.

அவர்கள் கரங்களிலிருந்த நந்திக்கொடி கீழே வீழ்ந்தது. அதைத் தாங்களே மிதித்துக் கொண்டு மரியாதை இல்லாமல் ஓடினர். நாட்டைவிடத் தங்கள் உயிரை பெரிதாகக் கருதி ஓடினர் பல்லவ வீரர்கள்.

சிம்மவிஷ்ணு அஸ்திவாரமிட்ட பல்லவ மாளிகை சரிந்தது. மகேந்திரனும், மாமல்லனும் கட்டிய கோபுரம் இடிந்தது. இராசசிம்மனும், நந்திவர்மனும் அமைத்த கலசங்கள் சரிந்து வீழ்ந்தன. வானவீதியில் கழுகுகளும் பருந்துகளும் வட்டமிட்டன.

* * *



சோழ வீரர்கள் மகிழ்ச்சியால் கூத்தாடினர். தஞ்சை திருவிழாக் கோலம் பூண்டது. பெண்டிர்கள், வீரர்களை வெற்றித் திலகமிட்டு ஆரத்தியுடன் வரவேற்றனர்.

ஆதித்தனுக்கு இளங்கோபிச்சி வெற்றித் திலகமிட்டாள். வைரக்கண்ணியின் விழிகளிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகியது.

சேரமன்னன் தாணுரவியைத் தோளோடு தோள் இணையத் தழுவிக் கொண்டு நன்றி கூறினான் ஆதித்தன். விக்கியண்ணன் கொள்ளிடக் கரையிலிருந்து இன்னும் வந்து சேரவில்லை. மறுநாள் வருவதாக செய்தி வந்தது.

தஞ்சை வடக்குக் கோட்டை வாயில் அழகாய் அலங்கரிக்கப் பட்டிருந்தது. சே:ழ வீரர்கள் அணி வகுத்து நின்றிருந்தனர். புலிக்கொடி ஏந்திய வீரர்கள் குதிரைகளின் மீது நின்றனர். கோட்டை வாயிலின் மேல்தளத்தில் எதற்காகப் பெண்டிர் நிற்கிறார்கள்? அவர்கள் கரங்களில் இத்தனை பூக்கூடைகள் எதற்கு? ஆதித்தனும், தாணுரவியும் கோட்டை வாயிலில் காத்திருந்தனர். இளங்கோபிச்சியும், வைரக்கண்ணியும் மேல் மண்டபத்தில் நின்றிருந்தனர். முதல் அமைச்சரும், படைத் தளபதியும் நின்றிருந்தனர்.

விக்கியண்ணன் வருவது தெரிந்தது. பேரிகை முழங்கியது. சங்கம் ஒலித்தது. மங்கள வாத்திய இசை உள்ளத்தைக் குளிர வைத்தது. தோரணங்கள் காற்றில் அசைந்தாடின. வீதிகளில் கட்டப்பட்டிருந்த கொடிகள் ''வருக, வருக விக்கியண்ணரே வருக!'' என்று கூறுவது போல் அசைந்தழைத்தன.

குதிரை மீதிருந்து இறங்கிய விக்கியண்ணனை ஆதித்தன் அன்புடன் தழுவிக் கொண்டான்.

பாங்கியர் இருபுறமும் மலர்களைத் தூவினர். கோட்டை மீதிருந்து மங்கையர் மலர்மாரி பொழிந்தனர்.

சாமரம் வீசப்பட்டது. பட்டாடை அணிவிக்கப்பட்டது.

''விக்கியண்ணா! உன் அரும் தொண்டைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை. செம்பியன் குலத்தைக் காத்த மாவீரன்! தமிழ் அரசு மீண்டும் முளைத்தெழச் செய்த அருந்தலைவன். உன்னைச் சோழ நாட்டு மக்கள் என்றும் மறவாமல் இருக்க, ''செம்பியன் தமிழ்வேள்'' என்று பாராட்டிப் பட்டமளிக்கிறேன்.



01 09 2

இந்தச் சிவிகையில் ஏறிக்கொள்'' என்று ஆதித்தன் கூறியபோது அங்கே கூடியிருந்தவர்கள், வாழ்த்திய ஒலி வானை எட்டியது.

''மாமன்னரே! உங்கள் கனவு நிறைவேறியதில் மகிழ்ச்சிதானே'' என்று மெல்லக் கேட்டான் விக்கியண்ணன், வைரக்கண்ணியை நோக்கியவாறு.

ஆதித்தன் மெல்ல நகைத்து, ''பல்லவ இளவரசியை மணப்பது மட்டுமா என் கனவு? சோழ நாட்டில் சிற்பமும், சித்திரமும், சங்கீதமும் உயர்நிலையில் இருக்க வேண்டும். அதுவே என் அழியாத கனவு'' என்றான்.

சோழ இளவரசனாக இருந்த ஆதித்தன் கனவு சோழ மாமன்னராக அமர்ந்த காலத்தில் நனவாகத் தொடங்கி, பிறகு நூறாண்டு காலத்திற்குள் இராஜஇராஜ சோழன் காலத்தில் முழுமையாக நிறைவேறியது.

**(முற்றும்)**

227 80